லெனின்

திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம்



CONNEMARA PUBLIC LIBRARY
5 MAR 1985
MADRAS

REFERENCE

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 3-25
MADRAS-98.

விஞ்ஞான சோஷலிச நூலகம்

MADRAS

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

– 5 MAR 1975

வி. இ. லெனின்

திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

பதிப்பாளர் குறிப்பு

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டின் ஐந்தாம் பதிப்பிலிருந்து இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

В. И. ЛЕНИН
ПРОТИВ РЕВИЗИОНИЗМА, В ЗАЩИТУ МАРКСИЗМА
На тамильском языке

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-228}{014(01)-82}$ 685-82 0101020000

■ பொருளடக்கம்

- 5 MAR 1985
MADRAS

ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் மறுப்புரை. 7

லு. குகல்மனுக்குக் கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதங்களின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு முன்னுரை . . . 27

ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுக் காங் கிரஸ் 41

மார்க்சியமும் திருத்தல்வாதமும் 52

ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள் 67

ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சீர்திருத்தவாதம் . 76

Vorwärts செய்தியேட்டில் பெயர் குறிப்பிடாது கட்டுரை தீட்டும் எழுத்தாளரும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி நிலவரமும் 97

வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப் பட்ட வருங்காலம் 113

மார்க்சியமும் சீர்திருத்தவாதமும் 119

காவுத்ஸ்கி இழைத்த மன்னிக்க முடியாத தவறு . . 125

ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்திலிருந்து காப்பி யடிக்கக் கூடாதது 128

யுத்தமும் ருஷ்ய சமூக-ஜனநாயகமும் 135

சோஷலிஸ்டு அகிலத்தின் நிலையும் கடமைகளும் . . . 148

செத்துப் போன தேசியவெறியும் உயிருள்ள சோஷலிச மும். *அகிலத்தை மீண்டும் உயிர் பெறச் செய்வது எப்படி.* 158

சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் தகர்வும் . . 170

ஏகாதிபத்தியமும் சோஷலிசத்தில் பிளவும் 191

ஓடுகாலிகளை முதலாளித்துவ வர்க்கம் எப்படிப் பயன் படுத்திக் கொள்கிறது 218

மானெர்ஹேமும் கல்ச்சாக்கும் 223

1921 மார்ச் 16ல் கட்சி ஒற்றுமையும் அராஜக-சிண்டிக் கலிஸ்டுத் திரிபும் குறித்து ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது காங்கிரசில் நிகழ்த்திய உரை 237

பதிப்பாளர் குறிப்புகள் 251

பெயர்க் குறிப்பு அகராதி 291

ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் மறுப்புரை[1]

- 5 MAR 1935
MADRAS

சமூக-ஜனநாயகவாதிகள் பதினேழு பேர் அடங்கிய கூட்டம் ஒன்று (ருஷ்யாவில்) ஓரிடத்தில் நடைபெற்று அடியிற் கண்ட தீர்மானத்தை ஒருமனதாய் ஏற்று, இதை வெளியிடுவதென்றும் எல்லாத் தோழர்களின் பரிசீலனைக்கும் சமர்ப்பிப்பதென்றும் தீர்மானித்தது

ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் மூலவர்களும் முன்னணிப் போராட்ட வீரர்களுமான உழைப்பு விடுதலைக் குழு[2] உறுப்பினர்களாலும், மற்றும் தொண்ணூறும் ஆண்டுகளின் ருஷ்யத் தொழிலாளர் நிறுவனங்களுடைய சமூக-ஜனநாயக வெளியீடுகளாலும் பறைசாற்றப்பட்ட ருஷ்ய சமூக-ஜனநாயகக் கோட்பாடுகளிலிருந்து விலகிச்செல்லும் ஒரு போக்கு அண்மைக் காலத்தில் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடையே காணப்படுகிறது. சில ("இளம்") ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் அடிப்படைக் கருத்துக்களை வெளியிடுவதாய்க் கொள்ளக்கூடிய கீழ்க் கண்ட credo இந்தப் "புதிய கருத்துக்களை" முறையாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துரைக்கும் ஒரு முயற்சியாய் அமைகிறது. இதன் முழு வாசகம் வருமாறு:*

> *"மேலைய நாடுகளில் கைவினைச் சங்க, பட்டறைத் தொழில் கட்டமானது அதற்குப் பின்வந்த வரலாறு அனைத்திலும், குறிப்பாய் சமூக-ஜனநாயகத்தின் வரலாற்றிலும், திட்டவட்டமான முத்திரை பதித்துவிட்டது. முதலாளித்துவ வர்க்கம் தடையில்லாத சுதந்திர வடிவங்களுக்காகப் போராடவேண்டியிருந்தது; பொருளுற்பத்திக்கு விலங்கிட்ட கை*

* *குறிப்பு 1ஐப் பார்க்கவும்.*—**பதிப்பாசிரியர்.**

விளைச் சங்கக் கட்டுகளிலிருந்து அது தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றது. இந்த நிலைமை முதலாளித்துவ வர்க்கத்தைப் புரட்சி இயல்புடையதாக்கிற்று. மேலைய நாடுகளில் எங்கும் அது liberté, fraternité, égalité (சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம்) என்னும் முழக்கங்களுடன், கட்டற்ற சுதந்திர அரசியல் வடிவங்களைச் சாதித்துக் கொள்வதுடன் தொடங்கியது. ஆனால் பிஸ்மார்க் குறிப்பிட்டது போல, இந்த ஆதாயங்களைப் பெற்றதன் மூலம் அது தனது நேர் எதிராளியான தொழிலாளி வர்க்கத்துக்கு எதிர் காலத்தில் செலுத்தத் தக்கதான உண்டியல் பத்திரம் எழுதிக் கொடுத்தது. மேலைய நாடுகளில் எதனிலும் தொழிலாளி வர்க்கம் ஒரு வர்க்கம் என்ற முறையில் ஜனநாயக அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டதே ஒழிய தானே போராடி அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கு எதிர் வாதமாய், தொழிலாளி வர்க்கம் புரட்சிகளில் பங்கெடுத்துக் கொண்டதாய்ச் சொல்லப்படலாம். ஆனால் வரலாறு இந்தக் கருத்தை மறுக்கிறது. எப்படியெனில், மேலைய நாடுகளில் அரசியலமைப்புச் சட்டங்கள் உருவாகி உறுதி பெற்ற ஆண்டான 1848ல் தொழிலாளி வர்க்கம் நகரக் கைத்தொழிலாளர் பகுதியோரைத்தான், குட்டிபூர்ஷுவா ஜனநாயகத்தைத்தான் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தது; ஆலைப் பாட்டாளி வர்க்கம் அப்பொழுது அனேகமாய் இல்லை என்றே சொல்ல வேண்டும். பெருவீதத் தொழில் துறையில் வேலை செய்த பாட்டாளி வர்க்கத்தினர் (ஹாவுப்த்மன் சித்தரித்த ஜெர்மன் நெசவாளர்கள், லியோன்ஸ் நெசவாளர்கள்) வெறித் திரளினராகவே இருந்தனர்; அவர்களால் கலவரங்கள் மட்டுமே செய்ய முடிந்தது, அரசியல் கோரிக்கைகள் எவற்றையும் முன்வைக்க முடியவில்லை. 1848ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டங்கள் முதலாளித்துவ வர்க்கத்தாராலும் நகரச் சிறு கைத்தொழிலாளர்களாலும்தான் போராடிப் பெறப்பட்டவை என்று திடமாய்க் கூறலாம். ஆனால் தொழிலாளி வர்க்கத்தினர் (கைத்தொழிலாளர்கள், பட்டறைத் தொழிலாளர்கள், அச்சகத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், கடிகாரம் செய்வோர் முதலானோர்) மத்திய காலம் முதலாய் நிறுவனங்களிலும் பரஸ்பர நலக் கழகங்களிலும் சமயச் சபைகளிலும் இன்ன பிறவற்றிலும் உறுப்பினர்களாய் இருந்து பழக்கப்பட்டவர்கள். இந்த நிறுவன மனப்பான்மை

மேலைய நாடுகளில் தேர்ச்சியுடைய தொழிலாளர்களிடையே இன்னமும் மறையாது உயிர்ப்புடன் இருந்து வருகிறது; இம்மனப்பான்மை இத்தொழிலாளர்களை ஆலைப் பாட்டாளி வர்க்கத்தினரிடமிருந்து தெளிவாய் வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆலைப் பாட்டாளி வர்க்கம் நிறுவன ஒழுங்கமைப்புக்குச் சொற்பமாகவும் மெதுவாகவுமே உட்படுகிறது; lose Organization (தற்காலிக நிறுவனங்கள்) கொள்ள முடிகிறதேயன்றி அதனால் சட்டதிட்டங்களைக் கொண்ட நிரந்தர நிறுவனங்களை அமைத்துக் கொள்ள முடிவதில்லை. பட்டறைத் தொழில் கட்டத்தில் பயிற்சியும் போதமும் பெற்று உருவான தொழிலாளர்கள்தான் சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்கான மூலப் பகுதியோராய் இருந்தனர். ஆக, நமக்குக் கிடைக்கும் சித்திரம் இதுவே: ஒரு புறத்தில் அரசியல் போராட்டம் நடத்துவது ஒப்பளவில் சுலபமாகவும் எல்லாச் சாத்தியப்பாட்டையும் கொண்டதாகவும் இருந்தது, மறு புறத்தில் பட்டறைத் தொழில் கட்டத்தில் பயிற்சியும் போதமும் பெற்று உருவான தொழிலாளர்களின் துணை கொண்டு இந்தப் போராட்டத்துக்கு முறையான நிறுவன வழியில் ஒழுங்கமைப்பதற்கான சாத்தியப்பாடும் இருந்தது. இந்த அடிப்படையின் மீதுதான் மேலைய நாடுகளில் மார்க்சியத்தின் தத்துவமும் நடைமுறையும் வளரலாயின. துவக்க நிலையாய் இருந்தது பாராளுமன்ற அரசியல் போராட்டம். இந்தப் போராட்டத்தின் முன்னால் ஒரு புறத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பும் (மேம்போக்கில்தான் இது பிளான்கியத்தை[3] ஒத்தது, தோற்றுவாயில் முற்றிலும் மாறானது) மறு புறத்தில் Zusammenbruchக்கான (அழிவுக்கான) வாய்ப்பும் இருந்தன. பொருளாதாரப் போராட்டத்தைக் காட்டிலும் அரசியல் போராட்டம்தான் முதன்மையானது—பெருவழக்காயிருந்த இந்த நடைமுறைக்கு மார்க்சியம் தத்துவார்த்த வெளியீடாய் விளங்கிற்று. பெல்ஜியத்திலும், பிரான்சிலும், இன்னும் முக்கியமாய் ஜெர்மனியிலும் தொழிலாளர்கள் மிகமிகச் சுலபமாய் அரசியல் போராட்டத்துக்கு ஒன்றுதிரண்டு விட்டனர்; ஆனால் மிகுந்த சிரமத்துடனும் அளவு கடந்த இடர்ப்பாட்டுடனும்தான் அவர்கள் பொருளாதாரப் போராட்டத்துக்கு ஒன்றுதிரள வேண்டியிருந்தது. இது நாள் வரையிலும் அரசியல் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் பொருளாதார

நிறுவனங்கள் (இங்கிலாந்தைத்தவிர) படுமோசமான அளவுக்குப் பலவீனமாகவும் நிலையற்றனவாகவும் இருக்கின்றன, எங்கும் அவை, laissent à désirer quelque chose (குறைபாடான நிலையிலேதான்) உள்ளன. அரசியல் போராட்டத்தில் ஆற்றல் அறவே செலவழிந்து தீர்ந்துவிடாத வரையில் Zusammenbruch ஒன்றுதிரட்டுவதற்கு அவசியமான ஒரு Schlagwort (கோஷம்) ஆக இருந்து மிக முக்கிய வரலாற்றுப் பணி ஆற்ற வேண்டியதாயிற்று. அதிக சிரமமில்லாத எளிய வழியில் செல்லுதலே தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஆராய்கையில் தெரிய வரும் அடிப்படை விதி. மேலைய நாடுகளில் அரசியல் செயற்பாடுதான் இந்த வழியாய் அமைந்தது; கம்யூனிஸ்டு அறிக்கையில் வகுத்தளிக்கப்பட்ட மார்க்சியம்தான் இந்த இயக்கத்துக்குரிய மிகச் சிறந்த வடிவமாய் இருந்தது. ஆனால் அரசியல் செயற்பாட்டில் ஆற்றல் அனைத்தும் செலவழிந்து தீர்ந்துவிட்டபின், அரசியல் இயக்கம் மேலும் விஞ்சுவதற்குக் கடினமானதும் அனேகமாய் முடியாததுமான உக்கிர நிலையை எய்தியபின் (அண்மைக் காலத்தில் வாக்குகளின் அதிகரிப்பில் ஏற்பட்ட மந்தம், கூட்டங்களில் மக்களிடையே வெளிப்பட்ட அக்கறையின்மை, வெளியீடுகளில் பிரதிபலிக்கப்பட்ட சோர்வு), இந்நிலை பாராளுமன்றச் செயற்பாட்டின் பயனின்மையுடனும், அறியாமை இருளில் மூழ்கிய வெகுஜனங்கள், நிறுவன ஒழுங்கமைப்பில்லாதும் நிறுவன ஒழுங்கமைப்பு அனேகமாய்ப் பெற முடியாததுமான ஆலைப் பாட்டாளி வர்க்கம் அரங்கினுள் அடியெடுத்து வைத்ததுடனும் சேர்ந்து, மேலைய நாடுகளில் இப்பொழுது பெர்ன்ஷ்டைனியம்[4] எனப்படுவதை, மார்க்சியத்தின் நெருக்கடியை, தோற்றுவித்தது. கம்யூனிஸ்டு அறிக்கையிலிருந்து தொடங்கி பெர்ன்ஷ்டைனியம் வரையிலான தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக் கட்டத்தைக் காட்டிலும் அதிகக் காரணகாரியத் தொடர்பு கொண்ட வளர்ச்சியினைக் கற்பனை செய்வது கடினமாகும். இந்த வளர்ச்சிப் போக்கு முழுவதையும் கவனமாய் ஆராய்ந்தால் இந்த 'நெருக்கடியின்' விளைவை வானவியல் விஞ்ஞானத் துல்லியத்துடன் நிர்ணயம் செய்துவிடலாம். பெர்ன்ஷ்டைனியத்தின் வெற்றியா தோல்வியா என்பதல்ல இங்குள்ள பிரச்சினை— அது அக்கறைக்குரியது அல்ல. கட்சியினுள் நெடுங்காலமாய்ச் சிறுகச் சிறுக நடைமுறைச் செயற்பாட்

டில் ஏற்பட்டு வந்திருக்கும் அடிப்படையான மாறுதலே இங்கு கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும்.

''இந்த மாறுதல் பொருளாதாரப் போராட்டத்தை மேலும் மும்முரமாய் நடத்திச்செல்வதையும், பொருளாதார நிறுவனங்களை உறுதி பெறச் செய்வதையும் நோக்கி அமைவதாய் இருக்கும் என்பதோடுகூட, இன்னும் மிகவும் முக்கியமாய் ஏனைய எதிர்க் கட்சிகளிடம் கட்சிக்குள்ள போக்கில் ஏற்படும் ஒரு மாறுதலாகவும் இருக்கும். சமரச மனப்பாங்கு சிறிதுமில்லாத மார்க்சியம், நிலைமறுப்பு மார்க்சியம், திருந்தா நிலைக்குரிய பழங் கால மார்க்சியம் (சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினை குறித்து அதற்குள்ள கண்ணோட்டம் அளவுமீறி கட்டுதிட்டமானது) ஜனநாயக மார்க்சியத்துக்கு இடமளித்து ஒதுங்கி விடும்; தற்காலச் சமுதாயத்தில் கட்சியின் சமூக நிலை வெகுவாய் மாறிவிடும். கட்சியானது சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளும்; கட்சியின் குறுகலான தொகுதிக்குரிய பணிகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறுங்குழுப் பணிகள் சமுதாயப் பணிகளாய் விரிவடைந்துவிடும்; ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதில் அதற்குள்ள நாட்டம், மாற்றம் காணும் நாட்டமாய், உழைக்கும் வர்க்கங்களின் உரிமைகளை (எல்லா உரிமைகளையும்) மிகவும் பயனுள்ள முறையில் முழு அளவுக்குப் பாதுகாப்பதை நோக்கமாய்க் கொண்டு இன்றைய சமுதாயத்தை இன்றைய நிலவரங்களுக்கு ஏற்றதாய் ஜனநாயக வழியில் சீர்திருத்தும் நாட்டமாய் மாற்றப்பட்டுவிடும். 'அரசியல்' என்னும் கருத்தோட்டம் விரிவாக்கப்பட்டு மெய்யான சமுதாய அர்த்தமுடையதாகிவிடும்; அந்தந்த நேரத்துக்குமுரிய நடைமுறை கோரிக்கைகள் மேலும் மேலும் முக்கியத்துவமுடையனவாகி இதுகாறும் பெற்றுவந்ததைக் காட்டிலும் கூடுதலான கவனம் பெறத்தக்கனவாகிவிடும்.

''மேலைய நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய இந்தச் சுருக்கமான விளக்கத்திலிருந்து ருஷ்யாவுக்குரிய முடிவுகளைப் பெறுவது கடினமல்ல. ருஷ்யாவில் அதிக சிரமமில்லாத வழி ஒருபோதும் அரசியல் செயற்பாட்டை நோக்கிச் செல்வதாய் இருக்காது. மிகக் கடுமையான அரசியல் ஒடுக்குமுறையானது அதைப் பற்றி மிகுதியான பேச்சை உசுப்பிவிடும், குறிப்பாய் இப் பிரச்சினையில் கவனம் ஒன்றுகுவியும்படிச் செய்யும்,

ஆனுல் ஒருபோதும் அது நடைமுறைச் செயலைத் தூண்டிவிடாது. மேலைய நாடுகளில் தொழிலாளர் கள் அரசியல் செயற்பாட்டுக்கு ஈர்க்கப்பட்டதானது அவர்களுடைய பலவீனமான சக்திகளைப் பலம் பெறச் செய்வதற்கும் உருத் திரளும்படிச் செய்வதற் கும் துணையாய் இருந்தது, ஆனுல் ருஷ்யாவில் இதற்கு மாமுக இந்த பலவீன சக்திகள் அரசியல் ஒடுக்கு முறைத் தடைமதிலை எதிர்நோக்குகின்றன. இந்த ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவதற்கும், அவ்வழியில் தமது சொந்த வளர்ச்சிக்கு வகை செய் வதற்குமான நடைமுறை வழிகளைப் பெற்றிருக்க வில்லை என்பதுடன்கூட, அவை இடையருது நசுக்கப் பட்டு பலவீனமான குருத்துக்களுங்கூட விட முடி யாத நிலையிலுள்ளன. மேலைய நாடுகளில் போராடி யோரை வேறுபடுத்திக் காட்டிய நிறுவன ஒழுங் கமைப்பு உணர்வை நமது நாட்டின் தொழிலாளி வர்க்கம் மரபு வழியில் பெற்றுக்கொள்ளவில்லை என் பதையும் இதனுடன் சேர்த்துக் கொள்வோமாயின், நமக்குக் கிடைக்கும் சித்திரம் மிகவும் சோர்வூட்டு வதாகும். மேலும் ஒரு ஆலைப் புகைபோக்கி தோன்று மாயின் அதுவே பெருத்த நன்மை பயப்பதாயிருக்கு மென நம்பும் அளவிலா ஆர்வங் கொண்ட மார்க் சியவாதியையும்கூட மனம் தளரச் செய்யும் சித்திர மாகும் இது. பொருளாதாரப் போராட்டமுங்கூட மிகக் கடினமானதே, சொல்ல முடியாத அளவுக்குக் கடினமானதே. ஆனுல் அதை நடத்துவது சாத் தியமே, உண்மையில் வெகுஜனங்கள் தாமே அதை நடத்தியும் வருகின்றனர். இந்தப் போராட்டத்தின் வாயிலாய் ருஷ்யத் தொழிலாளி, நிறுவன ஒழுங் கமைப்புபெறக்கற்றுக்கொண்டு, இப்போராட்டத்தின் போது அரசியல் ஆட்சியுடன் ஓயாது மல்லுக்கு நின்று மோதிக் கொண்டு ஒரு வகைத் தொழிலாளர் இயக்கம் என்று சொல்லத்தக்கதான ஒன்றை, ருஷ்ய நிலைமை களுக்கு உகந்த நிறுவனம் அல்லது நிறுவனங்களை இறுதியாய்த் தோற்றுவித்துக்கொள்ளலாம். ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் தற்போது இன்னமும் கரு நிலையில்தான் இருக்கிறதென்று, இன்னமும் அது ஒரு வடிவம் பெற்ருகவில்லையென்று திடமாய்க் கூறலாம். ஏதோ ஒருவகை நிறுவன உருவில் நடைபெற்று வரும் வேலைநிறுத்த இயக்கத்தை ருஷ்ய இயக்கத்துக்கான உறுதியான இறுதி வடிவமாய் இன்னமும் சொல் வதற்கில்லை; சட்டவிரோதமான நிறுவனங்களைப்

பொறுத்தவரை (இன்றைய நிலைமைகளில் அவற்ருல் பயனுண்டா என்கிற பிரச்சினை ஒருபுறம் இருக்க) அளவுப் பரிமாணத்தின் கண்ணேட்டத்திலிருந்துகூட அவை கவனத்துக்குரியனவாய் இருக்கவில்லை.

''இதுதான் நிலைமை. இதனுடன் பஞ்சத்தையும், Streikbrecher* போக்குக்குத் துணை புரிந்து, அதன் விளைவாய்த் தொழிலாளி வெகுஜனப் பகுதியோரை ஓரளவு சகிக்கத்தக்க கலாசார நிலைக்கு உயரும்படிச் செய்வது மேலும் கடினமாகிவிடும்படி கிராமப்புறங்கள் வறுமையுற்றுச் சீரழிவதையும் சேர்த்துக் கொள்வோமானல், பிறகு... ருஷ்ய மார்க்சியவாதி என்ன தான் செய்ய முடியும்?! தொழிலாளர்களுடைய சுயேச்சையான அரசியல் கட்சி பற்றிய பேச்செல்லாம் நமக்கு அந்நியமான குறிக்கோள்களையும் அந்நியமான சாதனைகளையும் வெளியிலிருந்து கொண்டு வந்து நமது மண்ணில் நடுவதன் விளைவேயன்றி வேறல்ல. ருஷ்ய மார்க்சியவாதி இதுகாறும் பரிதாபத்துக்குரிய காட்சியாகவே இருந்து வருகிருர். அவரது நடைமுறைப் பணிகள் தற்போது மிகச் சொற்பம்; அவரது தத்துவார்த்த ஞானம்—ஆராய்ச்சிக்கான ஒரு கருவியாய் அல்லாமல் செயற்பாட்டுக்கான ஒரு கட்டுதிட்டமாய் அவர் இதைப் பயன்படுத்துகிற வரை—இந்த அற்பசொற்ப நடைமுறைப் பணிகளை நிறைவேற்றுவதற்குங்கூட உதவாதது. தவிரவும் கடன் வாங்கப்பட்ட இந்தக் கட்டமைவுகள் நடைமுறைக் கண்ணேட்டத்தின்படி தீங்கிழைப்பவையாகும். நமது மார்க்சியவாதிகள் மேலைய நாடுகளில் தொழிலாளி வர்க்கம் அரசியல் அரங்கு ஏற்கனவே தயார் செய்யப்பட்ட பிறகு அரசியல் செயற்பாட்டில் இயங்கிற்று என்பதை மறந்துவிட்டு, தொழிலாளர் அல்லாத ஏனைய எல்லா சமூகப் பகுதியோரின் தீவிரவாத அல்லது மிதவாத வகைப்பட்ட எதிர்ப்புச் செயல்கள் குறித்து அளவு மீறிய அலட்சிய மனேபாவம் கொண்டுள்ளனர். மிதவாத அரசியல் தன்மை கொண்ட பொதுஜன செயல் வெளிப்பாடுகளில் கவனம் ஒன்றுகுவிவதற்காக மேற்கொள்ளப்படும் இலேசான முயற்சியையும் வைதீக மார்க்சியவாதிகள் ஆவேசமாய்க் கண்டனம் செய்கின்றனர். இவர்கள் வரலாற்று நிலைமைகள் பலவும் நம்மை

---

* — வேலைநிறுத்தத்தைச் சீர்குலைத்து முறியடித்தல்.—பதிப்பாசிரியர்.

மேலைய மார்க்சியவாதிகளாய்ச் செயல்பட முடியாத வாறு தடுப்பதையும், ருஷ்ய நிலைமைகளுக்கு உகந்ததும் தேவையானதுமான வேறொரு வகை மார்க்சியத்தை நம்மிடமிருந்து கோருவதையும் மறந்துவிடுகிறார்கள். ருஷ்யக் குடிமகனிடம் அரசியல் உணர்வும் உள்ளுணர்ச்சியும் இல்லாத நிலைமையை அரசியல் பற்றிய பேச்சுக்களாலோ, இல்லாதவொரு சக்திக்கு விடுக்கப்படும் வேண்டுகோள்களாலோ சரிக்கட்டிவிட முடியாது. இந்த அரசியல் உணர்வைக் கல்வி போதத்தின் மூலமே பெற முடியும், அதாவது ருஷ்ய நிலைமைகளால் அளிக்கப்படும் வாழ்க்கையில் (எவ்வளவுதான் அது மார்க்சியத்துக்கு ஒவ்வாததாய் இருந்த போதிலும்) பங்கெடுத்துக் கொள்வதன் மூலமே பெற முடியும். 'நிலைமறுப்பு' மேலைய நாடுகளில் எந்த அளவுக்கு (தற்காலிகமாய்) பொருத்தமுடையதாய் இருந்ததோ அதே அளவுக்கு ருஷ்யாவில் தீமை பயப்பதாய் இருக்கிறது. ஏனென்றால் நிறுவன ஒழுங்கமைப்பு பெற்று மெய்யான வல்லமை கொண்ட ஒன்றிலிருந்து உதிக்கும் நிலைமறுப்பு வேறு, சிதறுண்ட தனிநபர்களது உருத் திரட்சியற்ற கும்பலிலிருந்து உதிக்கும் நிலைமறுப்பு வேறு.

''ருஷ்ய மார்க்சியவாதிக்கு உள்ளது ஒரேயொரு வழிதான்: பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தில் பங்கு கொள்வதும், அதாவது அந்தப் போராட்டத்துக்குத் துணை புரிவதும், மிதவாதத் தன்மையதான எதிர்ப்புச் செயற்பாட்டில் பங்குகொள்வதும்தான் அவ்வழி. 'நிலைமறுப்பாளராய்' ருஷ்ய மார்க்சியவாதி ஆரம்ப காலத்திலேயே அரங்குக்கு வந்துவிட்டார், இந்த நிலைமறுப்பானது அவருடைய சக்தியில் அரசியல் தீவிரவாதத்தின் திசையில் திருப்பிவிடப்பட வேண்டிய பகுதியினைப் பலவீனப்படுத்திவிட்டது. தற்போதைக்கு இது ஒரு பெருங் கொடுமையல்ல; ஆனால் வர்க்கக் கட்டுதிட்டம் ருஷ்ய அறிவுத் துறையினரை வாழ்க்கையில் செயலூக்கமுள்ள பங்கு பெற முடியாதபடி தடுத்து, எதிர்ப்பு வட்டாரங்களிலிருந்து நெடுந் தொலைவு விலகிச் சென்று நிற்கும்படிச் செய்யுமாயின், இன்னும் அரசியல் குறிக்கோள்களை முன்வைக்காத தொழிலாளி வர்க்கத்திலிருந்து பிரிந்து சட்டமுறை வடிவங்களுக்காகப் போராடும்படி நிர்ப்பந்திக்கப்படுவோர் எல்லோருக்கும் இது மிகப் பெரிய நஷ்டமாகிவிடும். ருஷ்ய மார்க்சிய அறிவுத் துறையாளர் அரசியல் விவகாரங்கள்

குறித்து நடத்தும் கொண்டாட்டங்களின் பின்னுல் மறைந்துள்ள அரசியல் அறியா நிலை அவருக்குப் பெருங் கேடு விளைவிப்பதாகிவிடும்."

இந்தக் கருத்துக்களை ஏற்கும் ருஷ்ய சமூக-ஜனநாயக வாதிகள் பல பேர் இருக்கிருர்களா என்று நமக்குத் தெரியாது. ஆனுல் இவ்வகையான கருத்துக்களை ஆதரிப்போர் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆகவே இத்தகைய கருத்துக்களை உறுதியாய்க் கண்டனம் செய்வதும், ருஷ்ய சமூக-ஜனநாயகம் ஏற்கனவே குறிக்கப்பட்ட பாதையிலிருந்து—பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாததும் அரசியல் சுதந்திரம் பெறுவதைத் தனது உடனடிக் குறிக்கோளாய்க் கொண்டதுமான சுயேச்சையான தொழிலாளி வர்க்க அரசியல் கட்சியை நிறுவுவதென்ற பாதையிலிருந்து—அபாயகரமாய்த் தடம் புரண்டு செல்வதற்கு எதிராய் எல்லாத் தோழர்களையும் எச்சரிக்கை செய்வதும் எமது கடமையாகுமெனக் கருதுகிறேம்.

மேலே தரப்பட்ட credoவானது முதலாவதாக "மேலைய நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய சுருக்கமான விளக்கத்தையும்", இரண்டாவதாக "ருஷ்யாவுக்குரிய முடிவுகளையும்" அளிக்க முயலுகிறது.

முதலாவதாக, இந்த credoவின் ஆசிரியர்கள் மேற்கு ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு குறித்து முற்றிலும் தவருன கண்ணேட்டம் கொண்டுள்ளனர். மேலைய நாடுகளில் தொழிலாளி வர்க்கம் அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டத்திலும் அரசியல் புரட்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்வது உண்மையல்ல. சார்ட்டிஸ்டு இயக்கத்தின்[5] வரலாறும் 1848ல் பிரான்சிலும் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் நடைபெற்ற புரட்சிகளும் இதற்கு நேர் எதிரானதே உண்மையென்று நிரூபிக்கின்றன. "பொருளாதாரப் போராட்டத்தைக் காட்டிலும் அரசியல் போராட்டம்தான் முதன்மையானது—பெரு வழக்காயிருந்த இந்த நடைமுறைக்கு மார்க்சியம் தத்துவார்த்த வெளியீடாய் விளங்கிற்று" என்பது சிறிதும் உண்மையல்ல. மாருக அரசியலல்லாத சோஷலிசம் (ஓவனியம்,

''ஃபூரியேரியம்'', ''மெய்யான சோஷலிசம்'')[6] பெருவழக்காயிருந்த ஒரு காலத்தில் மார்க்சியம் தோன்றியது; கம்யூனிஸ்டு அறிக்கை அரசியலல்லாத சோஷலிசத்தை எதிர்த்து உடனடியாகவே போராட முற்பட்டது. முழு அளவுக்கு மார்க்சியம் தத்துவ ஆயுதம் (மூலதனம்) பூண்டதாகி, புகழ் பெற்ற சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை[7] நிறுவியபோதும்கூட அரசியல் போராட்டம் எவ்வகையிலும் பெருவழக்காயிருந்த நடைமுறையாய் இருக்கவில்லை (இங்கிலாந்தில் குறுகிய தொழிற்சங்கவாதம், லத்தீன் வழிமொழி நாடுகளில் அராஜகவாதமும் புருதோனியமும்[8]). ஜெர்மனியில் தொழிலாளி வர்க்கத்தை மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் ஒட்டுவாலாய் இருந்த நிலையிலிருந்து மாற்றி சுயேச்சையான அரசியல் கட்சியாக்கியதுதான் லஸ்ஸால் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புடைத்த பெரும்பணி. மார்க்சியமானது தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் பிரிக்க முடியாத தனியொரு முழுமையாய் இணைத்திட்டது, போராட்டத்தின் இவ்வடிவங்களைத் தனியே பிரித்திட credoவின் ஆசிரியர்கள் செய்யும் முயற்சி மார்க்சியத்திலிருந்து மிகவும் அலங்கோலமாகவும் வருந்தத்தக்கவாறும் தடம் புரள்வதைக் குறிக்கும் அவர்களது புரட்டுகளில் ஒன்றாகும்.

மேலும் credoவின் ஆசிரியர்கள் மேற்கு ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தற்போதைய நிலை குறித்தும் அந்த இயக்கம் ஏந்திப் பிடித்து நடைபோடும் பதாகையான மார்க்சியத்தின் தத்துவம் குறித்தும் முற்றிலும் தவறான கருத்தோட்டம் கொண்டிருக்கிறார்கள். ''மார்க்சியத்தின் நெருக்கடி'' என்பதாய்ப் பேசுவதானது, சோஷலிஸ்டுகளிடையே இருக்கும் கருத்து வேறுபாடு ஒவ்வொன்றையும் கடுமையாக்கி அதை சோஷலிஸ்டுக் கட்சிகளில் பிளவாக மாற்றுவதற்காகத் தம்மால் இயன்றது அனைத்தையும் செய்து வரும் முதலாளித்துவக் கூலி எழுத்தாளர்கள் கூறும் அபத்தத்தை அப்படியே திருப்பிச் சொல்வதே ஆகும். கேடுகெட்ட பெர்ன்ஷ்டைனியமானது — பொதுவாய்ப் பொதுமக்களும் குறிப்பாய் credoவின் ஆசிரியர்களும் சாதாரணமாய் அதற்கு அளித்திடும் அர்த்தத்தில்—மார்க்சியத் தத்துவத்

தைக் குறுகலானதாக்குவதற்குரிய, புரட்சிகரத் தொழி லாளர் கட்சியைச் சீர்திருத்தவாதக் கட்சியாய் மாற்றுவதற் குரிய ஒரு முயற்சியே ஆகும். எதிர்பார்க்கக் கூடியது போல வே, இந்த முயற்சியைப் பெருவாரியான ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் வன்மையாய்க் கண்டித்திருக்கிறார்கள். சந்தர்ப்பவாதப் போக்குகள் அடிக்கடி ஜெர்மன் சமூக-ஜன நாயகத்தின் அணிகளில் தலைகாட்டியிருக்கின்றன; புரட்சிகர சர்வதேச சமூக-ஜனநாயகத்தின் கோட்பாடுகளைப் பற்றுறுதி யோடு பேணிக் காக்கும் கட்சியால் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் இவை நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. சந்தர்ப்பவாதக் கருத்துக்களை ருஷ்யாவுக்குக் கொண்டுவந்து புகுத்துவதற் காகச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும் மிகப் பெருவாரி யான ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளிடமிருந்து இதே அள வுக்கு வைராக்கியமான எதிர்ப்பையே சந்திக்கும் என்பதில் எங்களுக்குத் துளியும் சந்தேகமில்லை.

இதே போல, credoவின் ஆசிரியர்கள் என்ன சொன்ன போதிலும், மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் கட்சிகளின் ''நடைமுறைச் செயற்பாட்டில் தீவிர மாறுதலுக்கான'' பேச்சுக்கே இடமில்லை. பாட்டாளி வர்க்கத்தின் பொருளா தாரப் போராட்டத்துக்குள்ள அளவு கடந்த முக்கியத்துவத் தையும், இத்தகைய ஒரு போராட்டத்தின் அவசியத்தையும் மார்க்சியம் துவக்க காலம் முதலாகவே அங்கீகரித்து வந்துள் ளது, நாற்பதாம் ஆண்டுகளிலேயே மார்க்சும் எங்கெல்சும் இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுத்த கற்பனாவாத சோஷலிஸ்டுகளை எதிர்த்து வாதப்போர் நடத்தினர்.

சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பிற்பாடு சர்வதேசத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டபோது 1866ல் ஜெனீவா வில் நடைபெற்ற அதன் முதலாவது காங்கிரசிலேயே தொழிற் சங்கங்கள், பொருளாதாரப் போராட்டம் இவற்றின் முக்கியத்துவம் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. அந்தக் காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானம் பொருளாதாரப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படையாய்க் குறிப்பிட்டு, ஒரு புறத்தில் (ஆங்கிலேயத் தொழிலாளர்கள் அன்று செய்ய முனைந்ததுபோல) இதன் முக்கியத்துவத்தை

மிகைப்படுத்துவதை எதிர்த்தும், மறுபுறத்தில் (பிரெஞ்சுக்காரர்களும் ஜெர்மானியர்களும் இன்னும் முக்கியமாய் லஸ்ஸாலியர்களும்[9] செய்ய முனைந்தது போல) இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதை எதிர்த்தும் சோஷலிஸ்டுகளையும் தொழிலாளர்களையும் எச்சரித்தது. தொழிற் சங்கங்கள் முதலாளித்துவத்தில் இயற்கையானவை மட்டுமல்ல, அத்தியாவசியமானவையுங்கூட என்று இந்தத் தீர்மானம் அங்கீகரித்தது; தொழிலாளி வர்க்கத்தை மூலதனத்துக்கு எதிரான அதன் அன்றாட போராட்டத்தில் அணி திரட்டி ஒழுங்கமைப்பதற்கும் கூலி உழைப்பை ஒழித்திடுவதற்கும் அவை மிகவும் முக்கியமான சாதனங்களாகுமெனக் கருதிற்று. தொழிற் சங்கங்கள் ''மூலதனத்துக்கு எதிரான உடனடிப் போராட்டத்தில்'' மட்டும் கவனம் செலுத்துவதுடன் நின்றுவிடக் கூடாது, தொழிலாளி வர்க்கத்தின் பொதுவான அரசியல், சமுதாய இயக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கலாகாது என்று இந்தத் தீர்மானம் பறைசாற்றியது; அவை ''குறுகிய'' நோக்கங்களைக் கொண்டு செயல்படலாகாது, அதற்கு மாறாக கோடானு கோடியான ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களுடைய பொது விடுதலைக்காகப் பாடுபட வேண்டும் என்றது. அது முதலாய்ப் பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர் கட்சிகள் முன்னால் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டமா, அரசியல் போராட்டமா என்னும் பிரச்சினை பல தடவை எழுந்துள்ளது, மீண்டும் மீண்டும் இனியும் எழவே செய்யும். ஆனால் பொதுப் பிரச்சினை அல்லது கோட்பாடு வழிப்பட்ட பிரச்சினை மார்க்சியம் எடுத்துரைத்தது போலவேதான் இன்றும் இருந்துவருகிறது. வர்க்கப் போராட்டமானது அரசியல் போராட்டத்தையும் பொருளாதாரப் போராட்டத்தையும் பிரிக்க முடியாத ஒருமித்த முழுமையாய் அவசியம் இணைத்திட வேண்டுமென்ற உறுதியான எண்ணம் சர்வதேச சமூக-ஜனநாயகத்துடன் இரண்டறக் கலந்துவிட்டது. தவிரவும், அரசியல் சுதந்திரம் இல்லாமல் அல்லது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உரிமைகள் தடையிடப்பட்டு இருக்கும் நிலைமையானது, எப்பொழுதும் அரசியல் போராட்டம் முன்னணியில் இருப்பது அவசியம் என்

பதை வரலாற்றின் அனுபவம் மறுக்க முடியாதவாறு நிரூபித்திருக்கிறது.

தொழிலாளர் கட்சி ஏனைய எதிர்க் கட்சிகளின்பால் கொண்டிருக்கும் போக்கில் தீவிர மாற்றம் வேண்டுமென்ற பேச்சுக்கும் நியாயம் சிறிதும் இருக்க முடியாது. இது குறித்தும் மார்க்சியமானது பிழையற்ற நிலையை ஏற்கனவே வகுத்தளித்துள்ளது. அரசியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவதிலிருந்தும், சதி புரிவதிலிருந்தும் (பிளான்கியமும் இன்ன பிறவும்), அரசியலை இகழ்ந்துரைத்து ஒதுக்குவதிலிருந்தும் அதைச் சந்தர்ப்பவாத, சீர்திருத்தவாதச் சமுதாய அரைகுறை ஒட்டையடைப்பு முயற்சியாய் (அராஜகவாதம், கற்பனாவாத, குட்டிபூர்ஷுவா சோஷலிசம், அரசு சோஷலிசம், பண்டித சோஷலிசம் முதலானவையாய்) குறுகச் செய்வதிலிருந்தும் இந்த நிலை முற்றிலும் மாறானது. பாட்டாளி வர்க்கம் தொழிலாளர்களது சுயேச்சையான அரசியல் கட்சிகளை நிறுவ முயல வேண்டும். சோஷலிச சமுதாயத்தை அமைத்திடும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதே இந்தக் கட்சிகளுடைய பிரதான குறிக்கோளாய் இருந்தல் வேண்டும். பாட்டாளி வர்க்கம் பிற வர்க்கங்களையும் கட்சிகளையும் "ஒரு பெரும் பிற்போக்குத் திரளாய்க்"[10] கருதக் கூடாது; மாறாக, அது அரசியல், சமுதாய வாழ்வு அனைத்திலும் பங்கெடுத்து, பிற்போக்கு வர்க்கங்களுக்கும் கட்சிகளுக்கும் எதிராய் முற்போக்கு வர்க்கங்களுக்கும் கட்சிகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும், தற்போதுள்ள அமைப்புக்கு எதிராய்ப் புரட்சிகர இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரித்து, ஒடுக்கப்பட்ட தேசிய இனம் அல்லது வர்ண இனம், அடக்குமுறைக்கு இலக்கான மதம், உரிமைகள் இல்லாத பால் முதலானவை ஒவ்வொன்றின் நலன்களுக்காகவும் முன்னின்று போராட வேண்டும். இப்பொருள் குறித்து credoவின் ஆசிரியர்கள் முன்வைக்கும் வாதங்கள் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தின் வர்க்கத் தன்மையை மூடிமறைத்திடுவதிலும், "சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளுதல்" என்கிற அர்த்தமற்ற பேச்சைக் கொண்டு இந்தப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதிலும், புரட்சிகர மார்க்சியத்தை

அற்பத்தனமான சீர்திருத்தவாதப் போக்காய் இழிவுபடச் செய்வதிலுமுள்ள விருப்பத்தைத்தான் வெளிப்படுத்திக் கொள்கின்றன. சமூக-ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இவ்விதம் திரித்துப் புரட்டப்படுவதை ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளில் மிகப் பெரும்பான்மையோர் உறுதியாய் நிராகரிப்பார்கள் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை. மேற்கு ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றி credoவின் ஆசிரியர்கள் வகுத்துக் கொள்ளும் தவறான முதற்கோள்கள், அவர்களை மேலும் தவறான ''ருஷ்யாவுக்குரிய முடிவுகளை'' வந்தடையச் செய்கின்றன.

ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் ''இன்னும் அரசியல் குறிக்கோள்களை முன்வைத்தாகவில்லை'' என்று துணிந்து கூறுவதானது, ருஷ்யப் புரட்சி இயக்கத்தைப் பற்றிய அறியாமையைத்தான் வெளிப்படுத்துகின்றது. 1878ல் நிறுவப்பட்ட வடருஷ்யத் தொழிலாளர் சங்கமும், 1875ல் நிறுவப்பட்ட தென்ருஷ்யத் தொழிலாளர் சங்கமும் அக்காலத்திலேயே அவற்றின் வேலைத்திட்டங்களில் அரசியல் சுதந்திரத்துக்கான கோரிக்கையை முன்வைத்தன. பிற்போக்கு தாண்டவமாடிய எண்பதாம் ஆண்டுகளுக்குப் பிற்பாடு தொண்ணூறும்ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கம் இதே கோரிக்கையை மீண்டும் மீண்டும் முன்வைத்தது. ''தொழிலாளர்களுடைய சுயேச்சையான அரசியல் கட்சி பற்றிய பேச்செல்லாம் நமக்கு அந்நியமான குறிக்கோள்களையும் அந்நியமான சாதனைகளையும் வெளியிலிருந்து கொண்டு வந்து நமது மண்ணில் நடுவதன் விளைவேயன்றி வேறல்ல'' என்று துணிந்து கூறுவதானது, ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணியையும் ருஷ்ய சமூக-ஜனநாயகத்துக்குள்ள மிகவும் ஜீவாதாரமான கடமைகளையும் புரிந்து கொள்ள அறவே தவறிவிடுவதைத்தான் காட்டுகிறது. தொழிலாளி வர்க்கம் ''அதிக சிரமமில்லாத வழியைப்'' பின்பற்றிப் பொருளாதாரப் போராட்டத்தின் வரம்புக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும், ''மிதவாதத் தன்மையதான எதிர்ப்புப் பகுதியோர்'' மார்க்சியவாதிகளின் ''பங்குடன்'' ''சட்டமுறை வடிவங்களுக்காகப்'' போராட வேண்டும் என்ற கருத்தை credoவின் ஆசிரியர்களது வேலைத்திட்டம் ஆதரிப்பது தெளிவாய்த்

தெரிகிறது. இத்தகைய ஒரு வேலைத்திட்டத்தைச் செயல் படுத்துவது ருஷ்ய சமூக-ஜனநாயகம் அரசியல் தற்கொலை செய்து கொள்வதற்கே ஒப்பானதாகும்; இது ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் ருஷ்யப் புரட்சி இயக்கத்தையும் (நமக்கு இவை இரண்டும் ஒன்றேதான்) வெகுவாய்ப் பின்னடைய வைத்துச் சீர்கேடுறச் செய்துவிடும். இது போன்ற ஒரு வேலைத்திட்டம் தோன்ற முடிந்ததானது, ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் முதன்மையான முன்னணியாளர்களில் ஒருவரான பா.ப.அக்செல்ரோத் தெரிவித்த அச்சம் முற்றிலும் நியாயமே என்பதைத் தெளிவுபடுத்துவதாயுள்ளது. 1897ஆம் ஆண்டின் இறுதியில் பா.ப.அக்செல்ரோத் இத்தகைய சாத்தியப்பாடு குறித்து பின்வருமாறு எழுதினார்:

> ''தொழிலாளி வர்க்க இயக்கம் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான முற்றிலும் பொருளாதாரத் தன்மையதான மோதல்களின் குறுகிய தடத்தைவிட்டு வெளியேறுமலே இருக்கிறது, ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கையில் இந்த இயக்கம் அரசியல் தன்மையதாய் இருக்கவில்லை; அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதிகள் அறிவுத்துறையினர் எனப் படுவோரது புரட்சிகர வட்டங்கள், கோஷ்டிகளைப் பின்தொடருகிறது'' (அக்செல்ரோத், ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகளின் இன்றைய கடமைகளும் போர்த்தந் திரமும், ஜெனீவா, 1898, பக்கம் 19).

Credoவில் வெளியிடப்படும் கருத்துக்களின் முழு தொகுப்பின்மீதும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் வைராக் கியமான போர்ப் பிரகடனம் செய்தாகவேண்டும். ஏனெனில் இந்தக் கருத்துக்கள் மேற்கூறிய சாத்தியப்பாடு சித்தி பெறுவதற்கே நேரே இட்டுச் செல்கின்றன. ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகள் மற்றொரு திசைவழியை எதார்த்த உண்மையாக்குவதற்கு முனைந்து பாடுபட வேண்டும். இந்த மற்றொரு திசைவழியை பா. ப. அக்செல்ரோத் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> ''மற்றொரு திசைவழி: சமூக-ஜனநாயகம் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தை சுயேச்சையான ஓர் அரசியல் கட்சியாய் ஒழுங்கமைத்திட்டு, இக்கட்சி

ஓரளவு முதலாளித்துவப் புரட்சிகரக் கோஷ்டிகளுடன் (இவை இருக்குமாயின்) தோளோடு தோள் இணைத்து நின்றும், கூட்டணி கொண்டும், ஓரளவு அறிவுத்துறையினரிடையிலுள்ள மிகவும் ஜனநாயக மனப்பாங்கு கொண்ட புரட்சிகரப் பகுதிகளை நேரடியாய்த் தனது அணிகளில் சேர்த்துக் கொண்டும், அல்லது தன்னைப் பின்தொடரும்படி அவற்றை ஈர்த்துக் கொண்டும் சுதந்திரத்துக்காகப் போராடுகிறது'' (மேலே கூறப்பட்ட நூல், பக்கம் 20).

பா. ப. அக்செல்ரோத் இந்த வரிகளை எழுதிய காலத்தில் ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதிகள் வெளியிட்ட பிரகடனங்கள், அவர்களில் மிகப் பெரும்பான்மையோர் இதே கருத்தோட்டத்தைதான் கொண்டிருந்தனர் என்பதைத் தெளிவுபட காட்டின. செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் தொழிலாளர் பத்திரிகைகளில் ஒன்முன ரபோச்சயா மீசில்,[11] credoவின் ஆசிரியர்களது கருத்துக்களின் பக்கம் சாய்ந்ததாய்த் தோன்றியது என்பது மெய்தான். தனது வேலைத்திட்டத்தை வகுத்தளித்த தலையங்கக் கட்டுரை ஒன்றில் (இதழ் 1, 1897 அக்டோபர்) வருந்தத்தக்கவாறு அது முழுக்க முழுக்கத் தவறான ஒரு கருத்தை, சமூக-ஜனநாயகத்துக்குப் புறம்பான ஒரு கருத்தை வெளியிட்டது: ''இயக்கத்தின் பொருளாதார அடிப்படையானது'' ''அரசியல் இலட்சியத்தை இடையருது மனதில் இருத்திக் கொள்வதற்கான முயற்சியினுல் பார்வையில் படாதபடி ஒதுக்கப்பட்டுவிடலாம்'' என்று கூறிற்று. ஆனல் அதேபோதில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் மற்ரெரு தொழிலாளர் செய்தியேடான எஸ். பித்தெர்பூர்க்ஸ்கி ரபோச்சி லிஸ்தோக்[12] (இதழ் 2, 1897 செப்டம்பர்), ''எதேச்சாதிகாரத்தை வீழ்த்திடுவது... நிறுவன வழியில் நன்கு ஒழுங்கமைந்து எண்ணிக்கையில் பலம் மிக்கதான தொழிலாளி வர்க்கக் கட்சியால் மட்டுமே சாத்தியம்'' என்றும், ''பலமான கட்சியாய் ஒழுங்கமைந்த'' தொழிலாளர்கள் ''எல்லா விதமான அரசியல், பொருளாதார ஒடுக்குமுறையிலிருந்தும் தம்மையும் ருஷ்யா அனைத்தையும் விடுதலை பெறச் செய்வார்கள்'' என்றும் வலியுறுத்திற்று. மூன்ருவது செய்தியேடான ரபோச்சயா கஸேத்தா[13] இதழ் 2ல் (1897 நவம்பர்) அதன் தலையங்கக் கட்டுரையில் எழுதிற்று: ''எதேச்சாதிகார அரசாங்கத்

ைத எதிர்த்து அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடுவது தான் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உடனடிக் கடமையாகும்''. ''ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கம் பொதுப் பெயரையும் நெருக்கமாய் இணைந்த நிறுவனத்தை யும் பெற்று இசைவான தனியொரு முழுமையாய் அமையப் பெறுமாயின் அது தனது சக்திகளைப் பத்து மடங்கு பெருகச் செய்து கொண்டுவிடும்....'' ''தனித் தனியாயுள்ள தொழி லாளர் குழுக்கள் ஒரு பொதுக் கட்சியாய் ஒன்றுசேர வேண் டும்.'' ''ருஷ்யத் தொழிலாளர் கட்சி சமூக-ஜனநாயகக் கட்சி யாய் அமையப் பெறும்.'' மேலும் ரபோச்சயா கஸேத்தா வின் இந்தக் கருத்துக்கள் மிகப் பெரும்பாலான ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளால் முழு அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட் டன என்பதை 1898 வசந்தத்தில் கூடிய ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகளின் காங்கிரஸ்[14] ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை நிறுவி, இக்கட்சியின் அறிக்கையை வெளியிட்டு, ரபோச்சயா கஸேத்தாவை அதிகாரபூர்வமான கட்சி ஏடாய் அங்கீகரித்ததிலிருந்து அறியலாம். ருஷ்ய சமூக-ஜனநாயகம் ஏற்கனவே வந்தடைந்து, ருஷ்யாவின் சமூக-ஜன நாயகத் தொழிலாளர் கட்சியின் அறிக்கையில் அது பதிவு செய்த வளர்ச்சிக் கட்டத்திலிருந்து credoவின் ஆசிரியர் கள் இவ்வாறு மிகப் பெரியதோர் அடி பின்னோக்கி எடுத்து வைக்கின்றனர். ருஷ்ய அரசாங்கத்தின் ஆவேசமான அடக்கு முறையின் விளைவாய்க் கட்சியின் செயற்பாடு தற்காலிகமாய் ஓய்ந்துபோய் அதன் அதிகாரபூர்வமான ஏடு வெளிவராமல் நின்றுவிட்ட தற்போதைய நிலைமை ஏற்பட்டுவிட்டதனால், கட்சியைக் கூடுமான அளவுக்கு உறுதி பெறச் செய்ய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதும், கட்சியின் வேலைத்திட் டத்தை வகுத்திடுவதும், அதிகாரபூர்வமான அதன் ஏட்டைத் திரும்பவும் தொடங்குவதும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி கள் அனைவருக்குமுரிய கடமையாகும். மேலே பரிசீலிக்கப் பட்ட credo போன்ற வேலைத்திட்டங்கள் வெளிவருவதன் மூலம் புலப்படுத்தப்படும் சித்தாந்த ஊசலாட்டங்களின் காரணமாய், அடியிற்கண்ட அடிப்படைக் கோட்பாடுகளை வலியுறுத்துவது மிகவும் அவசியமென நாங்கள் நினைக் கிறோம். இந்த அடிப்படைக் கோட்பாடுகள் அறிக்கையில்

விவரிக்கப்பட்டவை, ருஷ்ய சமூக-ஜனநாயகத்துக்கு அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. முதலாவதாக, ருஷ்ய சமூக-ஜனநாயகம் ''நிறுவன ஒழுங்கமைப்பு பெற்று உழைப்பாளி வெகுஜனங்களது வர்க்க இயக்கமாய் இருக்கவும் நிலை பெறவும் விரும்புகிறது''. எனவே சமூக-ஜனநாயகத்தின் இலட்சிய முழக்கம் பின்வருமாறே இருக்க வேண்டுமென்பது இதிலிருந்து பெறப்படுகிறது: தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பொருளாதாரப் போராட்டத்தில் மட்டுமின்றி அவர்களுடைய அரசியல் போராட்டத்திலும் உதவுதல்; உடனடியான பொருளாதாரத் தேவைகள் சம்பந்தமாய் மட்டுமின்றி, அரசியல் ஒடுக்குமுறையின் எல்லா வெளிப்பாடுகள் சம்பந்தமாகவும் கிளர்ச்சி செய்தல்; விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களை மட்டுமின்றி ஜனநாயகக் கருத்துக்களையும் பிரசாரம் செய்தல். புரட்சிகர மார்க்சியத்தின் தத்துவம் மட்டும்தான் தொழிலாளர்களுடைய வர்க்க இயக்கத்தின் பதாகையாய் இருக்க முடியும். ருஷ்ய சமூக-ஜனநாயகம் இந்தத் தத்துவத்தை மேலும் வளர்த்துச்செல்வதிலும் இதனை வாழ்க்கையில் செயல்படுத்துவதிலும் கருத்து செலுத்தியாக வேண்டும்; ''புதுப் பாணியாய்ப் பிரபலமடையும் தத்துவங்களுக்கு'' அடிக்கடி செய்யப்படுவது போல இதுவும் திரித்துப் புரட்டப்படாதபடியும் கொச்சைப்படுத்தப்படாதபடியும் பாதுகாத்தாக வேண்டும் (ருஷ்யாவில் புரட்சிகர சமூக-ஜனநாயகத்துக்குக் கிட்டியிருக்கும் வெற்றிகள் ஏற்கனவே மார்க்சியத்தைப் ''புதுப் பாணியாய்ப் பிரபலமடைந்த'' தத்துவமாக்கியுள்ளன). சமூக-ஜனநாயகவாதிகள் ஆலைத் தொழிலாளர்களிடையிலும் சுரங்கத் தொழிலாளர்களிடையிலும் செயலாற்றுவதில் தற்போது தமது முயற்சிகளை எல்லாம் ஒன்றுகுவித்திடும் அதேபோதில், இயக்கத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து வீட்டு வேலைத் தொழிலாளர்களையும் கைத்தொழிலாளர்களையும் விவசாயத் தொழிலாளர்களையும் ஓட்டாண்டிகளாகிப் பட்டினி கிடக்கும் லட்சோப லட்சக் கணக்கான விவசாயிகளையும் தாம் திரட்டி நிறுவன ஒழுங்கமைப்பு பெறச் செய்து உழைப்பாளி வெகுஜனங்களது அணிவரிசையினுள் வரும்படி ஈர்த்துக் கொள்ள வேண்டுமென்பதை மறக்கலாகாது.

இரண்டாவதாக: ''அரசியல் சுதந்திரம் பெறும் இலட்சியத்தை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லும் பொறுப்பை ருஷ்யத் தொழிலாளர்கள் தமது திண்தோள்களில் ஏற்றுக் கொள்ள வேண்டும், அவ்வாறே ஏற்றுக் கொள்ளவும் செய்வார்கள்''. எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதே சமூக-ஜனநாயகத்தின் உடனடிப் பணியாதலால், ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் சமூக-ஜனநாயகம் முன்னணிப் படையாய்ச் செயல் புரிய வேண்டும். ஆகவே, வேறு எதற்காக இல்லாமற் போனாலும் இந்த ஒரு காரணத்துக்காகவேனும், அது ருஷ்யாவின் மக்களைச் சேர்ந்த எல்லா ஜனநாயகப் பகுதியோருக்கும் எல்லா வித ஆதரவும் அளித்து அவர்களைக் கூட்டாளிகளாய் ஈர்த்துக் கொள்ள வேண்டும். சுயேச்சையான தொழிலாளி வர்க்கக் கட்சியால் மட்டுமேதான் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் வலுமிக்கக் கோட்டையாய்ச் செயல்படமுடியும், அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடும் ஏனையோர் அனைவரும் இத்தகைய ஒரு கட்சியுடன் கூட்டணி கொண்டுதான், அதை ஆதரித்து நிற்பதன் மூலம்தான் பயனுள்ள பங்காற்ற முடியும்.

மூன்றாவதாகவும் முடிவாகவும்: ''சோஷலிஸ்டு இயக்கம் என்ற முறையிலும் போக்கு என்ற முறையிலும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியானது ருஷ்யாவில் இதற்கு முற்பட்டதான புரட்சி இயக்கம் அனைத்தின் இலட்சியத்தையும் மரபுகளையும் தாங்கிச் செல்கிறது; அரசியல் சுதந்திரம் பெறுவதே கட்சி அனைத்துக்குமுள்ள உடனடிப் பணிகளில் மிகவும் முக்கியமானதெனக் கருதி சமூக-ஜனநாயகமானது பழைய நரோத்னயா வோல்யாவின்[15] புகழ்மிக்கப் பிரதிநிதிகள் தெட்டத்தெளிவாய் ஏற்கனவே சுட்டிக்காட்டிய குறிக்கோளை நோக்கி வீறுநடை போடுகிறது''. சமூக-ஜனநாயகவாதிகள் தற்போது தமது முயற்சிகள் அனைத்தையும் கட்சியை ஒழுங்கமைப்பதிலும், அதன் உள்நிலைக் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவதிலும், சட்டவிரோத வேலை நுட்பத் திறனை வளர்த்திடுவதிலும் ஒன்றுகுவிக்க வேண்டுமென முந்தையப் புரட்சி இயக்கம் அனைத்தின் மரபுகளும் கோருகின்றன. பழைய நரோத்னயா வோல்யாவின் உறுப்பினர்கள், குறுகலான சமூகப் பகுதிகள் மட்டும்தான் ஒருசிலரேயான வீரர்களை

ஆதரித்தன என்பதையும், அந்த இயக்கத்தின் பதாகையாய் விளங்கிய தத்துவம் எவ்வகையிலும் புரட்சிகரத் தத்துவமாய் இருக்கவில்லை என்பதையும் மீறி, ருஷ்யாவின் வரலாற்றில் அத்தனை மகத்தான பங்கு ஆற்ற முடிந்ததென்றால், பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தை ஆதாரமாய்க் கொண்டிருக்கும் சமூக-ஜனநாயகமானது தன்னை வெல்லற்கரிய பலம் படைத்ததாக்கிக் கொண்டுவிட முடியும். ''மூலதனத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் எதிர்த்து சோஷலிசம் முழுநிறை வெற்றி பெறுவதற்கான போராட்டத்தை மேலும் கூடுதலான ஆற்றலோடு தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் எதேச்சாதிகார நுகத்தடியைத் தகர்த்தெறியும்.''

மேலே தரப்பட்ட credoவையும் எங்களுடைய தீர்மானத்தையும் விவாதிக்கும்படியும், எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை குறித்துத் திட்டவட்டமான கருத்தைத் தெரிவிக்கும்படியும் ருஷ்யாவிலுள்ள சமூக-ஜனநாயகவாதிகளின் எல்லாக் குழுக்களுக்கும் தொழிலாளர்களது எல்லா வட்டங்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். கருத்து வேறுபாடுகள் யாவும் நீக்கப்படும் பொருட்டும், ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை நிறுவும் பணியும் அதைப் பலப்படுத்தும் பணியும் துரிதமாய் நடந்தேறும் பொருட்டும் இதைச் செய்யுமாறு அழைக்கின்றோம்.

ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் 1898ஆம் ஆண்டுக் காங்கிரசின் தீர்மானத்தினுடைய 10ஆம் பிரிவின்படி ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியின் ஒரு பகுதியும் அதன் வெளிநாட்டுப் பிரதிநிதியுமான வெளிநாடுகளிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது சங்கத்துக்கு[16] எல்லாக் குழுக்களும் வட்டங்களும் தமது தீர்மானங்களை அனுப்பலாம்.

1899 ஆகஸ்டில், 22ஆம் தேதிக்கு (செப்டம்பர் 3) முன்பு எழுதப்பெற்றது

ரபோச்சியே தேலோ, இதழ் 4-5 இலிருந்து மறுபதிப்பாய் 1899 டிசம்பரில் வெளிநாட்டில் முதன்முதல் வெளிவந்தது

நூல் திரட்டு, தொகுதி 4, பக்கங்கள் 163-76

■

லு. குகல்மனுக்குக் கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதங்களின் ருஷ்ய மொழிபெயர்ப்புக்கு முன்னுரை

■

குகல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதங்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயக வார இதழான *Neue Zeit*இல்[17] வெளிவந்தவை. இக்கடிதங்களின் முழுத் திரட்டையும் ஒரு தனிப் பிரசுரமாய் வெளியிடுவதில் எமது நோக்கம் என்னவெனில், ருஷ்யப் பொது மக்கள் மார்க்சையும் மார்க்சியத்தையும் பற்றி மேலும் நெருங்கிய பரிச்சயம் பெறும்படிச் செய்வதே ஆகும். மார்க்சின் கடிதங்களில் ஓரளவு அதிக இடம் சொந்த விவகாரங்களுக்காகச் செலவிடப்பட்டிருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. இப்பகுதிகள் வாழ்க்கை வரலாறு எழுதுகிறவருக்கு மிகுந்த மதிப்புக்குரியவை. ஆனால் பொது மக்களுக்கு, குறிப்பாய் ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்துக்கு, தத்துவார்த்த, அரசியல் விஷயங்கள் அடங்கிய வாசகங்கள் மிகப் பன் மடங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இப்பொழுது நாம் கடந்து செல்லும் இந்தப் புரட்சிகரச் சகாப்தத்தில் இவ்விஷயங்களைக் கவனமாய்ப் படித்தறிவது நமக்கு மிகவும் படிப்பினை அளிப்பதாகும். தொழிலாளர் இயக்கம், உலக அரசியல் இவை குறித்த எல்லாப் பிரச்சினைகளிலும் மார்க்ஸ் கருத்தூன்றிக் கவனித்தவர் என்பதை இவை நமக்குப் புலப்படுத்துகின்றன. *Neue Zeit* இதழின் ஆசிரியர்கள் ''மிகப் பெரிய புரட்சிகளுக்குரிய ஒரு காலத்தில் தமது சிந்தனைகளையும் சித்தங்களையும் உருவாக்கிக் கொண்டோரின் சிறப்புருவினைத் தெரிந்து கொள்வதன் மூலம் நாம் உயர்வு பெறுகிறோம்'' என்று கூறுவது முற்றிலும் நியாயமே. இதைத் தெரிந்து கொள்வது 1907ல் ருஷ்ய சோஷலிஸ்டுக்கு இருமடங்கு அதிக அவசியமாகும். ஏனெனில் ஒரு நாடு கடந்து செல்லும் ஒவ்வொரு புரட்சியிலும் சோஷலிஸ்டுகளை எதிர்நோக்கும் நேரடிக் கடமைகளைச் சுட்டிக்காட்டும் மதிப்பிடற்கரிய ஏராள

மான விவரப் பொருளை இது அளித்திடுகிறது. இத்தருணத்தில் ருஷ்யா ''மாபெரும் புரட்சி'' ஒன்றை அனுபவித்து வருகிறது. ஒப்பளவில் கொந்தளிப்பான அறுபதாம் ஆண்டுகளில் மார்க்ஸ் அனுசரித்த கொள்கையினைத் தற்போதைய ருஷ்யப் புரட்சியில் சமூக-ஜனநாயகவாதி மேலும் மேலும் அடிக்கடி தமது கொள்கைக்கு முன்மாதிரியாய்க் கொண்டாக வேண்டும்.

ஆகவே மார்க்சின் கடிதங்களில் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த வாசகங்களாய் இருப்பவற்றைச் சுருக்கமாய்க் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதியாய் அவர் அனுசரித்த புரட்சிகரக் கொள்கையை அதிக விவரமாய் எடுத்துரைப்போம்.

மார்க்சியத்தை மேலும் முழுமையாகவும் ஆழமாகவும் புரிந்து கொள்ளத் துணை புரியும் 1868 ஜூலை 11ஆம் தேதியிட்ட கடிதம் (பக்கம் 42உம் அதைத் தொடர்வனவும்) தலைமையான கவனத்துக்கு உரியதாகும். கொச்சைப் பொருளியலாளர்களுக்கு எதிரான வாக்குவாதத்தின் வடிவில் மார்க்ஸ் இக்கடிதத்தில் மதிப்பு பற்றிய ''உழைப்புத்'' தத்துவம் எனப்படுவது குறித்து தமது கருத்தோட்டத்தை மிகத் தெளிவாய் விளக்குகிறார். மூலதனத்தைப் படிப்போரிடையே மிகக் குறைந்த பயிற்சியுடையோரின் மனத்தில் மதிப்பு பற்றிய மார்க்ஸ் தத்துவம் குறித்து இயல்பாகவே எழுவனவும், இக்காரணத்தால் ''பேராசிரியர் பாணியிலான'' முதலாளித்துவ ''விஞ்ஞானத்தின்'' சர்வசாதாரண அல்லது பக்குவப்பட்ட பிரதிநிதிகளால் மிகவும் ஆவலாய்ப் பற்றிக் கொள்ளப்படுவனவுமான ஆட்சேபங்களை மார்க்ஸ் இங்கு சுருக்கமாகவும் எளிய முறையிலும் குறிப்பிடத்தக்கத் தெளிவோடும் பகுத்தாராய்கிறார். மதிப்பு விதியைத் தெளிவுபடுத்த மேற்கொள்ளப்பட வேண்டியதும் தாம் மேற்கொண்டதுமான பாதையை இங்கு மார்க்ஸ் குறிப்பிட்டுக் காட்டுகிறார். சர்வசாதாரணமான ஆட்சேபங்களை எடுத்துக்காட்டுகளாய்க் கொண்டு அவர் நமக்குத் தமது முறையைப் போதிக்கிறார். மதிப்பு பற்றிய தத்துவத்தைப் போன்ற (தோற்றத்தில்) முற்றிலும் தத்துவார்த்தத் தன்மையதும் கருத்தியல்

பானதுமான ஒரு பிரச்சினைக்கும், ''ஆளும் வர்க்கங்களுடைய நலனுக்கும்''—''குழப்பத்தை நிரந்தரமாய் நீடிக்கச் செய்வதே'' இந்த நலன்—இடையிலுள்ள தொடர்பை அவர் தெளிவு படுத்துகிறார். மார்க்சைக் கற்றறியவும் மூலதனத்தைப் படிக்கவும் முற்படும் ஒவ்வொருவரும் மூலதனத்தின் மிகவும் கடினமான முதல் அத்தியாயங்களைக் கற்றறிந்து ஆராய் வதுடன் கூடவே இந்தக் கடிதத்தையும் திரும்பத் திரும்பப் படிப்பாரென நம்புவோமாக.

இக்கடிதங்களில் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில் சுவைமிக்க ஏனைய வாசகங்கள், பல்வேறு எழுத்தாளர்களை யும் பற்றி மார்க்ஸ் மதிப்பிட்டுக் கூறும் வாசகங்களாகும். மார்க்சின் இந்த அபிப்பிராயங்கள் தெட்டத் தெளிவாய் எழுதப்பெற்றவை, உணர்ச்சி ததும்புகின்றவை, மிகப் பெரிய சித்தாந்தப் போக்குகளிலும் அவை பற்றிய பகுத்தாய்விலும் ஆழ்ந்த கருத்து வெளிப்படுத்துகிறவை. இவ்வபிப்பிராயங் களைப் படிக்கையில் மாபெரும் சிந்தனையாளர் ஒருவரின் சொற்களைக் கேட்கிறோம் என்பதை உணர்கிறோம். போகிற போக்கில் இடைக் குறிப்பாய் டித்ஸ்கெனைப் பற்றிக் கூறப்படும் குறிப்புகளை அன்னியில், புருதோனியர்களைப் பற் றிய கருத்துரைகள் (பக்கம் 17) வாசகரின் விசேஷ கவனத் துக்குரியவை. சமுதாயக் கொந்தளிப்புக்குரிய காலங்களில் ''பாட்டாளி வர்க்கத்தினரிடம்'' ஓடிவந்து சேர்ந்து கொள் ளும், ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்தைப் பெறவோ, பாட்டாளி வர்க்க நிறுவனங்களின் ''உறுப்பினர் அணிவரிசையில் சேர்ந்து'' விடாமுயற்சியோடும் கருத்தோ டும் பணியாற்றவோ திறனற்றவர்களாகிய ''மிடுக்கான'' இளம் முதலாளித்துவ அறிவுத்துறையினரைத் தேர்ந்த தெளி வோடு கண்ணெதிரே தெரியும்படி இரண்டொரு வரிகளில் சித்தரித்துக் காட்டுகிறார்.

டூரிங்கைப் பற்றிய மதிப்புரையை (பக்கம் 35) எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு ஒன்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு எங்கெல்ஸ் (மார்க்சுடன் சேர்ந்து) எழுதிய *Anti-Dühring**

---

* —''டூரிங்குக்கு மறுப்பு.''—பதிப்பாசிரியர்.

என்னும் புகழ்மிக்க நூலின் உள்ளடக்கத்தை இது முன்கூட்டியே உணர்த்துவதாய் உள்ளது எனலாம். இந்நூலின் ருஷ்ய மொழிபெயர்ப்பு ஒன்று — ஸெதெர்பாவ்ம் என்பவரால் செய்யப்பட்டது—உள்ளது. ஆனல் துரதிர்ஷ்டவசமாய் இது விடுபாடுகள் கொண்டிருப்பதோடு, தவறுகள் அடங்கிய மோசமான மொழிபெயர்ப்பாகவும் இருக்கிறது. தியுனெனைப் பற்றிய மதிப்புரையும் இங்கு காணக் கிடக்கிறது. இது நில வாடகை பற்றிய ரிக்கார்டோவின் தத்துவத்தையும் சுட்டுவதாய் உள்ளது. 1868லேயே மார்க்ஸ் ''ரிக்கார்டோவின் தவறுகளைத்'' திட்டவட்டமாய் நிராகரித்துவிட்டார். 1894ல் வெளியிடப்பட்ட மூலதனத்தின் மூன்றுவது பாகத்தில் இவற்றுக்கு இறுதியாய் மறுப்புரை அளித்தார். ஆயினும் நமது அதீத-முதலாளித்துவவாதியும், ஏன் ''கறுப்பு நூற்றுவருமான''[18] திரு. புல்காக்கவிலிருந்து ''ஏறத்தாழ வைதீகவாதியான'' மாஸ்லவ் வரையிலான திருத்தல்வாதிகள் இது நாள் வரையில் இவற்றையே திருப்பித் திருப்பிக் கூறுக் கொண்டிருக்கிறுர்கள்.

புஹ்னரைப் பற்றிய மதிப்புரையும் சுவையானதே. கொச்சையான பொருள்முதல்வாதத்தையும், லங்கெயிடமிருந்து (''பேராசிரியர் பாணியிலான'' முதலாளித்துவத் தத்துவவியலுக்கு இவர்தான் வழக்கமான ஆதாரம்!) காப்பியடிக்கப்பட்ட ''நுனிப்புல் மேயும் மதியீனத்தையும்'' பற்றி இங்கு மதிப்பீடு செய்கிறுர் (பக்கம் 48).

இனி மார்க்சின் புரட்சிகரக் கொள்கையை எடுத்துக் கொள்வோம். ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதிகளிடையே மார்க்சியத்தைப் பற்றிய அற்பத்தனமான ஒரு கருத்தோட்டம் வியக்கத்தக்கவாறு மிகவும் பரவலாய் இருந்து வருகிறது. இதன்படி பிரத்தியேகமான போராட்ட வடிவங்களையும் பாட்டாளி வர்க்கத்துக்குரிய தனிவகைப் பணிகளையும் கொண்ட புரட்சிகரக் காலகட்டம் அனேகமாய் முறைகேடான ஒரு விபரீதமே ஆகும், ''அரசியல் அமைப்புச் சட்டமும்'' ''அதீத எதிர்த்தரப்பும்'' தான் முறையான விதியாகும். உலகில் வேறு எந்த நாட்டிலும் இத்தருணத்தில் ருஷ்யாவில் இருப்பது போல் இத்தகைய ஓர் ஆழமான புரட்சிகர நெருக்கடி இருக்கவில்லை; அதேபோல வேறு எந்த நாட்டிலும்

புரட்சியின்பால் அவநம்பிக்கைக்குரிய, அற்பத்தனமான போக்கைக் கொண்டுள்ள ''மார்க்சியவாதிகளும்'' (மார்க்சியத்தைச் சிறுமைப்படுத்துவோரும் கொச்சையாக்குவோரும்) இருக்கவில்லை. புரட்சியானது உள்ளடக்கத்தில் முதலாளித்துவத் தன்மையதாய் இருக்கிறதென்ற உண்மையிலிருந்து இவர்கள் முதலாளித்துவ வர்க்கமே புரட்சியின் உந்து சக்தி, இந்தப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள பணிகள் துணை புரிவதேயன்றி சுயேச்சைத் தன்மை கொண்டவையல்ல, இப்புரட்சிக்குப்பாட்டாளி வர்க்கத் தலைமை சாத்தியமல்ல என்ற ஆழமில்லாத அற்ப முடிவுக்கு வருகிறார்கள்.

மார்க்சியத்துக்கு இவ்விதம் ஆழமின்றி மேம்போக்காய் அளிக்கப்படும் வியாக்கியானத்தைக் குகல்மனுக்குத் தாம் எழுதிய கடிதங்களில் மார்க்ஸ் எவ்வளவு திறம்பட அம்பலம் செய்கிறார்! 1866 ஏப்ரல் 6ஆம் தேதியிட்ட ஒரு கடிதம் இங்கு இருக்கிறது. மார்க்ஸ் தலைமையான தமது நூலை ஏற்கனவே எழுதி முடித்துவிட்ட காலம் அது. இந்தக் கடிதம் எழுதப்படுவதற்குப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னரே அவர் 1848ஆம் ஆண்டு ஜெர்மன் புரட்சி குறித்து தமது இறுதித் தீர்ப்பை அளித்திருந்தார். 1848ல் சோஷலிசப் புரட்சி நடைபெறவிருந்தது என்ற தமது சோஷலிசப் பிரமைகளை 1850ல் அவரே விட்டொழித்திருந்தார். பிறகு 1866ல், புதிய அரசியல் நெருக்கடிகள் வளர்வதை அப்பொழுதுதான் காணத் தொடங்கிய ஒரு நேரத்தில் அவர் எழுதுகிறார்:

''ஹாப்ஸ்பர்குகளையும் ஹோஹன்சோலர்ன்களையும் அகற்றிடும் ஒரு புரட்சி நடைபெறாவிடில் முடிவில் மற்றொரு முப்பதாண்டு யுத்தம் வந்துவிடும் என்பதை நமது அற்பவாதிகள் [அவர் குறிப்பிடுவது ஜெர்மன் முதலாளித்துவ மிதவாதிகள்]* இறுதியாய் உணர்ந்து கொள்வார்களா...!'' (பக்கங்கள் 13-14).

நடைபெற இருந்த புரட்சி (இது மேலிருந்து நடத்தப்பட்டது, மார்க்ஸ் எதிர்பார்த்தது போல அடியிலிருந்து அல்ல)

---

* லெனின் தரும் மேற்கோள்களில் அடைப்புகளுக்கு இடையமைந்த இடைக்குறிப்புகள் லெனினுடையவை.— பதிப்பாசிரியர்.

முதலாளித்துவ வர்க்கத்தையும் முதலாளித்துவத்தையும் அகற்றிவிடும் என்பதான பிரமைக்குரிய சாயல் இங்கு சிறிதும் இல்லே, அதற்குப் பதில் பிரஷ்ய, ஆஸ்திரிய முடியாட்சிகளே மட்டுமே இது அகற்றும் என்று மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உரைக்கப்படுகிறது. இந்த முதலாளித்துவப் புரட்சியில் எவ்வளவு அபார நம்பிக்கை! சோஷலிச இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு முதலாளித்துவப் புரட்சியின் பிரம்மாண்ட முக்கியத்துவத்தை உணரும் பாட்டாளி வர்க்கப் போர் வீரரது புரட்சிகர உணர்ச்சித் துடிப்பல்லவா வெளியிடப்படுகிறது!

மூன்று ஆண்டுகளுக்குப் பிற்பாடு, பிரான்சில் நெப்போலியன் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குச் சற்று முன்னுல் ''மிகச் சுவையான'' ஒரு சமுதாய இயக்கத்தைக் குறிப்பிட்டு, உற்சாகம் பொங்கியெழ மார்க்ஸ் கூறுகிருர்: ''பாரிஸ்வாசிகள் வரவிருக்கும் புதிய புரட்சியின் பணிகளுக்காகத் தம்மைத் தயார் செய்து கொள்ளும் பொருட்டு, தமது அண்மையப் புரட்சிகரக் கடந்த காலத்தை முறையாய் ஆய்ந்தறிந்து வருகிருர்கள்''. கடந்த காலத்தைப் பற்றிய இந்த ஆய்வின் வாயிலாய்ப் புலப்படுத்தப்பட்ட வர்க்கப் போராட்டத்தினே விவரித்துக் கூறி மார்க்ஸ் பின்வரும் முடிவுக்கு வருகிருர் (பக்கம் 56): ''இவ்விதம் வரலாறே பொங்கிக் கொதித்தெழுந்து கொண்டிருக்கிறது. எப்பொழுது நமது நாடு [ஜெர்மனி] இப்படிப்பட்ட நிலேயை வந்தடையப் போகிறது!''

சந்தேக மனப்பான்மையால் நலிவுற்று, பகட்டுப் புலமையால் முனேப்பு இழந்து, துயரார்ந்த இரங்கல் பேச்சுகளில் நாட்டங் கொண்டு, விரைவில் புரட்சியால் களேப்புற்றுத் தளர்ந்துவிடுமுறைக்காக ஏங்குவது போல புரட்சி கட்டுப்படுத்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாய் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குரிய நிம்மதி பிறக்க வேண்டுமென ஏங்கும் ருஷ்ய மார்க்சிய அறிவுத்துறையினர் மார்க்சிடமிருந்து கற்க வேண்டிய படிப்பினேயாகும் இது. பாட்டாளி வர்க்கத்தாரின் தத்துவாசிரியரும் தலேவருமான அவரிடமிருந்து அவர்கள் புரட்சியில் திட நம்பிக்கை கொள்ளவும், தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் உடனடியான புரட்சிகர நோக்கங்களுக்காக இறுதி வரைப் போராடும்படி அழைப்பு

விடுக்கும் ஆற்றலைப் பெறவும், புரட்சியின் தற்காலிகப் பின்னடைவுகளால் மனந் தளர்ந்து ஊளையிடுவதற்கு இடந் தராத நெஞ்சு உறுதி காட்டவும் கற்றுக் கொண்டாக வேண்டும்.

இதெல்லாம் அறநெறி விளக்க வெற்றுரையென்றும் புத்தார்வக் கிளர்ச்சியென்றும் எதார்த்த நிலைபற்றிய உணர்வின்மையென்றும் மார்க்சியத்தில் பகட்டுப் புலமை கொண்டவர்கள் நினைக்கின்றனர்! அப்படியல்ல, கனவான்களே, புரட்சித் தத்துவம், புரட்சிக் கொள்கை இவை இரண்டின் இணைவாகும் இது. இந்த இணைவு இல்லையேல் மார்க்சியமானது பிரென்தனோவியமாகவும், ஸ்துருவேவியமாகவும், ஸொம்பார்த்தியமாகவும்[19] மாறிவிடுகிறது. மார்க்சியப் போதனை வர்க்கப் போராட்டத் தத்துவத்தையும் நடைமுறையையும் பிரிக்க முடியாத முழுமையாய் ஒருசேர இணைத்திடுகிறது. எதார்த்தச் சூழ்நிலையை நிதானித்து எடுத்துரைக்கும் ஒரு தத்துவத்தை எடுத்து, நடப்பிலுள்ளவற்றுக்கு நியாயம் கற்பிக்கும் முறையில் அதனைத் திரித்துப் புரட்டும் ஒருவர், புரட்சியில் ஏற்படும் தற்காலிகமான ஒவ்வொரு இறக்கத்துக்கும் கூடுமான விரைவில் தம்மைத் தகவமைத்துக் கொண்டு, "புரட்சிப் பிரமைகளைக்" கூடுமான சீக்கிரத்தில் உதறித் தள்ளி, "காரிய சாத்தியமான" உடைசல் அடைப்பு வேலைகளிலே முனைந்துவிடும் அளவுக்குச் செல்வதற்குங்கூட தயங்காத ஒருவர், மார்க்சியவாதி ஆகமாட்டார்.

மிகமிக அமைதியான ஒரு காலத்தில், மார்க்ஸ் கூறியது போல "சாந்தம் குடிகொண்டதாய்த்" தோன்றுவதும், *Neue Zeit* குறிப்பிட்டது போல "தேங்கிப் போய்ப் படுமோச"மானதுமான ஒரு காலத்தில், மார்க்ஸ் புரட்சி நெருங்கி வருவதை உணரவும், பாட்டாளி வர்க்கம் முன்னேற்றகரமான தனது பணிகள்குறித்து உணர்வு பெறும்படி அதனை எழுச்சியுறச் செய்யவும் ஆற்றல் பெற்றிருந்தார். அற்பத்தனமான முறையில் மார்க்சைக் கொச்சைப்படுத்தும் நமது ருஷ்ய அறிவுத்துறையினர் மிகவும் புரட்சிகரக் காலங்களிலுங்கூட பாட்டாளி வர்க்கத்துக்குச் செயலற்றுச் சும்மாவிருக்கும் கொள்கையை, இழுத்தபடி எல்லாம் எதிர்ப்பின்றி பின்செல்லும் கொள்கையை, மோஸ்தரிலுள்ள மிதவாதக்

3-35

கட்சியின் மிகவும் நிலையற்ற பகுதிகளுக்கு வால்பிடித்துச் செல்லும் கொள்கையைப் போதிக்கின்றனர்!

கம்யூனைப்[20] பற்றி மார்க்ஸ் தரும் மதிப்பீடு குகல்மனுக்கு எழுதப்பெற்ற கடிதங்களின் மணிமுடியாய்த் திகழ்கிறது. ருஷ்ய வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் முறைகளுடன் ஒப்பிடுகையில் இந்த மதிப்பீடு விசேஷச் சிறப்புக்குரியதாகும். 1905 டிசம்பருக்குப்[21] பிற்பாடு ''அவர்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்திருக்கக் கூடாது'' என்று கோழைத்தனமாய்ப் புலம்பிய பிளெஹானவ் தம்மை மார்க்சுடன் ஒப்பிடும் அளவுக்குத் தன்னடக்கம் கொண்டிருந்தார். மார்க்சும்கூட 1870ல் புரட்சிக்குத் தடை போட்டாரே என்று பிளெஹானவ் கூறுகிறார்.

ஆம், மார்க்சுங்கூடத்தான் புரட்சிக்குத் தடை போட்டார். ஆனால் பிளெஹானவே தரும் இந்த ஒப்பீட்டில் பிளெஹானவுக்கும் மார்க்சுக்கும் இடையில் எவ்வளவு பெரிய வேற்றுமை இருக்கிறது பாருங்கள்!

1905 நவம்பரில், ருஷ்யாவில் முதலாவது புரட்சியின் அலை அதன் உச்சநிலை வந்தடைவதற்கு ஒரு மாதம் முன்னால், பிளெஹானவ் அழுத்தம் திருத்தமாய்ப் பாட்டாளி வர்க்கத்தை எச்சரிக்கை செய்வதற்கு நேர்மாறாய் ஆயுதங்களை உபயோகிப்பதற்கும் ஆயுதபாணியாய் இருப்பதற்கும் தெரிந்து கொள்வதன் அவசியம் குறித்து நேரடியாகவே பேசினார். ஆயினும் ஒரு மாதத்துக்குப் பிற்பாடு போராட்டம் மூண்டெழுந்ததும் பிளெஹானவ் அதன் முக்கியத்துவத்தையும், நிகழ்ச்சிகளின் பொதுவான வளர்ச்சிப் போக்கில் அதற்குள்ள பாத்திரத்தையும், முந்தையப் போராட்ட வடிவங்களுடன் அதற்குள்ள தொடர்பையும் பகுத்தாய இம்மியளவும் முயலாமல் துயருற்று இரங்கும் அறிவுத்துறையாளனின் பாத்திரத்தை அவசரமாய் ஏற்று ''அவர்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்திருக்கக் கூடாது'' என்று புலம்பினார்.

1870 செப்டம்பரில், கம்யூனுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, மார்க்ஸ் பிரெஞ்சுத் தொழிலாளர்களை நேரடியாய் எச்சரிக்கை செய்தார்: எழுச்சியைத் துவக்குவது முரட்டுத் துணிச்சலான மதிகெட்ட செயலாகும் என்று அகிலம் வெளியிட்ட பெயர்பெற்ற அறிக்கையில்[22] அவர் கூறினார். 1792ல்

ஆம் ஆண்டின் தன்மையிலான ஓர் இயக்கம் நடைபெறும் சாத்தியப்பாடு பற்றிய தேசியவாதப் பிரமைகளை முன் கூட்டியே அவர் அம்பலம் செய்தார். நிகழ்ச்சிக்குப் பிற்பாடல்ல, பல மாதங்கள் முன்னதாகவே ''ஆயுதமேந்திக் கிளம்பாதீர் கள்'' என்று அவரால் கூற முடிந்தது.

செப்டம்பரில் அவர் நம்பிக்கைக்கு இடமில்லாதது என் பதாய்க் குறிப்பிட்டிருந்த இது, 1871 மார்ச்சில் நடைபெறத் தொடங்கியதும், எப்படி நடந்து கொண்டார்? கம்யூனுக்குத் தலைமை தாங்கிய தமது பகைவர்களான புருதோனியர் களையும் பிளான்கியர்களையும் ''இடித்துரைப்பதற்காக'' இதை அவர் (டிசம்பர் நிகழ்ச்சிகளைப் பிளெஹானவ் பயன் படுத்திக் கொண்டது போல) பயன்படுத்திக் கொண்டாரா? பள்ளிக்கூட ஆசிரியையைப் போல ஏசத் தொடங்கி, ''நான் தான் முன்பே சொன்னேனே, உங்களை எச்சரிக்கை செய் தேனே; உங்களுடைய புத்தார்வக் கிளர்ச்சியின், புரட்சிகரக் கற்பனைகளின் விளைவே இது'' என்று கூறினார்? டிசம்பர் வீரர்களைப் பார்த்து பிளெஹானவ் செய்தது போல அவர் கம்யூனார்டுகளைப் பார்த்து ''நீங்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்திருக்கக் கூடாது'' என்று அற்பப் புத்தி கொண்டவரது பாணியில் உபதேசமா செய்தார்?

இல்லை. 1871 ஏப்ரல் 12ல் மார்க்ஸ் அளவிலா ஆர்வங் கொண்ட ஒரு கடிதத்தைக் குகல்மனுக்கு எழுதினார்—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி ஒவ்வொருவரின் இல்லத்திலும், ருஷ்யத் தொழிலாளர் ஒவ்வொருவரின் இல்லத்திலும் சுவரில் மாட்டப்பட வேண்டுமென நாம் விரும்பும் ஒரு கடிதம் இது.

1870 செப்டம்பரில் மார்க்ஸ் இந்த எழுச்சியை முரட்டுத் துணிச்சலான மதிகெட்ட செயலாகுமெனக் குறிப்பிட்டார்; ஆனால் 1871 ஏப்ரலில் பெருந் திரளான மக்களது இயக்கத் தைக் கண்ணுற்றதும், வரலாறு படைத்திடும் புரட்சி இயக் கத்தில் முன்னேற்றப் படியினைக் குறிக்கும் மாபெரும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்பவருக்குரிய ஊக்கத்துடன் இதை அவர் கூர்ந்து கவனித்தார்.

அதிகாரவர்க்க-இராணுவ இயந்திரத்தைக் கைமாறச் செய்வதற்குப் பதிலாய் அதை தகர்த்து நொறுக்குவதற்கான ஒரு முயற்சி இது என்று அவர் கூறுகிறார். புருதோனியர்

களாலும் பிளான்கியர்களாலும் தலைமை தாங்கப்பட்டிருந்த ''வீரம் செறிந்த'' பாரிஸ் தொழிலாளர்களை அவர் மிக உயர்வாய் மெச்சிப் புகழ்கிறார். ''இந்தப் பாரிஸ்வாசிகளிடம் எத்தனை நெகிழ்வு, வரலாறு படைப்பதில் எத்தனை முன்முயற்சி, தியாகம் புரிவதில் எத்தனை ஆற்றல்!'' என்று எழுதுகிறார் (பக்கம் 88). ''இதற்கு ஒப்பான மகத்துவம் கொண்ட ஓர் உதாரணம் வரலாற்றிலே இல்லை.''

பெருந் திரளான மக்களின் **வரலாறு படைத்திடும் முன்முயற்சியைத்தான்** யாவற்றுக்கும் உயர்வாய் மதித்துப் போற்றுகிறார் மார்க்ஸ். 1905 அக்டோபரிலும் டிசம்பரிலும் ருஷ்யத் தொழிலாளர்களும் விவசாயிகளும் வெளிப்படுத்திய **வரலாறு படைத்திடும் முன்முயற்சியினை** எப்படி மதித்துப் போற்ற வேண்டுமென்பதை நமது ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் மார்க்சிடமிருந்து கற்றறிந்து கொள்வார்களாயின் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!

ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே தோல்வியை முன்னறிந்து கூறிய ஆழ்ந்த சிந்தனையாளர் ஒருவர் பெருந் திரளான மக்களது **வரலாறு படைத்திடும் முன்முயற்சியைப்** போற்றிப் புகழ்வதையும், உயிரற்ற, உள்ளத்து உணர்ச்சியற்ற, பகட்டுப் புலமை வாய்ந்த ''அவர்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்திருக்கக் கூடாது!'' என்பதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். விண்ணுக்கும் மண்ணுக்குமுள்ள வேற்றுமையல்லவா இவை இரண்டுக்கும் இடையே இருக்கிறது?

அப்பொழுது நாடுகடத்தப்பட்டு லண்டனில் வசித்துவந்த மார்க்ஸ், அவருக்கே உரித்தான ஆர்வத்தோடும் உணர்ச்சித் துடிப்போடும் போற்றிய இந்த வெகுஜனப் போராட்டத்தில் **பங்கு கொள்பவராய்ச்** செயல்பட்டு, **''விண்ணைச் சாடத் தயாராய்''** இருந்த ''எதற்கும் துணிந்த'' பாரிஸ்வாசிகள் மேற்கொண்ட **உடனடி நடவடிக்கைகளை** விமர்சிக்க முற்பட்டார்.

மார்க்சியவாதிகளிடையே காணப்படும் நமது தற்காலத்திய ''எதார்த்த நோக்குடைய'' பகட்டறிஞர்கள்—1906-07ல் ருஷ்யாவில் புரட்சிகரப் புத்தார்வத்தினை இழித்துப் **பழித்திடும் இவர்கள்**—அக்காலத்தில் மார்க்சை எப்படியெல்லாம் ஏளனம் செய்திருப்பார்கள்! **பொருள்முதல்வாதியான**

பொருளியலாளரான ஒருவர்; கற்பனுவாதக் கனவுகளின் பகைவரான ஒருவர் விண்ணைச் சாடும் ஒரு ''முயற்சியைப்'' போற்றி புகழ்வது கண்டு எப்படி எள்ளி நகையாடியிருப் பார்கள்! அவருடைய கலகப் போக்குகளுக்காகவும், கற்பனு வாதத்துக்காகவும், இன்ன பிறவற்றுக்காகவும், மற்றும் விண்ணைச் சாடும் ஓர் இயக்கத்தினை அவர் போற்றிப் பாராட் டியதற்காகவும் ''காப்புக் கூண்டு மனிதர்களான''[23] இவர் கள் அங்கலாய்த்துக் கொண்டிருப்பார்கள், இளக்காரமாய் நகைத்திருப்பார்கள், அல்லது பரிதாபப்பட்டிருப்பார்கள்!

ஆனல் புரட்சிப் போராட்டத்தின் உயர்ந்த வடிவங் களைப் பற்றிய நுட்பவியலை விவாதிக்க அஞ்சி நடுங்கும் அற் பர்களது மேதாவிலாசத்தால் மார்க்ஸ் ஊக்குவிக்கப்பட வில்லை. எழுச்சி பற்றிய நுட்பவியல் பிரச்சினைகளைத்தான் அவர் விவாதித்தார். ஏதோ லண்டன் நகரின் சுற்றுப்புறத் திலேயே இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்று வருவது போல அவர் பாதுகாத்து நிற்பதா அல்லது தாக்குதலை மேற்கொள்வதா? என்று கேட்டார். நிச்சயம் தாக்குதலை மேற்கொண்டிருக்க வேண்டுமென்று முடிவு செய்கிருர்: **''உடனடியாகவே அவர்கள் வெர்சேய் மீது படையெடுத்திருக்க வேண்டும்...''.**[24]

இரத்தம் பெருகியோடிய அந்த மாபெரும் மே மாதத் துக்கு ஒரு சில வாரங்களே முன்னதாய், 1871 ஏப்ரலில் இது எழுதப்பட்டது....

''உடனடியாகவே அவர்கள் வெர்சேய் மீது படையெடுத் திருக்க வேண்டும்''—கிளர்ந்தெழுந்த எழுச்சியாளர்கள், விண்ணைச் சாடும் ''முரட்டுத் துணிச்சலான மதிகெட்ட செயலை'' (1870 செப்டம்பர்) தொடங்கியோர் படை யெடுத்திருக்க வேண்டும்.

''நீங்கள் ஆயுதமேந்திப் போர் புரிந்திருக்கக் கூடாது'' —போராடிப் பெறப்பட்ட சுதந்திரங்களைப் பறிப்பதற்கான முதலாவது முயற்சிக்கு ஆயுத பலங் கொண்டு எதிர்க்கும் பொருட்டு 1905 டிசம்பரில் போர் புரிந்திருக்கக் கூடாது....

ஆம், பிளெஹானவ் தம்மை மார்க்சுடன் ஒப்பிட்டுப் பார்க்கப் போதிய காரணம் உண்டுதான்!

''இரண்டாவது தவறு'' என்று குறிப்பிட்டு மார்க்ஸ் தமது நுட்பவியல் விமர்சனத்தைத் தொடர்கிருர்: ''மத்தியக் கமிட்டி'' (இராணுவத் தலைமை—இதைக் கவனிக்க வேண்டும்—இங்கு குறிக்கப்படுவது தேசியக் காவலர் படையின் மத்தியக் கமிட்டி) ''காலத்துக்கு மிகவும் முன்னதாகவே தனது அதிகாரத்தைத் துறந்து சரணடைந்துவிட்டது...''.

அகால எழுச்சியை எதிர்த்துத் தலைவர்களை எச்சரிக்கை செய்ய மார்க்சுக்குத் தெரிந்திருந்தது. ஆனுல் விண்ணைச் சாடும் பாட்டாளி வர்க்கம் குறித்து அவர் கொண்டிருந்த போக்கு, நடைமுறை ஆலோசகருக்குரிய போக்காகும்; பிளான்கீ, புருதோன் இவர்களது பொய்யான தத்துவங்களையும் தவறுகளையும் மீறி இயக்கம் அனைத்தையும் மேலும் உயர்வான நிலைக்கு உயர்த்திச் சென்று கொண்டிருந்த வெகுஜனங்களது போராட்டத்தில் பங்கு கொள்பவருக்குரிய போக்காகும்.

''அது எப்படியாலுைம் பாரிசில் தற்போது நடைபெறும் எழுச்சி—பழைய சமுதாயத்தின் ஓநாய்களாலும் கசடர்களாலும் கேடுகெட்ட கழிசடைகளாலும் நசுக்கப்பட்டு விடுவதாயினுங்கூட—ஜூன் மாத எழுச்சிக்குப் பிற்பாடு நமது கட்சி புரிந்த மிகப் பெரும் புகழ் படைத்த செயலாகும்'' என்று அவர் எழுதினுர்.

கம்யூனது எந்த ஒரு தவறையும் பாட்டாளி வர்க்கத்தின் கண்களிலிருந்து மறைக்காமல் மார்க்ஸ் ஒரு நூலை எழுதி இந்த வீரமிக்க செயலுக்கு அதைச் சமர்ப்பணம் செய்தார். இந்நூல் இது நாள் வரையில் ''விண்ணை'' வெல்லும் போராட்டத்துக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும், மிதவாத, தீவிரவாதக் ''கசடர்களுக்குக்'' கிலியூட்டும் பூதமாகவும் பணி புரிந்து வருகிறது.

பிளெஹானவ் டிசம்பர் மாத நிகழ்ச்சிகளுக்கு ஒரு ''நூலைச்'' சமர்ப்பணம் செய்தார்; இந்நூல் காடேட்டுகளுக்கு[25] நடைமுறையில் வேத புத்தகமாகிவிட்டது.

ஆம், பிளெஹானவ் தம்மை மார்க்சுடன் ஒப்பிட்டுப் பார்க்கப் போதிய காரணம் உண்டுதான்.

போராட்டம் சிறிதும் நம்பிக்கைக்கு இடமற்றதாகிவிட்டதையும், புத்தார்வக் கனவுக்குப் பதிலாய் எதார்த்தவாதமே வேண்டுமென்பதையும் குறிப்பிட்டுச் சில ஐயங்களைக்

குகல்மன் வெளியிட்டு மார்க்சுக்குப் பதில் எழுதியதாய்த் தெரிகிறது—எப்படியும் அவர் எழுச்சியாய் நடந்தேறிய கம்யூனை 1849 ஜூன் 13ல் பாரிசில் நடைபெற்ற அமைதியான அணிவகுப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தார்.

மார்க்ஸ் உடனே (1871 ஏப்ரல் 17) கடிந்துரைத்துக் குகல்மனுக்கு எழுதினார்:

"தவற முடியாத சாதக வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் மட்டும்தான் போராட்டம் மேற்கொள்ளப்படுமாயின், உலக வரலாற்றைப் படைப்பது நிச்சயமாய் மிகச் சுலபமான காரியமாகிவிடும்."

1870 செப்டம்பரில் மார்க்ஸ் எழுச்சியினை முரட்டுத் துணிச்சலான மதிகெட்ட செயல் என்பதாய்க் குறிப்பிட்டார். ஆனால் வெகுஜனங்கள் கிளர்ந்தெழுந்ததும் மார்க்ஸ் அவர்களுடன் சேர்ந்து நடைபோட விரும்பினார், போராட்டத்தின்போது அவர்களுடன் சேர்ந்து கற்றறிந்து கொள்ள விரும்பினார், அதிகாரவர்க்கப் பாணியில் அவர்களை இடித்துரைக்க விரும்பவில்லை. சிறிதும் பிழையின்றி முழுநிறைத் துல்லியத்துடன் முன்கூட்டியே வாய்ப்புகளைக் கணக்கிட்டு மதிப்பிட முயலுவது மோசடி அல்லது கேடுகெட்ட போலிப் புலமையே ஆகுமென்பதை அவர் உணர்ந்திருந்தார். உலக வரலாற்றைப் படைப்பதில் தொழிலாளி வர்க்கம் தீரத்தோடும் தியாக உணர்வோடும் முன்முயற்சி எடுத்தது என்பதையே அவர் யாவற்றுக்கும் உயர்வாய் மதித்தார். தவற முடியாதபடி வாய்ப்புகளை முன்கூட்டியே கணக்கிடும் நிலையில் இல்லாமல் வரலாற்றைப் படைத்திடுவோரின் கண்ணோட்டத்திலிருந்து மார்க்ஸ் உலக வரலாற்றை அணுகினாரேயன்றி, "இதை முன்கூட்டியே கூறுவது எளிதாய் இருந்தது... அவர்கள் போர் புரிந்திருக்கக் கூடாது" என்று உபதேசிக்கும் அறிவுத்துறை அற்பவாதியின் கண்ணோட்டத்திலிருந்தல்ல.

நம்பிக்கைக்கு இடமில்லாத இலட்சியமாயினுங்கூட வெகுஜனங்கள் துணிந்து இறங்கிப் போராடுவது இந்த வெகுஜனங்கள் மேலும் பாடம் பயின்று உறுதி பெறவும், அடுத்த போராட்டத்துக்காக அவர்கள் பயிற்சி பெறவும் அவசியமாயிருக்கும் தருணங்கள் வரலாற்றில் எழுகின்றன என்பதையும் மார்க்சால் உணர முடிந்தது.

பிரச்சினையை இவ்விதம் எடுத்துரைப்பது நமது இன்றைய அரை வேக்காட்டு மார்க்சியவாதிகளுக்குச் சிறிதும் புரிந்து கொள்ள முடியாதது என்பதுடன் கோட்பாட்டு அடிப் படையில் அந்நியமானதாகவுங்கூட இருக்கும். இவர்கள் மார்க்சிடமிருந்து மேற்கோள் கூறுவது வீண் வேலையே ஆகும்; கடந்த காலங் குறித்த அவருடைய மதிப்பீட்டை மட்டுமே இவர்கள் கடன்வாங்கிக் கொள்ள விரும்புகிறார்களேயன்றி, எதிர்காலத்தைப் படைப்பதில் அவருக்கிருந்த ஆற்றலை அல்ல. 1905 டிசம்பருக்குப் பிறகு பிளெஹானவ் "தடைபோட" முற்பட்டபோது இது குறித்து நினைத்துக்கூட பார்த்தாரில்லை.

ஆனால் மார்க்ஸ் 1870 செப்டம்பரில் எழுச்சியானது முரட்டுத் துணிச்சலான மதிகெட்ட செயலாகுமென தாமே கருதியதைக் கொஞ்சமும் மறக்காமலே இதே பிரச்சினையைத்தான் எழுப்பினார்:

"...வெர்சேயின் முதலாளித்துவக் கசடர்கள் பாரிஸ்வாசிகளுக்குப் போரில் இறங்குவது அல்லது போராட்டமின்றியே விழுந்துபடுவது என்ற இரண்டிலொரு வழியினை அளித்தனர். பிந்திய வழி ஏற்கப்பட்டிருப்பின் நேர்ந்திருக்கும் தொழிலாளி வர்க்க மனச் சோர்வு, எத்தனை எண்ணிக்கையிலுமான "தலைவர்கள்" விழுந்துபட்டதைக் காட்டிலும் மிகப் பெரிய துர்ப்பாக்கியமாய் இருந்திருக்கும்.

குகல்மனுக்கு எழுதிய கடிதங்களில் மார்க்ஸ் போதிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சிறப்புக்கு உகந்த ஒரு கொள்கையிலிருந்து பெற வேண்டிய படிப்பினைகளைப் பற்றிய சுருக்கமான எமது பரிசீலனையை இத்துடன் முடித்துக்கொள்கிறோம்.

"விண்ணைச் சாடும்" ஆற்றல் தனக்கு உண்டென்பதை ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் முன்பே ஒரு முறை நிரூபித்திருக்கிறது, இனியும் பன்முறை நிரூபிக்கவும் போகிறது.

1907 பிப்ரவரி 5

1907ல் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் நோவயா தூமா பதிப்பகத்தாரால் ஒரு பிரசுரமாய் வெளியிடப்பட்டது	நூல் திரட்டு, தொகுதி 14, பக்கங்கள் 371-79

■

ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ்[26]

■

இந்த ஆகஸ்டில் ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ் இயைபில் பெரிதாகவும் பிரதிநிதித்துவம் மிக்கதாகவும் இருந்ததானது இக்காங்கிரசின் சிறப்புகளில் ஒன்று. ஐந்து கண்டங்களிலிருந்தும் மொத்தம் 886 பிரதிநிதிகள் வந்திருந்தனர். பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் சர்வதேச ஒற்றுமைக்கு எடுப்பான எடுத்துகாட்டாய்த் திகழ்ந்ததோடு இந்தக் காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திரத்தை வகுப்பதிலும் சிறப்புக்குரிய பங்காற்றியது. தனிப்பட்ட சோஷலிஸ்டுக் கட்சிகள் இதுகாறும் முற்றிலும் தத்தமது விருப்பப்படி முடிவெடுத்து வந்த பல பிரச்சினைகள் குறித்தும் இது பொதுவான தீர்மானங்களை ஏற்றது. வெவ்வேறு நாடுகளிலும் மேலும் மேலும் கூடுதலான பிரச்சினைகளுக்கு ஒருமித்த, கோட்பாடு வழிப்பட்ட முடிவுகள் தேவைப்படுவதானது சோஷலிசம் தனியொரு சர்வதேச சக்தியாய் ஒருங்கிணைந்து வருகிறதென்பதைத் தெட்டத் தெளிவாய் நிரூபிக்கிறது.

ஷ்டுட்கார்ட் தீர்மானங்களின் முழு வாசகத்தை இந்த இதழின் பிறிதொரு இடத்தில் காணலாம்.[27] வாதப் பிரதிவாதத்துக்கு உள்ளான பிரதான விவகாரங்களையும் காங்கிரசில் நடைபெற்ற விவாதத்தின் தன்மையையும் தெளிவாய் விளங்கச் செய்யும் பொருட்டு இந்தத் தீர்மானம் ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாய் எடுத்துரைக்கிறோம்.

சர்வதேசக் காங்கிரஸ்களில் காலனிப் பிரச்சினை விவாதிக்கப்படுவது இது முதல் முறையல்ல. இது வரை காங்கிரஸ்களின் முடிவுகள் முதலாளித்துவக் காலனிக் கொள்கை, கொள்ளைக்கும் வன்முறைக்குமான கொள்கையேயாகும் என்ற முழுநிறை கண்டனமாகவே எப்பொழுதும் இருந்

துள்ளன. ஆனல் இம்முறை ஹாலந்தைச் சேர்ந்த வான் கோலின் தலைமையிலான சந்தர்ப்பவாதிகள் பெருவாரியாகி விடும்படியாய்க் காங்கிரஸ் கமிஷன் அமைக்கப்பட்டிருந்தது. எல்லா வகையான காலனிக் கொள்கையையும் கோட்பாட்டு அளவில் இக்காங்கிரஸ் கண்டிக்கவில்லை, ஏனெனில் சோஷலிசத்தில் காலனிக் கொள்கை நாகரிக ஆக்கப் பணி ஆற்ற முடியும் என்பதாய்ப் பொருள்படும் ஒரு வாக்கியம் நகல் தீர்மானத்தில் புகுத்தப்பட்டுவிட்டது. இது போன்ற ஒரு கருத்துக்கு இடமளிப்பதைக் கமிஷனில் சிறுபான்மையினர் (ஜெர்மனியின் லெதபுரும் போலந்து, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளும் மற்றும் பலரும்) உறுதியாய் எதிர்த்து நின்றனர். இந்த விவகாரம் காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டது. காங்கிரசில் இரு போக்குகளது சக்திகளும் அனேகமாய் சரிசமமாய் அமைந்துவிடவே மிகவும் காரசாரமான வாக்குவாதம் நடந்தேறியது.

சந்தர்ப்பவாதிகள் வான் கோலின் பின்னல் அணிவகுத்தனர். ஜெர்மன் பிரதிநிதிக் குழுவின் பெரும்பான்மையின் சார்பில் பேசிய பெர்ன்ஷ்டைனும் டவீதும் ''சோஷலிஸ்டுக் காலனிக் கொள்கை'' என்பது ஏற்கப்பட வேண்டியதே என்று வற்புறுத்தி, தீவிரவாதிகள் மலடான எதிர்மறைப் போக்கை அனுசரிப்பதாகவும், சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை உணரத் தவறுவதாகவும், நடைமுறை சாத்தியமான காலனி வேலைத்திட்டம் அவர்களிடம் இல்லை என்பதாகவும், இன்ன பலவாறுகவும் கூறி அவர்களைத் தாக்கிப் பேசினர். காவுத்ஸ்கி இவர்களை எதிர்த்தார் என்பதை இங்கு இடைநிகழ்வாய்க் குறிப்பிடலாம். ஜெர்மன் பிரதிநிதிக் குழுவின் பெரும்பான்மையோரை எதிர்த்து இக்காங்கிரஸ் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும்படியான நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டுவிட்டதாய் அவர் கருதினர். சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை நிராகரிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், வெளிப்படையாகவே இது தீர்மானத்தின் பிற பிரிவுகளில் கூறப்பட்டிருந்தது, இதனல் எந்த சர்ச்சையும் எழவில்லை என்றும் அவர் குறிப்பிட்டது முற்றிலும் சரியே. முதலாளித்துவக் கொள்ளைக்கும் வன்முறைக்குமான தற்கால ஆட்சியமைப்புக்கு நாங்கள் விட்டுக்கொடுக்க

வேண்டுமா என்பதே பிரச்சினை. பிற்பட்ட நிலையிலுள்ள மக்களை அப்பட்டமாய் அடிமை செய்வதன் அடிப்படையில் அமைந்த இன்றையக் காலனிக் கொள்கையைக் காங்கிரஸ் விவாதிக்க வேண்டும். முதலாளித்துவ வர்க்கம் காலனிகளில் மெய்யாகவே அடிமை முறையைப் புகுத்தி, சுதேசி மக்களை முன்பின் கண்டிராத கொடுமைகளுக்கும் வன்முறைச் செயல்களுக்கும் இரையாக்கி வந்தது, குடியையும் மேக நோய்களையும் பரவச் செய்து இம்மக்களை ''நாகரிகமுறச்'' செய்தது. இந்த நிலைமையில் காலனிக் கொள்கையைக் கோட்பாட்டளவில் ஏற்கலாம் என்பதாய் சோஷலிஸ்டுகள் தட்டிக் கழிக்கும் குழப்படிப் பதப் பிரயோகங்களில் இறங்க வேண்டுமாம்! அப்படிச் செய்தால் அது அப்பட்டமாய்த் துரோகமிழைத்து முதலாளித்துவக் கருத்தோட்டத்தை ஏற்பதாகவே இருக்கும். பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவச் சித்தாந்தத்துக்கும், இப்பொழுது ஆணவமாய்த் தலைதூக்கி வரும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கும் கீழ்ப்படுத்துவதற்கான தீர்மானகரமான ஒரு செயலாகவே அமையும்.

கமிஷனுடைய பிரேரணையைக் காங்கிரஸ் 108க்கு எதிராய் 128 வாக்குகளில் தோற்கடித்தது; ஆதரிக்கவோ எதிர்க்கவோ இல்லாமல் ஒதுங்கிய வாக்குகள் (ஸ்விட்ஜர்லாந்து) பத்து. முதன்முதலாய் ஷ்டுட்கார்ட்டில் ஒவ்வொரு தேசத்துக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்குகள்—இருபது முதல் (ருஷ்யாவும் அடங்கலாய்ப் பெரிய தேசங்களுக்கு) இரண்டு வரை (லுக்சம்பர்க்) வெவ்வேறு எண்ணிக்கையிலான வாக்குகள் — ஒதுக்கப்பட்டதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். காலனிக் கொள்கையைப் பின்பற்றாத அல்லது இக்கொள்கையால் பீடிக்கப்படாத சிறு தேசங்களின் மொத்த வாக்கு, பாட்டாளி வர்க்கமுங்கூட ஓரளவு நாடு பிடிக்கும் வெறியால் பீடிக்கப்படும் தேசங்களுடைய வாக்கைக் காட்டிலும் மிகுதியாய் இருந்தது.

காலனிப் பிரச்சினை பற்றிய இந்த வாக்கெடுப்பு மிகப் பெரிய முக்கியத்துவமுடையதாகும். முதலாவதாக, முதலாளித்துவப் பசப்புகளுக்கு மயங்கிப் பணிந்துவிடும் சோஷலிசச் சந்தர்ப்பவாதத்தை இது தெளிவாய்க் கண்ணெதிரே புலப்படுத்திற்று. இரண்டாவதாக, ஐரோப்பியத் தொழி

லாளர் இயக்கத்திலுள்ள ஓர் எதிர்நிலே இயல்பினே இது வெளிப்படுத்திக் காட்டிற்று. இந்த இயல்பு பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்குப் பெருந் தீங்கு புரியக் கூடியது, ஆகவே இதில் முக்கிய கவனம் செலுத்துவது அவசியமாகும். சிஸ்மொண்டீயின் பொருள் வளம் மிக்க முக்கிய வாக்கு ஒன்றை மார்க்ஸ் அடிக்கடி மேற்கோளாய் எடுத்தாண்டார். பண்டைய உலகின் பாட்டாளிகள் சமுதாயத்தின் செலவில் வாழ்ந்தனர், ஆனுல் தற்காலச் சமுதாயம் பாட்டாளிகளின் செலவில் வாழ்கிறது என்பதே இந்த வாக்கு.

சொத்தில்லாததென்றுலும் உழைப்பாளியல்லாத வர்க்கம் சுரண்டலாளர்களைக் கவிழ்த்திடும் ஆற்றலற்றது. சமுதாயம் அனைத்தையும் பேணிக் காக்கும் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே சமுதாயப் புரட்சியை உண்டாக்க முடியும். ஆனுல் பரவலான காலனிக் கொள்கையின் விளைவாய் ஐரோப்பியப் பாட்டாளி, சமுதாயம் அனைத்தையும் பேணிக் காப்பது காலனிகளில் அனேகமாய் அடிமை செய்யப்பட்டுவிட்ட சுதேசி மக்களின் உழைப்பே அன்றி தனது உழைப்பு அல்ல என்கிற ஒரு நிலைக்கு ஓரளவு தான் வந்துவிட்டதைக் காண வேண்டியிருக்கிறது. உதாரணமாய், பிரிட்டிஷ் முதலாளித்துவ வர்க்கம் பிரிட்டிஷ் தொழிலாளர்களிடமிருந்து பெறுவதை விட இந்தியாவிலும் ஏனைய காலனிகளிலும் வாழும் கோடிக் கணக்கான மக்களிடமிருந்து அதிக லாபம் பெறுகிறது. சில நாடுகளில் இந்த நிலைமை காலனியாதிக்கத் தேசியவெறி உணர்வு பாட்டாளி வர்க்கத்தைத் தொத்திக் கொள்ளச் செய்வதற்கான பொருளாயத,பொருளாதார அடித்தளத்தை அமைத்திடுகிறது. இது தற்காலிக நிகழ்ச்சியாகவே இருக்கலாமென்பது மெய்தான். ஆயினும் இந்தத் தீமையைத் தெளிவாய் உணர்ந்து கொண்டு அதற்குரிய காரணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்; அப்பொழுதுதான் எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தையும் இத்தகைய சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து ஒன்றுதிரட்டமுடியும். இந்தப் போராட்டம் நிச்சயமாய் வெற்றி பெறக் கூடியது, ஏனெனில் ''தனிச் சலுகை பெற்ற'' தேசங்கள் முதலாளித்துவத் தேசங்களில் மேலும் மேலும் குன்றிக் குறையும் சிறு குழுவே ஆகும்.

பெண்கள் வாக்குரிமைப் பிரச்சினே குறித்து காங்கிரசில்

கருத்து வேற்றுமைகள் அனேகமாய் இருக்கவில்லை. பெண்களுக்கு வரம்புக்குட்பட்ட வாக்குரிமைக்கு (அனைவருக்குமான வாக்குரிமைக்குப் பதிலாய்த் தகுதி வரம்பிடப்பட்ட வாக்குரிமைக்கு) ஆதரவாய் சோஷலிஸ்டுகள் இயக்கம் நடத்த வேண்டுமென்று மிகமிகச் சந்தர்ப்பவாத நிறுவனமான பிரிட்டிஷ் ஃபேபியன் கழகத்திலிருந்து[28] வந்த பெண் பிரதிநிதி ஒருவர் மட்டும்தான் வாதாட முயன்றார். யாரும் இவரை ஆதரிக்கவில்லை. இவருடைய நோக்கங்கள் பட்டவர்த்தமானவை: பிரிட்டிஷ் முதலாளித்துவச் சீமாட்டிகள் பிரிட்டனிலுள்ள பெண் பாட்டாளிகளுக்கும் கிடைக்கும்படி வாக்குரிமை விரிவாகிவிடாமல் தாம் மட்டும் வாக்குரிமை பெற நினைக்கிறார்கள்.

இக்காங்கிரசுடன் கூடவே அதே கட்டிடத்தில் முதலாவது சர்வதேச சோஷலிஸ்டுப் பெண்கள் மாநாடும் நடைபெற்றது. இந்த மாநாட்டிலும் மற்றும் காங்கிரஸ் கமிஷனிலும் ஜெர்மன், ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளிடையே நகல் தீர்மானம் குறித்து சுவையான சர்ச்சை நடைபெற்றது. அனைவருக்குமான வாக்குரிமை பெற ஆஸ்திரியர்கள் நடத்திய இயக்கத்தில் அவர்கள் ஆடவருக்கும் பெண்டிருக்கும் சரிசமத்துவ உரிமைகளுக்கான கோரிக்கையை மட்டுப்படுத்த முனைந்தனர். காரியார்த்தக் காரணங்களை முன்வைத்து அவர்கள் ஆடவர் வாக்குரிமையையே பிரதானமாய் வலியுறுத்தினர். கிளாரா ஸெத்கினும் ஏனைய ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளும் ஆஸ்திரியர்கள் தவறான வழியில் செயல்பட்டதையும், பெண்டிருக்கும் ஆடவருக்கும் ஒருங்கே வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தத் தவறுவதன் மூலம் அவர்கள் வெகுஜன இயக்கத்தைப் பலவீனப்படுத்தினர் என்பதையும் அவர்களுக்குச் சரியானபடி சுட்டிக்காட்டினர். ஷ்டுட்கார்ட் தீர்மானத்தின் முடிவுரைச் சொற்கள் (''அனைவருக்குமான வாக்குரிமைக் கோரிக்கை ஆடவர்கள், பெண்டிர் ஆகிய இருவருக்கும் ஏககாலத்தில் எழுப்பப்பட வேண்டும்'') ஆஸ்திரியத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் அளவு மீறிய ''காரியார்த்தக் கண்ணோட்டத்தைக்'' குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சியை ஒட்டியே கூறப்பட்டவை என்பதில் சந்தேகமில்லை.

சோஷலிஸ்டுக் கட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய தீர்மானம் ருஷ்யர்களாகிய நமக்குத் தனி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஸ்டாக்ஹோம் காங்கிரஸ்[29] கட்சி சார்பில்லாத் தொழிற்சங்கங்களே வேண்டுமென்று பதிவு செய்து, இவ்விதம் நமது கட்சி சார்பில்லா ஜனநாயகவாதிகளும் பெர்ன்ஷ்டைனியர்களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும்[30] எப்பொழுதுமே ஆதரித்து வந்துள்ள நடுநிலைமைக் கண்ணோட்டத்தை அங்கீகரித்தது. இதற்கு மாறாய் லண்டன் காங்கிரஸ்[31] வேறொரு கோட்பாட்டை முன்வைத்தது; அதாவது தொழிற்சங்கங்கள் மேலும் நெருக்கமாய்க் கட்சியுடன் இணைய வேண்டுமென்றும், சில நிலைமைகளில் அவை கட்சித் தொழிற்சங்கங்களாகவே ஏற்கபடவும் வேண்டுமென்றும் கூறிற்று. ஷ்டுட்கார்ட்டில் ருஷ்யப் பிரிவின் சமூக-ஜனநாயகத் துணைப்பிரிவில் (சர்வ தேசக் காங்கிரஸ்களில் ஒவ்வொரு நாட்டின் சோஷலிஸ்டுகளும் ஒரு தனிப் பிரிவை அமைத்துக் கொள்கிறார்கள்), இப்பிரச்சினையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிளவு உண்டாயிற்று (பிற பிரச்சினைகளில் பிளவு இல்லை). பிளெஹானவ் நடுநிலைமைக் கோட்பாட்டை ஆதரித்தார். போல்ஷிவிக்கான வோயினவ் லண்டன் காங்கிரஸ் தீர்மானத்திலும், மற்றும் பெல்ஜியத் தீர்மானத்திலும் (காங்கிரஸ் பத்திரங்களில் இத்தீர்மானம் டெ புருக்கேரின் உரையுடன்கூட வெளியிடப்பட்டது, விரைவில் ருஷ்யனில் வெளிவரும்) அடங்கிய நடுநிலைமை-எதிர்ப்புக் கருத்தோட்டத்தைப் பாதுகாத்து நின்றார். கிளாரா ஸெத்கின் தமது *Die Gleichheit*[32] இதழில் நடுநிலைமைக்கு ஆதரவான பிளெஹானவின் வாதங்கள் பிரெஞ்சுக்காரர்களுடைய வாதங்களைப் போல் அதே அளவுக்கு நொண்டியாயிருக்கின்றன என்று பொருத்தமாகவே குறிப்பிட்டார். ஷ்டுட்கார்ட் தீர்மானம்—காவுத்ஸ்கி சரியாகவே கூறியது போலவும், அதைக் கவனமாய்ப் படிக்கும் எவரும் காணக்கூடியது போலவும்—''நடுநிலைமைக்'' கோட்பாட்டின் அங்கீகாரத்துக்கு முடிவு கட்டிவிடுகிறது. நடுநிலைமை அல்லது கட்சி சார்பற்றக் கோட்பாடுகள் குறித்து அதில் ஒரு வார்த்தைகூட கிடையாது. மாறாகத் தொழிற்சங்கங்களுக்கும்

சோஷலிஸ்டுக் கட்சிகளுக்கும் இடையே மேலும் நெருங்கிய வலுமிக்கத் தொடர்புகள் அவசியம் என்பதை அது திட்ட வட்டமாய் ஏற்றுக் கொள்கிறது.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் லண்டன் காங்கிரஸ் தொழிற்சங்கங்கள் குறித்து நிறைவேற் றிய தீர்மானம், இவ்வாறு ஷ்டுட்கார்ட் தீர்மானத்தின் வடிவில் உறுதியான கோட்பாட்டு வழியில் நிலைநாட்டப்பெற்றுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் தொழிற்சங்கங்கள் சோஷலிஸ்டுக் கட்சியுடன் நெருங்கிய நிரந்தரத் தொடர்புடையனவாக்கப் பட வேண்டுமென்ற பொதுக் கோட்பாட்டினை ஷ்டுட்கார்ட் தீர்மானம் வகுத்தளிக்கிறது. லண்டன் தீர்மானமானது ருஷ்யாவில் இது, சாதக நிலைமைகள் இருக்கும்போது கட்சித் தொழிற்சங்கங்களின் வடிவைப் பெற வேண்டுமென்றும், கட்சி உறுப்பினர்கள் இந்தக் குறிக்கோளை அடையப் பாடு பட வேண்டுமென்றும் கூறுகிறது.

ஷ்டுட்கார்ட்டில் ஜெர்மன் பிரதிநிதிக் குழுவின் பாதி உறுப்பினர்கள் தொழிற்சங்கங்களிலிருந்து வந்தோர்; இவர் கள் சந்தர்ப்பவாதக் கருத்துக்களின் மிகவும் விடாப்பிடி யான ஆதரவாளர்களாய் இருந்தனர் என்பது நடுநிலைமைக் கோட்பாட்டால் விளையும் தீமையைக் கண்கூடாக்கியதென்று குறிப்பிட வேண்டும். உதாரணமாய், எஸ்ஸெனில் ஜெர்மன் பிரதிநிதிகள் வான் கோலை எதிர்த்ததற்கும் (எஸ்ஸெனில் தொழிற்சங்கங்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை, கட்சி மட் டிலுமான காங்கிரஸ் அது), ஆனால் ஷ்டுட்கார்ட்டில் ஜெர்மன் பிரதிநிதிகள் அவரை ஆதரித்ததற்கும் இதுவேதான் கார ணம். ஜெர்மனியில் நடுநிலைமையை ஆதரிப்பதானது, சமூக-ஜனநாயக இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகளின் கைகளைப் பலப்படுத்தி, உண்மையில் தீய விளைவுகளையே உண்டாகியுள் ளது. இவ்வுண்மையைக் கவனிக்கத் தவறக் கூடாது; குறிப் பாய்ப் பாட்டாளி வர்க்கத்தின் முதலாளித்துவ-ஜனநாயக வாத ஆலோசகர்கள், தொழிற்சங்க இயக்கத்தை "நடு நிலைமை" வகிக்கச் செய்ய வேண்டுமென்று பாட்டாளி வர்க் கத்தை வற்புறுத்தும் இவர்கள் எண்ணிக்கையில் மிகுதியா யுள்ள ருஷ்யாவில் இதைக் கவனிக்கத் தவறக் கூடாது.

குடியேறுதலையும் நாட்டை விட்டு வெளியேறுதலையும்

பற்றிய தீர்மானம் குறித்து சில வார்த்தைகள். இங்குங்கூட கமிஷனில் குறுகிய தொழிற் பிரிவு நலன்களைப் பாதுகாக்க வும், பிற்பட்ட நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் (சீனு விலிருந்து வரும் கூலிகளும் பிறரும்) குடியேறுவதற்குத் தடை விதிக்கவும்' முயற்சி செய்யப்பட்டது. ''நாகரிக'' நாடுகள் சிலவற்றில் தொழிலாளர்களிடையே, தமது தனிச் சலுகைக்குரிய நிலையினுல் சில அனுகூலங்களைப் பெற்று அதன் காரணமாய்ச் சர்வதேச வர்க்க ஒருமைப்பாட்டின் அவசியத் தை மறக்கத் துணியும் இத்தொழிலாளர்களிடையே காணப் படும் அதே உயர்குல மனப்பான்மைதான் இது. ஆனுல் காங் கிரசில் யாரும் இந்தத் தொழிற் பிரிவு, குட்டிபூர்ஷுவா குறுகிய மனப்பான்மைக்கு ஆதரவளிக்கவில்லை. புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் கோரிக்கைகளை இத்தீர்மானம் முழு அளவுக்குப் பூர்த்தி செய்கிறது.

இனி காங்கிரசின் கடைசியானதும், மிகவும் முக்கியமான தெனக் கூறத்தக்கதுமான தீர்மானத்துக்கு—அதாவது இரா ணுவவாத-எதிர்ப்புத் தீர்மானத்துக்கு—வருகிருேம். பிரான் சிலும் ஐரோப்பாவிலும் ஏகக் கூச்சல் எழுப்பி வந்துள்ள அபக்கியாதிபெற்ற எர்வே, ஒவ்வொரு யுத்தத்துக்கும் வேலை நிறுத்தத்தின் மூலமும் எழுச்சி மூலமும் ''பதிலளிக்க'' வேண் டுமென்று சிறுபிள்ளைத்தனமாய்க் கூறி அரை-அராஜகவாதக் கருத்தோட்டத்துக்கு ஆதரவாய் வாதாடிஞர். ஒரு புறத்தில், அவர் யுத்தமானது முதலாளித்துவத்திலிருந்து இயல்பாகவே எழும் ஒரு விளைவு என்பதையும், பாட்டாளி வர்க்கம் புரட்சி கர யுத்தங்களில் பங்கு கொள்ள மறுக்க முடியாது, ஏனெ னில் இத்தகைய யுத்தங்கள் சாத்தியமே என்பதோடு முத லாளித்துவச் சமுதாயங்களில் உண்மையில் நடந்தும் உள் ளனவென்பதையும் புரிந்து கொள்ளவில்லை. மறு புறத்தில், அவர் யுத்தத்துக்குப் ''பதிலளிப்பதற்கான'' சாத்தியப் பாடு அந்த யுத்தத்தால் தோற்றுவிக்கப்பட்ட நெருக்கடியின் தன்மையைப் பொறுத்ததாகும் என்பதையும் புரிந்துகொள்ள வில்லை. போராட்ட முறைகளின் தேர்வு இந்த நிலைமை களையே பொறுத்திருக்கிறது. தவிரவும் இந்தப் போராட்டத் தின் உள்ளடக்கம் (இங்கே எர்வேவியத்தின் முன்ருவது தப்புக் கருத்தினை அல்லது ஆழமில்லா மேலோட்டச் சிந்தனையைக்

காண்கிறோம்) யுத்தத்தைச் சமாதானமாய் மாற்றுவது மட்டு மல்ல; முதலாளித்துவத்தைஅகற்றி அதனிடத்தில்சோஷலிசத் தை நிறுவுவதே அதன் உள்ளடக்கமாய் இருக்க வேண்டும். அத்தியாவசியமானது யுத்தத்தைத் தடுப்பது மட்டுமல்ல; யுத்தத்தால் உண்டாக்கப்படும் நெருக்கடியை முதலாளித்துவ வர்க்கத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகப் பயன் படுத்திக் கொள்வதும் அத்தியாவசியமானது. ஆயினும் எர்வே வியத்தின் இந்த அரை-அராஜகவாத மடமைகள் யாவற்றுக் கும் அடிநிலையாய்த் திடமான நடைமுறைக் குறிக்கோள் ஒன்று இருந்தது: சோஷலிச இயக்கம் பாராளுமன்றப் போராட்ட முறைகளின் வரம்புக்குள் கட்டுப்படுத்தப்பட்டு விடாமலிருக்கும் பொருட்டும், தவிர்க்கமுடியாதவாறு யுத்தத் தால் உண்டாக்கப்படும் நெருக்கடிகள் குறித்து புரட்சிகரச் செயல்கள் அவசியம் என்பதை வெகுஜனங்கள் உணர்ந்து கொள்ளும் பொருட்டும், கடைசியாக சர்வதேசத் தொழி லாளர் ஒருமைப்பாடு குறித்தும் முதலாளித்துவத் தேசபக்தி யின் பொய்மை குறித்தும் மேலும் உயிர்த் துடிப்புள்ள உணர்வு வெகுஜனங்களிடத்தே பரவும் பொருட்டும் சோஷ லிஸ்டு இயக்கத்தை உந்திவிடுவதே இந்தக் குறிக்கோள்.

பெபெலின் தீர்மானத்தில் (ஜெர்மன் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட இது எல்லா அத்தியாவசியக் கூறுகளி லும் கெட்டின் தீர்மானத்துடன் ஒத்திருந்தது) ஒரு குறை பாடு இருந்தது—பாட்டாளி வர்க்கத்தின் மும்முரமான பணிகளை அது சுட்டிக்காட்டத் தவறிவிட்டது. இதனால் பெபெலின் வைதீக வரையறுப்புகளைச் சந்தர்ப்பவாதப் பார் வை கொண்டு படிப்பது சாத்தியமாகிவிட்டது. ஃபொல்மார் உடனே இந்தச் சாத்தியப்பாட்டை எதார்த்தமாக மாற்ற முற் பட்டுவிட்டார்.

ஆதலால்தான் பெபெலின் தீர்மானத்துக்கு ரோஸா லுக் சம்பர்கும் ருஷ்ய சமூக-ஜனநாயகப் பிரதிநிதிகளும் தமது திருத்தங்களைப் பிரேரணை செய்தனர். இந்தத் திருத்தங்கள் (1) இராணுவவாதம் வர்க்க ஒடுக்குமுறையின் பிரதான ஆயுதமாகுமென்று கூறின; (2) இளைஞர்களிடையே பிரசாரம் நடத்துவதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டின; (3) சமூக-ஜனநாயகவாதிகள் யுத்தம் மூண்டுவிடாதபடித் தடுக்கவோ,

ஏற்கனவே தொடங்கிவிட்ட யுத்தங்களுக்கு விரைவில் முடிவு கட்டவோ முயன்ருல் மட்டும் போதாது, யுத்தத்தால் தோற்றுவிக்கப்படும் நெருக்கடியை முதலாளித்துவ வர்க்கத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டுமென்று வலியுறுத்தின.

துணைக் கமிஷன் (இராணுவவாத-எதிர்ப்புக் கமிஷனுல் தேர்ந்தெடுக்கப்பட்டது) இந்தத் திருத்தங்கள் யாவற்றையும் பெபெலின் தீர்மானத்தில் சேர்த்துக் கொண்டது. இதோடுகூட, ஜொரேஸ் வரவேற்கத்தக்க இனியதோர் ஆலோசனை கூறினுர்: தனித்தனிப் போராட்ட முறைகளை (வேலைநிறுத்தங்கள், எழுச்சிகள்) எடுத்துரைப்பதற்குப் பதில், ஐரோப்பாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலிருந்து தொடங்கி ருஷ்யாவின் புரட்சி வரையிலான பாட்டாளி வர்க்கத்தின் யுத்த-எதிர்ப்புச் செயற்பாட்டின் வரலாற்று உதாரணங்களை இத்தீர்மானம் குறிப்பிட வேண்டும் என்ருர். நகலை இப்படியெல்லாம் மாற்றி எழுதியதன் விளைவாய்க் கிடைத்த தீர்மானம் அளவுமீறி நீண்டுவிட்டது உண்மையே என்ருலும், சிந்தனையில் செழிப்புடையதாகி, பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளைத் துல்லியமாய் வரையறுத்துக் கூறுகிறது. வைதீக முறையின் கண்டிப்பையும், அதாவது முற்றிலும் விஞ்ஞான வழியிலான மார்க்சியப் பகுப்பாய்வையும், தொழிலாளர் கட்சிகள் மேலும் வைராக்கியத்தோடும் புரட்சிகரமாகவும் செயல்படுவதற்குரிய பொர்சுகளையும் இத்தீர்மானம் இணைத்துத் தருகிறது. இந்தத் தீர்மானத்துக்கு ஃபொல்மரின் பாணியில் விளக்கம் கூற முடியாது. சிறுபிள்ளைத் தனமான எர்வேவியத்தின் குறுகலான கட்டுக்கோப்பினுள்ளும் இதனைப் பொருத்த முடியாது.

மொத்தத்தில் ஷ்டுட்கார்ட் காங்கிரஸ் தலைமையான பல பிரச்சினைகளில் சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தின் சந்தர்ப்பவாதத் தரப்புக்கும் புரட்சிகரத் தரப்புக்கும் இடையிலுள்ள கடுமையான வேற்றுமையைக் கண்கூடாக்கிற்று; புரட்சிகர மார்க்சியத்தின் உணர்வில் இப்பிரச்சினைகள் குறித்து முடிவெடுத்தது. ஷ்டுட்கார்ட் காங்கிரசில் நடைபெற்ற விவாதங்களோடுகூடவே இக்காங்கிரசின் தீர்மானங்கள் ஒவ்வொரு பிரசார ஊழியருக்கும் கைப்புத்தகமாகிவிட வேண்

டும். ஷ்டுட்கார்ட்டில் செய்து முடிக்கப்பெற்ற வேலைகள் எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளிகளின் போர்த்தந்திர ஒற்றுமையையும் புரட்சிப் போராட்ட ஒற்றுமையையும் வெகுவாய் ஓங்கச் செய்யும்.

1907 ஆகஸ்டு இறுதியிலும் *செப்டம்பர் தொடக்கத்திலும்* *எழுதப்பெற்றது*	*நூல் திரட்டு,* *தொகுதி 16,* *பக்கங்கள் 67-74*

1907 அக்டோபர் 20ல்
புரொலெத்தாரி, இதழ் 17ல்
வெளிவந்தது

CONNEMARA PUBLIC LIBRARY
-5 MAR 1965

மார்க்சியமும் திருத்தல்வாதமும்

வடிவகணித வெளிப்படை உண்மைகள் மனித நலன்களைப் பாதிக்குமாயின் அவற்றை மறுக்க நிச்சயம் முயற்சி செய்வார்களெனக் கூறும் பிரபல முதுமொழி ஒன்று உண்டு. இறையியலின் பழங் காலத் தப்பெண்ணங்களுக்கு முரணான இயற்கை-வரலாற்றுத் தத்துவங்களுக்கு வெறித்தனமான எதிர்ப்பு காட்டப்பட்டது, இனியும் காட்டப்பட்டு வருகிறது. ஆகவே மார்க்சியத் தத்துவம்—தற்காலச் சமுதாயத்தின் மிகவும் முன்னேறிய வர்க்கத்துக்கு அறிவொளி ஊட்டி அதை ஒழுங்கமைக்க நேரடியாய் உதவுவதும், இந்த வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டுவதும், தற்போதுள்ள அமைப்பு (பொருளாதார வளர்ச்சி காரணமாய்) தவிர்க்க முடியாதபடி வீழ்த்தப்பட்டு அதனிடத்தில் ஒரு புதிய அமைப்பு தோன்றுமென்பதை நிரூபிப்பதுமான இந்த மார்க்சியத் தத்துவம்—அதன் வாழ்வு முழுதும் போராடியே ஒவ்வொரு அடியாய் முன்னேற வேண்டியிருந்துள்ளது என்பதில் வியப்பு ஏதுமில்லை.

மார்க்சியமானது முதலாளித்துவ விஞ்ஞானத்துக்கும் தத்துவவியலுக்கும் எதிரானது என்பதைக் கூறத் தேவையில்லை. சொத்துடைத்த வர்க்கங்களின் வளரும் தலைமுறையை மழுங்கடிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களுக்கு எதிராய் அதைப் ''பயிற்றுவிக்கவும்'' அதிகாரபூர்வமான பேராசிரியர்களால் அதிகாரபூர்வமாய் இவை போதிக்கப்படுகிறவை. இந்த விஞ்ஞானம் மார்க்சியம் என்பதாய் ஒன்று இருப்பதைக் கேட்பதற்குக்கூட மறுக்கிறது; மார்க்சியம் ஏற்கனவே பொய்யென நிரூபிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டுவிட்டதெனக் கூறுகிறது. சோஷலிசத்தை மறுத்துப் பிழைப்பு தேடிக் கொள்ளும் இளம் அறிவியலாள

களும், காலாவதியாகிவிட்ட எல்லா வித "அமைப்புகளின்" மரபுகளையும் பாதுகாத்து நிற்கும் தள்ளாத கிழவர்களும் ஒருங்கே துடித்தெழுந்து மார்க்சைத் தாக்குகின்றனர். மார்க்சியத்தின் முன்னேற்றமானது, தொழிலாளி வர்க்கத்தினரிடையே அதன் கருத்துக்கள் பரவி வேரூன்றி உறுதி பெறுவதானது, மார்க்சியத்தின் மீதான இந்த முதலாளித்துவத் தாக்குதல்களின் வேகத்தையும் கடுமையையும் தவிர்க்க முடியாதபடி அதிகரிக்கச் செய்கிறது. அதிகாரபூர்வமான விஞ்ஞானத்தால் "அழித்தொழிக்கப்படும்" ஒவ்வொரு தரமும் மார்க்சியம் மேலும் மேலும் வலுவும் உறுதியும் சக்தியும் பெற்று ஓங்குகிறது.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பு கொண்டு பிரதானமாய்ப் பாட்டாளி வர்க்கத்திடம் நிலவும் தத்துவங்களிடையேகூட மார்க்சியம் தனது நிலையை எடுத்த எடுப்பிலே உறுதியாய் நாட்டிக் கொண்டுவிடவில்லை. அதன் வாழ்வின் முதல் அரை நூற்றுண்டில் (1840ஆம் ஆண்டுகளிலிருந்து தொடங்கி) மார்க்சியம் அடிப்படையிலேயே தனக்கு விரோதமான தத்துவங்களுக்கு எதிராய்ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் மார்க்சும் எங்கெல்சும் தத்துவவியல் கருத்துமுதல்வாதக் கண்ணேட்டத்தினராய் இருந்த தீவிர இளம் ஹெகலியர்களுடன்[33] கணக்குத் தீர்த்துக் கொண்டனர். நாற்பதாம் ஆண்டுகளின் முடிவில் பொருளாதாரத் தத்துவத் துறையில் புருதோனியத்தை எதிர்த்துப் போராட்டம் ஆரம்பமாயிற்று. கொந்தளிப்பு மிக்க 1848ல் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட கட்சிகளையும் தத்துவங்களையும் பற்றிய விமர்சனத்தின் வாயிலாய் ஐம்பதாம் ஆண்டுகளில் இந்தப் போராட்டம் முடிவடையலாயிற்று. அறுபதாம் ஆண்டுகளில் போராட்டம் பொதுத் தத்துவத் துறையிலிருந்து நேரடியான தொழிலாளர் இயக்கத்துக்கு மேலும் நெருங்கிய ஒரு துறைக்கு இடம் பெயர்ந்து சென்றது. அகிலத்திலிருந்து பக்கூனினியம்[34] வெளியேற்றப்பட்டதில் இது முடிவுற்றது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறிது காலத்துக்குப் புருதோனியர் முல்பெர்கரும், எழுபதாம் ஆண்டுகளின் கடைப் பகுதியில் நேர்காட்சிவாதி டூரிங்கும் ஜெர்மனியில் அரங்கிலே ஆடினர்.

ஆனுல் பாட்டாளி வர்க்கத்திடம் இருவருக்கும் ஏற்கனவே மிகச் சொற்ப செல்வாக்கே இருந்தது. தொழிலாளர் இயக்கத்தில் ஏனைய எல்லா சித்தாந்தங்களின் மீதும் இதற்குள்ளாகவே மார்க்சியம் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி வெற்றி கண்டு வந்தது.

தொண்ணூரும் ஆண்டுகளுக்குள் இந்த வெற்றி பிரதானமாய் நிறைவு எய்திவிட்டது. புருதோனிய மரபுகள் வேறு எங்கையும்விட மிக அதிகக் காலத்துக்கு நிலைத்திருந்த லத்தீனிய நாடுகளிலுங்கூட, தொழிலாளர் கட்சிகள் தமது வேலைத் திட்டங்களையும் போர்த்தந்திரங்களையும் நடைமுறையில் மார்க்சிய அடித்தளங்கள் மீதுதான் வகுத்துக் கொண்டன. தொழிலாளர் இயக்கத்தின் புத்துயிர் பெற்ற சர்வதேச நிறுவனம்—காலத்துக்குக் காலம் கூடிய சர்வதேசக் காங்கிரஸ்களின் வடிவில் அமைந்த இது—தொடக்கத்திலிருந்து அனேகமாய்ப் போராட்டமின்றியே மார்க்சியக் கருத்தோட்டத்தையே முக்கியமான எல்லாக் கூறுகளிலும் ஏற்று வந்தது. இவ்விதம் மார்க்சியம் தனக்கு விரோதமான அதிக அளவுக்கோ குறைந்த அளவுக்கோ ஒருமித்ததாய் அமைந்த தத்துவங்கள் யாவற்றையும் வெளியேற்றியபின், அந்தத் தத்துவங்களில் அடங்கிய போக்குகள் பிற வழிகளில் தலைகாட்டமுற்பட்டன. போராட்டத்தின் வடிவங்களும் முகாந்திரங்களும் மாறினவேயன்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றே வந்தது. மார்க்சியத்தின் வாழ்வில் இரண்டாவது அரைநூற்றுண்டானது (தொண்ணூரும் ஆண்டுகளிலிருந்து) மார்க்சியத்துக்கு விரோதமாய் மார்க்சியத்தினுள்ளிருந்தே செயல்பட்ட ஒரு போக்கிற்கு எதிரான போராட்டத்துடன் தொடங்கிற்று.

ஒரு காலத்தில் வைதீக மார்க்சியவாதியாய் இருந்த பெர்ன்ஷ்டைன் மிகுந்த சப்தம் எழுப்பி, மார்க்சுக்குத் திருத்தங்கள் செய்வதன், மார்க்சைத் திருத்துவதன், திருத்தல்வாதத்தின் மிக முனைப்பான வெளிப்பாடாய் முன்வந்ததால், இந்தப் போக்கு பெர்ன்ஷ்டைனின் பெயரில் அழைக்கப்படலாயிற்று. ருஷ்யாவிலுங்கூட, நாட்டின் பொருளாதாரப் பிற்பட்ட நிலை காரணமாகவும், பண்ணையடிமை முறையின் மீதமிச்சங்களின் சுமையால் இருத்தப்பட்ட விவசாயிகள் மக்கள்

தொகையில் மிகப் பெரும்பான்மையோராய் இருப்பதன் காரணமாகவும் மார்க்சியமல்லாத சோஷலிசம் இயல்பாகவே வேறெங்கையும்விட மிக நெடுங் காலத்துக்கு நிலேத்திருந் துள்ள ருஷ்யாவிலுங்கூட, தெட்டத் தெளிவாய் நம் கண் முன்னே இது திருத்தல்வாதமாய் மாறிக் கொண்டிருக்கிறது. நிலப் பிரச்சினையிலும் (நிலம் அனைத்தையும் ஸ்தல அர சுடைமையாக்கும் திட்டத்திலும்) மற்றும் வேலைத்திட்டம், போர்த்தந்திரம் பற்றிய பொதுப் பிரச்சினைகளிலும் நமது சமூக-நரோத்னிக்குகள்[35] தமது பழைய கருத்தமைப்பின் அழுகிப்போன, காலாவதியாகிவிட்ட மீதமிச்சங்களுக்குப் பதிலாய் மார்க்சுக்குத் ''திருத்தங்கள்'' செய்வதை மேலும் மேலும் கைக்கொண்டு வருகின்றனர். அவர்களுடைய பழைய கருத்தமைப்பு அதற்குரிய வழியில் ஒருமித்ததாய் அமைந்து அடிப்படையிலேயே மார்க்சியத்துக்குப் பகைமையானதாய் இருந்தது.

மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது. அது போராட்டத்தைத் தொடர்ந்து நடத் தியே வருகிறது. ஆனால் முன்பு போல தனது சொந்த அடிப் படையிலிருந்து போராடுவதற்குப் பதிலாய், இப்பொழுது அது மார்க்சியத்தின் பொது அடிப்படையிலே நின்று, திருத் தல்வாதமாய்ப் போராட்டத்தை நடத்தி வருகிறது. ஆகவே திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தைப் பரிசீலனை செய்வோமாக.

தத்துவவியல் அரங்கில் திருத்தல்வாதமானது முதலா ளித்துவப் பேராசிரிய ''விஞ்ஞானத்தைப்'' பின்தொடர்ந்து சென்றது. பேராசிரியர்கள் ''கான்டுக்குத் திரும்பிச் சென் றனர்''— திருத்தல்வாதம் உடனே நவீன-கான்டியர்களின் வாலைப் பற்றிக் கொண்டு பின்சென்றது. தத்துவவியல் பொருள்முதல்வாதத்தை எதிர்த்து பாதிரிமார்கள் ஆயிரம் தரம் கூறி வந்திருக்கும் வழக்கமான வெற்றுரைகளைப் பேரா சிரியர்கள் திருப்பிக் கூறினர்—உடனே திருத்தல்வாதிகளும் இளக்காரமாய் நகைத்துக் கொண்டு பொருள்முதல்வாதம் நெடுங் காலத்துக்கு முன்பே ''தவறெனை நிரூபிக்கப்பட்டு விட்டதே'' என்று (கடைசியாய் வெளிவந்த Handbuchகி லிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே திருப்பிக் கூறி) ஜப

மந்திரத்தை முணுமுணுப்பது போல முணுமுணுத்தனர். பேராசிரியர்கள் ஹெகலைச் ''செத்த நாய்''[36] என ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதேபோதில் ஹெகலினுடையதைவிட ஆயிரம் மடங்கு அற்பமான, படுமட்டமான கருத்துமுதல்வாதத்தை உபதேசம் செய்து, மிக அலட்சியமாய் இயக்கவியலிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டனர்—உடனே திருத்தல் வாதிகள் அவர்கள் பின்னால் ஓடி, ''சாதுர்யமான'' (மற்றும் புரட்சிகரமான) இயக்கவியலைக் கைவிட்டு அதற்குப் பதில் ''எளிய'' (மற்றும் அமைதியான) ''பரிணமத்தைக்'' கைக் கொண்டு, விஞ்ஞானத்தைக் கொச்சையாக்கி இழிவுபடுத்தும் தத்துவவியல் சகதிக் குழியிலே மூழ்கினர். பேராசிரியர்கள் தமது கருத்துமுதல்வாத, ''விமர்சன'' அமைப்புகளை ஆதிக்கத்திலிருந்த மத்திய காலத் ''தத்துவவியலுக்கு'' (அதாவது இறையியலுக்கு) உகந்தவாறு சரிசெய்து அதிகாரபூர்வமான தமது சம்பளங்களைச் சம்பாதித்துக் கொண்டனர்—திருத்தல்வாதிகளும் உடனே அவர்களை நெருங்கிச் சென்று மதத்தை, தற்கால அரசு சம்பந்தமாய் மட்டுமின்றி முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்பந்தமாகவுங்கூட, அவரவரது ''சொந்த விவகாரமாக்க'' முயன்றனர்.

மார்க்சுக்குச் செய்யப்பட்ட இத்தகைய ''திருத்தங்களுக்கு'' வர்க்க முறையில் மெய்யான பொருள் என்னவென்பது கூறுமலே விளங்குகிறது. சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிளெஹானவ் ஒருவர்தான் திருத்தல்வாதிகளுடைய படுமோசமான இந்த வெற்றுரைகளை முரணற்ற இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்துக் கண்டித்த மார்க்சியவாதி என்பதை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். பிளெஹானவின் போர்த்தந்திரச் சந்தர்ப்பவாதத்தைப் பற்றிய விமர்சனமாய் மூடிமறைத்துப் பழைய பிற்போக்குத் தத்துவவியல் குப்பைக்கூளத்தைக் கள்ளத்தனமாய் உள்ளே கொண்டுவர மிகவும் தவறான முயற்சிகள் செய்யப்படும் இத்தருணத்தில் இதை மேலும் அழுத்தம் திருத்தமாய் வலியுறுத்துவது அவசியமாகும்.*

* பக்தானவ், பஸாரவ் மற்றும் சிலர் எழுதும் மார்க்சியத்தின் தத்துவவியலில் ஆராய்ச்சிகள் என்னும் புத்தகத்தைப் பார்க்கவும். இப்புத்தகத்தைப் பரிசீலிக்க இதுவல்ல இடம்.

அரசியல் பொருளியலுக்கு வருவோமாயின் இத்துறையில் திருத்தல்வாதிகளுடைய ''திருத்தங்கள்'' மேலும் அதிக விரிவாகவும் நுட்ப விவரங்கள் வழிப்பட்டனவாயும் இருந்ததை முதற்கண் குறிப்பிடுதல் வேண்டும். ''பொருளாதார வளர்ச்சி பற்றிய புதிய விவரங்களைக்'' கொண்டு பொது மக்களை வயப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. பெருவீத உற்பத்தி குவிவதும் சிறுவீத உற்பத்தியை அது அகற்றிடுவதும் விவசாயத்தில் நடைபெறவே இல்லையென்றும், வர்த்தகத்திலும் தொழில் துறையிலும் மிகவும் மெதுவாகவே நடைபெறுகின்றன என்றும் கூறப்பட்டது. நெருக்கடிகள் இப்பொழுது அரிதாகியதோடு பலம் குறைந்துவிட்டதாகவும், இவற்றை அறவே நீக்கிவிடும் ஆற்றலைக் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் மூலதனத்துக்கு அளித்திடுமென எதிர்பார்க்கலாம் என்பதாகவும் கூறப்பட்டது. முதலாளித்துவம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் ''தகர்வு பற்றிய தத்துவம்'', வர்க்கப் பகைமைகள் மேலும் மேலும் கடுமை குறைந்து தணிந்துவிடும் போக்கின் காரணத்தால் ஆதரமற்றதாகுமெனக் கூறப்பட்டது. முடிவில் மார்க்சின் மதிப்புத் தத்துவத்தையும் பேம்-பாவர்க்கின் வழியில் திருத்துவதில் தவறு ஒன்றுமில்லை என்று கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் திருத்தல்வாதிகளை எதிர்த்து நடத்திய போராட்டமானது, இதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு டூரிங்குடன் எங்கெல்ஸ் நடத்திய சர்ச்சையைப் போல் அதே அளவுக்குப் பயனுள்ள முறையில் சர்வதேச சோஷலிசத்தில் தத்துவார்த்தச் சிந்தனையை மறுமலர்ச்சி பெறச் செய்தது. உண்மைகள், புள்ளிவிவரங்கள் இவற்றின் துணை கொண்டு திருத்தல்வாதிகளுடைய வாதங்கள் பகுத்தாராயப்பட்டன. தற்காலச் சிறுவீத உற்பத்தி குறித்து

நவீன-காண்டியத் திருத்தல்வாதிகளைப் பற்றி மேலே நான் கூறியுள்ளவை யாவும் இந்தப் ''புதிய'' நவீன-ஹியூமிய, நவீன-பெர்க்கிலியத் திருத்தல்வாதிகளுக்கும் சாராம்சத்தில் பொருந்தும் என்பதை வருங்காலத்தில் கூடிய சீக்கிரம் ஒரு கட்டுரைத் தொடரிலோ, தனிப் பிரசுரத்திலோ நிரூபிப்பேன் என்று மட்டும் தற்போது குறிப்பிடுகிறேன்.[37] (நூல் திரட்டு, தொகுதி *18*. — பதிப்பாசிரியர்.)

திருத்தல்வாதிகள் முனைந்து நின்று பகட்டான சித்திரம் தீட்டினர் என்று நிரூபிக்கப்பட்டது. தொழில் துறையில் மட்டுமின்றி, விவசாயத்திலுங்கூட சிறுவீத உற்பத்தியை விடப் பெருவீத உற்பத்தியே தொழில்நுட்ப வழியிலும் வர்த்தக வழியிலும் மேலானது என்பது மறுக்க முடியாத உண்மைகளால் மெய்ப்பிக்கப்படுகிறது. ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி விவசாயத்தில் குறைந்த அளவு வளர்ச்சியே பெற்றிருக்கிறது; தற்காலப் புள்ளிவிவர இயலாளர்களும் பொருளியலாளர்களும், பொதுவாகப் பேசமிடத்து, உலகப் பொருளாதாரத்தின் பரிவர்த்தனை நிகழ்ச்சிப்போக்கினுள் விவசாயம் மேலும் மேலும் இழுத்துக் கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டும் தனிக் கிளைகளையும் (சில நேரங்களில் செயற்பாடுகளையுங்கூட) தேர்வாய்வு செய்வதில் அதிகத் தேர்ச்சியுடையோராய் இல்லை. சிறுவீத உற்பத்தியானது இயற்கைப் பொருளாதாரத்தின் இடிபாடுகள்மீது தன்னை நிலைநிறுத்திக் கொள்வது எப்படியெனில், இடையறுது உணவுத் தரத்தை மோசமாக்கியும் நிரந்தரப் பட்டினியாலும் வேலை நேரத்தை அதிகமாக்கிச் சென்றும் கால்நடைகளின் தரத்தையும் பராமரிப்பையும் சீர்கேடுறச் செய்தும்தான்— சுருக்கமாய்க் கூறினால், முதலாளித்துவப் பட்டறை உற்பத்தியை எதிர்த்துக் கைத்தொழில் உற்பத்தி தன்னை நிலைநிறுத்தி வந்த அதே வழிகளில்தான். விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் சிறுவீத உற்பத்தியின் அடித்தளங்களுக்குத் தவிர்க்கமுடியாதவாறும் விடாப்பிடியாகவும் குழி பறிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் குழப்படியாகவும் சிக்கலாகவுமுள்ள இந்த நிகழ்ச்சிப்போக்கை அதன் எல்லா வடிவங்களிலும் ஆராய்வதும், சிறு உற்பத்தியாளரால் முதலாளித்துவத்தில் அழியாது நிலைப்பது முடியாதென்பதையும் முதலாளித்துவத்தில் விவசாயியின் சிறு சாகுபடிக்கு விடிமோட்சமில்லை என்பதையும் பாட்டாளியின் கண்ணோட்டத்தை விவசாயி ஏற்பது அவசியம் என்பதையும் தெளிவுபடுத்திக் காட்டுவதும் சோஷலிசப் பொருளியலுக்குரிய கடமையாகும். இந்தப் பிரச்சினையில் திருத்தல்வாதிகள் ஒருச்சார்பாகவும் முதலாளித்துவத்தின் முழு அமைப்புடன்

தொடர்பின்றியும் தேர்வு செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் மேம்போக்கான பொது முடிவுகளுக்கு வந்து விஞ்ஞானத்தின் கண்ணோட்டத்தில் கேடு புரிந்தனர். புரட்சிகரப் பாட்டாளியின் பார்வைநிலையை ஏற்குமாறு வற்புறுத்துவதற்குப் பதிலாய் சிறு உடைமையாளனின் போக்கை (அதாவது முதலாளித்துவ வர்க்கத்தாரின் போக்கை) ஏற்குமாறு தெரிந்தோ தெரியாமலோ தவிர்க்க முடியாதபடி விவசாயியை அழைத்ததன் மூலம், அல்லது வற்புறுத்தியதன் மூலம் அவர்கள் அரசியலின் கண்ணோட்டத்தில் கேடு புரிந்தனர்.

நெருக்கடிகளின் தத்துவம் குறித்தும் தகர்வின் தத்துவம் குறித்தும் திருத்தல்வாதத்தின் நிலை மேலும் படுமோசமானதாகவே இருந்தது. மிகச் சொற்ப காலத்துக்கு மட்டுமே தான், அதுவும் மிக மோசமான கிட்டப்பார்வை கொண்டவரால்தான் ஒரு சில ஆண்டுக் காலத் தொழில் துறை ஏற்ற நிலையாலும் சுபிட்சத்தாலும் வயப்படுத்தப்பட்டு, மார்க்சின் தத்துவத்தினுடைய அடிப்படைகளைத் திருத்தியமைக்க வேண்டுமென நினைக்க முடியும். நெருக்கடிகள் கடந்த காலத்துக்குரியனவாகிவிடவில்லை, சுபிட்சத்தைப் பின்தொடர்ந்து நெருக்கடி வருகிறது என்பதை எதார்த்த நிலைமைகள் மிக விரைவாகவே திருத்தல்வாதிகளுக்குத் தெளிவுபடுத்தின. குறிப்பிட்ட நெருக்கடிகளின் வடிவங்களும் வரிசைமுறையும் சித்திரமும் மாறினவேயன்றி, நெருக்கடிகள் முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாய்த்தான் நிலைத்திருந்தன. கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் உற்பத்தியை ஒன்றுபடுத்திய அதே நேரத்தில், எல்லோருக்கும் கண்கூடாய்த் தெரியும்படியான முறையில் உற்பத்தியின் அராஜகத்தையும் பாட்டாளி வர்க்கத்தினுடைய வாழ்வின் காவந்தின்மையையும் மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் தீவிரப்படுத்தி, இதன் மூலம் வர்க்கப் பகைமைகளை முன்பின் கண்டிராத அளவுக்குக் கடுமையாக்குகின்றன. முதலாளித்துவமானது அழிவை நோக்கி—தனிப்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடிகளைக் குறிக்கும் பொருளிலும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின் முழுநிறைத் தகர்வைக் குறிக்கும் பொருளிலும்—விரைந்தோடிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பாய் இதே புதிய பகாசுர டிரஸ்டுகளின் மூலம் மிக

மிகத் தெளிவாகவும் மிகமிகப் பெரிய அளவிலும் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியும் ஐரோப்பா பூராவிலும் பயங்கரமாய் அதிகரித்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும்—எக்கணமும் மூண்டுவிடும் நிலையிலுள்ள தொழில் துறை நெருக்கடியைப் பற்றிக் கூறவே வேண்டாம், பல அறிகுறிகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன—திருத்தல்வாதிகளுடைய அண்மைக் காலத்தியத் ''தத்துவங்கள்'' எல்லோராலும், திருத்தல்வாதிகளிடையேகூட பலரும் அடங்கலாய் எல்லோராலும், மறக்கப்பட்டுவிடும் நிலையை உண்டாக்கியுள்ளன. ஆனால் அறிவுத்துறையினரது இந்த நிலையின்மை தொழிலாளி வர்க்கத்துக்கு அளித்திடும் படிப்பினைகள் ஒரு போதும் மறக்கப்படலாகாது.

மதிப்புத் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் பேம்-பாவர்க்கின் பாணியில் சிறிதும் தெளிவற்ற சூசகங்களையும் பெரு மூச்சுகளையும் தவிர்த்து, திருத்தல்வாதிகள் வேறு எதுவுமே அளித்திடவில்லை, ஆகவே விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் எவ்விதத் தடமும் விட்டுச் செல்லவில்லை என்பதற்குமேல் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

அரசியல் துறையில், திருத்தல்வாதமானது மார்க்சியத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப் போராட்டத் தத்துவத்தைத் திருத்த மெய்யாகவே பெருமுயற்சி செய்தது. அரசியல் சுதந்திரமும் ஜனநாயகமும் அனைத்து மக்கள் வாக்குரிமையும் வர்க்கப் போராட்டத்துக்கான அடிநிலையை அகற்றிவிடுவதாகவும், தொழிலாளி வர்க்கத்துக்குத் தாய் நாடில்லை என்கிற கம்யூனிஸ்டு அறிக்கையின் பழம்பெரும் நிர்ணயிப்பைப் பொய்யாக்கிவிடுவதாகவும் கூறினார்கள். ஏனெனில் ஜனநாயகத்தில் ''பெரும்பான்மையோரின் சித்தம்'' ஆதிக்கம் செலுத்துவதால், அரசை வர்க்க ஆதிக்கத்திற்கான உறுப்பாய் யாரும் கருதலாகாதென்றும், பிற்போக்காளர்களுக்கு எதிராய் முற்போக்கான, சமுதாய-சீர்திருத்த முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டுகள் நிறுவிக் கொள்வதை நிராகரிக்கலாகாதென்றும் கூறினர்.

திருத்தல்வாதிகளுடைய இந்த வாதங்கள் ஓரளவு பாங்குற வகுக்கப்பெற்ற கருத்தமைப்பாகும் என்பதை, அதா

வது பிரசித்தமான பழைய மிதவாத-முதலாளித்துவக் கருத் தமைப்பாகும் என்பதை மறுப்பதற்கில்லை. முதலாளித்துவப் பாராளுமன்ற முறையில் வாக்குரிமையையும் அரசாங்க விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமையையும் குடிமக்கள் அனைவரும் பாகுபாடின்றிப் பகிர்ந்து கொள்வதால் இது வர்க்கங்களையும் வர்க்கப் பிரிவினைகளையும் ஒழித்திடுகிறது என்று மிதவாதிகள் எப்பொழுதுமே கூறி வந்துள்ளனர். இத்தகைய கருத்துக்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவின் வரலாறு அனைத்தும், இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில் ருஷ்யப் புரட்சியின் வரலாறு அனைத்தும் கண்கூடாய்க் காட்டுகின்றன. ''ஜனநாயக'' முதலாளித்துவத்தின் சுதந்திரத்தில் பொருளாதாரப் பாகுபாடுகள் மேலும் தீவிரமாகிக் கடுமையாகின்றனவே ஒழிய குறைந்துவிடவில்லை. மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்கூட பாராளுமன்ற முறை இக்குடியரசுகளும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளே என்ற அவற்றின் உள்ளியல்பான தன்மையை அப்பட்டமாய்த் தெரியப்படுத்துகிறதேயன்றி, அவற்றில் வர்க்க ஒடுக்குமுறையை அகற்றிவிடவில்லை. அரசியல் நிகழ்ச்சிகளில் முன்பு நேரடிப் பங்கு பெற்ற பகுதிகளைக் காட்டிலும் அளவிட முடியாத விரிவான மக்கள் பகுதியோருக்கு அறிவொளியூட்டி அவற்றை ஒழுங்கமைத்திடத் துணை புரிவதன் மூலம் பாராளுமன்ற முறை நெருக்கடிகளையும் அரசியல் புரட்சிகளையும் அகற்றிவிடவில்லை, இப்புரட்சிகளின்போது உள்நாட்டு யுத்தம் அதிகபட்ச அளவுக்கு கடுமையாகும்படியே செய்கிறது. தவிர்க்க முடியாதபடி எப்படி இது கடுமையாகிவிடுகிறது என்பதை 1871ஆம் ஆண்டு வசந்தத்தில் பாரிஸ் நிகழ்ச்சிகளும் 1905 குளிர்காலத்தில் ருஷ்ய நிகழ்ச்சிகளும் மிக மிகத் தெளிவாய்க் காட்டின.[38] பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்கும் பொருட்டு பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் ஒரு கணங்கூடத் தயங்காது தேசம் அனைத்துக்கும் எதிரான பகைவனுடன், பிரெஞ்சு நாட்டைச் சீரழியச் செய்த அந்நியச் சேனையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. பாராளுமன்ற முறை, முதலாளித்துவ ஜனநாயகம் இவற்றின் தவிர்க்க இயலாத உள்ளார்ந்த இயக்க

வியலே—சர்ச்சைக்கு வெகுஜனப் பலாத்காரத்தின் மூலம் முன்னிலும் கூர்மையான முடிவு காண வழி வகுக்கும் இதனை —புரிந்து கொள்ளாதவர் எவராலும் இந்தப் பாராளுமன்ற முறையின் அடிப்படையில் கோட்பாட்டு வழியில் முரணின்றியும் தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் இந்த ''சர்ச்சைகளில்'' வெற்றிகரப் பங்கு கொள்ள மெய்யாகவே அவர்களைத் தயார் செய்யும் விதத்திலும் பிரசாரமும் கிளர்ச்சியும் நடத்த ஒருபோதும் முடியாது. மேற்கு நாடுகளில் சமூக-சீர்திருத்த மிதவாதிகளுடனும், ருஷ்யப் புரட்சியில் மிதவாதச் சீர்திருத்தவாதிகளுடனும் (காடேட்டுகள்) செய்து கொள்ளப்பட்ட கூட்டணிகள், ஒப்பந்தங்கள், இணைப்புகள் இவற்றின் அனுபவமானது, வெகுஜனங்களுடைய உணர்வை மழுங்கடிக்கவே இந்த ஒப்பந்தங்கள் உதவுகின்றன, போராடும் வீரர்களை அவை சிறிதும் போராடும் ஆற்றலற்ற, மிகுந்த ஊசலாட்டமும் துரோகத் தன்மையும் கொண்டவர்களுடன் இணையச் செய்து, வெகுஜனங்களுடைய போராட்டத்தின் மெய்யான முக்கியத்துவத்தைப் பலவீனப்படுத்துகின்றனவே அன்றி அதனை உயர்த்தவில்லை என்பதை ஐந்தந்திரிபற நிரூபித்துக் காட்டியுள்ளது. பிரான்சில் மில்லிரண்டிசம்[39] —விரிவான, மெய்யாகவே தேச அளவில் திருத்தல்வாத அரசியல் போர்த்தந்திரத்தைக் கையாளுவதில் மிகப் பெரிய முயற்சியான இது—உலகெங்கணும் பாட்டாளி வர்க்கம் எந்நாளும் மறக்க முடியாத வகையில் திருத்தல்வாதம் குறித்து நடைமுறை வாயிலான ஒரு மதிப்பீட்டை அளித்திருக்கிறது.

சோஷலிச இயக்கத்தின் இறுதி நோக்கம் குறித்து திருத்தல்வாதம் அனுசரிக்கும் போக்கு அதன் பொருளாதார, அரசியல் போக்குகளுடன் சேர்ந்து அதன் முழு உருவையும் பூர்த்தி செய்து காட்டும் இயற்கையான நிரப்புக் கூறுகும். ''இயக்கமே யாவும், இறுதி நோக்கம் ஒரு பொருட்டல்ல'' —பெர்ன்ஷ்டைனுடைய இந்தத் தாரகமந்திரம் நீண்ட பல வியாக்கியானங்களைக் காட்டிலும் சிறப்பாய்த் திருத்தல்வாதத்தின் உட்பொருளைத் தெரிவிக்கிறது. தனது நடத்தையைச் சந்தர்ப்பத்துக்குச் சந்தர்ப்பம் மாற்றி நிர்ணயித்துக் கொள்ளுதல், அன்றன்றைக்குமான நிகழ்ச்சிகளுக்கும் அற்ப

விவகார அரசியலின் திருப்பங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்தின் தலையாய நலன்களையும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின், முதலாளித்துவப் பரிணாமம் அனைத்தின் அடிப்படைக் கூறுகளையும் மறந்துவிடுதல், இந்தத் தலையாய நலன்களை அந்தந்த தருணத்திற்குரிய மெய்யான அல்லது கற்பிதமான நலன்களுக்காகப் பலியிடுதல்—இவையேதான் திருத்தல்வாதத்தின் கொள்கை. இந்தக் கொள்கையின் தன்மையிலிருந்தே வெளிப்படையாய்ப் பெறப்படுவது என்னவெனில், இது எண்ணிலடங்காப் பல்வேறு வடிவங்களை ஏற்கும் என்பதும், ஓரளவுக்கோ பெருமளவுக்கோ ''புதுமையான'' ஒவ்வொரு பிரச்சினையும் நிகழ்ச்சிகளில் ஓரளவுக்கோ பெருமளவுக்கோ எதிர்பாராத, முன்னறியாத ஒவ்வொரு திருப்பமும்—அடிப்படை வளர்ச்சித் திசையை அது மிகச் சொற்ப அளவுக்கு மட்டுமேதான், மிக மிகச் சொற்ப காலத்துக்கேதான் மாற்றுகிறது என்றாலுங் கூட—தவிர்க்க முடியாத வகையில் ஏதேனும் ஒரு வகைத் திருத்தல்வாதத்தை எப்பொழுதும் தோற்றுவிக்கவே செய்யும் என்பதும்தான்.

திருத்தல்வாதம் தவிர்க்க முடியாததாய் இருப்பதற்குத் தற்கால சமுதாயத்தில் அதற்குள்ள வர்க்க வேர்கள்தான் காரணம். திருத்தல்வாதம் ஒரு சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு. ஜெர்மனியில் வைதீகவாதிகளுக்கும் பெர்ன்ஷ்டைனியர்களுக்கும், பிரான்சில் கெட்டிஸ்டுகளுக்கும் ழொரேசிஸ்டுகளுக்கும் (தற்போது இன்னும் முக்கியமாய் புருசிஸ்டுகளுக்கும்),[40] கிரேட் பிரிட்டனில் சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கும் சுயேச்சைத் தொழிற் கட்சிக்கும்,[41] பெல்ஜியத்தில் புருக்கேருக்கும் வண்டர்வேல்டேக்கும், இத்தாலியில் முழுமையாளர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும்,[42] ருஷ்யாவில் போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும்[43] இடையிலான உறவுநிலை இந்நாடுகள் யாவற்றின் தற்போதைய நிலையில் இருந்துவரும் மிகப் பல்வேறுபட்ட தேசிய நிலைமைகளையும் வரலாற்றுக் கூறுகளையும் மீறி, சாராம்சத்தில் எங்கும் ஒன்றேபோல் இருக்கிறது; சிறிதளவேனும் தகவல் தெரிந்த சிந்தனை ஆற்றல் கொண்ட எந்த சோஷலிஸ்டுக்கும் இது குறித்துக் கடுகளவும் சந்தேகம் இருக்க முடியாது.

உண்மையில் இன்றைய சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தினுள் நிலவும் ''பிரிவினை'' தற்போது உலகின் பல்வேறு நாடுகள் யாவற்றிலும் ஒரேவிதமான வழியில்தான் போய்க்கொண்டிருக்கிறது. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட போக்குகள் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கம் ஒன்றினுள் போராடிக்கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் இன்றைய நிலைமை பிரம்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குச் சான்று பகர்கிறது. லத்தீனிய நாடுகளில் ''புரட்சிகர சிண்டிக்கலிசமாய்''[44] உருவாகியுள்ள அந்த ''இடதுசாரியிலிருந்தான திருத்தல்வாதமும்'' கூடத் தன்னை மார்க்சியத்துக்குத் தகவமைத்து, மார்க்சியத்தைத் ''திருத்தி வருகிறது'': இத்தாலியில் லப்ரியோலாவும் பிரான்சில் லாகர்டேலும் தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலையிலிருந்து சரியாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலைக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சந்தர்ப்பவாதத் திருத்தல்வாதத்தைப் போல அதே அளவுக்கு வளர்ச்சியடையாது இருந்து வரும் இந்தத் திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தை இங்கு நாம் பகுத்தாராய்வதற்கில்லை. இந்தத் திருத்தல்வாதம் இன்னமும் சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு ஆகவில்லை, எந்தவொரு நாட்டிலும் சோஷலிஸ்டுக் கட்சியுடன் இன்னமும் அது எந்தவொரு பெரிய நடைமுறைப் போராட்டத்தின் சோதனையையும் கண்டதில்லை. ஆகவே மேலே சித்தரிக்கப்பட்ட ''வலதுசாரியிலிருந்தான திருத்தல்வாதத்தைப்'' பரிசீலிப்பதுடன் நாம் நிறுத்திக் கொள்கிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாததாய் இருப்பதன் மூலகாரணம் என்ன? தேசியத் தனி இயல்புகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் அளவுகளிலும் இருக்கும் வேறுபாடுகளைக் காட்டிலும் இது ஆழமுடையதாய் இருப்பது ஏன்? ஏனெனில் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்துடன் கூடவே விரிவான குட்டி பூர்ஷுவாப் பகுதியோர், சிறு உடைமையாளர் பகுதியோர் எப்பொழுதுமே இருந்து வருகிறார்கள். முதலாளித்துவம் சிறுவீத உற்பத்தியிலிருந்துதான் தோன்றியது, இடையருது

தோன்றிக்கொண்டும் இருக்கிறது. முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் பல புதிய ''மத்தியதரப் பகுதிகளை'' (ஆலைகளை அண்டிப் பிழைக்கும் தொழிலகங்கள், வீட்டுப் பணித்துறை, சைக்கிள், மோட்டார் தொழில்களைப் போன்ற பெருந் தொழிற்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய நாடெங்கிலும் சிதறிக் கிடக்கும் சிறு தொழிலகங்கள், இன்ன பிற) தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய சிறு உற்பத்தியாளர்கள் இதே போலத் தவிர்க்க முடியாதபடித் திரும்பவும் பாட்டாளி வர்க்க அணிகளுக்குத் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். விரிவான தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் குட்டிபூர்ஷுவா உலகக் கண்ணோட்டம் திரும்பத் திரும்பத் தலைதூக்குவது இயற்கையே. பாட்டாளி வர்க்கப் புரட்சியால் கதி மாற்றங்கள் ஏற்படுகின்ற வரையில் இது இயற்கையே. அதுவரை எப்பொழுதும் இப்படியே தான் நடைபெறும். ஏனெனில் இத்தகைய ஒரு புரட்சியை உண்டாக்க மக்கள் தொகையில் பெருவாரியானோர் ''அறவே'' பாட்டாளி வர்க்கத்தவராக்கப்படுவது அவசியமென நினைப்பது மிகப் பெரும் தவறாகும். இப்பொழுது அடிக்கடி நாம் சித்தாந்தத் துறையில் மட்டும் அனுபவித்து வருகின்றவை, அதாவது மார்க்சுக்குத் தத்துவார்த்தத் திருத்தங்கள் செய்வது குறித்த சர்ச்சைகள்—நடைமுறையில் தற்போது தொழிலாளர் இயக்கத்தின் தனிப்பட்ட துணைப் பிரச்சினைகள் குறித்து மட்டும் திருத்தல்வாதிகளுடனான போர்த்தந்திரக் கருத்து வேறுபாடுகளாகவும் அவற்றின் அடிப்படையிலான பிளவுகளாகவும் தலைதூக்குகின்றவை—பாட்டாளி வர்க்கப் புரட்சியானது சர்ச்சைக்குரிய எல்லாப் பிரச்சினைகளையும் கூர்மையாக்கிவிடும்போதும், வெகுஜனங்களின் நடத்தையை நிர்ணயிப்பதில் மிகுந்த உடனடி முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் பற்றிய எல்லாக் கருத்து வேறுபாடுகளையும் ஒன்றுகுவியச் செய்யும்போதும், மும்முரமான போராட்டத்துக்கிடையில் நண்பர்களிடமிருந்து பகைவர்களை இனங்கண்டு கொள்வதையும் முடிவு கட்டும்படியான விதத்தில் பகைவனுக்கு அடி கொடுக்கும் பொருட்டு மோசமான கூட்டாளிகளை விலக்கித் தள்ளுவதையும் அவசியமாக்கிவிடும் போதும் ஒப்பிட முடியாத மிகப் பெரிய அளவிலே வருங்

காலத்தில் தொழிலாளி வர்க்கம் நிச்சயம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் திருத்தல் வாதத்தை எதிர்த்துப் புரட்சிகர மார்க்சியம் நடத்தும் சித்தாந்தப் போராட்டமானது, குட்டிபூர்ஷுவா அற்பவாதிகளின் எல்லா ஊசலாட்டங்களையும் பலவீனங்களையும் மீறித் தனது இலட்சியத்தின் முழுநிறை வெற்றியை நோக்கி முன்னேறி வீறு நடைபோடும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் புரட்சிப் போர்களின் பீடிகையே ஆகும்.

1908 மார்ச் பிற்பாதியில்—
ஏப்ரல் 3 (16)க்குப்
பிற்படாமல்—எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 17,
பக்கங்கள் 15-26

1908 செப்டம்பர் 25க்கும்
அக்டோபர் 2க்கும் (அக்டோபர்
8க்கும் 15க்கும்) இடையில்
கார்ல் மார்க்ஸ் (1818—1883),
எஸ். பீட்டர்ஸ்பர்க், ஒ, மற்றும் எம்.
கேத்ரவ் பதிப்பகம் என்னும்
திரட்டில் வெளிவந்தது

ஒப்பம்: வி ளா. இ லி யி ன்

■

ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள்

■

1

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்றையத் தொழிலாளர் இயக்கத்தில் போர்த்தந்திரம் குறித்து நிலவும் பிரதான கருத்து வேறுபாடுகள், இந்த இயக்கத்தில் உண்மையில் கோலோச்சும் தத்துவமாகிவிட்ட மார்க்சியத்திலிருந்து பிறழ்வுற்றுச் செல்லும் இரு பெரும் போக்குகளுக்கு எதிரான போராட்டமாய்ச் சாராம்சத்தில் தம்மை வெளிக்காட்டிக் கொள்கின்றன. திருத்தல்வாதமும் (சந்தர்ப்பவாதம், சீர்திருத்தவாதம்) அராஜகவாதமுமே (அராஜக-சிண்டிக்கலிசம், அராஜக-சோஷலிசம்) இவ்விரு போக்குகள். தொழிலாளர் இயக்கத்தில் கோலோச்சுகின்ற மார்க்சியத் தத்துவத்திலிருந்தும் மார்க்சியப் போர்த்தந்திரத்திலிருந்தும் பிறழும் இவ்விரு போக்குகளும் நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் வெகுஜனத் தொழிலாளர் இயக்கத்தின் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றில் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சாயல்களிலும் காணப்பட்டவை.

இந்த ஓர் உண்மையே போதும், இந்தப் பிறழ்வுகள் தற்செயலானவை என்றோ, தனிநபர்கள் அல்லது கோஷ்டிகள் புரிந்த தவறுகளால் தோன்றியவை என்றோ, ஏன் தேசியத் தனி இயல்புகள், மரபுகளின் விளைவாய் ஏற்பட்டவை என்றோ, இன்ன பலவாறோ கூறமுடியாதென்பதைத் தெளிவுபடுத்த. ஓயாமல் இந்தப் பிறழ்வுகள் தோன்றுவதற்குப் பொருளாதார அமைப்பிலும் முதலாளித்துவ நாடுகள் யாவற்றினுடைய வளர்ச்சியின் தன்மையிலும் ஆழமான வேர்களைக் கொண்ட காரணங்கள் இருத்தல் வேண்டும். டச்சு மார்க்சியவாதியான அன்தோன் பேனக்கக் சென்ற ஆண்டில் வெளியிட்ட தொழிலாளர் இயக்கத்தில் போர்த்தந்திரம் குறித்த கருத்து வேறுபாடுகள் *(Die taktischen Differenzen*

in der Arbeiterbewegung, Hamburg, Erdmann Dubber, 1909) என்னும் சிறு புத்தகம் இந்தக் காரணங்களை விஞ்ஞான வழியில் ஆராயும் சுவையான ஒரு முயற்சியாகும். பேனக்கக்கின் முடிவுகள் முற்றிலும் சரியென அங்கீகரிக்கப்பட வேண்டியவை. இந்த முடிவுகளை எமது விளக்கத்தில் வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியே போர்த்தந்திரம்குறித்து அவ்வப்பொழுது கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்குரிய மிக ஆழமான காரணங்களில் ஒன்றாகும். இந்த இயக்கத்தை ஏதோ கற்பனை வடிவிலுள்ள ஓர் இலட்சியத்தைக் கொண்டு அளந்திட முற்படாது, சாதாரண மக்களது நடைமுறை இயக்கமாய்க் கருதுவோமாயின், மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் புதுப்புதுப் ''படையாட்கள்'' சேர்க்கப்படுவதைத் தொடர்ந்து, உழைப்பாளி மக்களின் புதிய பகுதிகள் ஈர்க்கப்படுவதைத் தொடர்ந்து தத்துவத் துறையிலும் போர்த்தந்திரத் துறையிலும் ஊசலாட்டங்களும், பழைய தவறுகள் திரும்பவும் எழுதலும், காலத்துக்கு ஒவ்வாதனவாகிவிட்ட பழைய கருத்துக்களும் பழைய வழிமுறைகளும் தற்காலிகமாய்த் திரும்பவும் தலைதூக்குவதும், இன்ன பிறவும் தவிர்க்க முடியாதபடி ஏற்படவே செய்யும் என்பது தெளிவு. ஒவ்வொரு நாட்டின் தொழிலாளர் இயக்கமும் புதிதாய்ச் சேர்ந்த படையாட்களுக்கு அவ்வப்பொழுது ''பயிற்சியளிப்பதில்'' வெவ்வேறு அளவுக்கு முயற்சியும் கருத்தும் காலமும் செலவிடுகிறது.

தவிரவும் வெவ்வேறு நாடுகளிலும் தேசப் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிலும் முதலாளித்துவம் வெவ்வேறு வேகங்களில் வளர்கிறது. எங்கே பெருவீதத் தொழில்துறை மிக அதிகமாய் வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அங்கே தொழிலாளி வர்க்கத்தாரும் தொழிலாளி வர்க்கச் சித்தாந்தவாதிகளும் மார்க்சியத்தை மிகச் சுலபமாகவும் விரைவாகவும் முழுமையாகவும் நிரந்தரமாகவும் கிரகித்துக் கொள்கிறார்கள். பிற்பட்ட அல்லது வளர்ச்சியில் பின்தங்கிய பொருளாதார உறவுகளானவை, மார்க்சியத்தின் குறிப்பிட்ட சில கூறுகளை மட்டுமே, புதிய உலகக் கண்ணோட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே, அல்லது தனிப்பட்ட சில

கோஷங்களையும் கோரிக்கைகளையும் மட்டுமே கிரகித்துக் கொண்டு, பொதுவாய் முதலாளித்துவ உலகக் கண்ணோட் டத்தின், குறிப்பாய் முதலாளித்துவ-ஜனநாயக உலகக் கண் ணோட்டத்தின் எல்லா மரபுகளிலிருந்தும் உறுதியாய் முறித்துக் கொள்ள முடியாதவர்களான தொழிலாளர் இயக்க ஆதரவாளர்கள் தோன்றுவதற்கு இடையறாது வழி வகுக்கின்றன.

மேலும், சமுதாய வளர்ச்சியின் இயக்கவியல் தன்மையா னது கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் ஒரு நிரந்தர ஆதாரமாகும். சமுதாய வளர்ச்சியானது முரண்பாடுகளி லும் முரண்பாடுகள் வாயிலாகவும் நடந்தேறுகிறது. முத லாளித்துவம் பழைய உற்பத்தி முறைகளை அழித்திடுவதா லும் உற்பத்தி சக்திகளை வளர்த்திடுவதாலும் அது முற்போக் கானது; ஆயினும் அதேபோதில் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்ததும் அது உற்பத்தி சக்திகளின் வளர்ச் சிக்குத் தடையாகிவிடுகிறது. அது தொழிலாளர்களை வளரச் செய்கிறது, ஒழுங்கமைத்திடுகிறது, கட்டுப்பாடுடையோர் ஆக்குகிறது; அதேபோதில் அது நசுக்குகிறது, ஒடுக்குகிறது, சீரழிவுக்கும் வறுமைக்கும் இன்ன பிறவற்றுக்கும் இட்டுச் செல்கிறது. முதலாளித்துவம் தனக்குச் சவக்குழி தோண்டு கிறவனையும் படைத்துக் கொள்கிறது, புதிய அமைப்பின் கூறுகளை அதுவே தோற்றுவிக்கிறது, ஆயினும் அதேபோதில் ''பாய்ச்சல்'' இன்றி இந்தத் தனிப்பட்ட கூறுகள் பொது நில வரங்களில் எந்த மாற்றத்தையும் உண்டாக்குவதில்லை, மூல தனத்தின் ஆதிக்கத்தை அவை பாதிப்பதில்லை. மார்க்சியத் தால்தான், இயக்கவியல் பொருள்முதல்வாதத் தத்துவத் தால்தான், உயிருள்ள எதார்த்தத்தின், முதலாளித்துவத் தின் உயிருள்ள வரலாற்றின் இந்த முரண்பாடுகளையும் தொழி லாளி வர்க்க இயக்கத்தையும் உள்ளடக்கிக் கொள்ள முடி கிறது. ஆனால் வெகுஜனங்கள் வாழ்க்கையின் வாயிலாகவே கற்றறிகின்றனர், புத்தகங்களின் வாயிலாய் அல்ல என்ப தைக் கூறத் தேவையில்லை. ஆகவே சில தனிநபர்கள் அல்லது கோஷ்டியினர் முதலாளித்துவ வளர்ச்சியின் இயல்புகளில் இப்பொழுது ஒன்றையும் பிறகு வேறொன்றையுமாய், இந்த வளர்ச்சியின் ''படிப்பினைகளில்'' இப்பொழுது ஒன்றையும்

பிறகு வேறொன்றையுமாய் எடுத்து மிகைப்படுத்திக் கூறி ஒரு தலைப்பட்சமான தத்துவமாய், ஒருதலைப்பட்சமான போர்த் தந்திர அமைப்புமுறையாய் வகுத்த வண்ணமுள்ளனர்.

முதலாளித்துவ சித்தாந்தவாதிகளும் மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளாமல், தற்காலத் தொழிலாளர் இயக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் குருட்டுத் தனமான ஒரு கடைகோடி நிலையிலிருந்து இன்னொன்றுக்குத் தாவிய வண்ணமுள்ளனர். ஒரு நேரம் அவர்கள் தீய எண்ணங் கொண்ட ஆட்கள் ஒரு வர்க்கத்துக்கு எதிராய் இன்னொன்றைத் ''துண்டிவிடுவதாய்ச்'' சொல்லி யாவற்றுக்கும் விளக்கம் கூறப் பார்க்கிறார்கள்; வேறொரு நேரம் தொழிலாளர் கட்சி ''சமாதான வழிப்பட்ட சீர்திருத்தக் கட்சியே'' என்கிற கருத்தைக் கொண்டு தமக்குத் தாமே ஆறுதல் கூறிக் கொள்கிறார்கள். அராஜக-சிண்டிக்கலிசம், சீர்திருத்தவாதம் ஆகிய இவை இரண்டையும் இந்த முதலாளித்துவ வர்க்கத்துக்குரிய உலகக் கண்ணோட்டத்தாலும் அதற்குள்ள செல்வாக்கினாலும் தோன்றும் நேரடி விளைவாகவே கருத வேண்டும். தொழிலாளர் இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை அவை பற்றிக் கொள்கின்றன; ஒருதலைப்பட்சத்தை ஒரு தத்துவமாய் உயர்த்தி வைக்கின்றன; இந்த இயக்கத்தின் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குரிய, தொழிலாளி வர்க்கச் செயற்பாட்டின் குறிப்பிட்ட நிலைமைகளுக்குரிய பிரத்தியேகத் தனிப்பண்புகளான போக்குகள் அல்லது இயல்புகளை ஒன்றையொன்று விலக்கிவிடும் தன்மை கொண்டவையாய் அறிவிக்கின்றன. ஆனால் இயற்கையில் வாழ்க்கையும் வளர்ச்சியும் எப்படி மெதுவான பரிணாமமும் விரைவான பாய்ச்சல்களும், தொடர்ச்சியில் முறிவுகளும் அடங்கியனவாய் இருக்கின்றனவோ அதே போல மெய்யான வாழ்க்கை, மெய்யான வரலாறு வெவ்வேறான இந்தப் போக்குகள் **உள்ளடங்கியதாய்** இருக்கிறது.

''பாய்ச்சல்களையும்'', தொழிலாளி வர்க்க இயக்கம் கோட்பாட்டு வழியில் பழைய சமுதாயம் அனைத்துக்கும் பகைமையாய் இருப்பதையும் பற்றிய எல்லா வாதங்களையும் திருத்தல்வாதிகள் வெறும் வாய்வீச்சாய்க் கருதுகிறார்கள். சீர்திருத்தங்களை அவர்கள் சோஷலிசத்தின் பகுதியளவு

நிறைவேற்றமாய்க் கருதுகிறுர்கள். அராஜக-சிண்டிக்க லிஸ்டுகள் ''அற்பப் பணியை'', குறிப்பாய்ப் பாராளுமன்ற மேடையைப் பயன்படுத்திக்கொள்வதை நிராகரிக்கின்றனர். பின்கூறிய போர்த்தந்திரம் நடைமுறையில் பார்க்கையில், ''மகத்தான நாட்கள்'' வருமெனக் கைகட்டிக் காத்திருப் பதும், மாபெரும் நிகழ்ச்சிகளைப் படைக்கும் சக்திகளைத் திரட்டும் திறனற்றிருப்பதுமே ஆகும். இரு வகையினரும் எது மிகவும் முக்கியமானதோ, அவசரமானதோ அது நடை பெறுவதற்கு—அதாவது வர்க்கப் போராட்ட உணர்வு படைத்து தமது நோக்கங்களைத் தெளிவாய் உணர்ந்து மெய் யான மார்க்சிய உலகக் கண்ணேட்டத்தில் போதமும் பயிற்சி யும் பெற்றவையும் எல்லா நிலைமைகளிலும் செவ்வனே இயங்கவல்லவையுமான, சக்தி மிக்கப் பெரிய நன்கு செயல் படும் நிறுவனங்களில் தொழிலாளர்கள் ஒன்றுசேர்க்கப்படு வதற்கு—தடையாகிவிடுகின்றனர்.

இங்கு சிறிது விலகிச் சென்று இடைக்குறிப்பாய் ஒன்றைக் கூற விரும்புகிறோம். தவருன எண்ணங்கள் தோன்றும் சாத்தி யப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு இதைக் குறிப்பிடு கிறோம். பேனக்கக் ருஷ்யாவைச் சிறிதளவும் குறிக்காமலே முழுக்க முழுக்க மேற்கு ஐரோப்பிய வரலாற்றிலிருந்து மட் டுமே, குறிப்பாய் ஜெர்மனி, பிரான்ஸ் இவற்றின் வரலாற்றி லிருந்து மட்டுமே எடுக்கப்பட்ட உதாரணங்களைக் கொண்டு தமது பகுத்தாய்வினை விவரிக்கிறுர். சிற்சில இடங்களில் அவர் ருஷ்யாவைக் குறிப்பதாய்த் தோன்றுகிறதெனில், அதற்குக் காரணம் கலாசாரத்திலும் வாழ்க்கை முறை யிலும் வரலாற்று வளர்ச்சியிலும் பொருளாதார வளர்ச்சி யிலும் ருஷ்யாவுக்கும் மேலைய நாடுகளுக்குமிடையே இருக்கும் மிகுந்த வேறுபாட்டையும் மீறி, நமது நாட்டிலுங்கூட மார்க் சியப் போர்த்தந்திரத்திலிருந்து திட்டவட்டமான பிறழ்வு களைத் தோற்றுவிக்கும் அடிப்படைப் போக்குகள் காணப்படு வதுதான்.

இறுதியாக, தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொள் வோரிடையே கருத்து வேறுபாடுகள் எழ மிகவும் முக்கிய மான ஒரு காரணம் பொதுவாய் ஆளும் வர்க்கங்களும், குறிப் பாய் முதலாளித்துவ வர்க்கமும் அனுசரிக்கும் போர்த்

தந்திரத்தில் ஏற்படும் மாறுதல்களில் அடங்கியுள்ளது. முதலாளித்துவ வர்க்கத்தின் போர்த்தந்திரம் மாறுபாடின்றி எப்பொழுதும் ஒரே மாதிரியாய் இருக்குமாயின், அல்லது குறைந்தது ஒரே வகைப்பட்டதாகவாவது இருக்குமாயின், தொழிலாளி வர்க்கம் அதே போல ஒரே மாதிரியான அல்லது ஒரே வகைப்பட்ட போர்த்தந்திரத்தைக் கொண்டு அதற்குப் பதிலளிக்க விரைவில் கற்றுக் கொண்டுவிடலாம். ஆனால் உண்மையில் நடப்பதென்னவெனில், ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி செலுத்துவதற்குத் தவிர்க்க முடியாத வகையில் இரு வகை முறைகளை, தனது நலன்களுக்காகப் போராடுவதற்கும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் இரு வழிமுறைகளை வகுத்துக் கொள்கிறது. இவ்விரு முறைகளும் சில நேரங்களில் ஒன்றன்பின் ஒன்றாகவும், சில நேரங்களில் பல்வேறு சேர்மானங்களில் இணைந்து கலந்தும் கையாளப்படுகின்றன. முதலாவது முறை பலாத்கார முறை, தொழிலாளர் இயக்கத்துக்கு எவ்வகையிலும் விட்டுக்கொடுக்க மறுக்கும் முறை, காலாவதியாகிவிட்ட பழைய ஏற்பாடுகள் யாவற்றையும் ஆதரித்து நிற்கும் முறை, சமரசத்துக்கு இடமின்றி சீர்திருத்தங்களை நிராகரிக்கும் முறை. பழமை பேணும் கான்சர்வேட்டிவ் கொள்கை இத்தன்மையதே; இது மேற்கு ஐரோப்பாவில் நிலமுடைத்த வர்க்கங்களுடைய கொள்கையாய் இருக்கும் நிலை மேலும் மேலும் குறைந்து, பொதுவில் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய கொள்கையின் பல ரகங்களில் ஒன்றாய் மேலும் மேலும் மாறி வருகிறது. இரண்டாவது முறை ''மிதவாதத்தின்'' முறை, அரசியல் உரிமைகளின் வளர்ச்சியை நோக்கி, சீர்திருத்தங்களையும் விட்டுக்கொடுத்தலையும் இன்ன பிறவற்றையும் நோக்கி நடவடிக்கைகள் எடுத்துச் செல்லும் முறை.

முதலாளித்துவ வர்க்கம் ஒரு முறையிலிருந்து மற்றொன்றுக்கு மாறிச் செல்வது தனிநபர்களின் கெட்ட எண்ணத்தின் காரணத்தாலோ, தற்செயலாகவோ ஏற்படுவதல்ல; முதலாளித்துவ வர்க்கத்தின் நிலை அடிப்படையிலேயே முரண்பாடான தன்மை கொண்டிருப்பதால் ஏற்படுவதாகும். முறையான முதலாளித்துவச் சமுதாயம் உறுதியாய் நாட்டப் பெற்ற பிரதிநிதித்துவ அமைப்பின்றி, நாட்டு மக்களுக்குக்

குறிப்பிட்ட சில அரசியல் உரிமைகளின்றி—இம்மக்கள் ஒப்பளவில் உயர்வான "கலாசாரத்" தேவைகளுக்குரிய சிறப்புடைத்திருக்க வேண்டியதாகிவிடுகிறது—வெற்றிகரமாய் வளர முடியாது. குறிப்பிட்ட குறைந்தபட்ச கலாசாரத்துக்கான இந்தத் தேவைகள், உயர்ந்த தொழில்நுட்பமும் சிக்கலும் நெகிழ்வும் சலனமும் உலகு தழுவிய போட்டியின் விரைவான வளர்ச்சியும் இன்ன பிறவும் கொண்ட முதலாளித்துவ உற்பத்தி முறையின் நிலைமைகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. இவற்றின் விளைவாய் முதலாளித்துவ வர்க்கத்தின் போர்த்தந்திரத்தில் ஊசலாட்டங்கள், பலாத்கார வழிமுறைகளிலிருந்து தோற்ற அளவிலான சலுகைகள் வழங்கும் வழிமுறைகளுக்குச் செல்வதற்கான மாறுதல்கள், கடந்த அரை நூற்றாண்டில் எல்லா ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றுக்குமுரிய குண விசேஷமாய் இருந்துள்ளன. வெவ்வேறு நாடுகளும் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பிரதனமாய் வளர்த்து வந்திருக்கின்றன. உதாரணமாய், பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் பிரிட்டன் "மிதவாத" முதலாளித்துவக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தது, எழுபதாம், எண்பதாம் ஆண்டுகளில் ஜெர்மனி பலாத்கார வழிமுறையை அனுசரித்தது.

ஜெர்மனியில் இந்த வழிமுறை அனுசரிக்கப்பட்ட காலத்தில், இந்தக் குறிப்பிட்ட முதலாளித்துவ அரசாங்க வழிமுறையின் ஒருதலைப்பட்சமான எதிரொலியாய்த் தொழிலாளர் இயக்கத்தில் அராஜக-சிண்டிக்கலிசம் அல்லது அன்று அது அழைக்கப்பட்டது போல அராஜகவாதம் வளர்ந்தது (தொண்ணூறும் ஆண்டுகளின் தொடக்கத்தில் "இளைஞர்கள்",[45] எண்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் யோஹன் மொஸ்ட்). 1890ல் "சலுகைகள்" வழங்குவதற்குரிய மாற்றம் ஏற்பட்டபோது, எப்பொழுதும் நேர்வதைப் போலவே இந்த மாற்றம் தொழிலாளர் இயக்கத்துக்கு இன்னுங்கூட அதிக அபாயம் விளைவிப்பதாகி, முதலாளித்துவச் "சீர்திருத்தவாதத்தின்" அதே அளவு ஒருதலைப்பட்சமான எதிரொலியான சந்தர்ப்பவாதத்தைத் தொழிலாளர் இயக்கத்தில் தோன்றச் செய்தது. "தொழிலாளர்களைத் தவறான பாதை

யில் போக வைப்பதும், அவர்களுடைய அணிகளில் பிளவை உண்டாக்குவதும், திராணியற்ற, எப்பொழுதுமே திராணியற்றதும் அநித்தியமானதுமான, போலிச் சீர்திருத்தவாதத்தின் திராணியற்ற வாலாய்த் தொழிலாளர்களுடைய கொள்கையை மாற்றுவதும்தான் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய மிதவாதக் கொள்கையின் நேரான உண்மை நோக்கம்'' என்று பேனக்கக் கூறுகிறார்.

ஒரு சில காலத்துக்கு முதலாளித்துவ வர்க்கம் ''மிதவாதக்'' கொள்கை மூலம் பல சந்தர்ப்பங்களில் தனது குறிக்கோளை அடைகிறது. பேனக்கக் நியாயமாகவே குறிப்பிடுவது போல இந்தக் கொள்கை ''மேலும் சூழ்ச்சியான'' கொள்கையாகும். தொழிலாளர்களில் ஒரு பகுதியோரும் அவர்களுடைய பிரதிநிதிகளில் ஒரு பகுதியோரும் தோற்ற அளவிலான சலுகைகளால் சில சமயங்களில் தாம் ஏமாற்றப்படுவதற்கு இடமளித்துவிடுகிறார்கள். திருத்தல்வாதிகள் வர்க்கப் போராட்டத் தத்துவம் காலத்துக்கு ஒவ்வாதபடி ''பழைமையதாகிவிட்டது'' என்கிறார்கள், அல்லது உண்மையில் வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்கும் ஒரு கொள்கையை அனுசரிக்கத் தொடங்குகின்றனர். முதலாளித்துவப் போர்த்தந்திரத்தின் கோணல்கள் தொழிலாளர் இயக்கத்தில் திருத்தல் வாதத்தைப் பலப்படுத்துகின்றன; தொழிலாளர் இயக்கத்தில் இருக்கும் கருத்து வேறுபாடுகளைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே பிளவு உண்டாகிவிடும் அளவுக்குக் கடுமையாக்கிவிடுகின்றன.

மேலே சுட்டிக்காட்டப்பெற்ற எல்லாக் காரணங்களும் தொழிலாளர் இயக்கத்தினுள்ளும் பாட்டாளி வர்க்க அணிகளினுள்ளும் போர்த்தந்திரம் குறித்துக் கருத்து வேறுபாடுகளை எழச் செய்கின்றன. ஆனல் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளும் அடங்கலாய் அதனுடன் தொடர்பு கொண்ட குட்டிபூர்ஷுவாப் பிரிவுகளுக்குமிடையே பிரிவினைச் சுவர் இருக்கவில்லை, இருக்கவும் முடியாது. குட்டிபூர்ஷுவாக்களில் குறிப்பிட்ட சில தனியாட்களும் கோஷ்டிகளும் பிரிவுகளும் பாட்டாளி வர்க்க அணிகளுக்கு வந்து சேர்வதன் விளைவாய்ப் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரத்தில் ஊசலாட்டங்கள் ஏற்படவே செய்யும் என்பது தெளிவு.

பல்வேறு நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தின் அனுபவம் ஸ்தூலமான நடைமுறைப் பிரச்சினைகளின் அடிப்படையில் மார்க்சியப் போர்த்தந்திரத்தின் தன்மையை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது; இளம் நாடுகள் மார்க்சியத்திலிருந்து விலகிச்செல்லும் பிறழ்வுகளின் மெய்யான வர்க்க உட்பொருளை மேலும் தெளிவாய் இனங்கண்டு கொள்ளவும், இந்தப் பிறழ்வுகளை மேலும் வெற்றிகரமாய் எதிர்த்துப் போராடவும் அவற்றுக்குத் துணை புரிகிறது.

ஸ்வெஸ்தா, இதழ் 1ல்,
1910 டிசம்பர் 16ல்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 20,
பக்கங்கள் 62-69

ஒப்பம்: வி. இலியின்

ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சீர்திருத்தவாதம்

கடந்த சில பத்தாண்டுகளில் முதலாளித்துவம் அடைந்திருக்கும் பிரமாதமான முன்னேற்றமும் நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்க இயக்கம் கண்டிருக்கும் விரைவான வளர்ச்சியும் பாட்டாளி வர்க்கத்தின்பால் முதலாளித்துவ வர்க்கத்துக்குள்ள போக்கினில் மிகப் பெரிய மாறுதலை உண்டாக்கியுள்ளன. சோஷலிசத்தின் அடிப்படைக் கோட்பாட்டுகளை எதிர்த்தும் தனியார் சொத்துடைமையின் பூரணக் காப்புரிமையையும் தடையில்லாப் போட்டியையும் பாதுகாத்தும் பகிரங்கமான, கோட்பாடு அடிப்படையிலான, நேரடிப் போராட்டம் நடத்துவதற்குப் பதிலாய், ஐரோப்பிய, அமெரிக்க முதலாளித்துவவர்க்கத்தார் தமது சித்தாந்தவாதிகளையும் அரசியல் தலைவர்களையும் பிரதிநிதிகளாய்க் கொண்டு, சமுதாயப் புரட்சி எனும் கருத்துக்கு எதிராய் சமுதாயச் சீர்திருத்தங்கள் எனப்படுவதை மேலும் மேலும் கூடுதலாய்ப் பாதுகாக்க முற்படுகிறார்கள். சோஷலிசத்துக்கு எதிராய் மிதவாதம் என்பதல்ல, சோஷலிசப் புரட்சிக்கு எதிராய்ச் சீர்திருத்தவாதம் என்பதே தற்காலத்திய, ''முன்னேறிய'', கற்றறிந்த முதலாளித்துவ வர்க்கத்தாரின் சூத்திரம். புரட்சிக்கு எதிராய்ச் சீர்திருத்தங்கள், முதலாளித்துவ வர்க்கத்தாரின் ஆட்சியைப் புரட்சி மூலம் வீழ்த்திடுவதற்கு எதிராய்த் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதையும் பலவீனமாக்குவதையும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியைக் கட்டிக் காப்பதையும் நோக்கமாய்க் கொண்டு, அழிவை நெருங்கிவிட்ட இந்த ஆட்சிக்கு அரைகுறை ஒட்டுப் போடுதல்—இந்த ''மிக நவீன'' முதலாளித்துவக் கோஷம், குறிப்பிட்ட ஒரு நாட்டில் முதலாளித்துவ வளர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு உயர்நிலை அடைந்துள்ளதோ, முதலாளித்துவ வர்க்கத்தின்

ஆட்சி எவ்வளவுக்கு எவ்வளவு கலப்பற்றதாயும் அரசியல் சுதந்திரம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாயும் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக விரிவாய் அனுசரிக்கப்படுகிறது.

உலகளாவிய சோஷலிச வளர்ச்சியின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் இந்தமாறுதல் மிகப்பெரிய ஒரு முன்னேற்றமாகவே கருதப்பட வேண்டும். சோஷலிசம் ஆரம்பத்தில் அதன் வாழ்வுக்காகப் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. முதலாளித்துவ வர்க்கம் தனது பலத்தில் முழு நம்பிக்கை கொண்டு சோஷலிசத்தை எதிர்த்திட்டது, ஒருமித்த பொருளாதார, அரசியல் கருத்தமைப்பான மிதவாதத்தைத் துணிவுடனும் முரணின்றியும் ஆதரித்துச் செயல்பட்டது. சோஷலிசம் பெரும் சக்தியாய் வளர்ந்துவிட்டது, நாகரிக உலகம் அனைத்திலும் ஏற்கனவே அது தனது வாழ்வுரிமையைப் பாதுகாத்து நிலைநாட்டிக் கொண்டுவிட்டது. இப்பொழுது ஆட்சியதிகாரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. சிதைந்து வரும் முதலாளித்துவ வர்க்கம், தனது அழிவு தவிர்க்க முடியாததென்பதை உணர்ந்து வரும் முதலாளித்துவம், தனது அழிவு நாளை ஒத்திப் போடவும் அரைகுறையான பகட்டான சலுகைகள் அளித்து விட்டுக்கொடுப்பதன் மூலம் தனது ஆட்சியை இந்தப் புதிய நிலைமைகளிலும் கட்டிக்காத்துக் கொள்ளவும் முழு முயற்சி செய்து வருகிறது.

தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உள்ளே புரட்சிகர சமூக-ஜனநாயகத்துக்கு எதிராய்ச் சீர்திருத்தவாதத்தின் போராட்டம் கடுமையடைந்திருப்பதானது நாகரிக உலகெங்கணும் பொருளாதார, அரசியல் சூழ்நிலை அனைத்திலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களின் சிறிதும் தவிர்க்கவொண்ணாத விளைவே ஆகும். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியானது இயல்பாகவே இவ்வியக்கத்தின் அணிகளுக்குக் குட்டிபூர்ஷுவாப் பகுதியோரில் ஒரு தொகையினரை ஈர்த்துக் கொள்கிறது. இவர்கள் முதலாளித்துவச் சித்தாந்தத்தால் மயக்குண்டுவிடுகிறவர்கள்; அந்தச் சித்தாந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வது இவர்களுக்குக் கடினமாகி, ஓயாமல் திரும்பத் திரும்ப அதற்குள் சரிந்துவிடுகிறார்கள். இந்தப்

போராட்டம் இல்லாமலே, இந்தப் புரட்சிக்கு முன்பே கோட்பாட்டுப் பிரச்சினைகளில் சோஷலிஸ்டு மலைக்கும் சோஷலிஸ்டு ழிரொந்தாவுக்கும்[46] தெளிவான பாகுபாடு ஏற்படாமலே, இந்தப் புரட்சியின்போது புதிய வரலாற்று சக்தியின் சந்தர்ப்பவாத, குட்டிபூர்ஷுவாப் பகுதிகளுக்கும் பாட்டாளி வர்க்க, புரட்சிகரப் பகுதிகளுக்கும் முழுமையான முறிவு உண்டாகாமலே பாட்டாளி வர்க்கத்தின் சமுதாயப் புரட்சி சாத்தியமென நினைக்கவே முடியாது.

ருஷ்யாவிலும் நிலைமை அடிப்படையில் இவ்வாறே உள்ளது. ஆனால் விவகாரங்கள் இங்கு மேலும் சிக்கலாகவும் தெளிவின்றியும் திரிபுற்றும் இருக்கின்றன. ஏனெனில் நாம் ஐரோப்பாவைவிட (ஏன், ஆசியாவின் முன்னேறிய பகுதியையும்விட) பின்னிலையிலே இருக்கிறோம், முதலாளித்துவப் புரட்சிகளின் சகாப்தத்தைத்தான் இன்னமும் நாம் கடந்து கொண்டிருக்கிறோம். இதன் விளைவாய் ருஷ்யச் சீர்திருத்தவாதம் அதன் விசேஷ பிடிவாதத்தன்மையால் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது; மேலும் கொடிய பிணியாகிவிடுகிறது எனலாம். பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கு, புரட்சி இலட்சியத்துக்கு இது இன்னும் அதிக தீமை பயப்பதாகிவிடுகிறது. நமது நாட்டில் சீர்திருத்தவாதம் இரண்டு தோற்றுவாய்களிலிருந்து ஏககாலத்தில் வெளித் தோன்றுகிறது. முதலாவதாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ருஷ்யா மிக அதிக அளவுக்குக் குட்டிபூர்ஷுவா நாடு. ஆகவே நமது நாடு இன்னும் அடிக்கடி சோஷலிசத்தின்பால் முரண்பாடான, நிலையில்லாத, ஊசலாட்ட மனப்பாங்கால் ("ஆர்வமிக்க வேட்கைக்கும்" இழிவான துரோகத்துக்கும் தாவிக் கொண்டிருக்கும் மனப்பாங்கால்)—பொதுவில் குட்டிபூர்ஷுவாக்களின் குணவிசேஷமான மனப்பாங்கு இது—வேறுபடுத்திக் காட்டப்படும் தனியாட்களையும் கோஷ்டிகளையும் போக்குகளையும் தோற்றுவிக்கிறது. இரண்டாவதாக, நமது நாட்டில் குட்டிபூர்ஷுவா வெகுஜனங்கள் நமது முதலாளித்துவப் புரட்சியின் ஏதேனும் ஒரு கட்டம் தோல்வியுறுகையில் மன உறுதி குலைந்து துரோகமிழைத்திடும் மனநிலையால் அதிக அளவு பீடிக்கப்படுவோராய் இருக்கின்றனர்; மத்திய கால நிலைமைகள், பண்ணையடிமை அமைப்பு இவற்றின் எல்லா

மீதமிச்சங்களிலிருந்தும் ருஷ்யாவைப் பூரணமாய் விடுவிக்கக் கூடிய முழுநிறைவான ஜனநாயகப் புரட்சியெனும் நோக்கத்தை அவர்கள் மிகச் சுலபமாய்க் கைவிட்டுவிட முடிகிறது.

முதலாவது தோற்றுவாய் குறித்து நாம் அதிகம் கூற வேண்டியதில்லை. நமது ஸ்துரூவேக்களும் இஸ்கோயெவ்களும் கரவூலவ்களும் இத்தியாதி வகையோரும் செய்தது போல சோஷலிச அனுதாப நிலையிலிருந்து எதிர்ப்புரட்சி மிதவாத அனுதாப நிலைக்கு இவ்வளவு சடுதியில் தாவியோடியதை உலகில் வேறு எந்த நாட்டிலும் காண்பது அரிது என்பதை மட்டும் குறிப்பிட்டால் போதும். இந்தக் கனவான்கள் விதிவிலக்கானவர்களல்ல, தனிப்பட்ட தனியாட்களல்ல, மாறுப் பரவலான போக்குகளின் பிரதிநிதிகள்! உணர்ச்சிப் பசப்பாளர்கள் — சமூக-ஜனநாயக இயக்க அணிகளுக்கு வெளியே நிறைய இருப்பதோடு இவ்வணிகளிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர் — ''அளவு கடந்த'' வாக்குவாதத்தையும், ''பிரிவினைக் கோடுகளிட்டுப் பாகுபாடு செய்வதில் உணர்ச்சித் துடிப்பையும்'' இன்ன பிறவற்றையும் எதிர்த்து உபதேசம் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ள இவர்கள், சோஷலிசத்திலிருந்து மிதவாதத்துக்குத் தாவியோடுவதில் ''அளவு மீறிய'' ''ஆர்வத்தை'' ருஷ்யாவில் தோற்றுவிக்கும் வரலாற்று நிலைமைகளைத் தாம் கிஞ்சிற்றும் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

ருஷ்யாவில் சீர்திருத்தவாதத்தின் இரண்டாவது தோற்றுவாய்க்கு வருவோம்.

நமது நாட்டில் முதலாளித்துவப் புரட்சி பூர்த்தி செய்யப்பட்டாகவில்லை. அந்தப் புரட்சி விட்டுவைத்துள்ளவையும் பொருளாதார வளர்ச்சியின் எதார்த்தப் போக்கு அனைத்தாலும் சுமத்தப்பட்டவையுமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் புது வழிகளைத் தேடிப்பிடிக்க எதேச்சாதிகாரம் முயன்று கொண்டிருக்கிறது ஆனால் இவற்றுக்குத் தீர்வு காண அதனால் முடியவில்லை. பழைய ஜார் ஆட்சி அமைப்பைப் புத்துரு பூண்ட முதலாளித்துவ முடியாட்சியாய் மாற்றிடுவதற்கான புதிய முயற்சியாயினும் சரி, பிரபுக் குலத்தோர், முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் தட்டினர் இவர்களது தேச

அளவிலான ஒழுங்கமைப்பாயினும் சரி (மூன்றாவது டூமா[47]), கிராமப்புற மேலதிகாரிகளால்[48] செயல்படுத்தப்பட்டு வரும் முதலாளித்துவ நிலக் கொள்கையே ஆயினும் சரி—இந்த ''தீவிர'' நடவடிக்கைகளில் எதுவும், ஜாரிசம் தனக்கு எஞ்சியிருக்கும் கடைசி செயல் துறையான முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தகவமைத்துக் கொள்ளும் இத்துறையில் மேற்கொள்ளும் இந்த ''மிக நவீன'' முயற்சிகளில் எதுவும் போதுமானதாயில்லை. எதுவும் பயன் தருவதாயில்லை! இத்தகைய வழிகளில் ''புத்துரு அளிக்கப்பட்ட'' ருஷ்யா ஜப்பானை எட்டிப்பிடிக்க முடியவில்லை என்பதோடு, சீனாவுக்குப் பின் தங்கத் தொடங்குவது போலக்கூடத் தெரிகிறது. முதலாளித்துவ-ஜனநாயகப் பணிகள் நிறைவேற்றப்படாமலே விட்டு வைக்கப்பட்டிருப்பதால், புரட்சிகர நெருக்கடி இன்னமும் தவிர்க்க முடியாத ஒன்றாயிருக்கிறது. மீண்டும் அது முற்றி வருகிறது, ஒரு புதிய வழியில் திரும்பவும் நாம் அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். முன்பு போல அதே வழியிலல்ல, அதே வேகத்திலல்ல, பழைய வடிவங்களில் மட்டுமல்ல—என்றாலும் நாம் அதை நோக்கிச் சென்று கொண்டிருப்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை.

இந்தச் சூழ்நிலையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் முன் எழும் கடமைகள் சந்தேகத்துக்கு இடமின்றி முற்றிலும் திட்டவட்டமானவை. தற்கால சமுதாயத்தின் முரணற்ற புரட்சிகரமான ஒரே வர்க்கமானதால் அதுதான் முழுநிறைவான ஜனநாயகப் புரட்சிக்கான அனைத்து மக்கள் போராட்டத்திற்கு, உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள் அனைவரும் ஒடுக்குவோரையும் சுரண்டுவோரையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் என்னும் கருத்தை எந்த அளவுக்கு உணர்ந்து அதனைச் செயல்படுத்துகிறதோ அந்த அளவுக்குத்தான் பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமானது. இந்தக் கடமையை உணரும் பாட்டாளி அடிமை முறையை எதிர்த்துக் கலகம் புரிந்தெழுந்துவிட்ட அடிமையாவான். தமது வர்க்கம் தலைவனாய் இருக்க வேண்டுமென்ற கருத்தை உணராத அல்லது இக்கருத்தை நிராகரிக்கும் பாட்டாளி தனது அடிமை நிலையை உணராத அடிமையாவான்;

அதிகம் போனால், அடிமை என்கிற அளவில் தனது நிலைமையை மேம்படுத்திக் கொள்ளப் போராடும் அடிமையாவானே அன்றி அடிமை முறையை வீழ்த்தப் போராடுகிறவனல்ல.

ஆகவே நமது சீர்திருத்தவாதிகளின் இளந் தலைவர்களில் ஒருவரான நாஷா ஸாரியா[49] இதழின் திரு லெவித்ஸ்கி ருஷ்ய சமூக-ஜனநாயகக் கட்சி ''தலைமைப் பாத்திரத்தை அல்ல, ஆனால் வர்க்கக் கட்சியைக்'' குறிப்பதாய் இருக்க வேண்டுமென்று கூறிய அந்தப் பிரபல சூத்திரம் சிறிதும் முரணற்ற சீர்திருத்தவாதமே ஆகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. அது மட்டுமல்ல, அது அப்பட்டமான துரோகத்தைக் குறிக்கும் சூத்திரமும் ஆகும். ''தலைமைப் பாத்திரம் அல்ல, ஆனால் வர்க்கக் கட்சி'' என்று கூறினால், முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்கு, நாம் வாழும் இச்சகாப்தத்தின் அடிமையான கூலி உழைப்பாளனைப் பார்த்து ''அடிமை என்கிற அளவில் உன்னுடைய நிலைமையை மேம்படுத்திக் கொள்ள போராடு, ஆனால் அடிமை முறையை வீழ்த்துவதென்ற எண்ணத்தைத் தீங்கிழைக்கும் ஓர் கற்பனையாய்க் கருது'' என்று சொல்லும் மிதவாதியின் தரப்புக்குச் சென்றுவிடுவதாகவே அதற்கு அர்த்தம். ''இயக்கமே யாவும், இறுதிக் குறிக்கோள் ஒரு பொருட்டல்ல'' என்கிற பெர்ன்ஷ்டைனுடைய பிரபல சூத்திரத்தை லெவித்ஸ்கியின் சூத்திரத்துடன் ஒத்திட்டுப் பாருங்கள். அவை ஒரே கருத்தின் மாற்றுருக்கள் என்பதைக் காண்பீர்கள். இரண்டும் சீர்திருத்தங்களை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றன, புரட்சியை நிராகரித்துவிடுகின்றன. பெர்ன்ஷ்டைனுடைய சூத்திரம் வீச்சில் சற்று விரிவானது, ஏனெனில் அது சோஷலிசப் புரட்சி ஒன்றை(=முதலாளித்துவ சமுதாயத்தின் ஒரு கட்சி என்ற முறையில் சமூக-ஜனநாயகத்தின் இறுதிக் குறிக்கோள்) கருத்தில் கொள்கிறது. லெவித்ஸ்கியின் சூத்திரம் குறுகலானது, ஏனெனில் அது பொதுவில் புரட்சியை நிராகரிப்பதோடு, 1905-07ல் மிதவாதிகளுக்கு மிகுந்த வெறுப்பை உண்டாக்கிய ஒன்றையும்—அதாவது முழுநிறைவான ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டத்தில் பெருந் திரள்களான மக்களுக்கு (முக்கியமாய் விவசாயிகளுக்கு) தலைமைப் பாத்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்ட அச்செயலையும்—மிகவும் குறிப்பாய் நிராகரிக்கிறது.

தொழிலாளர்களிடம் அவர்களுக்கு வேண்டியது ''வர்க்கக் கட்சியே அன்றி, தலைமைப் பாத்திரம் அல்ல'' என்று பிரசாரம் செய்வது, பாட்டாளி வர்க்க இலட்சியத்தை வஞ்சித்து மிதவாதிகளுக்குச் சரணடையச் செய்வதே ஆகும்; சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கொள்கையைத் துறந்து அதற்குப் பதிலாய் மிதவாதத் தொழிலாளர் கொள்கையை ஏற்குமாறு பிரசாரம் செய்வதே ஆகும்.

ஆனால் தலைமைப் பாத்திரம் வகிக்கும் கருத்தை நிராகரிப்பது ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தின் அப்பட்டமான வடிவமாகும். எனவே கலைப்புவாதிகள்[50] எல்லோரும் இப்படித் திட்டவட்டமான முறையில் தமது கருத்துக்களை எடுத்துரைக்கத் துணிவதில்லை. அவர்களில் சிலர் (உதாரணமாய் திரு மார்த்தவ்) உண்மையைக் கேலி செய்து தலைமைப் பாத்திரத்தை நிராகரிப்பதற்கும் கலைப்புவாதத்துக்கும் தொடர்பு ஏதுமில்லை என்று மறுக்க முயலும் அளவுக்குச் செல்கின்றனர்.

சீர்திருத்தவாதக் கருத்துக்களுக்குச் ''சரியான ஆதாரங்களைக் காட்டுவதற்காகச்'' சற்று ''மதிநுட்பமான'' முயற்சி பின்வரும் வாதமாகும்: ருஷ்யாவில் முதலாளித்துவப் புரட்சி முடிவு எய்திவிட்டது; 1905க்குப் பிற்பாடு இரண்டாவது முதலாளித்துவப் புரட்சி எதுவும், ஜனநாயகப் புரட்சிக்கான தேச அளவிலான இரண்டாவது போராட்டம் எதுவும் இருக்க முடியாது; ஆகவே ருஷ்யாவை எதிர்நோக்குவது புரட்சிகர நெருக்கடி அல்ல, ''அரசியலமைப்புச் சட்ட'' நெருக்கடியே எதிர்நோக்குகிறது, இந்த ''அரசியலமைப்புச் சட்ட நெருக்கடியின்'' அடிப்படையில் தனது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதில் முனைவதுவான் தொழிலாளி வர்க்கத்துக்கு எஞ்சியிருக்கும் பணி. கலைப்புவாதியான யூ. லாரின் தேலோ ழீஸினியில் (முன்பு வாஸ்ரழ்தேனியேவில்[51]) இப்படித்தான் வாதாடுகிறார்:

> ''1905 அக்டோர் இன்று நிகழ்ச்சிநிரலில் இல்லை'' என்று திரு லாரின் எழுதினார். ''டூமா நீக்கப்படுமாயின், புரட்சிக்குப் பிற்காலத்திய ஆஸ்திரியாவில் செய்யப்பட்டதைக் காட்டிலும் விரைவாகவே அது

மீண்டும் நிறுவப்பட்டு விடும். புரட்சிக்குப் பிற்காலத்திய ஆஸ்திரியா 1851ல் அரசியலமைப்புச் சட்டத்தை நீக்கிற்று, ஒன்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு 1860ல் எந்தப் புரட்சியும் இல்லாமலே [இதைக் கவனியுங்கள்!], ஆளும் வர்க்கத்தில் மிகவும் செல்வாக்கு படைத்த பகுதியின், முதலாளித்துவ வழியில் தனது பொருளாதாரத்தைப் புனரமைத்துக்கொண்டு விட்ட பகுதியின் நலன்களுக்கு உகந்ததாய் இருந்த காரணத்தினுலேயே திரும்பவும் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது.'' ''இப்பொழுது நாம் இருந்து வரும் கட்டத்தில் 1905ஆம் ஆண்டுக்கு ஒப்பான நாடு தழுவிய புரட்சி இயக்கம் சாத்தியமற்றது.''

திரு லாரினுடைய வாதங்கள் யாவும் 1908 டிசம்பரில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மாநாட்டில் திரு டான் கூறியதை விரிவுபட ஒட்டிச் சேர்த்துத் திருப்பிக் கூறுவதாய் இருக்கிறதேயன்றி வேறல்ல. ''1905ஆம் ஆண்டுப் புரட்சியை உண்டாக்கிய பொருளாதார, அரசியல் வாழ்வின் அடிப்படைக் கூறுகள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன'' என்றும் ஒரு புதிய—புரட்சிகர, ''அரசியலமைப்புச் சட்ட'' வழிப்பட்டதல்ல—நெருக்கடி வளர்ந்து வருகிறது என்றும் கூறிய தீர்மானத்தைக் கலைப்புவாதிகளின் இதழான கோலசின்[52] ஆசிரியர் எதிர்த்து வாதாடி, ''அவர்கள் [அதாவது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினர்] முன்பொரு முறை தோற்கடிக்கப்பட்ட அதே நிலைக்கு தலைதெறிக்க ஓடிவர விரும்புகிருர்கள்'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

புரட்சியை நோக்கித் ''தலைதெறிக்க ஓடிவருதல்'', மாறிவிட்ட சூழ்நிலையிலும் புரட்சியின் கருத்தைப் பரப்பவும் தொழிலாளி வர்க்க சக்திகளை அதற்காகத் தயார் செய்யவும் அயராது பாடுபடல்—சீர்திருத்தவாதிகளின் கண்ணேட்டத்தில் இதுதான் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி புரியும் பிரதான குற்றம், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் குற்றம் இதில்தான் அடங்கியுள்ளது. ''முன்பொரு முறை தோற்கடிக்கப்பட்ட அதே நிலைக்குத் தலைதெறிக்க ஓடிவருகிருர்களே'' ஏன்—ஓடுகாலிகளின், எந்தத்

தோல்வியையும் தொடர்ந்து மனம் ஒடிந்துவிடுவோரின் விவேகம் இவ்வளவுதான்.

ஆனால் ருஷ்யாவைக் காட்டிலும் பழமையான, அதிக "அனுபவம் படைத்த" நாடுகளில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் "முன்பொரு முறை தோற்கடிக்கப்பட்ட அதே நிலைக்குத் தலைதெறிக்க ஓடிவரத்" தனக்குள்ள ஆற்றலை இரண்டு, மூன்று, நான்கு முறைகள் வெளிப்படுத்திக் காட்டிற்று. பிரான்சில் அது 1789க்கும் 1871க்கும் இடையில் நான்கு புரட்சிகளை நடத்திற்று; மிகக் கடுமையான தோல்விகளுக்கும் பிற்பாடு மீண்டும் மீண்டும் கிளர்ந்து எழுந்தது; இப்பொழுது அது தனது கடைசிப் பகைவனை முன்னேறிய முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்நோக்குகின்ற ஒரு குடியரசைச் சாதித்துக் கொண்டது—சோஷலிசத்தின் வெற்றிக்கான இறுதிப் போராட்டத்துக்குத் தேவையான நிலைமைகளுக்கு உகந்த ஒரேயொரு அரசு வடிவமாய் அமைந்தது குடியரசுதான்.

இதுவேதான் சோஷலிஸ்டுகளுக்கும் மிதவாதிகளுக்கும், அதாவது முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்களுக்கும் இடைப்பட்ட வேறுபாடு. புரட்சி தவிர்க்க முடியாதது, பாட்டாளி வர்க்கமானது சமுதாயத்திலுள்ள எல்லா முரண்பாடுகளையும், அதன் பகைவர்களுடைய அல்லது இடைநிலை வர்க்கங்களுடைய ஒவ்வொரு பலவீனத்தையும் பயன்படுத்திக்கொண்டு ஒரு புதிய புரட்சிகரப் போராட்டத்துக்குத் தயார் செய்ய வேண்டும், மக்கள் இன்னும் அதிக வளர்ச்சி பெறும் நிலையிலே, மேலும் விசாலமான அரங்கில் புரட்சியை அது திரும்பவும் நடத்தியாக வேண்டும் என்று சோஷலிஸ்டுகள் போதிக்கின்றனர். புரட்சிகள் தேவையற்றவை என்பதோடு, தொழிலாளர்களுக்குத் தீங்கிழைக்கவும் கூடியவை, தொழிலாளர்கள் புரட்சியை நோக்கித் "தலைதெறிக்க ஓடிவரக்" கூடாது, நல்ல பிள்ளைகளாய் நடந்து கொண்டு பணிவுடன் சீர்திருத்தங்களுக்காக வேலை செய்ய வேண்டுமென்று முதலாளித்துவ வர்க்கத்தினரும் மிதவாதிகளும் போதிக்கின்றனர்.

ஆதலால்தான் முதலாளித்துவக் கருத்துக்களால் கட்டுண்ட கைதிகளான சீர்திருத்தவாதிகள் சோஷலிசத்திலிருந்து ருஷ்யத் தொழிலாளர்களைத் திசை திருப்பிவிடும் பொருட்டு

1860ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரியாவின் உதாரணத்தையும் (மற்றும் பிரஷ்யாவின் உதாரணத்தையும்) ஓயாமல் குறிப்பிடுகிறார்கள். இந்த உதாரணங்களில் ஏன் அவர்களுக்கு இத்தனை மோகம்? யூ. லாரின் இந்த இரகசியத்தைப் போட்டு உடைத்துவிட்டார்: இந்த நாடுகளில் ''வெற்றிபெற முடியாத'' 1848ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிற்பாடு முதலாளித்துவ மாற்றம் ''எந்தப் புரட்சியும் இல்லாமலே'' செய்து முடிக்கப்பட்டது என்பதால்தான்.

உட்பொருள் இதுவேதான்! அவர்களுடைய உள்ளத்தை மகிழ்வுறச் செய்வது இதுதான்! புரட்சி இல்லாமலே முதலாளித்துவ மாறுதல் சாத்தியம் என்பதை இது சுட்டிக்காட்டுவதாய்த் தோன்றுகிறதே என்பதுதான்! அப்படியானால் ருஷ்யர்களாகிய நாம் புரட்சியில் ஏன் கருத்து செலுத்த வேண்டும்? நிலப்பிரபுக்களும் ஆலை முதலாளிகளும் ''எந்தப் புரட்சியும் இல்லாமலே'' ருஷ்யாவில் முதலாளித்துவ மாற்றத்தைக் கொண்டுவரும்படி விட்டுவிடலாமே?!

ஆஸ்திரியாவிலும் பிரஷ்யாவிலும் பாட்டாளி வர்க்கம் பலவீனமாய் இருந்த காரணத்தால்தான், நிலச்சுவான்தார்களும் முதலாளித்துவ வர்க்கத்தாரும் தொழிலாளர்களுடைய நலன்களைக் கருதாமலே இந்த மாற்றத்தைச் செயல்படுத்தியதை, முடியாட்சியையும் பிரபுக்களுடைய தனியுரிமைகளையும் கிராமப்புறங்களில் உரிமையில்லா நிலையையும் மத்திய கால நிலைமைகளுக்குரிய ஏராளமான ஏனைய மீதமிச்சங்களையும் அப்படியே வைத்துக் கொண்டு, தொழிலாளர்களுக்கு மிகவும் பாதகமான ஒரு வடிவத்தில் இந்த மாற்றத்தைச் செயல்படுத்தியதை அதனால் தடுக்க முடியவில்லை.

மேலைய நாடுகளில் எந்த முதலாளித்துவப் புரட்சியிலும் ஒப்பீடில்லா பலத்தை 1905ல் நமது பாட்டாளி வர்க்கம் வெளிப்படுத்திற்று. ஆயினும் இன்று ருஷ்யச் சீர்திருத்தவாதிகள், தமது சொந்த துரோக நடத்தைக்கு நியாயம் கற்பிக்கும் பொருட்டு, தமது சொந்த ஓடுகாலித் துரோகப் பிரசாரத்துக்கு ''நியாய விளக்கம்'' கூறும் பொருட்டு, நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பிற நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனத்தைக் காட்டிய உதாரணங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்!

1860ஆம் ஆண்டுகளுக்குரிய ஆஸ்திரியாவையும் பிரஷ்யாவையும் நமது சீர்திருத்தவாதிகள் அத்தனை ஆர்வத்துடன் சுட்டிக்காட்டி வருவதானது, அவர்களுடைய வாதங்கள் தத்துவார்த்த வழியில் ஆதாரமற்றதாய் இருப்பதற்கும் நடைமுறை அரசியலில் அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தாரின் தரப்புக்கு ஓடிவிட்ட துரோகச் செயலுக்கும் மிகச் சிறந்த நிரூபணமாய் விளங்குகிறது.

1848ஆம் ஆண்டுப் புரட்சி தோல்வியுற்றபின் நீக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் ஆஸ்திரியாவில் திரும்பவும் நாட்டப்பெற்றதும், 1860ஆம் ஆண்டுகளில் பிரஷ்யாவில் ''நெருக்கடிச் சகாப்தம்'' துவக்கி வைக்கப்பட்டதும் மெய்தான். ஆனால் இவை நிரூபிப்பது என்ன? இந்நாடுகளில் முதலாளித்துவ மாற்றம் நிறைவுபெறவில்லை என்பதையே முக்கியமாய் நிரூபிக்கின்றன. ருஷ்யாவில் ஆட்சியதிகாரம் ஏற்கனவே முதலாளித்துவத் தன்மையதாகிவிட்டது (லாரின் இப்படித்தான் கூறுகிறார்) என்றும் நமது நாட்டில் ஆட்சியதிகாரம் பண்ணையடிமைத் தன்மையதாய் இல்லை (திரும்பவும் லாரினைப் பார்க்கவும்) என்றும் வற்புறுத்திவிட்டு, அதேபோதில் ஆஸ்திரியாவையும் பிரஷ்யாவையும் உதாரணமாய்க் குறிப்பிடுவது தனக்கே தான் மறுப்புக் கூறுவதே ஆகும்! பொதுவாய்ப் பேசுமிடத்து ருஷ்யாவில் முதலாளித்துவ மாற்றம் நிறைவுற்றாகவில்லை என்பதை மறுப்பது நகைக்கத்தக்கதே ஆகும். முதலாளித்துவக் கட்சிகளான காடேட்டுக் கட்சி, அக்டோபரிஸ்டுகளின் கட்சி[53] இவற்றின் கொள்கையே இதை சந்தேகத்துக்கு இடமின்றி மெய்ப்பிக்கிறது, லாரினும் (கீழே நாம் இதைக் காண்போம்) தமது நிலையை விட்டுக் கொடுத்துவிடுகிறார். முடியாட்சியானது முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் வழியில் மேலும் ஒரு அடி எடுத்துவைக்கிறது என்பதை மறுக்க முடியாது—இதை நாம் மேலே குறிப்பிட்டோம், கட்சி ஏற்ற ஒரு தீர்மானத்தில் (1908 டிசம்பர்) இது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இந்தத் தகவமைப்புங்கூட, முதலாளித்துவ வர்க்கத்தினுடைய பிற்போக்கு நடவடிக்கைகளும் மூன்றாவது டூமாவும் 1906 நவம்பர் 9 (மற்றும் 1910 ஜூன் 14) நிலச் சட்ட

மும்கூட[54] ருஷ்யாவில் முதலாளித்துவ மாற்றத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை.

இன்னும் சற்று அப்பால் பார்ப்போம்: 1860ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரியாவிலும் பிரஷ்யாவிலும் ''நெருக்கடிகள்'' புரட்சிகரமாய் இல்லாமல் ''அரசியலமைப்புச் சட்டத் தன்மையனவாய்'' இருந்தது ஏன்? ஏனென்றால் முடியாட்சியின் நிலையைச் சுலபமாக்கிய விசேஷச் சூழ்நிலைகள் பலவும் இருந்தன (ஜெர்மனியில் ''மேலிருந்து நடைபெற்ற புரட்சி'', கொடிய வன்முறையின் மூலம் ஜெர்மனி ஐக்கியப்படுத்தப் பட்டது); ஏனென்றால் பாட்டாளி வர்க்கம் இந்த நாடுகளில் அக்காலத்தில் மிக மிகப் பலவீனமாகவும் வளர்ச்சியின்றியும் இருந்தது, மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் இக்காலத்திய ருஷ்யக் காடேட்டுகளைப் போல ஈனத்தனமான கோழைத்தனத்துக்கும் துரோகத்துக்கும் பெயர் பெற்றோராய் இருந்தனர்.

அவ்வாண்டுகளின் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் அந்நிலைமையை எப்படி மதிப்பிடுகிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக, பெபெல் தமது நினைவுக் குறிப்புகளில் கூறும் சில கருத்துக்களை மேற்கோளாய் எடுத்துரைக்கிறோம். இந்தப் புத்தகத்தின் முதற் பாகம் சென்ற ஆண்டு வெளியிடப்பட்டது. பிற்பாடு தெரியவந்துள்ளது போல, 1862ல் மன்னன் அறவே மனம் ஒடிந்து தன் கதி இப்படியாகிவிட்டதே என்று வருந்தி பிஸ்மார்க்கின் முன்னிலையிலே தாம் இருவரும் மரண தண்டனைக்கு உள்ளாக வேண்டி வருமெனப் புலம்பியதாய் பிஸ்மார்க் கூறியதை பெபெல் எடுத்துரைக்கிறார். இந்தப் பயங்கொள்ளியை பிஸ்மார்க் வெட்கித் தலைகுனியச் செய்து, போரிடாது மிரண்டு ஒதுங்க வேண்டாமென தைரியப்படுத்தினார்.

> ''மிதவாதிகள் அந்நிலைமையைச் சாதகமாய்ப் பயன்படுத்தியிருந்தால் அவர்கள் எவ்வளவு சாதித்திருக்கலாம் என்பதை இந்த நிகழ்ச்சிகள் காட்டுகின்றன'' என்று பெபெல் கூறுகிறார். ''ஆனால் தமக்குப் பின்னால் நின்ற தொழிலாளர்கள் குறித்து ஏற்கனவே அவர்களுக்குப் பீதி ஏற்பட்டிருந்தது. பிஸ்மார்க் தாம் அதீத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டால்

அக்கிராஜேத் தாம் செயல்படச் செய்ய வேண்டி வரும் [அதாவது, அடித்தட்டு வர்க்கங்களின், வெகுஜனங் களின் இயக்கத்தைக் கிளப்பிவிட வேண்டி வரும்] என்று கூறியது மிதவாதிகளுக்குக் குலைநடுக்கம் உண்டாக்கிற்று.''

ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர் ''புரட்சி எதுவும் இல்லாமலே'' தமது நாட்டை முதலாளித்துவ-ஜங்கர் முடியரசாய் மாற்றம் பெறும்படி நிறைவுறச் செய்த அந்த ''அரசியலமைப்புச் சட்ட'' நெருக்கடிக்கு அரை நூற் ருண்டுக்குப் பிற்பாடு அக்காலத்தியச் சூழ்நிலையின் புரட்சிகரச் சாத்தியக்கூறுகளை, மிதவாதிகளுக்குத் தொழிலாளர்களிட மிருந்த அச்சத்தின் காரணமாய் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்துவிட்ட இந்தச் சாத்தியக்கூறுகளைக் குறிப்பிடுகிருர். ''பயந்து நடுங்கிய மன்னனுக்கு முன்ஞல் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தினர் பயந்து நடுங்கிப் பணிந்துவிடும் அளவுக்கு ஈனத்தனமாய் இருந்திருக்கையில், நாமுங்கூட ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தின் அந்த அற் புதமான போர்த்தந்திரத்தை ஏன் காப்பியடிக்கக் கூடாது? —என்று ருஷ்யச் சீர்திருத்தவாதிகள் ருஷ்யத் தொழிலாளர் களிடம் கூறுகிருர்கள். முதலாளித்துவ வர்க்கத்தார் சுரண்ட லாளர்கள் என்ற முறையில் வெகுஜன இயக்கத்தைக் கண்டு அஞ்சியதால் ''அரசியலமைப்புச் சட்ட'' நெருக்கடியைப் ''பயன்படுத்திக் கொண்டு'' புரட்சி செய்யவில்லை என்று பெபெல் அவர்களைச் சாடுகிருர். லாரினும் அவரைச் சேர்ந் தோரும் ருஷ்யத் தொழிலாளர்கள் தலைமைப் பாத்திரம் வகிக்க (அதாவது, மிதவாதிகளையும் மீறி வெகுஜனங்களைப் புரட்சிக்கு ஈர்க்க) முயலுவதற்காக அவர்களைச் சாடுகின்ற னர்; ''புரட்சிக்காக வேண்டாம்'', ஆனல் ''ருஷ்யாவில் வரப் போகிற அரசியலமைப்புச் சட்டப் புத்தமைப்பில் தமது நலன்களின் பாதுகாப்புக்காக'' ஒழுங்கமைத்துக் கொள்ளு மாறு அவர்களுக்குப் புத்திமதி கூறுகின்றனர். கலைப்புவாதிகள் கேடுகெட்ட ஜெர்மன் மிதவாதத்தின் கேடுகெட்ட கருத்துக் களை ''சமூக-ஜனநாயகக்'' கருத்துக்களாய் ருஷ்யத் தொழி லாளர்களுக்கு வழங்குகிருர்கள்! இதன்பின் இத்தகைய

சமூக-ஜனநாயகவாதிகளை ''ஸ்தலீப்பின் வகைப்பட்ட சமூக-ஜனநாயகவாதிகள்'' என்று அழைக்காமல் இருப்பது எப்படி?

பிரஷ்யாவில் 1860ஆம் ஆண்டுகளின் ''அரசியலமைப்புச் சட்ட'' நெருக்கடியை மதிப்பீடு செய்கையில் பெபெல் முதலாளித்துவ வர்க்கத்தாருக்குத் தொழிலாளர்களிடமிருந்த அச்சத்தின் காரணமாய் அவர்கள் முடியாட்சியை எதிர்த்துப் போராட அஞ்சினர் என்று கூறுவதுடன் நின்றுவிடவில்லை. அக்காலத்தில் தொழிலாளர்களிடையே என்ன நடைபெற்றதென்பதையும் அவர் நமக்குக் கூறுகிறார். ''அரசியல் விவகாரங்களின் பயங்கரமான நிலைமை, தொழிலாளர்கள் மேலும் மேலும் கூர்மையாய் உணர்ந்து வந்த இந்த நிலைமை இயல்பாகவே அவர்களுடைய மனப்பாங்கில் பாதிப்புகளை ஏற்படுத்திற்று'' என்று அவர் கூறுகிறார். ''எல்லோரும் மாறுதல் வேண்டுமென ஆர்ப்பரித்தனர். ஆனால் குறிக்கோள் குறித்துத் தெளிவான பார்வை கொண்டதும் தொழிலாளர்களுடைய நம்பிக்கைக்கு உரித்ததுமான முழு அளவுக்கு வர்க்க உணர்வுடைய தலைமை இருக்கவில்லையாதலாலும், சக்திகளை ஒன்றுதிரட்டவல்ல வலுவான நிறுவனம் இல்லாமற் போனதாலும் இந்த மனப்பாங்கு புகைந்து போய்விட்டது (verpuffte). சாராம்சத்தில் அவ்வளவு பிரமாதமாய் இருந்த (in Kern vortreffliche) ஒரு இயக்கம் இதுகாறும் என்றுமே இப்படி உதவாக்கரையாய் முடிவுற்றதில்லை. எல்லாக் கூட்டங்களிலும் ஜனத்திரள் நிரம்பி வழிந்தது. மிகவும் ஆக்ரோஷமான பேச்சாளர்கள் அன்றைய வீரர்களாய்ப் போற்றப்பட்டனர். இதுதான் அப்பொழுது நிலவிய மனப்பாங்கு,' குறிப்பாய் லைப்சிகிலிருந்த தொழிலாளர் கல்விக் கழகத்தில் இப்படித்தான் இருந்தது.'' லைப்சிகில் 1866 மே 8ல் 5,000 பேர் கலந்து கொண்ட ஒரு பொதுக் கூட்டம் லீப்க்னெஹ்ட்டும் பெபெலும் முன்மொழிந்த ஒரு தீர்மானத்தை ஒருமனதாய் ஏற்றுக் கொண்டது. ஆயுதமேந்திய மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு பாராளுமன்றம் அனைவருக்கும் நேரடியான சமத்துவ வாக்குரிமையின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்புடன் கூட்டப்பெற வேண்டுமென்று இந்தத் தீர்மானம் கோரியது, ''மரபுரிமையாக அமைந்த மத்திய ஆட்சியதிகாரவமைப்பு ஒவ்வொன்றையும் நிராகரிப்போரை

மட்டுமே ஜெர்மன் மக்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கையையும்'' இந்தத் தீர்மானம் வெளியிட்டது. லீப்க்னெஹ்ட்டும் பெபெலும் முன்மொழிந்த தீர்மானம் சிறிதும் ஐயப்பாட்டுக்கு இடமின்றி இவ்விதம் குடியரசுவாத, புரட்சித் தன்மை கொண்டதாய் இருந்தது.

இவ்வாறு ''அரசியலமைப்புச் சட்ட'' நெருக்கடிக் காலத்தில் **ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர்** வெகு ஜனக் கூட்டங்களில் குடியரசுவாத, புரட்சித் தன்மை கொண்ட தீர்மானங்களை ஆதரித்து வாதாடினர். அரை நூற்றாண்டுக்குப் பிறகு தமது இளமைப் பருவத்தை நினைவு கூர்ந்து நெடுநாட்களுக்கு முன்பு நடைபெற்றவற்றைப் புதிய தலைமுறையினருக்குக் கூறும் அவர் போதிய அளவு வர்க்க உணர்வு கொண்டு புரட்சிகரக் கடமைகளைப் புரிந்து கொள்ள வல்ல தலைமை அக்காலத்தில் இல்லை (**அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் என்பதிலுள்ள கடமையைப் புரிந்து கொள்ளும் புரட்சிகர சமூக-ஜனநாயகக் கட்சி இல்லை**), வலுமிக்க நிறுவனம் இருக்கவில்லை, புரட்சி மனப்பாங்கு ''புகைந்து போய்விட்டது'' என்று யாவற்றுக்கும் முதலாய்த் தமது வருத்தத்தை வலியுறுத்துகிறார். ஆனால் ருஷ்யச் சீர்திருத்தவாதிகளின் தலைவர்கள் அறியாச் சிறுவன் ஒருவனது அறிவு ஆழத்துடன், ''எந்தப் புரட்சியும் இல்லாமலே'' நாம் சமாளிக்கலாமென நிரூபிக்கும் உதாரணமாய் 1860ஆம் ஆண்டுகளின் ஆஸ்திரியாவையும் பிரஷ்யாவையும் குறிப்பிடுகிறார்கள்! எதிர்ப்புரட்சியால் மயக்கப்பட்டு மிதவாதத்தின் சித்தாந்த அடிமைகளாய் இருந்து வரும் இந்தக் குட்டிபூர்ஷுவா அற்பர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பெயரை மாசுபடுத்தத் துணிகின்றனர்!

லாரினுடைய ஒளிவுமறைவற்ற நேரான சந்தர்ப்பவாதத்துக்குப் பதில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மிக முக்கிய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து சுற்றிவளைத்து மோசடி செய்யும் ராஜதந்திர உபாயத்தைக் கையாளும் ஆட்களும் சோஷலிசத்தைத் துறந்தோடி வரும் சீர்திருத்தவாதிகளிடையே இருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினையைக் குழப்படி செய்யவும் சித்தாந்த வாக்குவாதங்களைக் குளறுபடி பண்

ணவும் மாசுபடுத்தவும் முயலுகிருர்கள். உதாரணமாய், திரு மார்த்தவ் இப்படித்தான் செய்தார். லாரினும் ''1908ஆம் ஆண்டுத் தீர்மானங்களில் வைதீக போல்ஷிவிக்குகளும்'' முழுதும் ஒத்தக் ''கருத்தமைப்பை'' முன்வைப்பதாய் அவர் சட்டபூர்வமான பத்திரிகைகளில் (அதாவது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி உறுப்பினர்கள் நேரடியாய்ச் சுடச்சுடப் பதிலளிக்க முடியாதபடித் தடுத்து ஸ்தலீப்பின் அவருக்குப் பாதுகாப்பு அளித்திருக்கும் பத்திரிகைகளில்) துணிந்து எழுதினுர். உண்மைகளை இப்படி அப்பட்டமாய்த் திரித்துப் புரட்டுவது கீழ்த்தரமான கூற்றுகளின் இந்த ஆசிரியரின் தகுதிக்கு உகந்ததுதான். இதே மார்த்தவ், லாரினை எதிர்த்து வாதாடுவதாய்ப் பாசாங்கு செய்து ''லாரினிடம் சீர்திருத்தவாதப் போக்குகள் உண்டு என்ற சந்தேகம் தனக்கு ஒருபோதும் இருந்ததில்லை'' என்று அச்சிட்ட எழுத்து வடிவில் கூறிக் கொண்டார். கலப்பற்ற சீர்திருத்தவாதக் கருத்துக்களை எடுத்துரைத்த லாரின் சீர்திருத்தவாதியல்லவாம், மார்த்தவுக்கு இதில் சந்தேகம் இருந்ததில்லையாம்! சீர்திருத்தவாதத்தின் ராஜதந்திரிகள் புரியும் ஜாலவித்தைகளுக்கு இது ஓர் உதாரணம்.* லாரினைக் காட்டிலும் அதிக அளவுக்கு ''இடதுசாரி'', அதிக அளவு நம்பத்தக்கப் புரட்சியாளர் என்பதாய்ச் சில அப்பாவிகளால் கருதப்படும் இந்த மார்த்தவ் லாரினுடன் தமக்குள்ள ''கருத்து வேறுபாட்டைப்'' பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

> ''தொகுத்துக் கூறுவோம்: தற்போதுள்ள ஆட்சி எதேச்சாதிகாரம், அரசியலமைப்புச் சட்டமுறை ஆகிய இரண்டின் உள்ளியல்பிலேயே முரண்பாடான சேர்க்கையாய் இருப்பதும், இந்த ஆட்சியின் கேந்திர பலவீனமான அதன் முரண்பாடுகளின் வழியே அதைத் தாக்குவதில் மேலைய முற்போக்கு நாடுகளின் தொழிலாளர்களுடைய உதாரணத்தைக் கடைப்பிடிப்பதற்கு ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் போதிய

* லாரினுடைய சீர்திருத்தவாதத்தையும் மார்த்தவின் தந்திரங்களையும் பற்றி விவாதச் செய்தியேடு (நமது கட்சியின் மத்திய ஏட்டின் அனுபந்தம்) இதழ் 3ல் கட்சி ஆதரவாளரான மென்ஷிவிக் தினெவ்னீத்ஸ்கி கூறும் நியாயமான கருத்துரைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

அளவு முதிர்ச்சியடைந்திருப்பதும் மார்க்சியத்திடம் விசுவாசமாய் நடந்து வரும் மென்ஷிவிக்குகள் தற்போது செய்பவை தத்துவார்த்த வழியில் ஆதார முடைத்தவை என்பதையும் அரசியல் வழியில் நியாய மானவை என்பதையும் காட்டப் போதுமானவையே.''

எவ்வளவுதான் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க மார்த்தவ் முயன்றாலும், அவருடைய தந்திரங்கள் தாமாகவே தகர்ந்து விடுவதுதான் தொகுத்துரைப்பதற்கான அவரது முதல் முயற்சியின் விளைவு. மேலே தரப்பட்ட அவருடைய சொற் கள் சோஷலிசத்தை அறவே நிராகரித்து அதனிடத்தில் மித வாதத்தைக் கைக்கொள்வதையே குறிக்கின்றன. ''போது மானவை'' என்று மார்த்தவ் பிரகடனம் செய்பவை மிதவாதி களுக்கு மட்டும்தான், முதலாளித்துவ வர்க்கத்துக்கு மட்டும் தான் போதுமானவை. எதேச்சாதிகாரம், அரசியலமைப்புச் சட்டமுறை இவற்றின் சேர்க்கை முரண்பாடான தன்மை கொண்டதென்பதை அங்கீகரிப்பது ''போதுமானதெனக்'' கருதும் பாட்டாளி வர்க்கத்தவர் மிதவாதத் தொழிலாளர் கொள்கையின் நிலையை ஏற்பவராவார். இவர் சோஷலிஸ்டு அல்ல, தனது வர்க்கத்தின் கடமைகளைப் புரிந்து கொண்ட வர் அல்ல. மக்களின் பெருந் திரள்களை, உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டோருமான வெகுஜனங்களை வரம்பற்ற எதேச் சாதிகாரத்தின் எல்லா வடிவங்களுக்கும் எதிராய்க் கிளர்ந் தெழச் செய்ய வேண்டுமென்று, முதலாளித்துவ வர்க்கத்தின் ஊசலாட்டங்கள் அல்லது எதிர்ப்பை மீறி அவர்களை நாட் டின் எதிர்கால வரலாற்றை வகுப்பதில் குறிக்கிட்டு சுயேச்சைப் பங்காற்றும்படிக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டுமென்று இக் கடமைகள் கோருகின்றன. முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தைக் கவிழ்த்திடும் வெகுஜனங்களுடைய சுயேச்சையான வரலாறு படைக்கும் செயல் ''அரசிய லமைப்புச்சட்ட'' நெருக்கடியைப் புரட்சியாய் மாற்றிவிடுகிறது. முதலாளித்துவ வர்க்கம் (குறிப்பாய் 1905 முதலாய்) புரட்சி என்றாலே பயப்படுகிறது, அதை வெறுக்கிறது. பாட்டாளி வர்க்கம் இதற்கு மாறாய், புரட்சியெனும் கருத்தில் பற்றுறுதி கொண்டு செயல்படும்படி வெகுஜனங்களுக்குப் போதமளிக் கிறது, வெகுஜனங்களுடைய கடமைகளை விளக்கிக் கூறு

கிறது, புதிய புரட்சிப் போர்களுக்கு வெகுஜனங்களைத் தயார் செய்கிறது. புரட்சி நடைபெறுமா, எப்பொழுது எந்தச் சூழ் நிலையில் நடைபெறும் என்பது குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் சித்தத்தைப் பொருத்ததல்ல. ஆனால் வெகுஜனங்களிடையே நடத்தப்படும் புரட்சிப் பணி ஒருபோதும் வீணாவதில்லை. இவ் வகைச் செயற்பாடு மட்டும்தான் வெகுஜனங்களை சோஷலி சத்தின் வெற்றிக்குத் தயார் செய்கிறது. சோஷலிசத்தின் இந்த அரிச்சுவடிப் பாடங்களை லாரின்களும் மார்த்தவ்களும் மறந்துவிடுகிறார்கள்.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியிட மிருந்து அறவே முறித்துக் கொண்டுவிட்ட ருஷ்யக் கலைப்பு வாதக் கோஷ்டியின் கருத்துக்களை வெளியிடும் லாரின் தமது சீர்திருத்தவாதத்தை விளக்கிக் கூறுவதில் முழுத் தொலைவுக் கும் செல்லத் தயங்கவில்லை. தேலோ ஜீஸினியில் (1911, இதழ் 2) அவர் எழுதுவதாவது—சமூக-ஜனநாயகத்தில் கோட் பாடுகளைப் பேணிக் காக்கும் ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருக்க வேண்டிய சொற்கள் இவை:

> ''புரியாமல் திகைக்க வேண்டிய நிலைமை, நிச் சயமாய் எதுவும் கூற முடியாமலும் நாளை என்ன எதிர்பார்ப்பதென்றும் தமக்கு எந்தப் பணிகளை வகுத்துக் கொள்வதென்றும் மக்களால் தெரிந்து கொள்ள முடியாமலுமுள்ள நிலைமை—நிர்ணயமில் லாத, காலத்துக்கு ஏற்ப நடந்துகொள்ளலாம் என்ற மனநிலைகளிலிருந்து, புரட்சி திரும்பவும் நடைபெற லாம் அல்லது 'காத்திருந்து பார்ப்போம்' என்ற தெளிவற்ற நம்பிக்கைகளிலிருந்து விளைவது இது தான். உடனடிப் பணி ஏதோ வருமென்று பயனின்றிக் காத்திருப்பதல்ல; ருஷ்யா வந்தடைந்துள்ள வர லாற்றுக் கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ளவேண்டும்—'புரட்சிக்காக' அல்ல, 'புரட்சி ஒன்று வருமென எதிர்பார்த்து' அல்ல—வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தனக் குரிய தனி நலன்களை உறுதியாகவும் முறையாகவும் பாதுகாத்துக் கொள்ளுதல், இந்தச் சிக்கலான பன் முகச் செயற்பாட்டுக்காகத் தனது சக்திகளை ஒன்று திரட்டிக் கொள்ளுதலும் அவற்றுக்குப் பயிற்றுவித்துக் கொள்ளுதலும், இவ்வழியில் பொதுவாய் சோஷ

லிச உணர்வினைப் பயிற்சி செய்து நிலைநாட்டிக் கொள்ளுதல், குறிப்பாய்ப் பிரபுத்துவப் பிற்போக்கு பொருளாதார வழியில் தவிர்க்க முடியாதபடித் தன்னைத்தானே ஓய்ந்துவிடச் செய்து கொண்டபின் வரப் போகும் நாட்டின் அரசியலமைப்புச் சட்டப் புத்தமைப்பின்போது ருஷ்யாவின் சமூக வர்க்கங்களிடை நிலவும் சிக்கலான உறவுகளிடையே தன்னைத் திசையமைவு செய்து கொள்ளும் [தனது நிலைகளைப் புரிந்து கொள்ளும்] ஆற்றலைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய இவற்றுக்காக மட்டுமே [இவற்றுக்காக மட்டுமே என்பதைக் கவனிவுங்கள்] தொழிலாளி வர்க்கம் தன்னை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டுக் கருத்தினை விரிவான வட்டாரங்களுக்கு ஊட்டுவதே உடனடிப் பணி.''

இது முழுமையான, ஒளிவுமறைவற்ற, தன்னிறைவான, கலப்பற்ற தூய சீர்திருத்தவாதமாகும். புரட்சியெனும் கருத்தை எதிர்த்து, புரட்சி வருமென்ற ''நம்பிக்கையை'' எதிர்த்து (சீர்திருத்தவாதியின்கண்களுக்கு இந்த''நம்பிக்கை'' தெளிவற்றவையாகத்தான் தோன்றும், ஏனெனில் நிகழ்காலப் பொருளாதார, அரசியல் முரண்பாடுகளின் ஆழத்தை அவர் புரிந்து கொள்ளாதவர்) போர் தொடுத்தல்; புரட்சிக்காக சக்திகளை ஒழுங்கமைப்பதற்கும் மக்கள் மனத்தைத் தயார் செய்வதற்குமான ஒவ்வொரு செயற்பாட்டையும் எதிர்த்துப் போர் தொடுத்தல்; புரட்சிகர சமூக-ஜனநாயகத்தால் நேரடியாய்ச் சுடச்சுடப் பதிலளிக்க முடியாதபடித் தடுக்கப்பட்டு ஸ்தலீப்பினல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள சட்ட பூர்வமான பத்திரிகைகளில் இந்தப் போரை நடத்தல்; ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியிடமிருந்து அறவே முறித்துக்கொண்டுவிட்ட சட்டமுறையாளர்களது கோஷ்டியின் சார்பில் இப்போரை நடத்திச் செல்லுதல்— இதுதான் பத்ரேசவும் லெவித்ஸ்கியும் லாரினும் அவர்களது நண்பர்களும் தோற்றுவிக்கப் பாடுபட்டு வரும் ஸ்தலீப்பின் வகைப்பட்ட தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டமும் போர்த்தந்திரமும். இந்த ஆட்கள் ''தாமுங்கூட சமூக-ஜனநாயகவாதிகள்தான்'', தாமுங்''கூட'' ''சமரசத்துக்கு உடன்படாத அகிலத்தைச்'' சேர்ந்தவர்கள்தான் என்று கூறி

வரும் அதிகாரபூர்வமான வஞ்சக உறுதி மொழிகளுக்கு மாருய், இவர்களது உண்மையான வேலைத்திட்டமும் உண்மையான போர்த்தந்திரமும் மேலே தரப்பட்ட மேற்கோளில் தெட்டத் தெளிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவர்களுடைய அதிகாரபூர்வமான உறுதிமொழிகள் வெறும் வெளிவேஷமே ஆகும். சோஷலிசத்துக்குப் பதிலாய் மிதவாதத் தொழிலாளர் கொள்கையை ஏற்கும் இந்த வேலைத் திட்டத்தில் இவர்களுடைய செயல்களும், மெய்யான சமூக உள்ளடக்கமும் எடுத்துக் கூறப்படுகின்றன.

சீர்திருத்தவாதிகள் தம்மைச் சிக்க வைத்துக் கொண்டு விட்ட நகைக்கத்தக்க முரண்பாடுகளைக் கவனியுங்கள். (லாரின் சொல்வது போல) ருஷ்யாவில் முதலாளித்துவப் புரட்சி நிறைவு எய்திவிட்டதெனில், பிறகு சோஷலிசப் புரட்சிதான் வரலாற்று வளர்ச்சியின் அடுத்த கட்டமாகும். இது கூருமலே விளங்குகிறது; மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ள ஒரு பெயரை உபயோகித்துத் தொழிலாளர்களை ஏமாற்றிடுவதற்காகவே சோஷலிசம் பேசுகிறவராய் இல்லாத எவருக்கும் இது தெளிவாய் விளங்குகிறது. ஆகவே இந்த நிலைமை நாம் ''புரட்சிக்காக'' (சோஷலிசப் புரட்சிக்காக), புரட்சி வருமென ''எதிர்பார்த்து'', சோஷலிசப் புரட்சி வருமென்ற ''நம்பிக்கைக்காகத்'' தான் (தெளிவற்ற ''நம்பிக்கை'' அல்ல, திட்டவட்டமான, மேலும் மேலும் கூடுதலாகி வரும் விஞ்ஞான விவரங்களின் அடிப்படையில் அமைந்த நிச்சயமான ''நம்பிக்கை'') ஒழுங்கமைத்தாக வேண்டும் என்பதற்கு மேலும் தெளிவான காரணமாகிவிடுகிறது.

ஆனுல் விவகாரம் எல்லாம் இதுவேதான்: சீர்திருத்தவாதிக்கு நிறைவுற்றுவிட்ட முதலாளித்துவப் புரட்சி பற்றிய அசட்டுப் பேச்சு (கேந்திர பலவீனத்தைப் பற்றிய மார்த்தவின் அசட்டுப் பேச்சையும் இன்ன பிறவற்றையும் போல) அவர் எல்லாப் புரட்சியையும் நிராகரிப்பதை மூடிமறைப்பதற்கான சொல்வீச்சே அன்றி வேறல்ல. சீர்திருத்தவாதி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவுற்றுவிட்டது என்றும் வரம்பற்ற எதேச்சாதிகாரத்துக்கும் அரசியலமைப்புச் சட்ட முறைக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை அங்கீகரிப்பது ''போதுமானது'' என்றும் சால்ஜாப்பு கூறி, முதலாளித்துவ-

ஜனநாயகப் புரட்சியை நிராகரித்துவிடுகிருர்; ருஷ்யாவில் ''வரவிருக்கும் அரசியலமைப்புச் சட்டப் புத்தமைப்பில்'' பங்கெடுத்துக் கொள்வதற்காக ஒழுங்கமைப்பு செய்தல் ''மட்டுமே'' ''தற்போது'' நமக்குள்ள பணி என்று சால்ஜாப்பு கூறி அவர் சோஷலிசப் புரட்சியை நிராகரித்துவிடுகிருர்!

ஆனுல் சோஷலிஸ்டாய் வேஷம் போடும் மதிப்புக்குரிய காடேட்டுகளே, நீங்கள் ருஷ்யாவில் ''வரவிருக்கும் அரசியலமைப்புச் சட்டப் புத்தமைப்பு'' தவிர்க்க முடியாததென்பதை ஏற்றுக் கொள்வீர்களாஞல், உங்களுக்கே எதிராய் வாதாடுகிறீர்கள் என்ருகிறது. ஏனெனில், இதை ஏற்பதன் மூலம் நீங்கள் நமது நாட்டில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவு எய்தியாகவில்லை என்று ஒத்துக் கொண்டு விடுகிறீர்களே. தவிர்க்க முடியாதபடி ''பிரபுத்துவப் பிற்போக்கு தன்னைத் தானே ஒய்ந்துவிடச் செய்து கொள்வது'' குறித்துப் பேசும்போதும், வெகுஜனப் புரட்சி இயக்கத்தின் மூலம் பிரபுத்துவப் பிற்போக்கை மட்டுமின்றிப் பிரபுத்துவத்தின் எல்லா மீதமிச்சங்களையும் அழித்திடுதல் என்ற பாட்டாளி வர்க்கக் கருத்தைக் கேலி செய்யும்போதும் நீங்கள் மீண்டும் மீண்டும் உங்களுடைய முதலாளித்துவத் தன்மையைத்தான் அம்பலம் செய்து கொள்கிறீர்கள்.

நமது ஸ்தலீப்பின் வகைப்பட்ட தொழிலாளர் கட்சி வீரர்களின் மிதவாத அறிவுரைகளை மீறி ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியிலும் சோஷலிசப் புரட்சியிலும் தனக்குள்ள பற்றுறுதியின் உணர்வினை, எதிர்ப்புரட்சி சகாப்தம் தனக்கு விதித்துவிட்ட அந்தக் கடினமான, சோதனை மிக்க, அயர்வூட்டும், சர்வசாதாரண, அன்ருட வேலைகள் அனைத்திலும் மாருத முனைப்போடு எப்பொழுதும் புகுத்திடும்; புரட்சிக்காகத் தனது சக்திகளை ஒன்றுதிரட்டி ஒழுங்கமைத்துக்கொள்ளும்; துரோகிகளையும் ஓடுகாலிகளையும் எதிர்த்து ஈவிரக்கமின்றி தாக்கும்; ''தெளிவற்ற நம்பிக்கையால்'' அல்ல, புரட்சி திரும்பவும் வருமென்ற, விஞ்ஞான வழியில் நிலைநாட்டப்பெற்ற திடமுடிவிஞல் வழிகாட்டப் பெறும்.

சொத்சியால்-டெமக்ராத், இதழ் 23, 1911 செப்டம்பர் 14 (1)	நூல் திரட்டு, தொகுதி 20, பக்கங்கள் 305-18

■

Vorwärts செய்தியேட்டில் பெயர் குறிப்பிடாது கட்டுரை தீட்டும் எழுத்தாளரும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி நிலவரமும்[55]

■

முன்னுரை

மார்ச் 26ஆம் தேதிய *Vorwärts* இதழில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மாநாடு[56] பற்றிய அதிகாரபூர்வமான அறிக்கையும் எழுதியவர் பெயர் குறிக்கப்படாத ஒரு கட்டுரையும் வெளிவந்தன. இந்த அநாமதேயக் கட்டுரையின் ஆசிரியர் வெளிநாடுகளிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகக் கோஷ்டிகள்[57] ஏற்ற தீர்மானத்தின் வழியில் சென்று ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மாநாடு மீது வசவுகளைப் பொழிகிருர். இந்த மாநாடு கலைப்புவாதிகளை எதிர்த்து ரு. ச. ஜ. தொ. கட்சி நடத்திய நான்கு ஆண்டுக் காலப் போராட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாய் அமைந்தது. கட்சி திரும்பவும் கட்டப்படுவதை எப்படியேனும் தடுக்க வேண்டுமென்று பெரு முயற்சி செய்த கலைப்புவாதிகளின் எல்லா சூழ்ச்சிகளையும் மீறி இம்மாநாடு கூட்டப்பட்டது. கலைப்புவாதிகளை இம்மாநாடு கட்சியை விட்டு விலக்கி வெளியே வைத்தது. ஆகவே கலைப்புவாதிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் இப்பொழுது இந்த மாநாட்டைத் தாக்குவது முற்றிலும் இயற்கையே.

எழுதுகிறவர் பெயர் குறிக்கப்படாத இந்த அபக்கியாதி வாய்ந்த பொய்க் கட்டுரைக்கு எங்கள் பதிலை *Vorwärts* அச்சிட மறுப்பதாலும், கலைப்புவாதிகளுக்கு ஆதரவான தனது நடவடிக்கைகளை அது தொடர்ந்து நடத்துவதாலும், ஜெர்மன் தோழர்கள் தகவல் தெரிந்து கொள்வதற்காக இந்தப் பதிலை ஒரு தனிப் பிரசுரமாய் வெளியிடுகிறோம். கலைப்புவாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் முக்கியத்துவத்தையும்

அது எப்படி நடந்தது, அதன் விளைவு என்ன என்பதையும் சுருக்கமாய் எடுத்துரைப்பதே இதன் பிரதான நோக்கம்.

ரு. ச. ஜ. தொ. கட்சியின் மத்திய ஏடான ''சொத்சியால்-டெமக்ராத்''தின் ஆசிரியர் குழு

பின்குறிப்பு: எங்கள் பிரசுரம் அச்சகத்துக்கு அனுப்பப் பட்ட பிறகு பிளெஹானவினுடைய **சமூக-ஜனநாயகவாதியின் நாட்குறிப்பு,**[58] இதழ் 16 (1912 ஏப்ரல்) எங்களுக்குக் கிடைக்கப் பெற்றது. *Vorwärts* இந்த அநாமதேய எழுத்தாளரால் ஏமாற்றப்பட்டு, ஜெர்மன் தொழிலாளர்களுக்கும் தவருனபடி தகவல் அளித்தது என்பதற்கு இந்த இதழ் சிறந்த நிரூபணமாய்த் திகழ்கிறது.

பிளெஹானவ் இன்னமும் தாம் 1912 ஜனவரியில் நடை பெற்ற மாநாட்டை ஆதரிப்பவரல்ல என்று திட்டவட்ட மாய்க் கூறிவிட்டு, பூந்த்[59] கூட்டும் மாநாடு **தற்போதுள்ள** கட்சி நிறுவனங்களது மாநாடல்ல, மாருக ''**நிறுவக**'' மாநா டாகும், அதாவது ஒரு புதிய கட்சியை நிறுவுமென எதிர் பார்க்கப்படும் மாநாடாகும் என்றும், இம்மாநாட்டைக் கூட்டுவோர் ''**எடுத்துக்காட்டான அராஜகக் கோட்பாட்டைப்**'' பின்பற்றுகிறவர்கள் என்றும், ''கலைப்புவாதத் தீர்மானத்தை'' அவர்கள் ஏற்றனர் என்றும், இந்தப் புதிய மாநாடு ''கலைப்புவாதிகளால் கூட்டப்படுகிறது'' என்றும் தெளிவாகவே குறிப்பிடுகிருர்.

* * *

ரு. ச. ஜ. தொ. கட்சியின் ருஷ்ய நிறுவனங்களுடைய மாநாட்டைத் தாக்குகையில் வெளிநாடுகளிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது சின்னஞ்சிறு கோஷ்டிகள் பிர யோகிக்க விரும்பும் ''உரிமைப் பறிப்பு'', ''ஆட்சிக் கவிழ்ப்பு'' முதலானவற்றை ஒத்த பயங்கரச் சொற்களை மெய்யாகவே நம்பியதன் மூலம் சில ஜெர்மன் தோழர்கள் வியப்பூட்டும் முறையில் தமது சிறு பிள்ளைத்தனத்தை வெளிப்படுத்திக் கொண்டனர். இருப்பினும், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆள் 24 மணி நேரத்துக்குத் தனது நீதிபதிகளை ஏசிக்கொண் டிருக்கலாம் என்ற முதுமொழியை நாம் மறக்கலாகாது.

''ருஷ்யக் கட்சி வாழ்க்கை'' என்னும் தலைப்பில் *Vorwärts*

இன் மார்ச் 26ஆம் தேதி இதழிலுள்ள கட்டுரை, கலைப்பு வாதிகள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டனர் என்று கூறும் மாநாட்டின் அதிகாரபூர்வமான அறிக்கையை அப்படியே வெளியிடுகிறது. இந்த அறிக்கை முற்றிலும் தெளிவானது; கலைப்புவாதிகளுடன் சேர்ந்து வேலை செய்வது சாத்தியமல்ல என்று ரு. ச. ஜ. தொ. கட்சியின் ருஷ்ய நிறுவனங்கள் அபிப் பிராயப்படுவதை இது அறிவிக்கிறது. இந்த விவகாரம் குறித்து ஒருவர் இதற்கு மாறுன அபிப்பிராயம் கொண் டிருக்கலாம்தான். அப்படியாளுல், கட்டுரை ஆசிரியர் இந்த முடிவுக்குக் காரணமான உட்கருத்துக்களையும், கலைப்புவாதப் போக்கை எதிர்த்து நான்கு ஆண்டுகளாய் நடைபெற் றிருக்கும் போராட்டத்தின் முழு வரலாற்றையும் மேலும் விளக்கமாய்ப் பரிசீலித்திருக்க வேண்டும்! ஆனுல் பெயர் குறிப்பிடாமல் *Vorwärts* இதழில் கட்டுரை தீட்டும் ஆசிரி யர் இந்த அடிப்படைப் பிரச்சினையின் குறைவு நிறைவு குறித்து ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. விவகாரத்தின் உட்பொருளை அறவே விட்டுவிட்டு நாடக பாணியில் ஓர் ஆசிரியர் வசனங் களைப் பொழிந்து தள்ளுவாராயின், வாசகர்கள் குறித்து அவருக்குள்ள மிகவும் தரக் குறைவான அபிப்பிராயத்தின் அறிகுறியாகவே அதைக் கொள்ள வேண்டும். கலைப்புவாதப் போக்கிலிருந்து கட்சி முறித்துக் கொண்டுவிட்டதென்ற இந்த உண்மைக்கு நமது அநாமதேய ஆசிரியர் கூறும் பதிலில் வெறும் வசைமொழியைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்ருல் இவ்வாசிரியரின் நிலை எவ்வளவு மோசமாய் இருக்கவேண்டும்?

பெயர் தெரியாத இந்த ஆசிரியரின் கட்டுரையிலிருந்து அங்கும் இங்குமாய்ச் சில விநோத வாசகங்களை மேற்கோ ளாய்க் கூறினுல் போதும். வ்பெரியோத், பிராவ்தா,[60] கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா முதலானவற்றைப் பிரதிநிதித் துவப்படுத்தும் "போக்குகள்" அல்லது "கோஷ்டிகள்" இந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்று அவர் கூறுகிருர். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி ஒருவர், ஃபிரிட்பர்கின் அல்லது *Sozialistische Monatshefte* இன்[61] "கோஷ்டி" அல்லது "போக்கு" கட்சிக் காங்கிரசில் பிரதி நிதித்துவம் பெறவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள் வாராயின் அவரைப் பற்றி என்ன சொல்வீர்களெனக் கேட்க

விரும்புகிறோம். ருஷ்யாவில் செயல்படும் நிறுவனங்களுக்குக் கட்சி மாநாட்டில் பங்கு கொள்ள உரிமை உண்டேயன்றி, வெளிநாடுகளிலுள்ள எல்லா வகையான ''போக்குகள்'' அல்லது ''கோஷ்டிகளுக்கு'' இவ்வுரிமை கிடையாதென்ற பழக்கத்தைத்தான் எங்கள் கட்சியிலும் நாங்கள் பின்பற்றி வருகிறோம். இத்தகைய ''கோஷ்டிகள்'' ருஷ்ய நிறுவனங்களிலிருந்து விலகிச் செல்லுமாயின், அவ்வுண்மை இக்கோஷ்டிகள் மீதான கடுமையான நிந்தனையாகி இவற்றுக்கு விதிக்கப்பட்ட முற்றிலும் நியாயமான மரண தண்டனையாகிவிடும். இத்தகைய ''போக்குகள்'' அல்லது ''கோஷ்டிகள்'' ருஷ்யாவிலுள்ள சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களின் செயற்பாட்டிலிருந்து துண்டித்துக் கொண்டு சென்று இயற்கையாகவே மரணமடைவதற்கு நாடுகடத்தப்பட்ட ருஷ்ய அரசியலாளர்களின் வரலாற்றிலும் அதே போல ஏனைய எல்லா நாடுகளிலிருந்தும் கடத்தப்பட்டவர்களது வரலாற்றிலும் உதாரணங்கள் நிறைய உண்டு.

மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட கட்சி-ஆதரவாளர்களான (அதாவது கட்சிக் கலைப்புப் போக்கை எதிர்க்கும்) மென்ஷிவிக்குகள்[62] பிளெஹானவாலுங்கூட நிராகரிக்கப்பட்டவர்கள் என்பதாய் வாதாடி நமது ஆசிரியர் எழுப்பும் கூச்சல் அபத்தக் கூச்சலாய் ஒலித்திடவில்லையா? கீவ் நிறுவனம் வெளிநாட்டிலுள்ள ''பிளெஹானவியர்களை'' (அதாவது பிளெஹானவ் ஆதரவாளர்களை) நிராகரிப்பது சாத்தியம்தான், ஆனல் வெளிநாட்டிலுள்ள எந்த எழுத்தாளரும், அவர் யாராய் இருப்பினும், கீவ் நிறுவனத்தை நிராகரிக்க முடியாதே. கலைப்புவாதிகளுக்கு உதவிய அல்லது அவர்களுடன் கூடிக் குலாவிய வெளிநாடுகளிலுள்ள எல்லாக் கோஷ்டிகளையும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, மாஸ்கோ மாவட்ட, கஸான், சராத்தவ், டிஃப்லிஸ், பாக்கூ, நிக்கலாயெவ், கீவ், எக்கத்தெரீனஸ்லாவ், வில்னெ, திவீன்ஸ்க் நிறுவனங்கள் ''நிராகரித்துவிட்டன''. ''நிராகரிக்கப்பட்டோரின்'' கூப்பாடுகளாலும் வசைமொழிகளாலும் இந்த விவகாரத்தில் எந்த மாற்றத்தையும் உண்டாக்க முடியுமென எதிர்பார்ப்பதற்கில்லை.

மேலும் ருஷ்யாவிலுள்ள ''தேசிய'' சமூக-ஜனநாயக

- 5 MAR 19

நிறுவனங்களும் (போலிஷ், லாத்விய, பூந்த் நிறுவனங்கள்), டிரான்ஸ்காக்கேசியப் பிராந்தியக் கமிட்டியும் ''நமது ருஷ்யக் கட்சியின் மிகப் பழைய, மிகவும் வலுவான நிறுவனங்களும், உண்மையில் இயக்கத்தின் முதுகெலும்பும்'' ஆனவை என்று இவ்வாசிரியர் பறைசாற்றுவது மெய்யாகவே வேடிக்கையாய்இல்லையா? டிரான்ஸ்காக்கேசியப் பிராந்தியக் கமிட்டி இருப்பது பிரச்சினைக்குரியதென்பது பொதுவாய்த் தெரிந்ததே 1908ஆம் ஆண்டு மாநாட்டில் இக்கமிட்டியின் பிரதிநிதித்துவத்தின் தன்மை இதை நிரூபித்தது. போலிஷ், லாத்விய நிறுவனங்கள் ரு. ச. ஜ. தொ. கட்சியின் முதல் ஒன்பது ஆண்டுகளில் (1898—1907) முற்றிலும் விலகியே இருந்து வந்தன; 1907-11ஆம் ஆண்டுகளிலும் அதிலிருந்து தனிமைப்பட்டே இருந்தன. பூந்த் 1903ல் கட்சியிலிருந்து பிரிந்து சென்று 1906 வரையில் (இன்னும் சுருராய்ச் சொல்வதெனில் 1907 வரையில்) வெளியேதான் இருந்து வந்தது. அதனுடைய ஸ்தல நிறுவனங்கள் இது நாள் வரையில் முழு அளவுக்குத் திரும்பவும் கட்சியில் சேர்ந்தாகவில்லை. ரு.ச.ஜ.தொ. கட்சியின் 1908ஆம் ஆண்டு மாநாட்டில்[63] இது அதிகாரபூர்வமாய் நிலைநாட்டப்பெற்றது. லாத்விய நிறுவனத்திலும் பூந்திலும் ஒரு சமயம் கலைப்புவாதக் கூறுகளும் மற்றொரு சமயம் கட்சிக் கலைப்பை எதிர்க்கும் கூறுகளும் மேல்நிலை பெற்றன. போலிஷ்காரர்களைப் பொறுத்தவரை அவர்கள் 1903ல் மென்ஷிவிக்குகளுடனும், 1905ல் போல்ஷிவிக்குகளுடனும் இருந்தனர்; 1912ல் கலைப்புவாதிகளுடன் ''இணக்கம் காண'' முயன்று தோல்வியுற்றனர்.

இந்தத் தோல்வியைப் பின்வரும் தொடரின் மூலம் மூடி மறைக்க இவ்வாசிரியர் கூச்சத்துடன் முயலுகிருர்: ''தொடக்கத்தில் போலந்து, லித்துவேனிய சமூக-ஜனநாயகவாதிகளின் ஒரு பிரதிநிதியும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்'' என்கிருர். ஏன் தொடக்கத்தில் மட்டும் கலந்து கொண்டார்? கூச்சத்துடனை இந்த மௌனத்திற்குரிய விளக்கத்தை இம்மாநாடு குறித்து பூந்த் வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையில் காண்கிருேம். போலிஷ்காரர்களின் பிரதிநிதி மாநாட்டிலிருந்து விலகி வெளியேறி எழுத்து மூலம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார் என்றும், இம்மாநாடு கலைப்பு

வாதிகளுக்கு ஆதரவாய் ஒருபாற் சாய்ந்து பட்சபாதம் காட்டியதால் இதனுடன் தான் ஒத்துழைப்பது சாத்தியமற்றதாகி விட்டதென்று இதில் அவர் கூறினர் என்றும் பூந்தின் அறிக்கை ஒளிவுமறைவின்றி குறிப்பிடுகிறது.

கலைப்புவாதிகளுடைய போக்கின் மெய்யான சாரப்பொருளையும், கட்சியைத் திரும்பவும் கட்டுவதற்கு உதவ அவர்கள் மறுப்பதையும், கட்சியின் மத்தியக் கமிட்டியைச் சீர்குலைக்க அவர்கள் செய்து வரும் வேலைகளையும் ஆராய்வதைக் காட்டிலும், இந்த ஆசிரியர் மிகவும் விரும்பிச் செய்கிறரே அது போல "ஒற்றுமை" குறித்து (கலைப்புவாதிகளுடனு?) பொருளற்ற வெற்றுப் பதங்களைக் குவித்துச் செல்வது ரொம்பச் சுலபம்தான். போலிஷ்காரரர்களின் பிரதிநிதி போல் ஷிவிக்குகள் அல்லது லெனினியவாதிகளுடன் அல்ல (கடவுள் தடுத்துக் காப்பாராக), பூந்துக்காரர்களுடனும் லாத்வியர்களுடனும் சேர்ந்து வேலை செய்ய மறுத்துவிட்டார் (இவர்களுடன் சேர்ந்து வேலை செய்து பயனில்லை என்பதால்)—இது குறித்து மௌனம் சாதிக்கையில் சொற்சிலம்பாடுவது இன்னுங்கூட சுலபம்தான்.

ஆனல் உண்மையில் கலைப்புவாதத்தின் தோற்றுவாய் என்ன? 1912ஆம் ஆண்டு மாநாடு தன்னைத் தலைமைக் கட்சி அதிகார உறுப்பாய் அமைத்துக் கொண்டு கலைப்புவாதிகளை விலக்க வேண்டி வந்தது ஏன்?

ருஷ்யாவில் எதிர்ப்புரட்சி எங்களது கட்சியின் அணிகளில் மிகவும் எடுப்பான முறையில் சிதைவுப் போக்கை உண்டாக்கிற்று. முன்பின் கண்டிராத மூர்க்கம் கொண்ட அடக்குமுறை பாட்டாளி வர்க்கத்தின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தாரின் அணிகளில் கட்சித் துறப்பு மிகவும் மலிந்து விட்டது. எங்கள் முதலாளித்துவப் புரட்சியின் தலைவனை பாட்டாளி வர்க்கத்துடன் 1905ல் இயல்பாகவே சேர்ந்து கொண்ட முதலாளித்துவச் சகபயணிகள் சமூக-ஜனநாயகக் கட்சியிலிருந்து ஓடத் தலைப்பட்டனர். இந்தக் கட்சித் துறப்பு கலைப்புவாதம், வாபஸ்வாதம் ஆகிய இரு வடிவங்களில் நடைபெற்றது. பெரும்பாலான மென்ஷிவிக் எழுத்தாளர்கள் (பத்ரேசவ், லெவித்ஸ்கி, லாரின், மார்த்தவ், டான், மர்த்தீனவ் முதலானேர்) முன்னதன் கருவாயினர்.

சட்டவிரோதக் கட்சி ஏற்கனவே கலைக்கப்பட்டுவிட்டது, இதைப் புத்துயிர் பெறச் செய்யும் எந்த முயற்சியும் பிற்போக்குக் கற்பனையே ஆகுமென்று இவர்கள் பறைசாற்றினர். பகிரங்கமான தொழிலாளர் கட்சியை அமைப்பதே அவர்களுடைய கோஷமாயிருந்தது. ருஷ்யாவில் நிலவிய அரசியல் நிலைமைகளில், மிதவாதிகளின் கட்சியான காடேட்டுகளின் கட்சியுங்கூட சட்டரீதியான அந்தஸ்து பெற்றிராத இந்நிலைமைகளில் பகிரங்கமான சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி ஒன்றை அமைப்பது வெறும் பகற்கனவே ஆகும். கலைப்புவாதிகள் சட்டவிரோதக் கட்சியை நிராகரித்தனர், ஆனால் சட்டபூர்வமானக் கட்சி ஒன்றை அமைத்திடுவதெனத் தாம் ஏற்ற கடமையை நிறைவேற்றவில்லை. சட்டபூர்வமான பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியதுதான் நாளாவட்டத்தில் அவர்க்ள் செய்ததெல்லாம். இக்கட்டுரைகளில் அவர்கள் ''தலைமறைவான'' நிறுவனத்தைக் கேலி செய்தனர், அது செத்து மடிந்துவிட்டது என்று கூறி மிதவாதிகளுக்கு ஒத்து ஊதினர், மிதவாதத் தொழிலாளர் கொள்கையின் சிறப்புகளை மெச்சிப் புகழ்ந்தனர். கலைப்புவாத நாஷா ஸாரியாவை ஜெர்மன் *Sozialistische Monatshefte*வுடன் பிளெஹானவ் ஒப்பிட்டது முற்றிலும் சரியே. மென்ஷிவிக் பிளெஹானவ் (போல்ஷிவிக்குகளைப் பற்றிக் கூற வேண்டியதில்லை) கலைப்புவாதத்தின் மீது கடும் போர்ப் பிரகடனம் செய்து அவர்களது வெளியீடு எதற்கும் எழுத மறுத்தார்; மார்த்தவ், அக்செல்ரோத் இவர்களுடன் உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். பத்ரேசவ் குறித்து மத்திய ஏட்டில் ''நமது கட்சி இருக்கவில்லை என்கிற ஓர் ஆளை நமது கட்சியும் இல்லாதவராகவே கொள்கிறது'' என்று பிளெஹானவ் எழுதினார். 1908 டிசம்பரிலேயே கட்சி மாநாடு ஒன்று கலைப்புவாதத்தை அழுத்தம் திருத்தமாய்க் கண்டனம் செய்தது. ''தற்போதுள்ள ரு. ச. ஜ. தொ. கட்சி நிறுவனத்தைக் கலைத்து ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாய் [இதை நன்கு கவனிக்க வேண்டும்!] என்ன தான் விலை கொடுக்க வேண்டிவரினும் சட்டபூர்வமாய் இருக்கும் தளர்வான ஒரு கழகத்தை அமைப்பதற்குக் கட்சி அறிவுத் துறையினர் கோஷ்டி ஒன்று செய்யும் முயற்சி'' என்று கலைப்புவாதத்தை அம்மாநாடு விவரித்தது. சட்டபூர்வமான

எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தை மறுப்பதற்கு நேர் மாருய் ரு. ச. ஜ. தொ. கட்சி சந்தேகத்துக்கு இடமில்லாதபடி இந்த அவசியத்தை வலியுறுத்தியே வந்திருக்கிறது என்பது தெரிந்ததுதான். ஆனால் ருஷ்யாவில் பகிரங்கமாய் இயங்கும் சட்டபூர்வமான கட்சி சாத்தியமன்று, சந்தர்ப்பவாத அறிவுத்துறையினர் மட்டுமேதான் இத்தகைய ஒரு கட்சியைப் பற்றி பேச முடியும். நமது கட்சி நிறுவன வகையை சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம்[64] செயல்பட்ட காலத்தில் இருந்த ஜெர்மன் கட்சி நிறுவன வகையுடன் ஓரளவு ஒப்பிடலாம்: பாராளுமன்றத்தில் சட்டபூர்வமாய் இயங்கும் கோஷ்டி, சட்டபூர்வமாய் இருந்துவரும் எல்லா விதத் தொழிலாளர் சங்கங்கள் ஆகிய இவை அத்தியாவசியமாகும், ஆனால் சட்டவிரோதமான கட்சி நிறுவனத்தை இயக்கத்தின் அடிப்படையாய்க் கொண்டிருத்தல் வேண்டும்.

''வாபஸ்வாதிகள்'' மூன்ருவது அரசாங்க டூமாவிலிருந்து சமூக-ஜனநாயக உறுப்பினர்களைத் திருப்பியழைக்க விரும்பினர்; அந்த டூமாவைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்ற கோஷத்தை எழுப்பினர். இந்த வாபஸ்வாதிகளுடன் போல்ஷிவிக்குகளில் ஒரு பிரிவினர் சேர்ந்து கொண்டனர். லெனினும் ஏனையோரும் இவர்கள் மீது தளராத போர் தொடுத்தனர். வாபஸ்வாதிகளும்அவர்களுடைய ஆதரவாளர்களும் வ்பெரியோத் கோஷ்டியாய் அமைந்தனர். அந்தப் பெயரைக் கொண்ட சஞ்சிகையுடன் ஒத்துழைத்த எழுத்தாளர்கள் (மக்சீமவ், லுனச்சார்ஸ்கி, பக்தானவ், அலெக்சீன்ஸ்கி) கருத்துமுதல்வாதத் தத்துவவியலின் பல்வேறு வடிவங்களையும்—''பாட்டாளி வர்க்கத் தத்துவவியல்'' என்ற பிரமாத பெயரைச் சூட்டி அவர்கள் இவற்றை விரித்துரைக்கின்றனர்—, சோஷலிசத்துடன் மதத்தின் இணைவையும் பிரசாரம் செய்து வந்துள்ளனர். இந்தக் கோஷ்டி என்றுமே குறிப்பிடத்தக்க செல்வாக்கு பெற்றிருந்ததில்லை. ருஷ்யாவுடன் எல்லாத் தொடர்புகளும் இழந்து வெளிநாடுகளிலிருந்த திராணியற்ற பல்வேறு கோஷ்டிகளுடன் சமரசங்கள் செய்துதான் எப்படியோ ஒருவிதமாய்க் காலமோட்டி வந்தது. ஒவ்வொரு பிளவின்போதும் தவிர்க்க முடியாதவாறு தோன்றி

விடும் இத்தகைய கோஷ்டிகள், இப்பொழுது ஒரு தரப்புக் கும் பிறகு இன்னொன்றுக்குமாய் ஊசலாடிக் கொண்டிருக்கின் றன. இவை மட்டரக அரசியலில் ஈடுபடுகின்றனவே அன்றி, திட்டவட்டமான எந்தப் போக்கையும் பிரதிநிதித்துவப் படுத்துவனவாய் இல்லை. இவற்றின் செயற்பாடு அற்பத்தன மான சூழ்ச்சி புரிவதில் பிரதானமாய் அடங்கிவிடுகிறது. இந்தக் கோஷ்டிகளில் ஒன்றின் பிரதிநிதியே திரோத்ஸ்கியின் பிராவ்தா.

கலைப்புவாதம், வாபஸ்வாதம் ஆகிய இவை இரண்டும் சமூக-ஜனநாயகக் கட்சியின் முதலாளித்துவச் சகபயணி களைக் கவர்ந்திழுக்கும் குட்டிபூர்ஷுவாப் போக்குகள் என் பது மார்க்சியவாதி ஒவ்வொருவருக்கும் தெளிவாய்த் தெரிந் ததுதான். இந்தப் போக்குகளுடன் ''சமாதானம்'' அல்லது ''இணக்கத்துக்கு'' இடமில்லை என்பது விவாதமின்றியே ஏற் கப்படும் ஒன்று. சமூக-ஜனநாயகக் கட்சியின்முன், தான் அழிந் துபடுவது அல்லது இந்தப் போக்குகளைத் தன்னிடமிருந்து அறவே களைந்துவிடுவது ஆகிய இரண்டில் ஒரு வழிதான் உள்ளது.

இந்தத் தத்துவார்த்த முடிவு சரியானதுதான் என்பதை இணக்கம் காண்பதற்கு 1910 ஜனவரியில் செய்யப்பட்ட முயற்சி நிரூபித்தது. மத்தியக் கமிட்டியின் கடந்த பிளீனம் கூட்டம் இவ்விரு போக்குகளில் எதுவுமே சமூக-ஜனநாயகத் தன்மையது அல்ல என்று கலைப்புவாதிகளும் வாபஸ்வாதி களும் உடன்பட, ஒருமனதாய் அப்பொழுது பிரகடனம் செய் தது. ஆனால் ஆத்மார்த்திக விருப்பம் தெரிவித்ததற்குமேல் ஒன்றும் நடைபெறவில்லை. கலைப்புவாதிகளும் வாபஸ்வாதி களும் தக்க தீர்மானத்தில் ''கையொப்பமிட்டது'' மெய் தான். ஆனால் தொடர்ந்து அவர்கள் முழு மூச்சுடன் கட்சி-எதிர்ப்புப் பிரசாரம் நடத்திக் கொண்டுதான் இருந்தனர், தமது சொந்த நிறுவனங்களை விடாமல் கட்டிக்காத்துதான் வந்தனர். 1910 பூராவிலும் இவ்விரு போக்குகளுக்கும் எதி ரான போராட்டம் இடையறாது மேலும் மேலும் கூர்மை யாகிச் சென்றது. மேலே மேற்கோளாய்த் தரப்பட்ட பிளெஹா னவின் சொற்கள் 1910 மே மாதத்தில் சொல்லப்பட்டவை. கலைப்புவாதிகள் ஜனவரி மாதத் தீர்மானத்தை மீறிவிட்ட

தால் அவர்களுடன் இணக்கம் காணும் பிரச்சினைக்கு இடமே இல்லை என்று 1910 ஜனவரியில் போல்ஷிவிக்குகளின் சார்பில் லெனின் கூறினார்.*

ருஷ்யாவில் மத்தியக் கமிட்டியைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதற்கான முயற்சி தோல்வியுற்றது. காரணம் கலைப்பு வாதிகள் உதவ மறுத்துவிட்டனர். ''ஒற்றுமை'' இலட்சி யத்தைப் பாதுகாப்பதற்குக் கடைசியாய் இருந்த வழி வெளி நாடுகளில் இருந்த மத்தியக் கமிட்டியைக் கூடச் செய்தல். இதற்குரிய முயற்சி 1911 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட் டது. மத்தியக் கமிட்டியின் பதினைந்து உறுப்பினர்களில் ஒன் பது பேர் வெளிநாடுகளில் இருந்தனர். எட்டுப் பேர் இக்கூட் டத்துக்கு வந்தனர். ஆனால் கலைப்புவாதிகள் இருவர்—கோல சின் ஆதரவாளரான ஈகரெவும், ஒரு பூந்துக்காரரும் (பெர்) —கூட்டத்திலிருந்து உடனடியாகவே வெளியேறிவிட்டனர்; கட்சியின் மத்தியக் கமிட்டியை இவ்விதம் இவர்கள் முடி வாய்க் குலையச் செய்தனர்.

கலைப்புவாதிகள் மத்தியக் கமிட்டியில் பங்கு கொள்ள மறுத்ததானது அவர்கள் முற்றாகப் பிரிந்து சென்றுவிட்டதை யும் மத்தியக் கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டதையும் குறித்தது. அக்காலத்தில் வேறொரு மத்திய உறுப்பு வெளிநாடுகளில் எஞ்சியிருந்தது — மத்தியக் கமிட்டியின் வெளிநாட்டுக் குழு எனப்படுவதே அது. மத்தியக் கமிட்டி இல்லாமற் போனதும் போல்ஷிவிக்குகள் இந்த வெளிநாட்டுக் குழுவிலிருந்து விலகிக் கொண்டுவிட்டனர். போலிஷ்காரர்களும் லாத்வியர் களும் பூந்துக்காரர்களும் கோலஸ் கோஷ்டியின் உறுப்பினர் களும் (வெளிநாடுகளிலிருந்த கலைப்புவாதிகள்) மட்டும்தான் எஞ்சியிருந்தனர். *Vorwärts*இல் வெளிவந்த கட்டுரையைப் பற்றி தெரிந்த வாசகர் இது பூந்தால் கூட்டப் பெற்ற அப கீர்த்தி வாய்ந்த அம்மாநாட்டின் அதே திருக்கூட்டம்தான் என்பதை இவ்விதம் தாமே கண்டு கொள்ளலாம். ஏனெனில் டிரான்ஸ்காக்கேசியப் பிராந்தியக் கமிட்டி தனது பிரதிநிதி களாய் இருக்கும்படி 1908லேயே கோலஸ் கோஷ்டிக்கு

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 19, பக்கங்கள் 252-304.—பதிப்பாசிரியர்.

அதிகாரமளித்திருந்தது. ''மிகப் பழைய வலுமிக்க ருஷ்ய நிறுவனங்களான'' இவை—நமது அநாமதேய ஆசிரியர் தமது இந்த மிகப் புதிய கண்டுபிடிப்பை எடுத்துரைக்கக் கையாளும் அதே சொற்களில் கூறுகிறேம்—என்ன செய்திருக்கின்றன என்பதைப் பார்ப்போம். அவற்ருல் ஒன்றுபட முடியவில்லே, வெளிநாட்டுக் குழுவை தாமே கலேத்துக் கொண்டு விட்டன! மத்தியக் கமிட்டியின் வெளிநாட்டுக் குழு தன்னேத் தானே கலேத்துக் கொண்டுவிட்டதாய் அறிவித்து ஏற்கனவே 1911ஆம் ஆண்டு இலேயுதிர் காலத்திலேயே அறிக்கை வெளியிட்டிருந்தது. இதைப் பற்றி பிளெஹானவ் தமது நாட்குறிப்பில் பின்வருமாறு கருத்துரைத்தார்: ''அதன் ஆன்மா அமைதியடைக! கட்சியின் இந்தக் குழு கட்சியைக் கலேக்க முனேந்த கானவன்களின் கைக்குக் கிடைத்த ஆயுதமாகியது, ஆகவே அது ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தைப் பெரிய அபாயத்துக்கு உள்ளாக்கிற்று. இந்தக் குழு புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆற்றக்கூடிய பணி ஒன்றே ஒன்றுதான்: காலத்தில் மாள்வதுதான்''.(சமூக-ஜனநாயகவாதியின் நாட்குறிப்பு, பாகம் 2, இதழ் 15ன் அனுபந்தம், பக்கம் 1.) பிளெஹானவை யாரும் மாநாட்டின் ஆதரவாளராய்க் கூற முடியாது. இவர் கூறிய இந்த அபிப்பிராயம் ''உரிமைப் பறிப்பு'' என்றும் இன்ன பலவாருகவும் கூச்சலிடுவோரின் பாசாங்கு எவ்வளவு நகைக்கத்தக்கது என்பதைத் தக்கபடிக் காட்டுகிறது.

கட்சியில் ஒற்றுமையை உண்டாக்க மேலும் ஒரு வழி இருந்தது, அதாவது ருஷ்ய நிறுவனங்களின் மாநாட்டைக் கூட்டுவதென்னும் வழி. போலிஷ்காரர்கள், லாத்வியர்கள், பூந்துக்காரர்கள் இவர்களது தேசிய நிறுவனங்கள் ருஷ்யாவில் நடைபெற்ற பணிகளிலிருந்து அறவே துண்டிக்கப்பட்டிருந்ததால், இத்தகைய ஒரு மாநாட்டைக் கூட்ட இந் நிறுவனங்களால் ஏதும் செய்ய முடியவில்லே.

1910 நவம்பர் 26ல் திரோத்ஸ்கி மாநாடு கூட்டப்பட வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். வ்பெரியோத், கோலஸ் கோஷ்டிகளின் (வெளிநாடுகளிலுள்ள கலேப்புவாதிகள்) ஆதரவு (சொல்வடிவில்) அவருக்குக் கிடைத்தது. ஆனுல் இந்தக் கோஷ்டிகளின் செயலற்ற தன்மை காரணமாய் இவற்றின் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போனது எதிர்பார்க்கக் கூடியதே.

போல்ஷிவிக்குகள், ''இணக்கவாதிகள்'' (''கட்சி-ஆதரவு போல்ஷிவிக்குகள்'' என்பதாகவும் இவர்கள் அழைக்கப்பட்டு வந்தனர்), போலிஷ்காரர்கள் ஆகியோர் கையொப்பமிட்ட வேண்டுகோள் ஒன்று 1911 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. அன்று மிகவும் பலம் படைத்த நிறுவனமாயிருந்த கீவ் நிறுவனத்துக்கு அழைப்பு விடுப்பதுதான் இந்தப் பணியில் முதல் நடவடிக்கையாய் அமைந்தது. 1911 அக்டோபரில் ''மாநாட்டைக் கூட்டுவதற்காக ருஷ்யாவின் (அதாவது ருஷ்யாவின் நிறுவனங்களால் அமைக்கப் பெற்று ருஷ்யாவில் வேலை செய்யும்) நிறுவகக் கமிஷன்'' துவக்கப்படலாயிற்று. கீவ், எக்கத்தெரீனஸ்லாவ், டிஃப்லிஸ், பாக்கூ, எக்கத்தெரின்பர்க் நிறுவனங்கள் இந்தக் கமிஷனை அமைத்தன. விரைவில் மேலும் இருபது நிறுவனங்கள் இதில் சேர்ந்து கொண்டன. ருஷ்ய நிறுவனங்களுடைய பிரதிநிதிகள் சேர்க்கப்பட்டதானது உடனே போல்ஷிவிக்குகளும் (''லெனினியவாதிகள்'' என்றழைக்கப்படுவோர்) கட்சி-ஆதரவு மென்ஷிவிக்குகளும் மிகப் பெருவாரியாய் இருப்பதைப் புலப்படுத்திற்று. வெளிநாடுகளிலுள்ள கோஷ்டிகளைப் பின்பற்றுவோர் ருஷ்யாவில் யாரும் இல்லையாதலால் இவை ''ஏற்கப்படாது'' ஒதுக்கப்படலாயின.

முடிவில் 1912 ஜனவரி மாதத்தில் ருஷ்யாவின் நிறுவகக் கமிஷன் மாநாட்டைக் கூட்டிற்று. விதிவிலக்கின்றி எல்லா ருஷ்ய நிறுவனங்களும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டன. கலைப்புவாதிகளும் சரி, ''ருஷ்யர்களல்லாதோரும்'' (போலிஷ்காரர்கள், லாத்வியர்கள், பூந்துக்காரர்கள்) சரி, வெளிநாடுகளிலுள்ள ஊசலாட்டக் கோஷ்டிகளும் சரி பிரதிநிதிகளை அனுப்பவில்லை. கட்சி வேலை செய்து வந்த முன்பின் கண்டிராத கடின நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் ருஷ்ய நிறுவனங்கள் முடிந்த அளவுக்கு முழுமையாய்ப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்ததை மாநாடு சந்தேகத்துக்கு இடமின்றிக் கண்டதும், ருஷ்யாவில் மத்திய உறுப்பு ஒன்று இல்லையேல் கட்சி அழிந்துவிடுமென்பதையும் வெளிநாடுகளில் பிளவு தொடர்ந்து நீடித்து வந்ததென்பதையும் நான்காவது டூமாவுக்கு நடைபெறப் போகும் தேர்தல்கள் இனியும் எந்தத் தாமதமுமின்றி கட்சி மீண்டும் கட்டி

யமைக்கப்படுவது அவசியமென்பதையும் மாநாடு நிலைநாட்டியதும், அது தன்னைக் கட்சியின் தலைமை அதிகார உறுப்பாய் அமைத்துக் கொண்டு மத்தியக் கமிட்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று, கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று.

இதுதான் நீடித்து நடைபெற்ற இந்தப் போராட்டத்தின் போக்கும் விளைவும். கலைப்புவாதிகள் ''பகிரங்கமான'' ஒரு கட்சியைத் தோற்றுவிப்பதில் வெற்றியடைவார்களா, அல்லது கேடுகெட்ட சமரசத்தின் அடிப்படையில் கட்சி என்பதாய் ஒரு வகை கட்டுக்கதையைப் புனையப் போகிறார்களா என்பதை வருங்காலம் தெளிவுபடுத்தும்.

கலைப்புவாதிகள், மாநாட்டுக் கருத்தைப் பின்தொடர்வோரான கட்சி ஆதாரவாளர்கள் ஆகிய இரு சாராருக்கும் ருஷ்யாவினுள் இருக்கும் பலம் குறித்து தெளிவான, எளிதில் சரிபார்க்கக் கூடிய புள்ளிவிவரங்கள் இருக்கின்றனவா? இருக்கின்றன. ருஷ்யாவில் மார்க்சிய எழுத்தாளர்களும் டூமாவிலுள்ள சமூக-ஜனநாயகக் குழுவின் உறுப்பினர்களும் எழுதும் அனைத்து ருஷ்ய அரசியல் பத்திரிகைகள் இரண்டு—இரண்டே இரண்டுதான்—உள்ளன. இவை ''போக்குகளைப்'' பிரதிநிதித்துவப்படுத்துபவை; வெளிநாடுகளில் இருக்கும் ஏடுகளைப் போல வசைமொழியால் நிரப்பப்பட்டவையல்ல, நீண்ட பல ஆண்டுகளாய் நடைபெற்று வரும் பகிரங்கமான, கருத்தூன்றிய எழுத்துப் பணியின் வடிவில் அமைந்தவை. இவை கட்சிப் பத்திரிகைகள் அல்ல என்பது மெய்தான். இவை முற்றிலும் சட்டபூர்வமானவை, தற்போது ருஷ்யாவில் நிலவும் ஆட்சியால் விதிக்கப்பட்டிருக்கும் வரம்புகளுக்கு உட்பட்டவை. ஆயினும் சமூக-ஜனநாயகத் தத்துவார்த்தச் சிந்தனையின் மிக முக்கிய சாயல்கள் யாவும் இந்தப் பத்திரிகைகளில் மொத்தத்தில் பிழையற்றவாறு பிரதிபலிப்பு பெற்று வருவது மறுக்க முடியாததாகும். இரண்டு ''போக்குகள்'' தான்—கலைப்புவாதமும் கலைப்புவாத-எதிர்ப்பும்தான் (மாநாட்டை ஆதரிப்போர்)—இவற்றில் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. ஏனெனில் ஓரளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ''போக்கு'' வேறு எதுவும் இல்லை. பிராவ்தா, வ்பெரியோத், ''கட்சி-ஆதரவு போல்ஷிவிக்குகள்'' (அல்லது இணக்கம்

காண்பதில் நாட்டங் கொண்ட ''இணக்கவாதிகள்'') முதலானவை போன்ற சின்னஞ்சிறு கோஷ்டிகள் யாவும் முக்கியத்துவம் சிறிதும் இல்லாதவை. கலைப்புவாதிகளின் கருத்துக்கள் ருஷ்யாவில் நாஷா ஸாரியா மாத இதழிலும் (1910ல் துவக்கப்பட்டது), ழிவோயே தேலோ வார ஏட்டிலும் (இதழ் 8தான் கடைசி இதழ்) வெளியீடாகின்றன. கட்சி ஆதரவாளர்களின் (போல்ஷிவிக்குகளும் கட்சி-ஆதரவு மென்ஷிவிக்குகளும்) கருத்துக்கள் மாத இதழான புரோஸ்வெஷ்ச்சேனியேவிலும்[65] (1911ல் துவக்கப்பட்டது—அதற்கு முன் மீசில் என்னும் பெயரில் வெளிவந்தது), ஸ்வெஸ்தா செய்தியேட்டிலும் (இதழ் 53தான் கடைசி இதழ்) வெளியீடாகின்றன. கட்சி-ஆதரவு சமூக-ஜனநாயகவாதிகள் ''சட்டபூர்வமான'' செயற்பாட்டை நிராகரிக்கிறார்கள் என்பதைக் காட்டிலும் தவறான அபிப்பிராயம் ஒன்று இருக்க முடியாது. இதற்கு நேர் மாறானதே உண்மை. ஏனெனில் இந்தச் செயற்பாட்டிலுங்கூட கலைப்புவாதிகளைக் காட்டிலும் அவர்கள்தான் பலமுடையோராய்த் திகழ்கிறவர்கள். டூமாவிலுள்ள சமூக-ஜனநாயகக் குழுதான் சட்டபூர்வமாய்ச் செயல்படும் சமூக-ஜனநாயகவாதிகளுடைய சர்ச்சைக்கு இடமில்லாத ஒரேயொரு அனைத்து ருஷ்யப் பகிரங்க நிறுவனம். இது முற்றிலும் சட்டபூர்வமானது, நேரடியாய்க் கட்சியுடன் தொடர்பில்லாதது. ஆனால் யார் யார் எல்லாம் இதன் உறுப்பினர்கள் என்பது தெரிந்ததுதான்; இவர்களில் ஒவ்வொருவரும் எந்தப் போக்கின் பிரதிநிதி என்பதும் தெரிந்ததுதான்.

டூமாவிலுள்ள குழுவின் உறுப்பினர்களில் இருவர்—அஸ்த்திரஹான்த்செவும் குஸ்னித்சோவும்* — கலைப்புவாத ழிவோயே தேலோவில் நிரந்தரமாய் எழுதுகிறவர்கள். கலைப்பு

---

* அண்மைக் காலம் வரையில் பெலவூசவும் மூன்றாவது ஒருவராய் இருந்தார். இந்தத் தீவிரக் கலைப்புவாதி—ருஷ்ய பிஸ்ஸொலாட்டி — இப்பொழுது டூமாக் குழுவை விட்டு விலகிவிட்டார். இக்குழு பகிரங்கமாய் எல்லா வாக்காளர்களுக்கும் இதை அறிவித்து எச்சரிக்கை செய்திருக்கிறது; டூமாவிலிருந்து அவர் ராஜினாமா செய்துவிட வேண்டுமெனக் கோரியுள்ளது. முரணற்றக் கலைப்புவாதம் சில நேரங்களில் எந்த அளவுக்குப் போய்விடுகிறது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்!

வாதத்தை எதிர்க்கும் ஸ்வெஸ்தாவில் டூமாவின் எட்டு உறுப்பினர்கள்—வரோனின், வைலோஷ்னிக்கவ், யெகோரவ், ஸஹாரவ், பக்ரோவ்ஸ்கி, பிரெத்கால்ன், பொலித்தாயெவ், சுர்க்கோவ்—இருக்கிருர்கள். டூமா உறுப்பினர்களில் இருவர்—ச்ஹெயீத்ஸே, கெகெச்கொரி—இந்த இரு பத்திரிகைகளில் எதற்கும் எழுதுவதில்லை; ஒருவர் (ஷுர்க்கானவ்) இரண்டுக்கும் எழுதுகிறவர்.

எட்டுக்கு இரண்டுதான் விகிதாசாரம்! இந்தப் புள்ளி விவரங்கள் மறுக்க முடியாதவை, பகிரங்கமானவை, எளிதில் சரிபார்க்கப்படக் கூடியவை. கலைப்புவாதிகள், கலைப்புவாத-எதிர்ப்பாளர்கள் இரு சாராருக்கும் இடையிலான சக்திகளின் பரஸ்பர நிலையை மதிப்பீடு செய்ய நமக்கு உதவும் தெளிவான புள்ளிவிவரங்கள் இவை. நிலைமை இப்படி இருக்கையில், மிகப் பெருவாரியானேர் கலைப்புவாதிகளையே பின்பற்றுவதாய்ப் பெயர் தெரியாத நமது ஆசிரியர் வீம்புப் பேச்சு பேசுவது குறித்து நாம் மேற்கொண்டு ஒன்றும் சொல்லத் தேவையில்லை. தர்த்தரேன் தெதரஸ்கோன்[66] பாணியிலுள்ள இந்தக் கூற்று திரோத்ஸ்கியினுடைய கூற்றையே* நினைவுபடுத்துவதால், இது பெரிதாய் விவாதிக்கத் தகுதியற்றதாகிவிடுகிறது.

ரு. ச. ஜ. தொ. கட்சியினுள் போராட்டம் சில நேரங்களில் மிகக் கடுமையான வடிவங்களில் நடைபெறும் போராட்டமாகிவிடுகிறது. நாடுகடத்தப்பட்டோரின் வாழ்க்கையில் இதையன்றி வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. எதிர்ப்புரட்சிக்கும் நாடுகடத்தப்படலுக்கும் பலியாக நேரும் எந்த நாட்டிலும் என்றுமே இதையன்றி வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

---

* கோப்பன்ஹேகன் காங்கிரசின்போது ரு. ச. ஜ. தொ. கட்சி மீது இழிவான தாக்குதல்கள் மலிந்த அநாமதேயக் கட்டுரை ஒன்றை *Vorwärts* இதழில் திரோத்ஸ்கி வெளியிட்டார். இந்தத் தாக்குதல்கள் அவ்வளவு இழிவானவையாய் இருந்ததால், லெனின் மட்டுமின்றி ருஷ்யப் பிரதிநிதிக் குழுவின் உறுப்பினர்களாயிருந்த பிளெஹானவும் வார்ஸ்கியும் கூட செயற்குழுவுக்கு எழுத்து மூலம் கண்டனம் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

இந்தப் போராட்ட வடிவங்களை யாரும் ஆடம்பரமான சொற்களைக் கொண்டு ''கண்டனம்'' செய்து இவற்றை ஒதுக்கித் தள்ளிவிடுவதும், ''ஒற்றுமையின் சிறப்புகள்'' பற்றிய அற்பத்தனமான பசப்புரைகளில் இறங்குவதும் அலட்சியப் புத்தியைக் காட்டுவதே ஆகும். 1908-11ஆம் ஆண்டுகளின் சோதனை மிக்க காலத்தில் ரு. ச. ஜ. தொ. கட்சியின் வரலாற்றைக் கருத்தூன்றிப் படித்தறிய விரும்புகிறவர் எவரும் சட்டவிரோத வெளியீடுகளும் இன்னுங்கூட அதிகமாய்ச் சட்டபூர்வ வெளியீடுகளும் நிறைய இருக்கக் காண்பார். போக்குகளின் தன்மை, கருத்து வேறுபாடுகளின் அடிப்படை முக்கியத்துவம், போராட்டத்தின் மூல வேர்கள், அதன் வளர்ச்சியின் சூழல்கள், நிலைமைகள் முதலான யாவும் குறித்து இந்த வெளியீடுகளில் போதனை அளிக்கும் விவரப் பொருள்கள் அடங்கியுள்ளன.

உலகில் எந்த சமூக-ஜனநாயகக் கட்சியும் என்றுமே—முக்கியமாய் முதலாளித்துவப் புரட்சிகளுக்குரிய சகாப்தத்தில்—கடினமான போராட்டமும் பாட்டாளி வர்க்கத்தின் முதலாளித்துவ சகபயணிகளுடன் பல பிளவுகளும் இல்லாமல் அமைக்கப்பட்டதில்லை. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக்கும் பொருந்துவதே இது. 1898 முதலாய் இத்தகைய சகபயணிகளுக்கு எதிரான கடும் போராட்டத்தில் இக்கட்சி வளர்ந்து வலிமை பெற்று வந்துள்ளது, எல்லா இடையூறுகளையும் மீறிப் பக்குவமடைந்து உறுதியடைந்து வந்துள்ளது.

1912 மார்ச்சில் எழுதப்பெற்றது

1912ல் பாரிசில் ஜெர்மன் மொழியில் ஒரு பிரசுரமாய் (Der Anonymus aus dem "Vorwärts" und die Sachlage in der sozialdemokratischen Arbeiter-partei Rußlands) வெளிவந்தது

ஒப்பம்: Die Redaktion des Zentralorgans der sozial dem. Arbeiter-partei Rußlands "Sozial demokrat"

நூல் திரட்டு, தொகுதி 21, பக்கங்கள் 201-14

■

வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம்

■

சோஷலிசச் சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் ஆற்றும் வரலாற்றுப் பணியை மார்க்சின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது. இதுவே இத்தத்துவத்தின் முதன்மையான சிறப்பு. மார்க்ஸ் இந்தத் தத்துவத்தை விரித்துரைத்தபின் உலகெங்கணும் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளின் போக்கு இத்தத்துவத்தை மெய்ப்பித்திருக்கிறதா?

1844ல் மார்க்ஸ் இதை முதன்முதல் எடுத்துரைத்தார். 1848ல் வெளியான மார்க்ஸ், எங்கெல்சின் கம்யூனிஸ்டு அறிக்கை இந்தத் தத்துவத்தை முழுமையாகவும் முறையாகவும் விரித்துரைத்தது. இது நாள் வரை இதுவே தலைசிறந்த விரிவுரையாய் இருந்து வருகிறது. அதன்பின் உலக வரலாறு மூன்று பிரதான காலக்கூறுகளாய்த் தெளிவாய்ப் பிரிக்கப் பட்டிருக்கிறது: (1) 1848ஆம் ஆண்டுப் புரட்சியிலிருந்து பாரிஸ் கம்யூன் (1871) வரை; (2) பாரிஸ் கம்யூனிலிருந்து ருஷ்யப் புரட்சி (1905) வரை; (3) ருஷ்யப் புரட்சிக்குப்பின்.

இந்தக் காலக்கூறுகள் ஒவ்வொன்றிலும் மார்க்சின் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட எதிர்காலம் என்னவென்பதைக் காண்போம்.

1

முதலாவது காலக்கூறின் துவக்கத்தில் மார்க்சின் தத்துவம் எவ்வகையிலும் கோலோச்சும் நிலையில் இருக்கவில்லை. சோஷலிசத்தின் எண்ணிறந்த குழுக்கள் அல்லது போக்குகளில் ஒன்றாகவே இருந்தது. உண்மையில் கோலோச்சிக் கொண்டிருந்த சோஷலிச வடிவங்கள் பிரதானமாய் நமது நரோதிசத்தை ஒத்தவை: வரலாற்று இயக்கத்தின் பொருள்முதல்வாத அடித்தளத்தைப் புரிந்து கொள்ளாமை,

முதலாளித்துவச் சமுதாயத்தில் ஒவ்வொரு வர்க்கத்துக்குமுள்ள பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் தனித்துப் பிரிக்கும் திறனின்மை, ஜனநாயகச் சீர்திருத்தங்களின் முதலாளித்துவத் தன்மையை "மக்கள்", "நீதி", "உரிமை" இத்தியாதி குறித்த பல்வேறுபட்ட, அரை-சோஷலிசத் தொடர்களைக் கொண்டு மூடிமறைத்தல் முதலான பலவற்றிலும் இவை நமது நரோதிசத்தை ஒத்தவை.

மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசத்தின் இந்தக் கதம்பத்திரளான ஆடம்பர வாய்வீச்சு வடிவங்கள் யாவற்றுக்கும் 1848ஆம் ஆண்டுப் புரட்சி மரண அடி கொடுத்தது. எல்லா நாடுகளிலும் இப்புரட்சி சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களையும் செயலில் வெளிப்படச் செய்து புலப்படுத்திக் காட்டிற்று. குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கம் பாரிசில் 1848 ஜூன் நாட்களில் தொழிலாளர்களைச் சுட்டுவீழ்த்தியதானது, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் இயற்கையாகவே சோஷலிசத் தன்மையது என்பதை முடிவாய்ப் புலப்படுத்திக் காட்டிற்று. மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் எந்த வகையான பிற்போக்கையும்விட பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையைக் கண்டுதான் நூறு மடங்கு கூடுதலாய் அஞ்சி நடுங்கினர். கோழைகளாய் அண்டிப் பிழைக்கும் மிதவாதிகள் பிற்போக்கிற்கு அடிபணிந்து தண்டமிட்டனர். விவசாயி மக்கள் பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள் ஒழிக்கப்பட்டதுடன் திருப்தியடைந்து ஒழுங்கின் ஆதரவாளர்களோடு சேர்ந்து கொண்டனர், எப்பொழுதாவது அரிதாய்த்தான் தொழிலாளர் ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ மிதவாதத்துக்கும் இடையே ஊசலாடினர். வர்க்கமல்லாத சோஷலிசம், வர்க்கமல்லாத அரசியல் இவை குறித்த எல்லாத் தத்துவங்களும் அப்பட்டமான அபத்தமே என்பது நிரூபணமாயிற்று.

முதலாளித்துவ மாற்றங்களுக்குரிய இந்த வளர்ச்சியைப் பாரிஸ் கம்யூன் (1871) நிறைவுறச் செய்தது; வர்க்க உறவுகள் அவற்றின் மிகப் பெருமளவுக்கு ஒளிவுமறைவற்ற உருவில் காட்சி தரும் அரசியலமைப்பு வடிவமான குடியரசு உறுதி பெற பாட்டாளி வர்க்கத்தின் வீரதீரம் மட்டுமேதான் காரணம்.

ஏனைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மேலும் சிக்கலான, நிறைகுறையான வளர்ச்சி இதே விளைவுக்கு இட்டுச் சென்றது—முதலாளித்துவச் சமுதாயம் திட்டவட்டமான உருப் பெற்றுவிட்டது. முதலாவது காலக்கூறின் (1848-71) கடைப் பகுதியில், புயல்களும் புரட்சிகளுமாயிருந்த இப் பகுதியில், மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசமானது இறந்துபட்டது. சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் உதித்தெழுந்தன: முதலாவது அகிலம் (1864-72), மற்றும் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி.

2

இரண்டாவது காலக்கூறு (1872-1904) துவக்கத்திலிருந்தே அதன் ''சமாதானத்'' தன்மையால், புரட்சிகள் இல்லாத நிலையால் வேறுபடுத்திக் காட்டப் பெற்றது. மேற்குலகு முதலாளித்துவப் புரட்சிகளை நடத்திமுடித்துவிட்டது. கிழக்குலகு இன்னும் அவற்றுக்குரிய மட்டத்துக்கு உயர்ந்தாகவில்லை.

வரவிருந்த மாற்றங்களுக்காகச் ''சமாதான வழியில்'' தயாரிப்புகள் செய்து கொள்ளும் கட்டத்தினுள் மேற்குலகு அடியெடுத்து வைத்தது. அடிப்படையில் பாட்டாளி வர்க்கத் தன்மையதான சோஷலிஸ்டுக் கட்சிகள் எங்கும் அமைக்கப்பட்டன. இவை முதலாளித்துவப் பாராளுமன்ற முறையை உபயோகித்துக் கொள்ளவும் தமது சொந்த நாளேடுகளை, தமது கல்வி போதனை நிலையங்களை, தமது தொழிற் சங்கங்களை, தமது கூட்டுறவுக் கழகங்களை நிறுவிக் கொள்ளவும் கற்றுக் கொண்டன. மார்க்சின் தத்துவம் முழுநிறை வெற்றி பெற்றுப் பரவத் தொடங்கிற்று. பாட்டாளி வர்க்கத்தினுடைய சக்திகளின் தேர்வாய்வும் அணிதிரட்டலும், வரவிருந்த போராட்டங்களுக்கான அதன் தயாரிப்பும், மெதுவாகத் தான் என்றாலும், இடையறாது முன்னேறின.

மார்க்சியத்தின் தத்துவார்த்த வெற்றியால் நிர்ப்பந்திக்கப்பட்ட அதன் பகைவர்கள், மார்க்சியவாதிகளாய்த் தமக்கு வேஷமிட்டுக் கொண்டனர்—வரலாற்றின் இயக்கவியல் போக்கு அத்தகையதாய் இருந்தது. உள்ளுக்குள் உளுத்துப் போய்விட்ட மிதவாதமானது சோஷலிஸ்டுச் சந்தர்ப்ப

வாதத்தின் வடிவில் தனக்குப் புத்துயிர் அளித்துக் கொள்ள முயன்றது. மாபெரும் போர்களுக்காக சக்திகளை ஆயத்த மாக்கிக் கொள்வதற்குரிய இந்தக் காலக்கூறு, இந்தப் போர் கள் கைவிடப்படுதலைக் குறிப்பதாய் அவர்கள் வியாக்கியானம் செய்தனர். கூலி அடிமை முறையை எதிர்த்துப் போராடு வதற்கு அடிமைகளின் நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடு, இந்த அடிமைகள் சுதந்திரத்துக்கான தமது உரிமையை அற்பக் காசுக்காக விற்றதைக் குறித்ததாய் அவர்கள் கொண் டனர். கோழைத்தனமாய் அவர்கள் ''சமூக அமைதி'' (அதாவது அடிமையுடைமையாளர்களுடன் அமைதி), வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுதல் முதலானவற்றை உபதேசித்தனர். பாராளுமன்றத்தில் சோஷலிஸ்டு உறுப் பினர்களிடையிலும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பல் வேறு அதிகாரிகளிடையிலும், ''அனுதாபங் கொண்ட'' அறிவுத்துறையினரிடையிலும் அவர்கள் மிகப் பல ஆதர வாளர்களைப் பெற்றிருந்தனர்.

3

ஆனால் சந்தர்ப்பவாதிகள் ''சமூக அமைதி'' குறித்தும் ''ஜனநாயகத்தில்'' புயல் அவசியமற்றதாகிவிட்டது குறித் தும் வாழ்த்துரைத்துத் தம்மைத் தாமே போற்றிக் கொண்ட மறுகணமே, மாபெரும் உலகப் புயல்களுக்கான ஒரு புதிய ஆதாரம் ஆசியாவிலே உதித்தெழுந்தது. ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனாவிலும் புரட்சிகள் மூண்டன. புயல்களுக்கும் ஐரோப்பாவில் அவற் றின் ''எதிரொலிகளுக்கும்'' உரிய ஒரு சகாப்தத்தில்தான் இப்பொழுது நாம் வாழ்ந்து வருகிறோம். மாபெரும் சீனக் குடியரசுக்கு—''நாகரிகமடைந்த'' பல்வேறு கழுதைப்புலி களும் இன்று பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு இக் குடியரசை எதிர்த்துக் கிளம்புகின்றன—ஏற்படும் கதி எது வாயினும், உலகில் எந்த சக்தியாலும் ஆசியாவில் பழைய பண்ணையடிமை நிலையைத் திரும்பவும் நாட்டவோ, ஆசிய நிலை, அரை-ஆசியநிலை நாடுகளில் பெருந்திரளான மக்களின் வீரம் செறிந்த ஜனநாயகத்தை அழித்தொழிக்கவோ முடியப் போவதில்லை.

வெகுஜனப் போராட்டத்துக்குத் தயார் செய்வதற்கும் அதை வளர்த்துச் செல்வதற்குமான நிலைமைகளில் கவனம் செலுத்தாமலிருந்த சிலர், ஐரோப்பாவில் முதலாளித்துவத்துக்கு எதிரான தீர்மானகரமான போராட்டத்தில் ஏற்பட்ட நீண்ட காலத் தாமதங்களால் நம்பிக்கையற்ற நிலைக்கும் அராஜகவாதத்துக்கும் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டனர். இந்த அராஜகவாத நம்பிக்கையற்ற நிலை எவ்வளவு கிட்டப்பார்வை கொண்டது, நெஞ்சு உரமில்லாதது என்பதை இப்பொழுது நாம் காண முடியும்.

எண்பது கோடி மக்கள் தொகை கொண்ட ஆசியா, இதே ஐரோப்பிய இலட்சியங்களுக்கான போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கும் இவ்வுண்மை, நமக்கு நம்பிக்கையற்ற நிலையையல்ல, நன்னம்பிக்கையை ஊட்டி ஆர்வமளித்திட வேண்டும்.

ஆசியநிலைப் புரட்சிகள் மிதவாதத்தின் திராணியின்மையையும் இழிநிலையையும், ஜனநாயக வெகுஜனங்களுடைய சுயேச்சையின் விசேஷ முக்கியத்துவத்தையும், பாட்டாளி வர்க்கத்தாருக்கும் எல்லா வகையான முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலுள்ள எடுப்பான பிரிவினைக் கோட்டையும் திரும்பவும் நமக்குக் காட்டியுள்ளன ஐரோப்பா, ஆசியா இவை இரண்டின் அனுபவத்துக்குப் பிற்பாடு, வர்க்கமல்லாத அரசியல் குறித்தும் வர்க்கமல்லாத சோஷலிசம் குறித்தும் பேசுகிறவர் எவரும் கூண்டிலே வைத்து ஆஸ்திரேலியக் கங்காரு அல்லது அதையொத்த ஒன்றின் பக்கத்தில் கண்காட்சியில் காட்டப்பட வேண்டியவரே ஆவார்.

ஆசியாவை அடுத்து ஐரோப்பாவும்—ஆசியநிலை வழியில் இல்லாவிட்டாலுங்கூட—அதிரத் தொடங்கிவிட்டது. 1872-1904ஆம் ஆண்டுகளின் ''சமாதானக்'' காலக்கூறு இனி ஒரு போதும் திரும்ப வழியின்றிக் கடந்து சென்றுவிட்டது. உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவும் டிரஸ்டுகளின் கொடுங்கோன்மையும் என்றுமே கண்டிராத அளவுக்குப் பொருளாதாரப் போராட்டத்தைக் கூர்மையாக்கி வருகின்றன. இந்த நிலைமை, மிதவாதத்தால் மிக அதிகமாய்ச் சீரழிக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் தொழிலாளர்களையுங்கூட இயக்கத்தில் செயல்பட வைத்திருக்கிறது. ''வைரம் பாய்ந்த'' பிற்போக்கு

வாத முதலாளித்துவ-ஜங்கர் நாடான ஜெர்மனியிலுங்கூட அரசியல் நெருக்கடி சூடேறி வருவதைக் காண்கிறோம். ஜன்னிவேகங் கொண்ட படைக்கலப் பெருக்கமும், ஏகாதிபத்தியக் கொள்கையும் தற்கால ஐரோப்பாவை வெடிமருந்துப் பீப்பாயையே அதிகம் ஒத்த ''சமூக அமைதியாக'' மாற்றி வருகின்றன. இவற்றுக்கிடையில் எல்லா முதலாளித்துவக் கட்சிகளும் அழுகிக் கெடும் நிகழ்ச்சிப்போக்கும் பாட்டாளி வர்க்கத்தின் முதிர்ச்சியும் ஓயாத முன்னேற்றம் கண்டு வருகின்றன.

மார்க்சியம் தோன்றியது முதல் உலக வரலாற்றின் மூன்று பெருங் காலக்கூறுகளில் ஒவ்வொன்றும் மார்க்சியத்துக்குப் புதிய உறுதிப்பாடும் புதிய வெற்றிகளும் கிட்டச் செய்திருக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவம் என்ற முறையில் மார்க்சியத்துக்கு, வரலாற்றின் வருகிற காலக்கூறினில் இன்னும் பெரிய வெற்றி கிட்டப் போகிறது.

பிராவ்தா, இதழ் 50,
1913 மார்ச் 1
ஒப்பம்: வி. இ.

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 1-4

■

மார்க்சியமும் சீர்திருத்தவாதமும்

■

அராஜகவாதிகளைப் போலல்லாது மார்க்சியவாதிகள் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை, அதாவது ஆளும் வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை அழிக்காமலே உழைப்பாளி மக்களுடைய நிலைமைகளை மேம்படச் செய்வதற்கான போராட்டத்தை அங்கீகரிக்கின்றனர். ஆனால் அதேபோதில் மார்க்சியவாதிகள் சீர்திருத்தவாதிகளை எதிர்த்து மிகவும் வைராக்கியமான ஒரு போராட்டத்தை நடத்துகின்றனர். சீர் திருத்தவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோள்களை யும் செயற்பாடுகளையும் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள் வதுடன் நின்றுவிடும்படி நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டுப்படுத்திவிடுகிறவர்கள். மூலதனத்தின் ஆதிக்கம் இருக் கிற வரை, தனிப்பட்ட மேம்பாடுகள் ஏற்படினும், எப்பொ ழுதும் கூலி அடிமைகளாகவே இருந்து வருவோரான தொழி லாளர்களை முதலாளித்துவ வழியில் ஏமாற்றுவதுதான் சீர் திருத்தவாதம்.

மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தார் ஒரு கையால் சீர்திருத்தங்களை வழங்கிவிட்டு மறுகையால் எப்பொழுதும் அவற்றைத் திருப்பி எடுத்துக் கொண்டுவிடுகிறார்கள், அவற்றைப் பயனற்றனவாக்கிவிடுகிறார்கள், தொழிலாளர் களை அடிமைப்படுத்தவும் தனித் தனிக் கோஷ்டிகளாய் அவர்களைப் பிளவுறச் செய்யவும் கூலி அடிமை முறையை நிரந்தரமாய் நீடிக்கச் செய்யவும் அவற்றைப் பயன்படுத்து கிறார்கள். இந்தக் காரணத்தால் சீர்திருத்தவாதமானது—முற்றிலும் அது நேர்மையுள்ளம் கொண்டிருக்கும் சந்தர்ப் பங்களிலுங்கூட—தொழிலாளர்களை முதலாளித்துவ வர்க் கம் சீர்கெடுப்பதற்கும் பலவீனப்படுத்துவதற்குமான ஓர் ஆயுதமாய் நடைமுறையில் ஆகிவிடுகிறது. சீர்திருத்த வாதிகளை நம்பும் தொழிலாளர்கள் எப்பொழுதும் ஏய்க்கவே

படுகிறார்கள் என்பதை எல்லா நாடுகளின் அனுபவமும் தெளிவாய்க் காட்டுகிறது.

இதற்கு மாறாய், மார்க்சின் தத்துவத்தைக் கிரகித்துக் கொள்ளும் தொழிலாளர்கள், அதாவது மூலதனத்தின் ஆதிக்கம் நீடிக்கும் வரை கூலியடிமை முறை தவிர்க்க முடியாததாகும் என்பதை உணர்ந்து கொள்ளும் தொழிலாளர்கள், முதலாளித்துவச் சீர்திருத்தம் எதனாலும் ஏய்க்கப்பட்டுவிட மாட்டார்கள். எங்கே முதலாளித்துவம் தொடர்ந்து நீடிக்கிறதோ அங்கே சீர்திருத்தங்கள் நீடித்து நிலைக்கவோ அதிக பயனளிப்பனவாகவோ இருக்க முடியாதென்பதை உணர்ந்து கொள்ளும் இத்தொழிலாளர்கள், மேம்பாடான நிலைமைகளுக்காகப் போராடி, கூலியடிமை முறைக்கு எதிரான போராட்டத்தை முழுமுரமாக்குவதற்காக இம்மேம்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அற்பச் சலுகைகளின் மூலம் சீர்திருத்தவாதிகள் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தவும் ஏமாற்றவும் முயலுகிறார்கள், அவர்களை வர்க்கப் போராட்டத்திலிருந்து திசைதிருப்பிவிட முயலுகிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் சீர்திருத்தவாதத்தின் கள்ளத்தனத்தைக் கண்டு கொண்டதும் அவர்கள் தமது வர்க்கப் போராட்டத்தை வளர்த்துச் செல்லவும் விரிவாக்கவும் சீர்திருத்தங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

தொழிலாளர்களிடையே சீர்திருத்தவாதிகளின் செல்வாக்கு எவ்வளவுக்கு எவ்வளவு பலமாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழிலாளர்கள் பலமிழந்தவர்களாகி விடுகிறார்கள்; முதலாளித்துவ வர்க்கத்தை அண்டி வாழ வேண்டிய அவர்களது சார்பு நிலை அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகிவிடுகிறது; முதலாளித்துவ வர்க்கம் பல்வேறு தக்கடி வித்தைகளைக் கையாண்டுச் சீர்திருத்தங்களைத் தள்ளுபடி செய்வது அவ்வளவுக்கு அவ்வளவு எளிதாகிவிடுகிறது. தொழிலாளி வர்க்க இயக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு சுயேச்சையாய் இருக்கிறதோ, அதன் குறிக்கோள்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழமாகவும் விரிவாகவும் உள்ளனவோ, சீர்திருத்தவாதக் குறுநோக்கிலிருந்து அது எவ்வளவுக்கு எவ்வளவு விடுபட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழிலாளர்கள் மேம்பாடுகளை விடாது இருத்திக் கொள்வதும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதும் எளிதாகிவிடுகிறது.

எல்லா நாடுகளிலும் சீர்திருத்தவாதிகள் இருக்கிறார்கள். ஏனெனில் எங்கும் முதலாளித்துவ வர்க்கத்தினர் ஏதேனும் ஒரு வழியில் தொழிலாளர்களைச் சீரழிக்க முயலுகின்றனர்; அடிமை முறையை ஒழித்திடுவதென்ற எண்ணத்தையே விட்டொழித்து மனநிறைவு கொண்ட அடிமைகளாய் மாற்ற முயலுகின்றனர். ருஷ்யாவில் கலைப்புவாதிகள்தான் சீர்திருத்த வாதிகள். கலைப்புவாதிகள் நமது கடந்த காலத்தை நிராகரிக்கின்றனர்; ஒரு புதிய, பகிரங்கமான, சட்டபூர்வமான கட்சி பற்றிய கனவுகளைக் கொண்டு தொழிலாளர்களை உறங்க வைக்கப் பார்க்கின்றனர். அண்மையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கலைப்புவாதிகள் சீர்திருத்தவாதமெனும் குற்றச்சாட்டிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும்படி சேவெர்னயா பிராவ்தா[67] இதழால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மிக முக்கியப் பிரச்சினை ஒன்றைத் தெளிவுபடுத்தும் பொருட்டு அவர்களது வாதங்களைக் கவனமாய்ப் பகுத்தாய வேண்டும்.

நாங்கள் சீர்திருத்தவாதிகளல்ல, ஏனெனில் சீர்திருத்தங்களே யாவும், இறுதிக் குறிக்கோள் ஒரு பொருட்டல்ல என்று நாங்கள் சொல்லவில்லை; இறுதிக் குறிக்கோளுக்கான இயக்கத்தைப் பற்றி நாங்கள் பேசியிருக்கிறோம்; நாம் வகுத்துக் கொண்ட குறிக்கோளை முழுமையாய் அடைய சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதன் வாயிலாய் முன்னேறிச் செல்வது குறித்து பேசியிருக்கிறோம் என்பதாய் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கலைப்புவாதிகள் எழுதினர்.

இந்தத் தற்காப்பு எந்த அளவுக்கு எதார்த்தத்துக்குப் பொருந்துவதாய் இருக்கிறதென்று பார்ப்போம்.

முதலாவது உண்மை. கலைப்புவாதிகள் எல்லோருடைய வாக்குகளையும் தொகுத்துரைத்த கலைப்புவாதியான செதோவ், மார்க்சியவாதிகளின் ''மூன்று தூண்களில்''[68] இரண்டு இனி நமது கிளர்ச்சிக்கு ஏற்றவையாய் இல்லை என்று எழுதினார். எட்டு மணி நேர வேலைநாளுக்கான கோரிக்கையை செதோவ் விலக்காமல் வைத்துக் கொண்டார். எட்டு மணி நேர வேலைநாள் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில் சீர்திருத்தமாய்ப் பெறக் கூடியதே. சீர்திருத்தங்களுக்கு அப்பால் செல்லும் விவகாரங்கள் யாவற்றையும் அவர் அகற்றி விட்டார், அல்லது பின்னிலைக்குத் தள்ளிவிட்டார். ஆகவே

இறுதிக் குறிக்கோள் ஒரு பொருட்டல்ல என்கிற சூத்திரத்தால் குறிக்கப்படும் அதே கொள்கையைப் பின்பற்றி செதோவ் அப்பட்டமான சீர்திருத்தவாதத்துக்குச் சரிந்து விட்டார். ''இறுதிக் குறிக்கோள்'' (ஜனநாயகத்தைப் பொருத்தவரைகூட) நமது கிளர்ச்சியிலிருந்து மேலும் மேலும் ஒதுக்கித் தள்ளப்படுமாயின், அது சீர்திருத்தவாதமே ஆகும்.

இரண்டாவது உண்மை. கலைப்புவாதிகளின் பிரசித்தி பெற்ற ஆகஸ்டு (கடந்த ஆண்டு) மாநாடு இதேபோல, சீர்திருத்தவாதமல்லாத கோரிக்கைகளை நமது கிளர்ச்சியின் நடுநாயகமாய் நெருங்கக் கொண்டு வருவதற்குப் பதில் மேலும் மேலும் தூர ஒதுக்கித் தள்ளிற்று.

மூன்றாவது உண்மை. ''பழயதை'' மறுத்தும் இழித்துப் பழித்தும் அதனிடமிருந்து தம்மை விலக்கிக் கொண்டும் வருவதன் மூலம், கலைப்புவாதிகள் தம்மைச் சீர்திருத்தவாதத்தில் இருத்திக் கொண்டுவிடுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் சீர்திருத்தவாதத்துக்கும் ''பழமையை'' நிராகரிப்பதற்கும் இடையிலுள்ள தொடர்பு தெளிவாய்த் தெரியும் ஒன்று.

நான்காவது உண்மை. தொழிலாளர்களுடைய பொருளாதார இயக்கம் சீர்திருத்தவாதத்துக்கு அப்பால் செல்லும் கோஷங்களை ஏற்றதும் கலைப்புவாதிகள் உடனே சீற்ற முற்றுத் தாக்குதல்கள் தொடுக்கின்றனர் (''வெறிக் கூச்சல்'', ''கோபாவேசம்'' இத்தியாதி வழிகளில் செல்கிறார்கள்).

முடிவு என்ன? கலைப்புவாதிகள் சொல்லளவில் கோட்பாட்டு அளவில் சீர்திருத்தவாதத்தை மறுத்துவிட்டு, நடைமுறையில் நெடுகிலும் அதைப் பின்பற்றுகின்றனர். ஒருபுறத்தில் அவர்கள் தமக்குச் சீர்திருத்தங்கள் முற்றாகவும் முடிவாகும் இருக்கவில்லை என்று நமக்கு உறுதி கூறுகின்றனர்; ஆனால் மறுபுறத்தில், சீர்திருத்தவாதத்துக்கு அப்பால் மார்க்சியவாதிகள் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கலைப்புவாதிகள் அவர்களைத் தாக்குகின்றனர் அல்லது பழித்துப் பேசுகின்றனர்.

ஆனால், சீர்திருத்தங்களை நடைமுறையில் பயன்படுத்திக் கொள்வதிலும், சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதிலும் மார்க்சியவாதிகள் பின்னிலையில் தங்கிவிடவில்லை, மாறாக நிச்சயமாய் முன்னிலையில்தான் இருக்கின்றனர் என்பதைத் தொழி

லாளி வர்க்க இயக்கத்தின் ஒவ்வொரு அரங்கிலும் நிகழ்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. தொழிலாளர் தொகுதிகளில் டூமாத் தேர்தல்களை எடுத்துக் கொள்ளுங்கள். டூமாவின் உள்ளேயும் வெளியேயும் நமது பிரதிநிதிகளின் சொற்பொழிவுகள், தொழிலாளர் பத்திரிகைகளையும் இன்ஷூரன்ஸ் சீர்திருத்தத்தையும் பயன்படுத்திக் கொள்ளுதல், யாவற்றிலும் பெரிய சங்கமான உலோகத் தொழிலாளர் சங்கம், இன்ன பலவற்றிலும் — எங்கும் கிளர்ச்சி புரிதல், நிறுவன ஒழுங்கமைப்பு செய்தல், சீர்திருத்தங்களுக்காகவும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் போராடுதல் ஆகிய நேரடியான, உடனடியான, அன்றாடச் செயற்பாட்டில் மார்க்சியவாதிகளான தொழிலாளர்கள் கலைப்புவாதிகளை முந்திக் கொண்டு முன்னிலையிலே இருக்கிறார்கள்.

சீர்திருத்தங்களைப் பெறுவதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்குமான ''சாத்தியப்பாடு'' ஒன்றையேனும் தவறவிடாமல் மார்க்சியவாதிகள் அயராது வேலை செய்கின்றனர். பிரசாரத்திலும் கிளர்ச்சியிலும் வெகுஜனப் பொருளாதாரப் போராட்டத்திலும் பிறவற்றிலும் சீர்திருத்தவாதத்துக்கு அப்பாற்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்டித்தல்ல, அதற்கு ஆதரவாய், அது முன்னேற்றம் அடைய அரும்பாடு பட்டு மார்க்சியவாதிகள் வேலை செய்கின்றனர். ஆனால் மார்க்சியத்தைத் துறந்துவிட்ட கலைப்புவாதிகள் இதற்கு மாறாய், மார்க்சிய நிறுவன அமைப்பு ஒன்று இருப்பதையே எதிர்த்துத் தாக்குதல்கள் தொடுப்பதன் மூலமும், மார்க்சியக் கட்டுப்பாட்டை அழிப்பதன் மூலமும், சீர்திருத்தவாதத்தையும் மிதவாதத் தொழிலாளர் கொள்கையையும் ஆதரித்து நிற்பதன் மூலமும் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சீர்குலைத்து வருகிறார்கள்.

மேலும் ருஷ்யாவில் சீர்திருத்தவாதமானது ஒரு தனி வழியிலும், இன்றைய ருஷ்யாவின் அடிப்படை அரசியல் நிலைமையை இன்றைய ஐரோப்ப நிலைமைக்கு முற்றிலும் ஒத்ததாய்க் கொள்வதன் வாயிலாகவும், வெளிப்படுவதைக் கவனியாது விடலாகாது. மிதவாதியின் கண்ணோட்டத்தில் இவை இரண்டையும் முற்றிலும் ஒத்ததாய்க் கொள்வது நியாயமே; ஏனென்றால் மிதவாதி ''கடவுள் நம்மைக் காப்பாற்றி

யுள்ளார், அரசியலமைப்புச் சட்டம் கிடைத்திருக்கிறது நமக்கு'' என்று நம்புகிறவர், இக்கருத்தை ஏற்றெழுகுகிறவர். அக்டோபர் 17க்குப் பிறகு[69] ஜனநாயகம் சீர்திருத்த வாதத்துக்கப்பால் சென்று மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் பைத்தியக்காரச் செயலாகும், குற்றமாகும், பாவமாகும் என்றெல்லாம் பறைசாற்றுவதன் மூலம் மிதவாதி முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களையே பிரதிபலிக்கிறார்.

இந்த முதலாளித்துவக் கருத்துக்களைத்தான் நமது கலைப்புவாதிகள் நடைமுறையில் அனுசரித்துச் செயல்படுகின்றனர். இவர்கள் ''பகிரங்கக் கட்சி'', ''சட்டபூர்வமான கட்சிக்காகப் போராடுதல்'', இன்ன பிறவற்றை ருஷ்யாவுக்கு (ஏட்டளவில்) ''பெயர்த்தெடுத்து வந்து நாட்டுவதில்'' இடையறாதும் முறையாகவும் ஈடுபட்டுள்ளனர். வேறு விதமாய்க் கூறினால், மிதவாதிகளைப் போலவே இவர்களும், மேற்கு நாடுகளில் பல தலைமுறைகளின் காலப்போக்கில், ஏன் சிற்சில சந்தர்ப்பங்களில் சில நூற்றாண்டுகளுங்கூட வேண்டியிருந்த காலப்போக்கில் அரசியலமைப்புச் சட்டங்கள் ஏற்கப்படவும் உறுதியுறவும் இட்டுச் சென்ற. பிரத்தியேகப் பாதை இல்லாமலே, ஐரோப்பிய அரசியலமைப்புச் சட்டத்தை ருஷ்யாவுக்குப் பெயர்த்தெடுத்து வந்து நாட்ட வேண்டுமென உபதேசிக்கின்றனர். துணியை நீரில் நனைக்காமலே துவைத்தெடு என்பார்களே, அதைத்தான் செய்ய வேண்டும் என்கிறார்கள், இந்தக் கலைப்புவாதிகளும் மிதவாதிகளும்.

ஐரோப்பாவில் சீர்திருத்தவாதம், உண்மையில் மார்க்சியம் துறக்கப்பட்டு அதற்குப் பதிலாய் முதலாளித்துவச் ''சமூகக் கொள்கை'' கைக் கொள்ளப்படுவதைக் குறிக்கிறது. ருஷ்யாவில் கலைப்புவாதிகளுடைய சீர்திருத்தவாதம் குறிப்பது அது மட்டுமல்ல; மார்க்சிய நிறுவனம் அழிக்கப்படுவதையும் தொழிலாளி வர்க்கத்தின் ஜனநாயகக் கடமைகள் துறக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாய் மிதவாதத் தொழிலாளர் கொள்கை கைக்கொள்ளப்படுவதையும் குறிக்கிறது.

பிராவ்தா துருதா, இதழ் 2,
1913 செப்டம்பர் 12
ஒப்பம்: வி. இ.

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 1-4

■

காவுத்ஸ்கி இழைத்த மன்னிக்க முடியாத தவறு

■

சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவில்[70] ருஷ்ய விவகாரங்கள் விவாதிக்கப்பட்ட போது தோழர் காவுத்ஸ்கி நிகழ்த்திய சொற்பொழிவு குறித்தும், அப்பொழுது அவர் ருஷ்ய விவகாரங்கள் பற்றி வெளிப்படுத்திக் கொண்ட வியப்பூட்டும்—ருஷ்ய வாசகருக்கு—வருந்தத்தக்க முழு அறியாமை குறித்தும் புரொலெத்தார்ஸ்கயா பிராவ்தா இதழ் 6ல் நாம் எழுதியிருந்தோம்.

ருஷ்யாவில் ''பழைய கட்சி மடிந்துவிட்டது'' என்று காவுத்ஸ்கி தமது சொற்பொழிவில் கூறினர். இது குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கும் முறையில் இரண்டாவது சொற்பொழிவு ஒன்றில் காவுத்ஸ்கி கூறினர்: ''ருஷ்ய சமூக-ஜனநாயகம் மடிந்துவிட்டதாய் நான் சொல்லவில்லை; பழைய வடிவங்கள் முறிந்துவிட்டன, புதிய வடிவங்கள தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றுதான் கூறுகிறேன்''. எதன் பிரதிநிதியாய்க் காவுத்ஸ்கி வந்திருந்தாரோ அந்த ஜெர்மன் கட்சியின் மத்திய ஏடான *Vorwärts* இவ்விஷயத்தைப் பற்றி இப்படித்தான் செய்தி அளிக்கிறது. காவுத்ஸ்கி வசிக்கும் நகரிலிருந்து வெளிவருகிறது *Vorwärts*. தாம் கூறியது பற்றி பிழைபடச் செய்தி அளிக்கப்பட்டதாய் நினைத்திருந்தால் தாமதமின்றி நிச்சயம் அவர் இச்செய்தியுரைக்குத் திருத்தம் தந்திருப்பார். ஒரு முழுக் கட்சி, அதுவும் அகிலத்துடன் இணைந்த ஒரு கட்சி ''இருக்கிறதா என்கிற பிரச்சினையைக்'' காட்டிலும் பன்மடங்கு குறைவான முக்கியத்துவமுடைய பிரச்சினைகள் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் இதன்முன் அவர் இது போல திருத்தம் தந்தவரே.

இப்பொழுது புதிய கலைப்புவாத ஏடுவின்[71] 101ஆம் இதழ் சர்வதேச பியூரோவின் கூட்டத்தைப் பற்றிய தனது சொந்தச் செய்தியுரையை வெளியிடுகிறது. இவ்வுரையில்,

''கட்சி மடிந்துவிட்டது'' எனத் தாம் கூறவில்லை என்று காவுத்ஸ்கி திட்டவட்டமாய் மறுத்ததாய்த் தோன்றும் முறையில் காவுத்ஸ்கியின் இரண்டாவது சொற்பொழிவு பற்றிய தகவல் தரப்படுகிறது.

காவுத்ஸ்கி தாம் கூறிய அபிப்பிராயத்தை, ருஷ்யக் கட்சி வாழ்க்கை பற்றிய மிகவும் வருந்தத்தக்கத் தமது அறியாமையின் அடிப்படையில் அமைந்த இந்த அபிப்பிராயத்தைத் திட்டவட்டமாய் வாபஸ் செய்யும் பொருட்டு மெய்யாகவே அவர் இரண்டாவது முறை பேசியிருப்பாராயின், எல்லோருக்கும் முதலாய் நாம் மகிழ்ச்சியுற்றிருப்போம். அந்தோ, அப்படி ஒன்றும் இல்லை! ஜெர்மன் கட்சியின் மத்திய ஏட்டில் வந்த செய்தியுரையைக் காட்டிலும் புதிய கலைப்புவாத ஏடுவின் செய்தியுரையை நம்பிக்கைக்குரியதாய்க் கருத நமக்கு எந்த ஆதாரமும் இல்லை.

கலைப்புவாதிகளுடைய செய்தியேடு விவகாரத்தைச் சந்தடியில்லாமல் அமுத்திவிட முயலுகிறது. ஆனால் பட்டவர்த்தனமாய்த் தெரியும் விவகாரம் இது. பழைய கட்சி ''மடிந்துவிட்டதாய்'' கூறியதன் மூலம் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றிய உண்மைகள் குறித்து அறியாமையை வெளிப்படுத்திக்கொண்டதோடு, வெளிநாடுகளிலுள்ள கலைப்புவாதக் குசுகுசுப்பாளர்கள் நமது அயல்நாட்டுத் தோழர்களிடம் உண்டுபண்ணும் விளைவு எத்தகையது என்பதையும் புலப்படச் செய்துவிட்டார்.

அபாண்டமான தமது அந்தப் பதத்தைக் கூறியதும் எதிர்பட்ட ஆட்சேபங்களைக் கண்டபின் காவுத்ஸ்கி தம்மைத் தாமே திருத்திக் கொள்ள முயன்றார். ஆனால் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்திய ஏடான Vorwärtsசின் செய்தியுரையின்படி அவர் மோசமான முறையில் தம்மைத் திரித்துக் கொண்டதாய்த் தெரிகிறது. கலைப்புவாதிகளுடைய செய்தியுரைப்படி சற்றே நல்லபடியாக—அதிகம் நல்லபடியாயல்ல—திருத்திக் கொண்டதாய்த் தெரிகிறது. ஏனெனில் சமூக-ஜனநாயகத்தின் ''வடிவம்'' என்பதன் மூலம் அவர் குறிப்பிடுவது கட்சியை அல்லாமல் வேறு எதை?

ஆனால் காவுத்ஸ்கி தம்மை எப்படித் திருத்திக்கொண்டார் என்பதல்ல விவகாரம், வெளி நாடுகளில் கலைப்புவாதி

களின் முயற்சிகளின் விளைவாய்க் காவுத்ஸ்கி புரிந்த மன்னிக்க முடியாத தவறுதான் இங்குள்ள விவகாரம். ருஷ்யாவிலுள்ள வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் விரும்புவார்களாயின் வெளிநாடுகளிலுள்ள இந்தக் குசுகுசுப்பாளர்களை எளிதில் அவர்கள் நிச்சயம் அம்பலப்படுத்திவிட முடியும், இனியும் தாமதமின்றி உடனே அவர்கள் இதை விரும்ப வேண்டும்! நாடுகடத்தப்பட்டோரின் பொறுப்பற்ற குழுக்களிடமிருந்து இப்பணியைப் பிடுங்கிக் கொள்ளும்படியான முறையில் அவர்கள் தமது இயக்கம் குறித்து அயல்நாட்டுத் தோழர்களுக்குத் தகவல்கள் தெரிவிக்கும் வேலையை ஒழுங்கமைத்துக் கொண்டாக வேண்டும். வெளிநாட்டுக் கட்சிகளின் (இயற்கையான) இந்த அறியாமையைத் தமது கலைப்புவாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள குசுகுசுப்பாளர்கள் செய்யும் முயற்சிகளை அவர்கள் பயனற்றதாக்க வேண்டும். எனவேதான், மார்க்சியவாதிகளுக்கும் கலைப்புவாதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துமாறு சர்வதேச பியூரோ விடுத்துள்ள வேண்டுகோளுக்குத் தொழிலாளர் தோழர்கள் சக்தி வாய்ந்த முறையில் பதிலளிக்கும்படி அவர்களை நாம் அறைகூவினோம். கலைப்புவாதக் குசுகுசுப்பாளர்களின் குரல்களுக்குப் பதிலாய் முடிவில் நமது அயல்நாட்டுத் தோழர்கள் நேரடியாய்த் தொழிலாளர்களுடைய குரல்களையே கேட்கட்டும். இது முக்கியமானது, சர்வதேச ஒற்றுமையெனும் கருத்தை நாம் மதித்துப் போற்றுவோமாயின் இது அத்தியாவசியமானது.

சர்வதேச பியூரோவின் கூட்டத்தில் என்ன நடைபெற்றது என்பது பற்றிய உண்மைகளை மூடிமறைக்க அல்லது புனைந்து கூறக் கலைப்புவாதிகள் செய்யும் முயற்சிகளை எதிர்த்தடிக்கும் பொருட்டுக் கருத்து வேற்றுமைகளை மெய்யாகவே தெளிவுபடுத்தும்படி, தீர்மானங்கள், முடிவுகள், வாக்கெடுப்பு முதலியவற்றின் மூலம் தொழிலாளர்கள் தாமே நமது அயல்நாட்டுத் தோழர்களுக்குத் தகவல் தெரிவிக்கும்படி நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

புரொலெத்தார்ஸ்கயா பிராவ்தா,
இதழ் 8, 1913 டிசம்பர் 15

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 230-32

■

ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்திலிருந்து காப்பியடிக்கக் கூடாதது

■

ஜெர்மன் தொழிற் சங்கங்களின் மிகவும் முக்கியமான பொறுப்புமிக்கப் பிரதிநிதிகளில் ஒருவரான கார்ல் லேகின் தாம் அமெரிக்கா சென்று வந்தது பற்றிய விளக்கவுரையை **அமெரிக்காவில் தொழிலாளர் இயக்கம்** என்னும் தலைப்பில் சற்றுத் தடியான புத்தகத்தின் வடிவில் அண்மையில் வெளியிட்டார்.

ஜெர்மன் தொழிற் சங்க, மற்றும் சர்வதேசத் தொழிற் சங்க இயக்கத்தின் மிக முக்கியப் பிரதிநிதி என்ற முறையில் கா. லேகின் தமது வருகைக்கு ஒரு விசேஷ வைபவத்துக்குரிய, அரசு முக்கியத்துவத்துக்குரிய என்றே சொல்லலாம், தன்மை அளித்தார். இந்த வருகை குறித்து அவர் ஆண்டுக் கணக்கில் அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சியுடனும் கீர்த்தி பெற்ற (அபகீர்த்திபெற்ற என்றால் இன்னும் பொருத்தமாயிருக்கும்) கோம்பர்சின் தலைமையிலுள்ள அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனத்துடனும் (American Federation of Labour)[72] பேச்சுவார்த்தைகள் நடத்தினர். கார்ல் லீப்க்னெஹ்ட் அமெரிக்கா செல்கிறார் என்று கேட்டதும் லேகின் அதே நேரத்தில் தாமும் போக முடியாதென்றார்—''கட்சியின் போர்த்தந்திரம், தொழிலாளர் இயக்கத்தின் சில கிளைகளுடைய முக்கியத்துவம், மதிப்பு இவை குறித்து முற்றிலும் ஒத்த கருத்து கொண்டிராத இரு பிரதிநிதிகள் ஏககாலத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

அமெரிக்காவில் தொழிற் சங்க இயக்கம் குறித்து கா. லேகின் நிறைய விவரப்பொருள் சேகரித்தார்; ஆனால் தமது புத்தகத்தில் இதைச் சிந்தித்து முறைப்படுத்தத் தவறி விட்டார். அவருடைய பயணத்தைப்பற்றியஅற்ப உள்ளடக்கம்

கொண்ட, சலிப்பூட்டும் நடையிலமைந்த துண்டு துக்கடா விவரிப்புகள் தாறுமாறுய் இப்புத்தகத்தில் குவிக்கப்பட்டுள்ளன. லேகின் மிகவும் கருத்து செலுத்திய அமெரிக்கத் தொழிற் சங்க விதிகளுங்கூட பரிசீலிக்கப்படாமலும் பகுத்தாயப்படாமலும் அரைகுறையாய் ஒழுங்கு முறையின்றி மொழிபெயர்த்தளிக்கப்படுகின்றன.

லேகினுடைய சுற்றுப்பயணத்தில் மிகுந்த படிப்பினைக்குரிய ஒரு சம்பவம் நடைபெற்றது. சர்வதேச, குறிப்பாய் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வரும் இரு போக்குகளை இச்சம்பவம் எடுப்பான முறையில் புலப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாட்டின் ''காங்கிரஸ்'' எனப்படும் பிரதிநிதிகள் சபைக்கு லேகின் சென்றிருந்தார். போலீஸ் ஆதிக்க பிரஷ்ய அரசிலே வளர்ந்த அவர் இக்குடியரசின் ஜனநாயகப் பழக்கங்களால் வெகுவாய்க் கவரப்பட்டார். அமெரிக்காவில் அரசாங்கம் காங்கிரஸ் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எல்லா நவீன வசதிகளையும் கொண்ட சொந்த தனி அலுவலகம் அளித்திருப்பதோடு, காங்கிரஸ் உறுப்பினர் தமக்குரிய பல்வேறு வேலைகளையும் சமாளிக்க உதவியாய்த் தனிச் செயலாளரையும் சம்பளம் கொடுத்து அமர்த்தியுள்ளது என்று லேகின் மனம் மகிழ்ந்து குறிப்பிடுவது புரிந்து கொள்ளக் கூடியதே. காங்கிரஸ் உறுப்பினர்கள், சபாநாயகர் இவர்களது எளிமையும் இதமான நடத்தையும் ஐரோப்பியப் பாராளுமன்றங்களில், முக்கியமாய் ஜெர்மனியில் லேகின் கண்டறிந்திருந்ததற்கு நேர் மாறுய் இருந்தன. ஐரோப்பாவில் சமூக-ஜனநாயகவாதி ஒருவர் முதலாளித்துவப் பாராளுமன்றம் ஒன்றின் அதிகாரபூர்வமான அமர்வில் வாழ்த்துச் சொற்பொழிவு ஆற்றுவது நினைத்துக்கூட பார்க்க முடியாததாயிற்றே! ஆனுல் அமெரிக்காவில் இது சர்வசாதாரணமாய் நடந்தேறியது, சமூக-ஜனநாயகவாதி என்னும் பெயர் யாரையும், அந்த சமூக-ஜனநாயகவாதி ஒருவரைத் தவிர்த்து வேறு எவரையும் கலக்கமுறச் செய்யவில்லை!

நிலையற்ற சோஷலிஸ்டுகளை ''அன்பு காட்டிக் கொல்லும்'' அமெரிக்க முதலாளித்துவ முறைக்கும், ''அன்பார்ந்த'', கனிந்த, ஜனநாயக முதலாளித்துவ வர்க்கத்தாருக்குப்

9–35

பணிவன்பு காட்டும் பொருட்டு சோஷலிசத்தை விட்டொழித்துவிடும் ஜெர்மன் சந்தர்ப்பவாத முறைக்கும் இங்கு நமக்கு ஓர் உதாரணம் தரப்படுகிறது.

லேகினுடைய வாழ்த்துச் சொற்பொழிவு ஆங்கிலத்தில் பெயர்த்தளிக்கப்பட்டது (ஜனநாயகமானது தனது பாராளு மன்றத்தில் "அந்நிய" மொழி பேசப்பட்டதைக் கேட்டுச் சிறிதும் முகம் சுளிக்கவில்லை). காங்கிரசின் இருநூற்றுச் சொச்சம் உறுப்பினர்களும் லேகினைக் குடியரசின் "விருந்தினராய்" வரவேற்று ஒவ்வொருவராய் அவருடன் கைகுலுக்கினர்; சபாநாயகர் தமது நன்றியைத் தெரிவித்தார்.

> "என்னுடைய வாழ்த்துச் சொற்பொழிவின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் ஐக்கிய நாட்டிலும் சரி, ஜெர்மனியிலும் சரி சோஷலிஸ்டுப் பத்திரிகைகள் நல்லபடி வரவேற்றன" என்று லேகின் எழுதுகிறார். "ஆனால் ஜெர்மனியில் சில பத்திரிகையாசிரியர்களால், சமூக-ஜனநாயகவாதி எவரும் முதலாளித்துவச் சபையோருக்கு சமூக-ஜனநாயகச் சொற்பொழிவாற்றுவது முடியாத காரியமென்பதை என்னுடைய சொற்பொழிவு திரும்பவும் நிரூபித்ததாய்ச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஆம், இந்தப் பத்திரிகையாசிரியர்கள் என் இடத்தில் இருந்திருந்தால், நிச்சயம் முதலாளித்துவத்தை எதிர்த்தும் வெகுஜன வேலைநிறுத்தத்தை ஆதரித்தும் சொற்பொழிவாற்றியிருப்பார்கள். ஆனால் ஜெர்மனியின் சமூக-ஜனநாயக, தொழிற்சங்கங்களில் ஒன்றுதிரண்ட தொழிலாளர்கள் தேசங்களிடையே சமாதானத்தையும், சமாதானத்தின் மூலம் கலாசாரம் முடியுமான உயர்ந்த அளவுக்கு வளர்ச்சி பெறுவதையும் விரும்புகிறார்கள் என்பதை நான் இந்தப் பாராளுமன்றத்துக்கு வலியுறுத்துவது முக்கியமெனக் கருதினேன்."

பாவம் "பத்திரிகையாசிரியர்கள்", நமது லேகின் அவர்களைத் தமது "ராஜதந்திரச்" சொற்பொழிவைக் கொண்டு தகர்த்துவிட்டார்! பொதுவில் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும், குறிப்பாய் லேகினுக்கும் உரித்தான சந்தர்ப்பவாதம் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் நீண்ட காலமாய் எல்லோருக்கும் தெரிந்துள்ளதுதான். வர்க்க உணர்வு

படைத்த தொழிலாளர்கள் மிகப் பலரும் இதைத் தக்கபடி மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் ருஷ்யாவில், ஐரோப்பிய சோஷலிசத்தின் இந்த ''முன்மாதிரி'' குறித்து அளவு மீறி அதிகம் பேசப்படுவதால், அதுவும் இந்த ''முன்மாதிரியின்'' படுமோசமான, மிகவும் ஆட்சேபத்துக்குரிய கூறுகளாய்த் தேர்வு செய்து கொண்டு பேசப்படுவதால், லேகினுடைய சொற்பொழிவு குறித்து இன்னும் சற்று விவரமாய்ப் பரிசீலிப்பது ருஷ்யாவிலுள்ள நமக்குப் பொருத்தமுடையதாய் இருக்கும்.

ஜெர்மன் தொழிற் சங்கங்களின்—அதாவது சமூக-ஜனநாயகத் தொழிற் சங்கங்களின்—இருபது லட்சம் உறுப்பினர்களாலான பெரும் படையின் தலைவரான இவர், ஜெர்மன் ரைஹ்ஸ்டாகில் சமூக-ஜனநாயகக் குழுவின் உறுப்பினரான இவர், முதலாளித்துவ அமெரிக்காவின் பிரதிநிதிகளது உயர் சபையிலே முழுக்க முழுக்க மிதவாத-முதலாளித்துவத் தன்மையதான சொற்பொழிவாற்றினார். ''சமாதானத்தையும்'', ''கலாசாரத்தையும்'' பற்றிய ஒரு சொற்பொழிவுக்கு எந்தவொரு மிதவாதியும், ஏன் அக்டோபரிஸ்டுங்கூட, ஆதரவு தெரிவிக்கத் தயங்கமாட்டார் என்பதைக் கூறத் தேவையில்லை.

இது சமூக-ஜனநாயகச் சொற்பொழிவல்ல என்று ஜெர்மன் சோஷலிஸ்டுகள் குறிப்பிட்டதும், மூலதனத்தின் கூலியடிமைகளது இந்தத் ''தலைவர்'' அவர்களை இகழ்ச்சிக்குரியோராய் ஏளனம் செய்கிறார். ''நடைமுறை அரசியலாளரும்'' தொழிலாளர்களிடமிருந்து காசு வசூலிக்கிறவருமான இவருடன் ஒப்பிடுகையில் ''பத்திரிகையாசிரியர்கள்'' எம்மட்டில்! வேறொரு நாட்டில் போலீஸ் பெருந்தலைவர்கள் மூன்றும் கூறினரிடத்துக்[73] கொண்டுள்ள அதே இகழ்ச்சி மனப்பான்மையை நமது இந்தக் குட்டிபூர்ஷுவாத் தற்பெருமையாளர் பத்திரிகையாசிரியர்கள்பால் கொண்டிருக்கிறார்.

''இந்தப் பத்திரிகையாசிரியர்கள்'' நிச்சயம் ''முதலாளித்துவத்தை எதிர்த்துச்'' சொற்பொழிவாற்றியிருப்பார்கள் என்கிறார்.

இந்தப் போலி சோஷலிஸ்டு எதை இப்படி ஏளனம் செய்கிறார் என்பதைக் கவனியுங்கள்! முதலாளித்துவத்தை

எதிர்த்துப் பேசுவது அவசியமென்றே எந்த சோஷலிஸ்டும் நினைப்பார் என்கிற கருத்தை அவர் இப்படி ஏளனம் செய்கிருர். ஜெர்மன் சந்தர்ப்பவாதத்தின் ''ராஜதந்திரிகளுக்கு'' இது போன்ற கருத்து அந்நியமானதுதான். இவர்கள் ''முதலாளித்துவத்தின்'' மனம் புண்படாதபடி பேசுகிறவர்கள். அடிவருடியின் மனப்பான்மையுடன் இவ்விதம் சோஷலிசத்தை நிராகரித்துத் தம்மை இழிவுபடுத்திக் கொள்ளும் இவர்கள் தமது இழிநிலையை மெச்சிப் புகழ்ந்து கொள்கின்றனர்.

யாரோ ஒருவரல்ல இந்த லேகின். தொழிற் சங்கப் பட்டாளத்தின்—அல்லது இந்தப் பட்டாளத்தின் அதிகாரிகளது அணியின் என்று சொல்ல வேண்டும்—பிரதிநிதி அவர். அவருடைய சொற்பொழிவு அகஸ்மாத்தாய் நிகழ்ந்துவிட்ட ஒன்றல்ல, வாய் தவறிப் பேசப்பட்டுவிட்டதல்ல, விதிவிலக்கான ஒன்றல்ல, போலீஸ் ஆணவம் சிறிதும் வெளிக்காட்டாது நன்னயத்தோடு நடந்து கொண்ட அமெரிக்க முதலாளிகளைக் கண்டு பிரமித்துப் போன ஜெர்மன் நாட்டுப்புற அலுவலகச் சிப்பந்தி ஒருவர் இழைத்துவிட்ட தவறல்ல. அது மட்டுமேதான் என்ருல் லேகினுடைய சொற்பொழிவு கவனிக்கத் தக்கதாய் இராது.

அது அப்படிப்பட்டதல்ல என்பது தெளிவு.

ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற சர்வதேசக் காங்கிரசில் ஜெர்மன் பிரதிநிதிக் குழுவில் பாதிப் பேர் இவ்வகைப்பட்ட போலி சோஷலிஸ்டுகளாகி, காலனிப் பிரச்சினை குறித்து அதீத-சந்தர்ப்பவாதத் தீர்மானத்துக்கு ஆதரவாய் வாக்களித்தனர்.

ஜெர்மன் சஞ்சிகை *Sozialistische (??) Monatshefte*வை எடுத்துக் கொள்ளுங்கள். லேகின் போன்ருேரது வாய்மொழிகளை எப்பொழுதும் இதில் காணலாம். தொழிலாளர் இயக்கத்தின் முக்கியமான எல்லாப் பிரச்சினைகளையும் பற்றிய இந்த வாய்மொழிகள் முழுக்க முழுக்கச் சந்தர்ப்பவாதத் தன்மையனவாயும், சோஷலிசத்துடன் கிஞ்சித்தும் ஒட்டுறவு இல்லாதனவாயும் இருக்கக் காண்பீர்கள்.

*Sozialistische Monatshefte*வை ''யாரும் படிப்பதில்லை'', இது செல்வாக்கு சிறிதும் இல்லாதது என்றெல்லாம் சொல்லி ''அதிகாரபூர்வமான'' ஜெர்மன் கட்சி ''அதிகாரபூர்வமான''

விளக்கம் தருகிறது. ஆனால் இது உண்மையல்ல. ஷ்டுட்கார்ட் ''நிகழ்ச்சி'' இது உண்மையல்ல என்பதை நிரூபித்தது. *Sozialistische Monatshefte*யில் எழுதும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தொழிற் சங்கத் தலைவர்களுமான பொறுப்பு வாய்ந்த மிக முக்கிய ஆட்கள் தமது கருத்துக்களை இடையறாதும் பிறழாதும் மக்கள் திரள்களுக்கிடையே பரப்பி வருகிறார்கள்.

ஜெர்மன் கட்சியின் ''அதிகாரபூர்வமான இந்த நன்னம்பிக்கை'' இக்கட்சியின் முகாமிலேயே ''இந்தப் பத்திரிகையாசிரியர்கள்'' என்ற பெயரை—முதலாளித்துவ வர்க்கத்தாரின் கண்ணோட்டத்தில் இகழ்ச்சியைக் குறிப்பதும், சோஷலிஸ்டின் கண்ணோட்டத்தில் பெருமைக்குரியதுமான இப்பெயரை—லேகினிடமிருந்து பெற்றுக் கொண்டவர்களால் நீண்ட காலமாய்ச் சுட்டிக்காட்டப்பெற்று வருவதுதான். ருஷ்யாவிலுள்ள மிதவாதிகளும் கலைப்புவாதிகளும் (திரோத்ஸ்கியும் அடங்கலாய்த்தான்) நமது மண்ணுக்கு இந்த இதமான அன்புகெழுமிய குணாதிசயத்தைப் பெயர்த்துக் கொண்டு வந்து நாட்ட எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் முயலுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களை வைராக்கியமாய் எதிர்த்தாக வேண்டும்.

பல பெருஞ் சேவைகள் ஆற்றிய சிறப்புடைத்தது ஜெர்மன் சமூக-ஜனநாயகம். ஹோஹ்பர்குகள், டூரிங்குகள், இவர்களைச் சேர்ந்தோர் ஆகிய எல்லோரையும் எதிர்த்து மார்க்ஸ் நடத்திய போராட்டத்தின் பயனாய் ஜெர்மன் சமூக-ஜனநாயகம் கறாராய் வகுத்தமைக்கப் பெற்ற தத்துவத்தைப் பெற்றிருக்கிறது — நமது நரோத்னிக்குகள் இத்தத்துவத்தைத் தட்டிக்கழிக்கவோ சந்தர்ப்பவாத வழிகளில் திருத்தவோ செய்யும் முயற்சி வீண் முயற்சியே. ஜெர்மன் சமூக-ஜனநாயகம் வெகுஜன நிறுவனத்தையும் செய்தியேடுகளையும் தொழிற் சங்கங்களையும் அரசியல் கழகங்களையும் பெற்றிருக்கிறது—நமது நாட்டில் பிராவ்தா மார்க்சியவாதிகள்[74] டூமா தேர்தல்கள், தினசரிப் பத்திரிகைகள், இன்ஷூரன்ஸ் வாரியத் தேர்தல்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றில் எல்லாம் எங்கும் பெற்று வரும் வெற்றிகளின் வடிவில் மிகவும் திட்டவட்டமாய் எழுப்பப்பட்டு வரும் அதே வெகுஜன

ஒழுங்கமைப்புதான் இது. ருஷ்ய நிலைமைகளுக்கு ஏற்ற ஒரு வடிவத்தில் ருஷ்யாவில் இந்த வெகுஜன ஒழுங்கமைப்பு வளர்ச்சியுறும் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க நமது கலைப்பு வாதிகள்—தொழிலாளர்களால் ''பதவி நீக்கம் செய்யப் பட்டுவிட்ட'' இவர்கள்—செய்யும் முயற்சிகள் நரோத்னிக்கு களின் முயற்சிகளைப் போலவே வீண் முயற்சிகளே ஆகும்; தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து முறித்துக் கொண்டு சென்ற, நரோத்னிக்குகளுடையது போன்ற அறிவுத்துறை வாதப் பிளவே ஆகும்.

ஆனால் ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் இந்தச் சிறப்பு கள் சிறப்புகளாய் இருப்பதற்கு லேகின் நிகழ்த்தியதை ஒத்த அவமானகரமான சொற்பொழிவுகளோ, *Sozialistische Monat-sheftew*இல் எழுதுவோரின் (பத்திரிகை வாயிலான) ''வாய் மொழிகளோ'' அல்ல காரணம்; இவற்றையெல்லாம் மீறியே அவை சிறப்புகளாய் இருந்து வருகின்றன. சந்தேகத்துக்கு இட மின்றி ஜெர்மன் கட்சியைப் பீடித்துக் கொண்டு இவ்வகை யான நிகழ்ச்சிகள் வாயிலாய் வெளித்தோன்றும் இந்த வியாதியை நாம் மூடிமெழுகக் கூடாது, ''அதிகாரபூர்வமான நன்னம்பிக்கைச்'' சொற்கள் கொண்டும் குழப்பக் கூடாது. நம்முடையதைக் காட்டிலும் வயதான ஓர் இயக்கத்தின் அனுபவத்திலிருந்து நாம் கற்றுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அதிலிருந்து எதைக் காப்பியடிக்கலாகாது என்பதைக் கற்றுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, ருஷ்யத் தொழிலாளர்களுக்கு நாம் இந்த வியாதியினை அம்பல மாக்கிக் காட்டியாக வேண்டும்.

புரோஸ்வெஷ்ச்சேனியே,
இதழ் 4, 1914 ஏப்ரல்
ஒப்பம்: வி. இ.

நூல் திரட்டு,
தொகுதி 25,
பக்கங்கள் 106-10

யுத்தமும் ருஷ்ய சமூக-ஜனநாயகமும்

பத்தாண்டுகளாய் எல்லா நாடுகளின் அரசாங்கங்களாலும் முதலாளித்துவக் கட்சிகளாலும் தயார் செய்யப்பட்ட யுத்தம் மூண்டுவிட்டது. படைக்கலப் பெருக்கமும், முன்னேறிய நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியின் மிக நவீனக் கட்டமான ஏகாதிபத்தியக் கட்டத்தில் சந்தைகளுக்கான போராட்டம் வெகுவாய்க் கடுமையாகிவிட்ட நிலைமையும், மிகவும் பின்தங்கிய கிழக்கைரோப்பிய முடியரசுகளின் அரசவம்ச நலன்களும் இந்த யுத்தத்தை மூளச் செய்வது தவிர்க்க முடியாததாயிருந்தது, அவ்விதமே மூளச் செய்தும் விட்டன. பிரதேசம் பிடித்தல், பிற தேசங்களை அடிமை செய்தல், போட்டியிடும் தேசங்களை நாசத்துக்கு உட்படுத்தி அவற்றின் செல்வத்தைச் சூறையாடுதல், உழைப்பாளி வெகுஜனங்களின் கவனத்தை ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் பிரிட்டனிலும் பிற நாடுகளிலும் இருந்து வரும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளிலிருந்து திருப்பிவிடுதல், தொழிலாளர்களைப் பிளவுபடுத்தலும் தேசியவாத மதிமயக்கம் கொள்ளச் செய்தலும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் பொருட்டு தொழிலாளர்களது முன்னணிப் படையை அழித்தொழித்தல் ஆகிய இவையே தான் இன்றைய யுத்தத்தின் மெய்யான உள்ளடக்கமும் உட்பொருளும் முக்கியத்துவமும்.

இந்த யுத்தத்தின் உண்மை அர்த்தத்தைப் புலப்படுத்திக் காட்டும் கடமையும், இந்த யுத்தத்துக்கு ஆதரவாய் ஆளும் வர்க்கங்களும் பிரபுத்துவ நிலச்சுவான்தார்களும் முதலாளித்துவ வர்க்கத்தாரும் பரப்பும் பொய்க்கூற்றுகளையும் குதர்க்கங்களையும் ''தேசபக்த'' வாய்ச்சவடாலையும் சிறிதும் தளராது அம்பலம் செய்யும் கடமையும் பிரதானமாய் சமூக-ஜனநாயகத்தையே சாரும்.

போரிடும் தேசங்களின் ஒரு கோஷ்டிக்கு ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்குகிறது. தாயகம், சுதந்திரம், பண்பாடு இவற்றின் பாதுகாப்புக்காகவும், ஜாரிசத்தால் ஒடுக்கப்படும் பல்வேறு இன மக்களின் விடுதலைக்காகவும், பிற்போக்கான ஜாரிசத்தை அழிப்பதற்காகவும் இந்த யுத்தம் நடைபெறுகிறதென்று சாதித்து இவ்வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி வெகுஜனங்களையும் ஏமாற்றி வருகிறது. ஆனால் உண்மை என்னவெனில் இரண்டாம் வில்ஹெல்மின் தலைமையிலுள்ள பிரஷ்ய ஜங்கர்களுக்குத் தொண்டூழியம் புரியும் இந்த முதலாளித்துவ வர்க்கம் எப்பொழுதுமே ஜாரிசத்தின் நம்பகமான கூட்டாளியாகவும், ருஷ்யாவின் தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சிகர இயக்கத்தின் பகையாகவுமேதான் இருந்துள்ளது. யுத்தத்தின் முடிவு எப்படியிருப்பினும் இந்த முதலாளித்துவ வர்க்கம் ஜங்கர்களுடன் சேர்ந்து ருஷ்யாவில் புரட்சிக்கு எதிராய் ஜாரிஸ்டு முடியாட்சிக்கு ஆதரவளிக்க எல்லா வகையிலும் பாடுபடுமென்பது திண்ணம்.

உண்மையில் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் சேர்பியாவுக்கு எதிராய்க் கொள்ளைக்காரப் போர் துவக்கியிருக்கிறது. இந்நாட்டை அடிமைப்படுத்துவதும், தென்திசை ஸ்லாவ்களுடைய தேசியப் புரட்சியை நசுக்குவதும், அதே போதில் மேலும் சுதந்திரமான நாடுகளாகிய பெல்ஜியத்துக்கும் பிரான்சுக்கும் எதிராய்த் தனது இராணுவப் படைகளின் பெரும் பகுதியை அனுப்பிச் செல்வம் படைத்த போட்டியாளர்களைச் சூறையாடுவதும்தான் இதன் நோக்கம். தற்காப்பு யுத்தம் புரிவதாய்க் கதை கட்டிப் பரப்பி வரும் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் யுத்தத்துக்கு மிகவும் சாதகமானதெனத் தான் நினைத்த நேரமாய்ப் பார்த்து, இராணுவத் தளவாடங்களில் தனது மிக நவீன அபிவிருத்திகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் ருஷ்யாவும் பிரான்சும் ஏற்கனவே திட்டமிட்டு முடிவு செய்த படைக்கலப் பெருக்கம் ஏற்படுவதை முந்திக் கொள்ளவும் தக்க நேரமாய்ப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

போரிடும் தேசங்களின் மற்றொரு கோஷ்டி பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையில் உள்

ளது. இவர்கள் தம்து நாடுகளின் பாதுகாப்புக்காகவும் சுதந்திரத்துக்காகவும் பண்பாட்டுக்காகவும் ஜெர்மன் இராணுவ ஆதிக்கத்தையும் கொடுங்கோன்மையையும் எதிர்ப்பதற்காகவும் யுத்தம் புரிவதாய்ப் பறைசாற்றித் தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி வெகுஜனங்களையும் ஏய்த்து வருகின்றனர். உண்மை என்னவெனில் இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் ஐரோப்பாவின் மிகவும் பிற்போக்கான, காட்டுமிராண்டித்தனமான முடியாட்சியாகிய ருஷ்ய ஜாரிசத்தின் படைகளைக் கூலிக்கு அமர்த்தி ஜெர்மனி மீது தாக்குதல் தொடுக்க அவற்றைத் தயார் செய்வதற்காக நீண்ட காலமாய் நூறு கோடிக் கணக்கில் செலவிட்டு வந்துள்ளனர்.

பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் நடத்தும் போராட்டத்தின் நோக்கம் ஜெர்மன் காலனிகளைக் கைப்பற்றுவதும், தன்னிலும் அதிக வேகத்தில் பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் போட்டி தேசத்தைப் பாழ்படுத்துவதும் தான். இந்தப் புனித நோக்கத்தைப் பின்பற்றும் ''முன்னேறிய'' ''ஜனநாயகத்'' தேசங்கள் காட்டுத்தனமான ஜாரிஸ்டு ஆட்சி மேலும் கடுமையாய்ப் போலந்தையும் உக்ரைனையும் பிறவற்றையும் ஒடுக்கவும் ருஷ்யாவில் புரட்சியை மேலும் அடியோடு நசுக்கவும் அதற்குத் துணை புரிந்து வருகின்றன.

போரிடுவோரில் எந்தக் கோஷ்டியும் சூறையாடி நாசமாக்குதல், அட்டூழியங்கள், யுத்தத்தின் வரம்பற்ற கொடூரங்கள் ஆகிய இவற்றில் பிறிதொரு கோஷ்டிக்குச் சப்பை இல்லை. இருப்பினும் பாட்டாளி வர்க்கத்தை ஏய்க்கும் பொருட்டும், மெய்யான ஒரேயொரு விடுதலை யுத்தத்திலிருந்து, அதாவது தனது ''சொந்த'' நாட்டையும் ''அந்நிய'' நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்திலிருந்து அதன் கவனத்தைக் கலைத்திடும் பொருட்டும்—மிகப் புனிதமான இத்தகைய நோக்கத்தை ஈடேறச் செய்வதற்காக—ஒவ்வொரு நாட்டின் முதலாளித்துவ வர்க்கமும் தேசபக்தியைப் பற்றிய பொய்ச் சொற்களின் துணை கொண்டு தனது ''சொந்த'' தேசிய யுத்தத்தின் முக்கியத்துவத்தை மெச்சிப் புகழ முயலுகிறது; பகைவனைத் தோற்கடிப்பதில் தான் முனைந்திருப்பது சூறையாடுவதற்காக

வும் பிரதேசம் பிடிப்பதற்காகவும் அல்ல, எல்லா மக்களை யும் — தன் மக்களைத் தவிர — ''விடுதலை பெறச்'' செய் வதற்காகவே தான் இதில் முனைந்திருப்பதாய்ச் சாதிக்கிறது.

ஆனால் எல்லா நாடுகளின் அரசாங்கங்களும் முதலாளித் துவ வர்க்கமும் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி ஒருவரோ டொருவர் மோதிக் கொள்ளச் செய்வதற்கு எவ்வளவுக்கு எவ்வளவு கடுமையாய் முயலுகின்றனவோ, இந்தப் புனித நோக்கத்துக்காக இராணுவச் சட்டத்தையும் இராணுவத் தணிக்கையையும் (இப்பொழுது யுத்த காலத்திலுங்கூட இவை வெளிநாட்டுப் பகைவனைக் காட்டிலும் ''உள் நாட்டுப்'' பகைவனுக்கு எதிராய்த்தான் இன்னும் அதிகக் கடு மையாய் எடுக்கப்படுகின்றன) எவ்வளவுக்கு எவ்வளவு காட் டுத்தனமாய்ச் செயல்படுத்துகின்றனவோ, வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கம் எல்லா நாடுகளிலும் ''தேச பக்த'' முதலாளித்துவக் கும்பல்களின் தங்குதடையற்ற தேசியவெறியை எதிர்த்துத் தனது வர்க்க ஒருமைப்பாட்டை யும் தனது சர்வதேசியத்தையும் தனது திடமான சோஷலிசக் கருத்துக்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவ் வளவுக்கு அவ்வளவு கட்டாயமான அதன் கடமையாகிறது. வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் இந்தக் குறிக் கோளைக் கைவிடுவது, அவர்கள் தமது சோஷலிச ஆர்வவிருப் பங்கள் மட்டுமின்றி, விடுதலையும் ஜனநாயகமும் வேண்டு மென்ற தமது ஆர்வவிருப்பங்களையும் விட்டொழித்துவிடு கிறார்கள் என்பதைத்தான் குறிப்பிடுவதாகும்.

தலைமையான ஐரோப்பிய நாடுகளின் சோஷலிஸ்டுக் கட்சிகள் இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டன என்பதை, இக்கட்சிகளின் தலைவர்களுடைய நடத்தை, குறிப் பாய் ஜெர்மனியில், சோஷலிச இலட்சியத்துக்கு அப்பட்ட துரோகம் இழைப்பதாய் இருக்கிறது என்பதை நெஞ்சு பொறுக்க மாட்டாத ஏமாற்ற உணர்ச்சியோடு நாம் குறிப் பிட்டாகவேண்டியுள்ளது. ஆகப் பெரிய வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த இந்நேரத்தில் தற்போதைய சோஷலிஸ்டு அகிலத்தின்—இரண்டாவது அகிலத்தின்(1889-1914)—மிகப் பெருவாரியான தலைவர்கள் சோஷலிசத்துக்குப் பதிலாய்த் தேசியவாதத்தைக் கைக்கொள்ள முயலுகின்றனர். இவர்

களுடைய நடத்தையின் விளைவாய் இந்நாடுகளுடைய தொழிலாளர் கட்சிகள் அரசாங்கங்களுடைய கொலைகார நடத்தையை எதிர்க்காதிருந்தன, அதற்குப் பதில் ஏகாதிபத்திய அரசாங்கங்களுடைய நிலைக்குத் தொழிலாளி வர்க்கம் தனது நிலையை முழுதொத்ததாக்கிக் கொள்ளும்படி அழைப்பு விடுத்தன. யுத்தக் கடன்களுக்கு ஆதரவாய் வாக்களித்ததன் மூலம், தமது ''சொந்த'' நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தாரின் தேசியவெறி (''தேசபக்த'') கோஷங்களைத் தாமும் திருப்பிக் கூறியதன் மூலம், யுத்தத்துக்கு நியாயம் கற்பித்து அதற்கு ஆதரவளித்ததன் மூலம், போரிடும் நாடுகளது முதலாளித்துவ அரசாங்கங்களில் சேர்ந்து கொண்டதன் மூலம், இன்ன பிற செயல்கள் மூலம் அகிலத்தின் தலைவர்கள் சோஷலிசத்துக்குத் துரோகம்இழைத்தனர். இன்றைய ஐரோப்பாவின் மிகுந்த செல்வாக்கு படைத்த சோஷலிஸ்டுத் தலைவர்களும் மிகுந்த செல்வாக்குக்குரிய சோஷலிஸ்டுப் பத்திரிகைகளும் எவ்வழியிலும் சோஷலிஸ்டுத் தன்மையற்ற தேசியவெறி மிக்க முதலாளித்துவ, மிதவாதக் கருத்துக்கள் கொண்டிருக்கக் காண்கிறோம். இவ்விதம் சோஷலிசத்தை இழிவுபடுத்தியதற்கான பொறுப்பு இரண்டாவது அகிலத்தின் மிகுந்த பலமும் செல்வாக்கும் கொண்ட கட்சியாய் இருந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளையே பிரதானமாய்ச் சாரும். ஆயினும் பிரெஞ்சு நாட்டுக்குத் துரோகம் புரிந்து, கம்யூனை நசுக்கும் பொருட்டு பிஸ்மார்க்குடன் கூட்டு சேர்ந்து கொண்ட அதே முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகள் ஏற்றுள்ள பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் செயல்களுக்கும் எந்த நியாயமும் இல்லை.

ஜெர்மன், ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் யுத்தத்துக்குத் தாம் ஆதரவாய் இருப்பதன் மூலம் ருஷ்ய ஜாரிசத்தை எதிர்த்துப் போராடுவதாய் வாதாடி தமது யுத்த ஆதரவுக்கு நியாயம் கூற முயலுகிறார்கள். இவ்வாறு நியாயம் கூறுவது முற்றிலும் குதர்க்கவாதமே ஆகுமென்று கருதுகிறோமென ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளான நாம் பறைசாற்றுகிறோம். நமது நாட்டில் ஜாரிசத்துக்கு எதிரான புரட்சி இயக்கம் கடந்த சில ஆண்டுகளில் மீண்டும் வளர்ந்து பிரம்மாண்ட

அளவுகளை அடைந்திருக்கிறது. ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம்தான் எப்பொழுதுமே இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கி வந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளின் அரசியல் வேலைநிறுத்தங்களில் பத்து லட்சக் கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்; ஜாரிசத்தை வீழ்த்திவிட்டு ஜன நாயகக் குடியரசை நிறுவுதலே இந்த வேலைநிறுத்தங்களின் கோஷமாய் இருந்துள்ளது. பிரெஞ்சுக் குடியரசின் ஜனாதிபதி புவன்கரே யுத்தம் தொடங்கும் தறுவாயில் இரண்டாம் நிக்கலாயைப் பார்க்க வந்திருந்தபோது செயின்ட் பீட்டர்ஸ் பர்கில் தெருக்களில் தொழிலாளர்கள் தடை அரண்கள் எழுப்பியிருந்ததை அவர் காண முடிந்தது. ஜாரிஸ்டு முடியாட்சி எனும் அவக்கேட்டிலிருந்து மனிதகுலத்தை விடுவிக்க ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் எந்தத் தியாகம் புரியவும் தயங்கியதில்லை. ஜாரிசத்தின் வீழ்ச்சியைக் குறிப்பிட்ட சில நிலைமைகளில் தாமதப்படுத்தக் கூடியது எதாவது இருப்பின், ருஷ்யாவின் ஜனநாயகம் அனைத்தையும் எதிர்த்து ஜாரிசம் நடத்தும் போராட்டத்தில் அதற்கு உதவக் கூடியது எதாவது இருப்பின், அது தற்போது நடைபெறும் யுத்தமேதான். இந்த யுத்தம் பிரிட்டிஷ், பிரெஞ்சு, ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தாரின் பணப் பைகளை ஜாரிசத்தின் கைக்குக் கிட்டச் செய்துள்ளது, அதன் பிற்போக்கு நோக்கங்களுக்காகப் பயன் படச் செய்துள்ளது. ஜாரிசத்தை எதிர்த்து ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சிப் போராட்டத்துக்கு இடையூறு செய்யக் கூடியது எதாவது இருக்குமாயின், அது ஜெர்மன், ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத் தலைவர்கள் செயற்படும் முறையேதான்; ருஷ்யாவின் தேசியவெறி கொண்ட பத்திரிகைகள் இதனை எமக்கு ஓர் உதாரணமாய் இடையறாது எடுத்துரைத்து வருகின்றன.

புரட்சிகரமான எல்லாச் செயல்களையும் தவிர்த்துக் கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்படும்படி ஜெர்மன் சமூக-ஜனநாயகம் அந்த அளவுக்குப் பலவீனமாயிருந்ததெனக் கொள்வோமாயினுங்கூட, அது தேசியவெறி முகாமில் சேர்ந்து கொண்டிருக்கக் கூடாது; அல்லது பாட்டாளி வர்க்க அகிலத்தின் பதாகைக்கு ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தலைவர்கள் இழுக்கு உண்டாக்குகிறார்களென இத்தாலிய

சோஷலிஸ்டுகள் கூறக் காரணமாய் அமைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கக் கூடாது.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியான நமது கட்சி யுத்தத்திஞல் பிரம்மாண்ட சேதங்களுக்கு இலக்காகியுள்ளது, இனியும் தொடர்ந்து இலக்காகும். சட்டபூர்வமான நமது தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகள் யாவும் நசுக்கப்பட்டுவிட்டன. மிகப் பெருவாரியான தொழிலாளி வர்க்கச் சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டன, நமது தோழர்களில் ஏராளமாஞேர் சிறையில் தள்ளப்பட்டும் தொலைவிடத் தண்டனை விதிக்கப்பட்டுமுள்ளனர். ஆயினும் நமது பாராளுமன்றப் பிரதிநிதிகள்—டூமாவிலுள்ள ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் குழுவினர்—யுத்தக் கடன்களை ஆதரித்து வாக்களிக்காதிருப்பதும், தமது கண்டனத்தை மேலும் சக்தி வாய்ந்த முறையில் வெளியிடும் பொருட்டு டூமாவிலிருந்து வெளிநடப்பு செய்வதும்கூட தமது அவசர அவசிய சோஷலிசக் கடமையாகுமெனக் கருதினர். ஐரோப்பிய அரசாங்கங்களின் கொள்கை ஏகாதிபத்தியக் கொள்கையாகுமென்று நிந்தனை செய்வது தமது கடமையாகுமெனக் கருதினர். ஜார் அரசாங்கம் தனது கொடுங்கோன்மையைப் பத்து மடங்கு அதிகமாக்கிக் கொண்டுவிட்ட போதிலும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் யுத்தத்தை எதிர்த்து ஏற்கனவே தமது முதலாவது சட்டவிரோத அறிக்கைகளை வெளியிட்டு, இவ்விதம் ஜனநாயகத்துக்கும் அகிலத்துக்கும் தாம் ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றி வருகின்றனர்.

இரண்டாவது அகிலத்தின் தகர்வு ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளில் சிறுபான்மையோராலும் நடுநிலைமை நாடுகளின் சிறந்த சமூக-ஜனநாயகவாதிகளாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளிடையே கடுமையான வெட்க உணர்ச்சியை உண்டாக்கியுள்ளது. பிரிட்டன், பிரான்ஸ் இரு நாடுகளிலும் சோஷலிஸ்டுகள் பெருவாரியான சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தேசியவெறியை எதிர்த்துப் பேசியுள்ளனர். சந்தர்ப்பவாதிகள்—உதாரணமாய், நீண்ட காலமாய் தேசிய-மிதவாத நிலையை மேற்கொண்டுவரும் ஜெர்மன் இதழான *Sozialistische Monat-*

*shefte*யைச் சேர்ந்தவர்கள்—ஐரோப்பிய சோஷலிசத்தின் மீது வெற்றி பெற்றுவிட்டோமென தக்க காரணத்துடன் கொண்டாடி வருகிறார்கள். இந்நிலைமையில் சந்தர்ப்பவாதத்துக்கும் புரட்சிகர சமூக-ஜனநாயகத்துக்கும் இடையே ஊசலாடுவோரும் (ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ''மைய நிலையாளர்களைப்'' போன்றோர்), இரண்டாவது அகிலத்தின் தகர்வைச் சந்தடி செய்யாமல் திரையிட்டு மூடவோ, ராஜதந்திரப் பதப் பிரயோகங்கள் கொண்டு வேஷமிட்டு மறைக்கவோ முயலுவோரும் பாட்டாளி வர்க்கத்துக்குத் தம்மால் முடியுமான படுமோசமான தீங்கே இழைக்கின்றனர்.

இதற்கு மாறாய் இந்தத் தகர்வை ஒளிவு மறைவின்றி ஏற்றுக் கொண்டாக வேண்டும், இதற்குரிய காரணங்களைப் புரிந்து கொண்டாக வேண்டும். அப்பொழுதுதான் எல்லா நாடுகளின் தொழிலாளர்களது ஒரு புதிய, இன்னும் நீடித்து நிலவவல்ல சோஷலிச ஒற்றுமையைக் கட்ட முடியும்.

சந்தர்ப்பவாதிகள் ஷ்டுட்கார்ட், கோப்பன்ஹேகன்,[75] பாஸெல்[76] காங்கிரஸ்களின் தீர்மானங்களைக் குலைத்துவிட்டனர். இந்தத் தீர்மானங்கள் எல்லா நிலைமைகளிலும் எந்த நிலைமைகளிலும் தேசியவெறியை எதிர்ப்பதை எல்லா நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளுக்குமுரிய கடப்பாடாக்கின; முதலாளித்துவ வர்க்கத்தாரும் அரசாங்கங்களும் துவக்கும் எந்த யுத்தத்துக்கும் உள்நாட்டு யுத்தத்தையும் சமுதாயப் புரட்சியையும் பற்றிய தீவிரமான பிரசாரத்தைக் கொண்டு பதிலளிப்பதை சோஷலிஸ்டுகளுடைய கடப்பாடாக்கின. இரண்டாவது அகிலத்தின் தகர்வு சந்தர்ப்பவாதத்தின் தகர்வைக் குறிப்பதாகும்; சந்தர்ப்பவாதமானது, தற்போது காலங் கழிந்ததாகிவிட்டதும் (''சமாதானபூர்வமானது'' என்று கூறப்பட்டதும்) ஆன ஒரு வரலாற்றுக் கட்டத்தின் இயல்புகளிலிருந்து வளர்ந்து, அண்மை ஆண்டுகளில் அகிலத்தில் அனேகமாய் ஆதிக்கம் செலுத்தலாயிற்று. சந்தர்ப்பவாதிகள் நீண்ட காலமாகவே இந்தத் தகர்வுக்கான அடிநிலைகளைத் தயார் செய்து வந்துள்ளனர்; சோஷலிசப் புரட்சியின் அவசியத்தை மறுத்து அதற்குப் பதிலாய் முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தைக் கைக்கொண்டதன் மூல

மும், குறிப்பிட்ட தருணங்களில் உள்நாட்டு யுத்தமாய்த் தவிர்க்க முடியாதபடி மாற்றப்பட்டுவிடும் வர்க்கப் போராட்டத்தை நிராகரித்து வர்க்க ஒத்துழைப்பைப் பிரசாரம் செய்ததன் மூலமும், தேசபக்தி, தாயகப் பாதுகாப்பு என்பவற்றின் திரைமறைவில் முதலாளித்துவத் தேசியவெறியைப் பிரசாரம் செய்து, தொழிலாளர்களுக்குத் தாய்நாடு ஏதுமில்லையென நெடுங்காலத்துக்குமுன்பு கம்யூனிஸ்டு அறிக்கையில் குறிக்கப்பட்ட அடிப்படையான சோஷலிச உண்மையை உதாசீனம் செய்தல் அல்லது நிராகரிப்பதன் மூலமும், இராணுவ ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் எல்லா நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் எதிராய் எல்லா நாடுகளின் பாட்டாளிகளும் புரட்சிகர யுத்தம் புரிவதன் அவசியத்தை அங்கீகரிப்பதற்குப் பதிலாய் உணர்ச்சி வயப்பட்ட அற்பவாதக் கருத்தோட்டத்தினுள் தம்மை இருத்திக்கொண்டதன் மூலமும், முதலாளித்துவப் பாராளுமன்ற முறையையும் முதலாளித்துவச் சட்ட முறையையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையை மூடபக்தியாக்கி நிறுவன ஒழுங்கமைப்புக்கும் பிரசாரத்துக்குமான சட்டவிரோத வடிவங்கள் நெருக்கடிக் காலங்களில் அவசர அவசியமாகிவிடுவதை மறந்துவிடுவதன் மூலமும் சந்தர்ப்பவாதிகள் தயார் செய்து வந்துள்ளனர். சந்தர்ப்பவாதத்தின் இயற்கையான ''இணைப்பான''—அதே அளவுக்கு முதலாளித்துவத் தன்மையதும், பாட்டாளிவர்க்கக் கண்ணோட்டத்துக்கு, அதாவது மார்க்சியக் கண்ணோட்டத்துக்குப் பகைமையானதுமான—அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டுப் போக்கும் இதே போலத் தற்போதைய நெருக்கடியின்போது வெட்ககரமான அசட்டுத் திருப்தி மனப்பான்மையோடு தேசியவெறிக் கோஷங்களைத் திரும்பத் திரும்ப முழங்கிக் கொண்டிருந்தது.

சந்தர்ப்பவாதத்துடன் தீர்மானமாய் முறித்துக் கொள்ளாமல், தவிர்க்க முடியாத அதன் படுதோல்வியினை வெகுஜனங்களுக்கு விளக்கிக் கூறாமல், தற்போது சோஷலிசத்தின் குறிக்கோள்களை நிறைவேறச் செய்ய முடியாது, தொழிலாளர்களுடைய மெய்யான சர்வதேச ஒற்றுமையைச் சாதிக்க முடியாது.

தத்தமது நாட்டின் தேசியவெறியை எதிர்த்துப் போராடு

வது ஒவ்வொரு நாட்டிலும் சமூக-ஜனநாயகவாதிகளின் தலையாயப் பணியாய் இருத்தல் வேண்டும். ருஷ்யாவில் இந்தத் தேசியவெறி முதலாளித்துவ மிதவாதிகளையும் (காடேட்டுகள்) நரோத்னிக்குகளில் ஒரு பகுதியோரையும் —சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், ''வலதுசாரி'' சமூக-ஜனநாயகவாதிகள் உட்பட—பீடித்துக் கொண்டுவிட்டது. (உதாரணமாய் யெ. ஸ்மிர்னேவ், பி. மாஸ்லவ், கி. பிளெஹானவ் ஆகியோரின் தேசியவெறிப் பேச்சுகளைக் குறிப்பாய் நிந்தனை செய்தாக வேண்டும்; முதலாளித்துவத் ''தேசபக்தப்'' பத்திரிகைகள் இவற்றை எடுத்து விரிவாய் உபயோகித்துக் கொண்டுள்ளன.)

தற்போதைய நிலைமையில், போரிடும் தேசங்களது இரு கோஷ்டிகளில் எதன் தோல்வி, சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்தில், சோஷலிசத்துக்குக் குறைந்த கேடிழைப்பதாய் இருக்குமென்று நிர்ணயம் செய்வது சாத்தியமன்று. ஆனால் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளான நமக்கு, அரசாங்கங்களில் மிகவும் பிற்போக்கானதும் காட்டுமிராண்டித்தனமானதும் மிகவும் அதிகமான தேசங்களையும் ஐரோப்பிய, ஆசிய மக்களில் மிகவும் பெருவாரியான திரளினரையும் ஒடுக்கி வருவதுமான ஜாரிஸ்டு முடியாட்சியின் தோல்வியே ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்திலும் ருஷ்யாவிலுள்ள எல்லா தேசங்களையும் சேர்ந்த உழைப்பாளி மக்களின் கண்ணோட்டத்திலும் குறைந்த கேடிழைப்பதாய் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

குடியரசாய் அமைந்த ஐரோப்பிய ஐக்கிய அரசு ஒன்றை நிறுவுதல் ஐரோப்பாவின் சமூக-ஜனநாயகவாதிகளுடைய உடனடி அரசியல் கோஷமாய் இருத்தல் வேண்டும். தேசியவெறி வெள்ளப் பெருக்கினுள் பாட்டாளி வர்க்கத்தைக் கவர்ந்திழுக்க எந்த ''வாக்குறுதியும்'' செய்யத் தயாராயுள்ள முதலாளித்துவ வர்க்கத்தைப் போலல்லாது சமூக-ஜனநாயகவாதிகள் ஜெர்மன், ஆஸ்திரிய, ருஷ்ய முடியரசுகளைப் புரட்சிகர வழியில் வீழ்த்தவில்லையானல் இந்தக் கோஷம் முற்றிலும் பொய்யானதாகவும் அர்த்தமற்றதாயும் ஆகிவிடுமென்று விளக்கிக் கூறுவார்கள்.

ருஷ்யா யாவற்றிலும் மிகப் பிற்பட்டதாய் இருப்பதாலும், இன்னமும் தனது முதலாளித்துவப் புரட்சியை நிறைவுறச் செய்யாதிருப்பதாலும், முரணற்ற ஜனநாயகப் புனரமைப்புக்குரிய மூன்று அடிப்படை நிபந்தனைகளையும்—அதாவது ஜனநாயகக் குடியரசு (எல்லாத் தேசிய இனங்களுக்கும் முழுநிறைச் சமத்துவத்துடனும் சுய-நிர்ணய உரிமையுடனும் கூடியது), பிரபுத்துவ வர்க்கத்தினரின் நிலத்தைப் பறிமுதல் செய்வது, எட்டு மணி நேர வேலைநாள்—நிறைவேறச் செய்வதே இந்நாட்டின் சமூக-ஜனநாயகவாதிகளின் கடமையாய் இன்னமும் இருந்து வருகிறது. ஆனால் யுத்தமானது முன்னேறிய எல்லா நாடுகளிலும் சோஷலிசப் புரட்சியெனும் கோஷத்தை இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெறச் செய்துவிட்டது. யுத்தத்தின் சுமை பாட்டாளி வர்க்கத்தின் தோள்களில் மேலும் கடுமையாய் இருத்த இருத்த, இந்தக் கோஷம் மேலும் மேலும் அவசர அவசியமாகி வருகிறது; பெருவீத முதலாளித்துவத்தின் பிரம்மாண்டத் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் நிலைமைகளில் தற்போதைய "தேசபக்தக்" காட்டுமிராண்டித் தாண்டவத்தின் கோரக் கொடுமைகளுக்குப் பிற்பாடு ஐரோப்பாவைப் புனரமைப்பதில் பாட்டாளி வர்க்கத்தின் வருங்காலப் பாத்திரம் மேலும் மேலும் தீவிரமானதாய் இருத்தல் வேண்டும். பாட்டாளி வர்க்கத்துக்கு வாய்ப் பூட்டு போட முதலாளித்துவ வர்க்கம் யுத்தகாலச் சட்டங்களை உபயோகிப்பதால் கிளர்ச்சிக்கும் நிறுவன ஒழுங்கமைப்புக்குமான சட்டவிரோத வடிவங்களைப் பாட்டாளி வர்க்கம் தோற்றுவிப்பது அவசர அவசியமாகிவிடுகிறது. சந்தர்ப்பவாதிகள் தமது பற்றுக்கோள்களுக்குத் துரோகமிழைப்பதன் அடிப்படையில் சட்டபூர்வமான நிறுவனங்களைப் "பாதுகாத்துக்" கொள்ளட்டும்—புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளானோர் சோஷலிசப் போராட்டத்துக்கான சட்டவிரோத வடிவங்களை—நெருக்கடிக் காலத்துக்கு உகந்த வடிவங்களை — தோற்றுவிப்பதற்காகவும், தொழிலாளர்களை அவரவரது நாடுகளின் தேசியவெறி பிடித்த முதலாளித்துவ வர்க்கத்துடனல்ல, எல்லா நாடுகளின் தொழிலாளர்களுடனும் ஒன்றுபடச் செய்வதற்காகவும் தொழிலாளி வர்க்கத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

அனுபவத்தையும் பிணைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வார்கள். பாட்டாளி வர்க்க அகிலம் தகர்ந்து போய்விடவில்லை, தகரப் போவதும் இல்லை. எல்லாத் தடங்கல்களையும் மீறிக் கொண்டு தொழிலாளி வெகுஜனங்கள் புதிய அகிலம் ஒன்றைத் தோற்றுவிப்பார்கள். சந்தர்ப்பவாதத்தின் தற்போதைய வெற்றி அற்ப ஆயுள் கொண்ட வெற்றியாகவே இருக்கும். யுத்தத்தால் இழைக்கப்படும் கொடுமைகள் அதிகமாக ஆக, தொழிலாளர் இலட்சியத்துக்குச் சந்தர்ப்பவாதிகள் துரோகம் இழைத்துவிட்டனர் என்பதும் அந்தந்த நாட்டின் அரசாங்கத்துக்கு எதிராகவும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகவும் ஆயுதங்களைத் திருப்ப வேண்டும் என்பதும் திரள் திரளான தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் தெளிவாய் விளங்கும்.

தற்போதைய ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாய் மாற்றுவது ஒன்றுதான் பிழையற்ற பாட்டாளி வர்க்கக் கோஷமாகும். கம்யூனது அனுபவத்திலிருந்து பெறப்படும் கோஷம் இது. பாஸெல் தீர்மானத்தில் (1912) இக் கோஷம் எடுத்துரைக்கப்பட்டது. மிகவும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளிடையிலான ஏகாதிபத்திய யுத்தத்தின் எல்லா நிலைமைகளாலும் இக்கோஷம் அவசியமாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாற்றுவது குறிப்பிட்ட ஒரு தருணத்தில் எவ்வளவுதான் கடினமாய்த் தோன்றினுலும், தற்போது யுத்தம் எதார்த்த உண்மையாகிவிட்டபடியால், சோஷலிஸ்டுகள் இத்திசையில் முறையான, விடாப்பிடியான, இம்மியும் பிறழாத தயாரிப்பு வேலைகளை ஒருபோதும் கைவிடமாட்டார்கள்.

இந்தப் பாதையில் செல்வதன் மூலம் மட்டும்தான் பாட்டாளி வர்க்கம் தேசியவெறி கொண்ட முதலாளித்துவ வர்க்கத்தின்மீதான தனது சார்பு நிலையை உதறித்தள்ள முடியும்; தேசிய இனங்களது மெய்யான சுதந்திரத்தையும் சோஷலிசத்தையும் நோக்கி ஏதேனும் ஒரு வழியில், ஓரளவு விரைவான கதியில் தீர்மானகரமான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்

தின் தேசியவெறிக்கும் தேசபக்திக்கும் எதிராய்த் தொழிலாளர்களது சர்வதேச சகோதரத்துவம் நீடூழி வாழ்க!

சந்தர்ப்பவாதத்திலிருந்து விடுபட்ட பாட்டாளி வர்க்க அகிலம் நீடூழி வாழ்க!

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின்
மத்தியக் கமிட்டி

1914 செப்டம்பர் 28க்கு
(அக்டோபர் 11க்கு) முன்னதாய்
எழுதப்பெற்றது

1914 நவம்பர் 1ல்,
சொத்சியால்-டெமக்ராத்,
இதழ் 33ல் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 26,
பக்கங்கள் 13-23

சோஷலிஸ்டு அகிலத்தின் நிலேயும் கடமைகளும்

தற்போதைய நெருக்கடியின் மிகவும் கடுமையான இயல்பு என்னவெனில் ஐரோப்பிய சோஷலிசத்தின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளில் பெரும்பாலோர் முதலாளித்துவத் தேசிய வாதத்தால், தேசியவெறியால் பீடிக்கப்பட்டுவிட்டனர். எல்லா நாடுகளிலும் முதலாளித்துவப் பத்திரிகைகள் தக்க காரணத்தோடுதான் இவர்களேப் பற்றி ஒரு நேரம் ஏளன மாகவும் இன்னொரு நேரம் தயவு காட்டிப் புகழ்ந்தும் எழுது கின்றன. சோஷலிஸ்டாகவே தொடர்ந்து இருக்க விரும்பு கிறவர் எவருக்கும் சோஷலிசத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியின் காரணங்களே புலப்படச் செய்து அகிலத்தின் கடமைகளேப் பகுத்தாய்வதைக் காட்டிலும் முக்கியமான கடப்பாடு வேறு எதுவும் இருக்க முடியாது.

இந்த நெருக்கடி, இன்னும் சுருராய்ச் சொல்வதெனில் இரண்டாவது அகிலத்தின் இந்தத் தகர்வு, சந்தர்ப்பவாதத் தின் தகர்வையே குறிக்கிறதென்பதை ஒத்துக் கொள்ள அஞ்சுகிறவர்கள் இருக்கவே செய்கிருர்கள்.

உதாரணமாய் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடையே ஒரு மித்த கருத்துக்கள் இருப்பதாகவும், சோஷலிசத்தின் பழம் பெரும் கோஷ்டிகள் யுத்தப் பிரச்சினேயில் தமது நிலேகளே மாற்றிக் கொண்டுவிட்டதாகவும் பேசப்படுகிறது. ஆனுல் இத்தகைய பேச்சுக்களுக்கு எந்த ஆதாரமும் இல்லே.

வர்க்கங்களுக்கிடையே ஒத்துழைப்பை ஆதரித்தல்; சோஷ லிசப் புரட்சி, புரட்சிகரப் போராட்ட முறைகள் ஆகிய கருத்தைக் கைவிடல்; முதலாளித்துவத் தேசியவாதத்துக்கு உகந்தாற் போல் தகவமைத்துக் கொள்ளுதல்; தேசிய இன எல்லேக் கோடுகளும் நாட்டு எல்லேக் கோடுகளும் வரலாற்று வழியில் அநித்தியமானவை என்பதை மறந்துவிடல்; முத

லாளித்துவ சட்ட முறையை மூடபக்தி கொண்டு வழிபடுதல்; ''மக்கள் தொகையில் விரிவான திரள்கள்'' (குட்டிபூர்ஷு வாக்கள்தான் இவ்விதம் குறிக்கப்படுகிறூர்கள்) மிரண்டுவிடு வார்களோ என்று அஞ்சி வர்க்கக் கண்ணேட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் விட்டொழித்தல்—சந்தேகத் துக்கு இடமின்றி இவையேதான் சந்தர்ப்பவாதத்தின் சித் தாந்த அடிப்படைகள். இத்தகைய அடித்தளத்திலிருந்து தான் இரண்டாவது அகிலத்தின் மிகப் பெருவாரியான தலை வர்களுடைய தற்போதைய தேசியவெறி கொண்ட, தேச பக்த மனப்பாங்கு வளர்ச்சியுற்றிருக்கிறது. பல்வேறு கருத் தோட்டங்களையும் சேர்ந்த பார்வையாளர்கள் இரண்டாவது அகிலத்தின் தலைமைப் பதவியில் சந்தர்ப்பவாதிகள் உண்மை யில் மலிந்திருந்ததை நெடுங் காலமாகவே குறிப்பிட்டு வந் துள்ளனர். இவர்கள் மலிந்திருந்ததன் மெய்யான அளவை விரைவாகவும் முனைப்பாகவும் தெரியப்படுத்தியதுதான், யுத்தம் செய்ததெல்லாம். நெருக்கடி அளவு கடந்து கடுமை யாகியதும் பழைய கோஷ்டிகளுக்கிடையே வரிசையாய்ப் பல ஆள்மாற்றங்கள் ஏற்பட நேர்ந்ததில் வியப்பு ஏதுமில்லை. ஆனுல் மொத்தத்தில் இந்த மாற்றங்கள் தனிநபர்கள் சம்பந் தமானவையாய் மட்டுமே இருந்திருக்கின்றன. சோஷலிசத் தினுள் நிலவும் போக்குகள் மாருமல் அப்படியேதான் இருந் துள்ளன.

பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடையே முழு அளவுக்கு ஒரு மித்த கருத்துக்கள் இருக்கவில்லை. கெட்டுடனும் பிளெஹானவுடனும் எர்வேயுடனும் மற்றும் பலருடனும் சேர்ந்து தேசிய வெறிக் கொள்கையைப் பின்பற்றி வரும் வையானுங்கூட பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடமிருந்து தமக்குப் பலக் கண் டனக் கடிதங்கள் கிடைத்திருப்பதை ஒத்துக் கொள்ளும்படி ஆகியுள்ளது. இவர்கள் இந்த யுத்தம் ஏகாதிபத்தியத் தன் மையது, இது மூண்டதற்குரிய குற்றம் வேறு எந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தாருக்குமுரியதைவிட எவ்வகை யிலும் குறைவில்லாத அளவுக்கு பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் உரியதாகும் என்று இக்கடிதங்களில் கூறு கிறூர்கள். வெற்றி பெற்றுவிட்ட சந்தர்ப்பவாதத்தால் மட்டு மின்றி, இராணுவத் தணிக்கை ஏற்பாட்டினுலுங்கூட இந்தக்

கண்டனக் குரல்கள் அடக்கியொடுக்கப்படுவதைக் கவனியாது உதாசீனம் செய்யக் கூடாது. பிரிட்டனில் ஹைண்ட்மன் கோஷ்டி (பிரிட்டிஷ் சமூக-ஜனநாயகவாதிகள்—பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி)[77] தேசியவெறியில் மூழ்கிவிட்டது. தொழிற் சங்கங்களின் பகுதி அளவு மிதவாதத் தலைவர்களில் பெருவாரியானேருக்குங்கூட இதே கதிதான் ஏற்பட்டிருக்கிறது. சந்தர்ப்பவாத சுயேச்சைத் தொழிற் கட்சியின் மக்டொனல்டிடமிருந்தும் கேயர்-ஹார்டியிடமிருந்தும் தேசியவெறிக்கு எதிர்ப்பு வந்துள்ளது. இது ஒரு விதிவிலக்கே ஆகும். நெடுங் காலமாய் ஹைண்ட்மனுக்கு எதிர்ப்பாளர்களாய் இருந்துள்ள புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் சிலர் இப்பொழுது பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டனர். ஜெர்மானியர்கள் சம்பந்தமாய் நிலைமை தெளிவாய் இருக்கிறது: சந்தர்ப்பவாதிகள் வெற்றி பெற்றுவிட்டனர், அவர்கள் மகிழ்ச்சிக் களிப்புறுகின்றனர், முழு மனநிறைவு கொண்டுள்ளனர். காவுத்ஸ்கியின் தலைமையிலுள்ள ''மையவாதிகள்'' சந்தர்ப்பவாதத்துக்குப் பலியாகி, சுயதிருப்தியுடன் கீழ்த்தரமான, நயவஞ்சகக் குதர்க்கவாதம் பேசி அதனைப் பாதுகாத்து வருகின்றனர். புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளிடமிருந்து—மேரிங், பேனக்கக், கார்ல் லீப்க்னெஹ்ட், மற்றும் ஜெர்மனியையும் ஜெர்மன் பேசும் ஸ்விட்ஜர்லாந்துப் பகுதியையும் சேர்ந்த பெயர் தெரியாத பல குரல்களிடமிருந்தும்—கண்டனங்கள் வந்துள்ளன. இத்தாலியிலும் அணி வரிசைத் தெளிவாய்த் தெரிகிறது: கடைகோடிச் சந்தர்ப்பவாதிகளான பிஸ்ஸொலாட்டியும் அவரைப் பின்பற்றுவோரும் ''தாயகத்தை'', கெட்டை—வையான்—பிளெஹானவ்—எர்வேயை ஆதரிக்கின்றனர். *Avanti!* இதழைத்[78] தலைமையாய்க் கொண்ட புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் (சோஷலிஸ்டுக் கட்சி) தேசியவெறியை எதிர்த்துப் போராடுகின்றனர்; யுத்த அறைகூவல்களின் முதலாளித்துவத் தன்னலத் தன்மையை அம்பலப்படுத்துகின்றனர். முற்போக்கான தொழிலாளர்களில் மிகப்பெருவாரியானேரின் ஆதரவும் இவர்களுக்குக் கிடைக்கிறது. ருஷ்யாவில் கலைப்புவாதிகளது முகாமைச் சேர்ந்த கடைகோடியான சந்தர்ப்பவாதிகள் தேசியவெ

றிக்கு ஆதரவாய்ப் பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் ஏற்கனவே குரல் எழுப்பியிருக்கிறார்கள். தாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சால்ஜாப்புக் கூறிப் பி.மாஸ்லவும் யெ. ஸ்மிர்னோவும் ஜாரிசத்தைப் பாதுகாக்கின்றனர். (ஜெர்மனியானது வாளைக் காட்டிப் பயமுறுத்தி "நம்" மீது வர்த்தக ஒப்பந்தங்களைத் திணிக்கப் பார்க்கிறது என்கிறார்கள், ஆனால் ஜாரிசமானது ருஷ்யாவின் மக்களில் பத்தில் ஒன்பது பகுதியோரின் பொருளாதார, அரசியல், தேசிய வாழ்வினை நசுக்க வாளையும் சுருக்குக் கயிற்றையும் தூக்கு மரத்தையும் உபயோகித்ததில்லை, உபயோகிக்கவுமில்லை என்பதாய் நாம் நம்புவோமென எதிர்பார்க்கின்றனர்!) சோஷலிஸ்டுகள் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கங்களில் பங்கு கொள்வதும் இன்று யுத்தக் கடன்களுக்கும் நாளைக்கு இன்னும் அதிக அளவில் படைக்கலங்களுக்கும் அவர்கள் ஆமோதிப்பு கூறுவதும் நியாயமே என்பதாய் வாதாடுகிறார்கள்!! பிளெஹானவ் தேசியவாதத்துக்குச் சரிந்து சென்றுவிட்டார், தமது ருஷ்யத் தேசியவெறியை அவர் பிரெஞ்சு அபிமானப் போக்கு கொண்டு மறைக்க எத்தனிக்கிறார். அலெக்சீன்ஸ்கியும் இதே போலத்தான் சரிந்து சென்றுவிட்டார். பாரிஸ் கோலஸைக்[79] கொண்டு பார்க்கையில் இந்தக் கும்பலில் ஏனையோரைக் காட்டிலும் மார்த்தவ் அதிக மதிப்புக்குரிய முறையில் நடந்து கொள்கிறார். அவர் ஜெர்மன் தேசியவெறி, பிரெஞ்சுத் தேசியவெறி ஆகிய இரண்டையும், *Vorwärts*சையும், திரு ஹைண்ட்மனையும் மாஸ்லவையும் எதிர்த்துள்ளார். ஆனால் சர்வதேசச் சந்தர்ப்பவாதம் அனைத்தையும், அதன் "செல்வாக்கு மிக்க" ஆதரவாளரான ஜெர்மன் சமூக-ஜனநாயக மையவாதக் கோஷ்டியையும் வைராக்கியத்துடன் எதிர்க்க அவர் பயப்படுகிறார். சேனையில் மனமுவந்து சேவை புரிதலை சோஷலிஸ்டுக் கடமை ஆற்றுதலாய் வாதாடுவதற்கான முயற்சிகளுக்கு (சமூக-ஜனநாயகவாதிகளும் சமூக-புரட்சியாளர்களும் அடங்கிய இஷ்டபூர்வ ருஷ்ய இராணுவச் சேவையாளர் கோஷ்டியின் பாரிஸ் பிரகடனத்தையும், போலந்து சமூக-ஜனநாயகவாதிகளும் லெதரும் பிறரும் வெளியிட்ட பிரகடனத்தையும் பார்க்கவும்) பிளெஹானவ் ஒருவரிடமிருந்து மட்டுமே

ஆதரவு கிடைத்திருக்கிறது. நமது பாரிஸ் கட்சிக் குழுவில் பெரும்பான்மையோர் இந்த முயற்சிகளைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். நமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் நிலையினை இந்த இதழின் தலையங்கக் கட்டுரை வாசகர்களுக்குத் தெரியப்படுத்தும்.[80] எந்தத் தப்பபிப்பிராயமும் ஏற்படாதிருக்கும் பொருட்டு, நமது கட்சியின் கருத்துக்கள், அவற்றை வகுத்துரைப்பது ஆகியவற்றின் வரலாறு பற்றிய பின்வரும் உண்மைகளை இங்கே எடுத்துரைக்க வேண்டும். யுத்தத்தால் முறிக்கப்பட்டுவிட்ட நிறுவனத் தொடர்புகளை மீண்டும் நிறுவிக் கொள்வதிலுள்ள அளவு கடந்த இன்னல்களைச் சமாளித்தபின் கட்சி உறுப்பினர்களது கோஷ்டி ஒன்று முதன்முதல் ''விரிவுரைகளை'' வகுத்து, செப்டம்பர் 6—8ல் (புதிய முறைப்படி) அவற்றைத் தோழர்களிடையே சுற்றறிக்கையாய் அனுப்பினர். பிறகு ஸ்விட்ஜர்லாந்து சமூக-ஜனநாயகவாதிகள் மூலம் அவை லுகானோவில் நடைபெற்ற (செப்டம்பர் 27) இத்தாலிய-ஸ்விட்ஜர்லாந்து மாநாட்டின் பிரதிநிதிகளில் இருவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அக்டோபர் நடுப் பகுதியில்தான் தொடர்புகளை மீண்டும் நிறுவிக் கொண்டு கட்சியின் மத்தியக் கமிட்டியினுடைய கருத்தோட்டத்தை வகுத்தளிக்க முடிந்தது. இந்த இதழின் தலையங்கக் கட்டுரை ''விரிவுரைகளின்'' இறுதி வடிவாய் அமைவதாகும்.

சுருக்கமாய் இதுவே ஐரோப்பிய, ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தின் தற்போதைய நிலவரம். அகிலத்தின் தகர்வு எதார்த்த உண்மையாகிவிட்டது. பிரெஞ்சு, ஜெர்மன் சோஷலிஸ்டுகளிடையே பத்திரிகைகளில் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களால் முடிவாக இது நிரூபிக்கப்பட்டுள்ளது. இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளால் (மேரிங், *Bremer Bürger-Zeitung*) மட்டுன்றி, மிதவாதப் போக்குள்ள ஸ்விட்ஜர்லாந்து பத்திரிகைகளாலும் (*Volksrecht*)[81] இது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகர்வை மூடிமறைப்பதற்காகக் காவுத்ஸ்கி செய்யும் முயற்சிகள் கோழைத்தனமான தில்லுமுல்லே ஆகும். அகிலத்தின் தகர்வு தற்போது முதலாளித்துவ வர்க்கத்தின் கைதியாகிவிட்ட சந்தர்ப்பவாதத்தின் தகர்வே என்பது தெளிவாய் விளங்குகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் நிலை தெட்டத் தெளிவு. சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவ வாதங்களை அப்படியே எதிரொலிப்பதற்கு மேல் ஒன்றும் செய்யவில்லை என்பதும் தெளிவு. தலையங்கக் கட்டுரையில் கூறப்பட்டிருப்பதற்கு மேல், *Die Neue Zeit*இன் இழிவுபடுத்தும் உரைகளை மட்டும் குறிப்பிட்டால் போதும். தாயகத்தின் பாதுகாப்பு என்பதாய்ச் சொல்லி ஒரு நாட்டின் தொழிலாளர்கள் பிறிதொன்றின் தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்துவதில்தான் சர்வதேசியம் அடங்கியிருப்பதாய்த் தோன்றும்படி இவ்வுரைகள் கூறுகின்றன!

தாயகம் பற்றிய பிரச்சினையைத் தற்போதைய யுத்தத்தின் ஸ்தூலமான வரலாற்று வழிப்பட்ட தன்மையைத் தக்கபடிக் கணக்கில் எடுக்காமல் எழுப்ப முடியாதென்று நாம் சந்தர்ப்பவாதிகளுக்குப் பதிலளிக்கிறோம். இது ஏகாதிபத்திய யுத்தம், அதாவது முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த வளர்ச்சிக்குரிய காலத்தில், நெருங்கி வரும் அதன் அந்திமக்காலத்தில் நடைபெறும் யுத்தம். தொழிலாளி வர்க்கம் முதலில் ''தேசத்தினுள் தன்னை உருவாக்கிக் கொள்ள'' வேண்டும் என்று கம்யூனிஸ்டு அறிக்கை பறைசாற்றுகிறது; முதலாளித்துவ அமைப்பின் அவசிய வடிவங்களாய்த் தேசிய இனத்தையும் தாயகத்தையும், ஆகவே முதலாளித்துவத் தாயகத்தையும், நாம் ஏற்பதற்குரிய வரம்புகளையும் நிலைமைகளையும் அது வலியுறுத்திக் கூறுகிறது. சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவத்தின் எழுச்சிக் காலத்துக்குரியதை அதன் அந்திமக் காலத்துக்கும் நீட்டிவிட்டு அந்த உண்மையைத் திரித்துப் புரட்டுகிறார்கள். முதலாளித்துவத்தின் அந்திமக்காலம் குறித்தும், பிரபுத்துவத்தை அல்ல முதலாளித்துவத்தை அழிப்பதற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள கடமைகள் குறித்தும் கம்யூனிஸ்டு அறிக்கை தெளிவான, கறாரான சூத்திரத்தை அளிக்கிறது: ''தொழிலாளி மக்களுக்கு நாடு ஏதும் இல்லை''. இந்த சோஷலிஸ்டு நிர்ணயிப்பை ஏற்றுக் கொள்ளச் சந்தர்ப்பவாதிகள் ஏன் இப்படிப் பயப்படுகிறார்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பகிரங்கமாய் இதைப் பற்றி பேசுவதற்குக்கூட பயப்படுகிறார்கள் என்பது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதே. தாயகத்தின் பழைய

கட்டுக்கோப்பினுள் சோஷலிச இயக்கம் வெற்றி பெறுவது சாத்தியமல்ல. இவ்வியக்கம் மனித சமுதாயத்துக்கான மேம்பட்ட புதிய வடிவங்களைப் படைப்பித்துக் கொடுக்கிறது. தற்போதுள்ள தேசியப் பிரிவினைகள் நீக்கப்படுமாயின் இந்தப் புதிய வடிவங்களில் எந்தவொரு தேசிய இனத்தின் உழைப்பாளி வெகுஜனங்களது நியாயமான தேவைகளும் முற்போக்கான ஆர்வவிருப்பங்களும் முதன்முதலாய் சர்வதேச ஒற்றுமையின் வாயிலாய் பூர்த்தி செய்யப்படும். ''தாயகப் பாதுகாப்புக்கான'' நயவஞ்சக வேண்டுகோள்கள் மூலமாய்த் தொழிலாளர்களைப் பிரித்துப் பிளவுபடுத்த முதலாளித்துவ வர்க்கத்தார் செய்யும் முயற்சிகளுக்கு வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள் எல்லாத் தேசங்களது முதலாளித்துவ வர்க்கத்தாரின் ஆதிக்கத்தையும் வீழ்த்துவதற்கான போராட்டத்தில் பல்வேறு தேசங்களின் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதற்குரிய மேலும் மேலும் புதிய, விடாப்பிடியான பிரயத்தனங்களைக் கொண்டு பதிலளிப்பார்கள்.

முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியச் சூறையாடலைத் ''தேசிய யுத்தம்'' என்கிற பழைய சித்தாந்தத்தைக் கொண்டு வேஷமிட்டு மறைத்து வெகுஜனங்களை ஏய்த்து வருகிறது. ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாய் மாற்று என்கிற தனது கோஷத்தை முன்வைத்துள்ள பாட்டாளி வர்க்கம் இந்த ஏய்ப்பை அம்பலப்படுத்திக் காட்டுகிறது. ஷ்டுட்கார்ட், பாஸெல் தீர்மானங்களுடைய கோஷமே இது. இந்தத் தீர்மானங்கள் மனதில் கொண்டிருந்தது பொதுப்படையான ஒரு யுத்தமல்ல, இன்றைய யுத்தமே தான்; இவை ''தாயகப் பாதுகாப்பு'' என்பதாய்ப் பேசவில்லை, ''முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவது'' என்றும், யுத்தத்தால் தோற்றுவிக்கப்படும் நெருக்கடியை இதற்காகப் பயன்படுத்திக் கொள்வது என்றும், பாரிஸ் கம்யூன் அளித்த உதாரணம் என்றும்தான் பேசின. பின்னது தேசங்களிடையிலான யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாய் மாற்றுவதற்கு ஓர் உதாரணமாய் அமைந்தது.

இவ்வாறு மாற்றுவது சுலபமான காரியமல்லதான், எந்த ஒரு கட்சியின் கணப் பொழுது இச்சையைக் கொண்டு சாதிக்

கப்படக் கூடியதல்ல இது. ஆனால் இந்த மாற்றம் பொதுவில் முதலாளித்துவத்தின் எதார்த்த நிலைமைகளின், குறிப்பாய் முதலாளித்துவத்தின் அந்திமக் காலத்திய எதார்த்த நிலைமைகளின் உள்ளார்ந்த இயல்பாகும். இந்த மாற்றத்தின் திசையிலேதான், இத்திசையில் மட்டுமேதான் சோஷலிஸ்டுகள் தமது வேலையைச் செய்தாக வேண்டும். யுத்தக் கடன்களுக்கு ஆதரவாய் வாக்களிப்பதோ, தமது ''சொந்த'' நாட்டில் (மற்றும் தமது நேச நாடுகளிலும்) தேசியவெறிக்கு ஊக்கமூட்டுவதோ அல்ல அவர்களுடைய பணி. மாறாக முதன்முதலில் தமது ''சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்தாரின் தேசியவெறியை எதிர்த்துப் போராடுவதே—நெருக்கடி முற்றிவிட்ட நிலையிலும், முதலாளித்துவ வர்க்கமே தான் படைப்பித்த சட்ட முறையைப் பறித்துக் கொண்டுவிட்ட நிலையிலும் சட்டபூர்வமான போராட்ட வடிவங்களுக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடாமல் போராடுவதே—அவர்களுடைய பணி. இதுதான் உள்நாட்டு யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் செயல் வழி. இது ஐரோப்பியத் தீப் பிழம்பின்போது ஏதேனும் ஒரு தருணத்தில் உள்நாட்டு யுத்தத்தை உண்டாக்கவே செய்யும்.

யுத்தம் அகஸ்மாத்தாய் நிகழும் சம்பவமல்ல, கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நினைப்பது போல (தேசபக்தியையும் மனிதாபிமானத்தையும் சமாதானத்தையும் உபதேசிப்பதில் இவர்கள் எவ்விதத்திலும் சந்தர்ப்பவாதிகளுக்குப் பின்தங்கிவிடவில்லை) ''பாவமும்'' அல்ல. மாறாக முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத ஒரு கட்டமே அது; சமாதானத்தைப் போல அதே அளவுக்கு முதலாளித்துவ வாழ்க்கை நெறியின் நியாயமான ஒரு வடிவமே அது. இன்றைய தின யுத்தம் மக்கள் யுத்தமாகும். இந்த உண்மையிலிருந்து பெறப்படுவது, தேசங்களைப் பிளவுபடுத்தும் வர்க்க முரண்பாடுகள் யுத்த காலத்திலும் தொடர்ந்து நிலவுகின்றன, யுத்த கால நிலைமைகளிலும் யுத்தத்திற்குரிய முறைகளிலும் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன என்பதேயன்றி, ''மக்களிடத்தே மலிந்துவிட்ட'' தேசியவெறியின் வெள்ளப்பெருக்கில் நாமும் சேர்ந்து நீந்த வேண்டுமென்பதல்ல. இராணுவப் படைகளில் சேர மறுத்தல், யுத்த-எதிர்ப்பு வேலைநிறுத்தங்

கள் முதலானவை எல்லாம் வெறும் அபத்தமே ஆகும்; ஆயுதபாணியான முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் ஆயுதமில்லாப் போராட்டம் நடத்தலாமென்ற கோழைத் தனமான பரிதாபகரப் பகற் கனவே ஆகும்; மூர்க்கமான உள்நாட்டு யுத்தம் அல்லது தொடர்ச்சியான யுத்தங்கள் இல்லாமலே முதலாளித்துவத்தை அழிக்கலாமென்ற நப் பாசையே ஆகும். சேனையிலுங்கூட வர்க்கப் போராட்டப் பிர சாரம் நடத்துவது ஒவ்வொரு சோஷலிஸ்டுக்குமுரிய கடமை யாகும். தேசிய இனங்களுக்கிடையிலான யுத்தத்தை உள் நாட்டு யுத்தமாய் மாற்றுவதற்கான பணி மட்டுமே எல்லாத் தேசங்களின் முதலாளித்துவ வர்க்கத்தாரின் ஆயுதமேந்திய ஏகாதிபத்திய மோதலின் சகாப்தத்தில் சோஷலிஸ்டுத் தன் மையதான பணியாகும். ''எந்த விலை கொடுப்பதாயினும் சமாதானம்'' என்ற பகட்டார்வ அறைகூவல்கள் ஒழிக! உள் நாட்டு யுத்தம் எனும் பதாகையை உயர்த்திப் பிடிப்போ மாக! ஏகாதிபத்தியம் ஐரோப்பியக் கலாசாரத்தை அபாயத் துக்கு உள்ளாக்குகிறது: வெற்றிகரப் புரட்சிகள் வரிசை யாய்ப் பல ஏற்படாவிடில் இந்த யுத்தத்தைத் தொடர்ந்து விரைவில் வேறு பல யுத்தங்களும் வரவே செய்யும். இதுவே ''கடைசி யுத்தம்'' என்பதாய்க் கூறுப்படும் கதை பொரு ளற்றதும் அபாயகரமானதுமான புரட்டே ஆகும், (மிகவும் பொருத்தமாய் **கோலஸ்** குறிப்பிட்டது போல) குட்டிபூர் ஷுவா''கட்டுக்கதையே'' ஆகும். பாட்டாளி வர்க்கப் பதாகை யான உள்நாட்டு யுத்தம் வர்க்க உணர்வு படைத்த லட்சக் கணக்கான தொழிலாளர்களை மட்டுமின்றி கோடிக் கணக் கான அரை-பாட்டாளி வர்க்கத்தாரையும் குட்டிபூர்ஷுவாக் களையும் ஒன்றுதிரட்டும். தற்போது இவர்கள் தேசியவெறி யால் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள், ஆனால் யுத்தத்தின் கொடு மைகள் இவர்களை அச்சுறுத்துவதுடனும் சோர்வுறச் செய் வதுடனும்கூட, அறிவொளி பெறச் செய்து போதனையளித்து ஊக்குவித்து ஒழுங்கமைத்து உருக்கு உறுதியூட்டித் தமது ''சொந்த'' நாட்டையும் ''அந்நிய'' நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு எதிரான யுத்தத்துக்குத் தயார்ப்படுத்தவும் செய்யும். இது இன்று இல்லையேல் நாளை யும், யுத்தத்தின் போதில்லையாயின் அதற்குப் பிற்பாடும்,

இந்த யுத்தத்தில் இல்லையேல் அடுத்ததிலும் நடைபெறவே செய்யும்.

இரண்டாவது அகிலம் சந்தர்ப்பவாதத்தால் மூழ்க்கடிக் கப்பட்டு மடிந்துவிட்டது. சந்தர்ப்பவாதம் ஒழிக, (கோலஸ் விரும்புவது போல) ''கொள்கைமாறிகள்'' மட்டுமின்றி சந் தர்ப்பவாதமும் நீக்கப்பட்டு சுத்தமாக்கப்பெற்ற மூன்றாவது அகிலம் நீடூழி வாழ்க.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதி யிலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலுமான மிகக் கொடிய முதலாளித்துவ அடிமை வாழ்வுக்கும் மிக வேக மான முதலாளித்துவ முன்னேற்றத்துக்குமுரிய ''சமாதான பூர்வமான'' நீண்டதொரு காலப் பகுதியில் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களை ஒன்றுதிரளச் செய்வதில் பயனுள்ள தயாரிப்பு வேலைகளில் இரண்டாவது அகிலம் தனது பங்கை ஆற்றியது. முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிராய்ப் புரட்சிகரத் தாக்குதல் தொடுத்து, எல்லா நாடுகளின் முத லாளித்துவ வர்க்கத்தாருக்கும் எதிரான உள்நாட்டு யுத்தம் புரிந்து அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றவும், சோஷலிசத்தை வெற்றி பெறச் செய்யவும் பாட்டாளி வர்க்க சக்திகளை ஒன்றுதிரளச் செய்யும் பணி மூன்றாவது அகிலத்துக்குரியதாகியுள்ளது!

சொத்சியால்-டெமக்ராத்,
இதழ் 33, 1914 நவம்பர் 1

நூல் திரட்டு,
தொகுதி 26,
பக்கங்கள் 36-42

■

செத்துப் போன தேசியவெறியும் உயிருள்ள சோஷலிசமும்

அகிலத்தை மீண்டும் உயிர் பெறச் செய்வது எப்படி

■

பல பத்தாண்டுகளாய் ஜெர்மன் சமூக-ஜனநாயகம் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு, அனைத்து உலகின் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு இருந்ததைக் காட்டிலும் சற்று அதிகமாகவேகூட, ஒரு முன்மாதிரியாய் இருந்தது. ஆகவே ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின்பால் ஒருவர் தமது போக்கை மிகவும் கறாராய் வரையறுத்துக் கொள்ளாமல், தற்போது பெருவழக்காயுள்ள சமூக-தேசபக்தி அல்லது ''சோஷலிஸ்டு'' தேசியவெறியின்பால் அறிவார்ந்த, அதாவது விமர்சன வழிப்பட்ட போக்கு கொள்ள முடியாதென்பது தெளிவு. ஜெர்மன் சமூக-ஜனநாயகம் கடந்த காலத்தில் எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? வருங் காலத்தில் எப்படி இருக்கும்?

இந்தக் கேள்விகளில் முதலாவதுக்கு உரிய பதிலை 1909ல் கா. காவுத்ஸ்கி எழுதிய பிரசுரமான ஆட்சியதிகாரத்துக்குரிய பாதையில் காணலாம். பல ஐரோப்பிய மொழிகளில் இப்பிரசுரம் பெயர்த்து வெளியிடப்பட்டது. நமது காலகட்டத்துக்குரிய பணிகளைப் பற்றிய மிகவும் முழுமையான விளக்கம் அடங்கிய இப்பிரசுரம் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு மிகவும் அனுகூலம் புரிவதாய் இருந்தது (அவர்கள் அளித்த நன்னம்பிக்கையின் அர்த்தத்தில்). தவிரவும் இது இரண்டாவது அகிலத்தின் தலைசிறந்த எழுத்தாளரது பேனாவிலிருந்து உதித்தது. ஓரளவு விவரமாகவே இந்தப் பிரசுரத்தைப் பற்றி நினைவுபடுத்த விரும்புகிறோம்; மறக்கப்பட்டுவிட்ட அந்த இலட்சியங்கள் அடிக்கடி வெட்கங்கெட்ட முறையில் உதறித் தள்ளப்படுகிறபடியால் இப்பிரசுரத்தை இப்பொழுது நினைவுகூர்வது மிகவும் பயனுடையதாய் இருக்கும்.

சமூக-ஜனநாயகம் ''புரட்சிகரக் கட்சியாகும்'' (பிரசுரத்தின் துவக்க வாக்கியத்தில் கூறப்படுவது போல)—நீராவி இஞ்சின் புரட்சிகரமாய் இருக்கிறதே அந்த அர்த்தத்தில் மட்டுமல்ல, ''மற்றோர் அர்த்தத்திலுங்கூட''. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வெல்வதை, பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை அது விரும்புகிறது. ''புரட்சியில் சந்தேகங் கொண்டுள்ளோரை'' எள்ளி நகையாடி, காவுத்ஸ்கி எழுதுகிறார்:''எந்த முக்கிய இயக்கத்திலும் எழுச்சியிலும் தோல்வி ஏற்படும் சாத்தியப்பாட்டை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்தான். போராட்டத்துக்கு முன்னதாய் முட்டாளால்தான் வெற்றி நிச்சயமெனக் கொள்ள முடியும்''. ஆனால் வெற்றி பெறும் சாத்தியப்பாட்டைக் கருத மறுப்பது ''நமது இலட்சியத்துக்கு நேரடியாய்த் துரோகமிழைப்பதாகிவிடும்''. யுத்தம் சம்பந்தமாய் ஒரு புரட்சி நடைபெறுவது யுத்தத்தின் போதும், யுத்தத்திற்குப் பிற்பாடும் சாத்தியமே என்று அவர் கூறுகிறார். வர்க்க முரண்பாடுகள் கூர்மையாதல் குறிப்பிட்ட எத்தருணத்தில் புரட்சியை உண்டாக்குமென்பதை நிர்ணயிப்பது சாத்தியமன்று, ஆனால் ''யுத்தம் தன்னுடன் கொண்டுவரும் புரட்சியானது யுத்தத்தின்போதோ, யுத்தத்துக்குப் பிற்பாடோ வெடிக்கலாம் என்று நான் அறுதியிட்டுத் திட்டவட்டமாய்ச் சொல்வேன்'' என்று ஆசிரியர் கூறிச் செல்கிறார். ''சமாதான வழியில் சோஷலிசமாய் வளர்ந்திடுவது'' பற்றிய தத்துவத்தைக் காட்டிலும் கொச்சையானது எதுவும் இல்லை என்பதாய் மேலும் படிக்கிறோம். ''பொருளாதார அவசியத்தைப் புரிந்துகொள்வது சித்தத்தைப் பலவீனப்படுத்துவதாகுமென்ற அபிப்பிராயத்தைக் காட்டிலும் தவறானது எதுவும் இல்லை'' என்று அவர் தொடர்ந்து எழுதுகிறார். ''போராட்ட அவர் என்கிற வடிவிலான இந்தச் சித்தம் முதலாவதாய்ப் போராட்டத்துக்காகச் செலுத்த வேண்டிய விலையாலும், இரண்டாவதாய்ப் பலம் என்கிற உணர்வினாலும், மூன்றாவதாய் மெய்யான பலத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது'' என்கிறார். பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் என்னும் நூலுக்கு எங்கெல்ஸ் எழுதிய பிரபல முன்னுரைக்குச் சந்தர்ப்பவாதப் பொருளில் வியாக்கியானம் அளிக்க முயற்சி செய்யப்பட்ட

போது—*Vorwärts* பத்திரிகை செய்த முயற்சியை இடைக் குறிப்பாய்க் குறிப்பிடலாம்—எங்கெல்ஸ் கோபங் கொண்டு, ''எவ்விலை கொடுக்க நேர்ந்தாலும் சட்ட முறைகளைப் பூஜிக்கும் சாந்த சொரூபியாய்த்'' தம்மைக் கொள்ளும் எந்தக் கற்பிதமும் ''வெட்ககரமானதாகும்'' என்றார். ''அரசு அதிகாரம் பெறும் போராட்டத்துக்குரிய காலகட்டத்தினுள் நாம் அடியெடுத்து வைக்கிறோமெனக் கொள்ள போதிய காரணம் இருக்கிறது'' என்று காவுத்ஸ்கி மேலும் கூறுகிறார். அந்தப் போராட்டம் பல பத்தாண்டுகளுக்கு நீடிக்கக் கூடும்; இது நமக்குத் தெரியாத ஒன்று. ஆனால் ''அண்மைய வருங் காலத்தில் அது மேலைய ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தாவிட்டாலும், பாட்டாளி வர்க்கத்தை வெகுவாய்ப் பலப்படுத்துமென எதிர்பார்க்கலாம்''. புரட்சிகரக் கூறுகள் வளர்ந்து வருகின்றன என்று காவுத்ஸ்கி கூறுகிறார்: 1895 ஜெர்மனியில் ஒரு கோடி வாக்காளர்களில் அறுபது லட்சம் பேர் பாட்டாளிகள், முப்பத்தைந்து லட்சம் பேர் தனியுடைமையில் அக்கறை கொண்டோர்; 1907 க்குள் பின்னவர்கள் 30 ஆயிரமும் முன்னவர்கள் 16 லட்சமும் அதிகரித்தனர்! ''புரட்சிகரக் கொந்தளிப்புக்குரிய காலம் வந்ததும் இந்த முன்னேற்ற வேகம் மிகவும் விரைவாகிவிடுகிறது.'' வர்க்க முரண்பாடுகள் மழுங்கிவிடுவதில்லை, மாறாக மேலும் கடுமையாகின்றன, விலைகள் உயருகின்றன, ஏகாதிபத்தியப் போட்டாபோட்டியும் இராணுவவாதமும் மட்டுமீறித் தீவிரமடைகின்றன. ''ஒரு புதிய புரட்சிச் சகாப்தம்'' நெருங்கி வருகிறது. வரிகளின் பூதாகார வளர்ச்சியானது ''புரட்சிக்கு ஒரே மாற்று வழியாய் நெடுங் காலத்துக்கு முன்பே யுத்தத்துக்கு இட்டுச் சென்றிருக்கும்...புரட்சியெனும் அந்த மாற்று வழி ஆயுதம் தரித்த சமாதானக் காலத்தை விட யுத்தத்துக்குப் பிற்பாடு அதிகம் அருகாமையில் வராதிருக்கும் பட்சத்தில்....'' ''உலக யுத்தம் பயங்கரமாய் நெருங்கி வந்துவிட்டது; யுத்தமானது புரட்சியையும் குறிப்பதாகும்'' என்று காவுத்ஸ்கி தொடர்ந்து எழுதுகிறார். அகாலப் புரட்சி ஜெர்மனியில் மூண்டுவிடுமோ என்று 1891ல் எங்கெல்ஸ் அஞ்சக் காரணம் இருந்தது; ஆனால் அதன்பின் ''சூழ்நிலை பெரிதும் மாறிவிட்டது.'' பாட்டாளி வர்க்கம்

''இனி அகாலப் புரட்சிகுறித்துப் பேச முடியாது'' (அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது). குட்டிபூர்ஷுவாக்கள் சிறிதும் நம்ப முடியாதவர்கள், பாட்டாளி வர்க்கத்துக்கு அவர்கள் என்றையும்விட பகையாய் இருக்கின்றனர், ஆனால் நெருக்கடி காலத்தில் அவர்கள் ''பெருந் திரள்களில் நம் பக்கத்துக்கு வரக் கூடியவர்கள்''. பிரதான விஷயம் என்னவெனில் சமூக-ஜனநாயகம் ''அசைக்க முடியாததாகவும் முரணின்றியும் இணக்கம் காட்டாததாகவும் இருத்தல் வேண்டும்''. புரட்சிகர காலகட்டத்தினுள் நாம் சந்தேகத்துக்கு இடமின்றி அடியெடுத்து வைத்துவிட்டோம்.

நீண்ட நெடுங் காலத்துக்கு முன்பு, முழுதாய் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, காவுத்ஸ்கி இப்படித்தான் எழுதினர். ஜெர்மன் சமூக-ஜனநாயகம் இப்படித்தான் இருந்தது, அல்லது இன்னும் சரிவரக் கூறுவதெனில் தனது எதிர்காலங் குறித்து அது இப்படித்தான் நன்னம்பிக்கை அளித்தது. இவ்வகை சமூக-ஜனநாயகம் மதிக்கப்படக் கூடியது, மதிக்கப்பட வேண்டியது.

இதே காவுத்ஸ்கி இன்று என்ன எழுதுகிறார் பாருங்கள். ''யுத்தகாலத்தில் சமூக-ஜனநாயகம்'' என்னும் அவருடைய கட்டுரையில் (*Die Neue Zeit*, இதழ் 1, 1914 அக்டோபர் 2) காணப்படும் முக்கிய வாக்குமூலங்களாவன: ''யுத்தத்தை எப்படித் தடுக்கலாம் என்பதைவிட யுத்தகாலத்தில் எப்படி நடந்து கொள்வது என்பது குறித்து மிக அரிதாகவே நமது கட்சி விவாதித்திருக்கிறது.... யுத்தத்தின் தொடக்கத்தில் போல வேறு எப்பொழுதும் அரசாங்கம் இவ்வளவு பலமுடைத்ததாகவும் கட்சிகள் இவ்வளவு பலவீனமாகவும் இருப்பதில்லை.... அமைதி வழியிலான விவாதத்துக்கு யுத்தகாலம் சிறிதும் ஒவ்வாதது.... தாய்நாட்டுக்கு வெற்றியா தோல்வியா என்பதே இன்றைய நடைமுறைப் பிரச்சினை''. போரிடும் நாடுகளின் கட்சிகளிடையே யுத்த-எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இணக்கம் ஏற்பட முடியுமா? ''அது போன்ற ஒன்று இதுகாறும் நடைமுறையில் சோதித்துப் பார்க்கப்பட்டதில்லை. அந்தச் சாத்தியப்பாட்டை நாம் எப்பொழுதுமே ஆட்சேபித்து வந்துள்ளோம்....'' பிரெஞ்சு, ஜெர்மன் சோஷலிஸ்டுகளிடையே இருந்து வரும் கருத்து வேறுபாடு ''கோட்பாட்டு

வழியிலானது அல்ல'' (ஏனெனில் இரு தரப்பினரும் தமது தாய்நாடுகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளனர்)....''தாயகப் பாதுகாப்பில் பங்குகொள்வது எல்லா நாடுகளின் சமூக-ஜன நாயகவாதிகளுக்குமுரிய சமமான உரிமையும் சமமான கடமையுமாகும்: எந்தத் தேசமும் இதற்காகப் பிறிதொன்றைக் குற்றம் கூறக் கூடாது....'' ''அகிலம் கையாலாகாததாகவா ஆகிவிட்டது?'' ''கட்சி தனது கட்சிக் கோட்பாடுகளை நேரடியாய்ப் பாதுகாப்பதை யுத்தகாலத்தில் கைவிட்டுவிடுகிறதா?'' (அதே இதழில் மேரிங்கின் கேள்விகள்.) ''அது தவறான கருத்து.... அது போன்ற அவநம்பிக்கை மனபான்மைக்கு எந்த முகாந்திரமும் இல்லை.... கருத்து வேறுபாடுகள் கோட்பாட்டு வழியிலானவை அல்ல.... கோட்பாடுகளில் ஒற்றுமை இருந்து வருகிறது.... யுத்தகாலச் சட்டங்களை மீறினால் உடனே நமது பத்திரிகைகள் நசுக்கப்பட்டுவிடும்''. இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது ''கட்சிக் கோட்பாடுகளைப் பாதுகாக்க மறுப்பதைக் குறிக்கவில்லை, டமாக்கிளிசின் வாளாய் அச்சுறுத்திய சட்டமான சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டத்தின்கீழ் நமது பத்திரிகைகள் இது போலக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டது எப்படி இதைக் குறிக்கவில்லையோ, அதே போல.''

மூலத்திலிருந்து வேண்டுமென்றேதான் மேற்கோள்கள் தந்துள்ளோம். ஏனெனில் இத்தகைய விஷயங்களை எழுத முடியுமென நம்பவே கடினமாயிருக்கிறது. வெளியீடுகளில் (அப்பட்டமான ஒடுகாலிகளிடமிருந்து வருகிறவற்றைத் தவிர்த்து) இத்தகைய சுயமனத் திருப்தி கொண்ட இழி நிலையை, இத்தகைய அவமானகரமான... பொய்யுரையை, பொதுவாய் சோஷலிசத்தையும், குறிப்பாய்த் தற்போது நடைபெறுவதையொத்த ஐரோப்பிய யுத்தத்தின் சாத்தியப்பாட்டை மனதிற் கொண்டு (உதாரணமாய் ஷ்டுட்கார்ட்டிலும் இன்னும் முக்கியமாய் பாஸெலிலும் ஏற்கப்பட்டவை போன்ற) ஒரு மனதாய் ஏற்கப்பட்ட திட்டவட்டமான சர்வதேசத் தீர்மானங்களையும் வெளிப்படையாகவே நிராகரிப்பதை மூடிமறையப்பதற்கான இத்தகைய கேவலத்தில்லுமுல்லுவையும் காண்பது அரிது! காவுத்ஸ்கியின் வாதங்களைக் கருத்து செலுத்தவேண்டியவையாய்க் கொண்டு பகுத்

தாய முயலுவது வாசகர்களை அவமதிப்பதாகிவிடும். சர்வ சாதாரணமான ''சிறிய'' யூதர்-எதிர்ப்புக் கொலைத் தாண்டவத்திலிருந்து ஐரோப்பிய யுத்தமானது பல வழிகளிலும் வேறுபடினும், இது போன்ற ஒரு யுத்தத்தில் பங்கு கொள்வதற்கு ஆதரவான ''சோஷலிஸ்டு'' வாதங்கள் யூதர்-எதிர்ப்புக் கொலைத் தாண்டவத்தில் பங்கு கொள்வதற்கு ஆதரவான ''ஜனநாயக'' வாதங்களுக்கு முற்றிலும் ஒப்பானவையேதான். கொலைத் தாண்டவத்துக்கு ஆதரவாய்க் கூறப்படும் வாதங்களின் மூலவர்களை வர்க்க உணர்வு படைத்த எல்லாத் தொழிலாளர்களின் எதிரே வெட்கித் தலை குனியச் செய்யும் பொருட்டு அவற்றைச் சுட்டிக் காட்டுவதுடன் நிறுத்திக் கொள்வாரேயன்றி யாரும் அவற்றைப் பகுத்தாய முற்படமாட்டார்.

ஆனால் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க ஒருவர், இக்கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோளாய்க் குறிக்கப்பட்ட கருத்துக்களை முன்பொரு காலத்தில் ஆதரித்து வாதாடிய ஓர் ஆசிரியர் ஓடுகாலிக்கும் கீழான நிலைக்குச் சீரழிய முடிந்தது எப்படி என்று வாசகர்கள் கேட்கலாம். அசாதாரணமானது எதுவும் நடைபெற்றுவிடவில்லை, ''மறப்பதும் மன்னிப்பதும்'' கடினமல்ல என்றெல்லாம் கருதுவோரால்—ஒருவேளை தம்மை அறியாமலேயே இப்படிக் கருதுவோராயும் இருக்கலாம்—மட்டுமேதான், அதாவது ஓடுகாலியின் கண்ணோட்டத்திலிருந்து இந்த விவகாரத்தைக் கருதுவோரால் மட்டுமேதான், இதனைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் உள்ளப் பூர்வமாகவும் நேர்மையுடனும் சோஷலிஸ்டுக் கருத்துக்களைப் பற்றிச்செல்வோர், இக்கட்டுரையின் தொடக்கத்தில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டோர், "Vorwärts மடிந்துவிட்டது'' (பாரிஸ் கோலசில் மார்த்தவ் கையாண்ட தொடர்), காவுத்ஸ்கி ''மடிந்துவிட்டார்'' என்பது கேட்டு வியப்புற மாட்டார்கள். வரலாற்று மாற்றத்துக்குரிய காலங்களில் தனி நபர்கள் அரசியல் துறையில் கையாலாகாதவர்கள் ஆகிவிடுவது அரிதானதல்ல. காவுத்ஸ்கி மிகப் பெருஞ் சேவைகள் புரிந்துள்ளார் என்றாலுங்கூட என்றுமே அவர் பெரிய நெருக்கடிகளின்போது உடனடியாகவே போர்க்குணம் படைத்த

மார்க்சியவாதியின் நிலையை ஏற்றவரல்ல (மில்லிரண்டிசம் பற்றிய பிரச்சினையில் அவருடைய ஊசலாட்டங்களை நினைவு கூருங்கள்).

நாம் கடந்துவருவது இத்தகைய ஒரு காலம்தான். புரட்சியாளர்களாகிய நாம் சமாதான வழிப்பட்ட அரசியல்சட்ட முறையிலான வளர்ச்சிக்குரியதாய்ச் சொல்லப்பட்ட ஒரு காலத்தில் முதலாளித்துவச் சட்டமுறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை மிகவும் சரியாகவே வலியுறுத்தி, 1891ல் எங்கெல்ஸ் ''முதலாளித்துவக் கனவான்களே நீங்கள் முதலில் சுடுங்கள்!'' என்று எழுதினர். எங்கெல்சின் கருத்து தெக்கத் தெளிவானது: வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களாகிய நாம் அடுத்தபடி சுடுவோம் என்றூர் அவர்; முதலாளித்துவ வர்க்கம் தான் வகுத்தமைத்த சட்ட முறைக்கான அடித்தளத்தைத் தானே உடைத்தெறியும் ஒரு தருணத்தில் வாக்குச் சீட்டுகளுக்குப் பதில்ாய்த் துப்பாக்கி குண்டுகளைக் கைக்கொள்வது (உள்நாட்டு யுத்தத்திலே இறங்குவது) நமக்கு அனுகூலமானதாகும். 1909ல் காவுத்ஸ்கி ஐரோப்பாவில் இப்பொழுது புரட்சி அகாலமானதாய் இருக்க முடியாது என்றும் யுத்தமானது புரட்சியையும் குறிப்பதாகும் என்றும் கூறிய போது, புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் எல்லோரும் கொண்டிருந்த சர்ச்சைக்கு இடமில்லாத அபிப்பிராயத்தையே வெளியிட்டார்.

ஆனல் ''சமாதான பூர்வமான'' பத்தாண்டுகள் அவற்றின் முத்திரையைப் பதிக்காமல் மறைந்துவிடவில்லை. தவிர்க்கவொண்ணுதவாறு அவை எல்லா நாடுகளிலும் சந்தர்ப்பவாதத்தை எழச் செய்து, பாராளுமன்றத் துறை, தொழிற்சங்க, பத்திரிகைத் துறை, இன்ன பிற துறைகளின் ''தலைவர்கள்'' இடத்தே மலிந்துவிடச் செய்தன. சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து ஏதேனும் ஒரு வடிவத்தில் விடாப்பிடியான நீண்ட போராட்டம் நடைபெற்றிராத நாடு ஐரோப்பாவில் எதுவும் இல்லை. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தைச் சீரழிக்கவும் பலவீனப்படுத்தவும் முயலும் முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் ஏராளமான பல வழிகளில் சந்தர்ப்பவாதத்துக்கு உதவி வருகிறது. சந்தர்ப்பவாதமானது உணர்ச்சிக் கனிவாய் இருப்பதானது ஒரு போக்காய் மாறுமாயின் பிளவு உடனடி

யாய் நிகழக் கூடியதாகிவிடும் என்று இதே காவுத்ஸ்கி பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பெர்ன்ஷ்டைனியம் தலைதூக்கியபோது எழுதினார். ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் சமூக-ஜனநாயகக் கட்சியைத் தோற்றுவித்த பழைய இஸ்க்ரா[82] 1901ல் அதன் இரண்டாவது இதழில் ''இருபதாம் நூற்றாண்டின் தறுவாயில்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகர வர்க்கமும் பதினெட்டாம் நூற்றாண்டின் புரட்சிகர வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்தைப் போலவே தனக்குரிய ஜிரொந்தாவையும் தனக்குரிய மலையையும் பெற்றிருப்பதாய்க் கூறிற்று.

ஐரோப்பிய யுத்தம் ஒரு பெரிய வரலாற்று நெருக்கடியாகும், ஒரு புதிய சகாப்தத்தின் துவக்கமாகும். எந்த நெருக்கடியையும் போல இந்த யுத்தமும் நயவஞ்சகத் திரைகளை எல்லாம் கிழித்தெறிந்து, எல்லா மாமூல் முறைகளையும் நிராகரித்து, ஊழல் மலிந்த அல்லது அழுகிய ஆதாரங்கள் யாவற்றின் செல்வாக்கையும் ஒழித்து ஆழமான பகைமைகளைத் தீவிரமாக்கி மேற்பரப்புக்கு வரச் செய்திருக்கிறது. (இதுவே எல்லா நெருக்கடிகளின் நலந்தரும் முற்போக்கான பயன் என்பதையும், ''சமாதான வழிப்பட்ட பரிணாமத்தை'' ஆதரிக்கும் மந்த புத்தியினர் மட்டுமே இதை உணரத் தவறுகின்றனர் என்பதையும் இடையில் இங்கு குறிப்பிடலாம்.) இரண்டாவது அகிலம் அதன் இருபத்தைந்து அல்லது நாற்பத்தைந்து ஆண்டுக் காலத்தில் (1870லிருந்தா அல்லது 1889லிருந்தா கணக்கிடுகிறோம் என்பதற்கு ஏற்ப), சோஷலிசத்தின் செல்வாக்கை விரிவாக்குவதும் சோஷலிச சக்திகளின் தயாரிப்புக் காலத்துக்குரிய துவக்க நிலையான ஆரம்ப நிறுவன ஒழுங்கமைப்பை அளித்திடுவதுமான பயனுள்ள மிக முக்கியப் பணியைச் செய்து முடித்தது. இவ்வாறு அது தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியைப் பூர்த்தி செய்துள்ளது. இதன்பின் அவ்வளவாய் வான் கிளுக்குகளாலல்ல சந்தர்ப்பவாதத்தால் முடக்கப்பட்டு மறைந்து போய்விட்டது. மாண்டோரை மாண்டவர்களே அடக்கம் செய்யட்டும். இவான் நிக்கீபரவிச்சைக் ''கோட்டான்'' என்று சொல்லப் போக, பிறகு தன் பகைவனுடன் சமரசம் செய்து கொள்ளும்படி நண்பர்களால் வற்புறுத்தப்

பட வேண்டியதாகிய மற்றேர் இவான் இவானவிச் நமக்குக் கிடைத்திருப்பது போல[83], வண்டர்வேல்டேவையும் சம்பாவையும் காவுத்ஸ்கியுடனும் ஹாஸெவுடனும் சமரசத்துக்கு வருமாறுச் செய்யும் அலுவலில் அறிவில்லா வீணர்கள் (தேசிய வெறியர்கள், சந்தர்ப்பவாதிகள் இவர்களது சூழ்ச்சிக்கார அடிவருடிகள் இல்லையேல்) ஈடுபடட்டும். பிரெஞ்சுத் தொழிலாளர்களைச் சுட்டுக் கொல்லுமாறு ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தார் அறைகூவுவது சரியே என்று ஜெர்மன் சோஷலிஸ்டுகளும், ஜெர்மன் தொழிலாளர்களைத் ''தாயகப் பாதுகாப்பின்'' பெயரில் சுட்டுக் கொல்லுமாறு பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தார் அறைகூவுவது சரியே என்று பிரெஞ்சு சோஷலிஸ்டுகளும் நியாயம் கற்பிப்பதே மெய்யான சர்வதேசியமெனக் நினைப்போரால் வரையப் பெற்ற நய வஞ்சகமான வெற்றுச் சொற்புரட்டுத் தீர்மானங்களை ஒரே மேஜையைச் சுற்றியமர்ந்து கொண்டு ஏற்பதல்ல அகிலம் எனப்படுவது! கடுமையான இந்நாட்களில் நடைமுறையில் சோஷலிஸ்டு சர்வதேசியத்தைப் பாதுகாக்க வல்லோர், அதாவது தமது சக்திகளை ஒன்றுதிரட்டுத் தத்தமது அரசாங்கங்களையும் ''தாயகங்களது'' ஆளும் வர்க்கங்களையும் ''அடுத்தபடியாய்ச் சுடக்'' கூடியவர்கள் (முதலில் சித்தாந்த வழியிலும் பிறகு நாளடைவில் நிறுவன ஒழுங்கமைப்பு வழியிலும்) ஒன்றுபடுவதில்தான் அகிலம் அடங்கியுள்ளது. இது எளிய காரியமல்ல; இதற்கு மிகுந்த தயாரிப்பும் பெருந் தியாகங்களும் அவசியமாகும்; தோல்விகள் அத்துடன் வரவே செய்யும். ஆயினும், இது எளிய காரியமல்ல என்கிற அதே காரணத்தால், இதைச் செய்ய விருப்பம் கொண்டோருடனும் தேசியவெறியர்களிடமிருந்தும் சமூக-தேசியவெறியின் காவலர்களிடமிருந்தும் முற்றுக முறித்துக் கொள்ள அஞ்சாதோருடனும் சேர்ந்தே இதைச் செய்தாக வேண்டும்.

சோஷலிஸ்டு—தேசியவெறி கொண்டதல்ல—அகிலத்தை மெய்யாகவே — பாசாங்காய் அல்ல—மீண்டும் உயிர் பெறச் செய்ய ஏனையோர் யாரையும்விட பேனக்கக் போன்றோர் அதிகமாய்ப் பணியாற்றி வருகின்றனர். ''அகிலத்தின் தகர்வு'' என்ற தலைப்புடைய கட்டுரை ஒன்றில் பேனக்கக் கூறினர்: ''தமது வேறுபாடுகளைச் சரிக்கட்ட முயலுவதற்

காகத் தலைவர்கள் ஒன்றுகூடுவார்களாயின், அது எந்த முக்கியத்துவமும் உடையதாய் இருக்காது''.

உண்மைகளைப் பகிரங்கமாய் எடுத்துரைப்போமாக—எப்படியும் யுத்தம் நம்மை அப்படிச் செய்யுமாறு நிர்ப்பந்தம் செய்யும், நாளைக்கு இல்லையேல் நாளைக்கு மறுநாள் செய்யவே போகிறது. சர்வதேச சோஷலிசத்தில் மூன்று போக்குகள் இருந்து வருகின்றன: (1) முரணின்றிச் சந்தர்ப்பவாதக் கொள்கையைப் பின்பற்றும் தேசியவெறியர்கள்; (2) சந்தர்ப்பவாதத்தை முரணின்றி எதிர்ப்பவர்கள்—எல்லா நாடுகளிலும் ஏற்கனவே இவர்கள் தம் குரலை எழுப்பத் தொடங்கியுள்ளனர் (இவர்களில் மிகப் பெருவாரியானோர் சந்தர்ப்பவாதிகளால் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர், ஆயினும் ''தோற்கடிக்கப்பட்ட சேனைகள் வேகமாய்க் கற்றறிந்து கொள்கின்றன''), இவர்கள் உள்நாட்டு யுத்தத்தை நோக்கியமைந்த புரட்சிகரப் பணி ஆற்ற வல்லவர்கள்; (3) குழப்பமுற்று ஊசலாடுவோர் — தற்போது இவர்கள் சந்தர்ப்பவாதிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறார்கள், சந்தர்ப்பவாதத்துக்கு நியாயம் கற்பிப்பதற்கான தமது வஞ்சக முயற்சிகள் மூலம் பாட்டாளி வர்க்கத்துக்குப் பெருந் தீங்கு இழைக்கின்றனர், அனேகமாய் விஞ்ஞான வழியிலும் மார்க்சிய (அவர்களுடைய சொல்லில்!) முறையை உபயோகித்தும் இப்படி நியாயம் கற்பிக்க முயலுகின்றனர். மூன்றாவது போக்கில் மூழ்கியுள்ளோரில் சிலரைக் காப்பாற்றி, சோஷலிசத்துக்கு மீட்டளிக்க முடியும். ஆனால் இது முதலாவது போக்கினரிடமிருந்து, யுத்தக் கடன்களுக்கு ஆதரவான வாக்களிப்பையும் ''தாயகப் பாதுகாப்பையும்'' ''யுத்தகாலச் சட்டங்களுக்கு கீழ்ப்படிதலையும்'' சட்ட பூர்வமான வழிகளுடன் மட்டும் திருப்தியடைய விரும்புவதையும் உள்நாட்டு யுத்தத்தை நிராகரிப்பதையும் நியாயப்படுத்தக் கூடிய எல்லோரிடமிருந்தும் மிகத் தீர்மானமாய் முறித்துக் கொண்டு பிளந்து செல்லும் கொள்கையின் மூலமேதான் இதைச் செய்ய முடியும். இத்தகைய ஒரு கொள்கையைப் பின்பற்றுவோர் மட்டும்தான் சோஷலிஸ்டு அகிலத்தை மெய்யாகவே கட்டியமைப்பவர்கள் ஆவர். எங்களைப் பொறுத்தவரை, மத்தியக் கமிட்டியின் ருஷ்யக் கூட்டுக் குழுவுடனும் செயின்ட்

பீட்டர்ஸ்பர்கின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைமை நபர்களுடனும் தொடர்புகள் நிறுவிக் கொண்டு, அவற்றுடன் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டு, பிரதான விவகாரங்களில் நாம் உடன்பாடு கொண்டிருப்பதைத் திடமாய்க் கண்டுள்ள நாங்கள், இத்திசையில் ஆற்றப்படும் பணி மட்டுமே கட்சிப் பணி, சமூக-ஜனநாயகப் பணி என்பதாய்க் கட்சியின் மத்தியப் பத்திரிகையின் ஆசிரியர்கள் என்ற முறையில் நமது கட்சியின் பெயரில் அறிவிக்கின்ருேம்.

ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிளவு என்னும் கருத்து அதன் ''அசாதாரணத் தன்மையினுல்'' பலருக்கும் அச்சமூட்டுவதாய்த் தோன்றலாம். ஆனுல் இந்த அசாதாரண நிகழ்வு ஏற்படவே செய்யும் (1914 ஜூலையில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் கடந்த அமர்வில் ஆட்லரும் காவுத்ஸ்கியும் தாம் விந்தை நிகழ்ச்சிகளில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல, ஆகவே ஐரோப்பிய யுத்தம் ஏற்படுமென நம்பவில்லை என்று கூறினுர்களே!), அல்லது முன்னெரு காலத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயகமாய் இருந்ததானது துன்பகரமாய்க் குலைந்து சிதைவுறுவதை நாம் காண வேண்டியிருக்கும் என்பதை எதார்த்த நிலைமை உறுதி செய்யும். முடிவில், பல பிரச்சினைகளில் நமது எதிராளிகளாய் இருந்துள்ளவர்கள் இத்தகைய ஒரு பிளவு ஏற்படுமென்ற கருத்தை வந்தடைந்திருப்பதை (முந்நாள்) ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளிடம் அளவுமீறிய ''நம்பிக்கை'' வைத்திருப்போருக்கு நினைவுபடுத்த விரும்புகிருேம்— மார்த்தவ் கோலசில் எழுதியதாவது: ''*Vorwärts* மடிந்துவிட்டது.... வர்க்கப் போராட்டத்தைப் பகிரங்கமாகவே நிராகரிக்கும் ஒரு சமூக-ஜனநாயகக் கட்சி உள்ளதை உள்ளபடிக் கூறி, தற்காலிகமாய்த் தனது நிறுவனத்தைக் கலைத்துத் தனது பத்திரிகைகளை மூடுவதுதான் நல்லது''; பிளெஹானவ் ஓர் உரையில் கூறியதாய்க் கோலஸ் மேற்கோள் தருகிறது: ''நான் பிளவுகளைக் கடுமையாய் எதிர்க்கிறவன், ஆனுல் நிறுவனம் ஒருங்கிணைப்பு குலையாதிருக்கும் பொருட்டு கோட்பாடுகளைத் தியாகம் புரிய நேருமாயின், பிறகு பொய்யான ஒற்றுமையைக் காட்டிலும் பிளவே நல்லது''. ஜெர்மன் தீவிரவாதிகள் குறித்து பிளெஹானவ் இதைச் சொன்னுர்.

ஜெர்மானியர்களின் கண்ணிலுள்ள துரும்பை அவர் பார்க்கிருரே ஒழிய தம் கண்ணிலேயே இருக்கும் உத்திரத்தைப் பார்க்கவில்லே. அவருக்குரிய தனிப்பட்ட ஓர் இயல்பு இது. தத்துவத் துறையில் பிளெஹானவின் தீவிரவாதமும் நடைமுறையில் அவருடைய சந்தர்ப்பவாதமும் கடந்த பத்து ஆண்டுகளாய் நமக்கு நன்ருய்ப் பழக்கமானவைதான். இருப்பினும் இத்தகைய ''விசித்திரங்களுக்கு'' உரியோருங்கூட ஜெர்மானியர்களிடம் பிளவு ஏற்படுவது குறித்துப் பேச முற்படுவார்களாயின் அது காலத்தின் தன்மைக்கு ஓர் அறிகுறியே ஆகும்.

சொத்சியால்-டெமக்ராத்,
இதழ் 35, 1914
டிசம்பர் 12

நூல் திரட்டு,
தொகுதி 26,
பக்கங்கள் 98-105

■

சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் தகர்வும்[84]

■

1

இரண்டாவது அகிலம் உண்மையில் இறுதி எய்திவிட்டதா? காவுத்ஸ்கி, வண்டர்வேல்டே போன்ற செல்வாக்கு மிக்க அதன் பிரதிநிதிகள் இதைப் பிடிவாதமாய் மறுக்கின்றனர். உறவுகளில் ஏற்பட்ட முறிவைத் தவிர்த்து உண்மையில் எதுவும் நடைபெற்றுவிடவில்லை, எல்லாம் நல்ல படியாகவே இருக்கிறது என்பதே அவர்களுடைய அபிப்பிராயம்.

இந்த விவகாரத்தின் உண்மையைக் கண்டறியும் பொருட்டு 1912ஆம் ஆண்டு பாஸெல் காங்கிரஸ் அறிக்கையின் பக்கம் திரும்புவோம். குறிப்பாய்த் தற்போதைய ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கு இவ்வறிக்கை பொருந்துவதாகும். உலகின் எல்லா சோஷலிஸ்டுக் கட்சிகளாலும் ஏற்கப்பட்ட அறிக்கை இது. ஒவ்வொரு யுத்தத்தையும் ஸ்தூலமாகவும் வரலாற்று வழியிலும் மதிப்பீடு செய்வதன் அவசியத்தை எந்த சோஷலிஸ்டும் தத்துவார்த்த அளவில் மறுக்கத் துணிய மாட்டார்.

இப்பொழுது யுத்தம் மூண்டுவிட்டதால் பகிரங்கமான சந்தர்ப்பவாதிகளும் சரி, காவுத்ஸ்கிவாதிகளும் சரி பாஸெல் அறிக்கையை நிராகரிக்கவோ, அதன் கோரிக்கைகளை யுத்தத்தின்போது சோஷலிஸ்டுக் கட்சிகளின் நடத்தையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவோ துணிவதில்லை. ஏன் அப்படி? ஏனென்றால் இரு வகையினரையும் பாஸெல் அறிக்கை அறவே அம்பலம் செய்துவிடுகிறது.

தாயகப் பாதுகாப்பு குறித்தோ, ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கும் தற்காப்பு யுத்தத்துக்குமான வேறுபாடு குறித்தோ பாஸெல் அறிக்கையில் ஒரு வார்த்தைகூட கூறப்படவில்லை.

ஜெர்மனியையும் நால்வர் கூட்டையும்[85] சேர்ந்த சந்தர்ப்ப வாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும்* எல்லா முச்சந்திகளிலிருந்தும் இப்பொழுது உலகின் காது செவிடுபட டமாரமடித்து வருவது பற்றி அதில் ஒன்றுமே இல்லை. இவ்வகைப்பட்ட எதையும் இவ்வறிக்கை கூறியிருக்கவும் முடியாது. ஏனெனில் அது உண்மையில் கூறுவது இத்தகைய கருத்துக்களின் பிரயோகத்தை அறவே புறக்கணிப்பதாய் இருக்கிறது. இன்றைய யுத்தத்துக்குப் பல பத்தாண்டுகளாய்த் தயார் செய்து வந்தவையும், 1912ல் மிகவும் பட்டவர்த்தனமாகிவிட்டவையும், 1914ல் யுத்தத்தை ஏற்படுத்தியவையுமான வரிசையான பல அரசியல், பொருளாதார மோதல்களைப் பற்றி மிகவும் ஸ்தூலமான முறையில் அது குறிப்பிடுகிறது. ''பால்கன் தீபகற்பத்தில் மேலாதிக்கம்'' பெறுவதற்கான ருஷ்ய-ஆஸ்திரிய மோதலையும், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனியிடையே (இந்த எல்லா நாடுகளிடையிலும்) ''ஆசியா மைனரில் நாடுபிடிக்கும் கொள்கை'' காரணமாய் எழுந்த மோதலையும், ''அல்பேனியாவில் ஆதிக்கம் பெறும் முயற்சியால்'' தோன்றிய ஆஸ்திரிய-இத்தாலிய மோதலையும், பிறவற்றையும் இவ்வறிக்கை நினைவுகூர்கிறது. சுருங்கக் கூறின் இவை யாவற்றையும் ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திலிருந்து'' எழும் மோதல்களாய் இவ்வறிக்கை விளக்குகிறது. இவ்வாறு இது தற்போதைய யுத்தத்தின் கொள்ளைக்கார, ஏகாதிபத்திய, பிற்போக்குவாத, அடிமை ஆதிக்கத் தன்மையை, அதாவது தாயகப் பாதுகாப்பெனும் கருத்தைத் தத்துவார்த்த வழியில் அர்த்தமற்றதாகவும் நடைமுறையில் அபத்தமாகவும் செய்யும் இத்தன்மையை பாஸெல் அறிக்கை மிகத் தெளிவாய் அங்கீகரிக்கிறது. பெரிய சுறா மீன்கள் பிற மக்களின் ''தாயகங்களைக்'' கபளீகரம் செய்வதற்காக ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்கின்றன. சந்தேகத்துக்கு இட

---

* இது குறிப்பிடுவது ஜெர்மனியில் காவுத்ஸ்கியைப் பின்பற்றும் ஆட்களை அல்ல; சந்தர்ப்பவாதத்துக்கும் தீவிரவாதத்துக்கும் இடையே ஊசலாடி, உண்மையில் சந்தர்ப்பவாதத்தை மூடிமறைக்கும் துண்டுத் துணியாய் இருந்துவரும் போலி மார்க்சியவாதியின் சர்வதேச ரகத்தையே குறிப்பிடுகிறது.

மில்லாத வரலாற்று உண்மைகளிலிருந்து எழும் தவிர்க்க முடியாத முடிவுகளை இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது: இந்த யுத்தம் ''மக்களின் நலன்களுக்கு இம்மியளவும் உகந்ததென்பதாய் நியாயம் கூற முடியாதது''; ''முதலாளிகளுடைய லாபங்களையும் அரசவம்சங்களது பேராசையையும் முன்னிட்டே'' இந்த யுத்தத்துக்கு ஏற்பாடாகி வருகிறது. தொழிலாளர்கள் ''ஒருவரையொருவர் சுட்டுக் கொள்வது'' ''கொடுங் குற்றமாகும்''. பாஸெல் அறிக்கை இப்படித்தான் கூறுகிறது.

முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சகாப்தம் பழுத்துக் கனிந்ததோடு கனிந்து அழுகுவதுமான முதலாளித்துவத்தின், சோஷலிசத்துக்கு வழிவிடுவதற்கு வேண்டிய நிலைக்கு முற்றிப் பக்குவமடைந்துவிட்ட முதலாளித்துவத்தின், தகர்ந்து விழும் தருவாயில் உள்ள முதலாளித்துவத்தின் சகாப்தமாகும். 1789க்கும் 1871க்கும் இடைப்பட்ட காலம் முற்போக்கான முதலாளித்துவத்தின் சகாப்தமாய் விளங்கிற்று. அப்பொழுது பிரபுத்துவத்தையும் வரம்பற்ற எதேச்சாதிகாரத்தையும் வீழ்த்துவதும், அந்நிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதும் வரலாற்று நிகழ்ச்சி நிரலில் இருந்தன. ''தாயகப் பாதுகாப்பு'', அதாவது ஒடுக்குமுறைக்கு எதிரான பாதுகாப்பு இந்த அடிப்படைகளில், இவற்றில் மட்டுமேதான் அனுமதிக்கப்படத்தக்கதாய் இருந்தது. இன்றுங்கூட ஏகாதிபத்தியப் பேரரசுகளுக்கு எதிரான ஒரு யுத்தம் குறித்து இத்தொடரின் பிரயோகம் பொருத்தமானதே; ஆனால் ஏகாதிபத்தியப் பேரரசுகளுக்கு இடையிலான ஒரு யுத்தம் குறித்து, பால்கன் நாடுகளிலும் ஆசியா மைனரிலும் பிறவற்றிலும் பெரும் பங்கு யாருக்கு என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒரு யுத்தம் குறித்து இதைப் பிரயோகிப்பது அபத்தமே ஆகும். ஆகவே தற்போதைய யுத்தத்தில் ''தாயகப் பாதுகாப்பை'' ஆதரிக்கும் சோஷலிஸ்டுகள் திருடன் தான் திருட்டு நடத்திய இடத்தை விட்டுத் தூர ஓடுவதைப் போல பாஸெல் அறிக்கையை விட்டுத் தூர ஓடுவதில் வியப்பில்லை. ஏனெனில் இந்த அறிக்கை அவர்கள் சமூக-தேசியவெறியர்கள் என்பதை, அதாவது சொல்லில் சோஷலிஸ்டுகள் செயலில் தேசியவெறியர்கள் என்பதை நிரூபிக்கிறது; ''தமது

சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்தினர் பிற நாடுகளைக் கொள்ளையிடவும் பிற தேசங்களை அடிமை செய்யவும் உதவு கிறவர்கள் என்பதை நிரூபிக்கிறது. இதுவேதான் தேசிய வெறியின் உள்ளடக்கம்—''சொந்த'' தாயகம் பிற மக்களது தாயகங்களை அடிமை செய்யும் நோக்கத்துடன் செயல்படும் போதுகூட அதைப் பாதுகாப்பதுதான் அதன் உள்ளடக்கம்.

தேச விடுதலைக்காக நடைபெறும் யுத்தம் என்பதாய் அங்கீகரிப்பது ஒரு வகைப் போர்த்தந்திரத்தையும், ஏகாதிபத்திய யுத்தம் என்பதாய் அங்கீகரிப்பது இன்னொரு வகைப் போர்த்தந்திரத்தையும் குறிப்பதாகும். பாஸெல் அறிக்கை தெட்டத் தெளிவாய்ப் பின்னதையே சுட்டிக் காட்டுகிறது. யுத்தமானது ''ஒரு பொருளாதார, அரசியல் நெருக்கடியைக்'' கொண்டுவருமென்று அது கூறுகிறது; இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்—நெருக்கடியைத் தணிப்பதற்காக அல்ல, தாயகத்தைப் பாது காப்பதற்காக அல்ல, மாறாக வெகுஜனங்களைத் ''தட்டி யெழுப்புவதற்காகவும்'' ''முதலாளித்துவ ஆதிக்கத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகவும்'' பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வரலாற்று நிலைமைகள் இன்னும் பக்குவமடையாத ஒன்றைத் துரிதப்படுத்துவது சாத்தியமன்று. சமுதாயப் புரட்சி சாத்தியமே, அதற்குரிய நிலைமைகள் பக்குவமடைந்துவிட்டன, குறிப்பாய் யுத்தம் சம்பந்தமாய் அது வெடிக்கும் என்று பாஸெல் அறிக்கை பிரகடனம் செய்கிறது. பாரிஸ் கம்யூன், மற்றும் ருஷ்யாவில் நடைபெற்ற 1905ஆம் ஆண்டுப் புரட்சி ஆகிய உதாரணங்களை, அதாவது வெகுஜன அரசியல் வேலைநிறுத்தங்களுக்கும் உள்நாட்டு யுத்தத்துக்குமான இந்த உதாரணங்களைக் குறிப்பிட்டு, இவ்வறிக்கை ''ஆளும் வர்க்கங்கள்'' அஞ்சுவது ''பாட்டாளி வர்க்கப் புரட்சியே'' என்று கூறுகிறது. தற்போதைய யுத்தம் குறித்து சோஷலிஸ்டுப் போக்கு என்னவென்பது வரையறுக்கப் பட்டாகவில்லை என்பதாய்க் காவுத்ஸ்கியைப் போலக் கூறுவது அப்பட்டமான பொய்யே ஆகும். பாஸெலில் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டதோடன்றி முடிவும் செய்யப்பட்டது, புரட்சிகரப் பாட்டாளி வர்க்க வெகுஜனப் போராட்டத்தின் போர்த்தந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

பாஸெல் அறிக்கையை அடியோடோ, அதன் முக்கிய மான பகுதிகளிலோ உதாசீனம் செய்துவிட்டு, அதற்குப் பதிலாய்த் தலைவர்களுடைய சொற்பொழிவுகளையும் வெவ்வேறு கட்சிகளின் தீர்மானங்களையும் மேற்கோளாய்க் கூறுவது அப்பட்டமான வஞ்சகமே ஆகும். அவை முதலாவதாய், பாஸெல் காங்கிரசிற்கு முற்பட்டவை; இரண்டாவதாய் அனைத்து உலகின் கட்சிகளாலும் ஏற்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல; மூன்றாவதாய்ச் சாத்தியமான பல்வேறு யுத்தங்களுக்கே அன்றி ஒருபோதும் இன்றைய யுத்தத்துக்குப் பொருந்துபவை அல்ல. பெரிய ஐரோப்பிய அரசுகளிடையிலான தேசிய யுத்தங்களுக்குரிய சகாப்தம் முடிவுற்று அதற்குப் பதில் அவற்றுக்கிடையிலான ஏகாதிபத்திய யுத்தங்களுக்குரிய சகாப்தம் தொடங்கிவிட்டது என்பதும், இவ்வுண்மையை முதன்முதலாய் அதிகாரபூர்வமாய் பாஸெல் அறிக்கை அங்கீகரிக்க வேண்டியதாயிற்று என்பதும்தான் இங்குள்ள விவகாரம்.

பாஸெல் அறிக்கையை வெற்று அச்சுறுத்தலாய், பயனற்ற ஆரவாரவுரையாய், அவ்வளவும் வெப்பக் காற்றாய்க் கொள்வது தவறு. யாரை இந்த அறிக்கை அம்பலம் செய்கிறதோ அவர்கள் இதை அவ்விதம் கொள்ள விரும்புவார்கள்தான். ஆனால் அது உண்மையல்ல. இந்த அறிக்கை இரண்டாவது அகிலத்துக்குரிய சகாப்தம் பூராவிலும் பெரிய அளவில் நடத்தப்பட்ட பிரசாரப் பணியின் பயனே ஆகும்; லட்சக் கணக்கான சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் அறிக்கைகளிலும் எல்லா மொழிகளிலும் வெகுஜனங்களிடம் சோஷலிஸ்டுகள் பரப்பி வந்தவை அனைத்தின் தொகுப்புரையே ஆகும். உதாரணமாய் 1899ல் ஜூல் கெட்டு எழுதியதைத்தான் அது திருப்பிக் கூறுகிறது—யுத்தம் சம்பந்தமாய் அப்பொழுது அவர் சோஷலிஸ்டுகளின் அமைச்சுவாதத்தைச் சாடினார்; "முதலாளித்துவக் கொள்ளைக்காரர்களால்" தூண்டிவிடப்படும் யுத்தம் குறித்து அவர் எழுதினார் (*En Garde!*, பக்கம் 175); காவுத்ஸ்கி 1909ல் தாம் எழுதிய ஆட்சியதிகாரத்துக்குரிய பாதை என்பதில் "சமாதான" சகாப்தம் முடிவுற்றுவிட்டது, யுத்தங்களுக்கும் புரட்சிகளுக்குமான

சகாப்தம் வந்துவிட்டது என்று ஒப்புக் கொண்டு எழுதியதைத்தான் அது திருப்பிக் கூறுகிறது. பாஸெல் அறிக்கை வெறும் வாய்ப்பேச்சு அல்லது தவறானது என்பதாய்ச் சொல்வது, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சோஷலிஸ்டுகள் செய்தவை யாவும் வெறும் வாய்ப்பேச்சு அல்லது தவறானது என்பதாய்க் கருதுவதற்கே சமம். பாஸெல் அறிக்கைக்கும் அது செயல்படுத்தப்படாததற்கும் இடையிலுள்ள முரண்பாட்டைச் சந்தர்ப்பவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும் சகிக்கவொண்ணாததாய்க் கொள்வது ஏனென்றால் இரண்டாவது அகிலத்தின் பணியிலுள்ள மிகவும் ஆழமான முரண்பாட்டை அது பட்டவர்த்தனமாக்கிவிடுகிறது. 1871க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலம் ஒப்பளவில் சமாதானத் தன்மையதாய் இருந்ததானது, சந்தர்ப்பவாதம் முதலில் ஒரு மனப்பான்மையாகவும், பிறகு ஒரு போக்காகவும், முடிவில் அது தொழிலாளர் அதிகாரவர்க்கத்தினராலும் குட்டிபூர்ஷுவாச் சகபயணிகளாலும் ஆன ஒரு கோஷ்டி அல்லது அடுக்கு ஆவதற்குத் துணை புரிந்தது. புரட்சிகரக் குறிக்கோள்களுக்கும் புரட்சிகரப் போர்த்தந்திரத்துக்கும் உதட்டளவில் விசுவாசம் செலுத்தித்தான் இந்த நபர்களால் தொழிலாளர் இயக்கத்தைத் தம் பிடிக்குள் கொண்டுவர முடிந்தது. இந்தச் ''சமாதான பூர்வப்'' பணிகள் யாவும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தயார் செய்ய உதவின என்று பசப்பித்தான் இவர்களால் வெகுஜனங்களுடைய நம்பிக்கையைப் பெற முடிந்தது. இந்த முரண்பாடு வெடித்தே தீர வேண்டிய ஒரு சீழ்க் கட்டியாய் இருந்து, வெடித்தும் விட்டது. இங்கு எழும் கேள்வி இதுவே: காவுத்ஸ்கியும் அவரைச் சேர்ந்தோரும் செய்வது போல இந்தச் சீழை ''ஒற்றுமைக்காக'' (சீழுடன்) வேண்டித் திரும்பவும் உடலுக்குள் திணிக்க முயலுவதா, அல்லது இந்தச் சீழை நீக்குவதால் உண்டாகும் வலியைப் பொருட்படுத்தாமல் கூடுமான அளவு சீக்கிரமாகவும் துப்புரவாகவும் அதை நீக்கிவிட்டுத் தொழிலாளர் இயக்கமெனும் உடல் பூரண நலமடைய உதவுவதா.

1914-15ல் யுத்தக் கடன்களுக்கு ஆதரவாய் வாக்களித்து, அமைச்சரவைகளில் சேர்ந்து கொண்டு, தாயகப் பாதுகாப்பு என்று பேசியோர் அப்பட்டமாகவே சோஷலி

சத்துக்குத் துரோகமிழைத்தவர்கள் ஆவர். கபட வேட தாரிகள் மட்டும்தான் இதனை மறுப்பார்கள். இந்தத் துரோ கத்தை விளக்கிக் கூறியாக வேண்டும்.

2

இந்தப் பிரச்சினை முற்றிலும் தனியாட்களையே பற்றிய தாகுமெனக் கருதுவது அபத்தம். பிளெஹானவையும் கெட் டையும் போன்றோர்... என்றாலும் சந்தர்ப்பவாதத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று காவுத்ஸ்கி கேட்கிறார் (*Die Neue Zeit*, 1915 மே 28). காவுத்ஸ்கி... என்றாலும் சந்தர்ப்பவாதத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று நால்வர் கூட்டணியின் சந்தர்ப்பவாதிகள் சார்பில் அக்செல் ரோத் பதிலளிக்கிறார் (*Die Krise der Sozialdemokratie**, ஜூரிக், 1915, பக்கம் 21). இதெல்லாம் கேலிக்கூத்தே ஆகும். அனைத்து இயக்கத்தின் நெருக்கடிக்கும் காரணம் கூற வேண்டு மாயின் முதலாவதாகத் தற்போதைய கொள்கையின் பொருளாதார முக்கியத்துவம் குறித்தும், இரண்டாவதாக அதன் அடிநிலைக் கருத்துக்கள் குறித்தும், மூன்றாவதாக சோஷலிஸ்டு இயக்கத்தின் பல்வேறு போக்குகளின் வரலாற்றுடன் அதன் தொடர்பு குறித்தும் பரிசீலனை செய்தாக வேண்டும்.

1914-15 யுத்தத்தில் பாதுகாப்புவாதத்தின் பொருளா தார உட்பொருள் என்ன? உலகைப் பங்கிடவும் சுரண்டவும் பிற மக்களை ஒடுக்கவும் எல்லாப் பெரிய அரசுகளின் முதலா ளித்துவ வர்க்கத்தாரும் யுத்தம் புரிந்து வருகின்றனர். முத லாளித்துவ வர்க்கத்தின் பிரம்மாண்ட லாபங்களில் சில அற்பத் துண்டுகள் தொழிலாளர் அதிகாரவர்க்கத்தார், தொழி லாளர் பிரபுக் குலத்தோர், குட்டிபூர்ஷுவாச் சகபயணிகள் இவர்களாலான ஒரு சிறு கோஷ்டிக்கு வந்து சேரலாம். சமூக-தேசியவெறிக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் வர்க்க அடிப் படை ஒன்றேதான்—தொழிலாளி வர்க்க வெகுஜனங்களுக்கு எதிராய் சலுகை பெற்ற தொழிலாளர்களது ஒரு சிறு பகுதி

*—''சமூக-ஜனநாயகத்தின் நெருக்கடி.''— பதிப்பாசிரியர்

''அவர்களுடைய சொந்த'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்தாருடன் கொள்ளும் கூட்டணியே, முதலாளித்துவ வர்க்கத்தால் சுரண்டப்படும் வர்க்கத்துக்கு எதிராய் முதலாளித்துவ வர்க்க அடிவருடிகளுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணியே இந்த அடிப்படை.

சந்தர்ப்பவாதத்துக்கும் சமூக-தேசியவெறிக்கும் அரசியல் உள்ளடக்கம் ஒன்றேதான்—வர்க்க ஒத்துழைப்பு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிராகரித்தல், புரட்சிகரச் செயல்களை நிராகரித்தல், முதலாளித்துவ சட்டமுறையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ளுதல், முதலாளித்துவ வர்க்கத்திடம் நம்பிக்கை, பாட்டாளி வர்க்கத்திடம் அவநம்பிக்கை ஆகிய இவைதாம் இந்த அரசியல் உள்ளடக்கம். **சமூக-தேசியவெறியானது பிரிட்டிஷ் மிதவாதத் தொழிலாளர் துறை அரசியலின், மில்லிரண்டிசத்தின், பெர்ன்ஷ்டைனியத்தின் நேரடித் தொடர்ச்சியும் நிறைவேற்றமும் ஆகும்.**

தொழிலாளர் இயக்கத்தின் இரு பிரதான போக்குகளான புரட்சிகர சோஷலிசத்துக்கும் சந்தர்ப்பவாத சோஷலிசத்துக்கும் இடையிலான போராட்டம் 1889க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலம் அனைத்தையும் நிரப்பிவிடுகிறது. யுத்தம் சம்பந்தமாய் இன்றுங்கூட ஒவ்வொரு நாட்டிலும் இரு பிரதான போக்குகள் இருந்து வருகின்றன. தனியாட்களைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் பழக்கத்தை விட்டொழிப்போமாக. பல நாடுகளிலுமுள்ள போக்குகளை எடுத்துக் கொண்டு பார்ப்போம். பத்து ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொள்ளலாம்: ஜெர்மனி, பிரிட்டன், ருஷ்யா, இத்தாலி, ஹாலண்டு, ஸ்வீடன், பல்கேரியா, ஸ்விட்ஜர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ். முதல் எட்டு நாடுகளில் சந்தர்ப்பவாதப் போக்குக்கும் புரட்சிகரப் போக்குக்குமுள்ள பிரிவினை சமூக-தேசியவெறியருக்கும் சர்வதேசியவாதிகளுக்குமுள்ள பிரிவினையை ஒட்டியதாகும். ஜெர்மனியில் *Sozialistische Monatshefte*வும் லேகினும் அவரைச் சேர்ந்தோரும், பிரிட்டனில் ஃபேபியன்களும் தொழிற் கட்சியும்[86] (சுயேச்சைத் தொழிற் கட்சி எப்பொழுதுமே இவர்களுடன் கூட்டணி கொண்டிருந்தது, இவர்களுடைய பத்திரிகைக்கு ஆதரவளித்தது, இக்கூட்டணியில் எப்பொழுதுமே

அது சமூக-தேசியவெறியர்களைக் காட்டிலும் பலவீனமாகவே இருந்துள்ளது, ஆனால் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியில் ஏழில் மூன்று பங்கினர் சர்வதேசியவாதிகளாவர்) சமூக-தேசியவெறியின் மூலபீடங்கள்; ருஷ்யாவில் இந்தப் போக்கு நாஷா ஸாரியாவினாலும் (தற்போது நாஷே தேலோ), நிறுவனக் கமிட்டியினாலும்,[87] ச்ஹெய்த்ஸேவின் தலைமையிலுள்ள டூமாக் கோஷ்டியாலும்[88] பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது; இத்தாலியில் பிஸ்ஸொலாட்டியைத் தலைவராய்க் கொண்ட சீர்திருத்தவாதிகளாலும், ஹாலந்தில் துருள்ஸ்திராவின் கட்சியாலும், ஸ்வீடனில் பிரான்டிங்கின் தலைமையிலுள்ள கட்சியின் பெரும்பான்மையோராலும்; பல்கேரியாவில் ''ஷிரோக்கி'' சோஷலிஸ்டுகள்[89] எனப்படுவோராலும், ஸ்விட்ஜர்லாந்தில் கிரேய்லிஹாலும் அவரைச் சேர்ந்தோராலும் இது பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. இந்த நாடுகள் யாவற்றிலும் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள்தான் சமூக-தேசியவெறியை எதிர்த்து அதிகமாகவோ குறைவாகவோ கடுமையான கண்டனக் குரலெழுப்பியுள்ளவர்கள். பிரான்சும் பெல்ஜியமும் இரு விதிவிலக்குகள்; அங்கு சர்வதேசியமும் இருந்து வருகிறது, ஆனால் மிகப் பலவீனமாகவே இருக்கிறது.

சமூக-தேசியவெறி முற்றுப்பெற்ற வடிவிலான சந்தர்ப்பவாதமாகும். முதலாளித்துவ வர்க்கத்தாருடனும் இராணுவத் தலைமை அதிகாரிகளுடனும் பகிரங்கமான, பல சந்தர்ப்பங்களில் இழிவான கூட்டணி கொள்ள அது முற்றிலும் பக்குவ நிலையில் இருக்கிறது. இந்தக் கூட்டணிதான் அதற்கு மிகுந்த வல்லமையும், சட்டபூர்வமான பத்திரிகைகளிலும் வெகுஜனங்களை ஏமாற்றுவதற்கான சாதனங்களிலும் ஏகபோகமும் கிடைக்கச் செய்கிறது. சந்தர்ப்பவாதத்தை உள்கட்சி நிகழ்ச்சிப் போக்காய்க் கருதிச் செல்வது அபத்தமாகும். டவீத், லேகின், ஹைண்ட்மன், பிளெஹானவ், வெப் இவர்களுடன் சேர்ந்து பாஸெல் தீர்மானத்தைச் செயல்படுத்தலாமென நினைப்பது நகைக்கத்தக்கது. சமூக-தேசியவெறியர்களுடன் ஒன்றுபடுவதற்குப் பிற தேசங்களைச் சுரண்டும் தனது ''சொந்த'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒன்றுபடுவதாகத்தான் அர்த்தம்; சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதாகத்தான் அர்த்தம். சந்

தர்ப்பவாதிகளுடன் உடனடியாகவே முறித்துக் கொண்டு விடுவது எங்கும் சாத்தியமாகிவிட்டதாய் இதற்குப் பொருளல்ல. வரலாற்று வழியில் இந்த முறிவு நெருங்கி வந்துவிட்டது என்பதே இதன் பொருள். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்துக்கு இது அவசியமாகும், தவிர்க்க முடியாததாகும் என்பதே, ''சமாதான பூர்வமான'' முதலாளித்துவத்திலிருந்து நம்மை ஏகாதிபத்திய முதலாளித்துவத்துக்கு அழைத்து வந்துள்ள வரலாறானது இந்த முறிவுக்குப் பாதையைச் செப்பனிட்டிருக்கிறது என்பதே இதன் பொருள். *Volentem ducunt fata, nolentem trahunt**.

3

முதலாளித்துவ வர்க்கத்தின் கூர்மதி கொண்ட பிரதிநிதிகள் இதை மிக நன்றாய்ப் புரிந்து வைத்திருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் ''தாயகப் பாதுகாப்பாளர்கள்'', அதாவது ஏகாதிபத்தியக் கொள்கையின் ஆதரவாளர்கள் தலைமை தாங்கும் இன்றைய சோஷலிஸ்டுக் கட்சிகளை இப்படி மட்டு மீறி மெச்சிப் புகழுகிறார்கள். எனவேதான் சமூக-தேசிய வெறித் தலைவர்களுக்கு அவர்களது அரசாங்கங்கள் அமைச்சர் பதவிகளோ (பிரான்சிலும் பிரிட்டனிலும்), தங்குதடையற்ற சட்டபூர்வ வாழ்க்கை நடத்தும் ஏகபோக உரிமையோ (ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும்) வழங்கி சன்மானம் தருகின்றன. எனவேதான் சமூக-ஜனநாயகக் கட்சி மிகமிக வலுவுடையதாகவும், தேசிய-மிதவாத எதிர்ப்புரட்சித் தொழிலாளர் கட்சியாய் அது மாற்றமடைந்தது கண்கூடாய்த் தெரிவதாகவும் இருக்கும் ஜெர்மனியில், ''சிறுபான்மைக்கும்'' ''பெரும்பான்மைக்கும்'' இடையிலான போராட்டத்தைக் குற்றவிசாரணை அரசாங்க வழக்கறிஞர் ''வர்க்க வெறுப்பைத் தூண்டுவதாகும்'' என்று கருதுகிறார்! எனவேதான் சந்தர்ப்பவாதிகளில் அதிகக் கெட்டிக்காரர்களாய் இருப்போர் 1914-1915ஆம் ஆண்டுகளில் முதலாளித்துவ

---

* விதியானது இணங்குவோரை அழைத்துச் செல்கிறது, இணங்காதோரை இழுத்துச் செல்கிறது.—பதிப்பாசிரியர்.

வர்க்கத்துக்கு அத்தனை ஆதாயம் புரிந்த பழைய கட்சிகளின் பழைய ''ஒற்றுமையைப்'' பாதுகாப்பதில் அவ்வளவு அதிக அக்கறை கொண்டுள்ளனர். எல்லா நாடுகளிலும் இந்தச் சந்தர்ப்பவாதிகள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை ஜெர் மன் சமூக-ஜனநாயகவாதி ஒருவர், பிற்போக்கு சஞ்சிகையான *Preussische Jahrbücher*இல்[90] 1915 ஏப்ரலில் ''**மானிட்டர்**'' என்பதாய் ஒப்பமிடப்பட்டு வெளியான ஒரு கட்டுரையில் போற்றத்தக்கவாறு ஒளிவுமறைவின்றி எடுத்துரைக்கிறார். சமூக-ஜனநாயகவாதிகள் **மேலும் இனி வலதுபுறம்** செல்வார் களாயின் அது முதலாளித்துவ வர்க்கத்துக்கு மிகவும் அபாய கரமானதாகிவிடும் என்று மானிட்டர் நினைக்கிறார். ''சோஷ லிஸ்டு இலட்சியங்களைக் கொண்ட தொழிலாளர் கட்சிக் குரிய தனது இயல்பினை அது கைவிடாது பாதுகாத்துக் கொண்டாக வேண்டும்; ஏனெனில் என்றைக்கு அது இவ் வியல்பைக் கைவிடுகிறதோ அன்றைக்கு ஒரு புதிய கட்சி உதித்து, பழைய கட்சி நிராகரித்துவிட்ட வேலைத்திட்டத் துக்கு இன்னும் அதிகத் தீவிர வரையறுப்பளித்து அதனை ஏற்றுக் கொள்ளும்'' (*Preussische Jahrbücher*, 1915, இதழ் 4, பக்கங்கள் 50-51).

மானிட்டர் சரியானபடி கூறிவிட்டார். பிரிட்டிஷ் மித வாதிகளும் பிரெஞ்சுத் தீவிரவாதிகளும் இதையேதான் எப் பொழுதுமே விரும்பி வந்துள்ளனர்—வெகுஜனங்களை ஏமாற்றி லாயிட் ஜார்ஜ்கள், சம்பாக்கள், ரெனொடேல்கள், லேகின்கள், காவுத்ஸ்கிகள் ஆகியோரை, அதாவது கொள்ளைக் கார யுத்தத்தில் ''தாயகப் பாதுகாப்பு'' என்பதாய்ப் பிர சாரம் செய்யக் கூடியவர்களைத் தமது நம்பிக்கைக்குப் பாத் திரமானோராய்க் கொள்ளும்படி வெகுஜனங்களைத் தூண்டும் பொருட்டு புரட்சிகரச் சாயலுடைய தொடர்களைத்தான் எப்பொழுதுமே அவர்கள் விரும்பி வந்துள்ளனர்.

ஆனால் மானிட்டர் பிரதிநிதித்துவம் செய்வது சந்தர்ப்ப வாதத்தின் ஒரு வகையை மட்டும்தான்—ஒளிவுமறைவற்ற அப்பட்டமான நயமில்லா வகையை மட்டும்தான். ஏனை யோர் மறைவாகவும் நுண்ணயத்துடனும் ''நேர்மையோடும்'' செயல்படுகின்றனர். தொழிலாளி வர்க்கத்துக்கு ''நேர்மை யான'' சந்தர்ப்பவாதிகள்தான் மிகப் பெரிய அபாய

மாவர் என்று முன்பொரு முறை எங்கெல்ஸ் கூறினர். இதோ ஓர் உதாரணம்.

*Die Neue Zeit*இல் (1915, நவம்பர் 26) காவுத்ஸ்கி பின்வருமாறு எழுதினர்: ''பெரும்பான்மையோருக்கு எதிர்ப்பு வளர்ந்து வருகிறது; வெகுஜனங்கள் எதிர்ப்பு மனப்பான்மை கொண்டோராய் இருக்கின்றனர்.... யுத்தத்துக்குப் பிற்பாடு [யுத்தத்துக்குப் பிற்பாடு மட்டும்தானு?—நி. லெ.] வெகுஜனங்களிடையே தீவிரவாதம் மேல்நிலை பெற்றுவிடும்படி வர்க்க முரண்பாடுகள் அவ்வளவு கடுமையாகிவிடும்.... யுத்தத்துக்குப் பிற்பாடு [யுத்தத்துக்குப் பிற்பாடு மட்டும் தானு?—நி. லெ.] தீவிரவாத நபர்கள் கட்சியைத் துறந்து ஓடி பாராளுமன்ற-எதிர்ப்பு [?? பாராளுமன்றத்துக்கு வெளியிலான என்கிற அர்த்தத்தில்] வெகுஜனச் செயல்களுக்குரிய கட்சியில் சேர்ந்து கொண்டுவிடும் அபாயம் நம்மை அச்சுறுத்தும்.... இவ்வாறு நமது கட்சி தம்முள் பொதுவானது எதுவுமில்லாத கடைகோடியான இரு முகாம்களாய்ப் பிளவுபட்டு வருகிறது.'' ஒற்றுமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு ரைஹ்ஸ்டாகில் சிறுபான்மையோர் ஒருசில தீவிரவாதப் பாராளுமன்றச் சொற்பொழிவுகள் நிகழ்த்த அனுமதிக்கும்படிப் பெரும்பான்மையோருக்குப் புத்திமதி கூறக் காவுத்ஸ்கி முயலுகிருர். புரட்சியுடன் ''ஒட்டுறவு எதுவுமில்லாத வர்களும்'', தொழிற் சங்கங்களுக்கு நெடுங் காலமாய்த் தலைமை தாங்கி வந்தவர்களும், தற்போது முதலாளித்துவ வர்க்கத்துடனும் அரசாங்கத்துடனும் தமக்குள்ள நெருங்கிய கூட்டணியை ஆதாரமாய்க் கொண்டு கட்சியிலும் தலைமைப் பதவியைப் பிடித்துக்கொண்டுவிட்டவர்களுமான சந்தர்ப்பவாதிகளுடன் புரட்சிகர வெகுஜனங்களை இணங்கிவிடச் செய்வதற்காக ஒருசில தீவிரவாதப் பாராளுமன்றச் சொற்பொழிவுகளைக் காவுத்ஸ்கி பயன்படுத்திக் கொள்ள விரும்புகிருர் என்பதே இதன் பொருள். இதற்கும் மானிட்டரின் ''வேலைத்திட்டத்துக்கும்'' சாராம்சத்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது? எதுவுமில்லை, மார்க்சியத்தைச் சீரழிக்கும் தித்திப்பான தொடர்களைத் தவிர எதுவுமில்லை.

காவுத்ஸ்கிவாதியான வூர்ம், 1915 மார்ச் 18ல் நடைபெற்ற ரைஹ்ஸ்டாக் கோஷ்டியின் கூட்டம் ஒன்றில், ''கயிறு

அளவுமீறிக் கட்டிறுக்கமாகிவிடும்படி இழுக்கப்படுவதை'' எதிர்த்து ''எச்சரிக்கை செய்தார்''. ''கோஷ்டியின் பெரும்பான்மையோருக்கு எதிராய்த் தொழிலாளி வெகுஜனங்களிடையே எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. நாம் மார்க்சிய [?! இது அச்சுப் பிழையாகவே இருக்கும்: ''மானிட்டரிய'' என்பதாக இருக்க வேண்டும்] ''மையத்தை'' விட்டகலாதிருக்க வேண்டும்'' (*Klassenkampf gegen den Krieg! Material zum Fall Liebknecht*. Als Manuskript gedruckt,* பக்கம் 67). வெகுஜனங்களிடையே புரட்சி மனோபாவம் இருக்கிறதென்பது எல்லாக் காவுத்ஸ்கிவாதிகளின் (''மையம்'' என்பதாய் அழைக்கப்படுவதன்) சார்பில் 1915 மார்ச்சிலேயே ஒத்துக் கொள்ளப்படுவதை இவ்வாறு நாம் காண்கிறோம்!! ஆனால் எட்டரை மாதங்களுக்குப் பிற்பாடு சந்தர்ப்பவாத, எதிர்ப் புரட்சிக் கட்சியுடன் போரிட விரும்பும் வெகுஜனங்கள் ''இணக்கம்'' பெறச் செய்வதற்கான பிரேரணையுடன் காவுத்ஸ்கி திரும்பவும் முன்வரக் காண்கிறோம்—புரட்சிகரமாய் ஒலித்திடும் ஒருசில தொடர்களைக் கொண்டு அவர் இதைச் செய்ய விரும்புகிறார்!!

அழுகிவிட்டதை அம்பலப்படுத்திக் கொண்டு வருவதற்கும், மாமூல் முறைகளைக் கைவிடச் செய்வதற்கும் யுத்தம் அடிக்கடி பயனுள்ளதாய் இருக்கிறது.

பிரிட்டிஷ் ஃபேபியன்களை ஜெர்மன் காவுத்ஸ்கிவாதிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். முன்னவர்களைப் பற்றி மெய்யான ஒரு மார்க்சியவாதி—ஃபிரெடெரிக் எங்கெல்ஸ்—1893 ஜனவரி 18ல் எழுதினார்: ''...சமுதாயப் புரட்சி தவிர்க்க முடியாதென்பதை உணர்ந்து கொள்வதற்கு வேண்டிய விவேகமுடையவர்களாயினும், இந்தப் பிரம்மாண்டப் பணியைச் செப்பமில்லாப் பாட்டாளி வர்க்கத்திடமே ஒப்படைக்க ஒருபோதும் மனம் ஒப்பாதவர்களாய்த் தமது சொந்த முன்னேற்றத்திலேயே அதிக நாட்டமுடைய கோஷ்டியினர்....

---

*—''யுத்தத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டம்! லீப்க்னெஹ்ட் வழக்கு பற்றிய விவரங்கள்''. தனியாரிடையிலான பரிமாற்றத்துக்காக மட்டும் அச்சிடப்பட்டது—**பதிப்பாசிரியர்.**

புரட்சியின்பால் அச்சம்தான் இவர்களுடைய அடிப்படை கோட்பாடு'' (ஸோர்கேயிற்கு எழுதிய கடிதங்கள், பக்கம் 390).

1893 நவம்பர் 11ல் அவர் எழுதினர்: ''...ஆணவம் படைத்த இந்த முதலாளித்துவ வர்க்கத்தார், பாட்டாளி வர்க்கம் மட்டும் தன்னைப் போன்ற செப்பமில்லா, கல்வி ஞானமில்லாப் பெருந்திரள் தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள முடியாது, இந்தக் கெட்டிக்கார வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், பசப்புணர்ச்சி மிக்க இந்தப் பாட்டிமார் கள் ஆகியோரது பரிவன்பு இல்லாமல் தன்னால் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணர்வதற்குப் போதிய அளவு புத்தி பெறும் பட்சத்தில் மேலிருந்து இந்தப் பாட்டாளி வர்க்கத்தை விடுவிக்க அருள்கூர்ந்து தயவு காட்டுகின்றனர்'' (மேற்கூறிய அதே நூல், பக்கம் 401).

ஆசாரமறியா பாப ஆத்மாக்களிடம் ஃபாரிசி ஆசாரப் பசப்பாளர்களுக்குள்ள அதே ஏளனத்துடன் தத்துவார்த்தத் தில் காவுத்ஸ்கி இந்த ஃபேபியன்களை இகழ்ந்து பேசுகிறார், ஏனெனில் காவுத்ஸ்கி ''மார்க்சியத்தின்'' பெயரில் ஆணை யிட்டுப் பேசுகிறார். ஆனல் உண்மையில் காவுத்ஸ்கியிற்கும் ஃபேபியன்களுக்கும் வித்தியாசம் ஏதேனும் உண்டா? இரு வரும் பாஸெல் அறிக்கையில் கையொப்பமிட்டனர், இரு வரும் அவ்வறிக்கைக்கு இரண்டாம் வில்ஹெல்ம் பெல்ஜிய நடுநிலைமைக்கு அளித்த அதே மதிப்பைத்தான் அளித்தனர். ஆனல் மார்க்ஸ் தொழிலாளர்களுடைய புரட்சிகர உணர்ச் சியை அடக்க முயன்றோரைத் தமது வாழ்வெல்லாம் நிந்தனை செய்து வந்தவர்.

புரட்சிகர மார்க்சியவாதிகளை எதிர்த்துக் காவுத்ஸ்கி ''அதீத-ஏகாதிபத்தியம்'' என்னும் தமது புதிய தத்துவத் தை முன்வைத்திருக்கிறார். ''தேசிய நிதி மூலதனங்களிடை யிலான போராட்டம்'' மறைந்து அதற்குப் பதிலாய்ச் ''சர்வ தேச நிதி மூலதனம் கூட்டு சேர்ந்து உலகைச் சுரண்டுதல்'' தோன்றிவிடுமென்பதே அவருடைய இந்தப் புதிய தத்துவம் (*Die Neue Zeit*, 1915, ஏப்ரல் 30). ஆனல் அவர் மேலும் கூறுகிறார்: ''முதலாளித்துவத்தின் இந்தப் புதிய கட்டம் சாத்தியம்தானு என்பதைத் தீர்மானிப்பதற்கு இன்னும்

நமக்குப் போதிய அளவு விவரங்கள் கிடைத்தாகவில்லை''. திட்டவட்டமாய்ச் ''சாத்தியம்'' என்று கூறும் துணிவுகூட இல்லாத ஒரு ''புதிய கட்டம்'' என்கிற வெறும் கற்பிதத்தை அடிப்படையாய்க் கொண்டு, இந்தக் ''கட்டத்தின்'' கண்டுபிடிப்பாளர் புரட்சிகரமான தமது சொந்த பிரகடனங்களையும் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கடமைகளையும் புரட்சிகரப் போர்த்தந்திரத்தையும் நிராகரிக்கிறார்—அதுவும் தற்சமயத்தில், ஏற்கனவே வெடித்தெழுந்துவிட்ட ஒரு நெருக்கடிக் ''கட்டத்தில்'', யுத்தத்துக்கும் வர்க்க முரண்பாடுகள் என்றும் கண்டிராதபடி தீவிரமடைந்துவிட்டதற்குமுரிய ஒரு கட்டத்தில், இவற்றை நிராகரிக்கிறார்! ஃபேபியனியத்தின் மிகவும் வெறுக்கத்தக்க ஒரு வடிவம் அல்லவா இது?

ருஷ்யக் காவுத்ஸ்கிவாதிகளின் தலைவரான அக்செல்ரோத் கூறுகிறார்: ''விடுதலை பெறுவதற்கான பாட்டாளி வர்க்க இயக்கத்தை சர்வதேசியமயமாக்கும் பிரச்சினையின் ஈர்ப்பு மையம் அன்றாட நடைமுறையை சர்வதேசியமயமாக்குவதேயாகும்''; உதாரணமாய், ''உழைப்புக் காப்புக்கும் இன்ஷூரன்சுக்குமான சட்டங்களை இயற்றுதல் தொழிலாளர்களுடைய சர்வதேச நிறுவன ஒழுங்கமைப்புக்கும் செயலுக்குமான குறிக்கோளாக வேண்டும்'' (அக்செல்ரோத், சமூக-ஜனநாயகத்தில் நெருக்கடி, ஜூரிக், 1915, பக்கங்கள் 39-40). லேகின், டவீத், வெபுகள் மட்டுமின்றி, லாயிட் ஜார்ஜுங் கூடவும், மற்றும் நௌமனும் பிரியானும் மில்யுக்கோவும் இத்தகைய ''சர்வதேசியத்தை'' ஏற்றுக் கொள்வார்கள் என்பது தெளிவு. எதிர்கால அகிலம் [யுத்தம் ஏற்படும் பட்சத்தில் அரசாங்கங்களுக்கு எதிராய்] ''முன்வந்து புரட்சிப் புயலைக் கிளப்புமாயின்'' நெடுந் தொலைவிலுள்ள அந்த எதிர்காலத்துக்காக, 1912ல் செய்தது போலவே இப்பொழுதும் அக்செல்ரோத் மிகமிகப் புரட்சிகரமான பதங்களைப் பிரயோகிக்க முற்றிலும் தயாராயிருக்கிறார். நாங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்கள், பாரீர்! ஆனல் தற்போது வெகுஜனங்களிடையே தொடக்க நிலையிலுள்ள புரட்சிக் கொந்தளிப்பை ஆதரிப்பதையும் அதை வளர்த்துச் செல்வதையும் பொறுத்த மட்டில், புரட்சிகர வெகுஜனச் செயல்களுக்கான

இந்தப் போர்த்தந்திரம் ''உதாரணமாய் ருஷ்யாவில் 1901 ஆம் ஆண்டு மாணவர் ஆர்ப்பாட்டங்கள் எதேச்சாதிகாரத் துக்கு எதிரான தீர்மானகரமான போராட்டங்கள் நெருங்கி விட்டதை முன்னறிவித்ததுபோன்ற ஒரு நிலைமையில், சமூகப் புரட்சிக்குச் சற்றே முன்னதான ஒரு நிலைமையில் நாம் இருப்போமாயின், ஓரளவு நியாயமானதாய் இருக்கலாம்'' என்று அக்செல்ரோத் கூறுகிறார். இவ்வாறு இல்லாத தற் போதைய தருணத்தில் இதெல்லாம் ''கற்பனாவாதமும்'', ''பக்கூனினியமும்'', இன்ன பிறவுமே ஆகும் என்கிறார். முற்றிலும் இது கோல்ப், டவீத், ஸூடெக்கும், லேகின் இவர் களது மனப்பாங்கிற்கு ஒவ்வானதுதான்.

நமது அருமை அக்செல்ரோத் மறந்துவிடுவது என்ன வெனில், 1901ல் ருஷ்யாவில் முதலாவது ''தீர்மானகரமான போராட்டம்'' நான்கு ஆண்டுகளுக்குப் பிற்பாடு—நான்கு ஆண்டுகளுக்குப் பிற்பாடு என்பதைக் குறித்துக் கொள்ளுங் கள்—நடைபெறப் போகிறது என்பதையும், அது ''தீர்மான கரமாய் இருக்காது'' என்பதையும் யாரும் அறிந்திருக்கவில்லை, அறிந்திருக்கவும் முடியாது. இருந்தபோதிலும், புரட்சிகர மார்க்சியவாதிகளான நாங்கள் மட்டுமே அந்த நேரத்தில் சரியான நிலையை அனுசரித்தோம்: உடனடியான தாக்கு தலுக்கு அழைப்பு விடுத்த கிரிச்சேவ்ஸ்கிகளையும் மர்த்தினவ் களையும் நாங்கள் எள்ளி நகையாடினோம். எங்கும் சந்தர்ப்ப வாதிகளை உதைத்து வெளியே தள்ளும்படியும், ஆர்ப்பாட் டங்களுக்கும் பிற வெகுஜன புரட்சிகரச் செயல்களுக்கும் ஆதரவளிக்கவும் அவற்றைக் கூர்மையாக்கவும் விரிவுபடுத்த வும் எல்லா முயற்சிகளையும் செய்யும்படியும் நாங்கள் மட்டு மே தொழிலாளர்களுக்கு ஆலோசனை கூறினோம். தற்போது ஐரோப்பாவில் இருந்து வரும் நிலைமை முற்றிலும் இதைப் போன்றதுதான். ''உடனடியான'' தாக்குதலுக்கு அழைப்பு விடுப்பது அபத்தமாகும்; ஆனால் தம்மை சமூக-ஜனநாயக வாதி என்று அழைத்துக் கொள்ளும் ஒருவர் சந்தர்ப்பவாதி களிடமிருந்து முறித்துக் கொள்ளும்படியும், துவக்க நிலை யிலுள்ள புரட்சி இயக்கத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் பலப்படுத்தவும் ஆழமாக்கவும் விரிவுபடுத்தவும் கூர்மையாக் கவும் எல்லா முயற்சிகளையும் செய்யும்படியும் தொழிலாளர்

களுக்கு ஆலோசனை கூறுதிருப்பது வெட்ககரமானதாகும். புரட்சி தயார் நிலையிலே அப்படியே விண்ணிலிருந்து விழுந்து விடுவதில்லை. புரட்சிகரக் கொந்தளிப்பு துவங்கும்போது அது ''உண்மையான'', ''மெய்யான'' புரட்சிக்கு இட்டுச் செல்லுமா, எப்பொழுது இட்டுச் செல்லும் என்பதை யாராலும் கூற முடியாது. காவுத்ஸ்கியும் அக்செல்ரோதும் பழையதாகி விட்ட, செல்லறித்துப் போன, எதிர்ப்புரட்சி ஆலோசனையைத் தொழிலாளர்களுக்கு அளிக்கின்றனர். எதிர்கால அகிலம் நிச்சயமாய்ப் புரட்சிகரமானதாய் இருக்குமென்ற நம்பிக்கையைக் காவுத்ஸ்கியும் அக்செல்ரோதும் வெகு ஜனங்களுக்கு ஊட்டி வருகின்றனர். லேகின்கள், டவீத்கள், வண்டர்வேல்டேக்கள், ஹைண்ட்மன்கள் ஆகிய எதிர்ப் புரட்சியாளர்கள் தற்போது புரிந்து வரும் ஆதிக்கத்தைப் பாது காப்பது, மூடிமறைப்பது, சிங்காரப்படுத்துவது என்னும் ஒரே குறிக்கோளுடன்தான் அவர்கள் இதைச் செய்து வருகின்றனர். இந்த ''எதிர்கால'' அகிலத்துக்குத் தயார் செய்ய லேகினுடனும் அவரைச் சேர்ந்தோருடனும் ''ஒன்றுபடுவது தான்'' சிறந்த வழி என்பது தெளிவாய் விளங்கவில்லையா?

''உலக யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாய் மாற்றிட முயலுவது பைத்தியகாரத்தனமாகும்'' என்று ஜெர்மன் சந்தர்ப்பவாத் தலைவரான டவீத், எங்கள் கட்சியின் மத்தியக் கமிட்டியினுடைய 1914 நவம்பர் 1ஆம் தேதிய அறிக்கைக்குப் பதிலளிக்கும் முறையில் பறைசாற்றுகிறார் (*Die Sozialdemokratie und der Weltkrieg*—''சமூக-ஜனநாயகமும் உலக யுத்தமும்'', 1915, பக்கம் 172). இந்த அறிக்கை ஏனைய பலவற்றுக்குமிடையே பின்வருமாறு கூறுகிறது:

> ''இவ்வாறு மாற்றுவது குறிப்பிட்ட ஒரு தருணத்தில் எவ்வளவுதான் கடினமாய்த் தோன்றினாலும், தற்போது யுத்தம் யதார்த்த உண்மையாகிவிட்ட படியால், சோஷலிஸ்டுகள் இத்திசையில் முறையான, விடாப்பிடியான, இம்மியும் பிறழாத தயாரிப்பு வேலைகளை ஒருபோதும் கைவிட மாட்டார்கள்.''*

---

* இப்புத்தகத்தின் 146ஆம் பக்கம் பார்க்கவும்.—பதிப்பாசிரியர்.

(இந்த வாசகத்தை டவீதும் மேற்கோளாய்த் தருகிறார், பக்கம் 171.) டவீதின் புத்தகம் வெளிவருவதற்கு ஒரு மாதம் முன்னால் எங்கள் கட்சி ''முறையான தயாரிப்புக்குப்'' பின் வருமாறு விளக்கிக் கூறும் தனது தீர்மானத்தை வெளியிட்டது: (1) கடன்களை ஆதரிக்க மறுத்தல்; (2) வர்க்க அமைதியைக் குலைத்தல்; (3) சட்டவிரோத நிறுவனங்களை அமைத்தல்; (4) போர்க்களக் குழிகளில் நடைபெறும் ஒருமைப்பாட்டுச் செயல்களுக்கு ஆதரவளித்தல்; (5) புரட்சிகர வெகுஜனச் செயல்கள் யாவற்றுக்கும் ஆதரவளித்தல்.*

டவீதும் ஏறத்தாழ அக்செல்ரோதைப் போன்ற வீரர் தான். 1912ல் அவர், யுத்தம் வருமென எதிர்பார்த்துப் பாரிஸ் கம்யூனைக் குறிப்பிடுவது ''பைத்தியகாரத்தனமாகும்'' என்று நினைக்கவில்லை.

ஆன்டான்ட்[91] சமூக-தேசியவெறியர்களின் முன்மாதிரிப் பிரதிநிதிகளில் ஒருவரான பிளெஹானவும் புரட்சிகரப் போர்த்தந்திரம் குறித்து டவீதைப் போல அதே அபிப்பிராயம்தான் கொண்டுள்ளார். இந்தப் போர்த்தந்திரம் ''கேலிக் கூத்தே'' ஆகுமென்று கூறுகிறார். ஆனால் ஒளிவுமறைவற்ற சந்தர்ப்பவாதி கோல்ப் என்ன சொல்கிறார் கேளுங்கள். அவர் எழுதினார்: ''லீப்க்னெஹ்ட்டைப் பின்பற்றுவோருடைய போர்த்தந்திரத்தின் விளைவு ஜெர்மன் தேசத்தினுள் நடைபெறும் போராட்டத்தைக் கொதிநிலைக்குக் கொண்டுவருவதாகவே இருக்கும்'' (*Die Sozialdemokratie am Scheidevege*— ''சமூக-ஜனநாயகத்துக்கு உள்ள வழி எது?'', பக்கம் 50).

கொதிநிலைக்குக் கொண்டுவரப்படும் ஒரு போராட்டம் உள்நாட்டு யுத்தமல்லாது வேறு எதுவாய் இருக்குமாம்?

ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின்[92] போர்த்தந்திரத்துக்கு முக்கியக் கூறுகளில் இசைவாயுள்ள எங்களது மத்தியக் கமிட்டியின் போர்த்தந்திரம்—டவீதும் பிளெஹானவும் அக்செல்ரோதும் காவுத்ஸ்கியும் ஏனையோரும் அடித்துக் கூறியுள்ளது போல்—''பைத்தியகாரத்தனமாகவும்'' ''கனவாகவும்'' ''சாகசவாதமாகவும்'' ''பக்கூனினியமாகவும்'' இருக்குமாயின், அது போராட்டத்தைக் கொதிநிலைக்குக்

---

* நூல் திரட்டு, தொகுதி 26, பக்கம் 164.—பதிப்பாசிரியர்.

கொண்டுவருவது போகட்டும், ''தேசத்தினுள் நடைபெறும் போராட்டத்துக்குங்கூட'' ஒருபோதும் இட்டுச் செல்ல முடியாது. உலகில் எங்குமே அராஜகவாதப் பதங்கள் தேசத்தினுள் நடைபெறும் போராட்டத்தை உண்டாக்கியதில்லை. ஆனல் குறிப்பாய் 1915ல் யுத்தத்தால் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாய் வெகுஜனங்களிடையே புரட்சிகரக் கொந்தளிப்பு அதிகரித்த வண்ணமுள்ளது; ருஷ்யாவில் வேலைநிறுத்தங்களும் அரசியல் ஆர்ப்பாட்டங்களும் பரவுகின்றன, இத்தாலியிலும் பிரிட்டனிலும் வேலைநிறுத்தங்களும் ஜெர்மனியில் பட்டினி கிடப்போரின் ஆர்ப்பாட்டங்களும் அரசியல் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. இவை புரட்சிகர வெகுஜனச் செயல்களின் துவக்கங்கள் அல்லவா?

இந்த யுத்தத்தில் சமூக-ஜனநாயகத்தின் நடைமுறைச் செயல் திட்டம் எல்லாம் வெகுஜனப் புரட்சிகரச் செயல்களுக்கு ஆதரவளிப்பதும், அவற்றை வளர்த்துச் செல்வதும் விரிவாக்குவதும் கூர்மைப்படுத்துவதும், சட்டவிரோத நிறுவனங்களை அமைப்பதும்தான் —சட்டவிரோத நிறுவனங்கள் இல்லையேல், மக்களின் பெருந்திரளினருக்குச் ''சுதந்திர'' நாடுகளிலுங்கூட உண்மையைக் கூற வழி ஏதுமில்லை. ஏனையவை யாவும், அவற்றின் சந்தர்ப்பவாத அல்லது சாத்வீகத் தத்துவ மேற்பூச்சுகள் எவையாயினும், பொய்க்கூற்றுகள் அல்லது வெறும் பதப் பிரயோகமே ஆகும்.*

---

* பெர்னில் 1915 மார்ச்சில் நடைபெற்ற சர்வதேச மாதர் காங்கிரசில் எங்களது கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகள் சட்டவிரோத நிறுவனங்களை அமைத்திடுவது இன்றியமையாததாகுமென்று வற்புறுத்தினர். இது நிராகரிக்கப்பட்டுவிட்டது. பிரிட்டிஷ் பெண்கள் இந்தப் பிரேரணையைக் கேட்டு ஏளனமாய்ச் சிரித்தனர், பிரிட்டிஷ் ''சுதந்திரத்தை'' அவர்கள் மெச்சிப் புகழ்ந்து கொண்டனர். ஆனல் சில மாதங்களுக்குப் பிற்பாடு *Labour Leader*[93] போன்ற பிரிட்டிஷ் செய்தியேடுகள் காலிப் பத்திகளுடன் எங்களுக்கு வந்து சேர்ந்தன. பிறகு போலீஸ் தாக்குதல்கள், பிரசுரங்களின் பறிமுதல், கைது செய்யப்படுதல், பிரிட்டனில் சமாதானம் குறித்து—வேறு எதுவுமல்ல, சமாதானம் குறித்துதான்—பேசிய தோழர்களுக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனைகள் பற்றிய செய்திகள் வரலாயின!

இந்த ''ருஷ்யப் போர்த்தந்திரம்'' (டவீத் கையாளும் பதம் இது) ஐரோப்பாவுக்குப் பொருந்தாதெ‍ன நம்மிடம் சொல்லப்படும்போது சாதாரணமாய் நாங்கள் உண்மைகளைச் சுட்டிக்காட்டிப் பதிலளிக்கிறோம். அக்டோபர் 30ல் பெர்லின் பெண் தோழர்களது தூதுக் குழு ஒன்று பெர்லினில் கட்சியின் தலைமைக் குழுவிடம் வந்திருந்தது. ''இப்பொழுது நம்மிடம் பெரியதொரு நிறுவன ஒழுங்கமைப்பு ஏற்பாடு இருப்பதால் சட்டவிரோத வெளியீடுகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வினியோகிப்பதும் 'தடை விதிக்கப்பட்ட கூட்டங்களுக்கு' ஏற்பாடு செய்வதும் சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டத்தின் காலத்தில் இருந்ததைக்காட்டிலும் மிகவும் சுலபமாகிவிட்டன.... வழிதுறைகள் இல்லாமற் போய்விடவில்லை, சித்தம்தான் இல்லையெனத் தெரிவதாய்'' இத்தூதுக் குழுவினர் கூறினர் (*Berner Tagwacht*,[94] 1915, இதழ் 271).

கெட்ட தோழர்களாய் இருக்கும் இவர்கள் ருஷ்யக் ''குறுங்குழுவாதிகளாலும்'' பிறராலுமா தவறான வழியில் அழைத்துச் செல்லப்பட்டுவிட்டனர்? மெய்யான வெகுஜனங்களின் பிரதிநிதிகளாய் இருப்போர் இந்தத் தோழர்களா, அல்லது லேகினும் காவுத்ஸ்கியுமா? லேகின் 1915 ஜனவரி 27ஆம் தேதி அளித்த அறிக்கையில் தலைமறைவு நிறுவனங்களை அமைத்திடும் ''அராஜகவாதக்'' கருத்தை எதிர்த்துப் பொறிந்து தள்ளியவர்; காவுத்ஸ்கியோ நவம்பர் 26ல், பெர்லினில் 10,000 பேர் பங்குகொண்ட ஆர்ப்பாட்டத்துக்கு நான்கு நாட்கள் முன்னதாய், தெரு ஆர்ப்பாட்டங்களை ''சாகசவாதச் செயல்கள்'' என்பதாய்க் கண்டனம் செய்தவர்!!

வெற்றுப் பேச்சும் காவுத்ஸ்கியின் வழியில் சீரழிக்கப்பட்ட ''மார்க்சியமும்'' நிறைய நமக்குக் கிடைத்திருக்கின்றன, போதும் இனி வேண்டாம்! இரண்டாவது அகிலத்தின் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிற்பாடு, பாஸெல் அறிக்கைக்குப் பிற்பாடு, தொழிலாளர்கள் இனி நேர்த்தியான சொற்களை நம்பப் போவதில்லை. சந்தர்ப்பவாதம் கனிந்து அழுகத் தொடங்கிவிட்டது, அது சமூக-தேசியவெறியாய் மாற்றமடைந்து துரோகமிழைத்துத் திட்டவட்டமாய் முதலாளித்துவ முகாமுக்குச் சென்றுவிட்டது. சமூக-ஜனநாயகத்துடன் அது தனது ஆன்மீக, அரசியல் பந்தங்களைத் துண்

டித்துக் கொண்டுவிட்டது. தனது நிறுவனப்பந்தங்களையும் அது முறித்துக் கொண்டுவிடும். தொழிலாளர்கள் ''சட்டவிரோத'' வெளியீடுகளும் ''தடைவிதிக்கப்பட்ட'' கூட்டங்களும், அதாவது புரட்சிகர வெகுஜன இயக்கத்துக்கு ஆதரவான தலைமறைவு நிறுவனங்கள் வேண்டுமென, ஏற்கனவே கோருகின்றனர். ''யுத்தத்துக்கு எதிரான யுத்தம்'' இவ்வழிகளில் நடத்தப்பட்டால்தான் அது வெற்றுப் பேச்சாய் இல்லாமல் சமூக-ஜனநாயகப் பணியாகிறது. எல்லா இன்னல்களையும் தற்காலியத் தோல்விகளையும் தவறுகளையும் பொய்க் கற்பனைகளையும் இடைமுறிவுகளையும் மீறி இந்தப் பணி மனிதகுலத்தை வெற்றிகரப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் செல்லும்.

1916 ஜனவரியில் *Vorbote*, *இதழ் 1ல்* *வெளிவந்தது*	நூல் திரட்டு, *தொகுதி 27,* *பக்கங்கள் 115-28*

ஒப்பம்: N. Lenin

■

ஏகாதிபத்தியமும் சோஷலிசத்தில் பிளவும்

■

ஏகாதிபத்தியத்துக்கும் ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் (சமூக-தேசியவெறியின் வடிவில்) கண்டிருக்கும் ஈனத்தனமான, அருவருக்கத்தக்க வெற்றிக்கும் ஒட்டுறவு உண்டா?

இது நவீனகால சோஷலிசத்துக்குரிய அடிப்படைப் பிரச்சினையாகும். முதலாவதாக, நாம் வாழும் இச்சகாப்தமும் தற்போது நடைபெறும் யுத்தமும் ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்தவை என்பதையும், இரண்டாவதாக, சமூக-தேசிய வெறியும் சந்தர்ப்பவாதமும் பிரிக்க முடியாதவாறு வரலாற்று வழியில் இணைந்திருக்கின்றன என்பதையும், மற்றும் அரசியல் சித்தாந்தத்தில் உள்ளார்ந்த முறையில் இவை ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன என்பதையும் நமது கட்சி வெளியீடுகளில் முழு அளவுக்கு நிலைநாட்டிவிட்ட நாம், இந்த அடிப்படைப் பிரச்சினையைப் பகுத்தாராய முற்படலாம், அவசியம் முற்பட்டாகவும் வேண்டும்.

ஏகாதிபத்தியம் குறித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு துல்லியமான, முழுமையான இலக்கணத்தை அளித்து நாம் இந்தப் பகுத்தாய்வைத் தொடங்க வேண்டும். ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் தனியொரு வரலாற்றுக் கட்டமாகும். அதன் தனித்தன்மை மூன்று வகைப்பட்டது: ஏகாதிபத்தியமானது (1) ஏகபோக முதலாளித்துவமாகும்; (2) புல்லுருவித்தனமான, அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும்; (3) அந்திமக்கால முதலாளித்துவமாகும். தடையற்ற போட்டி நீக்கப்பெற்று அதற்குப் பதிலாய் ஏகபோகம் வளர்ச்சியுறுவதானது ஏகாதிபத்தியத்தின் அடிப்படைப் பொருளாதார இயல்பு, அதன் சாரப்பொருள். ஏகபோகத் தன்மை பிரதானமான ஐந்து வடிவங்களில் வெளிப்

படுகிறது: (1) கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள்—முதலாளிகளது இந்த ஏகபோகக் கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவுக்குப் பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுகிறது; (2) பெரிய பாங்கிகளின் ஏகபோக நிலை—அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் மூன்று, நான்கு அல்லது ஐந்து பகாசுர பாங்கிகள் நாட்டின் பொருளாதார வாழ்வு அனைத்தையுமே தம் பிடியில் இருத்திக் கொண்டு ஆட்டிப் படைக்கின்றன; (3) மூலப்பொருள்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் (financial oligarchy) கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றன (நிதி மூலதனம் என்பது பாங்கி மூலதனத்துடன் இணைந்த ஏகபோகத் தொழில் துறை மூலதனமாகும்); (4) சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே (பொருளாதாரக்) கூறு போட்டுப் பாகப் பிரிவினை செய்து கொள்வது ஆரம்பமாகி விட்டது. இவ்வகைச் சர்வதேசக் கார்ட்டல்கள் ஏற்கனவே ஒரு நூறுக்கு மேற்பட்டவை உள்ளன; இவை உலகச் சந்தை அனைத்தையுமே தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டு, அதனை ''இணக்கமுடன்'' தம்மிடையே பாகப்பிரிவினை செய்து கொள்கின்றன—யுத்தத்தின் மூலம் அது மறுபிரிவினை செய்யப்படும் வரை இந்த ஏற்பாடு நீடிக்கிறது. ஏகபோகமல்லாத முதலாளித்துவத்தில் நடைபெற்று வந்த பண்ட ஏற்றுமதியைப் போலல்லாது இப்பொழுது மூலதனமே ஏற்றுமதி செய்யப்படுவதானது இக்கட்டத்துக்குரிய தனி விசேஷமாகும்; இது பொருளாதார வழியிலும் பிரதேச-அரசியல் வழியிலும் உலகின் பாகப் பிரிவினையுடன் நெருங்கிய முறையில் இணைந்த நிகழ்ச்சியாகும். (5) உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் நிறைவுற்றுவிட்டது.

முதலாளித்துவத்தின் உச்ச கட்டமான ஏகாதிபத்தியம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும், பிற்பாடு ஆசியாவிலும் 1898க்கும் 1914க்கும் இடையில் இறுதி உருப் பெற்றது. ஸ்பானிய-அமெரிக்கப் போர் (1898), ஆங்கிலோ-போயர் போர் (1899-1902), ருஷ்ய-ஜப்பானியப் போர் (1904-05), 1900ல் ஐரோப்பாவில் வெடித்த பொருளாதார நெருக்கடி ஆகிய இவை, உலக வரலாற்றின் இந்தப் புதிய சகாப்தத்துக்குரிய முக்கிய மைல்கற்களாகும்.

புல்லுருவித்தனமுடையதாகிவிட்ட அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமே ஏகாதிபத்தியம் என்பது .உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை நிலவும் அமைப்பில் ஒவ்வொரு ஏகபோகத்துக்குமுரிய குண விசேஷமாய் அமைந்துவிடும் அழுகல் போக்கில் யாவற்றுக்கும் முதலாய் வெளியாகிறது. ஜனநாயக-குடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், பிற்போக்கு-முடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலான வேறுபாடு மறைந்துவிருகிறது; இரு வகையினருமே உயிருள்ள நிலையிலேயே அழுகத் தொடங்கிவிட்டதே இதற்குக் காரணம் (ஆனால் தொழில் துறையின் தனிப்பட்ட கிளைகளிலும், தனிப்பட்ட சில நாடுகளிலும், தனிப்பட்ட சில காலங்களிலும் முதலாளித்துவம் அசாதாரண வேகத்தில் வளர முடியாது என்பதல்ல இதன் அர்த்தம்). இரண்டாவதாக, தமது மூலதனத்தைக் கொண்டு சுகஜீவிகளாய்ச் ''சீட்டுக் கத்தரித்து'' ஜீவிக்கும் முதலாளிகளின் ஒரு பெரும் பிரிவு தோற்றுவிக்கப்படுவதில் முதலாளித்துவத்தின் அழுகல் தன்மை வெளியாகிறது. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்சு, ஜெர்மனி—தலைமையான இந்நான்கு ஏகாதிபத்திய நாடுகளில் ஒவ்வொன்றிலும் பணவுறுதிச் சீட்டுகளில் [securities] 10,000 அல்லது 15,000 கோடி பிராங்கு வரை மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இதிலிருந்து இந்நாடு ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ஐந்நூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடிக்குக் குறையாமல் வருமானம் பெறுகிறது. மூன்றாவதாக, மூலதன ஏற்றுமதியானது புல்லுருவித்தனம் உச்சநிலைக்கு உயர்ந்துவிடுவதைக் குறிக்கிறது. நான்காவதாக, ''நிதி மூலதனம், ஆதிக்கத்துக்காகப் பாடுபடுகிறதேயன்றி சுதந்திரத்துக்காக அல்ல''. அரசியல் பிற்போக்கு சர்வவியாபகம் ஆகிவிடுவது ஏகாதிபத்தியத்துக்குரிய குண விசேஷமாகும். பிரம்மாண்ட அளவிலான லஞ்சமும் ஊழலும் எல்லா வகையான பனாமா விவகாரங்களும்[95] மலிந்துவிடுகின்றன. ஐந்தாவதாக, ஒடுக்கப்படுகிற தேசங்கள்மீதான சுரண்டல்—இது நாடுபிடித்து இணைக்கும் முயற்சிகளுடன் இரண்டறக் கலந்ததாகும்—இன்னும் முக்கியமாய் ஒருசில ''பேரரசுகளின்'' சுரண்டல், ''நாகரிக''

உலகினைக் கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தவர்களின் இரத்தத்தை உறிஞ்சும் புல்லுருவியாக மேலும் மேலும் மாற்றிவருகிறது. ரோமானியப் பாட்டாளி சமுதாயத்தின் செலவில் வாழ்ந்தான்; ஆனால் நவீன காலச் சமுதாயம் நவீனகாலப் பாட்டாளியின் செலவில் வாழ்கிறது. சிஸ்மொண்டியின் பொருட் செறிவுள்ள இந்த வாக்கியத்தை மார்க்ஸ் வலியுறுத்திக் குறிப்பிட்டார். ஏகாதிபத்தியமானது இந்நிலைமையை ஓரளவு மாற்றியுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தில் சலுகை படைத்த மேல்தட்டுப் பகுதி ஓரளவுக்கு, கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தவர்களின் செலவில் வாழ்கிறது.

ஏகாதிபத்தியமானது அந்திமக்கால முதலாளித்துவமாய், சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய முதலாளித்துவமாய் இருப்பது ஏனென்பது நன்கு விளங்குகிறது: முதலாளித்துவத்திலிருந்து முளைக்கும் ஏகபோகமானது ஏற்கனவே மரிக்கத் தொடங்கிவிட்ட முதலாளித்துவத்தை, சோஷலிசத்துக்கு அது மாறிச் செல்வதற்கான கட்டத்தின் துவக்கத்தைக் குறிப்பதாகும். ஏகாதிபத்தியத்தால் உழைப்பு மகத்தான அளவுக்கு சமூகமயமாக்கப்படுவதாலும் (ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்களான முதலாளித்துவப் பொருளியலாளர்கள் இதனைப் "பின்னிப்பிணைதல்" என்பதாகக் குறிப்பிடுகிறார்கள்) இதே விளைவு உண்டாகிறது.

ஏகாதிபத்தியத்துக்கு நாம் அளித்திடும் இந்த இலக்கணம் நம்மைக் கார்ல் காவுத்ஸ்கியிற்கு நேர்முரணான நிலைக்குக் கொண்டு வருகிறது. ஏகாதிபத்தியத்தை "முதலாளித்துவத்தின் ஒரு கட்டமாகக்" கருதக் காவுத்ஸ்கி மறுக்கிறார்; நிதி மூலதனத்தால் "உகந்ததென விரும்பி ஏற்கப்படும்" ஒரு கொள்கை என்று, "தொழில் துறை" நாடுகள் "விவசாய" நாடுகளைப் பிடித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்குரிய ஒரு போக்கு என்று அதற்கு அவர் இலக்கணம் கூறுகிறார்.* காவுத்ஸ்கி கூறும் இலக்கணம் தத்துவார்த்தக்

---

*"அதிக வளர்ச்சி பெற்றுவிட்ட தொழில் துறை முதலாளித்துவத்தின் ஒரு விளைவே ஏகாதிபத்தியம். தொழில் துறை முதலாளித்துவத் தேசம் ஒவ்வொன்றும் மேலும்

கண்ணோட்டத்தில் முழுக்க முழுக்கப் பொய்யானது ஏகாதிபத்தியத்தை இனம் கண்டு கொள்வதற்குரிய அடையாளமாய் இருப்பது தொழில் துறை மூலதனத்தின் ஆதிக்கம் அல்ல, நிதி மூலதனத்தின் ஆதிக்கமே ஆகும்; குறிப்பாய் விவசாய நாடுகளை மட்டும் அல்ல, எல்லா வகையான நாடுகளையும் பிடித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கான முயற்சியே ஆகும். ''படைக் கலைப்பு'', ''அதீத-ஏகாதிபத்தியம்'' இத்தியாதி அபத்தங்களைப் போன்ற கொச்சையான அவரது முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்துக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு காவுத்ஸ்கி ஏகாதிபத்திய அரசியலை ஏகாதிபத்தியப் பொருளாதாரத்திலிருந்து பிரித்து விலக்குகிறார்; அரசியல் துறை ஏகபோகத்தைப் பொருளாதாரத் துறை ஏகபோகத்திலிருந்து பிரித்து விலக்குகிறார். இந்தத் தத்துவார்த்தப் பொய்க் கூற்றுகளின் நோக்கம் எல்லாம், அவற்றின் உட்பொருள் எல்லாம், ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆழமான முரண்பாடுகளை மூடிமறைத்து, அதன்மூலம் ஏகாதிபத்திய ஆதரவாளர்களான அப்பட்டமான சமூக-தேசியவெறியர்களுடனும் சந்தர்ப்பவாதிகளுடனும் ''ஒன்றுபடுவ''தென்ற தத்துவத்துக்கு நியாயம் கற்பிப்பதுதான்.

இவ்விவகாரத்தில் காவுத்ஸ்கி மார்க்சியத்திலிருந்து முறித்துக் கொண்டு சென்றுவிடுவது குறித்து சொத்சியால்-டெமக்ராத், கம்முனீஸ்த்[96] இதழ்களில் போதுமான அளவுக்கு விவரமாய் எடுத்துரைத்திருக்கிறோம். நமது ருஷ்ய காவுத்ஸ்கிவாதிகள்—அக்செல்ரோத், ஸ்பெக்டேட்டர் இவர்களின் தலைமையிலுள்ள நிறுவனக் கமிட்டி ஆதரவாளர்கள், (மார்த்தவைக்கூட சேர்த்துக் கொள்ள வேண்டும், பெருமளவுக்குத் திரோத்ஸ்கியையும்தான்)—ஒரு போக்கு என்ற முறையில் காவுத்ஸ்கிவாதம் குறித்து மௌனம் சாதிப்பதே உசிதமென்று இருந்துவிட்டனர். காவுத்ஸ்கியால் யுத்தகாலத்தில் எழுதப்பட்டவற்றை ஆதரித்து வாதாட அவர்கள்

மேலும் பெரிய அளவில் விவசாயப் பிரதேசங்களை, அவற்றில் வாழும் தேசத்தவர்களைப்பற்றிக் கருதாமலே, கீழ்ப்படுத்திச் சுவீகரித்துச் சேர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளில்தான் இது அடங்கியுள்ளது'' (*Die Neue Zeit*, 1914 செப்டம்பர் 11 இதழில் காவுத்ஸ்கி எழுதுவது).

துணியவில்லை. ஆகவே காவுத்ஸ்கியைப் புகழ்வதோடு (அக் செல்ரோத் தம்முடைய ஜெர்மன் பிரசுரத்தில்—நிறுவனக் கமிட்டி இதனை ருஷ்ய மொழியில் வெளியிடுவதாக வாக் களித்திருக்கிறது), அல்லது காவுத்ஸ்கியின் அந்தரங்கக் கடிதங் களிலிருந்து மேற்கோள்கள் கூறுவதோடு (ஸ்பெக்டேட்டர்) நின்றுவிடுகிறார்கள். இக்கடிதங்களில் காவுத்ஸ்கி, தாம் எதிர்த்தரப்பினரையே சேர்ந்தவர் என்பதாகக் கூறி, தேசியவெறி கொண்ட தமது உரைகளை மூடி மறைக்க நரித்தனமாய் முயலுகிறார்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றி காவுத்ஸ்கியிற்குள்ள "கருத் தோட்டம்"—ஏகாதிபத்தியத்துக்கு மெருகு பூசுவதற்கு ஒப் பானதே இது—ஹில்பர்டிங்கின் நிதி மூலதனத்துடன் ஒப் பிடும்போது மட்டுமின்றி (ஹில்பர்டிங் இப்பொழுது எவ் வளவுதான் அரும்பாடு பட்டு காவுத்ஸ்கியையும் சமூக-தேசியவெறியர்களுடன் "ஒன்றுபட" வேண்டுமென்பதையும் ஆதரித்து வாதாடினாலும் இது மாறிவிடாது!) சமூக-மிதவாதி ஜே. ஏ. ஹாப்சனுடன் ஒப்பிடும்போதுகூட பின்னேக்கிச் செல்வதாயுள்ளது. பிரிட்டிஷ் பொருளியலாளரான இந்த ஹாப்சன் எவ்வகையிலும் தம்மை மார்க்சியவாதியாகக் கூறிக் கொள்ளவில்லை. அவருங்கூட 1902ல் வெளியான ஒரு புத்தகத்தில்* மேலும் ஆழமான முறையில் ஏகாதிபத்தியத் துக்கு இலக்கணம் கூறி, அதன் முரண்பாடுகளை வெளிப்படுத் திக் காட்டுகிறார். காவுத்ஸ்கியின் சாத்வீகவாத, "இணக்கம் காணும்" கயமைக் கருத்துக்களில் அனேகமாய் யாவற் றையுமே அவருடைய புத்தகத்தில் காணலாம். ஏகாதிபத் தியத்தின் புல்லுருவித்தனம் என்னும் மிக முக்கியப் பிரச்சினை குறித்து ஹாப்சன் எழுதியதாவது:

ஹாப்சனின் கருத்துப்படி இருவித நிலைமைகளால் பழைய சாம்ராஜ்யங்கள் பலம் இழக்கலாயின: (1) "பொரு ளாதாரப் புல்லுருவித்தனம்", (2) சார்பு நாடுகளின் மக்க ளிடையிலிருந்து சேனைகள் திரட்டப்படுதல். "பொருளா தாரப் புல்லுருவித்தனத்துக்குரிய பழக்கம் முதலாவதாகும்.

---

* J. A. Hobson, *Imperialism* (ஜே. ஏ. ஹாப்சன், "ஏகாதிபத்தியம்".—பதிப்பாசிரியர்.), லண்டன், 1902.

ஆதிக்கம் புரியும் அரசு தனது ஆளும் வர்க்கத்தைச் செல்வச் செழிப்புடையதாக்கிக் கொள்வதற்காகவும், தனது கீழ்நிலை வர்க்கங்களுக்கு லஞ்சம் கொடுத்து அவற்றைத் தனக்கு இணங்கி நடக்குமாறுச் செய்வதற்காகவும் தனது மாநிலங்களையும் காலனிகளையும் சார்பு நாடுகளையும் பயன்படுத்திக் கொள்வதே இது''. இரண்டாவது நிலைமை குறித்து ஹாப்சன் இவ்வாறு எழுதுகிறார்:

''கிரேட் பிரிட்டனும் பிரான்சும் ஏனைய சாம்ராஜ்யஆதிக்கத் தேசங்களும்எதைப்பற்றியும் கவலைப் படாமல் கண்ணை மூடிக்கொண்டு இந்த ஆபத்தான சார்புநிலைப் பாதையில் போய்க் கொண்டிருப்பதானது, ஏகாதிபத்தியத்தின் கபோதித்தனத்துக்கு மிகவும் விசேஷமான ஓர் அறிகுறியாகும் [ஏகாதிபத்திய வாதிகளுடைய ''கபோதித்தனம்'' பற்றிய இந்தப் பல்லவி சமூக-மிதவாதி ஹாப்சனுக்கு வேண்டுமானால் பொருத்தமுடையதாய் இருக்கலாம், ''மார்க்சிய வாதி'' காவுத்ஸ்கியிற்குச் சிறிதும் பொருத்தமுடையதன்று]. இப்பாதையில் கிரேட் பிரிட்டன் மிக நெடுந் தொலைவு சென்றுவிட்டது. நமது இந்திய சாம்ராஜ்யத்தைப் பெறுவதற்காக நடைபெற்ற போர்களில் மிகப் பெரும்பாலானவை சுதேச மக்களாலேயே நடத்தப்பட்டவையாகும். இந்தியாவிலும் இன்னும் அண்மைக் காலத்தில் இதேபோல எகிப்திலும் பெரிய பெரிய நிரந்தர சேனைகள் பிரிட்டிஷ் தளகர்த்தர்களுக்குக்கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன; நமது ஆப்பிரிக்க சாம்ராஜ்ய உடைமைகள் சம்பந்தமான போர்களில் அனேகமாய் யாவுமே, தென்பகுதியில் நடைபெற்றவற்றைத் தவிர்த்து, நமக்காகச் சுதேச மக்களால் நடத்தப்பட்டவையே ஆகும்.''

சீனா பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளப்படும் நிலைமை ஏற்பட்டபோது, ஹாப்சன் இது குறித்துப் பின்வருமாறு பொருளாதார மதிப்பீடு செய்தார்: ''அப்பொழுது மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதி, இங்கிலாந்தின் தென் பகுதியிலும், ரிவீராவிலும், உல்லாசப் பயணிகள் மண்டியுள்ள, அல்லது குடியிருப்புக்கு வசதியான இடங்களாகிய இத்தாலி, ஸ்விட்ஜர்லாந்து இவ்விரு நாடுகளின் பகுதிகளிலும் ஏற்கனவே காணக்கூடியதாகிவிட்ட அதே தோற்றத்தையும் தன்மையையும் பெற்றுவிடும். அதாவது தொலைக் கிழக்கிலிருந்து லாபப் பங்கீடுகளும் பென்ஷன்களும்

பெறும் செல்வச் சீமான்களது சிறு தொகுதிகளும், இன்னும் சற்று அதிக அளவிலான உத்தியோகப் பரிவாரத்தினரும் வணிகர்களுமான தொகுதிகளும், மேலும் கூடுதலான வீட்டு வேலையாட்களாலும் போக்குவரத்துத் துறையிலும் விரைவில் கெட்டுப் போய்விடும் பண்டங்களது உற்பத்தியின் இறுதிப் பிரிவுகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களாலுமான தொகுதிகளும் வாழும் திட்டுகளாகிவிடும். பிரதானத் தொழில்கள் யாவும் மறைந்து போயிருக்கும்; முக்கிய உணவுப் பொருள்களும் பகுதியளவு தயாரான செய்பொருள்களும் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் கப்பமாக வந்து குவிந்து கொண்டிருக்கும்.... மேலும் பெரிய அளவிலான மேலைய அரசுகளது கூட்டணி ஒன்று, ஐரோப்பியப் பேரரசுகளது கூட்டு ஒன்று உதிக்கலாம் என்ற சாத்தியப்பாடும் இருந்து வருகிறது. இந்தக் கூட்டு உலக நாகரிக இலட்சியத்தை முன்னுக்கு எடுத்துச்செல்வதற்குப் பதிலாய், மேலையப் புல்லுருவித்தனத்தாலான பயங்கர அபாயத்துக்குத்தான் வழி செய்வதாய் இருக்கும். தொழில் துறையில் முன்னேறிய தேசங்களாலாகிய இந்தக் கூட்டைச் சேர்ந்த நாடுகளது மேல் வர்க்கங்கள் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் அளவிலாத கப்பம் வசூலிக்கும். இந்தக் கப்பத்தைக் கொண்டு இவ்வர்க்கங்கள் பணிந்து நடக்கும் பரிவாரத்தினரின் பெருந் திரளுக்குத் தீனி போட்டுக் கட்டிக் காக்கும். இப்பரிவாரத்தினர் இனி செய்பொருள் உற்பத்தி, விவசாயம் போன்ற பிரதானப் பொருளாதாரக் கிளைகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அதற்குப் பதில் புதிய நிதியாதிக்கப் பிரபுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் தனிநபர்களுக்கான பணிவிடைகளிலும் சிறு சேவைத் தொழில்களிலும் இப்பரிவாரத்தினர் ஈடுபடுத்தப்படுவர். இது போன்ற ஒரு தத்துவம் [சாத்தியக்கூறு என்பதாக அவர் சொல்லியிருக்க வேண்டும்] பரிசீலனைக்குத் தகுதியுடைத்ததல்ல என்று ஒதுக்க விரும்புவோர், ஏற்கனவே இந்த நிலைமைக்குத் தாழ்த்தப்பட்டுவிட்ட இங்கிலாந்தின் தெற்குப் பகுகளில் உள்ள பொருளாதார, சமூக நிலைமைகளை ஆராய வேண்டும். இத்தகைய நிதியாதிக்கத்தினர், முதலீட்டாளர்கள் [சுகஜீவிகள்], அரசியல், தொழில் அதிகாரிகள் ஆகியோரது கோஷ்டிகள் சீனாவைத் தமது பொருளாதாரப் பிடிக்குக் கீழ்ப்படியச் செய்து, இதுவரை உலகம் கண்டிராத அளவுக்கு லாபம்

திரட்டுவதற்கான பிரம்மாண்டமானதோர் ஆதார மாய் அமையவல்ல இந்தக் கருவூலத்தைத் துடைத்து அள்ளி ஐரோப்பாவுக்குக் கொண்டுவந்து அனுப விக்கும்படியான இந்நிலைமையால், மேற்கூறியது போன்ற ஓர் அமைப்பு எல்லையின்றி விஸ்தரிக்கப்படு வது சாத்தியமே என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருங்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றிய இந்த விளக்கமோ, அல்லது வேறு எந்தவொரு விளக்கமோ அப்படியே உண்மையாகி விடும் என்று கூற முடியாதபடி நிலைமை மிகமிகச் சிக் கலாய் இருக்கிறது, உலக சக்திகளது செயற்பாட் டின் விளைவுகள் கணித்துச் சொல்ல முடியாதனவாய் உள்ளன. ஆனால் இன்று மேலைய ஐரோப்பாவின் ஏகா திபத்தியத்தை ஆட்டிப்படைக்கும் சக்திகள் இத் திசையிலேதான் போய்க் கொண்டிருக்கின்றன; எதிர்த்தடிக்கப்பட்டால் ஒழிய, அல்லது திசை திருப்பிவிடப்பட்டால் ஒழிய அவை மேற்கூறிய விளை வையே உண்டாக்கும்.''

சமூக-மிதவாதியான ஹாப்சன், இவ்வாறு ''எதிர்த்தடிப் பது'' என்பது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் ஒன்றால் மட்டுமே முடியும், சமுதாயப் புரட்சியின் வடிவில் மட்டுமே இது நடைபெற முடியும் என்பதைப் பார்க்கத் தவறிவிடு கிறார். ஆனால் அவர் சமூக-மிதவாதியாதலால் இதில் வியப் பில்லை. இருந்தபோதிலும் 1902ஆம் ஆண்டிலேயே அவர் ''ஐரோப்பிய ஐக்கிய நாடு'' என்பதன் உட்பொருள் குறித் தும், அதன் விளைவுகள் குறித்தும் தேர்ந்த திருஷ்டியுடையவ ராய் இருந்தார் (காவுத்ஸ்கிவாதியான திரோத்ஸ்கியின் நன் மைக்காக இதைக் குறிப்பிட்டாக வேண்டும்!). மற்றும் பல் வேறு நாடுகளையும் சேர்ந்த கபட நாடகக் காவுத்ஸ்கிவாதிகள் தற்போது மூடிமெழுகி வரும் யாவற்றின் உட்பொருளையும் விளைவுகளையும் பற்றி, அதாவது ஆசியா, ஆப்பிரிக்காவின் முதுகிலே அமர்ந்த ஏகாதிபத்திய ஐரோப்பா ஒன்றைத் தோற்றுவிக்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருடன் சந்தர்ப்பவாதிகள் (சமூக-தேசிய வெறியர்கள்) ஒத்துழைக்கிறார்கள், எதார்த்த நோக் குடன் பார்க்கும்போது சந்தர்ப்பவாதிகள் குட்டிபூர்ஷுவாக் களையும், ஏகாதிபத்திய உபரிலாபங்களின் துணை கொண்டு

லஞ்சம் தரப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டு முதலாளித்துவத்தின் காவல் நாய்களாகவும் தொழிலாளர் இயக்கத்தைப் பாழ்படுத்தும் மோசடிக்காரர்களாகவும் மாற்றப்பட்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு வகுப்பினரையும் சேர்ந்த பகுதியோரே ஆவர் என்ற இவ்வுண்மையின் உட்பொருளையும் விளைவுகளையும் பற்றி அன்றே ஹாப்சன் தேர்ந்த திருஷ்டியுடையவராய் இருந்தார்.

ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், தொழிலாளர் இயக்கத்தில் வெற்றி பெற்றுவிட்ட (எவ்வளவு காலத்துக்கு இவ்வெற்றி நீடிக்கப் போகிறது?) சந்தர்ப்பவாதத்துக்கும் இடையிலுள்ள பொருளாதார இணைப்பை, மிகவும் ஆழமான இணைப்பை, நாம் கட்டுரைகளில் மட்டுமல்ல, நமது கட்சியின் தீர்மானங்களிலும் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். இதிலிருந்து நாம் சமூக-தேசியவெறியர்களிடமிருந்து பிளவுபடுவது தவிர்க்க முடியாததென்ற முடிவுக்கு வந்ததையும் இங்கு எடுத்துரைக்கலாம். ஆனால் நமது காவுத்ஸ்கிவாதிகள் இப்பிரச்சினையைத் தட்டிக் கழித்தே வந்துள்ளனர்! எடுத்துக்காட்டாக மார்த்தவ் அவருடைய விளக்கக் கட்டுரைகளில் குதர்க்கவாதம் புரிந்தார்; நிறுவனக் கமிட்டியினது வெளிநாட்டுச் செயலாளர் குழுவின் செய்திகளில்[97] (இதழ் 4, 1916 ஏப்ரல் 10) இது இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:

> "...அறிவு வளர்ச்சியில் 'அறிவுத்துறையினருக்கு' மிகவும் அருகாமையில் வந்து கொண்டும், மிக உயர்ந்த தேர்ச்சியுடையோராயும் இருக்கும் தொழிலாளர் தொகுதியினர் விதிவினைபோல் தடுக்கமுடியாதபடி சமூக-ஜனநாயகத்திலிருந்து விலகி சந்தர்ப்பவாதத்தை நோக்கிப் போய்விடுவார்களாயின், அது சமூக-ஜனநாயகத்தின் இலட்சியத்துக்கு நல்லதல்ல, ஏன் மிகப் பெரும் கேடாகவே ஆகிவிடும்...."

"விதிவினை போல தடுக்க முடியாத" என்ற அந்த அசட்டுத் தொடரின் மூலமாகவும், கைச் சாமர்த்தியத்தாலும், தொழிலாளர்களில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் சந்தர்ப்பவாதத்தையும் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரையும் நோக்கி ஏற்கனவே விலகிச் சென்றுவிட்டனர் என்னும்

- 5 MAR 1988

உண்மையை இவ்வாறு அவர் கூருமலே விட்டுவிட்டார். நிறுவனக் கமிட்டியின் குதர்க்கவாதிகளும் இதே உண்மையைத் தான் கூருமல் விட்டுவிட விரும்புகிருர்கள்! பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையையும் புரட்சிகரப் போக்கின் வெற்றியையும் எதார்த்த நிலைமைகள் உத்தரவாதம் செய்கின்றன! என்பதாக காவுத்ஸ்கிவாதியான ஹில்பர்டிங்கும் மற்றும் பலரும் தற்போது ஆடம்பரமாய்க் கூறிவரும் ''அதிகார பூர்வமான நன்னம்பிக்கை''யை வெளியிடுவதோடு அவர்கள் நின்றுவிடுகிருர்கள்! பாட்டாளி வர்க்கம் குறித்து நாங்கள் ''நன்னம்பிக்கை மிக்கவர்கள்தான்'', ஐயமில்லை!

ஆளுல் உண்மையில் இந்தக் காவுத்ஸ்கிவாதிகள் எல்லோருமே—ஹில்பர்டிங்கும் நிறுவனக் கமிட்டியினரும் மார்த்தவ் கூட்டத்தாரும்—நன்னம்பிக்கை மிக்கவர்களாய் இருப்பது.... சந்தர்ப்பவாதம் குறித்து ஆகும். சாரப்பொருள் இதுவே!

பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின்—ஐரோப்பிய முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்திய முதலாளித்துவம் மட்டுமின்றி உலக முதலாளித்துவம் அனைத்தின்—பிள்ளையாகும். உலக அளவில், ஐம்பது ஆண்டுகள் முந்தியோ ஐம்பது ஆண்டுகள் பிந்தியோ—உலக அளவில் பார்க்கையில் இது சிறு விவகாரமேயாகும்—''பாட்டாளி வர்க்கம்'' ஒற்றுமை ''அடைந்துவிடும்'' என்பதிலும், புரட்சிகர சமூக-ஜனநாயகம் ''தவிர்க்க முடியாதபடி'' அதனுள் வெற்றிவாகை சூடிவிடும் என்பதிலும் ஐயமில்லை. ஆளுல் காவுத்ஸ்கிவாத கனவான்களே, அதுவல்ல விவகாரம். தற்போது விவகாரம் என்னவெனில் ஐரோப்பாவின் ஏகாதிபத்திய நாடுகளில் நீங்கள் சந்தர்ப்பவாதிகளுடன் குலாவிக் கொண்டிருக்கிறீர்கள்—இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் புறம்பானவர்கள்; இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் தாசர்கள், அதன் கையாட்கள், அதன் செல்வாக்கைக் கொண்டுவந்து பரப்பும் சாதனங்களாகப் பணியாற்றுகிறவர்கள். தொழிலாளர் இயக்கம் அவர்களைத் தன்னிடமிருந்து களைந்தெறியாத வரை, அது முதலாளித்துவத் தொழிலாளர் இயக்கமாகவே இருக்கும். சந்தர்ப்பவாதிகளுடன்—லேகின்களுடனும் டவீத்களுடனும் பிளெஹானவ்களுடனும் ச்ஹென்கெலிக்களுடனும் பத்ரேசவ்களுடனும், இன்ன

பிறருடனும்—''ஒற்றுமையை'' ஆதரித்து வாதாடுவதன் மூலம் நீங்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் இயக்கத்திலுள்ள தனது சிறந்த கையாட்களின் துணையுடன் தொழிலாளர்களை அடிமைப்படுத்திக் கொள்வதை எதார்த்த ரீதியில் ஆதரிக்கிறீர்கள். புரட்சிகர சமூக-ஜன நாயகத்தின் உலக அளவிலான வெற்றி தவிர்க்க முடியாதது தான்; ஆனால் அது உங்களை எதிர்த்துத்தான் நடைபெறுகிறது, இனியும் நடைபெறும்; உங்களை எதிர்த்துத்தான் முன் னேறிச் செல்கிறது, இனியும் முன்னேறிச் செல்லும்; அது உங்கள் மீதான வெற்றியாகவே திகழும்.

இன்றையத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள இவ்விரு போக்குகளையும்—இவ்விரு கட்சிகளையும் என்றுகூடச் சொல் லலாம்—உலகெங்கும் 1914-16ல் தெட்டத் தெளிவாகப் பிரிந்து விலகிச் சென்றுவிட்ட இவ்விரு போக்குகளையும் பல பத்தாண்டுகள் அடங்கிய காலப் பகுதியில், ஏறத்தாழ 1858 லிருந்து 1892 வரை, எங்கெல்சும் மார்க்சும் இங்கிலாந்தில் கண்ணுற்று விவரித்துக் கூறினர்.

உலக முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியச் சகாப்தம் தொடங்கிய காலத்தில் மார்க்சோ, எங்கெல்சோ உயிருடன் இருக்கவில்லை. இச்சகாப்தம் 1898-1900க்கு முன்னதாக ஆரம்பமாகவில்லை. ஆனால் இங்கிலாந்தின் விசேஷம் என்ன வெனில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே அது, குறைந்தபட்சம் ஏகாதிபத்தியத்துக்குரிய இரண்டு முக்கியத் தனி இயல்புகளை வெளிப்படுத்தி வந்தது: (1) மிக வும் பரவலான காலனிகள், (2) ஏகபோக லாபம் (உலகச் சந் தையில் அதற்கிருந்த ஏகபோக நிலையே இதற்குக் காரணம்). இவ்விரு இயல்புகளிலும் அன்று இங்கிலாந்து முதலாளித்துவ நாடுகளிடையே ஒரு விதிவிலக்காய் விளங்கிற்று. இந்த விதி விலக்கைப் பரிசீலனை செய்த எங்கெல்சும் மார்க்சும் ஆங் கிலேயத் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் பெற்ற (தற்காலிக) வெற்றியுடன் இதற்குள்ள தொடர்பைத் தெட்டத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுட்டிக்காட் டினர்.

1858 அக்டோபர் 7 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் எங்கெல்ஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''...ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் மெய்யாகவே மேலும் மேலும் முதலாளித்துவமயமாகி வருகிறது. எல்லாத் தேசங்களிலும் மிகவும் முதலாளித்துவமயமான இங்கிலாந்து இவ்வாறாக முதலாளித்துவ வர்க்கத்துடன்கூடவே ஒரு முதலாளித்துவப் பிரபுக் குலம் ஒன்றையும், முதலாளித்துவப் பாட்டாளி வர்க்கம் ஒன்றையும் பெற வேண்டுமென்ற இறுதிக் குறிக்கோளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அனைத்து உலகையும் சுரண்டும் ஒரு தேசத்துக்கு இது ஓரளவு நியாயமே''. ''ஆங்கிலேயத் தொழிலாளர் தலைவர்கள் தம்மை விலைக்கு விற்றுக் கொண்டுவிட்டனர்'' என்று கூறியதற்காக மார்க்சை எதிர்த்து ஹேல்ஸ் (Hales) அகிலத்தின் சமஷ்டிக் கவுன்சிலில் ரகளை செய்ததாகவும், மார்க்சின்மீது ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் ஸோர்கேயிற்கு 1872 செப்டம்பர் 21 தேதியிட்ட தமது கடிதத்தில் எங்கெல்ஸ் தெரிவிக்கிறார். 1874 ஆகஸ்டு 4ல் ஸோர்கேயிற்கு மார்க்ஸ் இவ்வாறு எழுதினார்: ''இங்கே [இங்கிலாந்தில்] நகரத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, இத்தலைவர்களது கும்பல் முழுதுமே பாராளுமன்றத்துக்குப் போய்ச் சேராதது வருந்தத்தக்கதே. இக்கும்பல் முழுவதையும் தொலைத்துத் தலை முழுக அது சாலச்சிறந்த வழியாக இருந்திருக்கும்''. 1881 ஆகஸ்டு 11 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எங்கெல்ஸ் ''முதலாளித்துவ வர்க்கத்தினரால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட அல்லது அவர்களால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்கள் தமக்குத் தலைமை தாங்க அனுமதிக்கும் அந்தப் படுமோசமான ஆங்கிலேயத் தொழிற் சங்கங்கள்'' என்பதாகக் குறிப்பிடுகிறார். காவுத்ஸ்கியிற்கு 1882 செப்டம்பர் 12 தேதியிட்ட கடிதத்தில் எங்கெல்ஸ் எழுதினார்: ''காலனிக் கொள்கை குறித்து ஆங்கிலேயத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கிறீர்கள். என்ன நினைக்கிறார்கள், பொதுவாக அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அதுவேதான். இங்கு தொழிலாளர் கட்சி என்பதாக எதுவும் இல்லை, கான்சர்வேட்டிவ்கள், மிதவாத-தீவிரவாதிகள் மட்டுமே தான் உள்ளனர்; தொழிலாளர்களைப் பொறுத்தவரை உலகச் சந்தையிலும் காலனிகளிலும் இங்கிலாந்துக்குள்ள ஏக

போகத்தின் விருந்துணவில் அவர்கள் பங்கு பெற்றுக் களிப்புறுகின்றனர்''.

1889 டிசம்பர் 7ல் ஸோர்கேயிற்கு எங்கெல்ஸ் எழுதினார்: ''இங்கே [இங்கிலாந்தில்] மிகவும் அருவருக்கத்தக்கது என்னவெனில், தொழிலாளர்களுடைய இரத்தத்திலேயே கலந்துவிட்ட இந்த முதலாளித்துவ உயர்குல மனப்பான்மை [respectability]... இவர்களில் மிகச் சிறந்தவராய் நான் கருதும் டாம் மானுங்கூட மேன்மை தங்கிய நகர மேயருடன் விருந்துண்ணப் போவதாகக் கூறிக்கொள்வதில் தனி மகிழ்ச்சி காண்கிறார். பிரெஞ்சு நாட்டவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், எப்படியும் புரட்சியால் விளையும் நன்மையை நன்கு உணரலாம்''. 1890 ஏப்ரல் 19 தேதியிட்ட ஒரு கடிதத்தில்: ''ஆனால் மேல்மட்டத்துக்கு அடியில் இந்த இயக்கம் [இங்கிலாந்துத் தொழிலாளி வர்க்க இயக்கம்] நடந்து கொண்டு தான் இருக்கிறது; மேலும் மேலும் விரிவான பகுதிகளை ஆட்கொண்டு வருகிறது; இதுவரை தேங்கிய நிலையில் இருந்துள்ள **அடி மட்டத்து** [அழுத்தம் எங்கெல்சினுடையது] பகுதிகளே மிகவும் அதிகமாய் ஆட்கொள்ளப்படுகின்றன. இந்தப் பெருந் திரள் திடீரெனத் தன்னைத் தானே உணர்ந்து கொள்ளப் போகும் நாள், இயங்கிச் செல்லும் இந்தப் பிரம்மாண்டத் திரள் தானேதான் என்ற உணர்வு அதற்குப் பிறக்கப் போகும் நாள் இனி தொலைவில் இல்லை''. 1891 மார்ச் 4ல்: ''சிதைந்துபோன துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் தோல்வி; செல்வமிக்கவையாகவும் ஆகவே கோழைத்தனமானவையாகவும் இருக்கும் 'பழைய', பழமை வாதத் தொழிற்சங்கங்கள் தனித்து நிற்கின்றன....'' 1891 செப்டம்பர் 14ல்: நியூகாசில் தொழிற் சங்கக் காங்கிரசில் எட்டு மணி நேர வேலைநாளின் எதிர்ப்பாளர்களான பழைய தொழிற் சங்கவாதிகள் தோற்கடிக்கப்பட்டனர்; ''முதலாளித்துவப் பத்திரிகைகள் **இத்தோல்வி முதலாளித்துவத் தொழிற் கட்சிக்குக் கிடைத்த தோல்வியாகும்** என ஒத்துக்கொள்கின்றன'' (அழுத்தங்கள் யாவும் எங்கெல்சினுடையவை)....

பல பத்தாண்டுகளாய் மீண்டும் மீண்டும் எங்கெல்ஸ் கூறி வந்த இந்தக் கருத்துக்கள் பகிரங்கமாய்ப் பொது வெளியீடுகளிலும் அவரால் எடுத்துரைக்கப்பட்டன என்பதற்கு,

இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற நூலின் இரண்டாம் பதிப்பிற்கான (1892) அவருடைய முன்னுரை சான்றாகும். இதில் அவர் ''தொழிலாளி வர்க்கத்தின் பெருந் திரளானோரைப்'' போலல்லாத ''தொழிலாளி வர்க்கப் பிரபுக் குலத்தோர்'' குறித்தும், ''தனிச் சலுகை படைத்த சிறுபான்மைத் தொழிலாளர்கள்'' குறித்தும் கூறுகிறார். 1848-68ல் இங்கிலாந்தின் தனிச் சலுகைக்குரிய நிலையால் தொழிலாளி வர்க்கத்தில் ''சலுகை படைத்த பாதுகாப்பான ஒரு குறுகிய சிறுபான்மை'' மட்டும்தான் ''நிரந்தர ஆதாயமடைந்தது''; ''மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் மிகச் சிறந்த நிலைமையிலுங்கூட தற்காலிக மேம்பாடுதான் பெற முடிந்தது''.... ''அந்த [இங்கிலாந்தின் தொழில் துறை] ஏகபோகம் தகர்ந்ததும், ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் தனிச் சலுகைக்குரிய நிலையினை இழந்துவிடும்....'' ''புதிய'' தொழிற் சங்கங்களின், அதாவது தேர்ச்சியற்ற தொழிலாளர்களது சங்கங்களின் உறுப்பினர்கள் ''மாபெரும் இந்த அனுகூலமுடையவர்களாவர்: அவர்களுடைய மனம் வசதிக்குரிய நிலைமையில் இருந்த 'பழைய சங்கங்களின் உறுப்பினர்களது' சிந்தனைக்கு இடையூறாய் இருந்த மரபுரிமையாக வந்த 'உயர் குல' முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் சிறிதும் களங்கமுறாத கன்னி நிலமாகும்''.... இங்கிலாந்தில் ''தொழிலாளர் பிரதிநிதிகள் எனப்படுவோர்'' எத்தகையோர் என்றால், ''தாம் தொழிலாளர்கள் என்பதற்குரிய தன்மையைத் தமது மிதவாதமெனும் கடலிலே மூழ்கடித்து விட விரும்புகிறவர்கள், ஆதலால் தொழிலாளி வர்க்க உறுப்பினர்களாய் இருப்பதற்காக மன்னிப்பளிக்கப்பட்டவர்கள்''....

மார்க்ஸ், எங்கெல்ஸ் இவர்களது நேரடியான எழுத்துக்களிலிருந்து வேண்டுமென்றேதான் விரிவான மேற்கோள்கள் எடுத்துக் கூறியுள்ளோம். வாசகர் இவற்றை ஒட்டு மொத்தமாய்ப் பரிசிலனை செய்து பார்க்கும் பொருட்டே இவ்வாறு செய்துள்ளோம். இவை அவசியம் படித்தறிய வேண்டியவை. கவனமாய்ச் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியவை. ஏனெனில் தொழிலாளர் இயக்கத்தின் போர்த்தந்திரத்துக்கு, ஏகாதிபத்தியச் சகாப்தத்தின் எதார்த்த நிலை

மைகளால் அவசியமாக்கப்படும் இந்தப் போர்த்தந்திரத்துக்கு அச்சாணியாக அமைந்தவை இவை.

இங்குங்கூட காவுத்ஸ்கி பிரச்சினையைக் குழப்பிவிடவும், மார்க்சியத்துக்குப் பதிலாய்ச் சந்தர்ப்பவாதிகளுடன் மனங் கனிந்து இணக்கம் காணும் போக்கை அனுசரிக்கவும் முயலுகிறார். ஜெர்மனி யுத்தத்தில் இறங்கியது இங்கிலாந்தின் ஏக போகத்தை ஒழித்திடுவதற்கான ஒரு மார்க்கமாகுமெனக் கூறி அதற்கு நியாயம் கற்பிக்கும் சிறுபிள்ளைத்தனமான அப் பட்ட சமூக-ஏகாதிபத்தியவாதிகளை (லென்ச் போன்றோர்) எதிர்த்து வாதாடும் காவுத்ஸ்கி, அப்பட்டமான இந்தப் பொய்க்கூற்றை இதே போன்று அப்பட்டமான மற்றொரு பொய்க்கூற்றைக் கொண்டு "திருத்திச் சரிசெய்கிறார்". அகோரமான ஒரு பொய்க்கூற்றுக்குப் பதிலாய் அவர் நாசுக்கான ஒரு பொய்க்கூற்றைக் கையாளுகிறார்! இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் நெடுங்காலத்துக்கு முன்பே முறியடிக்கப்பட்டுவிட்டது, நெடுங்காலத்துக்கு முன்பே ஒழிக்கப் பட்டுவிட்டது என்றும், ஒழிப்பதற்கு இனி எதுவும் விட்டு வைக்கப்படவில்லை என்றும் கூறுகிறார்.

ஏன் இது பொய்யான வாதமாகிறது?

ஏனெனில், முதலாவதாக, இது இங்கிலாந்தின் காலனித் துறை ஏகபோகத்தைக் கவனியாது ஒதுக்கிவிடுகிறது. ஆயினும் நாம் மேலே கண்டது போல, எங்கெல்ஸ் 1882 லேயே, முப்பத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பே இதை மிகத் தெளிவாய் எடுத்துரைத்திருந்தார்! இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் ஒழிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் காலனித் துறை ஏகபோகம் அழியாதிருப்பதோடு மேலும் கடுமையாக உக்கிரமாகியுள்ளது, ஏனெனில் அனைத்துலகும் ஏற்கனவே பிரித்துப் பங்கிடப்பட்டுக் கொண்டுவிட்டது! இந்த நாசுக்கான பொய்யின் மூலம் காவுத்ஸ்கி "போராடுவதற்கு ஒன்றுமில்லை" என்பதான முதலாளித்துவ-சாத்வீகவாத, சந்தர்ப்பவாத-குட்டிபூர்ஷுவாக் கருத்தைக் கள்ளத்தனமாய்ப் புகுத்திவிடுகிறார். இக்கருத்துக்கு நேர் மாறாய், இப்பொழுது முதலாளிகள் போராடுவதற்கு நிறைய இருப்பதுடன், முதலாளித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழியே இல்லை;

ஏனெனில் காலனிகளைப் பலவந்தமாய் மறுபங்கீடு செய்யாமல் புதிய ஏகாதிபத்திய நாடுகள் பழைய (பலவீனமாகிவிட்ட) ஏகாதிபத்திய அரசுகள் அனுபவிக்கும் தனிச் சலுகைகளைப் பெற முடியாது.

இரண்டாவதாக, இங்கிலாந்தின் ஏகபோகம் இங்கிலாந்தில் சந்தர்ப்பவாதத்தின் (தற்காலிக) வெற்றிக்குக் காரணமாவது எப்படி? எப்படியெனில், ஏகபோகத்தால் உபரி லாபங்கள் கிடைக்கின்றன, அதாவது உலகெங்கும் முறையாகவும் வழக்கமாகவும் கிடைக்கும் முதலாளித்துவ லாபங்களைக் காட்டிலும் அதிகப்படியான லாபங்கள் கிடைக்கின்றன. முதலாளிகள் இந்த உபரிலாபங்களில் ஒரு பகுதியை (அது ஒன்றும் சிறிய பகுதியல்ல!) தமது சொந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக, பிற நாடுகளுக்கு எதிராய் அந்த நாட்டின் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய முதலாளிகளுக்கும் இடையே ஒரு கூட்டுக்கு ஒப்பான தொன்றை (வெபுக்கள் விவரித்த ஆங்கிலேயத் தொழிற் சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான பெயர்பெற்ற "கூட்டுகள்" நினைவுகூரத்தக்கவை) தோற்றுவிப்பதற்காக உபயோகித்துக் கொள்ள முடிகிறது. இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாகவே ஒழிக்கப்பட்டுவிட்டது. இது மறுக்க முடியாத உண்மை. ஆனல் இது எப்படி நடந்தேறியது? ஏகபோகத்தின் எல்லா வகைகளுமே மறைந்தாவிட்டன?

அவ்வாறு மறைந்திருப்பின், (சந்தர்ப்பவாதிகளுடன்) இணக்கம் காண்பதென்ற காவுத்ஸ்கியின் "தத்துவம்" ஓரளவு நியாயமானதாய் இருக்கும். ஆனல் அது அவ்வாறு மறைந்துவிடவில்லை; இதுவே இங்குள்ள விவகாரமாகும். ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம் ஆகும். ஒவ்வொரு கார்ட்டலும், டிரஸ்டும், சிண்டிக்கேட்டும், பூதாகாரமான ஒவ்வொரு பாங்கியும் ஒரு ஏகபோகமே ஆகும். உபரிலாபங்கள் மறைந்துவிடவில்லை, இன்னமும் அவை இருந்து வருகின்றன. தனிச் சலுகை பெற்று நிதித் துறையில் செல்வந்தராயுள்ள ஒரு நாடு ஏனைய எல்லா நாடுகளையும் சுரண்டுவது மறையாமல் தொடர்ந்து இருப்பதுடன் மேலும் கடுமையும் ஆகியுள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில

செல்வந்தர் நாடுகள்—சுயேச்சையான, மெய்யாகவே பிரம் மாண்டமான, ''நவீன'' செல்வத்தையே குறிப்பிடுவதாயின் நான்கே நான்கு நாடுகள் மட்டும்தான் உள்ளன: இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மனி—பிரம் மாண்ட அளவுகளுக்கு ஏகபோகத்தை வளர்த்துக் கொண்டு விட்டன; பத்துக் கோடிக் கணக்கில்—நூறு கோடிக் கணக் கில் இல்லையேல்—செல்லும் உபரிலாபங்கள் பெற்று வரு கின்றன; பிற நாடுகளைச் சேர்ந்த கோடானு கோடியான மக் களின் ''முதுகிலே சவாரி செய்கின்றன''; மிகவும் செழிப் பான, மிகவும் கொழுத்த, மிகவும் எளிதில் கிடைக்கக்கூடிய கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகத் தம் மிடையே சண்டையிட்டுக் கொள்கின்றன.

உண்மையில் இதுவே ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் சாராம்சமாகும்; இதன் ஆழமான முரண்பாடுகளை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாய்க் காவுத்ஸ்கி மூடிமெழுகி விடுகிறார்.

ஏகாதிபத்திய ''வல்லரசு'' ஒன்றின் முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கிடைக்கும் உபரிலாபங்கள் பெரும்பாலும் நூறு கோடிப் பிராங்குக் கணக்கில்தான் இருக்குமாதலால், அதனால் ஆண்டுக்குப் பத்துக் கோடிப் பிராங்கு வீதம் செல விட்டுத் ''தனது'' தொழிலாளர்களின் மேல்தட்டினருக்குப் பொருளாதார வழியில் லஞ்சம் கொடுத்து அவர்களைத் தன் பால் ஈர்த்துக் கொண்டுவிட முடியும். இந்தச் சொற்பக் கைக்கூலி தொழிலாளர் அமைச்சர்கள், ''தொழிலாளர் பிரதிநிதிகள்'' (இப்பதத்துக்கு எங்கெல்ஸ் அளித்த ஒப்பற்ற விளக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்), இராணுவ-தொழில் கமிட்டிகளின்[98] தொழிலாளர் உறுப்பினர்கள், தொழிலாளர்-அதிகாரிகள், குறுகிய தொழிலுக்கான சங்கங் களைச் சேர்ந்த தொழிலாளர்கள், அலுவலகச் சிப்பந்திகள் போன்ற பல தரப்பட்டோரிடையிலும் எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது இரண்டாந்தரப் பிரச்சினையே ஆகும்.

1848க்கும் 1868க்கும் இடையிலும், ஓரளவுக்கு அதற்குப் பிற்பாடுங்கூட இங்கிலாந்து மட்டும்தான் ஏகபோக நிலை அனுபவித்து வந்தது; எனவேதான் அங்கு பல பத்தாண்டு

களுக்குச் சந்தர்ப்பவாதம் வெற்றியடைய முடிந்தது. வேறு எந்த நாடும் மிகுந்த வளமுடைய காலனிகளோ, தொழில் துறை ஏகபோகமோ பெற்றிருக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசி மூன்றும் கூறில் புதிய, ஏகாதிபத்தியச் சகாப்தத்துக்கான மாற்றம் ஏற்பட்டது. ஒரு வல்லரசல்ல, ஒரு சிலவே ஆயினும், பல வல்லரசுகளது நிதி மூலதனம் இப்பொழுது ஏகபோக நிலை அனுபவிக்கலாயிற்று. (ஜப்பானிலும் ருஷ்யாவிலும் இராணுவ பலம், பெரும் பரப்புகள் அல்லது சிறுபான்மைத் தேசிய இனங்களையும் சீனவையும் இன்ன பிறவற்றையும் சூறையாடுவதற்கான தனி வசதிகள் முதலியவற்றுலான ஏகபோகம், நவீன கால, நூதன நிதி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு ஓரளவு இணையாகவும் ஓரளவு பதிலாகவும் செயல்படுகிறது.) இங்கிலாந்தின் ஏகபோக நிலை பல பத்தாண்டுகளாய் எதிர்ப்பின்றியே இருக்க முடிந்ததற்கு இந்த வித்தியாசமே காரணமாகும். நவீன கால நிதி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு மூர்க்கத்தனமான எதிர்ப்பு மூண்டு வருகிறது; ஏகாதிபத்திய யுத்தங்களுக்கான சகாப்தம் தொடங்கிவிட்டது. அந்நாட்களில் ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்குப் பல பத்தாண்டுகளுக்கு லஞ்சம் கொடுத்துக் கெடுத்து வருவது சாத்தியமாயிருந்தது. இப்பொழுது இது அசாத்தியமாகிவிடவில்லை என்றுலுங்கூட எதிர்பார்க்கத்தக்கதல்ல. ஆனுல் ஏகாதிபத்திய "வல்லரசு" ஒவ்வொன்றும் (1848-68ல் இங்கிலாந்தில் முடிந்ததைவிட) சிறிய பிரிவான "தொழிலாளர் பிரபுக்குலத்தினருக்கு" லஞ்சம் தர முடிகிறது, தரவும் செய்கிறது. முன்பெல்லாம் "முதலாளித்துவத் தொழிற் கட்சி" — எங்கெல்சின் பொருட்செறிவு வாய்ந்த தொடரில் சொல்வதெனில்—ஒரேயொரு நாட்டில் மட்டும்தான் தோன்ற முடிந்தது, ஏனெனில் இந்த ஒரு நாடு மட்டும்தான் ஏகபோக நிலைக்குரியதாய் இருந்தது. ஆனுல் இங்கு அந்தக் கட்சி நீண்ட காலத்துக்கு நீடிக்க முடிந்தது. இப்பொழுது ஏகாதிபத்திய நாடுகள் யாவற்றிலும் "முதலாளித்துவத் தொழிற் கட்சி" தவிர்க்க முடியாததும் இந்நாடுகளுக்குரிய குணுதிசயமாகவும் இருந்துவருகிறது; ஆனுல் கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வதற்காக இந்நாடுகள் மூர்க்கமாய்ப் போராடுவதால், இத்தகைய ஒரு கட்சி அதிக

காலத்துக்குப் பல நாடுகளில் வெற்றியடையுமென எதிர் பார்ப்பதற்கில்லை. ஏனெனில் டிரஸ்டுகளும் நிதியாதிக்கக் கும்பலும் உயர்ந்த விலைகளும் இன்ன பிறவும் மேல் மட்டத்துப் பிரிவில் ஒரு சிலருக்கு லஞ்சமளித்து விலைக்கு வாங்க வகை செய்யும் அதே நேரத்தில், பாட்டாளி வர்க்கத் தினரிலும் பகுதியளவு பாட்டாளி வர்க்கத்தினராய் இருப் போரிலும் மிகப் பெருந்திரளானோரை மேலும் மேலும் ஒடுக்கி நசுக்கி ஓட்டாண்டிகளாக்கி வாட்டி வதைத்து வரு கின்றன.

ஒருபுறத்தில் சலுகை படைத்த செல்வமிக்க ஒருசில தேசங்களை மனிதகுலத்தின் பிறபகுதியின் இரத்தத்தை உறிஞ் சும் "நிரந்தரப்" புல்லுருவிகளாய் மாற்றுவதற்கும், நவீன இராணுவத் துறை வழங்கிடும் படுநாசத்துக்குரிய சிறந்த ஆயுதங்களின் துணை கொண்டு நீக்ரோக்களையும் இந்தியர் களையும் ஏனையோரையும் அடக்கியொடுக்கிச் சுரண்டிக் கொழுத்துச் சுகவாழ்வு நடத்தமுயலும் முதலாளித்துவ வர்க் கத்துக்கும் சந்தர்ப்பவாதிகளுக்குமுள்ள போக்கு செயல்படு கிறது. மறுபுறத்தில் முன்னிலும் கடுமையாக ஒடுக்கப்பெற்று, ஏகாதிபத்திய யுத்தங்களின் முழுச் சுமையாலும் வருத்தப் படும் மக்கள் திரள் இந்த அடிமைத் தளைகளைத் தகர்த்தெறி யவும் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்க்கவும் போராடும் போக்கு செயல்படுகிறது. இந்த இரு போக்குகளிடை யிலான போராட்டத்திலேதான் தவிர்க்க முடியாதபடி இப் பொழுது தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியுற்றாக வேண்டும். ஏனெனில் முதலாவது போக்கு தற்செயலாய்த் தோன்றிவிட வில்லை; அதற்குப் பொருளாதார "வேர்கள்" இருக்கின்றன. எல்லா நாடுகளிலுமே முதலாளித்துவ வர்க்கம் ஏற்கனவே தனக்கு சமூக-தேசியவெறியர்களது "முதலாளித்துவத் தொழிற் கட்சிகளைத்" தோற்றுவித்து, ஊட்டமளித்து நிலை பெறச் செய்துகொண்டுவிட்டது. திட்டவட்டமாய் உருவாகி விட்ட ஒரு கட்சிக்கும்—உதாரணமாய் இத்தாலியில் முழுக்க முழுக்க சமூக-ஏகாதிபத்தியக் கட்சியாக இருந்து வரும் பிஸ்ஸொலாட்டியின் கட்சிக்கும்—பகுதியளவுக்கே உருவாகி யுள்ள கட்சியையொத்த நிறுவன அமைப்புக்கும்—உதாரணமாய் பத்ரேசவ்கள், குவொஸ்தியோவ்கள், பூல்க்

கின்கள், ச்ஹெறயீத்ஸேக்கள், ஸ்கோபெலெவ்கள் முதலான கோஷ்டிக்கும் — இருக்கும் வேறுபாடு பொருட்படுத்தக் கூடிய ஒரு வேறுபாடல்ல. முக்கிய உண்மை என்னவெனில், பொருளாதார வழியில், தொழிலாளர் பிரபுக்குலம் ஒன்று பிளந்து சென்று முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்துவிடும் நிகழ்ச்சி முதிர்ச்சியுற்று எதார்த்த நிலைவர மாகிவிட்டது. இந்தப் பொருளாதார உண்மை, வர்க்க உறவுகளில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல், எந்த விசேஷ ''இடர்ப்பாடுமின்றி'' ஏதேனும் ஒருவித அரசியல் வடிவம் பெற்றுவிடும்.

மேற்கூறிய பொருளாதார அடிப்படையின்மீது நவீன கால முதலாளித்துவத்தின் அரசியல் ஏற்பாடுகளான பத்திரிகைகள், பாராளுமன்றம், கழகங்கள், காங்கிரசுகள் முதலான வை உயர்குல மனப்பான்மையும் பணிவுமுடைய சீர்திருத்த வாத, தேசபக்த அலுவலகச் சிப்பந்திகளுக்கும் தொழிலா ளர்களுக்கும், பொருளாதாரச் சலுகைகளுக்கும் ரொட்டித் துண்டங்களுக்கும் ஏற்றதான அரசியல் சலுகைகளையும் ரொட்டித் துண்டங்களையும் படைப்பித்திருக்கின்றன. சர்க் காரிலோ, இராணுவ-தொழில் கமிட்டியிலோ, பாராளு மன்றத்திலோ, பல்வேறு வகையான கமிஷன்களிலோ, சட்ட முறைப்படி வெளிவரும் ''கவுரவமான'' பத்திரிகைகளின் ஆசிரியர் குழாம்களிலோ, இதேபோல கவுரவமான ''முதலா ளித்துவ வர்க்கத்துக்குப் பணிந்து நடக்கும்'' தொழிற் சங் கங்களின் நிர்வாகக் குழுக்களிலோ கொழுத்த சம்பளத்துக் குரிய சொகுசான பதவிகள் தரப்படுகின்றன—ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்த இரையை வைத்துத் தான் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிகளின்'' பிரதிநிதி களையும் ஆதரவாளர்களையும் கவர்ந்திழுத்துச் சன்மானம் அளிக்கின்றனர்.

அரசியல் ஜனநாயகத்தின் இயங்கு அமைப்பும் இதே திசையில்தான் செயல்படுகிறது. நாம் வாழும் இக்காலத்தில் தேர்தல்களின்றி எதுவும் நடைபெறாது; மக்கள் திரளின்றி அணுவும் அசையாது. அச்செழுத்துக்கும் பாராளுமன்ற முறைக்குமுரிய இச்சகாப்தத்தில், புகழ்ச்சி, பொய், பித்த லாட்டம், செல்வாக்கு மிக்க புதிய மோஸ்தராகிவிட்ட

மினுக்குச் சொற்களாலான வாய்ச்சவடால், தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்ப்பதற்கான புரட்சிப் போராட்டத்தைத் தவிர்க்கும் வரை அவர்களுக்கு எல்லா வகையான சீர்திருத்தங்களையும் வசதிகளையும் செய்து தருவதாய்க் கண்ணை மூடிக் கொண்டு வாக்குறுதியளித்தல் ஆகிய யாவும் அடங்கலாய் நன்கு அமைந்து பாங்குடன் நிர்வகிக்கப் படும் விரிவான வலைப்பின்னல் அமைப்பு இல்லாமல் மக்கள் திரளினரைத் தன்னைப் பின்பற்றும்படிச் செய்வது சாத்தியமன்று. ஆங்கிலேய அமைச்சர் லாயிட் ஜார்ஜின் பெயரில் இந்த அமைப்பை லாயிட்-ஜார்ஜியம் என்றழைக்கலாம். இவர் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிக்கான'' முதற்பெரும் நாட்டில் இவ்வமைப்பின் உன்னதமான கைதேர்ந்த பிரதிநிதிகளில் ஒருவராவார். முதல் தர முதலாளித்துவச் சூழ்ச்சிக்காரரும், சாமர்த்தியமான அரசியல்வாதியும், நீங்கள் கேட்க விரும்பும் எந்த விதச் சொற்பொழிவையும், தொழிலாளர் கூட்டத்துக்குரிய பு-ர்-ர்-ரட்சிகரச் சொற்பொழிவுகளையுங்கூட, நிகழ்த்தக்கூடிய செல்வாக்கு மிகுந்த பேச்சாளரும், சொன்னபடி கேட்கும் தொழிலாளர்களுக்கு சமூக சீர்திருத்தங்களின் வடிவில் (இன்ஷூரன்ஸ் முதலான வசதிகளின் வடிவில்) பெரிய பெரிய ரொட்டித் துண்டங்கள் கிடைக்கச் செய்யக் கூடியவருமான லாயிட் ஜார்ஜ் முதலாளித்துவ வர்க்கத்துக்குச் சிறப்பான முறையில் சேவை புரிகிறார்;* அதுவும் தொழிலாளர்களிடையே சென்று முதலாளித்துவத்துக்குச் சேவை புரிகிறார். முதலாளித்துவ வர்க்கத்துக்கு அதன் செல்வாக்கைப் பாட்டாளி வர்க்கத்தினுள் பரவச் செய்வதுதான் மிகவும் தேவைப்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தில்தான் அதற்கு மக்கள் திரளைத் தார்மிக வழியில்

---

* லாயிட் ஜார்ஜின் அரசியல் எதிராளியான டோரி கட்சியாளர் ஒருவர் ''டோரியின் கண்ணோட்டத்தில் லாயிட் ஜார்ஜ்'' என்னும் தலைப்பில் ஆங்கிலேயப் பத்திரிகை ஒன்றில் எழுதிய ஒரு கட்டுரையை அண்மையில் நான் படித்தேன். யுத்தம் இந்த எதிராளியின் கண்களைத் திறந்துவிட்டு, லாயிட் ஜார்ஜ் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எவ்வளவு சிறப்பான சேவை புரிகிறார் என்பதை உணரச் செய்தது! டோரிகள் அவருடன் ராஜி செய்து கொண்டுவிட்டனர்!

தனக்கு அடிபணிய வைப்பது மிகவும் கடினமாயுள்ளது. லாயிட் ஜார்ஜ் குறிப்பாய் இதே பாட்டாளி வர்க்கத்திடம் தான் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கை எடுத்துச் சென்று பரவச் செய்கிறார்.

இந்த லாயிட் ஜார்ஜுக்கும் ஷெய்டமன்கள், லேகின்கள், ஹெண்டர்சன்கள், ஹைண்ட்மன்கள், பிளெஹானவ்கள், ரெனோடேல்கள் முதலானோருக்கும் இடையே அப்படி பெரிய வித்தியாசமா இருக்கிறது? பின்னவர்களில் சிலர் மார்க்சின் புரட்சிகர சோஷலிசத்துக்குத் திரும்பி வந்துவிடுவார்கள் என்பதாக ஆட்சேபனை எழுப்பலாம். சிலர் திரும்புவது சாத்தியமே. ஆனால் இப்பிரச்சினையை அதன் அரசியல், அதாவது வெகுஜன, கோணத்திலிருந்து பார்க்கையில் இதனால் ஏற்படும் வித்தியாசம் அற்பமானதே. தற்போது சமூக-தேசிய வெறித் தலைவர்களாய் இருப்போரில் சிலர் பாட்டாளி வர்க்கத்துக்குத் திரும்பி வரக் கூடும். ஆனால் சமூக-தேசியவெறி அல்லது சந்தர்ப்பவாத (இரண்டும் ஒன்றேதான்) போக்கு மறையப் போவதுமில்லை, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் ''திரும்பிவரப்'' போவதுமில்லை. எங்கெல்லாம் தொழிலாளர்களிடையே மார்க்சியம் செல்வாக்கு மிக்கதாயுள்ளதோ, அங்கு இந்த அரசியல் போக்கு, இந்த''முதலாளித்துவத் தொழிற் கட்சி'' மார்க்சின் பெயரில்தான் ஆணையிட்டுச் செயல் புரியும். இதைச் செய்யக் கூடாதென அதற்குத் தடை விதிக்க இயலாது. வர்த்தகக் கம்பெனி ஒன்று எந்தவொரு முத்திரையையோ, குறியையோ, விளம்பரத்தையோ உபயோகிக்கலாகாதெனத் தடை விதிப்பது எப்படி சாத்தியமற்றதோ அதே போலதான் இதுவும். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையே செல்வாக்கு பெறும் புரட்சிகரத் தலைவர்கள் இறந்தபின், அவர்களுடைய பகைவர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ஏமாற்றும் பொருட்டு அவர்களது பெயர்களைத் தமதாக்கிக் கொண்டு பயன்படுத்த முயலுவது வரலாற்றில் எப்பொழுதுமே சகஜமாய் இருந்துள்ளது.

அரசியல் நிகழ்ச்சி என்ற முறையில் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிகள்'' முதன்மையான முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் ஏற்கனவே நிறுவப் பெற்றுவிட்டன. இக்கட்சிகளை—இவை கட்சிகளாய் இராமல் கோஷ்டிகள், போக்குகள்

முதலியனவாய் இருந்தாலும் ஒன்றுதான்—எதிர்த்து உறுதியாகவும் விடாப்பிடியாகவும் நெடுகிலும் போராட்டம் நடத்தினால் ஒழிய, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கோ, மார்க்சியத்துக்கோ, சோஷலிசத் தொழிலாளர் இயக்கத்துக்கோ வழி இல்லை. ருஷ்யாவிலுள்ள ச்ஹெய்த்ஸே கோஷ்டியும்[99] நாஷே தேலோவும் கோலஸ் துருதாவும்[100], வெளிநாடுகளிலுள்ள நிறுவனக் கமிட்டிக்காரர்களும் இத்தகைய கட்சியின் பல்வேறு வகைகளேயன்றி வேறல்ல. சமுதாயப் புரட்சிக்கு முன்னதாகவே இக்கட்சிகள் மறைந்துவிடுமென நினைக்கச் சிறிதும் நியாயம் இல்லை. இதற்கு மாறாக, புரட்சி நெருங்க நெருங்க, அது மேலும் தீவிரமாய் மூண்டெழுந்து, அதன் வளர்ச்சியில் மாற்றங்களும் பாய்ச்சல்களும் மேலும் திடுதிப்பென்றும் வன்மை மிக்கதாகவும் ஆக ஆக, சந்தர்ப்பவாதக் குட்டிபூர்ஷுவா பெருக்கை எதிர்த்துப் புரட்சிகர வெகுஜனப் பெருக்கு நடத்தும் போராட்டத்துக்குத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள பங்கும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்கிறது. காவுத்ஸ்கிவாதம் சுயேச்சையான ஒரு தனிப் போக்கல்ல, ஏனெனில் அதற்கு மக்கள் திரளிடத்தோ, முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் ஓடிவிட்ட சலுகை படைத்த பிரிவினரிடத்தோ வேர்களில்லை. ஆனால் காவுத்ஸ்கிவாதத்தின் அபாயமெல்லாம் கடந்த காலச் சித்தாந்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பாட்டாளி வர்க்கத்தினை "முதலாளித்துவத் தொழிற் கட்சி"யுடன் இணக்கம் பெறச் செய்வதற்கும், அக்கட்சியுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும், இவ்வழியில் அக்கட்சியின் செல்வாக்கை உயர்த்தவும் அது மேற்கொள்ளும் முயற்சிகளில் அடங்கியிருக்கிறது. நாடறிந்த சமூக-தேசியவெறியர்களை இப்பொழுது மக்கள் திரள் பின்தொடர்ந்து செல்வதில்லை: இங்கிலாந்தில் தொழிலாளர் பொதுக் கூட்டங்களில் லாயிட் ஜார்ஜ் பேச முடியாதபடி எதிர்ப்புக் கூச்சல் போடப்பட்டிருக்கிறது; ஹைண்ட்மன் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார்; ரெனொடேல்களும் ஷெய்டமன்களும் பத்ரேசவ்களும் குவொஸ்தியோவ்களும் போலீசாரது பாதுகாப்பில் இருக்க வேண்டியதாகியுள்ளது. காவுத்ஸ்கிவாதிகள் மறைமுகமாய் சமூக-தேசியவெறியர்களுக்குப்

பாதுகாப்பும் ஆதரவும் அளிப்பதானது மேலும் அதிக அளவுக்கு அபாயகரமானதாகும்.

''மக்கள் திரள்'' என்பதாகப் பேசுவது காவுத்ஸ்கிவாதத்தின் சகஜமான குதர்க்கவாதங்களில் ஒன்றாகும். மக்கள் திரளிடமிருந்தும் வெகுஜன நிறுவனங்களிடமிருந்தும் தாம் முறித்துக் கொள்ள விரும்பவில்லை என்று காவுத்ஸ்கிவாதிகள் கூறுகிறார்கள்! ஆனால் எங்கெல்ஸ் இப்பிரச்சினையை எப்படி அணுகினார் என்பதைக் கவனிக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயத் தொழிற் சங்க ''வெகுஜன நிறுவனங்கள்'' முதலாளித்துவத் தொழிற் கட்சியின் பக்கம் இருந்தன. இக்காரணத்தால் மார்க்சும் எங்கெல்சும் அதனுடன் இணங்கிச் சென்றுவிடவில்லை; அதற்குப் பதில் அவர்கள் அதை அம்பலப்படுத்தி வந்தனர். முதலாவதாக, தொழிற் சங்க நிறுவனங்கள் பாட்டாளி வர்க்கத்தில் ஒரு சிறுபான்மைப் பகுதியை மட்டுமே தம்முள் நேரடியாகக் கொண்டிருந்தன என்பதை அவர்கள் மறக்கவில்லை. அன்று இங்கிலாந்தில், தற்போது ஜெர்மனியில் இருப்பது போலவே, பாட்டாளி வர்க்கத்தினரில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படாதோர்தான் நிறுவன ஒழுங்கமைப்புடையோராய் இருந்தனர். முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்தினரில் பெரும்பான்மையோரை நிறுவன ஒழுங்கமைப்பு பெறும்படிச் செய்ய முடியுமென யாரும் மெய்யாகவே கருத முடியாது. இரண்டாவதாக—இதுவே இங்குள்ள பிரதான விஷயம்—முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையல்ல, அதன் கொள்கையின் மெய்யான, எதார்த்த உள்ளடக்கமே ஆகும். அதன் கொள்கை மக்கள் திரளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா, அது அவர்களுக்குச் சேவை புரிகிறதா, அதாவது அவர்களை முதலாளித்துவத்திலிருந்து விடுவிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளதா, அல்லது சிறுபான்மையோரின் நலன்களையும் முதலாளித்துவத்துடனான அதன் இணக்கத்தையும் பிரதிபலிக்கிறதா? பின்னதுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த நிலைமை; தற்போது ஜெர்மனியிலும் வேறு பல நாடுகளிலும் இருக்கும் நிலைமை.

எங்கெல்ஸ் சலுகை படைத்த சிறுபான்மையோரான

பழைய தொழிற் சங்கங்களது ''முதலாளித்துவத் தொழிற் கட்சியையும்'' மெய்யான பெரும்பான்மையோரான ''கீழ் மட்டத்துப் பெருந்திரளையும்'' வேறுபடுத்தி, ''முதலாளித் துவ உயர்குல மனப்பான்மையால்'' நச்சுப்படுத்தப்படாத பின்னவர்களுக்கே வேண்டுகோள் விடுக்கிறார். இதுவே மார்க் சியப் போர்த்தந்திரத்தின் சாராம்சம்!

பாட்டாளி வர்க்கத்தில் திட்டவட்டமாய் எந்த அள வுள்ள பகுதி சமூக-தேசியவெறியர்களையும் சந்தப்பவாதி களையும் பின்பற்றுகிறது, இனி பின்பற்றப் போகிறது என்று நம்மாலோ அல்லது வேறு எவராலுமோ கணக்கிட்டுக் கூறி விட முடியாது. இது போராட்டத்தின் மூலம்தான் புலப் படுத்தப்படும்; சோஷலிசப் புரட்சியால் மட்டும்தான் இது திட்டவட்டமாய் முடிவு செய்யப்படும். ஆனால் ஏகாதிபத் திய யுத்தத்தில் ''தாயகப் பாதுகாப்பாளர்கள்'' சிறுபான் மையோரை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகவே, நாம் சோஷலிஸ்டு களாய்த் தொடர்ந்து இருக்க விரும்பினால், கீழ்மட்டத் துக்கும் ஆழ்மட்டத்துக்கும், அதாவது மெய்யான மக்கள் திரளிடையே செல்வது நமது கடமையாகும். சந்தர்ப்ப வாதத்துக்கு எதிரான போராட்டத்தின் முழுப் பொருளும் உள்ளடக்கமும் இதுவேதான். சந்தர்ப்பவாதிகளும் சமூக-தேசியவெறியர்களும் உண்மையில் மக்கள் திரளுடைய நலன் களுக்குத் துரோகமிழைக்கின்றனர், விலை பேசி அவற்றை விற் கின்றனர் என்பதையும், தொழிலாளர்களில் ஒரு சிறுபான் மையோரின் தற்காலிகச் சலுகைகளைப் பாதுகாத்து நிற் கிறார்கள் என்பதையும், முதலாளித்துவக் கருத்துக்களையும் செல்வாக்கையும் பரப்பும் சாதனங்களாவர் என்பதையும், உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டாளிகளும் கையாட்களுமாவர் என்பதையும் அம்பலம் செய்வதன்மூலம் நாம் மக்கள் திரளுக்கு அவர்களது மெய்யான அரசியல் நலன்களை உணர்ந்து கொள்வதற்கும், ஏகாதிபத்திய யுத் தங்கள், ஏகாதிபத்தியப் போர்நிறுத்த உடன்பாடுகள் இவற் றாலான நீண்டநெடிய துயரப் பாதை நெடுகிலும் சோஷ லிசத்துக்காகவும் புரட்சிக்காகவும் போராடுவதற்கும் கற்றுத் தருகிறோம்.

சந்தர்ப்பவாதத்திடமிருந்து பிளந்து செல்வது தவிர்க்க முடியாதது, இன்றியமையாதது என்பதை மக்கள் திரளுக்கு விளக்கிக் கூறுவதுதான், சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து அயராத போராட்டம் நடத்துவதன் மூலம் அவர்களுக்குப் புரட்சிக்கான போதம் பெறும்படிச் செய்வதுதான், யுத்த அனுபவங்களைத் தேசிய-மிதவாதத் தொழிற் கட்சிக் கொள்கையின் பரிபூரண இழிநிலையை மூடிமறைப்பதற்காக இல்லாமல், அதனை அம்பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதுதான் உலகத் தொழிலாளர் இயக்கத்தில் பின்பற்ற வேண்டிய ஒரேயொரு மார்க்சிய வழி.

அடுத்த கட்டுரையில், இந்த வழியைக் காவுத்ஸ்கிவாதத்திலிருந்து வேறுபடுத்தும் பிரதான இயல்புகளைத் தொகுத்துக் கூற முயலுவோம்.

1916 அக்டோபரில்
எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 30,
பக்கங்கள் 163-79

1916 டிசம்பரில்,
ஸ்போர்னிக் சொத்சியால்-டெமக்ராத்தா,
இதழ் 2ல் வெளிவந்தது

ஒப்பம் : நி. லெனின்

■

ஒடுகாலிகளை முதலாளித்துவ வர்க்கம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறது

■

எங்களுடைய வானொலி நிலையங்கள் கார்னர்வானிலிருந்தும் (பிரிட்டன்) பாரிசிலிருந்தும் ஏனைய ஐரோப்பிய மையங்களிலிருந்தும் வரும் செய்திகளை இடைமறிக்கின்றன. பாரிஸ் இன்று உலக ஏகாதிபத்தியக் கூட்டணியின் மையமாய் இருந்து வருகிறது; ஆகவே அதன் வானொலிச் செய்திகள் அடிக்கடி விசேஷக் கவனத்துக்குரியனவாய் இருக்கின்றன. உலக ஏகாதிபத்தியத்தின் இந்த மையத்திலுள்ள அரசாங்க வானொலி நிலையம் சில நாட்களுக்கு முன்பு, செப்டம்பர் 13ல் பிரபல ஓடுகாலியும் இரண்டாவது அகிலத்தின் தலைவருமான கார்ல் காவுத்ஸ்கியின் புதிய போல்ஷிவிக்-எதிர்ப்புப் புத்தகம் ஒன்று வெளியாகியிருக்கும் செய்தியை அறிவித்தது.

லட்சாதிபதிகளும் கோடீஸ்வரர்களும் தமது அரசாங்க வானொலி நிலையத்தை வீணில் உபயோகிக்க மாட்டார்கள். காவுத்ஸ்கியின் புதிய துணிகரப் போர்ப் பிரகடனத்தை விளம்பரப்படுத்துவது அவசியமென அவர்கள் கருதுகின்றனர். முன்னேறிச் செல்லும் போல்ஷிவிசப் பெருக்கினைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் அவர்கள் எதையும் பற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது—சிறு துரும்பையுங்கூட, காவுத்ஸ்கியின் புத்தகத்தையுங்கூட பற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. போல்ஷிவிக் பிரசாரத்துக்கு இவ்வளவு அற்புதமாய் உதவுவதற்காக, காவுத்ஸ்கியின் அற்பவாதப் போல்ஷிவிக்-எதிர்ப்பை ஏளனத்துக்குரியதாக்குவதற்கு நமக்குத் துணை புரிவதற்காக பிரெஞ்சு லட்சாதிபதிகளுக்கு நமது உளம் கனிந்த நன்றி.

ஜெர்மன் சமூக-தேசியவெறியர்களும் கார்ல் லீப்க்னெஹ்ட்டின், ரோஸா லுக்சம்பர்கின் கொலைகாரர்களுமானோரின் செய்தியேடான *Vorwärts*சின் செப்டம்பர் 7 இதழ் இன்று, செப்டம்பர் 18ல் எனக்குக் கிடைத்தது. காவுத்ஸ்கியின்

புதிய புத்தகம் (பயங்கரவாதமும் கம்யூனிசமும்) குறித்து அதில் ஃபிரீட்ரிஹ் ஷ்டம்ப்ஃபரின் கட்டுரை ஒன்று இருக்கிறது. இந்தப் புத்தகத்திலிருந்து பல வாசகங்களை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. ஷ்டம்ப்ஃபரின் கட்டுரையைப் பாரிஸ் வானொலிச் செய்திகளுடன் ஒத்திட்டுப் பார்க்கையில் பின்னது முன்னதின் அடிப்படையிலேயே அனேகமாய் அமைந்ததென் பதைக் காண்கிறோம். ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத் தாரின் மெய்க்காவலரும் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளின் கொலை காரர்களுமான ஷெய்டமன்களும் நோஸ்கேகளும், காவுத்ஸ்கி யின் புத்தகத்தை மெச்சிப் புகழ்ந்து சர்வதேசக் கம்யூனி சத்தை எதிர்த்துப் போராடுவதில் ஆன்டான்ட் ஏகாதி பத்தியவாதிகளுடன் கூடிக் கொண்டுவிடுகின்றனர். அறிவு புகட்டும் காட்சிதான்! காவுத்ஸ்கியை நான் முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடி என்று அழைத்தபோது (பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும் என்னும் எனது புத்தகத்தில்) எங்கள் மென்ஷிவிக்குகளுக்கு, பெர்ன் (மஞ் சள்) அகிலத்தின்[101] அந்த முன்மாதிரியான பிரதிநிதி களுக்கு, தமது ஆத்திரத்தை வெளியிடப் போதிய அளவு கடுமையான சொற்கள் கிடைக்கவில்லை.

ஆனால், கனவான்களே, நீங்கள் எவ்வளவுதான் ஆத்திரப் பட்டாலும் அதுதான் உண்மை. *Vorwärts*சின் ஷெய்டமன்களும் ஆன்டான்ட் கோடீஸ்வரர்களும் காவுத்ஸ்கியைப் போற்றிப் புகழ்ந்து உலக போல்ஷிவிசத்துக்கு எதிரான போராட் டத்தில் அவரை ஓர் ஆயுதமாய்க் கொள்ளும்போது நிச்சய மாய் அவர்கள் எனக்கு உடந்தையாய் இருக்கவில்லை. முத லாளித்துவ வர்க்கம் சம்பந்தமாய்க் காவுத்ஸ்கி—அவர் இதை உணராவிட்டாலுங்கூட, விரும்பாவிட்டாலுங்கூட— நான் அவரை எப்படி விவரித்தேனே அதே போலத்தான் இருக்கிறார் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

போல்ஷிவிக்குகளுக்கு எதிரான அவருடைய குற்றச் சாட்டுகளில் அதிகமாய் ''இடியென அதிர்பவை'' சில, சோஷ லிசத்தையும் புரட்சியையும் விட்டோடி அவர் தமது கொள் கைத் துறப்பில், மார்க்சியம் எனும் பெயருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும் இந்தக் கொள்கைத் துறப்பில், எவ் வளவு தூரம் சென்றுவிடுகிறார் என்பதைக் காட்டும்.

> ''போல்ஷிவிக்குகள் தாம் பறைசாற்றும் நோக்கங்களுக்கு நேர் விரோதமானவற்றையே முடிவில் எப்பொழுதும் வந்தடைகின்றனர் என்பதை காவுத்ஸ்கி விவரமாய் எடுத்துரைக்கிறார்'' என்று ஷ்டம்ப்ஃபர் எழுதுகிறார். ''அவர்கள் மரண தண்டனையை எதிர்த்து வந்தனர், ஆனால் இப்பொழுது வெகுஜன அளவில் சுட்டுக் கொன்று வருகின்றனர்....''

முதலாவதாய், புரட்சிக் காலத்தில் போல்ஷிவிக்குகள் மரண தண்டனையை எதிர்ப்பதாய்க் கூறுவது முழுக்க முழுக்கப் பொய்யாகும். முதன்முதல் போல்ஷிவிசம் வெளித்தோன்றியபோது, 1903ல் கட்சியின் இரண்டாவது காங்கிரசில், மரண தண்டனையை ஒழித்தல் அப்பொழுது வகுக்கப்பட்டு வந்த கட்சி வேலைத்திட்டத்தின் கோரிக்கைகளில் ஒன்றாக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் இது பின்வரும் கிண்டலான கேள்வியைத்தான் எழுப்பிற்றென்று நிகழ்ச்சிக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன: ''இரண்டாம் நிக்கலாய்க்கும் கூடவா?''. ஜார் மன்னனுக்கு மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென்ற பிரேரணையின் பேரில் வாக்கெடுப்பு கோரும் துணிவு 1903ல் மென்ஷிவிக்குகளுக்குங்கூட வரவில்லை. பிறகு 1917ல், கேரென்ஸ்கி அரசாங்கத்தின் காலத்தில் புரட்சிகர அரசாங்கம் எதனாலும் மரண தண்டனையைக் கைவிட முடியாது, குறிப்பிட்ட ஓர் அரசாங்கம் அதை எந்த வர்க்கத்துக்கு எதிராய்ப் பிரயோகிக்கிறது என்பதே கேள்வி என்று பிராவ்தாவில் நான் எழுதினேன். பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி தனது வெற்றிக்கு நெடுங்காலத்துக்கு முன்னதாகவே எதிர்ப்புரட்சியாளர்களைப் பொறுத்த மட்டில் மரண தண்டனையின் அவசியத்தைப் பகிரங்கமாய் ஏற்றுக்கொள்வதைக் காவுத்ஸ்கியால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவர் புரட்சி வழியில் சிந்தனை செய்வதையே மறந்துவிட்டார், குட்டிபூர்ஷுவாச் சந்தர்ப்பவாதத்தில் அந்த அளவுக்கு மூழ்கிப் போய்விட்டார். ''நேர்மையான'' காவுத்ஸ்கி நேர்மையான ஆளாகவும் நேர்மையான சந்தர்ப்பவாதியாகவும் இருந்து சிறிதும் மான வெட்கமின்றி தமது எதிராளிகள் குறித்து பொய்யுரைகளை எழுதுகிறார்.

இரண்டாவதாய், புரட்சி குறித்து சிறிதளவேனும் புரிந்து கொண்டவர் எவரும் இங்கு நாம் பொதுவில் புரட்சியைப் பற்றி விவாதிக்கவில்லை, பல்வேறு நாடுகளது மக்களும் கொலை புரியப்படும் இந்த மிகப் பெரிய ஏகாதிபத்தியப் படுகொலை யிலிருந்து வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு புரட்சியைப் பற்றியே விவாதிக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்வார். இது போன்ற ஒரு யுத்தத்திலிருந்து வளரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியானது நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கங் களைச் சேர்ந்த லட்சக் கணக்கான இராணுவ அதிகாரிகளது எதிர்ப்புரட்சி சதிகளும் தாக்குதல்களும் இல்லாததாய் இருக்குமெனக் கருத முடியுமா? மிகக் கொடூரமான ஓர் உள் நாட்டு யுத்தத்துக்கும் முதலாளித்துவ வர்க்கம் அந்நியத் துருப்புக்களைக் கொண்டுவந்து தொழிலாளர்களுடைய அர சாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகச் செய்யும் சதிகளுக்குமுரிய சகாப்தத்தில் இத்தகைய தாக்குதல்களுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சி ஒன்று மரண தண்டனை விதிக் காதிருக்குமெனக் கருத முடியுமா? படுமோசமான நகைக் கத்தக்க பகட்டாளர்களைத் தவிர ஏனைய எவரும் இக்கேள்வி களுக்கு எதிர்மறையிலேதான் பதிலளிப்பார். ஆனால் காவுத் ஸ்கி முன்பெல்லாம் போல இப்பொழுது பிரச்சினைகளை அவற் றின் ஸ்தூலமான வரலாற்றுச் சூழலில் பார்க்கும் திறனற்ற வராகிவிட்டார்.

மூன்றாவதாக. காவுத்ஸ்கியிற்கு இனி பகுத்தாயும் திற னில்லை என்றால், அவர் போல்ஷிவிக்குகளைப் பற்றிப் பொய் களை எழுதுகிறார் என்றால், சிந்தனை செய்யவோ நான்கு ஆண்டுக்கால யுத்தத்திலிருந்து எழும் ஒரு புரட்சியின் தனி இயல்புகளின் பிரச்சினையை எடுத்துரைக்கவோகூட அவரால் முடியவில்லையெனில்—குறைந்தது தம்மைச் சுற்றிலும் நடை பெறுவதை அவர் நெருங்கிச் சென்று பார்க்கவாவது செய் யலாமே. ஜெர்மனியெனும் ஜனநாயகக் குடியரசில் இரா ணுவ அதிகாரிகள் கார்ல் லீப்க்னெஹ்ட்டையும் ரோஸா லுக் சம்பர்கையும் கொலை புரிந்தது நிரூபிப்பது என்ன? நம்ப முடி யாதபடி சிறிதும் ஒவ்வாத இலேசான தண்டனை அளிக்கப் பட்ட இந்த அதிகாரிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடியது நிரூபிப்பது என்ன? திருவாளர் காவுத்ஸ்கியும்

அவருடைய ''சுயேச்சைக்'' கட்சி அனைத்தும் (பாட்டாளி வர்க்கத்திலிருந்துதான் இக்கட்சி சுயேச்சையானது, குட்டி பூர்ஷுவாத் தப்பெண்ணங்களைப் பொறுத்தவரை மிகவும் சார்புநிலையில்தான் இருக்கிறது) நீலக்கண்ணீர் வடித்து, கண்டனம் கூறி, அற்பத்தனமாய்ப் புலம்பி இவ்வழியில் இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழித்துவிடுவதைக் காண்கிறோம். இக்காரணத்தினால்தான் உலகெங்கும் புரட்சிகரத் தொழிலாளர்கள் எல்லோரும் மேலும் மேலும் காவுத்ஸ்கிகளையும் லொங்கேக்களையும் மக்டொனல்டுகளையும் டுராட்டிகளையும் விட்டுவிலகிக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொள்கிறார்கள். ஏனெனில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவைப்படுவது எதிர்ப்புரட்சியின் மீதான வெற்றியே அன்றி, அதைப் பற்றிய வக்கில்லாத ''கண்டனம்'' அல்ல.

நான்காவதாக. ''பயங்கரவாதத்தைப்'' பற்றிய பிரச்சினை காவுத்ஸ்கியின் புத்தகத்துக்கு அடிப்படையாய் இருப்பதாய்த் தெரிகிறது. புத்தகத்தின் தலைப்பிலிருந்தே இது தெளிவாய்ப் புலனாகிறது. மற்றும் ''கம்யூனுடைய அடிப்படைக் கோட்பாடு அனைத்து மக்கள் வாக்குரிமையே அன்றி, பயங்கரவாதமல்ல என்று காவுத்ஸ்கி வலியுறுத்துவது முற்றிலும் சரியானதே'' என்று ஷ்டம்ப்ஃபர் கூறுவதிலிருந்தும் இது புலனாகிறது. ''அடிப்படைக் கோட்பாடு'' பற்றிய இந்தப் பேச்செல்லாம் மார்க்சியத்தை முற்றிலும் கேலிக்குரியதாக்குவதே ஆகுமென்பதைத் தெளிவுபடுத்த பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும் என்ற எனது புத்தகத்தில் நிறைய சான்றுகள் அளித்துள்ளேன். இங்கே எனது நோக்கம் வேறு. ''பயங்கரவாதம்'' என்னும் பொருள் பற்றிய காவுத்ஸ்கியின் ஆராய்ச்சிகள் எந்த அளவுக்கு மதிப்புள்ளவை, யாருக்கு, எந்த வர்க்கத்துக்கு அவை பணி புரிகின்றன என்பதைத் தெளிவுபடுத்த மிதவாத எழுத்தாளர் ஒருவரின் சிறிய கட்டுரை ஒன்றின் முழு வாசகத்தையும் இங்கே மேற்கோளாய்த் தருகிறேன். புதிய குடியரசு (*The New Republic*) என்ற மிதவாத அமெரிக்கச் சஞ்சிகைக்கு (1919, ஜூன் 25) எழுதப்பட்ட ஒரு கடிதமாகும் இது. பொதுவாகக் குட்டிபூர்ஷுவாக் கருத்தோட்டத்தைக் கொண்ட சஞ்சிகை இது. ஆயினும் இந்தக் கருத்தோட்டத்தைப் புரட்சிகர

சோஷலிசமாகவோ, மார்க்சியமாகவோ முன்வைக்கவில்லை யாதலால் இது காவுத்ஸ்கியின் எழுத்துக்களைவிட விரும்பத் தக்கதே ஆகும்.

இந்தக் கடிதத்தின் முழு வாசகம்:

மானெர்ஹேமும் கல்ச்சாக்கும்

ஐயா: நேச நாட்டு அரசாங்கங்கள் ருஷ்யாவின் சோவியத் அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுத்துள் ளன. அவை கூறும் காரணங்கள்:

1. சோவியத் அரசாங்கம் ஜெர்மனியை ஆதரிப் பதாய் இருக்கிறது, அல்லது இருந்தது.

2. சோவியத் அரசாங்கம் பயங்கரவாதத்தின் அடிப்படையில் அமைந்தது.

3. சோவியத் அரசாங்கம் ஜனநாயகமானதல்ல, ருஷ்யா மக்களைப் பிரதிநித்துவம் செய்யவில்லை.

ஆனால் ஜெனரல் மானெர்ஹேமின் சர்வாதிகாரத் தின் கீழுள்ள தற்போதைய வெள்ளைப்படை பின் லாந்து அரசாங்கத்தை நேச நாட்டு அரசாங்கங்கள் பின்வருவனவற்றையும் மீறி நெடுங் காலத்துக்கு முன்பே அங்கீகரித்துவிட்டன:

1. பின்லாந்து சோஷலிசக் குடியரசை நசுக்க வெள்ளைப்படையினருக்கு ஜெர்மன் துருப்புக்கள் உதவின; ஜெனரல் மானெர்ஹேம் கெய்ஸருக்கு மீண்டும் மீண்டும் அனுதாபமும் மதிப்பும் தெரி வித்து தந்திச் செய்திகள் அனுப்பி வந்தார். ஆனால் சோவியத் அரசாங்கம் ருஷ்யப் போர்முனையில் துருப்புக்களிடையே பிரசாரம் நடத்தி ஜெர்மன் அரசாங்கத்துக்குக் குழி தோண்டுவதில் முனைந்திருந் தது. பின்லாந்து அரசாங்கம் ருஷ்ய அரசாங்கத் தைக் காட்டிலும் அளவு கடந்து ஜெர்மன்-ஆதரவு அரசாங்கமாய் இருந்து வந்தது.

2. பின்லாந்தின் தற்போதைய அரசாங்கம் அதி காரத்துக்கு வந்ததும் திட்டமிட்டு ஒருசில நாட் களுக்குள் பழைய சோஷலிசக் குடியரசின் 16,700 உறுப்பினர்களைக் கொலை புரிந்தது, மேலும் 70,000 பேரைக் கைதுசெய்து பட்டினிக் காவல் முகாம்களில் அடைத்தது. ஆனால் 1918 நவம்பர் 1ஆம் தேதியுடன் முடிவுறும் ஓராண்டில் ருஷ்யாவில் மரணதண்டனைக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை — லஞ்ச ஊழல் மலிந்த சோவியத் அதிகாரிகளும் மற்றும்

எதிர்ப்புரட்சியாளர்களும் அடங்கலாய்—3,800 என்று அதிகாரபூர்வமாய் அறிவிக்கப்பட்டது. பின்லாந்து அரசாங்கம் ருஷ்ய அரசாங்கத்தைக் காட்டிலும் எண்ணற்ற மடங்கு அதிக பயங்கரவாத அரசாங்கமாகும்.

3. ஏறத்தாழ 90,000 சோஷலிஸ்டுகளைக் கொலை புரிந்த பிறகும், சிறையிலடைத்த பிறகும், சுமார் 50,000 பேரை எல்லைக்கு அப்பால் ருஷ்யாவுக்குள் விரட்டிய பிறகும்—பின்லாந்து சுமார் 4,00,000 வாக்காளர்களையே கொண்ட ஒரு சிறு நாடு—வெள்ளைப்படை அரசாங்கம் தேர்தல்கள் நடத்தப் போதிய அளவு நம்பகமான நிலைமை ஏற்பட்டுவிட்டதாய்க் கருதிற்று. எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி சோஷலிஸ்டுகள் பெரும்பான்மை அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் ஜெனரல் மானெர்ஹேம், விளாதிவஸ்தோக் தேர்தல்களுக்குப் பிற்பாடு நேச நாடுகள் என்ன செய்தனவோ அதே போல, இவர்களில் ஒருவரைக்கூட உறுப்பினராய் அமர அனுமதிக்கவில்லை. சோவியத் அரசாங்கம் இதற்கு மாறாய்ப் பயனுள்ள வேலை எதுவும் செய்யாமல் வாழ்க்கை நடத்துவோர் எல்லோரையும் வாக்குரிமை இல்லாதோராக்கிற்று. பின்லாந்து அரசாங்கம் ருஷ்ய அரசாங்கத்தைவிடப் பெருமளவுக்குக் குறைந்த ஜனநாயகத் தன்மையே கொண்டது.

ஜனநாயகம், புதிய அமைப்பு இவற்றின் அந்த மாபெரும் ஆதரவாளராகிய ஓம்ஸ்கின் அட்மிரல் கல்ச்சாக் குறித்தும் ஏறத்தாழ இதே கதையைத் தான் கூற வேண்டியிருக்கிறது. இந்த அட்மிரல் கல்ச்சாக்கிற்கு நேச நாட்டு அரசாங்கங்கள் ஆதரவளித்தும், பொருள்களும் போர்த் தளவாடங்களும் வழங்கியும் வந்துள்ளன; தற்போது அவரை அதிகாரபூர்வமாய் அங்கீகரிக்கும் நிலையில் உள்ளன.

சோவியத்துகளை அங்கீகரிக்கக் கூடாதென்பதற்கு நேச நாடுகள் வற்புறுத்தி வந்திருக்கும் ஒவ்வொரு வாதத்தையும் இவ்வாறு மேலும் அதிக வலிமையோடும் நேர்மையோடும் மானெர்ஹேமுக்கும் கல்ச்சாக்குக்கும் எதிராய்க் கையாளலாம். ஆயினும் பின்னவர்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள், பட்டினி கிடக்கும் ருஷ்யாவை எதிர்த்து முற்றுகை மேலும் மேலும் கடுமையாகி வருகிறது.

ஸ்டியூவர்ட் ச்சேஸ் [Stuart Chase]

வாஷிங்டன், டி. சி.

முதலாளித்துவ மிதவாதி ஒருவரால் எழுதப்பெற்ற இக் கடிதம், காவுத்ஸ்கிகள், மார்த்தவ்கள், செர்னேவ்கள், பிரான் டிங்குகள், மற்றும் பெர்ன் மஞ்சள் அகிலத்தின் ஏனைய வீரர் களது இழிநிலை அனைத்தையும், சோஷலிசத்துக்கு இவர்கள் இழைத்த துரோகத்தையும் தக்கபடி அம்பலம் செய்கிறது.

ஏனெனில் முதலாவதாக, பயங்கரவாதம், ஜனநாயகம் என்னும் பிரச்சினையில் சோவியத் ருஷ்யாவைப் பற்றி காவுத் ஸ்கியும் இந்த வீரர்கள் எல்லோரும் பொய் பேசுகிறார்கள். இரண்டாவதாக, அவர்கள் நிகழ்ச்சிப்போக்குகளை உலக அள வில் எதார்த்தத்தில் வளர்ச்சியுற்று வரும் மிகவும் தீவிரமான வர்க்கப் போராட்டத்தின் கண்ணோட்டத்திலிருந்து மதிப்பிடு வதற்குப் பதில், முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் முத லாளித்துவத்துக்குமிடையே நெருங்கிய பிணைப்பு இல்லாம லும் உலகில் வெள்ளைப்படையினர் இல்லாமலும் உலக முத லாளித்துவ வர்க்கம் அவர்களுக்கு ஆதரவளிக்காமலும் இன்ன பலவாறாகவும் இருந்திருக்குமாயின் அப்பொழுது எப்படி யெல்லாம் இருந்திருக்கலாமென்ற குட்டிபூர்ஷுவா அற்ப வாத ஏக்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து மதிப்பிடுகிறார்கள். மூன்றாவதாக, இந்த அமெரிக்கக் கடிதத்தைக் காவுத்ஸ்கி யும் அவரைச் சேர்ந்தோரும் எழுதி வருகிறவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், முதலாளித்துவ வர்க்கத்தாருக்குத் தொண்டூழியம் புரிவதே காவுத்ஸ்கி ஆற்றி வரும் எதார்த்தப் பாத்திரம் என்பது தெளிவாய் விளங்கும்.

சோவியத் அதிகாரம் பயங்கரவாதமானது, ஜனநாயக விரோதமானது என்பதாய்க் கூறி அதை நசுக்கிவிட முயலும் உலக முதலாளித்துவ வர்க்கம் மானெர்ஹேம்களுக்கும் கல்சாக்குகளுக்கும் ஆதரவளித்து வருகிறது. இவைதாம் உண்மைகள். ஆகவே பயங்கரவாதமென்றும் ஜனநாயகமென் றும் காவுத்ஸ்கியும் மார்த்தவும் செர்னேவும் ஏனையோரும் பாடி வரும் பாட்டு முதலாளித்துவ வர்க்கத்தாருடன் கூடிக் கொண்டு அவர்களுக்கு இசைவாய்ப் பாடப்படும் பாட்டே ஆகும். உலக முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காகவும் தொழிலாளர்களுடைய புரட்சியை நசுக்குவதற்காகவும்தான் இந்தப் பாட்டைப் பாடி வரு கிறது. ''நேர்மை உள்ளத்துடன்'', அதாவது தாம் மிகமிக

அசட்டுப் புத்தி கொண்டோராய் இருக்கும் காரணத்தால், இதே பாட்டைப் பாடி வரும் சோஷலிஸ்டுகளுடைய தனிப் பட்ட நேர்மையானது, இந்தப் பாட்டு ஆற்றி வரும் எதார்த் தப் பாத்திரத்தை எவ்வகையிலும் மாற்றிவிடவில்லை. ''நேர் மையான சந்தர்ப்பவாதிகளாகிய'' காவுத்ஸ்கிகளும் மார்த் தவ்களும் லொங்கேக்களும் இவர்களைச் சேர்ந்தோரும் ''நேர் மையான'' (முன்பின் கண்டிராத அவர்களது உறுதியின்மை யால்) எதிர்ப்புரட்சியாளர்கள் ஆகிவிட்டனர்.

இவைதாம் உண்மை.

உலக முதலாளித்துவமானது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தை எதிர்த்து ஓர் உள்நாட்டு யுத்தத்துக்கு ஏற்பாடு செய்திருக் கிறது, அதை நடத்தி வருகிறது, எனவேதான் அது ருஷ்யாவில் கல்சாக்குக்கும் தெனீக்கினுக்கும், பின்லாந்தில் மானெர் ஹேமுக்கும், காக்கசஸில் முதலாளித்துவ வர்க்கத்தின் அந்த அடிவருடிகளான ஜார்ஜிய மென்ஷிவிக்குகளுக்கும், போலந்தில் போலிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் போலிஷ் கேரென்ஸ்கிகளுக்கும், ஜெர்மனியில் ஷெய்டமன்களுக்கும், ஹங்கேரியில் எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் (மென்ஷிவிக்கு களுக்கும் முதலாளிகளுக்கும்), பிற இடங்களில் இன் னோரன்னவர்களுக்கும் ஆதரவளித்து வருகிறது என்பதை அமெரிக்க மிதவாதியான ஒருவர் உணர்ந்து கொள்கிறார்— இதை அவர் உணர்ந்து கொள்வதற்கு வேண்டிய தத்து வார்த்த ஞானம் அவரிடம் இருக்கிறது என்பதல்ல காரணம், நிகழ்ச்சிப் போக்குகளை அவர் போதிய அளவு விரிவான பார் வையுடன், உலக அளவில் காணும் கவனமான பார்வையாள ராய் இருப்பதே காரணமாகும்.

ஆனால் காவுத்ஸ்கி, வைரம் பாய்ந்த பிற்போக்கு அற்ப வாதியாய், உள்நாட்டு யுத்தத்தின் அபாயங்களையும் பயங் கரங்களையும் பற்றி தொடர்ந்து அழுது புலம்பிக் கொண்டிருக் கிறார்! புரட்சிகர உணர்வுக்குரிய சாயல் அனைத்தும், வர லாற்றுத் துறை எதார்த்தவாதத்தின் (ஏகாதிபத்திய யுத்தம் உள்நாட்டு யுத்தமாய் மாறுவது தவிர்க்க முடியாததென்ப தை உணர்வது அவசர அவசியமாகும்) சாயல் அனைத்தும் மறைந்தோடிவிட்டன. தவிரவும் இது முதலாளித்துவ வர்க் கத்தாருக்கு நேரடியாய் உடந்தையாய் இருப்பதே ஆகும்;

அவர்களுக்கு உதவி புரிவதே ஆகும்; அனைத்து உலகிலும் தற்போது நடைபெற்று வரும், அல்லது தெளிவாகவே தயார் செய்யப்பட்டு வரும் உள்நாட்டு யுத்தத்தில் காவுத்ஸ்கி மெய்யான நடப்பில் முதலாளித்துவ வர்க்கத்தாரின் பக்கம் இருக்கிறார்.

உள்நாட்டு யுத்தத்தைப் பற்றிய அவருடைய கூப்பாடும் முனகலும் அழுகையும் ஜன்னிப் பிதற்றலும் தத்துவாதியாய் அவர் அடைந்துவிட்ட தோல்வியை மூடி மறைக்கவே பயன் படுகின்றன. போல்ஷிவிக்குகள் கூறியதுதான் சரி என்பது நிரூபணமாகிவிட்டது: 1914 இலையுதிர் காலத்தில் அவர்கள் ஏகாதிபத்திய யுத்தமானது உள்நாட்டு யுத்தமாய் மாற்றப்பட்டு விடும் என்று உலகுக்கு அறிவித்தனர். எல்லா விதமான பிற்போக்குவாதிகளும் ஆத்திரப்பட்டுக் கொண்டனர் அல் லது ஏளனமாய்ச் சிரித்தனர். ஆயினும் போல்ஷிவிக்குகள் தான் சரி என்பது தெரிந்துவிட்டது. பிற்போக்குவாதிகள் தமது முழுமையான தோல்வியை, தமது அசட்டுத்தனத் தை, கிட்டப்பார்வையை மறைத்திடும் பொருட்டுக் குட்டி பூர்ஷுவாக்களுக்கு உள்நாட்டு யுத்தத்தின் பயங்கரங்களை எடுத்துரைத்து அவர்களைப் பீதியுறச் செய்தாக வேண்டி யிருக்கிறது. அரசியல்வாதி என்ற முறையில் காவுத்ஸ்கி இதையேதான் செய்து வருகிறார்.

அவர் எந்த அபத்த அளவுக்குச் செல்கிறார் என்பதைப் பின்வருவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். உலகப் புரட்சி யென்ற நம்பிக்கைக்கே இடமில்லை என்று காவுத்ஸ்கி வற் புறுத்திக் கூறுகிறார்—இதற்கு அவர் எதை வாதமாய் உப யோகிக்கிறார் என்று நினைக்கிறீர்கள்? ருஷ்ய மாதிரியிலான ஒரு புரட்சி ஐரோப்பாவில் ஏற்படுவதானது "ஒரு தலைமுறை யினரது ஆயுள் பூராவுக்கும் உலகெங்கும் உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிடுவதாகவே (Entfessellung)" இருக்கும்; அது மட்டுமல்ல, அசல் வர்க்கப் போரை மட்டுமின்றி "சோதரர் களிடையிலான ஒரு யுத்தத்தைப் பாட்டாளிகளிடையே" கட் டவிழ்த்துவிடுவதாகவே இருக்கும். அழுத்தமிட்டுக் காட் டப்படும் சொற்கள் காவுத்ஸ்கியினுடையவை; ஷ்டம்ப்ஃபர் இவற்றை மேற்கோளாய்—போற்றிடும் முறையிலேதான்— எடுத்துரைக்கிறார்.

ஆம், ஷெய்டமனின் கயவர்களும் கொலையாட்களும் தக்க காரணமின்றி இவற்றைப் போற்றிடவில்லை! ''சோஷலிஸ்டுத் தலைவர்'' ஒருவர் புரட்சிப் பூதத்தைக் காட்டி மக்களைப் பயமுறுத்தவல்லவா பார்க்கிறார், புரட்சியிடமிருந்து அவர்களை மிரண்டோடச் செய்யவல்லவா பார்க்கிறார்! ஆனால் வேடிக்கை என்னவெனில் காவுத்ஸ்கி ஓர் உண்மையைக் கவனியாது விட்டுவிடுகிறார்; அனைத்தும் வல்ல ஆண்டானடானது ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாய் ருஷ்யாவை எதிர்த்துப் போராடி வருகிறது, இதன் மூலம் அது ஆண்டான்ட் நாடுகளில் புரட்சியைக் கிண்டிவிட்டு வருகிறது. புரட்சியானது தற்போதுதான் தொடங்குவதாய் இருந்தாலுங்கூட, அதுவும் அதன் சமரசவாதக் கட்டத்திலேதான், இரண்டொரு ஆண்டான்ட் வல்லரசுகளில் மட்டுமேதான் தொடங்குவதாய் இருந்தாலுங்கூட, உடனடியாகவே அது ருஷ்யாவில் உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவுகட்டிவிடும்; கோபாவேசம் கொதிநிலைக்கு உயர்ந்து ஐரோப்பிய அரசுகளின் வன்முறையால் மட்டுமேதான் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலனிகளில் கோடானு கோடியானோரை உடனடியாகவே விடுவித்துவிடும்.

ஏகாதிபத்திய யுத்தம் பூராவிலுமே காவுத்ஸ்கி வெளிப்படுத்தி வந்த அந்த அடிமைப் புத்தியின் இழிநிலையுடன்கூட, தற்போது தமது செயல்களுக்கு மற்றோர் உள்நோக்கத்தையும் கொண்டுள்ளார் என்பது தெளிவு—ருஷ்யாவில் உள்நாட்டு யுத்தம் நீடித்துச் செல்வது குறித்து அவர் பயப்படுகிறார். அனைத்து உலகின் முதலாளித்துவ வர்க்கத்தாரும் ருஷ்யாவை எதிர்த்துப் போராடுகின்றனர் என்பதைப் பார்க்க முடியாதபடி இந்தப் பயம் அவரைத் தடுத்துவிடுகிறது. ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றிலோ இரண்டிலோ புரட்சி ஏற்படுமாயின் அது உலக முதலாளித்துவ வர்க்கத்தின் பலத்தை முழுக்க முழுக்கக் குலைத்துவிடும், அதன் ஆதிக்கத்துக்கான அடிப்படைகளையே அழித்துவிடும், எங்குமே அதற்குப் பாதுகாப்பான உறைவிடம் இல்லாதபடிச் செய்துவிடும்.

ருஷ்யாவின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராய் உலக முதலாளித்துவ வர்க்கம் புரிந்து வரும் இந்த இரண்டாண்டுக் கால யுத்தம் நடைமுறையில் எங்கும் புரட்சியாளர்களுக்கு நம்பிக்கையூட்டி வருகிறது, எப்படியெனில்

உலக அளவிலான வெற்றி மிகவும் நெருங்கிவிட்டதென்றும் சுலபமாகிவிட்டதென்றும் அது நிரூபிக்கிறது.

''பாட்டாளிகளிடையிலான'' உள்நாட்டு யுத்தத்தைப் பொறுத்தவரை, இந்த வாதத்தை நாம் செர்னேவ்களிட மிருந்தும் மார்த்தவ்களிடமிருந்தும் கேட்டிருக்கிறோம். இது மிகமிக மட்டமான வாதம் என்பதைப் புலப்படுத்த ஒரு எளிய உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின்போது விவசாயிகளில் ஒரு பகுதியோரான வாண்டே விவசாயிகள் குடியரசை எதிர்த்து அரசருக்காகப் போராடினர். 1848 ஜூனிலும் 1871 மேயிலும் தொழிலாளர்களில் ஒரு பகுதியோர் புரட்சியை நசுக்கிய கவென்யாக், கலிஃபே சேனைகளில் சேர்ந்து கொண்டனர். ''பிரான்சில் 1792ல் விவசாயிகளிடையிலும் 1848லும் 1871லும் தொழிலாளர்களிடையிலும் நடைபெற்ற உள்நாட்டு யுத்தங்குறித்து'' நான் வருந்துகிறேன் என்கிற வாத வழியை ஏற்கும் ஒருவரைப் பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்? அவர் ஒரு கபட வேடதாரி, பிற்போக்கின், முடியாட்சியின், கவென்யாக்கின் பாதுகாப்பாளர் என்றுதான் கூறுவீர்கள்.

நீங்கள் கூறுவது சரியானதே.

ருஷ்யாவில் நடைபெற்றுள்ளது (மற்றும் ஏனைய உலகில் ஆரம்பமாகி அல்லது முற்றி வருவது) முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தினது உள்நாட்டு யுத்தம் என்பதை இன்று புரிந்து கொள்ளத் தவறுகிறவர் அடி முட்டாளாய்த்தான் இருக்க வேண்டும். முன்னேறிய வர்க்கத்தில் ஒரு பகுதி பிற்போக்கு சக்திகளின் பக்கத்தில் சேர்ந்து கொள்ளாத ஒரு வர்க்கப் போராட்டம் ஒருபோதும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. உள்நாட்டு யுத்தத்துக்கும் இது பொருந்துவதே. பிற்பட்ட தொழிலாளர்களில் ஒரு பகுதியோர் அதிக காலத்துக்கோ, குறைந்த காலத்துக்கோ முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு உதவவே செய்வார்கள். ஆனால் கயவர்கள்தான் முதலாளித்துவ வர்க்கத்தார் பக்கத்துக்கு ஓடிவிடும் தமது துரோகச் செயலுக்கு நியாயம் கூற அதனைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

தத்துவார்த்த வழியில் இது, 1914 முதலாய் உலகத் தொழிலாளர் இயக்கம் அனைத்தின் வளர்ச்சி பற்றிய

உண்மைகள் யாவும் கூச்சலிட்டுக் கூவி வந்துள்ளதைப் புரிந்து கொள்ள மறுப்பதே ஆகும். தொழிலாளி வர்க்கத்தின் மேல் அடுக்கு மத்தியதர வகுப்பாரது வாழ்க்கை முறையாலும் சந்தர்ப்பவாதத்தாலும் சீரழிக்கப்பட்டு, ''சொகுசான வேலைகள்'', பிற முதலாளித்துவ ரொட்டித் துண்டங்கள் ஆகிய லஞ்சங்களால் கெடுக்கப்பட்டு முறித்துக் கொண்டு செல்லும் நிகழ்ச்சிப்போக்கு 1914 இலையுதிர் காலத்தில் உலக அளவில் உருவாகத் தொடங்கி, 1915க்கும் 1918க்கும் இடையில் அதன் முழு வளர்ச்சியையும் அடையலாயிற்று. இந்த வரலாற்று உண்மையைக் கருதாமலே ஒதுக்கித் தள்ளிவிட்டு, இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்காகக் கம்யூனிஸ்டுகளைக் குற்றம் கூறுவதன்மூலம் காவுத்ஸ்கி முதலாளித்துவ வர்க்கத்தாரின் கையாளாய்த் தாம் ஆற்றும் பாத்திரத்தைத்தான் ஓராயிரம் தடவையாய்க் கண்கூடாக்கிக் கொள்கிறார்.

1852 முதல் 1892 வரையில் நாற்பது ஆண்டுகளாய் மார்க்சும் எங்கெல்சும் பிரிட்டனில் தொழிலாளர்களில் ஒரு பகுதியோர் (அதாவது மேல் அடுக்கினர், தலைவர்கள், ''பிரபுக் குலத்தோர்'') காலனிகள் மூலமாய் அந்த நாட்டுக்குக் கிடைத்த அனுகூலங்களின் காரணமாகவும் அந்த நாட்டின் ஏகபோகங்களின் காரணமாகவும் மேலும் மேலும் முதலாளித்துவமயமாகிச் சென்றது பற்றிப் பேசி வந்தனர். பிரிட்டனில் காணப்பட்ட இதே நிகழ்ச்சிப்போக்கினை ஏனைய பல நாடுகளிலும் இருபதாம் நூற்றாண்டு ஏகாதிபத்திய ஏகபோகங்கள் தோற்றுவித்தே ஆக வேண்டுமென்பது வெள்ளிடை மலை. முன்னேறிய எல்லா நாடுகளிலும் லஞ்சத்தையும், ஊழலையும், முதலாளித்துவ வர்க்கத்தார் அளித்திடும் ரொட்டித் துண்டங்களின் விளைவாய்த் தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்கள், அதன் மேல் அடுக்கினர் துரோகமிழைத்து முதலாளித்துவ வர்க்கத்திடம் ஓடிவிடுவதையும் காண்கிறோம். முதலாளித்துவ வர்க்கத்தார் இந்தத் தலைவர்களுக்குச் ''சொகுசான வேலை'' போட்டுத் தருகிறார்கள், தமது லாபங்களில் எச்சித் துண்டங்களை இந்த மேல் அடுக்கினருக்குத் தருகின்றனர், மிக மோசமான சம்பளத்துக்கும் மிகக் கடினமான உழைப்புக்குமுரிய வேலைகளின் சுமையை நாட்டுக்குள் கொண்டுவரப்படும் பிற்பட்ட தொழிலாளர்

களுடைய தலைக்கு மாற்றிவிடுகின்றனர், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையுடன் ஒப்பிடுகையில் ''தொழிலாளர் பிரபுக்குலத்தோருக்கு'' இருந்து வரும் தனிச் சலுகைகளை உயர்த்திச் செல்கிறார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களும் மேல் அடுக்கினரும், சமூக-தேசியவெறியர்கள், கோம்பர்ஸ்கள், பிரான்டிங்குகள், ரெனொடேல்கள், மக்டொனல்டுகள், ஷெய்டமன்கள் முதலானோர் அனைவரும் சோஷலிசத்துக்குத் துரோகமிழைத்து முதலாளித்துவ வர்க்கத்தாரின் தரப்புக்கு ஓடிவிட்டதை 1914-18ஆம் ஆண்டுகளின் யுத்தம் முடிவாக நிரூபித்திருக்கிறது. தொழிலாளர்களில் ஒரு பகுதியோர் சில காலத்துக்கு வெறும் சடத்துவம் காரணமாய் இந்த முதலாளித்துவக் கயவர்களைப் பின்தொடர்ந்து செல்வார்கள் என்பது கூறாமலே விளங்கும்.

ஹூயிஸ்மன்ஸ்கள், வண்டர்வேல்டேகள், ஷெய்டமன்கள் ஆகியோரது பெர்ன் அகிலமானது சோஷலிசத்தின் இந்தத் துரோகிகளது மஞ்சள் அகிலமாய்த் தற்போது முழு உரு பெற்றுவிட்டது. இவர்களை எதிர்த்துப் போராடாமல், இவர்களிடமிருந்து பிளவுபடாமல் மெய்யான சோஷலிசம் எதையும் பற்றிய, சமுதாயப் புரட்சியின் நலத்துக்கான நேர்மையான பணி எதையும் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

ஜெர்மன் சுயேச்சையாளர்கள்[102] இரண்டுங் கெட்ட நிலையில் இருக்க முயலட்டும்—அது அவர்களுடைய தலைவிதி. ஷெய்டமன்கள் காவுத்ஸ்கியைத் ''தமது ஆளாய்க்'' கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். ஷ்டம்பஃபர் இதனை விளம்பரப்படுத்துகிறார். ஷெய்டமன்களது உற்ற தோழர்தான் காவுத்ஸ்கி, சந்தேகமில்லை. மற்றொரு சுயேச்சையாளரும் காவுத்ஸ்கியின் நண்பருமான ஹில்பர்டிங் லுசேர்னில்[103] ஷெய்டமன்களை அகிலத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று பிரேரணை செய்தபோது மஞ்சள் அகிலத்தின் மெய்யான தலைவர்கள் அவரைப் பார்த்துச் சிரிக்கவே செய்தனர். அவருடைய பிரேரணை அளவு கடந்த அசட்டுத்தனம் அல்லது அளவு கடந்த கபடத்தனத்தைக் காட்டும் செயலாகவே இருந்தது; தொழிலாளி வெகுஜனங்களிடையே இடதுசாரி வேஷம் போடவும் அதேபோதில் முதலாளித்துவக் கையாட்

களது அகிலத்தில் தமது இடத்தைப் பாதுகாத்துக் கொள்ள வும் அவர் விரும்பினுர்! இந்தத் தலைவரின் (ஹில்பர்டிங்) உள்நோக்கம் எதுவாய் இருப்பினும் பின்வருவதில் எந்த ஐயப்பாடும் இல்லை—சுயேச்சையாளர்களுடைய உறுதி யின்மையும் ஷெய்டமன்கள், பிரான்டிங்குகள், வண்டர்வேல் டேகள் ஆகியோரது மோசடியும் நிச்சயம் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களை மேலும் மேலும் இந்தத் துரோகத் தலைவர்களை விட்டு விலகவே செய்யும். சில நாடுகளில் ஏகாதிபத்தி யத்தால் ஓரளவு நீண்ட காலத்துக்குத் தொழிலாளர்களைத் தொடர்ந்து பிளவுபடச்செய்ய முடியும். பிரிட்டனின் உதார ணம் இதை நிரூபிக்கிறது. ஆனுல் புரட்சியாளர்கள் ஒன்றுபடுத் தப்படுவதும், வெகுஜனங்கள் புரட்சியாளர்களுடன் ஒன்று படுவதும், மஞ்சள் பகுதியினர் வெளியேற்றப்படுவதும் உலக அளவில் இடைவிடாமலும் நிச்சயமாகவும் நடந்தேறி வருகின்றன. கம்யூனிஸ்டு அகிலம் கண்டு வரும் பிரமாத மான வெற்றி இதற்குச் சான்ருகும்: அமெரிக்காவில் ஏற் கனவே கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பெற்றுவிட்டது;[104] பாரி சில் சர்வதேசத் தொடர்புகளைத் திரும்பவும் நிறுவுவதற் கான கமிட்டியும் சிண்டிக்கலிஸ்டுப் பாதுகாப்புக் கமிட்டி யும்[105] மூன்ருவது அகிலத்தை ஆதரிக்க முற்பட்டிருக்கின் றன. ரைமோண்டு பெரிக்காவின் அகிலமும்[106] ழோர்ழ் அன்கெட்டிலின் தடை விதிக்கப்பட்ட பெயர்!!![107] (போல்ஷிவிக்?) இவ்விரு பாரிஸ் செய்தியேடுகள் மூன்ருவது அகிலத் தின் பக்கம் வந்துவிட்டன. பிரிட்டனில் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்படும் தறுவாயிலுள்ளது; பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியிலும் ஆலைத் தலைமைத் தொழிலாளர் கமிட்டிகளிலும் (Shop Stewards Committees)[108] இருக்கும் சிறந்த பகுதி யோரும், புரட்சிகரத் தொழிற்சங்கத்தினரும், பிறரும் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கின்றனர். ஸ்வீடிஷ் இடதுசாரியினரும், நார்வீஜிய சமூக-ஜனநாயக வாதிகளும், டச்சுக் கம்யூனிஸ்டுகளும், ஸ்விட்ஜர்லாந்து, இத் தாலிய சோஷலிஸ்டுக் கட்சியினரும், ஜெர்மன் ஸ்பார்த்தக் கிஸ்டுகளுடனும்[109] ருஷ்ய போல்ஷிவிக்குகளுடனும் ஏற் கனவே ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

இவ்வாண்டு தொடக்கத்தில் நிறுவப்பட்ட பின் கழிந்

திருக்கும் இந்தச் சில மாதங்களில் கம்யூனிஸ்டு அகிலம் உலக நிறுவனமாய் வளர்ந்திருக்கிறது, வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்குகிறது, பெர்ன், லுசேர்ன் கும்பல்களின் மஞ்சள் அகிலத்தில் சோஷலிசத்துக்குத் துரோகமிழைப்போரை நிபந்தனையின்றி எதிர்த்து வருகிறது.

முடிவில், சந்தர்ப்பவாதத் தலைவர்கள் ஆற்றும் பாத்திரத்தை வெளிச்சப்படுத்தும் மிகவும் சுவையான செய்தி ஒன்று இருக்கிறது. இந்த ஆகஸ்டில் லுசேர்னில் நடைபெற்ற மஞ்சள் சோஷலிஸ்டுகளின் மாநாடு பற்றிய செய்தி விளக்கம் ஜெனீவா *La Feuille*யின் (''செய்தியேடு'')[110] பல மொழிகளிலுமான தனி அனுபந்தத்தில் வெளிவந்திருந்தது. ஆங்கிலப் பதிப்பில் (No. 4, Wednesday, August 6)* ஹாலந்திலுள்ள சந்தர்ப்பவாதக் கட்சியின் பிரபலத் தலைவரான துருள்ஸ்திராவின் பேட்டி ஒன்று வந்திருந்தது.

> ''நவம்பர் 9ஆம் தேதிய ஜெர்மன் புரட்சியானது டச்சு அரசியல், தொழிற் சங்கத் தலைவர்களிடையே மிகுந்த கிளர்ச்சியை உண்டாக்கியது. முக்கியமாய் சேனையில் அனேகமாய் சர்வவியாபகமான அமைதியின்மை ஏற்பட்டதால், சில நாட்களுக்கு ஹாலந்தின் ஆளும் கோஷ்டிகள் பீதியுற்ற நிலையில் இருந்தன.
>
> ''ராட்டர்டாம், ஹாக் இவற்றின் மேயர்கள் எதிர்ப்புரட்சியின் துணைப் படையாய்த் தமது சொந்த நிறுவனங்களை அமைக்க முயன்றனர். முன்னாள் ஜெனரல்களாலான ஒரு கமிட்டி—சீனுவில் பாக்சர் கலகத்தை ஒடுக்கியதில் பங்கு கொண்டதாய்ப் பெருமைப்பட்டுக் கொண்ட வயதான ஓர் இராணுவ அதிகாரியும் இவர்களிடையே இருந்தார்—எங்கள் தோழர்களில் சிலரைப் புரட்சிக்கு எதிராய் ஆயுதமேந்தும்படித் தவறான பாதையில் இட்டுச் செல்ல முயன்றது. இயற்கையாகவே இவர்களுடைய முயற்சிகள் இதற்கு நேர் எதிரான பலனையே உண்டாக்கின; ராட்டர்டாமில் ஒரு நேரம் தொழிலாளர் கவுன்சில் ஒன்று நிறுவப்படுமென தோன்றிற்று. ஆனால் அரசியல், தொழிற் சங்கத் தலைவர்கள் இத்தகைய முறைகளுக்குக் காலம் பக்குவ நிலை

* —புதன்கிழமை, ஆகஸ்டு 6.— **பதிப்பாசிரியர்.**

யில்லை என்று கருதி, தொழிலாளர்களது குறைந்த பட்ச வேலைத்திட்டம் ஒன்றை வகுத்திடுவதுடனும் உறுதியாய் ஒலித்திடும் ஒரு அறைகூவலை வெகு ஜனங்களுக்கு வெளியிடுவதுடனும் நிறுத்திக் கொண்டனர்.''

துருள்ஸ்திரா கூறியது இது. மேலும் அவர் நிறைய வாய்ப்பறை சாற்றினர். ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றும் படிக்கூட அறைகூவல் விடுத்துத் தாம் புரட்சிகரச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதாகவும், பாராளுமன்றம், அரசியல் ஜனநாயகம் இவை மட்டும் போதாவென்பதைத் தாம் உணர்ந்திருப்பதாகவும், போராட்டத்துக்கான ''சட்ட விரோத முறைகளையும்'' ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும்'' தாம் இடைக் காலத்துக்கு உகந்தது என்று அங்கீகரிப்பதாகவும், இன்ன பலவாறுகவும் கூறிக் கொண்டார்.

முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஊழியம் புரிந்து தொழிலாளர்களை ஏமாற்றும் ஊழல் மலிந்த சந்தர்ப்பவாதத் தலைவருக்குத் துருள்ஸ்திரா முன்மாதிரியான ஓர் எடுத்துக் காட்டு. சொல்லளவில் அவர் யாவற்றையும்—தொழிலாளர் கவுன்சில்கள், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், இன்னும் எது வேண்டுமானாலும்—ஏற்றுக் கொண்டுவிடுவார். ஆனல் உண்மை நடைமுறையில் வெறுக்கத்தக்க முறையில் தொழிலாளர்களுக்குத் துரோகம் புரிவார், முதலாளித்துவ வர்க்கத்தாரின் கையாளாய் இருப்பார்; தீர்மானகரமான தருணத்தில் அவர்களுடன் கூடிக் கொண்டு டச்சு முதலாளித்துவ வர்க்கத்தாரைக் காப்பாற்றிய அந்த ''அரசியல், தொழிற் சங்கத் தலைவர்களுடைய'' தலைவர் அவர்.

துருள்ஸ்திரா வெளிப்படுத்தும் உண்மைகள் தெட்டத் தெளிவானவை, திட்டவட்டமான திசையைச் சுட்டிக்காட்டுகிறவை. டச்சு சேனை தயார் நிலையில் இருந்தது. பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணியாகி சேனையில் மக்களின் ஏழ்மைப் பட்ட பகுதிகளுடன் ஒன்றுபட்டிருந்தது. ஜெர்மன் புரட்சியானது தொழிலாளர்களைக் கிளர்ந்தெழுமாறு ஆதர்சமூட்டிற்று, ''சேனையில் அனேகமாய்ச் சர்வவியாபகமான அமைதியின்மை ஏற்பட்டிருந்தது''. புரட்சிகரத் தலைவர்களுடைய

கடமை வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கிப் புரட்சியை நோக்கி அவர்களை அழைத்துச் செல்வதேயன்றி, தொழிலாளர்கள் ஆயுதபாணிகளாக்கப் பட்டிருந்ததும் ஜெர்மன் புரட்சியின் செல்வாக்கும் பிரச்சினையை ஒரே அடியில் தீர்த்து விட்டிருக்கக் கூடிய தக்கதோர் தருணத்தைத் தவற விடுவதல்ல என்பது வெளிப்படை.

ஆனால் துருள்ஸ்திராவின் தலைமையிலிருந்த துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் கூட்டு சேர்ந்து கொண்டனர். சீர்திருத்தங்களையும் இன்னும் அதிகமாய் சீர்திருத்தங்களைப் பற்றிய வாக்குறுதிகளையும் கொண்டு தொழிலாளர்கள் மடக்கப்பட்டனர். தொழிலாளர்களைச் சாந்தப்படுத்தும் பொருட்டு—ஏமாற்றும் பொருட்டு—''உறுதியாய் ஒலித்திடும் அறைகூவல்களும்'' புரட்சிகரச் சொல்லடுக்குகளும் உபயோகிக்கப்பட்டன. துருள்ஸ்திராக்களும் இன்ன பிற தலைவர்களும்தான், பெர்ன், லுசேர்ன் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த இவர்கள்தான், முதலாளித்துவ வர்க்கம் சேனையைக் கலைப்பதற்கு உதவி புரிந்து முதலாளிகளைக் காப்பாற்றியவர்கள்.

இந்தத் துரோகிகளையும் காட்டிக்கொடுக்கும் கயவர்களையும், துருள்ஸ்திராக்களையும் காவுத்ஸ்கிகளையும் விரட்டியடித்து, முதலாளித்துவமயமாகி வெகுஜனங்களைத் தவறான பாதையில் இட்டுச் சென்று முதலாளித்துவக் கொள்கைகளைப் பின்பற்றும் இந்த மேல் அடுக்கினரைத் தன்னிடமிருந்து ஒழித்துக் கட்டி, தொழிலாளர் இயக்கமானது வீறு நடைபோட்டு முன்னேறும்.

1919, செப்டம்பர் 20

பின் குறிப்பு: ஷ்டம்ப்ஃபரின் கட்டுரையைக் கொண்டு பார்க்கையில் சோவியத் அரசியல் அமைப்பு குறித்து காவுத்ஸ்கி இப்பொழுது மௌனம் சாதிக்கிறார். இந்தத் தலையாய பிரச்சினையில் அவர் சரணடைந்துவிட்டாரா? பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பதை எதிர்க்கும் அவருடைய பிரசுரத்தில் எடுத்துரைக்கப்படும் வெற்றுரைகளை இனி அவர் ஆதரித்து வாதாடப் போவதில்லையா? இந்தப் பிரதான

பிரச்சினையை விட்டுவிட்டு இரண்டாந்தரப் பிரச்சினைகளுக்குச் சென்றுவிட விரும்புகிறாரா? காவுத்ஸ்கியின் பிரசுரத்தைப் பரிசீலத்த பிறகே இந்தக் கேள்விகள் யாவற்றுக்கும் பதி லளிக்க முடியும்.

1919 செப்டம்பரில்,
கம்யூனிஸ்டு அகிலம் எனும்
சஞ்சிகையின் 5ஆவது இதழில்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 182-94

ஒப்பம் : நி. லெனின்

■

1921 மார்ச் 16ல் கட்சி ஒற்றுமையும் அராஜக-சிண்டிக்கலிஸ்டுத் திரிபும் குறித்து ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது காங்கிரசில் நிகழ்த்திய உரை

■

தோழர்களே, இப்பிரச்சினை குறித்து அதிகம் கூறத் தேவையில்லை என்று நினைக்கிறேன். ஏனெனில் கட்சிக் காங்கிரசின் சார்பில், அதாவது அனைத்துக் கட்சியின் சார்பிலும், அதிகாரபூர்வமாய் இப்பொழுது கருத்து அறிவிக்கப்பட வேண்டிய விவகாரங்களைப் பற்றி காங்கிரசில் விவாதிக்கப்பட்ட எல்லாப் பிரச்சினைகளினூடேயும் கூறப்பட்டது. ''ஒற்றுமை குறித்து'' என்னும் தீர்மானத்தில் அரசியல் நிலைமை பற்றிய குண நிர்ணயம் பெருமளவுக்கு அடங்கியுள்ளது. இந்தத் தீர்மானத்தின் அச்சிடப்பட்ட வாசகம் வினியோகிக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் எல்லோரும் இதைப் படித்திருப்பீர்கள். 7ஆவது பாரா ஒரு விசேஷச் செயல்முறையை, அதாவது மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், பரீட்சார்த்த உறுப்பினர்கள், மத்தியத் தணிக்கைக் கமிஷன் உறுப்பினர்கள் ஆகியோரது பொது அவைக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு விகிதப் பெரும்பான்மையின் பேரில் மத்தியக் கமிட்டியிலிருந்து ஓர் உறுப்பினரை விலக்குவதற்கு உரிமையளிக்கும் செயல்முறையைப் புகுத்துகிறது; இது பிரசுரத்துக்குரியதல்ல. இந்தச் செயல்முறை குறித்து தனியார் ஆலோசனைக் கூட்டங்களில் திரும்பத் திரும்ப விவாதிக்கப்பட்டது, அப்பொழுது எல்லாத் தரப்பினர்களின் பிரதிநிதிகளும் தமது அபிப்பிராயங்களைக் கூறினர். தோழர்களே, இந்தப் பாராவைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாதெனை நம்புவோமாக. ஆனால் ஒரு புதிய, ஓரளவு தீவிரமான திருப்பத்தின் தறுவாயில் நாம் இருக்கும் இந்தப் புதிய சூழ்நிலையின், தனிநிலை மனப்பான்மையின் எல்லாச் சாயல்களையும் ஒழித்திட விரும்பும் இந்தப் புதிய சூழ்நிலையின் காரணமாய், இந்தப் பாரா இருப்பது அவசியமாகும்.

இனி சிண்டிக்கலிஸ்டு, அராஜகவாதத் திரிபுகளைப் பற்றிய தீர்மானங் குறித்துப் பரிசீலிக்க விரும்புகிறேன். காங்கிரஸ் நிகழ்ச்சி நிரலின் 4ஆவது அம்சத்தில் இப்பிரச்சினை குறிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சில போக்குகள் அல்லது சிந்தனையிலுள்ள திரிபுகள் குறித்த நமது நிலை பற்றிய விளக்கம், இந்தத் தீர்மானம் முழுவதுக்கும் நடுநாயகமானது. ''திரிபுகள்'' என்று சொல்வதன் மூலம் நாம் அவற்றை இன்னமும் நிலையாய் உறுதி பெற்றுவிட்ட ஒன்ருய், முழுமையாகவும் முடிவாகவும் வரையறுக்கப்பட்ட ஒன்ருய்க் கருதவில்லை, கட்சி தனது மதிப்பீட்டை அளித்திட வேண்டிய ஒரு அரசியல் போக்கின் துவக்க நிலையாக மட்டுமே கருதுகிருேம் என்பதை வலியுறுத்துகிருேம். சிண்டிக்கலிஸ்டு, அராஜகவாதத் திரிபைப்பற்றிய தீர்மானத்தின் 3ஆவது பாராவில்—இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் உங்கள் எல்லோரிடத்தும் இருக்குமென நினைக்கிறேன்—அச்சுப்பிழை ஒன்று இருக்கிறது (கூறப்பட்ட கருத்துரைகளைக் கொண்டு பார்க்கையில் இது கவனிக்கப்பட்டிருப்பது தெரிகிறது). இது வருமாறு இருத்தல் வேண்டும்: ''உதாரணமாய்த் தொழிலாளர் எதிர்த்தரப்பின் பின்வரும் விரிவுரை இதற்கு எடுத்துக்காட்டு: 'தேசப் பொருளாதார நிர்வாகத்தை ஒழுங்கமைப்பது தொழில் துறைச் சங்கங்களில் ஒன்றுதிரண்ட உற்பத்தியாளர்களது அனைத்துருஷ்யக் காங்கிரசிற்குரிய பணி. அவை குடியரசின் தேசப் பொருளாதாரம் முழுவதையும் நடத்திச் செல்லும் மத்திய உறுப்பைத் தேர்ந்தெடுக்கும்' ''. காங்கிரசின்போது இந்தப் பாராவைத் தனியார் ஆலோசனைக் கூட்டங்களிலும் மற்றும் காங்கிரசின் பகிரங்கப் பொது அமர்வுகளிலும் மீண்டும் மீண்டும் விவாதித்துள்ளோம். உற்பத்தியாளர்களின் கழகம் குறித்து எங்கெல்ஸ் கூறினர் என்று வாதாடி இந்தப் பாராவை ஆதரித்துப் பேசுவது சிறிதும் சாத்தியமன்று என்பதை ஏற்கனவே நாம் தெளிவுபடுத்தியுள்ளோமென நினைக்கிறேன். வர்க்கங்கள் இல்லாத கம்யூனிச சமுதாயத்தையே எங்கெல்ஸ் குறிப்பிட்டார் என்பது தெளிவு; வாசகத்தின் உரிய இடத்தை நன்ருய்ப் பரிசீலித்தால் இது புலப்படும். கம்யூனிச சமுதாயத்தில் இவ்வாறு இருக்குமென்பது நாம் எல்லோரும் சர்ச்சைக்கு இடமில்

லாததாய் ஏற்றுக்கொள்ளும் ஒன்று. வர்க்கங்கள் சமுதாயத்திலிருந்து அகற்றப்பட்டதும் உற்பத்தியாளர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள்; தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற எந்தப் பிரிவினையும் இருக்காது. வர்க்கங்கள் இன்னும் இருந்து வரும் காலத்தையும் வர்க்கங்கள் இல்லாத காலத்தையும் மார்க்சும் எங்கெல்சும் மிகத் தெளிவாய்ப் பாகுபாடு செய்தனர் என்பது அவர்களுடைய நூல்கள் யாவற்றிலுமிருந்தும் மிக நன்ருய் நமக்குத் தெரிய வரும் ஒன்று. கம்யூனிசத்துக்கு முன்னதாகவே வர்க்கங்கள் மறைந்துவிட முடியுமென்ற கருத்தை மார்க்சும் எங்கெல்சும் தயக்கமின்றி எள்ளி நகையாடி வந்தனர்; கம்யூனிசம் மட்டும்தான் வர்க்கங்கள் ஒழிந்துவிடுவதைக் குறிக்கிறதெனக் கூறினர்.

நிலைமை என்னவெனில், வர்க்கங்களை ஒழித்திடும் பிரச்சினையை நாம்தான் முதன்முதல் நடைமுறை மட்டத்தில் எழுப்பியவர்கள், இந்த விவசாயி நாட்டில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் ஆகிய இரு பிரதான வர்க்கங்கள் இருந்து வருகின்றன. இவற்றுடன் கூடவே முதலாளித்துவத்திலிருந்து எஞ்சிய முழு முழுக் கோஷ்டிகளும் இருந்து வருகின்றன.

முதலாவது அடிகளையே நாம் எடுத்து வைக்கிருேம், பல இடைக்கால கட்டங்களை நாம் காண வேண்டியிருக்கும் என்று நமது வேலைத்திட்டம் திட்டவட்டமாய்க் கூறுகிறது. ஆளுல் எதிர்த்தரப்பினர் இந்த விவகாரத்தில் தந்துள்ளது போன்ற தத்துவார்த்த விளக்கங்களைத் தருவது தவறுகும் என்பதற்கு சோவியத் நிர்வாகத்தின் நடைமுறைப் பணிகளிலும் புரட்சியின் வரலாறு முழுவதிலுமே கண்கூடான எடுத்துக்காட்டுகள் எப்பொழுதும் நமக்குக் கிடைத்துள்ளன. நமது நாட்டில் வர்க்கங்கள் மறையாது இருந்துள்ளன, இன்னும் நெடுங் காலத்துக்கு அவை மறையாது இருக்கும் என்பதையும், விவசாயி மக்களே மிகப் பெருவாரியானுராய் இருக்கும் ஒரு நாட்டில் அவை மிக பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கவே செய்யும் என்பதையும் நாம் நன்கு அறிவோம். சேம இருப்பு வளத்தை உண்டாக்கிக் கொண்டு விவசாயத்தின்மீது கண்காணிப்பு நிறுவும்படி பெருவீதத் தொழில் துறையை ஒழுங்கமைத்திட நமக்குக் குறைந்தது

பத்து ஆண்டுகளாவது தேவையாயிருக்கும். தொழில்நுட்ப நிலைமைகள் விசேஷ அளவுக்குச் சாதகமாய் அமையப் பெற்றாலுங்கூட நமக்குத் தேவையாயுள்ள மிகக் குறைந்த கால அளவு இது. ஆனால் நமது நிலைமைகள் முன்பெல்லாம் கண்டிராத அளவுக்குப் பாதகமாயிருப்பதை நாம் அறிவோம். நவீனகாலப் பெருவீதத் தொழில் துறையின் அடிப்படையில் ருஷ்யாவைப் புத்தமைப்பதற்கு நம்மிடம் ஒரு திட்டம் உள்ளது: நமது விஞ்ஞானிகள் வகுத்துள்ள மின்னுக்கத் திட்டம் அது. அந்தத் திட்டத்தில் வகுக்கப்பட்டிருக்கும் மிகக் குறைந்த கால அளவு பத்து ஆண்டுகள். நிலைமைகள் ஏறத்தாழ சீராய் இருக்குமென்ற அடிப்படையில் இது வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தகைய நிலைமைகள் இல்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரிந்ததே. ஆகவே பத்து ஆண்டுகள் நமக்கு மிக மிகக் குறுகிய காலமே ஆகும். இந்தப் பிரச்சினையின் மூலப் பகுதியை வந்தடைந்துவிட்டோம்: பாட்டாளி வர்க்கத்துக்குப் பகைமையான வர்க்கங்கள் இருந்து வரும் என்பதுதான் நம்முன்னுள்ள நிலைமை. எனவே எங்கெல்ஸ் எடுத்துரைத்ததை நடைமுறையில் இப்பொழுது நாம் படைப்பித்துவிட முடியாது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இருக்கும். அதற்குப் பிற்பாடுதான் வர்க்கங்கள் இல்லாத சமுதாயம் வரும்.

வர்க்கப் பாகுபாடுகளை மறக்கும் பாங்கினராகி, பொதுவாக உற்பத்தியாளர்களைப் பற்றி, மக்களை அல்லது உழைப்பாளி மக்களைப் பற்றிப் பேசுவோரை மார்க்சும் எங்கெல்சும் கடுமையாய் எதிர்த்தனர். மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களைப் படித்த எவரும் பொதுவாய் உற்பத்தியாளர்கள் என்றும் மக்கள், உழைப்பாளி மக்கள் என்றும் பேசுவோரை அவர்கள் தமது எல்லா நூல்களிலும் எள்ளி நகையாடுவதை நினைவுகூர்வர். பொதுப்பட உழைப்பாளி மக்கள் அல்லது வேலை செய்பவர்கள் என்று யாருமில்லை. உற்பத்திச் சாதனங்கள் உடைத்த சிறு உடைமையாளர்கள் இருக்கிறார்கள், இவர்களுடைய மனப்பான்மையும் பழக்கங்களும் முதலாளித்துவத் தன்மையவை—இவ்வாறின்றி அவை வேறு எவ்விதமாகவும் இருக்க முடியாது—அல்லது முற்றிலும் வேறு வகை மனப்பாங்குடையோரான கூலி உழைப்புத் தொழிலாளர்

கள், பெருவீதத் தொழில்துறையைச் சேர்ந்த கூலி உழைப்புத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் முதலாளி களுடன் பகைமையான முரண்பாடு கொண்டவர்கள், முத லாளிகளுக்கு எதிராய்ப் போராட்டத்தில் அணிதிரளுகிற வர்கள்.

மூன்று ஆண்டுக் காலப் போராட்டத்துக்குப் பிற்பாடு நாம் இந்தப் பிரச்சினையை அணுகியுள்ளோம்; பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தைச் செலுத்துவதில் பெற் றுள்ள அனுபவத்துடன், வர்க்கங்களுக்கு —இன்னமும் இவை இருந்து வருகின்றன—இடையிலான உறவுகளில் நிலவும் பிரம்மாண்ட இன்னல்களைப் பற்றிய அறிவுடனும், மற்றும் நமது சமுதாயக் கட்டுக்கோப்பின் வெடிப்புகளிலும் இடுக்கு களிலும் சோவியத் நிறுவனங்களிலுங்கூட இருக்கும் முதலா ளித்துவ வர்க்க மிச்சசொச்சங்களுடனும் நாம் இதனை அணு கியுள்ளோம். உங்களுக்கு நான் படித்துக் காட்டிய விரிவுரை களைக் கொண்ட கொள்கைத் திட்டம் ஒன்று இந்த நிலைமை களில் தோன்றுவதானது, தெளிவான, வெளிப்படையான சிண்டிக்கலிஸ்டு-அராஜகவாதத் திரிபே ஆகும். இப்படிச் சொல்வது எவ்வகையிலும் மிகைப்படக் கூறுவதாகாது. சொற்களை எடை போட்டுத்தான் பேசுகிறேன். இன்னமும் முழு அளவுக்கு உரு பெற்ற போக்காகிவிடாததே திரிபு எனப்படுவது. திரிபானது சரிசெய்யப்பட்டுவிடக் கூடிய ஒன்று. ஓரளவு தடம்புரண்டுவிட்டனர் அல்லது தடம்புரளத் தொடங்குகின்றனர், ஆயினும் இவர்கள் சரியான பாதைக்குக் கொண்டுவரப்படக் கூடியவர்கள்தான். ''உக்லோன்'' என்ற ருஷ்யச் சொல்லுக்கு என் அபிப்பிராயத்தில் இதுவே தான் அர்த்தம். இறுதி நிலையாய் எதுவும் தோன்றிவிட வில்லை, விவகாரத்தை எளிதில் சரிசெய்துவிடலாம் என்பதை இச்சொல் வலியுறுத்துகிறது. எச்சரிகை செய்ய வேண்டும், பிரச்சினையைக் கோட்பாட்டு வழியில் அதன் முழு வீச்சிலும் எழுப்ப வேண்டும் என்கிற விருப்பத்தை இச்சொல் தெரிவிக் கிறது. இந்தக் கருத்தை வெளியிட இதைக் காட்டிலும் சிறப்பான ஒரு சொல் யாரிடமாவது இருந்தால் தயக்கமின்றி அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். சொற்கள் குறித்து வாதப் பிரதிவாதம் துவக்கப்பட்டுவிடாதென்று நம்புகிறேன்.

இந்த விரிவுரையைப் பிரதானமான ஒன்ருய்க் கொண்டு அதன் சாராம்சத்தைப் பரிசீலனை செய்கிருேம், இதையொத்த ஏராளமான பல கருத்துக்களை விரட்டிக் கொண்டு ஓட நேராதிருக்கும் பொருட்டு இதைச் செய்கிருேம். தொழிலாளர் எதிர்த்தரப்பினரிடம் இத்தகைய கருத்துக்கள் மிகப் பலவும் இருந்து வருகின்றன. நமது எழுத்தாளர்களையும் இப் போக்கின் தலைவர்களையும் இந்த விவகாரத்தினுள் போகும்படி விடுவோம். எனவேதான் தீர்மானத்தின் இறுதியில் கட்சி உறுப்பினர்களிடையே இங்கு சுட்டிக்காட்டப்பெற்ற எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் மேலும் விரிவான கருத்துப் பரிமாற்றத்துக்கு விசேஷப் பிரசுரங்களிலும் கருத்தரங்கு உரைகளிலும் இடம் அளிக்க முடியும், அளிக்கவும் வேண்டும் என்பதை முக்கியமான ஒரு விவரமாய்க் குறிப்பிட்டுச் சொல்கிருேம். இப்பொழுது நாம் இந்தப் பிரச்சினையை ஒத்திப் போட்டுச் செல்ல முடியாது. கடுமையான இன்னல்களுக்கிடையே போராடிக்கொண்டிருக்கும் கட்சி ஆவோம் நாம். நாம் நம்மிடம் கூறிக் கொண்டாக வேண்டும்: நமது ஒற்றுமை இன்னும் உறுதியாய் இருக்கவேண்டுமாளுல் திட்டவட்டமான திரிபை நாம் கண்டனம் செய்தாக வேண்டும். அது வெளிச்சத்துக்கு வந்துவிட்டதால் வெளிப்படையாய் இது விவாதிக்கப்பட வேண்டும். விரிவான அளவில் விவாதம் தேவைப்படுமாயின், தயக்கமின்றி விரிவாகவே விவாதிப்போம். ஒவ்வொரு அம்சம் குறித்தும் மூல ஆதாரங்களைக் குறிப்பிட்டு விவாதிக்க நம்மிடம் ஆட்கள் இருக்கின்றனர். பொருத்தமானதென்றும், அவசியமென்றும் தெரிய வருமாயின் இந்தப்பிரச்சினையை சர்வதேச அளவிலுங்கூட எழுப்பலாம். சர்வதேசப் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அணிகளில் குறிப்பிட்ட ஒரு இடதுசாரித் திரிபு இருந்து வருவதுபற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும், கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதி தமது உரையில் இது பற்றிக் கூறியதை இப்பொழுது நீங்கள் கேட்டீர்கள். நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் இந்தத் திரிபு ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் அராஜகவாதத் திரிபை முழுக்க முழுக்க ஒத்ததுதான். இதற்கு எதிரான போராட்டம் கம்யூனிஸ்டு அகிலத்தின் கடந்த காங்கிரசில் தெளிவாய் வெளிப்

படலாயிற்று.[111] இதைக் குறிப்பிட அந்தக் காங்கிரசில் கையாளப்பட்ட பதங்களில் சில "திரிபு" என்பதைக் காட்டிலும் கடுமையான பதங்களாய் இருந்தன. இது சர்வதேசப் பிரச்சினை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆதலால் "மேற்கொண்டு விவாதங்கள் வேண்டாம். முற்றுப்புள்ளி" என்று கூறி இதற்கு முடிவுகட்டுவது தவறாகும். ஆனால் தத்துவார்த்த விவாதம் என்பது ஒன்று, கட்சியின் அரசியல் கொள்கை வழி—அரசியல் போராட்டம்—என்பது வேறொன்று. நாம் ஒரு விவாத மன்றமல்ல. நாம் கருத்தரங்கு உரைகளையும் விசேஷப் பிரசுரங்களையும் வெளியிட முடிகிறது, இனியும் தொடர்ந்து வெளியிடுவோம் என்பது மெய்தான். ஆனால் மிகப் பெரிய இக்கட்டுகளை எதிர்த்து நின்று போராட்டத்தை நடத்திச் செல்வதே நமது முதற்பெரும் கடமை. இதற்கு ஒற்றுமை அவசியம். "அனைத்துருஷ்ய உற்பத்தியாளர் காங்கிரஸ்" ஒன்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுபோன்ற பிரேரணைகளை அரசியல் விவாதத்திலும் போராட்டத்திலும் புகுத்த இடமளிப்பதால், ஒன்றுபட்டும் அடி பிசகாது இணைந்தும் நாம் நடைபோட்டு முன்னேறிச் செல்ல முடியாமற் போய்விடும். இதுவல்ல வருகிற சில ஆண்டுகளுக்கு நாம் வகுத்துக் கொண்ட கொள்கை. கட்சியின் ஒருங்கிணைந்த குழுப் பணியைச் சீர்குலைத்துவிடும் கொள்கை இது. ஏனெனில் இது தத்துவார்த்த வழியில் தவறானது என்பது மட்டுமல்ல, வர்க்கங்களிடையிலான உறவுகளையும் இது பிழைபட வரையறுக்கிறது. இவ்வுறவுகள் கேந்திரமான அம்சமாகும். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் தீர்மானத்தில் இந்த அம்சம் வரையறை செய்யப்பட்டது. இது இல்லாமல் மார்க்சியம் இருக்க முடியாது. ருஷ்யாவின் தற்போதைய பொருளாதார நிலைமையில் தவிர்க்க முடியாதவையான குட்டிபூர்ஷுவா ஊசலாட்டங்களுக்குக் கட்சியல்லாதோரான பகுதியினர் அடிபணிந்து வருகின்றனர்—இன்றைய சூழ்நிலை அத்தகையதாய் இருக்கிறது. சில அம்சங்களில் உள்கட்சி சூழ்நிலையானது தெனீக்கினையும் யுதேனிச்சையும்விடப் பெரியதோர் அபாயத்தை உண்டாக்குவதாய் உள்ளது என்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். நமது ஒற்றுமை பெயரளவிலானதாய் இருக்கக் கூடாது, மேற்பரப்புக்கு அடியில்

ஆழச் செல்வதாய் இருத்தல் வேண்டும். இந்த ஒற்றுமையை நாம் தோற்றுவிக்க வேண்டுமானல், இங்கே முன்மொழியப் பட்டிருக்கும் தீர்மானத்தை ஒத்த ஒன்று இன்றியமையாதது.

என்னுடைய அபிப்பிராயத்தில் மிக முக்கியமான அடுத்த விவகாரம் இத்தீர்மானத்தின் 4ஆவது பாரா ஆகும். இந்தப் பாரா நமது வேலைத்திட்டத்துக்கு விளக்கம் தருகிறது. இது ஆதாரபூர்வமான விளக்கமாகும், அதாவது ஆசிரியரே தரும் விளக்கமாகும். காங்கிரஸ்தான் இதன் ஆசிரியர். இந்தத் தடுமாற்றத்துக்கெல்லாம், தொழிற் சங்கங்கள் குறித்து நமது வேலைத்திட்டம் கூறுவதானது அது கூற வேண்டுமென சில பேர் விரும்புவதைச் சொல்வதாய் இருப்பது போலக் காட்டுவதற்காகச் சில நேரங்களில் நமது வேலைத்திட்டம் குறித்து புரியப்படும் வித்தைகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் பொருட்டு, காங்கிரசானது தனது விளக்கத்தை அளித்தாக வேண்டும். வேலைத்திட்டத்தைப் பற்றி தோழர் ரியஸானவ் அளித்த விமர்சனத்தை நீங்கள் கேட்டீர்கள்—அவருடைய தத்துவார்த்த ஆராய்ச்சிகளுக்காக இந்த விமர்சகருக்கு நாம் நன்றி தெரிவிப்போமாக. தோழர் ஷ்லாப்னிக்கவின் விமர்சனத்தைக் கேட்டீர்கள். அது நாம் உதாசீனம் செய்யக் கூடாத ஒன்று. தற்போது நமக்கு எது தேவையோ அப்படியே அது இங்கே, இந்தத் தீர்மானத்தில் இருக்கிறதென நினைக்கிறேன். வேலைத்திட்டத்தை அங்கீகரிப்பதும், கட்சியின் தலைமையான உறுப்பாய் இருப்பதும் காங்கிரஸ் தான். வேலைத்திட்டம் கூறுவதன் பொருளை இப்படித்தான் புரிந்து கொள்கிறோம் என்று இந்தக் காங்கிரசின் சார்பில் நாம் கூற வேண்டும். இதனுல் தத்துவார்த்த விவாதத்துக்கு முடிவு கட்டப்படவில்லை என்று திரும்பவும் கூறுகிறேன். வேலைத்திட்டத்தைத் திருத்துவதற்குப் பிரேரணைகள் செய்யப்படலாம். இதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. எவ்விதமான மாற்றமும் செய்யத் தேவையின்றி நமது வேலைத்திட்டம் அப்படிக் குறைபாடற்றதாக இருப்பதாய் நாம் நினைக்கவில்லை. ஆனல் தற்போது நம் முன்னல் இது குறித்து முறையான பிரேரணைகள் எவையும் இல்லை, இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க நாம் நேரம் ஒதுக்கியிருக்கவில்லை. வேலைத்திட்டத்தைக் கவனமாய்ப்

படிப்போமாயின், ''தொழிற் சங்கங்கள் மெய்ந்நடப்பிலான செறிவை முடிவில் வந்தடைந்தாக வேண்டும்...'' என்பதாய்க் கூறப்படுவதைக் காண்போம். ''மெய்ந்நடப்பிலான செறிவை முடிவில் வந்தடைந்தாக வேண்டும்'' என்னும் சொற்கள் கோடிட்டுக் காட்டப்பட வேண்டியவை. இதற்குச் சிறிது முன்னதாய் இவ்வாறு படிக்கிறோம்: ''சட்டங்களுடைய ஆதாரத்தின் பேரில் தொழிற் சங்கங்கள் தொழில் துறை நிர்வாகத்தின் எல்லா ஸ்தல உறுப்புகளிலும் மத்திய உறுப்புகளிலும் பங்கெடுத்துக் கொள்கின்றன''. முதலாளித்துவத் தொழில் துறையைக் கட்டியமைக்க மிகப் பல பத்தாண்டுகள் ஆயின என்பதும் உலகின் முன்னேறிய நாடுகள் யாவும் இதற்குத் துணை புரிந்தன என்பதும் நமக்குத் தெரியும். இந்த வளர்ச்சியினைக் கொடிய இடருக்கும் ஏழைமைக்குமுரிய ஒரு நேரத்தில், விவசாயிகள் பெருவாரியாகவும் தொழிலாளர்கள் சிறுபான்மையோராகவும் பாட்டாளி வர்க்க முன்னணிப் படை இரத்தம் சிந்தி ஒய்ந்துபோன நிலையிலுமுள்ள ஒரு நாட்டில் மிக விரைவிலேயே நிறைவெய்தச் செய்ய முடியுமென்று நினைக்கும்படியான அறியாப் பிள்ளைகளா நாம்?! பிரதான அடித்தளத்தைக்கூட இன்னும் நாம் நிறுவியாகவில்லை. தொழிற் சங்கங்களுடைய பங்குடனே தொழில் துறை நிர்வாகத்துக்குச் சோதனை வரையறுப்பு செய்திடும் துவக்க நிலையிலேதான் இருக்கிறோம். இல்லாமையே தலைமையான முட்டுக்கட்டை என்பதை அறிவோம். வெகுஜனங்களை நமது பணியில் ஈடுபடச் செய்யவில்லை என்று சொல்வது உண்மையல்ல. மாருக, பெருந் திரளான தொழிலாளர்களிடையே திறன் அல்லது வல்லமைக்குரிய சிறு அறிகுறி கொண்டவர் எவருக்கும் உளப்பூர்வமான ஆதரவு அளிக்கிறோம். நிலைமைகள் இம்மியளவேனும் இலகுவாக வேண்டும்—நமக்குத் தேவைப்படுவதெல்லாம் அதுதான். பஞ்சத்திலிருந்து நிவாரணமடைந்து குறைந்தது இரண்டொரு ஆண்டுகளாவது நமக்கு அவகாசம் வேண்டும். வரலாற்றின் அளவில் இது மிகச் சொற்ப காலம்தான். ஆனால் நமது நிலைமைகளில் இது நீண்டதொரு காலம். பஞ்சத்திலிருந்து நிவாரணமடைந்து ஆலைகள் த்டையின்றி இயங்க எரிபொருள் முறையாய்க் கிடைக்கக்கூடிய இரண்டொரு ஆண்டுகள் போதும்,

தொழிலாளி வர்க்கத்திடமிருந்து நூறு மடங்கு அதிக உதவி நமக்குக் கிடைக்கும், தற்போது கிட்டுவதைக் காட்டிலும் மிக அதிக அளவில் அதன் அணிகளிடமிருந்து திறன் வெளித் தோன்றும். இது குறித்து யாருக்கும் ஐயப்பாடு இருக்க வில்லை, இருக்கவும் முடியாது. தற்போது உதவி கிடைப்பதா யில்லை, ஆனல் நாம் இதை விரும்பாததல்ல இதற்குக் காரணம். இதைப் பெற உண்மையில் நம்மால் இயன்றது அனைத்தையும் நாம் செய்து வருகிறோம். இதற்குரிய எந்தவொரு வாய்ப்பினையும் அரசாங்கமோ, தொழிற் சங்கங்களோ, கட்சியின் மத்தியக் கமிட்டியோ தவற விடுவதாய் யாராலும் சொல்ல முடியாது. ஆனல் நாட்டில் இல்லாமை மிகக் கடுமையாயிருக்கிறது, எங்கும் பசியும் வறுமையும் தலைவிரித் தாடுகின்றன, அடிக்கடி இது செயலின்மைக்கு இட்டுச் செல்கிறது என்பது நமக்குத் தெரியும். ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூற நாம் அஞ்ச வேண்டியதில்லை: இந்தப் பேரிடர்களும் கேடுகளும்தான் வெகுஜன ஆற்றலுக்குத் தடை போடுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் நிர்வாக வாரியங்களின் உறுப்பினர்களில் 60 சதவீதத்தினர் தொழிலாளர்கள் என்பதாய்ப் புள்ளிவிவரங்கள் நமக்குக் கூறுகிறபோது, வேலைத் திட்டத்தில்—''தொழிற் சங்கங்கள் மெய்ந்நடப்பிலான செறிவை முடிவில் வந்தடைந்தாக வேண்டும்...'' என்பதாய் —கூறப்படுவதற்கு ஷ்லாப்னிக்கவின் பாணியில் விளக்கமளிக்க முயலுவது சிறிதும் முடியாத காரியம்.

வேலைத்திட்டத்துக்கு ஆதாரபூர்வமான விளக்கம் அளிக்கப்படுமாயின், நாம் அவசியமான போர்த்தந்திர ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் அவசியமான விவாதச் சுதந்திரத்துடன் இணைத்துக் கொள்ள அது வழி செய்யும். தீர்மானத்தின் இறுதியில் இது வலியுறுத்தப்படுகிறது. சாராம்சத்தில் அது கூறுவது என்ன? பாரா 6 வருமாறு:

''இவை யாவற்றையும் கருத்தில் கொண்டு ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய இந்தக் காங்கிரஸ், மேற்கூறிய கருத்துக்கள் சிண்டிக்கலிஸ்டு, அராஜகவாதத் திரிபைப் பிரதிபலிப்பவை என்று கூறி அவற்றைத் திட்டவட்டமாய் நிராகரிக்கிறது; முதலாவதாக, இந்தக் கருத்துக்களை எதிர்த்து பிறழாமலும் முறையாகவும் போராட்டம் நடத்து

வதும், இரண்டாவதாக, இந்தக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வது ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினராய் இருப்பதற்கு ஒவ்வாததென்பதை அங்கீகரிப்பதும் அவசிய மென இந்தக் காங்கிரஸ் தீர்மானம் செய்கிறது.

''இந்த முடிவுகளைக் கண்டிப்பாய்ச் செயல்படுத்தும்படிக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு ஆணையிட்டு, அதேபோதில் விசேஷப் பிரசுரங்களும் கருத்தரங்கு உரைகளும் பிறவும் இங்கு சுட்டிக்காட்டப் பெற்ற எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் கட்சி உறுப்பினர்களிடையே மிகவும் விரிவான அளவில் அபிப்பிராயப் பரிமாற்றம் நடைபெற இடம் அளிக்க முடியும், அளிக்கவும் வேண்டும் என்று இந்தக் காங்கிரஸ் குறிப்பிடுகிறது.''

ஏதேனும் ஒரு வழியில் கிளர்ச்சியாளர்களாகவும் பிரசாரகர்களாகவும் இருப்போர் நீங்கள் எல்லோரும்—போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கட்சிகளினுள் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கும், விசேஷப் பிரசுரங்களிலும் கருத்தரங்கு உரைகளிலும் அபிப்பிராயம் பரிமாறிக் கொள்வதற்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் கண்டு கொள்ள வில்லையா? இந்தத் தீர்மானத்தைப் புரிந்து கொள்ள முயலும் ஒவ்வொருவரும் இந்த வேறுபாட்டைக் கண்டு கொள்வார் என்று நான் திடமாய் நம்புகிறேன். இந்தத் திரிபின் பிரதிநிதிகள்—இவர்களை நாம் மத்தியக் கமிட்டியினுள் எடுத்துக் கொள்கிறோம்—கட்சிக் காங்கிரசின் முடிவுகள் குறித்து வர்க்க உணர்வுகொண்ட, கட்டுப்பாடுடைய கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரையும் போல அதே முறையில் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விசேஷ நிலைமையை ஏற்படுத்தாமல் மத்தியக் கமிட்டியினுள், அவர்களுடைய உதவியுடன், இந்த விவகாரத்தைப் பரிசீலித்து நாம் முடிவு செய்வோமென எதிர்பார்க்கிறோம். கட்சியில் நடைபெறுவது என்ன—போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கட்சியினுள் கருத்துக்கள் பிரசாரம் செய்யப்படுகின்றனவா, அல்லது விசேஷப் பிரசுரங்களிலும் கருத்தரங்கு உரைகளிலும் அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ளப்படுகிறதா—என்பதை நாம் பரிசீலித்து முடிவு செய்வோம். எங்கெல்சிடமிருந்தான மேற்கோள்களை உன்னிப்பாய் ஆய்ந்தறிவதில் நாட்டமுடைய

எவருக்கும் இது நல்ல வாய்ப்பாகும். கட்சிக்கு எப்பொழுதும் பயனுள்ள ஆலோசனை கூறக் கூடிய தத்துவவாதிகள் நம்மிடம் இருக்கிறார்கள். அது அவசியமாகும். இரண்டு மூன்று பெரிய திரட்டுகளை நாம் வெளியிடுவோம்—அது பயனுடையது, முற்றிலும் அவசியமானது. ஆனால் கருத்துக்களின் பிரசாரத்தையோ, கொள்கைத் திட்டங்களிடையிலான மோதலையோ போன்றதா இது? இவை இரண்டையும் போட்டுக் குழப்ப எப்படி முடியும்? நமது அரசியல் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள விரும்புகிற எவரும் இவற்றைக் குழப்ப மாட்டார்.

நமது அரசியல் பணிக்கு, முக்கியமாய்க் கடினமான ஒரு சூழ்நிலையில், இடையூறு செய்ய வேண்டாம். ஆனால் உங்களுடைய விஞ்ஞான ஆராய்ச்சி வேலையைத் தொடர்ந்து நடத்துங்கள். தோழர் ஷ்லாப்னிக்கவ் தலைமறைவுப் புரட்சிப் போராட்டத்தில் தமது அனுபவங்களைப் பற்றி அண்மையில் வெளியிட்ட அவருடைய புத்தகத்துடன்கூட, ''உற்பத்தியாளர்'' என்னும் கருத்தினத்தைப் பகுத்தாய்ந்து வருகிற சில மாதங்களில் தமது உபரி நேரத்தில் இரண்டாவது ஒரு புத்தகத்தையும் வெளியிடுவாராயின் நாம் மிக்க மகிழ்ச்சியுறுவோம். ஆனால் இத் தீர்மானம் நமக்கு ஒரு மைல்கல்லாய்ப் பயன்படும். மிகவும் விரிவான, மிகவும் சுதந்திரமான விவாதத்தை நாம் துவக்கி வைத்தோம். தொழிலாளர் எதிர்த்தரப்பினரது கொள்கைத் திட்டம் கட்சியின் மத்தியப் பத்திரிகையில் 2,50,000 பிரதிகளாய் வெளிவந்தது. எல்லாக் கோணங்களிலிருந்தும் நாம் அதைச் சீர்தூக்கிப் பார்த்தோம், அதன் அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தோம், முடிவில் இந்தக் காங்கிரசைக் கூட்டினோம். இந்தக் காங்கிரஸ் அரசியல் விவாதத்தைத் தொகுத்துரைத்து இவ்வாறு கூறுகிறது: ''இந்தத் திரிபு வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது, நாம் ஒளிந்து விளையாடப் போவதில்லை, திரிபு திரிபுதான், அதைச் சரிசெய்தே ஆக வேண்டுமென்று பகிரங்கமாய்ச் சொல்வோம். அதை நாம் சரி செய்துவிடுவோம். இந்த விவாதம் தத்துவார்த்த விவாதமாய் நடைபெறும்''.

எனவேதான், நாம் இந்த இரு தீர்மானங்களையும் ஏற்றுக் கொண்டு, கட்சியின் ஒற்றுமையை மேலும் உறுதி பெறச்

செய்வோம் என்றும், கட்சிக் கூட்டங்களில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை எவை, தனி நபர்கள்—தத்துவார்த்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து கட்சிக்கு உதவ விரும்பும் மார்க்சியவாதிகள், கம்யூனிஸ்டுகள்—தமது உபரி நேரத்தில் ஆராய்ந்தறிய முற்படக் கூடியவை எவை என்று சரிவர வரையறை செய்வோம் என்கிற பிரேரணையை நான் திரும்பவும் எடுத்துரைத்து ஆதரிக்கிறேன். (கையொலி முழக்கம்.)

1921 மார்ச் 30ல்
பிராவ்தா, இதழ் 68ல்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 43,
பக்கங்கள் 98-106

■ பதிப்பாளர் குறிப்புகள்

[1] ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் மறுப்புரை'' — லெனின் சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டிருந்த காலத்தில் 1899ல் அவர் எழுதியது. ருஷ்யாவிலிருந்த திருத்தல் வாதிகளில் பொருளாதாரவாதிகள் என்றழைக்கப்பட்ட ஒரு கோஷ்டியின் அறிக்கையான *Credo*வை (கொள்கைத் திட்டம், கண்ணோட்டம்) எதிர்த்து அவர் இதை எழுதினார்.

இந்த மறுப்புரை வெளிநாடுகளிலிருந்த உழைப்பு விடுதலைக் குழுவினருக்கு அனுப்பப்பட்டது. வெளிநாடுகளிலிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது சங்கத்தினுடைய ரபோச்சியே தேலோ சஞ்சிகையின் 4-5ஆம் இதழில் வெளிவந்த இது துண்டுப் பிரசுரமாய் அச்சிடப்பட்டது. பக்கம் 7

[2] **உழைப்பு விடுதலைக் குழு**—முதலாவது ருஷ்ய மார்க்சியக் குழு. 1883ல் ஜெனீவாவில் கியோர்கி பிளெஹானவால் நிறுவப்பட்டது. ருஷ்யாவில் விஞ்ஞான சோஷலிசத்தைப் பரப்புவதும், நரோத்னிக்குகளை விமர்சிப்பதும், ருஷ்யாவில் இருந்து வந்த நிலைமைகளை மார்க்சியக் கண்ணோட்டத்திலிருந்து பரிசீலிப்பதும்தான் இக்குழுவினரின் குறிக்கோள். மார்க்ஸ், எங்கெல்சின் அடிப்படை நூல்களை (கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை, கூலி உழைப்பும் மூலதனமும், கற்பனா சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும், லுத்விக் ஃபாயர்பாக், மற்றும் பல) இக்குழு ருஷ்யனில் மொழிபெயர்த்து ருஷ்யாவில் பரவச் செய்தது; மற்றும் பிளெஹானவின் பல நூல்களையும் அது வெளியிட்டது—ருஷ்ய மார்க்சியவாதிகளின் பல தலைமுறையினர் இவற்றைப் படித்துப் போதம் பெற்றனர்.

அங்கீகரிக்கப்படும்படிச் செய்வதில் வெற்றி பெற்றுர். பக்கம் 16

[8] புருதோனியம் — விஞ்ஞானத்துக்கு முரணுன, மார்க்சியத்துக்குப் பகைமையான குட்டிபூர்ஷுவா சோஷலிசப் போக்கு. பிரெஞ்சு அராஜகவாதி ழொஸேப் புருதோன் தான் இதன் சித்தாந்தவாதி. பெரிய முதலாளித்துவ உடைமைகளைப் புருதோன் குட்டிபூர்ஷுவாக் கருத்தோட்டத்திலிருந்து கண்டன விமர்சனம் செய்தார். சின்னஞ் சிறு தனிவுடைமையாளர்களை என்றும் நிலைத்து நீடிக்கச் செய்யலாமென நினைத்தார். பக்கம் 16

[9] லஸ்ஸாலியர்கள் — ஜெர்மன் குட்டிபூர்ஷுவா சோஷலிஸ்டான ஃபெர்டிநண்டு லஸ்ஸாலைப் (1825-64) பின்பற்றியவர்கள். லஸ்ஸால் 1863ல் ஜெர்மன் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தை நிறுவுவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். ஜெர்மன் தொழிலாளர்களது அரசியல் நிறுவனமான இந்தச் சங்கம் 1875 வரை இருந்து வந்தது. இதன் அரசியல் கோரிக்கைகளை லஸ்ஸால் பல கட்டுரைகளிலும் பேச்சுக்களிலும் எடுத்துரைத்து வந்தார். அரசானது வர்க்கங்களுக்கு மேலானது என்பதான கருத்துமுதல்வாத அபிப்பிராயங்கள் கொண்டிருந்தார். ஆகவே அரசின் பொருளுதவியுடனுன தொழிலாளர் உற்பத்திக் கழகங்களை நிறுவுவதன் மூலம் சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பிரஷ்ய அரசைப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமே என்று கூறினுர். தொழிலாளர்கள் முற்றிலும் சமாதான பூர்வமாய், பாராளுமன்ற வழியில் போராடுவதையே லஸ்ஸால் ஆதரித்தார். அனைத்து மக்கள் வாக்குரிமை கிடைத்ததும் பிரஷ்ய அரசு ''சுதந்திர மக்கள் அரசாகிவிடும்'' என்று கூறினுர். அனைத்து மக்கள் வாக்குரிமைக்குரிய சட்டத்தைப் பெறுவதற்காக பிஸ்மார்க்குடன் அவர் தொடர்புகள் கொண்டிருந்தார்; மிதவாத எதிர்த்தரப்பினரை எதிர்த்து பிஸ்மார்க் நடத்திய போராட்டத்திலும் மற்றும் ''மேலிருந்து'' பிரஷ்ய மேலாதிக்கத்தின்கீழ் ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கான பிஸ்மார்க் திட்டங்களிலும் ஜெர்

மன் தொழிலாளர்களது பொதுச் சங்கம் பிஸ்மார்க்கிற்கு ஆதரவாயிருக்குமென்று உறுதியளித்தார். வர்க்கப் போராட்டத்துக்கான புரட்சிகர முறைகளை லஸ்ஸால் எதிர்த்தார்; தொழிற்சங்கங்கள், வேலைநிறுத்தப் போராட்டம் இவற்றின் முக்கியத்துவத்தை மறுத்தார்; தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமைகளை உதாசீனம் செய்து தேசியவாதக் கருத்துக்கள் ஜெர்மன் தொழிலாளர்களைப் பீடித்துக் கொள்ளச் செய்தார். விவசாயிகளை அவர் பிற்போக்கு சக்தியாய்க் கருதி அவர்கள் குறித்து அனுசரித்த ஏளனமான போக்கினால் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்துக்குப் பெருந் தீங்கு உண்டாயிற்று. மார்க்சும் எங்கெல்சும் லஸ்ஸாலின் தீயக் கற்பனாவாத வறட்டுச் சூத்திரங்களையும் சீர்திருத்தவாதக் கருத்துக்களையும் எதிர்த்துப் போராடினர். ஜெர்மன் தொழிலாளர்கள் தம்மை இந்தச் சந்தர்ப்பவாதப் போக்கின் செல்வாக்கிலிருந்து விடுவித்துக் கொள்ள மார்க்ஸ் எங்கெல்சின் விமர்சனம் துணை புரிந்தது. பக்கம் 18

10 தொழிலாளி வர்க்கமல்லாத ஏனைய எல்லா வர்க்கங்களும் பிற்போக்கானவை என்பதாக மொத்தையாய் ஒன்று சேர்த்திடும் லஸ்ஸாலியக் கூற்றினை லெனின் இங்கு கண்டிக்கிறார். பக்கம் 19

11 ரபோச்சயா மீசில் (''தொழிலாளர் சிந்தனை'') — ''பொருளாதாரவாதிகளின்'' செய்தியேடு. 1897 அக்டோபருக்கும் 1902 டிசம்பருக்கும் இடையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க், பெர்லின், வார்சா, ஜெனீவா ஆகிய இடங்களில் 16 இதழ்கள் வெளியிடப்பட்டன.

பக்கம் 22

12 எஸ். பித்தெர்பூர்க்ஸ்கி ரபோச்சி லிஸ்தோக் (''செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் ஏடு'') — செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்தின் பத்திரிகை, சட்டவிரோதமாய் வெளியிடப்பட்டது. இரண்டு இதழ்கள் வெளிவந்தன: முதலாவது இதழ் 1897 பிப்ரவரியிலும் (ஜனவரி தேதி

யிடப்பட்டது) செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலும் இரண்டாவது இதழ் 1897 செப்டம்பரில் ஜெனீவாவிலும் வெளிவந்தன. பக்கம் 22

[13] ரபோச்சயா கஸேத்தா ("தொழிலாளர் செய்தியேடு") —கீவ் சமூக-ஜனநாயகக் குழுவின் சட்டவிரோத ஏடு. 1897 ஆகஸ்டில் முதல் இதழும் அதே ஆண்டு டிசம்பரில் (நவம்பர் தேதியிட்டு) இரண்டாவது இதழுமாய் இரு இதழ்கள் வெளிவந்தன. பக்கம் 22

[14] ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதலாவது காங்கிரஸ் 1898 மார்ச் மாதத்தில் மின்ஸ்க் நகரில் நடைபெற்றது. செயின்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, எக்கத்தெரீனஸ்லாவ், கீவ் தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகங்கள், கீவ் ரபோச்சயா கஸேத்தா குழு, பூந்த் ஆகிய ஆறு நிறுவனங்களைச் சேர்ந்த ஒன்பது பிரதிநிதிகள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். பக்கம் 23

[15] நரோத்னயா வோல்யா ("மக்கள் சித்தம்") — ஜாரிஸ்டு எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காக 1879ல் நரோத்னிக்குகள் நிறுவிய இரகசியப் புரட்சி நிறுவனம். வெகுஜனங்கள் செயலற்றவர்கள், சதிக் குழுவினராய்ச் செயல்படும் தனிப்பட்ட அறிவுத்துறையினர்தான் புரட்சிப் போராட்டத்தை நடத்திச் செல்ல வேண்டியவர்கள் என்கிற தவறான, தீய தத்துவத்தால் வழிகாட்டப் பெற்ற இவர்கள் எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதென்னும் தமது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அரசியல் கொலைதான் உகந்த வழியெனக் கருதினர். ஜார் அரசன் இரண்டாம் அலெக்சாந்தர் 1881 மார்ச் 1ல் (13) இந்நிறுவனத்தின் உறுப்பினர்களால் கொல்லப்பட்டபின் இது ஈவிரக்கமின்றி அரசாங்கத்தால் நசுக்கப்பட்டது. பக்கம் 25

[16] வெளிநாடுகளிலுள்ள ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது சங்கம் —உழைப்பு விடுதலைக் குழுவின் முன்முயற்சி பேரில் 1894ல் ஜெனீவாவில் நிறுவப்பட்டது. இதனிடம் அச்

சகம் இருந்தது, இதில் அது ரபோத்னிக் (''தொழிலாளி'') என்ற தலைப்பில் சஞ்சிகையையும் புரட்சிகர நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டது. தொடக்கத்தில் உழைப்பு விடுதலைக் குழுவினர் இதன் பணிகளுக்குத் தலைமை தாங்கினர், இதன் வெளியீடுகளைப் பதிப்பித்தனர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதலாவது காங்கிரஸ் (1898 மார்ச்) இந்தச் சங்கத்தை வெளிநாடுகளிலிருந்த கட்சியின் பிரதிநிதியாய் அங்கீகரித்தது. பிற்பாடு சந்தர்ப்பவாதக் கோஷ்டி (''இளைஞர்கள்'' அல்லது ''பொருளாதாரவாதிகள்'') இந்தச் சங்கத்தில் மேல்நிலை பெற்றுவிடவே, 1898 நவம்பரில் நடைபெற்ற இந்தச் சங்கத்தின் முதலாவது காங்கிரசில் உழைப்பு விடுதலைக் குழுவினர் அதன் வெளியீடுகளை இனி தாம் பதிப்பிக்க மறுப்பதாய் அறிவித்தனர். இறுதி முறிவு 1900 ஏப்ரலில் சங்கத்தின் இரண்டாவது காங்கிரசில் ஏற்பட்டது. உழைப்பு விடுதலைக் குழுவினரும் அவர்களுடைய ஆதரவாளர்களும் இந்தக் காங்கிரசிலிருந்து வெளிநடப்பு செய்து, சுயேச்சையான சமூக-ஜனநாயகவாதி என்னும் நிறுவனத்தை அமைத்துக் கொண்டனர்.

பக்கம் 26

17 *Die Neue Zeit* (''புதிய காலம்'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தத்துவார்த்த சஞ்சிகை. 1883லிருந்து 1923 வரை ஷ்டுட்கார்ட்டிலிருந்து வெளியிடப்பட்டு வந்தது. தொண்ணூறும் ஆண்டுகளின் பிற்பாதியில் எங்கெல்ஸ் இறந்தபின் இந்த சஞ்சிகை திருத்தல்வாதக் கட்டுரைகளை முறையாய் வெளியிடத் தொடங்கிற்று. முதல் உலகப் போரின்போது இது மையவாத, காவுத்ஸ்கிவாத நிலையை ஏற்று, சமூக-தேசியவெறியர்களுக்குப் பெருமளவில் ஆதரவு அளித்து வந்தது.

பக்கம் 27

18 **கறுப்பு நூற்றுவர்** — புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீஸ் நிறுவிய முடியாட்சிக் குண்டர் கும்பல்கள். கறுப்பு நூற்றுவர் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்

துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர். பக்கம் 30

19 பிரென்தனோவியம்—''மிதவாத-முதலாளித்துவத் தத்துவம், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சியல்லாத 'வர்க்கப்' போராட்டத்தை'' ஏற்றுக் கொண்டது (வி. இ. லெனின்); தொழிலாளர் பிரச்சினைக்கு முதலாளித்துவக் கட்டுக் கோப்பினுள்ளேயே ஆலைச் சட்டங்கள் இயற்றியும் தொழிலாளர்களைத் தொழிற் சங்கங்களில் ஒன்று திரட்டியும் தீர்வு கண்டு விடலாமென்ற கருத்தைப் பரப்பிற்று. ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளரான எல். பிரென்தனோவின் பெயரில் இது அழைக்கப்படலாயிற்று.

ஸ்துருவேவியம்—''சட்டபூர்வ மார்க்சியம்''—மார்க்சியத்தை மிதவாத-முதலாளித்துவ வழியில் திரிக்கும் போக்கு. ருஷ்யாவில் ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' தலைமைப் பிரதிநிதியாய் இருந்த பி. பெ. ஸ்துருவே என்பவரின் பெயரால் அழைக்கப்பட்டது. ஸ்துருவேயின் தலைமையில் ''சட்டபூர்வ மார்க்சியவாதிகள்'' மார்க்சியத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்றபடி பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். ஸ்துருவேவியம் மார்க்சியத்திலிருந்து மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஏற்றதை எல்லாம் கடன்வாங்கிக் கொண்டு மார்க்சியத்தின் சாரமான அதன் புரட்சிகர ஆன்மாவை—முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இவை குறித்த தத்துவத்தை—நிராகரித்துவிடுகிறது என்று லெனின் சுட்டிக்காட்டினார். ஸ்துருவே முதலாளித்துவ அமைப்பைப் போற்றிப் புகழ்ந்தார், ''முதலாளிகளிடமிருந்து கற்றறிந்து கொள்ள வேண்டும்''. என்று வாதாடினார்.

ஸொம்பார்த்தியம் — மிதவாத சித்தாந்தவாதியும் ஜெர்மன் முதலாளித்துவக் கொச்சைப் பொருளியலாளருமான வி. ஸொம்பார்த்தின் பெயரில் அழைக்கப்ப...

மிதவாத-முதலாளித்துவப் போக்கு. ஸொம்பார்த், ''மார்க்சியப் பதங்களைக் கையாண்டு, மார்க்சின் வாக்குகள் சிலவற்றை மேற்கோளாய் அளித்து, மார்க்சியத்தைக் காப்பியடித்து மார்க்சியத்துக்குப் பதிலாய் பிரென்தனோவியத்தை அதனிடத்தில் அமர்த்துகிறார்'' என்று லெனின் எழுதினார். பக்கம் 33

20 இங்கு குறிக்கப்படுவது பாரிஸ் கம்யூன். வரலாற்றின் முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமான பாரிஸ் கம்யூன் வெற்றிகரப் பாட்டாளி வர்க்கத்தால் பாரிசில் 1871 மார்ச் 18ல் நிறுவப் பெற்ற அரசாங்கமாகும். மே 28 வரை—73 நாட்களுக்கு—இது நிலவிற்று. பக்கம் 34

21 1905 டிசம்பரில் மாஸ்கோவில் நடைபெற்ற ஆயுதமேந்திய எழுச்சி இங்கு குறிப்பிடப்படுகிறது. பக்கம் 34

22 மார்க்ஸ் 1870 செப்டம்பர் 9ல் லண்டனில் எழுதிய ''பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம் குறித்து சர்வதேசத் தொழிலாளர் சங்க ஜெனரல் கவுன்சிலின் இரண்டாவது அறிக்கை''யை லெனின் இங்கு குறிப்பிடுகிறார். பக்கம் 34

23 **காப்புக் கூண்டு மனிதன்**—இத்தலைப்பிலுள்ள சேஹவின் சிறு கதையின் முக்கியக் கதாபாத்திரம். மாறுதல், முன்முயற்சி என்றதும் பயந்து நடுங்கும் சிறுமதி கொண்ட அற்பன். பக்கம் 37

24 பாரிஸ் கம்யூனின் போது எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் தலைமையிடம் வெர்சேயில் இருந்தது. பக்கம் 37

25 **காடேட்டுகள்** — அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியின் (கான்ஸ்டிட்யூஷனல்-டெமாக்கிராட்டிக் பார்டி) உறுப்பினர்கள். ருஷ்யாவின் மிதவாத-முடியாட்சி முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையான கட்சியாக இருந்தது. இது 1905 அக்டோபரில் துவக்கப்பட்டதாகும். பக்கம் 38

26 ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ் (இரண்டாவது அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ்) 1907 ஆக்ஸ்டு 18-24ல் (புது முறை) நடைபெற்றது. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் சார்பில் 37 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிரலில் பின்வரும் பிரச்சினைகள் இடம் பெற்றிருந்தன: (1) இராணுவவெறியும் சர்வதேச மோதல்களும்; (2) அரசியல் கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்குமுள்ள உறவுகள்; (3) காலனிப் பிரச்சினை; (4) தொழிலாளர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறுவதும் வெளிநாடுகளுக்குக் குடிசெல்வதும்; (5) பெண்களுக்கு வாக்குரிமை. முழுநிறை அமர்வுகளுக்குத் தீர்மானங்களை வகுத்திட்ட கமிஷன்களில் காங்கிரசின் பிரதான பணிகள் நடந்தேறின. ''இராணுவவெறியும் சர்வதேச மோதல்களும்'' என்பது பற்றிய தீர்மானத்தை வகுத்திட்ட கமிஷனின் பணியில் லெனின் பங்கெடுத்துக் கொண்டார். பெபெலின் நகல் தீர்மானத்தில் ரோசா லுக்சம்பர்குடன் சேர்ந்து லெனின் பல திருத்தங்கள் செய்தார். இந்தத் திருத்தங்களில் ஒன்று யுத்தத்தால் தோற்றுவிக்கப்பட்ட நெருக்கடியைப் பயன்படுத்தி வெகுஜனங்களைப் புரட்சி மனப்பாங்குடையோராக்குவதிலும் முதலாளித்துவத்தை வீழ்த்துவதிலும் சோஷலிஸ்டுகளுக்குள்ள கடமை பற்றியதாகும். இந்தத் திருத்தங்கள் காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பக்கம் 41

27 இந்தக் கட்டுரையைத் தாங்கி வந்த புரொலெத்தாரி, இதழ் 17ல் இரண்டாவது அகிலத்தின் ஷ்டுட்கார்ட் காங்கிரசினுடைய தீர்மானங்களும் வெளிவந்திருந்தன. பக்கம் 41

28 ஃபேபியன் கழகம் [Fabian Society] — 1884ல் நிறுவப்பட்ட பிரிட்டிஷ் சீர்திருத்தவாத நிறுவனம். ஃபேபியஸ் மாக்சிமஸ் (கி. மு. மூன்றும் நூற்றுண்டு) என்னும் ரோமானியத் தளபதியின் பெயரை இக்கழகம் தனக்குச் சூட்டிக் கொண்டது. ஹனிபாலுக்கு எதிரான யுத்தத்தில் முடிவுகட்டவல்ல போர்களைத் தவிர்த்துக் கொண்டு

ஒத்திப்போட்டுச் செல்லும் தந்திரத்தைக் கையாண்டதால் இந்தத் தளபதி ''குன்க்டேட்டர்'' (தாமதவாதி) என்ற துணைப்பெயர் பெறலாயினர். ஃபேபியன் கழகத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் முதலாளித்துவ அறிவுத்துறையினராகிய விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் முதலானோர். பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தை ஃபேபியன்கள் மறுத்தனர்; பாட்டாளி வர்க்கப் புரட்சியை மூர்க்கமாய் எதிர்த்தார்கள்; சிறிய சமுதாயச் சீர்திருத்தங்கள், அதாவது படிப்படியான மாற்றங்கள் மூலமாய்த்தான் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்றனர். பக்கம் 45

29 இங்கு குறிக்கப்படுவது 1906 ஏப்ரல் 10லிருந்து 25 வரை (ஏப்ரல் 23லிருந்து மே 8 வரை) ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நான்காவது (இணைப்பு) காங்கிரஸ்.

பக்கம் 46

30 **சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்** — 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பட்ட குட்டி பூர்ஷுவாக் கட்சியின் உறுப்பினர்கள். நிலத்தில் தனி உடைமை ஒழிக்கப்பட வேண்டுமென்றும், சமத்துவ நிலவுரிமைக் கோட்பாடுகளின் அடிப்படையில் உபயோகித்துக் கொள்ளப்படுவதற்காக நிலங்கள் கிராமக் சமுதாயங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும் கோரினர். அவர்கள் தமக்குச் சூட்டிக் கொண்ட பெயர் எப்படி இருப்பினும், அவர்களுடைய வேலைத்திட்டத்தில் சோஷலிஸ்டு அடக்கம் எதுவும் இருக்கவில்லை. ஏனெனில் தொழிலாளி வர்க்க அரசாங்கம் நிறுவப்பட்டு பிரதான உற்பத்திச் சாதனங்கள் யாவற்றையும் (பாங்கிகள், பெரிய ஆலைகள், சுரங்கங்கள், ரயில்பாதைகள்) அது தனக்குரியவை ஆக்கிக் கொள்ளாமல், நிலத்தில் தனி உடைமையை ஒழித்திடுவதால் மட்டும் முதலாளித்துவச் சுரண்டலை அகற்றிவிட முடியாது. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயி

களுக்கும் இடையிலுள்ள வர்க்கப் பாகுபாடுகளைப் பார்க்கத் தவறினர்; விவசாயிகளிடையே, உழைக்கும் விவசாயிகளுக்கும் பணக்காரக் குலாக்குகளுக்குமிடையே, நிலவும் வர்க்க வேறுபாட்டையும் பகைமைகளையும் உதாசீனம் செய்தனர்; புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை நிராகரித்தனர். அவர்களுடைய அரசியல் சாகசவாதத் தன்மையதாய் இருந்தது, தனி நபர் பயங்கரவாதச் செயல்களே ஜாரிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கான பிரதான வழி என்று அவர்கள் கருதினர்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். இக்கட்சியின் தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். நிலப்பிரபுக்களது நிலவுடைமைப் பண்ணைகளை ஒழிக்க வேண்டுமென்ற விவசாயிகளது கோரிக்கைக்கு ஆதரவளிப்பதை சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி கைவிட்டுவிட்டது. இடைக்கால அரசாங்கத்திலிருந்த இக்கட்சியின் அமைச்சர்கள் நிலப்பிரபுக்களது பண்ணைகளைப் பிடித்துக் கொண்ட விவசாயிகளுக்கு எதிராய்த் தண்டப் படைகளை அனுப்பினர்.

ருஷ்யாவில் ஆயுதமேந்திய அந்நியத் தலையீட்டின் போதும் உள்நாட்டு யுத்தத்தின்போதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் சோவியத் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினர்.

பக்கம் 46

31 இங்கு குறிப்பிடப்படுவது 1907 ஏப்ரல் 30லிருந்து மே 19 வரை (மே 13லிருந்து ஜூன் 1 வரை) லண்டனில் நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஐந்தாவது காங்கிரஸ். பக்கம் 46

32 *Die Gleichheit* (''சமத்துவம்'') — மாதமிருமுறை வெளிவந்த சமூக-ஜனநாயக சஞ்சிகை. ஜெர்மன் தொழிலாளர் மாதர் இயக்க வெளியீடு. 1890 முதல் 1925 வரை

வெளிவந்தது. 1892லிருந்து 1917 வரையில் கிளாரா ஸெத்கின் இதன் ஆசிரியராய் இருந்தார்.

பக்கம் 46

33 இளம் ஹெகலியர்கள் — ஜெர்மனியின் கருத்துமுதல்வாதத் தத்துவவியல் போக்கான ஹெகலியத்தின் இடதுசாரிப் பிரதிநிதிகள்.

பக்கம் 53

34 பக்கூனினியம்—அராஜகவாதத்தின் சித்தாந்தவாதியாயும் மார்க்சியத்தின் பகைவருமான மி. அ. பக்கூனின் பெயரில் அழைக்கப்பட்ட போக்கு. பக்கூனினியர்கள் தொழிலாளர் இயக்கத்தின் மார்க்சியத் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் எதிர்த்துப் பிடிவாதமாய்ப் போராட்டம் நடத்தினர். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அடங்கலாய் எல்லா வகையான அரசையும் மறுப்பதும், பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவமுள்ள பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாததும் பக்கூனினியத்தின் அடிப்படை இயல்புகளாகும். பக்கூனினியர்களது கருத்துப்படி ''உன்னத நபர்கள்'' அடங்கிய இரகசியப் புரட்சிச் சங்கம் மக்களுடைய எழுச்சிகளுக்குத் தலைமை தாங்க வேண்டும். சதிகளும் பயங்கரவாதச் செயல்களும் மிக்க அவர்களுடைய போர்த்தந்திரம் சாகசவாதமாகவும் எழுச்சி பற்றிய மார்க்சியப் போதனைக்குப் பகைமையானதாகவும் இருந்தது.

முதலாவது அகிலத்தினுள் புகுந்து கொண்ட பக்கூனின் அதன் ஜெனரல் கவுன்சிலைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் மார்க்சை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். சீர்குலைவு வேலைகளுக்காக 1872ல் பக்கூனின் முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார். பக்கூனினியர்களின் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் மார்க்சும் எங்கெல்சும் கடுமையாய்க் கண்டனம் செய்தனர்.

பக்கம் 53

35 சமூக-நரோத்னிக்குகள்—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்.

பக்கம் 55

36 மூலதனம் முதற்பாகத்தின் இரண்டாம் பதிப்புக்கு மார்க்ஸ்

எழுதிய பின்னுரையிலிருந்து லெனின் மேற்கோள் தருகிறார்.
பக்கம் 56

37 லெனின் இங்கு பொருள்முதல்வாதமும் அனுபவவாத-விமர்சனமும் என்ற தமது நூலைக் குறிப்பிடுகிறார்.
பக்கம் 57

38 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனும் முதலாவது ருஷ்யப் புரட்சியின்போது 1905 டிசம்பர் மாத மாஸ்கோ ஆயுதமேந்திய எழுச்சியும் இங்கு குறிக்கப்படுகின்றன.
பக்கம் 61

39 மில்லிரண்டிசம் — பிரெஞ்சு சோஷலிஸ்டுச் சீர்திருத்தவாதி மில்லிராண்டின் [Millerand] பெயரைப் பெற்ற சந்தர்ப்பவாதப் போக்கு. 1899ல் மில்லிராண்டு பிரெஞ்சுப் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டு முதலாளித்துவ வர்க்கம் அதன் கொள்கையைச் செயல்படுத்த உதவினார்.

சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து அதனுடன் ஒத்துழைக்கலாமா என்ற பிரச்சினை 1900ல் இரண்டாவது அகிலத்தின் பாரிஸ் காங்கிரசில் விவாதிக்கப்பட்டது. முதலாளித்துவ அரசாங்கத்தில் சோஷலிஸ்டுகள் பங்கு கொள்வதைக் கண்டனம் செய்தும், அதேபோதில் ''விதிவிலக்கான'' சந்தர்ப்பங்களில் சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வது அனுமதிக்கப்படத்தக்கதாய்க் கருதப்படலாமென்றும் கூறிய காவுத்ஸ்கியின் அரை மனதான தீர்மானத்தை இந்தக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. 1914-18 யுத்தத்தின் தொடக்கத்தில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசாங்கத்தில் தாம் பங்கு கொண்டதற்கு நியாயம் கூற இந்த விலக்கீட்டு வரையறையைப் பயன்படுத்திக் கொண்டனர்.
பக்கம் 62

40 கெட்டிஸ்டுகள் [Guesdists]—19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் ழூல் கெட்டு, போல்

லபார்க் இவர்கள் தலைமையில் செயல்பட்ட புரட்சிகர மார்க்சியப் போக்கு. பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியில் 1882ல் செயின்ட் எட்டீன் காங்கிரசில் பிளவு ஏற்பட்டபின் கெட்டிஸ்டுகள் பழைய பெயரிலேயே சுயேச்சையான ஒரு கட்சியை நிறுவினர்.

கெட்டின் தலைமையில் 1901ல் நடைபெற்ற புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் ஆதரவாளர்கள் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் ஒன்றுபட்டனர் (இதன் உறுப்பினர்கள், கட்சியின் தலைவருடைய பெயரில் கெட்டிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர்).

ழொரேசிஸ்டுகள் [Jaurèsists] — பிரெஞ்சு சோஷலிஸ்டு ழான் ழொரேசின் ஆதரவாளர்கள். கடந்த நூற்றுண்டின் ஒன்பதாம் ஆண்டுகளில் அவரும் மில்லிராண்டும் "சுயேச்சை சோஷலிஸ்டுகளின்" குழுவை நிறுவி, பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தினுள் வலதுசாரி, சீர்திருத்தவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். 1902ல் இவர்கள் சீர்திருத்தவாத நிலையை ஏற்ற பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டனர்.

புருசிஸ்டுகள் [Broussists] (சாத்தியப்பாடுவாதிகள்) (பி. புருஸ், பி. மலோன் முதலானோர்)—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் 19ஆம் நூற்றுண்டின் 80ஆம் ஆண்டுகளில் தோன்றிய குட்டிபூர்ஷுவா, சீர்திருத்தவாதப் போக்கு. இவர்கள் தொழிலாளர் சமுதாயப் புரட்சிக் கட்சி என்பதாய் ஒன்றை அமைத்துக் கொண்டனர். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வேலைத் திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் மறுத்தனர், தொழிலாளர் இயக்கத்தின் சோஷலிஸ்டுக் குறிக்கோள்களை மூடிமறைத்தனர், தொழிலாளர் போராட்டத்தை எது சாத்தியமோ அந்த வரம்புக்குள் இருக்கச் செய்ய வேண்டும் என்றனர். இதிலிருந்து அவர்கள் சாத்தியப்பாடுவாதிகள் என்று பெயர் பெறலாயினர். பிரான்சில் பொருளாதார வழியில் பிற்பட்டனவாய் இருந்த பகுதிகளிலும் தொழிலாளி வர்க்கத்தில் குறைந்த வளர்ச்சி பெற்றிருந்த பகுதியினரிடையிலுமே இவர்கள் செல்வாக்கு பெற்றிருந்தனர்.

சாத்தியப்பாடுவாதிகளில் பெரும்பாலோர் ழான் ழொரேசின் தலைமையில் 1902ல் துவக்கப்பட்ட சீர் திருத்தவாத பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டனர். 1905ல் இக்கட்சியுடன் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி இணைந்து கொண்டது.

பக்கம் 63

41 பிரிட்டிஷ் சமூக-ஜனநாயகச் சம்மேளனம் [The Social Democratic Federation] 1884ல் நிறுவப்பட்டது. சீர்திருத்தவாதிகளுடன்கூடவே (ஹைண்ட்மனும் ஏனையோரும்) மார்க்சிய நிலையை மேற்கொள்ளும் ஆங்கிலேய சோஷலிச இயக்க இடதுசாரிப் பிரிவினரான புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளும் அதில் இருந்தனர்.

பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி [The Independent Labour Party] — 1893ல் நிறுவப்பட்ட சீர்திருத்தவாத நிறுவனம். அது முதலாளித்துவ-சீர்திருத்தவாதக் கொள்கையைப் பின்பற்றியது; பாராளுமன்றப் போராட்டத்திலும் மிதவாதக் கட்சியுடனை பாராளுமன்ற உடன்பாடுகளிலுமே பிரதான கவனம் செலுத்தி வந்தது. ''மெய்யான சந்தர்ப்பவாதக் கட்சியாகும், எப்பொழுதுமே இது முதலாளித்துவ வர்க்கத்தையே சார்ந்திருந்துள்ளது'' என்றும் ''சோஷலிசத்தை அல்ல, மிதவாதத்தையே இது பெரும்பாலும் சார்ந்திருந்துள்ளது'' என்றும் லெனின் இதைப்பற்றிக் கூறினர். பக்கம் 63

42 முழுமையாளர்கள் [integralists] — ஒரு வகைக் குட்டி பூர்ஷுவா சோஷலிசமான ''முழுமையான'' சோஷலிசம் என்பதன் ஆதரவாளர்கள். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியில் மையவாதப் போக்கினராய் இருந்த இவர்கள் இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் சில பிரச்சினைகளில் சீர்திருத்தவாதிகளை எதிர்த்துப் போராடினர். பிற்போக்கு முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைப்பது குறித்து இந்தச் சீர்திருத்தவாதிகள் கடைகோடியான சந்தர்ப்பவாத நிலையை அனுசரித்தனர்.

பக்கம் 63

43 **மென்ஷிவிக்குகள்** — ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கினர், சர்வதேசச் சந்தர்ப்ப வாதத்தின் ஒரு கிளையினர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) இப்போக்கினர் பகிரங்கமாய் வெளிவந்தனர். கட்சியின் மத்திய அமைப்புகளுக்காக இக்காங்கிரசில் நடந்த தேர்தல்களில் லெனினியவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றனர்; இவர்கள் **போல்ஷிவிக்குகள்** என்றும் (பெரும்பான்மையைக் குறிக்கும் ''போல்ஷின்ஸ் துவோ'' என்னும் ருஷ்யச் சொல்லிலிருந்து), மார்த்தவ் தலைமையில் இருந்த சிறுபான்மையோராய் அமைந்த சந்தர்ப்பவாதிகள் **மென்ஷிவிக்குகள்** என்றும் (சிறுபான் மையைக் குறிக்கும் ''மென்ஷின்ஸ்துவோ'' என்னும் ருஷ்யச் சொல்லிலிருந்து) அழைக்கப்படலாயினர்.

மென்ஷிவிக்குகள், கட்சியின் புரட்சிகர வேலைத்திட்டத் தை எதிர்த்து நின்றனர், புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கத் துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியை யும் எதிர்த்தனர். மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தா ருடன் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென்றனர். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் மென்ஷிவிக்குகள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமறை வான புரட்சிக் கட்சியை அழிக்க முயன்றனர். 1912 ஜன வரியில் ஆறுவது அனைத்துருஷ்யக் கட்சி மாநாடு அவர் களைக் கட்சியிலிருந்து விலக்கிற்று.

முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) மென் ஷிவிக்குகள் சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண் டனர். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத் தில் மென்ஷிவிக்குகள் அமைச்சர்களாய்ப் பதவி வகித்த னர். அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு ஏனைய எதிர்ப்புரட்சிக் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு சோவி யத் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினர்.

பக்கம் 63

44 **''புரட்சிகர சிண்டிக்கலிசம்''** — 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி

வர்க்க இயக்கத்தில் தோன்றிய குட்டிபூர்ஷுவா அரை-அராஜகவாதப் போக்கு. சிண்டிக்கலிஸ்டுகள் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அவசியத்தை மறுத்தனர்; கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தேவையையும் நிராகரித்தனர்; புரட்சி இல்லாமலே தொழிற் சங்கங்கள் (சிண்டிக் கேட்டுகள்) தொழிலாளர்களது பொது வேலைநிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத்தை வீழ்த்திவிடலாம், பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் கொண்டுவந்து விடலாமென்று கருதினர். பக்கம் 64

45 ''இளைஞர்கள்'' — ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் 1890ல் தோன்றிய குட்டிபூர்ஷுவா அரை-அராஜகவாதக் கோஷ்டி. ''மாணவ நுனிப்புல்லர்களும்'' இளம் எழுத்தாளர்களுமே இதன் பிரதான மையப் பகுதியாய் இருந்ததால், இக்கோஷ்டி இப்பெயரைப் பெற்றது. சமூக-ஜனநாயகவாதிகள் பாராளுமன்றத்தில் எந்தப் பங்கும் கொள்வதை இந்தக் கோஷ்டி தனது கொள்கைத்திட்டத்தில் எதிர்த்தது. ''புரட்சிகரப் பதப்பிரயோக'' வீரர்கள், ''சச்சரவுகளாலும் சூழ்ச்சிகளாலும் கட்சியைச் சீர்குலைக்க'' முயன்றவர்கள் என்று எங்கெல்ஸ் இவர்களைப் பற்றி கூறினர். 1891 அக்டோபரில் எர்ஃபுர்ட் காங்கிரசில் ''இளைஞர்கள்'' கோஷ்டி கட்சியிலிருந்து விலக்கப் பட்டது. பக்கம் 73

46 மலை [la Montagne], ழிரொந்தா என்பவை 18ஆம் நூற்றுண்டின் இறுதியில் பிரெஞ்சுப் புரட்சியின்போது இருந்த இரு முதலாளித்துவ அரசியல் கோஷ்டிகளின் பெயர்களாகும். மலை—ஜாக்கபின்கள்—என்பது அக்காலத்திய புரட்சிகர வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்தின் அதிக உறுதி படைத்த பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்ட பெயர். இவர்கள் வரம்பற்ற முடியாட்சியும் பிரபுத்துவமும் ஒழிக்கப்படுவது அவசியம் என்றனர். ஆனால் ழிரொந்தாவிஸ்டுகள் புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்குமிடையே ஊசலாடினர், முடியாட்சியுடன் சமரசங்கள் செய்து கொண்டனர்.

சமூக-ஜனநாயகத்தில் சந்தர்ப்பவாதப் போக்கை "சோஷலிஸ்டு ழிரொந்தா" என்றும், புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளைப் பாட்டாளி வர்க்க ஜாக்கபின்கள் அல்லது "மலை" என்றும் லெனின் அழைத்தார். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி போல்ஷிவிக்குகள் என்றும், மென்ஷிவிக்குகள் என்றும் பிளவுபட்டபின், மென்ஷிவிக்குகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ழிரொந்தாவிஸ்டுப் போக்கினர் ஆவரென அடிக்கடி வலியுறுத்தினார். பக்கம் 78

47 அரசாங்க டூமா — 1905ஆம் ஆண்டின் புரட்சி நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜாரிஸ்டு சர்க்கார் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடிமக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர். முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி—ஜூன்) ஜாரிஸ்டு சர்க்காரால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன் 3ல் ஆட்சிக்கு வந்த ஸ்தலீப்பின் சர்க்கார் புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டிபூர்ஷுவாக்களின் வாக்குரிமையை இச்சட்டம் மேலும் குறையச் செய்தது. நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளது பிற்போக்குக் கூட்டணி இதனால் மூன்றாவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-17) ஆதிக்கம் வகிக்க முடிந்தது. பக்கம் 80

48 1889ல் ஜாரிஸ்டு அரசாங்கம் கிராமப்புற மேலதிகாரிகளை நியமித்தது. விவசாயிகள்மீது நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

உள்ளூர் பிரபுக்குலத்தினரே கிராமப்புற மேலதிகாரிகளாய் நியமிக்கப்பட்டனர். விவசாயிகள்மீது இவர்களுக்கு விரிவான நிர்வாக, நீதித்துறை அதிகாரம் தரப்பட்டது. விவசாயிகளைக் கைது செய்யவும் அவர்களுக்குக் கசையடி தரவும் இந்த மேலதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. பக்கம் 80

49 நாஷா ஸாரியா (''நமது அருணோதயம்'') — மென்ஷிவிக் கலைப்புவாதிகள் 1910க்கும் 1914க்கும் இடையே செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் சட்டபூர்வமாய் வெளியிட்டு வந்த மாத சஞ்சிகை. இது ருஷ்யாவில் கலைப்புவாதிகளின் அணிதிரட்டு மையமாயிற்று. இது மூடப்பட்டதும் அதனிடத்தில் நாஷே தேலோ 1915 ஜனவரி முதல் வெளிவரத் தொடங்கிற்று. பக்கம் 81

50 இப்புத்தகத்தின் 102-04ஆம் பக்கங்களைப் பார்க்கவும். பக்கம் 50

51 தேலோ ழீஸினி (''வாழ்க்கை இலட்சியம்''), வாஸ்ரழ்தேனியே (''புத்துயிர்'') — கலைப்புவாதியான மென்ஷிவிக்குகளுடைய சஞ்சிகைகள், முறையே 1911லும் 1908-10லும் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் சட்டபூர்வமாய் வெளிவந்தவை. பக்கம் 82

52 கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா (''சமூக-ஜனநாயகவாதியின் குரல்'') — கலைப்புவாதிகளின் செய்தியேடு. 1908-11ஆம் ஆண்டுகளில் வெளிநாடுகளில் முதலில் ஜெனீவாவிலும் பிறகு பாரிசிலும் வெளிவந்தது. பக்கம் 83

53 அக்டோபரிஸ்டுகள்—அக்டோபர் பதினேழு யூனியன் என்னும் கட்சியின் உறுப்பினர்கள். பெரிய தொழில் அதிபர்கள், வர்த்தக முதலாளிகள், முதலாளித்துவ வழியில் வேளாண்மை செய்த நிலப்பிரபுக்கள் ஆகியோரின் கட்சி இது. அக்டோபரிஸ்டுகள் ஜாரிஸ்டு அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைக்கு முழு ஆதரவு அளித்தனர். பக்கம் 86

54 1906 நவம்பர் 9ல் ஜாரிஸ்டு அரசாங்கம் வெளியிட்ட "விவசாயி நிலவுடைமையும் நிலவுரிமையும் பற்றிய தற்காலிய ஒழுங்கு முறைகளின் சில விதிகளுக்கு இணைப்புகள்" என்ற சட்டம் டூமாவால் பிறப்பிக்கப்பட்டபின் 1910 ஜூன் 14 சட்டம் என்பதாய் அழைக்கப்பட்டது. விவசாயிகள் கிராமச் சமுதாயத்தை விட்டு விலகித் தனியே சொந்த நிலங்களில் குடி நிறுவிக் கொள்ள உரிமை அளிக்கப்பட்டனர். அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட நிலங்களுக்குப் பட்டாக்கள் பெற்றுக் கொண்டனர். நிலங்கள் வாங்கிக் கொள்ள விவசாயிகள் பாங்கியிலிருந்து அவர்கள் கடன்கள் பெற்றுக் கொள்ளலாம். இந்தச் சட்டம் விவசாயிகளிடையே முதலாளித்துவ வர்க்கம் எழுந்த நிகழ்ச்சியைத் துரிதப்படுத்திற்று. ஏழை விவசாயிகளுடைய நிலங்களை மிகச் சொற்ப விலைக்கு வாங்கிக் கொள்ள இந்த வர்க்கத்தாருக்கு வாய்ப்பு கிடைத்தது.

பக்கம் 87

55 பெர்லினில் 1891 முதல் 1933வரை வெளிவந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் மத்தியப் பத்திரிகையான *Vorwärts*சில் பெயர் குறிப்பிடாது திரோத்ஸ்கி பிராக் மாநாட்டையும் அதன் தீர்மானங்களையும் எதிர்த்து எழுதிய அவதூறுக் கட்டுரைக்குப் பதிலளிக்கும் பொருட்டு இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டது.

பக்கம் 97

56 இங்கு குறிக்கப்படுவது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஆறுவது (பிராக்) அனைத்து ருஷ்ய மாநாடு. 1912 ஜனவரியில் பிராகில் நடைபெற்ற இம்மாநாடு கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து விலக்கிற்று.

பக்கம் 97

57 இங்கு குறிக்கப்படும் தீர்மானம் ரு. ச. ஜ. தொ. கட்சியின் ஆறுவது (பிராக்) அனைத்துருஷ்ய மாநாட்டையும் அதன் முடிவுகளையும் தாக்கும் அவதூறான தீர்மானம். வெளிநாடுகளிலிருந்த பூந்த் கமிட்டி, வ்பெரியோத் கோஷ்டி, கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா, திரோத்ஸ்கி

யின் வியேன்ஞ பிராவ்தாவின் ஆசிரியர் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் கட்சி-ஆதரவு மென்ஷிவிக்குகள், இணக்கவாதிகளின் பிரதிநிதிகளும் நடத்திய பாரிஸ் மாநாட்டில் 1912 மார்ச் 12ல் இந்த அவதூறுத் தீர்மானம் ஏற்கப்பட்டது. தனித் துண்டுப் பிரசுரமாய் அச்சிடப்பட்ட இது வியேன்ஞ பிராவ்தாவிலும் பூந்தின் இன்பர்மாத்ஸியன்னி லிஸ்தோக் (''செய்தியேடு''), இதழ் 4லும் வெளிவந்தது. சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்தியக் கமிட்டிப் பிரதிநிதி என்ற முறையில் லெனின் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து, பிறகு சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் செயலாளர் கமீல் ஹூய்ஸ்மன்சுக்கு ஒரு கடிதம் எழுதினர்.

பக்கம் 97

58 ''சமூக-ஜனநாயகவாதியின் நாட்குறிப்பு''—1905 மார்ச் முதல் 1912 ஏப்ரல் வரை ஜெனீவாவில் கி. வ. பிளெஹானவ் வெளியிட்டு வந்த கால வரையறையில்லாத சஞ்சிகை. பிளெஹானவ் 1909-12ஆம் ஆண்டுகளில் வெளிவந்த 9-16ஆம் இதழ்களில் மென்ஷிவிக்-கலைப்புவாதிகளுக்கு எதிராய்ச் சட்டவிரோதக் கட்சி நிறுவனங்களை ஆதரித்து எழுதினர். பக்கம் 98

59 பூந்த் (லித்துவேனியா, போலந்து, ருஷ்யாவின் யூதர் தொழிலாளர்களது பொதுச் சங்கம்)—1897ல் வில்ஞெவில் யூதர் சமூக-ஜனநாயகக் கோஷ்டிகளது துவக்கக் காங்கிரசில் நிறுவப்பட்டது. பிரதானமாய் மேற்கு ருஷ்யாவின் அரைப்பாட்டாளிகளாகிய யூதர் கைத்தொழிலாளர்களால் ஆனது. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதலாவது காங்கிரசில் (1898) பூந்த் இக்கட்சியில் ''பிரத்தியேகமாய் யூதர் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்சினைகளில் மட்டும் சுயேச்சையான, தன்னுரிமை கொண்ட நிறுவனமாய்ச்'' சேர்ந்து கொண்டது. (சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி அதன் காங்கிரஸ்கள், மாநாடுகள், மத்தியக் கமிட்டி பிளீனம்களின்

தீர்மானங்களிலும் முடிவுகளிலும், பாகம் 1, 1954, பக்கம் 14.)

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்க இயக்கத்திலும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியிலும் பூந்த் தேசியவாதம், பிரிவினை மனப்பான்மை இவற்றின் வெளியீடாய்ச் செயல்பட்டு வந்தது. கட்சியின் சந்தர்ப்ப வாதப் பிரிவை (''பொருளாதாரவாதிகள்'', மென்ஷிவிக்குகள், கலைப்புவாதிகள்) எப்பொழுதும் ஆதரித்து போல்ஷிவிக்குகளை எதிர்த்து வந்தது. 1905-07ஆம் ஆண்டுகளின் முதல் ருஷ்யப் புரட்சியின் தோல்விக்குப் பிறகு பூந்த் கலைப்புவாத நிலையை அனுசரித்தது, ஆகஸ்டு கட்சி-விரோதக் கூட்டணியை நிறுவுவதில் முக்கியப் பங்கு கொண்டது. முதல் உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறி நிலையை ஏற்றது. அக்டோபர் சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து பூந்த் சோவியத் அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்டத்தில் சேர்ந்து கொண்டது. பக்கம் 98

60 வ்பெரியோத் கோஷ்டி—1909 டிசம்பரில் அமைக்கப் பட்ட கட்சி-விரோதக் கோஷ்டி. இதே பெயரில் இக் கோஷ்டி ஒரு சஞ்சிகை வெளியிட்டது. ருஷ்யாவில் தொழிலாளர்களிடையே இக்கோஷ்டிக்கு ஆதரவு கிடைக்க வில்லை. 1913க்குள் அனேகமாய்ச் சிதைந்துவிட்டது.

பிராவ்தா (வியென்னு) — 1908-12ல் வெளிவந்த கோஷ்டிவாத திரோத்ஸ்கியச் செய்தியேடு. ருஷ்யாவிலிருந்த கட்சி நிறுவனம் எதன் பிரதிநிதியுமல்லாத இது, லெனின் குறிப்பிட்டது போல, ''தனியார் முயற்சியாய்'' இருந்து வந்தது. திரோத்ஸ்கிதான் இதன் தலைமை ஆசிரியர். ''கோஷ்டிகளுக்குப் புறம்பாய்'' இருப்பதாய் வேஷமிட்டுக் கொண்டு இந்தச் செய்தியேடு போல்ஷிவிக்குகளைத் தாக்கிற்று, ஒரே கட்சியினுள் புரட்சியாளர்களும் சந்தர்ப்பவாதிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்ற மையவாதத் தத்துவத்தை ஆதரித்தது. போல்ஷிவிக்குகளுக்கு எதிராய் வ்பெரியோத் கோஷ்டியினர் மென்

ஷிவிக் கலைப்புவாதிகளின் கட்சி-விரோத ஆகஸ்டுக் கூட்டணி அமைக்கப்பட முன்முயற்சி எடுத்துக் கொண்டது.
பக்கம் 99

[61] *Sozialistische Monatshefte* (''சோஷலிஸ்டு மாதச் சஞ்சிகை'')—ஜெர்மன் சந்தர்ப்பவாதிகளுடைய தலைமையான சஞ்சிகை; சர்வதேசச் சந்தர்ப்பவாதத்தின் வெளியீடு. பெர்லினில் 1897லிருந்து 1933 வரை வெளியிடப்பட்டு வந்தது.

பக்கம் 99

[62] கட்சி-ஆதரவு மென்ஷிவிக்குகள் — கி. வ. பிளெஹானவைத் தலைவராய்க் கொண்ட இவர்கள் பிற்போக்கு தலைவிரித்தாடிய ஆண்டுகளில் கலைப்புவாதிகளை எதிர்த்தனர். மென்ஷிவிக் கருத்துக்களையே பின்பற்றினர் என்ற போதிலும் பிளெஹானவும் அவரைப் பின்பற்றியோரும் தலைமறைவான கட்சி நிறுவனம் பாதுகாக்கப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும் என்றனர்; இந்தக் குறிக்கோள் ஈடேற போல்ஷிவிக்குகளுடன் கூட்டணி அமைத்துக் கொள்ள வேண்டும் என்றனர். 1912ல் அவர்கள் இந்தக் கூட்டணியைச் சீர்குலையச் செய்தனர்; கட்சியிலிருந்து கலைப்புவாதிகளை விலக்கிய ரு. ச. ஜ. தொ. கட்சியின் பிராக் மாநாட்டுத் தீர்மானங்களைக் கண்டிக்க முற்பட்டனர்.
பக்கம் 100

[63] இங்கு குறிக்கப்படுவது ரு. ச. ஜ. தொ. கட்சியின் ஐந்தாவது (அனைத்துருஷ்ய) மாநாட்டின் (1908) தீர்மானமான ''பிரதேசங்களில் தேசிய நிறுவனங்களை ஒன்றுபடுத்துவது குறித்து''. (சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி அதன் காங்கிரஸ்கள், மாநாடுகள், மத்தியக் கமிட்டி பிளீனம்களின் தீர்மானங்களிலும் முடிவுகளிலும், 7ஆவது பதிப்பு, பாகம் 1, 1953, பக்கம் 203.)

பக்கம் 101

[64] சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம்—ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் சோஷலிஸ்டு இயக்கத்தையும் எதிர்ப்பதற்காக பிஸ்மார்க் சர்க்

கார் 1879ல் பிறப்பித்த சட்டம். இந்தச் சட்டத்தின் படி சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா நிறுவனங்களும் தொழிலாளர்களுடைய வெகுஜன நிறுவனங்களும் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளும் சட்டவிரோதமாக்கப் பட்டன; சோஷலிச நூல்களும் வெளியீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் நாடு கடத்தப்படுவதும் அடங்கலாய் பலவாறுகவும் அடக்குமுறைக்கு இலக்காயினர். 1890ல் மக்களின் நிர்ப்பந்தம் காரணமாகவும் வளர்ந்து ஓங்கிவிட்ட தொழிலாளி வர்க்க இயக்கம் காரணமாகவும் சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியதாயிற்று. பக்கம் 104

65 புரோஸ்வெஷ்ச்சேனியே (''அறிவொளி'') — போல்ஷிவிக் சமூக, அரசியல், இலக்கிய மாத வெளியீடு. 1911 டிசம்பரிலிருந்து 1914 ஜூன் வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் சட்டபூர்வமாய் வெளியிடப்பட்டது. முதல் உலக யுத்தம் தொடங்கும் தறுவாயில் அரசாங்கத்தால் மூடப்பட்டது. பிறகு 1917 இலையுதிர் காலத்தில் திரும்பவும் வெளிவந்தது, ஆனுல் ஒரு இரட்டை இதழ் மட்டுமே வந்தது. பக்கம் 110

66 தர்த்தரேன் தெ தரஸ்கோன் — பிரெஞ்சு எழுத்தாளர் அ. தொடேயின் [Daudet] நாவல்களது கதைத் தலைவன், வாய்ச்சவடாலுக்குப் பெயர்போன பாத்திரம். பக்கம் 111

67 சேவெர்னயா பிராவ்தா (''வடதிசை வாய்மை'') — போல்ஷிவிக் நாளேடு பிராவ்தா 1913 ஆகஸ்டு 1 முதல் செப்டம்பர் 7 வரை சட்டபூர்வமாய் வெளிவருவதற்காக ஏற்ற மாற்றுப் பெயர்களில் ஒன்று.

லெனின் இங்கு ''ருஷ்ய முதலாளித்துவ வர்க்கமும் ருஷ்யச் சீர்திருத்தவாதமும்'' என்னும் தமது கட்டுரையைக் குறிப்பிடுகிருர். பக்கம் 121

68 ''மூன்று தூண்கள்'' — ஜனநாயகக் குடியரசு, எட்டு மணி நேர வேலை நாள், நிலப்பிரபுக்களின் எல்லா நிலங்

களையும் பறிமுதல் செய்தல் ஆகிய மூன்று பிரதான (''வெட்டிக் குறுக்கப்படாத'') புரட்சிகரக் கோஷங்களைக் குறிக்கச் சட்டபூர்வமான போல்ஷுவிக் பத்திரிகைகளிலும் சட்டபூர்வமான பகிரங்கக் கூட்டங்களிலும் வழக்கமாய் உபயோகிக்கப்பட்ட தொடர்.

பக்கம் 121

69 ஜாரிஸ்ட் அரசாங்கம் நாட்டில் புரட்சி இயக்கம் உயர்ந் தெழுந்ததைக் கண்டு பீதியுற்று, 1905 அக்டோபர் 17ல் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அரசியலமைப்புச் சட் டத்தையும் ''பிரஜா உரிமைகளையும்'' வழங்குவதாய் அது இவ்வறிக்கையில் வாக்களித்தது. அவகாசம் பெறு வதற்காகவும், புரட்சி சக்திகளைப் பிளவுபடுத்திப் புரட்சி யை நசுக்குவதற்காகவும் கையாளப்பட்ட ஓர் அரசியல் தந்திரமாகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. வாக்குறுதி செய்யப்பட்ட எல்லாச் ''சுதந்திரங்களும்'' சொல்லளவில் மட்டுமே வழங்கப்பட்டன.

பக்கம் 124

70 சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ — இரண்டாவது அகிலத் தின் செயலுக்கும் தகவலுக்குமான உறுப்பு. 1900ல் நடைபெற்ற பாரிஸ் காங்கிரசின் தீர்மானத்துக்கேற்ப நிறுவப்பட்டது. ரு. ச. ஜ. தொ. கட்சியின் பிரதிநிதி யாய் 1905 முதல் லெனின் இதில் உறுப்பினராய் இருந் தார். இந்த பியூரோ 1914ல் கலைக்கப்பட்டுவிட்டது.

பக்கம் 125

71 நோவயா ரபோச்சயா கஸேத்தா (''புதிய தொழிலாளர் ஏடு'')—மென்ஷிவிக் கலைப்புவாதிகளின் சட்டபூர்வ மான நாளேடு. 1913 ஆகஸ்டிலிருந்து 1914 ஜனவரி 30 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது. லெனின் புதிய கலைப்புவாத ஏடு என்று இதைக் கேலியாய்க் குறிப்பிடுகிறார்.

பக்கம் 125

72 அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சி — 1901ல் நிறுவப்பட்டது. முதல் உலக யுத்தத்தின்போது இதன் வலதுசாரியினர் ஏகாதிபத்திய யுத்தம் நியாயமானதே என்பதாய்க் கூறி

அரசாங்கத்தின் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். ருஷ்யாவின் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் செல்வாக்கில் இக்கட்சியில் உருவாகிய புரட்சிகரத் தரப்பான இடதுசாரி, சர்வதேசியக் கருத்தோட்டத்தை ஏற்று யுத்தத்தை எதிர்த்தது. இந்த இடதுசாரியினர் 1919ல் சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து பிளந்து சென்று அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைக்க முன்முயற்சி எடுத்து இக்கட்சியின் மையக் கூறுயினர். இந்தப் பிளவுக்குப் பிறகு அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சி தேய்ந்து சிறிய குறுங்குழுவாத நிறுவனமாய்க் குறுகிவிட்டது.

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் — அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழிற் சங்கங்கள் சிலவற்றை ஒன்றிணைத்திடும் இது 1881ல் கோம்பர்சால் நிறுவப்பட்டது. இந்தச் சம்மேளனத்தின் தலைவர்கள் அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தினுள் முதலாளித்துவச் சித்தாந்தத்தைப் புகுத்துகின்றனர், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பிளவு வேலைகள் செய்கின்றனர். பக்கம் 128

73 டாக்டர்கள், புள்ளிவிவர இயலினர், ஆசிரியர்கள், விவசாய நிபுணர்கள் போன்ற கிராமப்புற ஜனநாயகச் சிப்பந்திகள் பால் ஜாரிஸ்டு அதிகாரவர்க்க உயர் மட்டத்தினர் கொண்டிருந்த போக்கினை இங்கு லெனின் குறிப்பிடுகிறுர். சமாராவின் துணை கவர்னர் கொன்தொயிதி 1900ல் ஒரு சொற்பொழிவில் இச்சிப்பந்திகளை ''மூன்றும் கூறினர்'' என்று குறிப்பிட்டார். இத்தொடர் கிராமப்புற ஜனநாயக அறிவுத்துறையினரைக் குறிக்கும் தொடராய் வழக்குக்கு வந்தது. பக்கம் 131

74 **பிராவ்தா மார்க்சியவாதிகள்** — போல்ஷிவிக் செய்தியேடு பிராவ்தாவைச் சேர்ந்த மார்க்சியவாதிகள், அதாவது போல்ஷிவிக்குகள்.

பிராவ்தா—சட்டபூர்வமாய் வெளிவந்த நாளேடு, பீட்டர்ஸ்பர்கில் 1912 ஏப்ரல் 22 (மே 5) முதல் வெளிவரத் தொடங்கிற்று. பக்கம் 133

75 **இரண்டாவது அகிலத்தின் கோப்பன்ஹேகன் காங்கிரஸ்** —*1910 ஆகஸ்டு 28லிருந்து செப்டம்பர் 3 வரை நடைபெற்றது. இந்தக் காங்கிரசில் ஏற்கப்பட்ட ''இராணுவ வெறிக்கு எதிரான போராட்டமும் யுத்தமும்'' என்னும் தீர்மானம் ''இராணுவவெறியும் சர்வதேச மோதல்களும்'' என்கிற ஷ்டுட்கார்ட் தீர்மானத்தை உறுதி செய்தது. யுத்த-எதிர்ப்புப் போராட்டத்தில் பாராளுமன்றங்களில் சோஷலிஸ்டுப் பிரதிநிதிகள் முன்வைக்க வேண்டிய பல கோரிக்கைகள் கோப்பன்ஹேகன் தீர்மானத்தில் இடம் பெற்றன: (1) அரசுகளுக்கிடையிலான எல்லாச் சச்சரவுகளும் தீர்வுக்காகச் சர்வதேச நடுவர் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; (2) பொதுப் படைக்கலக்குறைப்பு; (3) இரகசிய ராஜதந்திரம் ஒழிக்கப்படுதல்; (4) எல்லாத் தேசிய இனங்களுக்கும் தன்னாட்சி உரிமை வழங்குதலும் இராணுவத் தாக்குதலிலிருந்தும் ஒதுக்குமுறையிலிருந்தும் அவற்றுக்குப் பாதுகாப்பளித்தலும்.*

பக்கம் 142

76 **இரண்டாவது அகிலத்தின் பாஸெல் காங்கிரஸ்** *(1912 நவம்பர் 24-25)*—*பால்கன் யுத்தம் சம்பந்தமாகவும், பொது ஐரோப்பிய மோதல் ஏற்படும் அபாயம் சம்பந்தமாகவும் கூட்டப்பெற்ற சிறப்புக் காங்கிரஸ். வரவிருந்த உலக யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மையை இக்காங்கிரசின் அறிக்கை வலியுறுத்திற்று, எல்லா நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளையும் இந்த யுத்தத்தை எதிர்க்குமாறு வற்புறுத்திற்று.* *பக்கம் 142*

77 **பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி** [British Socialist Party] —*சமூக-ஜனநாயகக் கட்சியும் இதர சோஷலிஸ்டுக் குழுக்களும் சேர்ந்து 1911ல் மான்சஸ்ட்டரில் நிறுவிய கட்சியாகும். இக்கட்சி மார்க்சிய உணர்வுடன் கிளர்ச்சி நடத்தி வந்தது. இது ''சந்தர்ப்பவாதக் கட்சியாக இல்லாமல், மிதவாதிகளுடன் கூடாமல் மெய்யாகவே சுயேச்சையானதாக'' இருந்தது (வி. இ. லெனின்). ஆனால் உறுப்பினர் எண்ணிக்கையில் இக்கட்சி சிறியதாகவே இருந்தது; வெகுஜனங்களுடன் இதற்கிருந்த தொடர்புகள்*

பலவீனமாயிருந்தன; இதனால் இது குறுங்குழுவாதத் தன்மை கொண்டதாய் இருந்தது.

முதல் உலக யுத்தத்தின்போது இக்கட்சியினுள் சர்வ தேசியவாதிகளுக்கும் (டபிள்யூ. களாஹர், ஏ. இன்க்பின், தி. மாக்லின், எப். ரோட்ஷ்டைன் முதலியோர்) ஹைண்ட்மனின் தலைமையில் இயங்கிய சமூக-தேசிய வெறியர்களுக்கும் இடையே கடும் போராட்டம் நடைபெற்றது. பல பிரச்சினைகள் குறித்து முரணை நிலையை மேற்கொண்டோர் சர்வதேசியவாதிகளுக்கிடையே இருந்தனர். 1916 பிப்ரவரியில் இக்கட்சியின் சில தலைவர்கள் *The Call* (''அறைகூவல்'') செய்தியேட்டைத் துவக்கினார்கள்; சர்வதேசியவாதிகளை ஒன்றிணைப்பதில் இச்செய்தியேடு முக்கியப் பங்காற்றியது. 1916 ஏப்ரலில் சால்போர்டில் கூடிய பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி வருடாந்தர மாநாடு ஹைண்ட்மனும் அவர் ஆதரவாளர்களும் பின்பற்றிய சமூக-தேசியவெறிப் போக்கைக் கண்டனம் செய்தது; இதைத் தொடர்ந்து அவர்கள் கட்சியிலிருந்து விலகிக் கொண்டனர்.

பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை வரவேற்றது. இதன் உறுப்பினர்கள் அந்நியத் தலையீட்டிலிருந்து சோவியத் ருஷ்யாவைப் பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ் தொழிலாளர்கள் நடத்திய இயக்கத்தில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டனர். 1919ல் இக்கட்சியின் நிறுவனங்களில் பெருவாரியானவை (4க்கு எதிராய் 98) கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்து கொள்வதை ஆதரித்து வாக்களித்தன. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்படுவதற்குப் பிரதானமாய் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமைக் குழுவும்தான் காரணமாய் இருந்தன. 1920ல் நடைபெற்ற முதலாவது இணைப்புக் காங்கிரசில் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் மிகப் பெருவாரியான கிளைகள் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டன.

பக்கம் 150

78 *Avanti!* (''முன்னேறு!'') இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி

யின் தலைமைப் பத்திரிகை. 1896 டிசம்பரில் துவக்கப் பட்டது. பக்கம் 150

79 கோலஸ் ("குரல்") — பாரிசில் 1914 செப்டம்பரிலிருந்து 1915 ஜனவரி வரை வெளியிடப்பட்ட மென்ஷிவிக்-திரோத்ஸ்கியவாத நாளேடு. பக்கம் 151

80 ரு. ச. ஜ. தொ. கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையான "யுத்தமும் ருஷ்ய சமூக-ஜனநாயகமும்" இங்கு குறிப்பிடப்படுகிறது. இது சொத்சியால்-டெமக்ராத், இதழ் 33ல் (1914 நவம்பர் 1) வெளிவந்தது. பக்கம் 152

81 *Bremer Bürger-Zeitung* ("பிரெமன் குடிமக்கள் ஏடு") —ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் பிரெமன் கோஷ்டி 1890லிருந்து 1919 வரை வெளியிட்டு வந்த நாளேடு. உண்மையில் இது ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் பத்திரிகையாய் இருந்தது, பிறகு 1916ல் சமூக-தேசியவெறியர்களின் கைக்குச் சென்று விட்டது.

Volksrecht ("மக்களது உரிமை")—சுவிட்ஜர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் நாளேடு, 1898 முதலாய் ஜூரிக்கில் வெளிவந்தது. முதல் உலக யுத்தத்தின்போது இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடைய கட்டுரைகளைத் தாங்கி வந்தது. பக்கம் 152

82 இஸ்க்ரா ("தீப்பொறி") — முதலாவது அனைத்துருஷ்ய மார்க்சியப் பத்திரிகை. சட்டவிரோதமான இந்த வெளியீடு 1900 டிசம்பரில் லெனினால் துவக்கப்பட்டதாகும். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை உருவாக்குவதில் அது முக்கியப் பங்கெடுத்தது.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903)போல்ஷிவிக்குகள், மென்ஷிவிக்குகள் என்னும் பிளவு ஏற்பட்டபின், இஸ்க்ரா மென்ஷிவிக்குகளின் பத்திரிகையாகி (52ஆம் இதழ்

முதற் கொண்டு), லெனினுடைய ''பழைய'' இஸ்க்ரா வுக்கு முரணுய்ப் ''புதிய'' இஸ்க்ரா என்னும் பெயரில் அழைக்கப்பட்டது. பக்கம் 165

83 **இவான் இவானவிச், இவான் நிக்கிபரவிச்** — ருஷ்ய எழுத்தாளரான கோகலின் **இவான் இவானவிச், இவான் நிக்கிபரவிச்சுடன் சண்டைபோட்டுக் கொண்ட கதையில்** வரும் பாத்திரங்கள். பக்கம் 166

84 லெனின் இந்தக் கட்டுரையை ஜெர்மனில் எழுதிஞர். இது ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின் தத்துவார்த்தப் பத்திரிகையான Vorbote (''முன்ஞேடி'') இதழ் 1ல் வெளிவந்தது. இதற்கு முன்பு ருஷ்யனில் இதே தலைப்பில் லெனின் ஒரு கட்டுரை எழுதியிருந்தார், அது 1924ல் **புரெலெத்தார்ஸ்கயா ரெவல்யூத்சியா** (''பாட்டாளி வர்க்கப் புரட்சி'') இதழ் 5 (28)ல் முதலில் வெளிவந்தது. அக்கட்டுரையின் வாசகம் Vorbote கட்டுரையின் வாசகத்திலிருந்து சிறிது மாறுபடுகிறது. பக்கம் 170

85 **நால்வர் கூட்டு** — பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, இத்தாலி ஆகிய நான்கு நாடுகளின் ஏகாதிபத்தியக் கூட்டு. 1915ல் இது அமைக்கப்பட்டது. இத்தாலி மூவர் கூட்டிலிருந்து (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) விலகி வந்தபின் மூவர் ஆன்டான்ட் (1907ல் அமைக்கப்பட்டது) எனப்படும் மற்ருெரு ஏகாதிபத்தியக் கூட்டில் சேர்ந்து கொண்டதும் இந்த நால்வர் கூட்டு உருவாயிற்று. பக்கம் 171

86 **பிரிட்டிஷ் தொழிற கட்சி** [The Labour Party of Great Britain] —தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வகை செய்வதற்காகத் தொழிற் சங்கங்கள், சோஷலிஸ்டு நிறுவனங்கள், கோஷ்டிகளின் கூட்டணியாக 1900ல் அமைக்கப்பட்டது. (முதலில் இது தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழு என்பதாக அழைக்கப்பட்டு வந்தது; 1906ல் இது தொழிற் கட்சியாகியது.) பிரிட்டிஷ் தொழிற் கட்சி இயைபில்

தொழிலாளர் கட்சியாய்த் தோன்றியதென்றாலும் (பிற்பாடு கணிச அளவில் குட்டிபூர்ஷுவா பகுதியினரும் சேர்ந்து கொண்டனர்), சித்தாந்தத்தையும் போர்த்தந்திரத்தையும் பொறுத்தவரை அது சந்தர்ப்பவாதக் கட்சியாகும். தொடக்கம் முதலாகவே தொழிற் கட்சித் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளனர். பக்கம் 177

87 **நிறுவனக் கமிட்டி** — மென்ஷிவிக்குகளின் தலைமைக் குழு. 1912ல் கலைப்புவாதிகளாகிய மென்ஷிவிக்குகளும் இதரக் கட்சி-விரோதக் குழுக்களையும் போக்குகளையும் சேர்ந்தோரும் கூட்டிய ஆகஸ்டு மாநாட்டில் இது நிறுவப்பெற்றது. பக்கம் 178

88 **ச்ஹெயீத்ஸே டூமாக் கோஷ்டி** — நான்காவது அரசாங்க டூமாவில், நி. செ. ச்ஹெயீத்ஸே தலைமையில் இருந்த சமூக-ஜனநாயகக் குழு. முதலாவது ஏகாதிபத்திய உலக யுத்தத்தின்போது இக்குழு மையவாத நிலையை அனுசரித்தது, உண்மையில் ருஷ்ய சமூக-தேசியவெறியர்களுக்கு முழு ஆதரவு அளித்தது. பக்கம் 178

89 **ஷிரோக்கி சோஷலிஸ்டுகள்**—**அப்ஷ்தோ தேலோவின்** (''பொது இலட்சியம்'') ஆதரவாளர்கள் என்பதாகவும் அழைக்கப்பட்டனர் — பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சியில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தவர்கள். 1900 முதலாய் **அப்ஷ்தோ தேலோ** இதழை வெளியிட்டு வந்தனர். 1903ல் சமூக-ஜனநாயகக் கட்சியின் பத்தாவது காங்கிரசில் ஏற்பட்ட பிளவுக்குப் பிற்பாடு, சீர்திருத்தவாத பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சி ஒன்றை (''ஷிரோக்கி'' சோஷலிஸ்டுகளின் கட்சி) அமைத்துக் கொண்டனர். முதல் உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தனர்.

பக்கம் 178

90 *Preussische Jahrbücher* (''பிரஷ்ய ஆண்டுப் புத்தகம்'') —கான்சர்வேட்டிவ் மாத வெளியீடு, ஜெர்மன் முதலாளி

கள், நிலப்பிரபுக்களின் குரலாய் இருந்தது. 1858 முதல் 1935 வரை பெர்லினில் வெளிவந்தது. பக்கம் 180

91 **ஆன்டான்ட் [Entente]**—இச்சொல் 1907ல் உருவான ஏகாதிபத்திய அரசுகளது (பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகியவை) கூட்டைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இக்கூட்டு மற்றொரு ஏகாதிபத்தியக் கூட்டான முக்கூட்டுக்கு (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) எதிராக அமைக்கப்பட்டது. 'ஆன்டான்ட்' என்னும் பெயர் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே 1904ல் ஏற்பட்ட "Entente cordiale" (நேசக் கூட்டு) என்றழைக்கப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து வந்ததாகும். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜப்பானும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து இக்கூட்டின் பிரதான உறுப்பினர்களான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் சோவியத் குடியரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டின் மூலவர்களாகவும் சூத்திரதாரிகளாகவும் செயல்பட்டன.

பக்கம் 187

92 **ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழு** — 1915 செப்டம்பரில் சுவிட்ஜர்லாந்தில் ஸிம்மர்வால்டு என்னும் இடத்தில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டு மாநாட்டில் லெனினுடைய முன்முயற்சியின் பேரில் நிறுவப்பட்டது. ரு. ச. ஜ. தொ. கட்சியின் மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகள், ஸ்வீடன், நார்வே, ஸ்விட்ஜர்லாந்து, ஜெர்மனி இந்நாடுகளின் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், போலந்தையும் லாத்வியப் பிரதேசத்தையும் சேர்ந்த சமூக-ஜனநாயக எதிர்த்தரப்பினர் ஆகியோர் இக்குழுவில் ஒன்றுபட்டனர். லெனின் தலைமையில் ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழு இம்மாநாட்டின் மையவாதப் பெரும்பான்மையோரை எதிர்த்துப் போராட்டம் நடத்திற்று. ஏகாதிபத்திய யுத்தத்தைக் கண்டனம் செய்தும்,

சமூக-தேசியவெறியரின் துரோகத்தை அம்பலம் செய்தும், யுத்தத்தை எதிர்த்து தீவிரமான போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதன் அவசியத்தை வலியுறுத்தியும் இக்குழு தீர்மானத்துக்கும் அறிக்கைக்குமான நகல் திட்டங்களை முன்வைத்தது. இந்த நகல்கள் மாநாட்டின் மையவாதப் பெரும்பான்மையினால் நிராகரிக்கப்பட்டன. ஆயினும் ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழு தமது நகல் தீர்மானத்திலிருந்து பல முக்கிய அம்சங்கள் மாநாட்டின் அறிக்கையில் சேர்க்கப்படும்படிச் செய்வதில் வெற்றி பெற்றது. ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவின் தலைமை சக்தியாய்ச் செயல் புரிந்த போல்ஷிவிக்குகள் தர்க்க நியாயமுள்ள ஒரேயொரு சர்வதேசியக் கொள்கை வழியை முரணின்றி அதன் இறுதி நிலைவரை அனுசரித்தனர். சர்வதேச சமூக-ஜனநாயகத்தின் சர்வதேசியவாதிகள் ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவை மையமாய்க் கொண்டு ஒன்றுதிரண்டனர்.

ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் புரட்சிகரப் பெரும் பணி ஆற்றினர், தமது நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அடித்தளம் நிறுவுவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர்.

பக்கம் 187

93 *Labour Leader* (''தொழிலாளர் தலைவர்'') — 1890ல் துவக்கப்பட்ட வார ஏடு. 1893 முதல் பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சியின் ஏடாயிருந்தது. 1922 முதல் இது *New Leader* (''புதிய தலைவர்'') என்ற பெயரில் வெளிவந்தது. பிறகு 1946ல் *Socialist Leader* (''சோஷலிஸ்டுத் தலைவர்'') என்ற பெயரில் வெளிவரத் தொடங்கிற்று.

பக்கம் 188

94 *Berner Tagwacht* (''பெர்ன் நகரக் காவலர்'')—ஸ்விஸ் சமூக-ஜனநாயகக் கட்சியின் செய்தியேடு. 1893ல் பெர்னில் துவக்கப்பட்டது. முதல் உலக யுத்தத்தின் தொடக்க காலத்தில் கார்ல் லீப்க்னெஹ்ட், பிரான்ஸ் மேரிங் போன்ற இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடைய

கட்டுரைகளை வெளியிட்டது. 1917 முதல் இந்தச் செய்தியேடு பகிரங்கமாகவே சமூக-தேசியவெறியர்களை ஆதரித்தது. இன்று இந்த ஏட்டின் கொள்கை பிரதான பிரச்சினைகளில் முதலாளித்துவப் பத்திரிகைகளின் கொள்கையுடன் முழுதும் ஒத்துள்ளது. பக்கம் 189

95 **பனுமா விவகாரங்கள்**—1892-93ல் பிரான்சில் வெளிச்சத்துக்கு வந்த பெரிய மோசடியைத் தொடர்ந்து லஞ்ச ஊழலைக் குறிக்கும் பதமாய் வழக்கிற்கு வந்தது. பனுமா கால்வாயைக் கட்டி வந்த பிரெஞ்சுக் கம்பெனியின் பிரம் மாண்ட மோசடியும், அரசுத் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் செய்தியேடுகளுக்கும் அது லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கியதும் அம்பலமாயின.
பக்கம் 193

96 **சொத்சியால்-டெமக்ராத்** (''சமூக-ஜனநாயகவாதி'') — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்தியப் பத்திரிகையான சட்டவிரோத வெளியீடு. 1908 பிப்ரவரி முதல் 1917 ஜனவரி வரை வெளிவந்தது.

கம்முனீஸ்த் (''கம்யூனிஸ்டு'') — லெனினுல் நிறுவப் பெற்று 1915ல் ஜெனீவாவில் **சொத்சியால்-டெமக்ராத்** பத்திரிகையுடன் கூட்டாக வெளியிடப்பட்டது.
பக்கம் 195

97 **ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நிறுவனக் கமிட்டியினது வெளிநாட்டுச் செயலாளர் குழுவின் செய்திகள்**—மென்ஷிவிக் பத்திரிகை, ஸ்விட்ஜர் லாந்தில் 1915 பிப்ரவரியிலிருந்து 1917 மார்ச் வரை (பத்து இதழ்கள்) வெளிவந்தது. பக்கம் 200

98 **இராணுவ-தொழில் கமிட்டிகள்** — யுத்தத்தை நடத்திச் செல்வதற்கு ஜாரிஸ்ட் அரசாங்கத்துக்கு உதவுவதற்காக 1915 மே மாதத்தில் ருஷ்யாவில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரால் நிறுவப்பட்டன. தொழிலாளர்களைத் தமது செல்வாக்கின்கீழ் கொண்டுவருவதற்காகவும், தாயகப் பாதுகாப்பு என்ற உணர்ச்சியைத்

தூண்டிவிடுவதற்காகவும் முதலாளித்துவ வர்க்கத்தினர் இக்கமிட்டிகளில் ''தொழிலாளர் குழுக்களை'' நிறுவுவதென முடிவு செய்தனர். யுத்தத் தளவாட ஆலைகளில் உழைப்பின் உற்பத்தி சக்தியை உயர்த்துமாறு தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுக்கக் கூடிய தொழிலாளர் பிரதிநிதிகளை இந்தக் குழுக்களில் இடம் பெறச் செய்வது முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு அனுகூலமாயிருந்தது. போல்ஷிவிக்குகள் இக்கமிட்டிகளைப் பகிஷ்காரம் செய்தனர், தொழிலாளர்கள் இந்தப் பகிஷ்காரத்துக்கு ஆதரவளித்தனர். பக்கம் 208

99 குறிப்பு 88ஐப் பார்க்கவும். பக்கம் 214

100 நாஷே தேலோ—குறிப்பு 49ஐப் பார்க்கவும்.

கோலஸ் துருதா (''உழைப்பின் குரல்'')—சட்டபூர்வமான மென்ஷிவிக் பத்திரிகை. 1916ல் சமாரா நகரில் வெளிவந்து கொண்டிருந்தது. பக்கம் 214

101 இது இரண்டாவது அகிலத்துக்குப் புத்துயிரளிப்பதற்காக 1919 பிப்ரவரியில் பெர்னில் கூட்டப்பெற்ற மாநாட்டில் சமூக-தேசியவெறி, மையவாதக் கட்சிகள் அமைத்துக் கொண்ட நிறுவனத்தைக் குறிப்பிடுகிறது. பக்கம் 219

102 ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி — கோட் நகரில் கூடிய காங்கிரசில் 1917 ஏப்ரலில் துவக்கப்பட்ட மையவாதக் கட்சி. வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் பாதையில் சென்ற சமூக-தேசியவெறியர்களுடன் ''ஒற்றுமை'' வேண்டுமென இந்த சுயேச்சையாளர்கள் உபதேசம் செய்தனர். இக்கட்சி 1922 வரை இருந்தது. பக்கம் 231

103 ஸ்விட்ஜர்லாந்தில் லுசேர்னில் 1919 ஆகஸ்டு 2—9ல் இரண்டாவது அகிலத்தின் மாநாடு ஒன்று நடைபெற்றது. பக்கம் 231

104 அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி — 1919

செப்டம்பரில் நிறுவப்பெற்றது. அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சியின் இடதுசாரியினர் இதன் நடுப் பகுதியாகினர். பக்கம் 232

105 **சர்வதேசத் தொடர்புகளைத் திரும்பவும் நிறுவுவதற்கான கமிட்டி** — பிரெஞ்சுச் சர்வதேசியவாதிகளால் 1916 ஜனவரியில் பாரிசில் நிறுவப்பட்டது. ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்து இக்கமிட்டி பிரசாரம் நடத்திற்று, ஏகாதிபத்தியவாதிகளுடைய கொள்ளைக்கார நோக்கங்களையும் தொழிலாளி வர்க்க நலன்களுக்கு சமூக-தேசியவெறியர்கள் இழைத்த துரோகத்தையும் அம்பலம் செய்து இக்கமிட்டி பல பிரசுரங்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டது. 1920ல் இது பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டது.

சிண்டிக்கலிஸ்டுப் பாதுகாப்புக் கமிட்டி—சிண்டிக்கலிஸ்டுக் கோஷ்டியினர் பாராளுமன்றத் துறைப் பணிகளை எதிர்த்தபடியால் சர்வதேசத் தொடர்புகளைத் திரும்பவும் நிறுவுவதற்கான கமிட்டியிலிருந்து வெளியேறி 1916 இலையுதிர் காலத்தில் நிறுவிய கமிட்டி. 1919 மே மாதத்தில் சிண்டிக்கலிஸ்டுப் பாதுகாப்புக் கமிட்டி கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வதெனத் தீர்மானித்தது. பக்கம் 232

106 **அகிலம்** [*L' Internationale*] — பிரெஞ்சு சிண்டிக்கலிஸ்டுகளுடைய வார ஏடு, சிண்டிக்கலிஸ்டுப் பாதுகாப்புக் கமிட்டியின் குரலாய் 1919 பிப்ரவரி முதல் ஜூலை வரையில் பாரிசில் வெளிவந்தது. பக்கம் 232

107 **தடை விதிக்கப்பட்ட பெயர்!!!** [*Le Titre Censuré!!!*] — கம்யூனிஸ்டு போக்குடைய நாளேடு. 1919 ஏப்ரலிலிருந்து ஜூன் வரை பாரிசில் வெளிவந்தது. பக்கம் 232

108 **ஆலைத் தலைமைத் தொழிலாளர் கமிட்டிகள்** [Shop Stewards Committees] — முதல் உலக யுத்தத்தின்போது பிரிட்டனில் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்ட கமிட்டிகள். ஏகாதி

பத்திய யுத்தத்துக்கு எதிராகவும் தொழிலாளர்களது வேலை நிலைமைகளின் மேம்பாட்டுக்காகவும் நடைபெற்ற தொழிலாளர் வெகுஜன இயக்கத்துக்கு இக்கமிட்டிகள் தலைமை தாங்கின. பக்கம் 232

109 **ஸ்பார்த்தக்கிஸ்டுகள்** — முதல் உலக யுத்தத்தின் தொடக்கத்தில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்சம்பர்க், பிரான்ஸ் மேரிங், கிளாரா ஸெத்கின் முதலானோரால் நிறுவப்பெற்ற ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது நிறுவனத்தின் உறுப்பினர்கள். ஸ்பார்த்தக்கிஸ்டுகள் வெகுஜனங்களிடையே புரட்சிப் பிரசாரம் நடத்தினர், யுத்தத்தை எதிர்த்து வெகுஜன நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தனர், வேலைநிறுத்தங்களுக்குத் தலைமை தாங்கினர், உலக யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மையையும் சமூக-ஜனநாயக சந்தர்ப்பவாதத் தலைவர்களுடைய துரோகத்தையும் அம்பலம் செய்தனர். 1918 நவம்பரில், ஜெர்மன் புரட்சியின்போது, ஸ்பார்த்தக்கிஸ்டுகள் ஸ்பார்த்தக்கஸ் கழகத்தை உருவாக்கினர். 1918 டிசம்பர் 30லிருந்து 1919 ஜனவரி 1வரை நடைபெற்ற துவக்கக் காங்கிரசில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்தனர். பக்கம் 232

110 *La Feuille*—1917 ஆகஸ்டு முதலாய் ஜெனீவாவில் வெளிவந்த நாளேடு. பெயரளவில் இது எந்தக் கட்சியையும் சேர்ந்ததாய் இருக்கவில்லை என்றாலும், இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாத நிலையை ஆதரித்து வந்தது. பக்கம் 233

111 ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து பிளந்து வந்து 1920 ஏப்ரலில் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி எனப்படுவதை நிறுவிய அராஜகவாத ''இடதுசாரி'' கோஷ்டியை இங்கு லெனின் குறிப்பிடுகிறார். இந்த ''இடதுசாரியினர்'' குட்டிபூர்ஷுவா, அராஜக-சிண்டிக்கலிஸ்டுக் கருத்தோட்டங்களை ஆதரித்தனர். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் பிரதிநிதிக

ளான ஒட்டோ ரூலெயும் [O. Rühle] அ. மெர்கெசும் [A. Merges] அகிலத்தில் தமக்கு ஆதரவில்லாமற் போகவே காங்கிரசிலிருந்து வெளியேறினர். பிற்பாடு ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி தொழிலாளி வர்க்கத்திடையே ஆதரவு இல்லாத சின்னஞ்சிறு குறுங் குழுவாதக் கோஷ்டியாய்த் தேய்ந்து சீரழிந்தது.

பக்கம் 243

-5 MAR 1985

அக்செல்ரோத் [Axelrod], பாவெல் பரீசவிச் *(1850-1928)*—*முதுபெரும் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளில் ஒருவர்; உழைப்பு விடுதலைக் குழுவின் உறுப்பினர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்கு (1903) பிறகு மென்ஷிவிக்; பிற்பாடு கலைப்புவாதியானர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) மையவாதம் பேசி, உண்மையில் சமூக-தேசியவெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். 1917ல் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காருக்கு ஆதரவளித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் ருஷ்யாவை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வசித்தார்.—22, 103, 176, 184-187, 195, 196*

அலெக்சின்ஸ்கி [Alexinsky], கிரிகோரி அலெக்சாந்தரவிச் *(பிறப்பு: 1879)—1905-07ஆம் ஆண்டுப் புரட்சியின் போது சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக். அப்புரட்சி தோல்வியுற்றபின் வாபஸ்வாதி; கட்சி விரோதவ்பெரியோத் கோஷ்டியை நிறுவியோரில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) தேசிய வெறியர், ஜாரிஸ்டு நாடுபிடிக்கும் கொள்கைக்கு ஆதரவளித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் எதிர்ப்புரட்சியில் ஊக்கமுடன் பங்கு கொண்டவர். பிற்பாடு வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர். 104, 151*

அன்கெட்டீல் [Anquetil], ழோர்ழ்—*பிரெஞ்சுப் பத்திரிகையாளர், 1919ல்* தடைவிதிக்கப்பட்ட பெயர்!! *[Le Titre Censure!!!]* என்னும் *செய்தியேட்டின் ஆசிரியராய் இருந்தார்.—232*

அஸ்த்திரஹான்த்செவ் [Astrakhantsev] யெ. பி. *(பிறப்பு: 1875)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. மூன்றும் அரசாங்க*

டுமாவின் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்து அங்கு மென்ஷிவிக்குகளைப் பின்பற்றினர்.—*110, 168*

ஆட்லர் [Adler], **விக்டர்** *(1852-1918)* — ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத்தின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)* மையவாதியாய் இருந்தார். ''வர்க்க அமைதியை'' உபதேசித்துத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயற்பாட்டை எதிர்த்தவர்.—*168*

இஸ்கோயெவ் [Izgoyev] **(லாந்தே), அலெக்சாந்தர் சலமோனவிச்** *(பிறப்பு: 1872)*—ருஷ்யக் கட்டுரையாளர், காடேட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்.—*79*

ஈகரெவ் [Igorev] **(கோரெவ் பி. இ.)** *(பிறப்பு: 1874)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. *1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் மென்ஷிவிக்குகளைப் பின்பற்றினர்; கலைப்புவாதி.—*106*

எங்கெல்ஸ் [Engels], **ஃபிரீட்ரிஷ்** *(1820-1895)* — *17, 29, 53, 57, 113, 159, 160, 164, 181, 182, 202, 203, 204, 215, 216, 230, 238, 239, 240*

எர்வே [Hervé], **குஸ்ட்டாவ்** *(1871-1944)* — பிரெஞ்சு சோஷலிஸ்டு; கட்டுரையாளர்; வழக்கறிஞர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். *1918*ல் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*48, 149, 150*

ஓவன் [Owen], **ராபர்ட்** *(1771-1858)* — மாபெரும் ஆங்கிலேயக் கற்பனாவாத சோஷலிஸ்டு.—*15*

ஃபுரியே [Fourier], **ஷார்ல்** *(1772-1837)*—மாபெரும் பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்டு.—*16*

ஃபொல்மார் [Vollmar], **கியோர்க் ஹென்ரிஷ்** *(1850-1922)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்; சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றின் தத்துவவாதி.—*49, 50*

கரவூலவ் [Karaulov] **வி. அ.** *(1854-1910)* — காடேட்டுக் கட்சியாளர். மூன்றும் அரசாங்க டுமாவின் உறுப்பினர். டுமாவில் அவர், லெனின் எழுதியது போல,

''மிக இழிவான எதிர்ப்புரட்சிவாத காடேட்டுகளில் முதலிடம் வகித்து மாருத கபடப் பேச்சுக்குரியவராய்'' இருந்தார்.—79

கலிஃபே [Galliffet], **கஸ்ட்டோன்** *(1830-1909) — பிரெஞ்சு ஜெனரல்; 1871ல் பாரிஸ் கம்யூனை நசுக்கியவர்களில் ஒருவர்.—229*

கல்ச்சாக் [Kolchak], **அலெக்சாந்தர் வசீலியெவிச்** *(1873-1920) —ஜார் காலத்திய அட்மிரல், முடியாட்சிவாதி; 1918-19ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவர்.—224, 225, 226*

கல்த்சோவ் [Koltsov] **தி. (செதோவ் எல்.)** *(1863-1920)— சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். ருஷ்யாவில் பிற்போக்கு தாண்டவமாடிய காலத்தில் (1908-10) கலைப்புவாதியாய் இருந்தார்.—121, 122*

கவென்யாக் [Cavaignac], **லுயீ எழேன்** *(1802-1857)— பிரெஞ்சு ஜெனரல். இராணுவ அமைச்சராய் இருந்தபோது 1848 ஜூன் மாதத்தில் நடந்த பாரிஸ் தொழிலாளர் புரட்சியெழுச்சியை மிருகத்தனமாய் நசுக்கினுர்.—229*

காவுத்ஸ்கி [Kautsky], **கார்ல்** *(1854-1938) — ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்சியவாதி; பிற்பாடு மார்க்சியத்துக்குத் துரோகமிழைத்து, சந்தர்ப்பவாதத்தின் அபாயகரமான, கேடுகெட்ட வகையான மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) தத்துவாசிரியர் ஆனுர். அதீத-ஏகாதிபத்தியம் என்னும் பிற்போக்குத் தத்துவத்தைத் தோற்றுவித்தவர். ருஷ்ய சோஷலிசப் புரட்சியையும் சோவியத் அரசையும் எதிர்த்துச் செயல்பட்டார்.—42, 46, 125-127, 150, 152, 158, 159, 160, 162-165, 168, 170, 171, 173-176, 180-182, 183, 186, 187, 189, 194, 195, 196, 197, 203, 206, 207, 208, 218-223, 225, 226, 227, 228, 231, 235*

காண்ட் [Kant], **எமனுயீல்** *(1724-1804) — முதுபெரும் ஜெர்மானியத் தத்துவவியலின் மூலவர்; கருத்துமுதல்வாதி.—55*

கிரிச்சேவ்ஸ்கி [Krichevsky], **பரீஸ் நிக்கலாயெவிச்** *(1866-1919) —ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; ''பொருளாதார*

வாதம்'' என்னும் போக்கின் தலைவர்களில் ஒருவர். பெர்ன்ஷ்டைனியக் கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்த ரபோச்சியே தேலோ சஞ்சிகையின் ஆசிரியராய் இருந்தார். ருஷ்யாவின் சமூக-ஜன நாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங் கிரசுக்கு (1903) பிறகு சமூக-ஜனநாயக இயக்கத் திலிருந்து விலகிவிட்டார்.—185

கிரேய்லிஹ் [Greulich], **ஹெர்மன்** *(1842-1925)* — சுவிஸ் சமூக-ஜனநாயகக் கட்சியை நிறுவியோரில் ஒருவர்; அதன் வலதுசாரிப் பிரிவின் தலைவர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். —178

கிளுக் [Kluck], **அலெக்சாண்டர்** *(1846-1934)* — ஜெர்மானிய ஜெனரல்; ஜெர்மன் ஏகாதிபத்திய இராணுவ வட்டாரத்தைச் சேர்ந்தவர். முதலாவது உலக யுத்தத்தின் (1914-18) தொடக்கத்தில் வடக்கு பிரான்சில் செயல்பட்ட முதலாவது ஜெர்மன் சேனைக்குத் தலைமை தாங்கினர்.—165

குகல்மன் [Kugelmann], **லுத்விக்** *(1830-1902)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, கார்ல் மார்க்சின் நண்பர். 1848-49 ஜெர்மன் புரட்சியில் பங்கெடுத்தார். முத லாவது அகிலத்தின் உறுப்பினராய் இருந்தார். — 27, 31, 34, 35, 39, 40

குவொஸ்தியோவ் [Gvozdyov], **குஸிமா அன்தோனவிச்** *(பிறப்பு: 1883)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மென்ஷிவிக், கலைப்புவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். 1917 பிப்ரவரி முதலாளித் துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் பெத்ரோகிராத் சோவியத்தினது செயற் குழு உறுப்பினர்; முதலாளித் துவ இடைக்கால சர்க்காரில் அங்கம் வகித்தவர். —211, 214

குஸ்னித்சோவ் [Kuznetsov] **இ. எஸ்.** *(பிறப்பு: 1881)*— மூன்றுவது அரசாங்க டூமாவின் உறுப்பினர், அதன் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்தார்.—110

கெகெச்கொரி [Gegechkori], **யெவ்கேனி பெத்ரோவிச்** *(பிறப்பு: 1879)* — ஜியார்ஜிய சமூக-ஜனநாயகவாதி, மென் ஷிவிக். மூன்றும் அரசாங்க டூமாவில் உறுப்பினர்;

அங்கு சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்து கொண்டவர்.—111

கெட்டு [Guesde], ஜூல் *(1845-1922)* — பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் அமைப்பாளர்கள், தலைவர்களில் ஒருவர். பிரான்சில் மார்க்சியக் கருத்துக்களைப் பரப்புவதிலும், சோஷலிஸ்டு இயக்கத்தை வளர்த்திடுவதிலும் முக்கியப் பங்காற்றினார். ஆனால் வலதுசாரி சோஷலிஸ்டுகளின் கொள்கையைத் தாக்கும் போது குறுங்குழுவாதத் தவறுகள் இழைத்தார். முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்திலிருந்துசமூக-தேசியவெறிப் போக்கைப் பின்பற்றி, பிரான்சின் முதலாளித்துவச் சர்க்காரில் சேர்ந்தார்.— 49, 149, 150, 174, 176

கேரென்ஸ்கி [Kerensky], அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881-1970)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1917 ஜூலை முதல் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காருக்குத் தலைமை தாங்கினார். ஏகாதிபத்திய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தல், ஆட்சியதிகாரம் முதலாளித்துவ வர்க்கத்திடம் நிலைத்து இருத்தல் ஆகிய கொள்கையைக் கடைப்பிடித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார்.—220, 226

கோம்பர்ஸ் [Gompers], சாமுவெல் *(1850-1924)*—அமெரிக்கத் தொழிற் சங்க இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. அமெரிக்கத் தொழிற் சங்க சம்மேளனத்தை நிறுவியோரில் ஒருவர்; 1895 முதல் அதன் தலைவர். தொழிலாளி வர்க்கத்தாரின் ஜீவாதார நலன்களுக்குத் துரோகமான கொள்கையைக் கடைப்பிடித்தார். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். — 128, 231

கோல்ப் [Kolb], வில்ஹெல்ம் *(1870-1918)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி; கடைகோடிச் சந்தர்ப்பவாதி, திருத்தல்வாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியராய் இருந்தார்.—185, 187

சம்பா [Sembat], மார்ஸேல் *(1862-1922)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசிய வெறியராய் இருந்தார். 1914 ஆகஸ்டு முதல் 1917 செப்டம்பர் வரை பிரான்சின் ஏகாதிபத்தியவாதத்

''தேசியப்'பாதுகாப்புச் சர்க்கா''ரில் பொதுப் பணி அமைச்சர் பதவி வகித்தார்.—*180*

சிஸ்மொண்டீ [Sismondi], **ழான் ஷார்ல் லியொனர் சிமோண்டு டீ** *(1773-1842)* — சுவிஸ் பொருளியலாளர்; முதலாளித்துவத்தைக் குட்டிபூர்ஷுவா நிலையிலிருந்து விமர்சித்தார்.—*44, 194*

சுர்க்கோவ் [Surkov] **பி. இ.** *(1876-1946)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக். மூன்றும் அரசாங்க டூமாவின் உறுப்பினர். அதன் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்தார்.—*111*

செதோவ்—பார்க்கவும்: **கல்த்சோவ் தி.**

செர்னேவ் [Chernov], **விக்தர் மிஹாய்லவிச்** *(1876-1952)*— சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது இடதுசாரிச் சொற்றொடர்களைப் பேசி, உண்மையில் சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டார். 1917ல் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரில் விவசாய அமைச்சர்.—*121, 122, 225, 229*

ச்சேஸ் [Chase], **ஸ்டியூவர்ட்** *(பிறப்பு: 1888)* — பெயர் பெற்ற அமெரிக்க முதலாளித்துவக் கட்டுரையாளர், பொருளியலாளர்; சமூகவியல், பொருளியல் ஆகிய துறைகளில் பல நூல்கள் எழுதியவர்.—*223, 224*

ச்ஹெயீத்ஸே [Chkheidse], **நிக்கலாய் செமியோனவிச்** *(1864-1926)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. மூன்றும், நான்காம் அரசாங்க டூமாக்களின் உறுப்பினர். நான்காம் டூமாவில் மென்ஷிவிக் குழுவுக்குத் தலைமை தாங்கினர். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குபின் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காருக்கு ஊக்கத்துடன் ஆதரிவளித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் ஜியார்ஜிய எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் சர்க்காரின் தலைவராய் இருந்தார். 1921ல், ஜியார்ஜியாவில் சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்டபின், வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—*111, 178, 211*

ச்ஹென்கெலி [Chkhenkeli], **அக்காக்கி இவானவிச்** *(1874-1959)*—ஜியார்ஜிய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின்போது மையவாத

நிலையை மேற்கொண்டார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு திரான்ஸ்-காக்கேஷியாவில் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரின் பிரதிநிதியாய் இருந்தார். 1918-21ல் ஜியார்ஜியாவின் மென்ஷிவிக் சர்க்காரில் வெளிவிவகார அமைச்சர் பதவி வகித்தார்; பிற்பாடு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—201

டவீத் [David], எடுவார்டு *(1863-1930) — ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவர்; திருத்தல்வாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். — 42, 178, 184, 185-187, 189, 201*

டான் [Dan], ஃபியோதர் இவானவிச் *(1871-1947) — மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதி ஆனார்; அந்தப் போக்கின் செய்தியேடான* கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா *("சமூக-ஜனநாயகவாதியின் குரல்") என்பதின் ஆசிரியர்.—83, 102*

டித்ஸ்கென் [Dietzgen], யோசிப் *(1828-1888) — ஜெர்மானியத் தோல் பதனத் தொழிலாளர்; சமூக-ஜனநாயகவாதி; தத்துவவியலாளர். இயக்கவியல் பொருள் முதல்வாத நிலையைச் சுயமாகச் சொந்த முயற்சியில் வந்தடைந்தவர்—29*

டுராட்டி [Turati], ஃபிலிப்போ *(1857-1932) — இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதி; இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் (1892) ஒருவர், அதன் வலதுசாரி, சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்றவர். முதலாவது உலக யுத்தத்தின்போது மையவாத நிலையை மேற்கொண்டார்.—29, 222*

டூரிங் [Dühring], ஓய்கென் கார்ல் *(1833-1921)—ஜெர்மன் தேர்வுவாதத் தத்துவவியலாளர், கொச்சைவாதப் பொருளியலாளர்.—29, 53, 57, 133*

தியுனன் [Thünen], யோகன் ஹென்ரிஹ் *(1783-1850)—ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்; விவசாயத் துறைப் பொருளியல் நிபுணர்.—30*

திரோத்ஸ்கி [Trotsky] (பிரான்ஷ்டைன்), லெவ் தவீதவிச் *(1879-1940)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்*

ஷிவிக். *1905-07* புரட்சி தோல்வியுற்றபின் கலைப்பு வாதியானார். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* மையவாதியாய் இருந்தார்; யுத்தம், சமாதானம், புரட்சி ஆகிய பிரச்சினைகளில் லெனினை எதிர்த்துப் போராடினார். ரு. ச. ஜ. தொ. (போல்ஷிவிக்) கட்சியின் ஆறாவது காங்கிரசில் இக்கட்சியில் சேர்க்கப்பட்டார்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் பல முக்கியமான பதவிகள் வகித்தார். கட்சியின் பொதுக் கொள்கையை எதிர்த்தும் சோஷலிசக் கட்டுமானம் குறித்த லெனினியக் கொள்கையை எதிர்த்தும் கட்சியினுள்ளிருந்து மூர்க்கமாய்ப் போராடினார்; சோவியத் யூனியனில் சோஷலிசம் வெற்றி பெற முடியாது என்று வற்புறுத்தி வந்தார்.

கட்சியினுள் குட்டிபூர்ஷுவாத் திரிபாய்ச் செயல்பட்ட திரோத்ஸ்கியத்தை அம்பலப்படுத்தி, சித்தாந்தமுறையிலும் நிறுவன முறையிலும் கம்யூனிஸ்டுக்கட்சி அதை அடியோடு தோற்கடித்தது. *1927*ல் திரோத்ஸ்கி கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்; *1929*ல் சோவியத்-எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாய் சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்டார். *1932*ல் அவரது சோவியத் நாட்டுக் குடிமை உரிமை ரத்து செய்யப்பட்டது.—*105, 107, 111, 133, 195, 199*

தினெவ்னீத்ஸ்கி [Dnevnitsky] **பி. என். (ஸெதெர்பாவ்ம், ஃபி. ஓ.)** *(பிறப்பு: 1883)* — சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், கட்டுரையாளர். கட்சி-ஆதரவு மென்ஷிவிக்குகளைப் பின்பற்றினார்; பிளெஹானவின் **சமூக-ஜனநாயகவாதியின் நாட்குறிப்பு** என்னும் வெளியீட்டிலும் போல்ஷிவிக் செய்தியேடுகளான **ஸ்வெஸ்தா, பிராவ்தா** ஆகியவற்றிலும் எழுதி வந்தவர்.—*91*

துருள்ஸ்திரா [Troelstra], **பீட்டர் யேலஸ்** *(1860-1930)*— டச்சுத் தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதி; வலதுசாரி சோஷலிஸ்டு. ஹாலந்து சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகர்களிலும் *(1894)* தலைவர்களிலும் ஒருவர்; சந்தர்ப்பவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது ஜெர்மனியின் பக்கம் நின்ற சமூக-தேசியவெறியர்.—*178, 233, 234, 235*

தெனீக்கின் [Denikin], **அன்தோன் இவானவிச்** *(1872-1947)—ஜாரிஸ்டு ஜெனரல்; உள்நாட்டுப் போரின் போது (1918-21) தெற்கு ருஷ்யாவில் சோவியத்-எதிர்ப்பு வெள்ளைப் படைகளின் தலைவராய் இருந்தார். அவருடைய படைகள் செஞ்சேனையால் முறிக்கப்பட்டபின் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார். —226, 243*

நிக்கலாய், இரண்டாவது (ரமானவ் [Romanov]) *(1868-1918)—1894லிருந்து 1917 வரை ருஷ்யாவை ஆண்ட கடைசி ருஷ்யப் பேரரசர்.—140, 220*

நி. லெ. — பார்க்கவும்: **லெனின் வி. இ.**

நோஸ்கே [Noske], **குஸ்ட்டாவ்** *(1868-1946) — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின் போது சமூக-தேசியவெறியர். 1919-20ல் இராணுவ அமைச்சராய் இருந்தார்; பெர்லின் தொழிலாளர்கள் மீதான வன்முறைகளும், கார்ல் லீப்க்னெஹ்ட், ரோஸா லுக்சம்பர்க் ஆகியோரின் படுகொலையும் இவருடைய கட்டளையின்படித்தான் நடைபெற்றன. —219*

நௌமன் [Naumann], **ஃபிரீட்ரிஹ்** *(1860-1919) — ஜெர்மன் பிற்போக்கு அரசியலாளர், கட்டுரையாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது ஏகாதிபத்திய நிலையை மேற்கொண்டார். ஜெர்மனியின் தலைமையில் "மத்திய ஐரோப்பாவைத்" தோற்றுவிக்க வேண்டும் என்னும் கருத்தை முன்வைத்து, உண்மையில் மத்திய ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றுவதற்கான கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கோரினார்.—184*

பக்தானவ் [Bogdanov] **அ. (மலினோவ்ஸ்கி, அலெக்சாந்தர் அலெக்சாந்தரவிச்; மக்சீமவ் நி.)** *(1873-1928)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; தத்துவவியலாளர்; சமூகவியலாளர்; பொருளியலாளர். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் வாபஸ்வாதிகளுக்குத் தலைமை தாங்கினார். தத்துவவியல் பிரச்சினைகளில் அகநிலை-கருத்துமுதல்வாத மாஹிஸ்டுத் தத்துவவியலின் ஒரு வகையான "அனுபவ ஒருமைவாதம்" என்னும் தமது சொந்த கருத்தமைப்பு ஒன்றை வகுக்க முயன்றார்.—56, 104*

பக்ரோவ்ஸ்கி [Pokrovsky], **இவான் பெத்ரோவிச்** *(பிறப்பு: 1872)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மூன்றும் அரசாங்க டூமாவின் உறுப்பினர். அங்கே சமூக-ஜன நாயகக் குழுவில் சேர்ந்தார், போல்ஷிவிக்குகளைப் பின்பற்றினர்.—**111**

பத்ரேசவ் [Potresov], **அலெக்சாந்தர் நிக்கலாயெவிச்** *(1869-1934)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1905-07 புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதி ஆனர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறியராய் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—**94, 102, 103, 201, 211, 214**

பஸாரவ் [Bazarov] **வி.** *(1874-1939)* — ருஷ்ய சமூக-ஜன நாயகவாதி, தத்துவவியலாளர், பொருளியலாளர்; போல்ஷிவிக் வெளியீடுகளுக்கு எழுதினர். 1905-07 ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் போல்ஷிவிசத்தைத் துறந்துவிட்டார்; மார்க்சியத் தத்துவத்தைத் திருத்த வேண்டுமென்ற மாஹிஸ்டுப் போக்கின் பிரதான பிரதிநிதியாய் இருந்தார்.—**56**

பிரான்டிங் [Branting], **கார்ல் யல்மார்** *(1860-1925)*— ஸ்வீடன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்; சந்தர்ப்பவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறியராய் இருந்தார். 1917ல் கூட்டுச் சர்க்காரில் பதவி வகித்தார்.— **178, 225, 231, 232**

பிரியான் [Briand], **அரிஸ்த்தீடு** *(1862-1932)* — பிரெஞ்சு ராஜதந்திரி; பல முறை முதலமைச்சர் பதவி வகித்தவர்.—**184**

பிரெத்கால்ன் [Predkaln] **அ. யா.** *(1873-1923)* — லாத்விய சமூக-ஜனநாயகவாதி. மூன்றுவது அரசாங்க டூமாவின் உறுப்பினர், அங்கே சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்து, போல்ஷிவிக்குகளைப் பின்பற்றினர். —**111**

பிளான்கி [Blanqui], **லூயி ஒகூஸ்ட்** *(1805-1881)* — தலைசிறந்த பிரெஞ்சுப் புரட்சியாளர், கற்பனாவாதக் கம்யூனிசத்தின் முக்கியப் பிரதிநிதி. 1830-70ஆம் ஆண்டுகளில் பாரிசில் நடந்த எழுச்சிகளிலும் புரட்சிகளி

- C... 1995

லும் பங்கு கொண்டவர்; பல இரகசியப் புரட்சிகரக் கழகங்களுக்குத் தலைமை தாங்கியவர்.—*38*

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கி வலென்தீனவிச்** *(1856-1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி; ருஷ்யாவில் முதன் முதலாய் மார்க்சியத்தைப் பரப்பியவர், முதலாவது மார்க்சிய நிறுவனமான உழைப்பு விடுதலை குழுவை நிறுவியவர் *(1883)*. ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிற்பாடு *(1903)* மென்ஷிவிக் ஆனுர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டார். *1917* பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் ருஷ்யாவுக்குத் திரும்பினுர். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின்பால் எதிர்மறைப் போக்கை அனுசரித்தார்.—*34, 35, 37, 38, 40, 46, 56, 98, 100, 103, 105, 107, 111, 144, 149, 150, 151, 168, 169, 176, 178, 187, 201, 213*

பிஸ்மார்க் [Bismark], **ஓட்டோ எடுவார்டு லெவொப்போல்டு***(1815-1898)* — ஜெர்மன் ராஜதந்திரி. பிரெஞ்சு-பிரஷ்யப் போரின்போது *(1870)* பிரஷ்யாவின் சான்சலர். ஜெர்மன் அரசுகளை ஒன்றுசேர்த்து, பிரஷ்யாவின் தலைமையில் அவற்றை ஒரே ஜெர்மன் சாம்ராஜ்யமாய் அமைத்தார். *1871* முதல் *1890* வரை ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் சான்சலர்.—*8, 87, 139*

பிஸ்ஸொலாட்டி [Bissolati], **லியொனீதா** *(1857-1920)*—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவியோரில் ஒருவர்; அதன் சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர். *1912*ல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு, ''சமூக-சீர்திருத்தவாதக் கட்சி''யை அமைத்தார். முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)* சமூக-தேசியவெறியர். —*110, 150, 178, 210*

புருக்கேர் [Brouckère], **லூயீ** *(பிறப்பு: 1870)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர்; முதலாவது உலக யுத்தத்திற்குமுன் *(1914-18)* அதன் இடதுசாரிப் பிரிவுக்குத் தலைமை தாங்கினுர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசிய வெறியராய் இருந்தார்.—*46, 63*

புருதோன் [Proudhon], **பியேர் ழொஸேப்** *(1809-1865)*—*பிரெஞ்சுக் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர்; குட்டிபூர்ஷுவாத் தத்துவவாதி; அராஜகவாதத்தின் மூலவர்களில் ஒருவர்.*—***38***

புல்காக்கவ் [Bulgakov], **செர்கேய் நிக்கலாயெவிச்** *(1871-1944)*—*ருஷ்யப் பொருளியலாளர், கருத்துமுதல் வாதத் தத்துவவியலாளர், காடேட்டுக் கட்சியின ருடன் சேர்ந்து செயல்பட்டார்.*—***30***

புவன்கரே [Poincaré], **ரைமோன்** *(1860-1934)* — *பிரெஞ்சு முதலாளித்துவ அரசியலாளர். பிரெஞ்சுச் சர்க்காரில் பல முறை பதவிகள் வகித்தவர்; பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் தீவிர ஆக்கிரமிப்பு வட்டாரத்தினரின் பிரதிநிதியாய் இருந்தார். 1922-24லும் 1926-29லும் பிரான்சின் பிரதமர்.*—***140***

புஹ்னர் [Büchner], **ஃபிரீட்ரிஹ் கார்ல் ஹ்ரிஸ்ட்டியான் லுத்விக்** *(1824-1899)*—*ஜெர்மன் தத்துவவியலாளர்; கொச்சைப் பொருள்முதல்வாதத்தின் முக்கியப் பிரதிநிதிகளில் ஒருவர்; முதலாளித்துவச் சீர்திருத்த வாதி.*—***30***

பூல்க்கின் [Bulkin], **ஃபியோதர் அபஜெசியெவிச்** *(பிறப்பு: 1888)*—*ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) இராணுவ-தொழில் கமிட்டிகளில் வேலை செய்தார். பிற்பாடு மென்ஷிவிசத்திலிருந்து விலகினார்; ருஷ்யாவின் கம்யூனிஸ்டு கட்சியில் (போல்ஷிவிக்குகள்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்.*—***211***

பெபெல் [Bebel], **ஔகுஸ்ட்** *(1840-1913)* — *பிறப்பினால் தொழிலாளர்; ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. வி. லீப்க்னெஹ்டுடன் சேர்ந்து ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியைத் துவக்கியவர். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளிடையே சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் இவற்றை எதிர்த்துப் போராடியவர்.*—***49,50,87,88,89,90***

பெரிக்கா [Péricat], **ரைமோண்டு** — *பிரெஞ்சுக் கட்டிடத் தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது சர்வதேசியவாத நிலையை மேற்கொண்டார். 1919ல் L'International என்னும் செய்தியேட்டைத் துவக்கி அதன் ஆசிரியரா*

யும், பிரான்சில் மூன்ருவது அகிலத்துக் கமிட்டியின் உறுப்பினராயும் இருந்தார்.—232

பெர்—பார்க்கவும்: **லிபெர்.**

பெர்ன்ஷ்டைன் [Bernstein], **எடுவார்டு** (1850-1932)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் கடைகோடியான சந்தர்ப்பவாதிகளது தலைவர். சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றின் தத்துவாசிரியர்.—42, 54, 81

பெலவூசவ் [Belousov] **தி. ஒ.** (பிறப்பு: 1875)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், கலைப்புவாதி. மூன்ருவது அரசாங்க டூமாவின் உறுப்பினர். 1912 பிப்ரவரியில் டூமா உறுப்பினர் பதவியைத் துறக்காமலே டூமாவின் சமூக-ஜனநாயகக் குழுவிலிருந்து விலகிக் கொண்டவர்.—110

பேம்-பாவர்க் [Böhm-Bawerk], **யூஜென்** (1851-1914)—ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த முதலாளித்துவப் பொருளியலாளர். மார்க்சின் உபரிலாபம் பற்றிய தத்துவத்துக்கு எதிராய் எழுதிய தமது நூல்களில், தற்கால நலன்கள், வருங்கால நலன்கள் ஆகியவை பற்றிய அகநிலை மதிப்பீட்டில் ஏற்படும் வேறுபாடே லாபத்துக்குரிய ஆதாரம், தொழிலாளி வர்க்கத்தினரைச் சுரண்டுவதால் முதலாளிகளுக்கு லாபம் கிடைக்கவில்லை என்று வலியுறுத்தி வந்தார்.—57, 60

பேனக்கக் [Pannekoek], **ஆன்டனி** (1873-1960)—டச்சு சமூக-ஜனநாயகவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது சர்வதேசியவாதியாய் இருந்தார். 1918-21ல் நெதர்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராய் இருந்தார்; கம்யூனிஸ்டு அகிலத்து வேலையில் பங்கு கொண்டார். அதீத இடதுசாரி, குறுங்குழுவாத நிலையை மேற்கொண்டார். 1921ல் அவர் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகினர்.—67, 68, 71, 74, 150, 166

பொலித்தாயெவ் [Polyetaev], **நிக்கலாய் கூரியெவிச்** (1872-1930)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக். மூன்ருவது அரசாங்க டூமாவில் சமூக-ஜனநாயகக் குழுவின் உறுப்பினர்.—111

மக்சிமவ் நி. — *பார்க்கவும்:* **பக்தானவ் அ.**

மக்டொனல்டு [MacDonald], **ஜேம்ஸ் ராம்சே** *(1866-1937)* —*ஆங்கிலேய சுயேச்சைத் தொழிற் கட்சி, தொழிற் கட்சி இவற்றின் ஸ்தாபகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். வர்க்கங்களினது ஒத்துழைப்பு என்னும் சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தார். முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்தில் சாத்வீகவாத நிலையை மேற்கொண்டார்; பிற்பாடு ஏகாதிபத்திய முதலாளித்துவத்தினரைப் பகிரங்கமாய் ஆதரிக்கத் தொடங்கினார்.*—***150, 222, 231***

மர்த்தீனவ் [Martynov] **அ.** **(பிக்கெர், அலெக்சாந்தர் சமோய்லவிச்)** *(1865-1935)*—*"பொருளியல்வாதப்" போக்கின் தலைவர்களில் ஒருவர், மென்ஷிவிக்; பிற்பாடு மென்ஷிவிக் கட்சியிலிருந்து விலகினார்.*—***102, 185***

மார்க்ஸ் [Marx], **கார்ல்** *(1818-1883)*—***17, 27-40, 44, 52, 53, 54, 55-57, 59, 64, 65, 113, 115, 120, 133, 183, 194, 202, 203, 213, 230, 239***

மார்த்தவ் [Martov] **எல்.** **(ஸெதெர்பாவ்ம், யூலி ஓசிப்பவிச்)** *(1873-1923)*—*ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1905-07ஆம் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதி;* **கோலஸ் சொத்சியால்-டெமக்ராத்தா** *என்னும் செய்தியேட்டின் ஆசிரியராய் இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின் போது (1914-18) சர்வதேசியவாத நிலையை மேற்கொண்டார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் சர்வதேசியவாத மென்ஷிவிக்குகளின் குழுவுக்குத் தலைமை தாங்கினார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிராகப் போராடினார்.*—***82, 91, 92, 93, 95, 102, 103, 151, 162, 168, 195, 199, 200, 201, 225, 226, 229***

மானிட்டார் — *ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதியான சந்தர்ப்பவாதி இந்தப் புனைப்பெயரில் 1915 ஏப்ரலில் Preußische Jahrbücher என்ற கான்சர்வேட்டிவ் சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதினார். இதில் அவர் சமூக-ஜனநாயகத்தின் மையவாதத் தன்மையைப் பகிரங்கமாய்ப் புகழ்ந்தார். சந்தர்ப்பவாதிகளுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பயனுடையதா*

யிருக்கும், ''இடதுசாரி'' சொல்வீச்சைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் கொள்கையை சந்தர்ப்பவாதிகள் மூடிமறைக்க உதவியாயிருக்கும் என்று, அவர் மையவாதத்தைக் கைவிடாது பாதுகாக்க வேண்டுமெனக் கூறினர்.—*180, 181*

மானெர்ஹேம் [Mannerheim], **கார்ல் குஸ்ட்டாவ்** *(1867-1951)—பின்னிஷ் பிற்போக்கு ராஜதந்திரி. 1918ல் பின்லாந்தில் புரட்சியை நசுக்கிய பின்னிஷ் வெள்ளைப் படைகளுக்குத் தலைமை தாங்கினர்.—223, 224, 225, 226*

மான் [Mann], **டாம்** *(1856-1941) — ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதி. சுயேச்சைத் தொழிற் கட்சியை நிறுவியோரில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது சர்வதேசியவாதியாய் இருந்தார். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்டபின் அதன் உறுப்பினராய் இருந்தார்.—204*

மாஸ்லவ் [Maslov], **பியோத்தர் பாவ்லவிச்** *(1867-1946)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், கலைப்புவாதி. நிலப் பிரச்சினை குறித்து பல நூல்களை எழுதினர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறியராய் இருந்தார். — 30, 144, 151*

மில்யுக்கோவ் [Milyukov], **பாவெல் நிக்கலாயெவிச்** *(1859-1943)—காடேட்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917ல் முதலாவது முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரின் அயல்நாட்டு அமைச்சராய் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் அந்நிய இராணுவத் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தோரில் ஒருவர். பிற்பாடு வெளிநாடுகளுக்கு ஓடிஅங்கே வெள்ளைப்படையினருக்கிடையே முக்கியப் பங்கு ஆற்றினர்.—184*

முல்பெர்கர் [Mühlberger], **அர்ட்டூர்** *(1847-1907)—ஜெர்மன் குட்டிபூர்ஷுவாக் கட்டுரையாளர், புருதோனின் ஆதரவாளர். குடியிருப்புப் பிரச்சினை, பிரான்சிலும் ஜெர்மனியிலும் பொதுமக்களது சிந்தனையின் வரலாறு ஆகியவை குறித்து பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினர்; மார்க்சியத்தை விமர்சித்தார்.—53*

மேரிங் [Mehring], **ஃபிரான்ஸ்** *(1846-1919)—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி; ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தினது இடதுசாரிப் பிரிவின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். புரட்சிகர ''ஸ்பார்ட்டக்கஸ் கழகத்தின்'' தலைவர்களில் ஒருவர்; ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டவர்.—150, 152, 162*

மொஸ்ட் [Most], **யோஹன் யோசிப்** *(1846-1906)—முதலில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதியாய் இருந்தார்; பிற்பாடு அராஜகவாதி ஆனார்.—73*

யுதேனிச் [Yudenich], **நிக்கலாய் நிக்கலாயெவிச்** *(1862-1935)—ஜாரிஸ்டு ஜெனரல். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை வகித்தோரில் ஒருவர்.—243*

யெகோரவ் [Yegorov] **என். எம்.** *(பிறப்பு: 1871) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. மூன்றும் அரசாங்க டூமாவின் உறுப்பினர், அதன் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்தார்; போல்ஷிவிக்குகளைப் பின்பற்றினார். பிற்பாடு கலைப்புவாதி ஆனார்.—111*

ரிக்கார்டோ [Ricardo], **டேவிட்** *(1772-1823)—ஆங்கிலேயப் பொருளியலாளர்; முதுபெரும் முதலாளித்துவப் பொருளியலின் முக்கியப் பிரதிநிதிகளில் ஒருவர். —30*

ரியஸானவ் [Ryazanov], **தவீத் பரீசவிச்** *(1870-1938)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின்போது மையவாத நிலையை மேற்கொண்டார்.—244*

ரெனொடேல் [Renaudel], **பியேர்** *(1871-1935)—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர். 1914-20ல் L' Humanité செய்தியேட்டின் ஆசிரியராய் இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர். — 180, 213, 214, 231*

லங்கெ [Lange], **ஃபிரீட்ரிஹ் அல்பேர்ட்** *(1828-1875) — தத்துவவியலையும் நவீன காண்டியர்களையும் பற்றி எழுதிய முதலாளித்துவச் சரித்திராசிரியர். — 30*

லப்ரியோலா [Labriola], **அர்ட்டுரோ** *(1873-1959)*—*இத்தாலிய அரசியல்வாதி, வழக்கறிஞர், பொருளியலாளர்; இத்தாலியில் சிண்டிக்கலிஸ்டு இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர். சிண்டிக்கலிஸ்டுத் தத்துவத்தைப் பற்றிய பல நூல்களை எழுதினார்.*—***64***

லஸ்ஸால் [Lassalle], **ஃபெர்டினாண்டு** *(1825-1864)*—*ஜெர்மன் சோஷலிஸ்டு, அனைத்து-ஜெர்மானியத் தொழிலாளர் சங்கத்தை நிறுவியவர். முக்கியமான பல அரசியல் பிரச்சினைகளில் சந்தர்ப்பவாத நிலையை மேற்கொண்டார். இதற்காக மார்க்சும் எங்கெல்சும் இவரைக் கடுமையாய் விமர்சித்தனர்.*—***16, 17***

லாகர்டேல் [Lagardelle], **யுபேர்** *(பிறப்பு: 1874)*—*பிரெஞ்சுக் குட்டிபூர்ஷுவா அரசியல்வாதி, அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டு. பிரான்சில் அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டு இயக்கத்தின் வரலாறு பற்றி பலநூல்கள் எழுதினார்.*—***16***

லாயிட் ஜார்ஜ் [Lloyd George], **டேவிட்** *(1863-1945)*—*ஆங்கிலேய ராஜதந்திரி; மிதவாதக் கட்சியின் தலைவர். 1916-22ல் பிரிட்டிஷ் பிரதமராய் இருந்தார். சோவியத் அரசின் மீது இராணுவத் தலையீட்டை துவக்கியோரில் ஒருவர்.*—***180, 184, 212, 213, 214***

லாரின் [Larin] **யூ.** (**லுரியே எம். அ.**) *(1882-1932)*—*ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதிகளின் தலைவர்களில் ஒருவரானார்.*—***82, 83, 85, 88, 90, 91, 93, 94, 95, 102***

லிபெர் [Lieber] **எம். என்.** (**பெர்**) *(1880-1937)*—*பூந்த் தலைவர்களில் ஒருவர்; கலைப்புவாதி. முதலாவது உலகயுத்தத்தின்போது சமூக-தேசியவெறியர்.*—***106***

லீப்க்னெஹ்ட் [Liebknecht], **கார்ல்** *(1871-1919)*—*ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி. சந்தர்ப்பவாதம், இராணுவவாதம் இவற்றை எதிர்த்துப் போராடினார். 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சியின்போது அவரும் ரோஸா லுக்சம்பர்கும் ஜெர்மன் தொழிலாளர்களின் முன்னணிக்குத் தலைமை தாங்கினர். கார்ல்லீப்க்னெஹ்ட் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின்*

ஸ்தாபகர்களில் ஒருவர். 1919 ஜனவரியில் பெர்லின் தொழிலாளர் புரட்சியெழுச்சி முறியடிக்கப்பட்ட பின் புரட்சி-எதிர்ப்பாளர்கள் அவரைப் படுகொலை செய்தார்கள்.—*128, 150, 182, 187, 218, 221*

லீப்க்னெஷ்ட் [Liebknecht], **வில்ஹெல்ம்** *(1826-1900)*— ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமான பிரதிநிதி; ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். முதலாவது அகிலத்தின் வேலைகளிலும் இரண்டாவது அகிலத்தை நிறுவுவதிலும் முக்கிய பங்கு கொண்டவர்.—*89, 90*

லுக்சம்பர்க் [Luxemburg], **ரோஸா** *(1871-1919)*— ஜெர்மன், போலிஷ், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி; இரண்டாவது அகிலத்தின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். 1919 ஜனவரியில் புரட்சி-எதிர்ப்பாளரால் படுகொலை செய்யப்பட்டார்.—*49, 218, 221*

லுனச்சார்ஸ்கி [Lunocharsky], **அனத்தோலி வசிலியெவிச் (வோயினவ்)** *(1875-1933)*—முழுநேரப் புரட்சியாளர்; பிற்பாடு முக்கிய சோவியத் ராஜதந்திரி. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குபின் *(1903)* போல்ஷிவிக். *1905-07* புரட்சி தோல்வியுற்றபின் வ்பெரியோத் என்னும் கட்சிவிரோதக் குழுவில் சேர்ந்தார்; மார்க்சியத்தைச் சமயத்துடன் ஒன்றிணைக்க வேண்டுமென்று கோரினர். மார்க்சியத்தைக் கைவிட்டதற்காக வி.இ.லெனின் **பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்** என்னும் தமது நூலில் அவரைக் கண்டித்து விமர்சித்தார்.—*104*

லெதபுர் [Ledebour], **கியோர்க்** *(1850-1947)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி; ஷ்டுட்கார்ட்டில் கூடிய சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரசில் பங்கெடுத்துக் காலனியாட்சி முறைக்கு எதிராகப் பேசினர். பிற்பாடு சந்தர்ப்பவாதி ஆனர்.—*42*

லெதர் [Leder] **வி. எல்.** *(1882-1938)* — போலிஷ் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. முதலாவது

உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டார்.—*151*

லெவித்ஸ்கி [Levitsky] **வி. (ஸெதெர்பாவ்ம், விளாதீமிர் ஓசிப்பவிச்** *(பிறப்பு: 1883)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதத் தலைவர்களில் ஒருவராய் இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின் போது (1914-18) சமூக-தேசியவெறியர்.—*81, 94, 102, 110*

லெனின் [Lenin], **விளாதீமிர் இலியீச்** *(1870-1924)*—*104, 106*

லென்ச் [Lensch], **பாவுல்** *(1873-1926)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியினது இடதுசாரிப் பிரிவின் செய்தியேடான *Leipziger Volkszeitung*கின் ஆசிரியராய் (1905-13) இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்தில் சமூக-தேசியவெறியரானார்.—*206*

லேகின் [Legien], **கார்ல்** *(1861-1920)* — ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி; ஜெர்மன் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர்; திருத்தல்வாதி.—*128, 129, 130-134, 177, 178, 180, 184-187, 189, 201, 213*

லொங்கே [Longuet], **ழான்** *(1876-1938)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி, இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர்; கட்டுரையாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் மையவாத-சாத்வீகவாதப் பிரிவின் தலைமையில் இருந்தார்.—*222, 226*

வண்டர்வேல்டே [Vandervelde], **எமீல்** *(1866-1938)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்; இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் தலைவர்; சந்தர்ப்பவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறியர்; முதலாளித்துவச் சர்க்காரில் சேர்ந்து அமைச்சர் பதவிகள் வகித்தவர்.—*63, 170, 186, 231, 232*

வரோனின் [Voronin] **எஸ். அ.** *(1880-1915)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மூன்றாம் அரசாங்க டூமாவின்

சமூக-ஜனநாயகக் குழுவைச் சேர்ந்தவர்; போல்ஷிவிக்குகளைப் பின்பற்றினர்.—*111*

வார்ஸ்கி [Warski], **அதோல்ப் (வர்ஷாவ்ஸ்கி அ. எஸ்.)** *(1868-1937)—போலிஷ் புரட்சி இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நான்காவது (இணைப்புக்) காங்கிரஸ் வேலைகளில் பங்கெடுத்தார்; அக்கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினராய் இருந்தார். முதலாவது உலக யுத்தத்தின்போது சர்வதேசியவாதியாய் இருந்தார்.—111*

வான் கோல் [Van Kol], **ஹென்ரிஹ்** *(1851-1925)—ஹாலந்து சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகர்களிலும் (1894) தலைவர்களிலும் ஒருவர். சீர்திருத்தவாதி; சந்தர்ப்பவாதி.—42, 47*

வில்ஹெல்ம், இரண்டாவது (ஹோஹன்சோலர்ன்) [Wilhelm II (Hohenzollern)] *(1859-1941)—ஜெர்மன் பேரரசர்; பிரஷ்யாவின் மன்னர் (1888-1918) — 136, 183*

வுர்ம் [Wurm], **எமனுயீல்** *(1857-1920)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, ரைஹ்ஸ்டாகின் உறுப்பினர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) மையவாதி.—181*

வெப் [Webb], **சிட்னி** *(1859-1947)*, **பியாட்ரீஸ்** *(1858-1943)—இங்கிலாந்தில் பொது வாழ்வில் பெயர் பெற்றவர்கள்; ஃபேபியன் கழகத்தின் ஸ்தாபகர்கள்; ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, தத்துவம் பற்றிய பல நூல்களை எழுதியவர்கள். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறிப் போக்கைப் பின்பற்றியவர்கள்.—178, 184, 207*

வையான் [Vailant], **எடுவார்டு மரீ** *(1840-1915)—பிரெஞ்சு சோஷலிஸ்டு; இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது (1914-18) சமூக-தேசியவெறியர்.—149, 150*

வைலோஷ்னிக்கவ் [Voiloshnikov] **அ. அ.** *(1877-1930) —மூன்றும் அரசாங்க டூமாவின் சமூக-ஜனநாயகக் குழுவைச் சேர்ந்தவர்; போல்ஷிவிக்குகளைப் பின்பற்றினர்.—111*

வோயினவ்—பார்க்கவும்: **லுனச்சார்ஸ்கி.**

ழொரேஸ் [Jaurès], **ழான்** *(1859-1914)*—*பிரெஞ்சு, சர்வ தேச சோஷலிஸ்டு இயக்கத்தின் ஒரு முக்கியப் பிரதி நிதி; சரித்திராசிரியர். சீர்திருத்தவாதப் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவியோரில் (1902) ஒருவர். இக்கட்சியின் செய்தியேடான* L' Humanité *இன் ஸ்தாபகரும் தலைமை ஆசிரியருமாவார். இராணுவவாதத்தையும் மூண்டு வந்த ஏகாதிபத்திய யுத்தத்திற்கான தயாரிப்பையும் எதிர்த்து ஊக்கத் துடன் போராடினர். 1914 ஜூலையில் இராணுவவாதி கள் கூலிக்கு அமர்த்திய கொலையாட்களால் படு கொலை செய்யப்பட்டார்.—50*

ஷுர்க்கானவ் [Shurkanov], **வி. யெ.** *(பிறப்பு: 1876)*—*மூன் றும் அரசாங்க டூமாவின் உறுப்பினர்; அதன் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்தார். அவரது கட்டுரை கள் போல்ஷிவிக் செய்தியேடான* **ஸ்வெஸ்தாவிலும்** *கலைப்புவாத* **ழிவோயே தேலோவிலும்** *வெளிவந்தன. —111*

ஷெய்டமன் [Scheidemann], **ஃபிலிப்** *(1865-1939)*—*ஜெர் மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான வலது சாரி, சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசிய வெறியராய் இருந்தார். 1918-21ல் தொழிலாளர் இயக்கத்தை நசுக்குவதற்கான நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவராய் இருந்தார்.— 213, 214, 219, 226, 228, 231, 232*

ஷ்டம்ப்ஃபேர் [Stampfer], **ஃபிரீட்ரிஷ்** *(1874-1957)*— *ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்; கட்டுரையாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது கடைகோடியான தேசிய வெறியராய் இருந்தார்.—219, 220, 222, 227, 231, 235*

ஷ்லாப்னிக்கவ் [Shlyapnikov], **அலெக்சாந்தர் கவ்ரீலவிச்** *(1885-1937) — 1901ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் தொழிலாளர் துறை மக்கள் கமிசாராய் இருந்தார், பிற்பாடு தொழிற்சங்க நிர்வாகத்திலும் தொழிற் துறை நிர்வாகத்திலும் பணியாற்றினர். 1920-22ல் ''தொழிலாளர் எதிர்த்தரப்பு'' என்னும் கட்சி*

விரோதக் குழுவின் ஸ்தாபகரும் தலைவருமாய் இருந்தார். 1933ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—244, 246, 248

ஸஹாரவ் [Zakharov] எம். வி. *(பிறப்பு: 1881)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக்; மூன்றும் அரசாங்க டூமாவின் சமூக-ஜனநாயகக் குழுவில் சேர்ந்தார்.—111

ஸூடெக்கும் [Sûdekum], **அல்பேர்ட்** *(1871-1944)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர்; திருத்தல்வாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்.—185

ஸெதெர்பாவ்ம்—பார்க்கவும்: **மார்த்தவ்.**

ஸெத்கின் [Zetkin], **கிளாரா** *(1857-1933)*—ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி; ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—46

ஸோர்கே [Sorge], **ஃபிரீட்ரிஹ் அடோல்ப்** *(1828-1906)*—ஜெர்மன் சோஷலிஸ்டு; சர்வதேசத் தொழிலாளர் இயக்கம், சோஷலிஸ்டு இயக்கம் இவற்றின் முக்கியப் பிரதிநிதி.—183, 203, 204

ஸ்கோபெலெவ் [Skobelev], **மத்வேய் இவானவிச்** *(1885-1939)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியராய் இருந்தார். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரில் பதவி வகித்தார். பிற்பாடு மென்ஷிவிக்குகளை விட்டு விலகினார்.—211

ஸ்தலீப்பின் [Stolypin], **பியோத்தர் அர்காதியெவிச்** *(1862-1911)*—ஜார் கால ருஷ்யாவில் ராஜதந்திரி. 1906-11ல் மந்திரி சபையின் தலைவர், உள்நாட்டு அமைச்சர் ஆகிய பதவிகள் வகித்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் பிற்போக்கு சக்திகள் தலைவிறித்தாடின, புரட்சி இயக்கத்தை நசுக்குவதற்காக மரண தண்டனை மிகவும் சகஜமாய் விதிக்கப்பட்டு வந்தது.—89, 91, 94

ஸ்துரூவே [Struve], பியோத்தர் பெர்ங்கார்தவிச் *(1870-1944)* — *ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர், கட்டுரையாளர்; காடேட்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். கடந்த நூற்றுண்டின் ஒன்பதாம் ஆண்டுகளில் ''சட்டபூர்வ மார்க்சியத்''தின் பிரதானப் பிரதிநிதி.—79*

ஸ்பெக்டேட்டர் [Spectator], (நஹிம்சோன் எம். இ.) *(பிறப்பு: 1880)—ருஷ்யப் பொருளியலாளர், கட்டுரையாளர், பூந்த்காரர். முதலாவது உலக யுத்தத்தின்போது மையவாத நிலையை மேற்கொண்டார்.—195, 196*

ஸ்மிர்னேவ் [Smirnov] யெ. (குரேவிச் எ. எல்.) *(பிறப்பு: 1865)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், கலைப்புவாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது சமூக-தேசியவெறியராய் இருந்தார்.—144, 151*

ஹாப்சன் [Hobson], ஜான் ஆட்கின்சன் *(1858-1940)—ஆங்கிலேயப் பொருளியலாளர், சீர்திருத்தவாதி, சாத்வீகவாதி.* வறுமையின் பிரச்சினைகள் *(1891),* இன்றைய முதலாளித்துவத்தின் வளர்ச்சி *(1894),* ஏகாதிபத்தியம் *(1902) முதலான பல நூல்களின் ஆசிரியர்.—196, 197, 199*

ஹாப்ஸ்பர்குகள் [Hobsburgs]—*1273 முதல் 1806 வரை (இடைவெட்டுகளுடன்) ''புனித ரோமானியப் பேரரசு'', ஆஸ்திரியா (1804 முதல்), ஆஸ்திரோ-ஹங்கேரியா (1867-1918) ஆகிய அரசுகளை ஆண்ட அரசவம்சத்தார்.—31*

ஹார்டி [Hardie], ஜேம்ஸ் கேயர் *(1856-1915)—ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி, சீர்திருத்தவாதி; சுயேச்சைத் தொழிற் கட்சியின் தலைவர்களிலும் தொழிற் கட்சியின் ஸ்தாபகர்களிலும் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்தில் மையவாதப் போக்கைப் பின்பற்றினர்; பிற்பாடு சமூக-தேசியவெறியராய் இருந்தார்.—150*

ஹாவுப்த்மன் [Hauptmann], கேர்ஹார்ட் *(1862-1946)—ஜெர்மன் நாடகாசிரியர். அவருடைய* நெசவாளர் *நாடகம் முதலாளித்துவச் சுரண்டலில் பாட்டாளி வர்க்கத்தாரின் அவல நிலையைச் சித்தரிக்கிறது.—8*

ஹாஸெ [Haase], **கூகொ** *(1863-1919)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவர்; *1912*லிருந்து ரைஹ்ஸ்டாகில் சமூக-ஜனநாயகப் பிரிவின் தலைவர். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* மையவாதி.—*166*

ஹில்பர்டிங் [Hilferding], **ருடோல்ப்** *(1877-1941)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின் போது மையவாதியாய் இருந்தார். யுத்தத்திற்குப்பின் "ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவம்" என்னும் தத்துவத்தை முன்வைத்து, அரசு-ஏகபோக முதலாளித்துவத்தை ஊக்கத்துடன் ஆதரித்தார்.—*196, 201, 231, 232*

ஹூயிஸ்மன்ஸ் [Huysmans], **கமீல்** *(1871-1968)*—பெல்ஜியத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. *1904-1919*ஆம் ஆண்டுகளில் இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் செயலாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது மையவாதப் போக்கைப் பின்பற்றினர். பலமுறை பெல்ஜியச் சர்க்காரில் பதவி வகித்தவர்.—*231*

ஹெகல் [Hegel], **கியோர்க் வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ்** *(1770-1831)*—பிரபல ஜெர்மன் தத்துவவியலாளர்; புறநிலைக் கருத்துமுதல்வாதி. ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்தவாதி. இயக்கவியலை ஆழமான விரிவான முறையில் வளர்த்துச் செப்பம் செய்தார்; தத்துவவியலுக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேவையாகும் இது. இயக்கவியலானது பொருள்முதல்வாதத்தின் தத்துவார்த்தத் தோற்றுவாய்களில் ஒன்றுகியது.—*56*

ஹெண்டர்சன் [Henderson], **ஆர்தர்** *(1863-1935)*—ஆங்கிலேய அரசியலாளர்; தொழிற் கட்சி, தொழிற் சங்க கவுன்சில் இவற்றின் வலதுசாரி தலைவர்களில் ஒருவர்; சமூக-தேசியவெறியர். *1915* முதல் *1931* வரை பலமுறை பிரிட்டிஷ் சர்க்காரில் பதவிகள் வகித்தவர்.—*213*

ஹேல்ஸ் [Hales], **ஜான்** (பிறப்பு: *1839*)—ஆங்கிலேயத் தொழிற் சங்க இயக்கத்தின் பிரதிநிதி. முதலாவது அகிலத்து ஜெனரல் கவுன்சில் உறுப்பினராயும்

(1866-72) அதன் செயலாளராயும் *(1871 மே—1872 ஜூலை)* இருந்தார்; மார்க்ஸ், எங்கெல்சுக்கு எதிராய்ப் போராடினர்.—***203***

ஹைண்ட்மன் [Hyndman], ஹென்ரி மேயர்ஸ் *(1842-1921)*—ஆங்கிலேய சோஷலிஸ்டு; சீர்திருத்தவாதி. *1900-1910*ஆம் ஆண்டுகளில் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் உறுப்பினர்.—***150, 151, 178, 186, 213, 214***

ஹோஹன்சோலர்ன்கள் [Hohenzollerns]—ஜெர்மன் பேரரசை ஆண்ட அரசவம்சத்தினர் *(1871-1918)*.—***31***

ஹோஷ்பர்க் [Höchberg], கார்ல் *(1853-1885)*—ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி. சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் விதிக்கப்பட்டபின் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டணி கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கீழ்ப்படுத்த வேண்டுமென்று கோரிக் கட்சியின் புரட்சிகரப் போர்த்தந்திரத்தை எதிர்த்தார்.—***133***

...EMARA PUBL... LTD

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

В. И. Ленин

ПРОТИВ РЕВИЗИОНИЗМА
В ЗАЩИТУ МАРКСИЗМА

на языке тамили

V. I. Lenin

AGAINST REVISIONISM,
DEFENCE OF MARXISM

in Tamil